ராங்க நதி

இந்திரா சௌந்தர்ராஜன்

திருமகள் நிலையம்
சுகான்ஸ் அபார்ட்மெண்ட்ஸ்
பழைய எண்:28, புதிய எண்:13,
சிவப்பிரகாசம் தெரு,
தி.நகர், சென்னை- 600 017.
☎: 24342899, 24327696
Fax: 91 - 44 - 24341559

முதற் பதிப்பு: நவம்பர், 2011

உரிமை: ஆசிரியருக்கு

திருமகள் நிலையம்

RANGA NATHI

By: Indra soundrarajan
First Edition: November, 2011
No. of Pages: 504+ XII = 516
Size: Demy
Paper used: N.S. 70 G.S.M. Maplitho

விலை ரூ. 275/-

VISA PUBLICATIONS
New No: 16, Old No: 55,
Venkatnarayana Road,
T.Nagar, Chennai-600 017.
Phone: 24342899, 24327696
Thirumagalnilayam@yahoo.com

Available at:
THIRUMAGAL NILAYAM
New No: 16, Old No: 55,
Venkatnarayana Road,
T.Nagar, Chennai-600 017.
Phone: 24342899, 24327696
Thirumagalnilayam@yahoo.com

Laser Typeset By: Sivaa Graphics, Chennai-94. Ph: 8939475707

Printed at : NOVENA OFFSET PRINTING CO., Chennai - 5 ✆ 28446166, 28446891

மதிப்புரை

வெ.இறையன்பு ஐ.ஏ.எஸ்.

கரை சேர்க்கும் ரங்கநதி

அணிந்துரை என்கிற பெயரில் புதினத்தின் கதைச்சுருக்கத்தைத் தந்து, அதை வாசிக்கும் சுவாரசியத்தைக் குறைக்கும் அசட்டுச் செயலை நான் செய்யப் போவதில்லை.

எடுத்தால் முடிக்கும்வரை நம்மைக் கீழே வைக்கமுடியாமல் செய்துவிடுகிற அழகான காதல் கதையொன்றை வெகு நாட்களுக்குப் பிறகு வாசித்ததால் ஏற்பட்டத் தாக்கங்களை மட்டுமே, பதிவு செய்ய விரும்புகிறேன். புதினமும், ரங்கநதியும் நம்மையும் சேர்த்து அடித்துச் செல்கிற நேர்த்தியில் உடலும், உள்ளமும் ஒன்றிணைவதே அனுபவப் பிழிவாக மலர்கிறது.

நம் ஒவ்வொருவருக்குள்ளும் ஒரு நதியோடிக் கொண்டிருக்கிறது. அது சுழன்று பாயும்போது, சுற்றி வருகிறோம். அது வறண்டு போகும்போது, நாமும் வற்றிப் போகிறோம். பொங்குகின்ற நதியைக் கண்டால், நம்மையும் மறந்து பேரின்பப் பெருவெளியில் நாம் இணைந்து கொள்கிற உச்சபட்ச ஆனந்த நிலை நமக்கு ஏற்படுகிறது. அதனால் தான் நம் சுற்றுலாக்கள் அதிகம் வெள்ளம் சார்ந்த பகுதிகளைக் கொண்டதாகவே இருக்கின்றன.

நதியைக் காணும்போது எனக்கு அதில் ஒரு நீர்க்குமிழியாகி விடும் ஆசை தோன்றுவதுண்டு. நதி எத்தனையோ இரகசியங்களை நம் காதுகளில் கிசுகிசுத்துக் கொண்டேயிருக்கிறது. அதைப் புரிந்து கொள்ளத்தான் அவகாசமும், ஆர்வமும் நம்மிடம் இல்லை. ஹெர்மன் ஹெஸியினுடைய சித்தார்த்தன் படகோட்டியிடம் தான் அதிகமான ஞானப் பகிர்தலை அடைகிறான். ஓடாத போதும் நதி தன் இருத்தலை உணர்த்திக் கொண்டேயிருக்கிறது. என்னுடைய முதல் நாவலே "ஆத்தங்கரை ஓரம்" என்கிற

தலைப்புடன் நர்மதை அணை குறித்த என் அனுபவப் புனைவுகளாக மலர்ந்தது. நான் 'கங்கநானி' என்கிற இடத்தில் மலைச்சரிவு ஏற்பட்டு, இமயமலையேற்றம் தடைபட்டபோது, பல மணி நேரம் கங்கைக் கரையில் அமர்ந்து மௌனமாக நம் ஊரில் இது போன்ற நதியொன்று இல்லையே என்ற ஏக்கத்துடன் என் தன்முனைப்பைக் கரைத்துக் கொண்ட நினைவு வருகிறது.

ரங்கநதியின் மைய இழையாகக் காதல் இருந்தாலும், அதில் பல்வேறு சமூகச்சிக்கல்கள் மென்புகையுடை போலப் பின்னப் பட்டிருக்கின்றன. சுயநலம் சார்ந்த குடும்ப உறவுகள், போலி கௌரவம் ஏற்படுத்தும் உறவுச் சிக்கல்கள், இயற்கையை அளவுக் கதிகம் சுரண்டும் மனிதனின் பேராசை, வளர்ப்பை மீறிய வளத்தைக் கொண்ட மேன்மையான மனிதர்கள் எதையும் எதிர்பார்க்காத நட்பு, அனுசரணையாக அரும்பாத காதல் (Accommedation) என்று பல்வேறு மென்மையான உலக நடப்புகள் புதினத்தைச் செழுமைப்படுத்திக் கொண்டே செல் கின்றன. வார இதழுக்கான தொடர்கதை என்பதால் ஒவ்வொரு அத்தியாய நிறைவிலும் திருப்பம் தவிர்க்க முடியாததாக இருந் தாலும் அது திகட்டாததாகவே இருக்கிறது. புதினத்தில் எந்த இடத்திலும் சம்பிரதாயச் சிக்கல்களுக்குள்ளும் (Tradition) நினைவுச் சுழலுக்குள்ளும் (Sentiments) அகப்பட்டுக் கொள்ளாமல். நீந்திக் கரைசேர்ந்திருக்கும் ஆசிரியர் நம்மை வசீகரித்துச் செல்கிறார். திருமணத்திற்கு முன்பே உயர்ந்த அன்பின் வெளிப் பாட்டில் உள்ளங்கள் உடல்களுடன் இணையும்போது, நமக்கு மகிழ்ச்சியே ஏற்படுகிறது.

நாம் இப்புதினத்தின் ஒவ்வொரு அத்தியாயத்திலும் ரங்கநதியில் குளித்தெழுகிறோம், சில நேரம் மூழ்கி மூச்சுத் திணறுகிறோம், சுழல்களை மீறிக் கைகளை அசைக்கிறோம். அலுக்காத ஜலகிரீடையாக வாசிப்பு நம்மை முன்னகர்த்திச் செல்கிறது.

ஐந்நூறு பக்கங்களுக்கு மேல் விரியும் பருத்த புதினத்தில் விரல்விட்டு எண்ணுமளவே முக்கிய பாத்திரங்கள். ஒவ்வொரு பாத்திரமும் அதன் கம்பீரம் குறையாமல் படைக்கப்பட்டிருக் கின்றது. ஆசிரியர் கையாளும் வரிகளில் பல இடங்களில் கவிதை நயம் மேம்படுகிறது. இயல்பான சொற்களுடன், மக்களின்

மொழியில் கவிதையையும், புதுச்சொற்பிரயோகத்தையும் பாயாசத்தில் கரைந்த வெல்லத்தைப் போலச் சுவையுடன் வாசிப்பவர்கள் நுகர முடிகிறது. கதையின் சுவாரசியம் சுண்டியிழுக்கும்போது, வார்த்தையின் வசீகரங்களைத் தாண்டிப் பயணிப்பது சிரமமாகத் தானிருக்கிறது.

மனித மனம் மற்றவர்களை மலிவானவர்களாகவே கருதுகிறது. பிணந்தூக்கிகளும், மலந்தூக்கிகளும் மரியாதைக்குரிய தேசிய சேவையைச் செய்பவர்கள். தன் உயிரைப் பணயம் வைத்து அவர்கள் ஆற்றும் பணியின் அற்புதம் நம்மில் பலருக்குத் தெரிவ தில்லை.

எந்த நேரமும் தானும் பிணமாகிவிடும் அபாயமிருக்கிறது என்பதையறிந்தும் ஆற்றில் அம்பைப் போலப் பாய முன்வருபவர் களிடம் நடத்தப்படும் பேரம் எவ்வளவு அற்பத்தனமானது என்பதை நாமறிய இந்தப் புதினம் உதவுகிறது. மனித உழைப்புக் கான கௌரவம் இதை வாசித்தவர்களிடம் நிச்சயம் கூடும் என்பதை இப்புதினத்தின் சமூக வெற்றியாக நான் பார்க்கிறேன்.

உழைக்காமல், அடுத்தவர்கள் சொத்து நம் கைகளில் வந்தால் எப்படியிருக்கும் என்பதுதான் சிலருடைய சிந்தனையாக, திருமணத்திலிருந்து நிதி நிறுவனங்கள் வரைத் தொடர்கின்றன. சாத்திரங்களை வாசிப்பவர்கள் சாமானியர்களாக இருக்கும் போது, சவங்களைத் துழாவுகிறவன் சரித்திரப் புருஷனாக இருக்கிறான். அவன் எந்த நொடியிலும் தன்னைப் பணத்திற்காக விற்றுக்கொள்ள சம்மதிக்காமல் ராஜநாகத்தைப் போல நிமிர்ந்தே நிற்கிறான். அவனுடைய விசாலமான பார்வையும், பரந்த மனமும் இந்தக் கதைக்கு அச்சாணியாக இருக்கின்றன. அவன் முதுகெலும்போ எலும்பால் அல்ல, இரும்பால் செய்யப்பட்டிருப் பதால் அநியாயங்களுக்கு வளைய மறுக்கிறது.

மைதிலி என்கிற அந்தப் பெண்ணின் பரிசுத்தமான அன்பு சமூகத்தின் அத்தனைக் கட்டமைப்புகளையும் தாண்டியது. தன்னைக் காப்பாற்றிக் கரைசேர்த்தவன், முழு உடலைப் பார்க்க நேர்ந்ததே அவள் மனத்தில் முதல் ஈர்ப்பு ஏற்படக் காரணமாக

இருப்பதாகக் கையாளும் சம்பவமே, நாம் வாசிக்கும் வேகத்தை வலுப்படுத்த வைக்கிறது.

ஆசிரியர் பல இடங்களில் குறியீடுகளைக் கையாண்டிருக்கிறார். தன் திருமண வாழ்வைக் காப்பாற்றியவன் மீது ஏற்படும் பரிவு, வைர மோதிரத்தை ஆற்றுக்குள்ளிருந்து பத்திரமாக எடுத்துத் தந்தால் ஏற்பட்ட கனிவு போன்றவையெல்லாம் நமக்குள் மறைந்திருக்கும் அன்பு வெளிப்பட சம்பவங்களே சாட்சியாகின்றன என்பதற்கான அடையாளங்கள். அங்கங்கே தெறிக்கும் நகைச்சுவையும், ஆத்திக - நாத்திக வாதங்களும் புதினத்தை இன்னொரு பரிமாணத்திற்கு எடுத்துச் செல்கிறது.

நதிக்கு நாம் என்ன பெயர் வேண்டுமானால் வைத்துக் கொள்ளலாம். ரங்கநாதனின் காலை நனைப்பதால் அது ரங்கநதியாக இருக்கலாம். ரங்கனுக்கு ராக்கதியாக இருந்து, தாயாக மாறியதால் அது ரங்கநதியாக அழைக்கப்படலாம். அவனை அது ஒருபோதும் கைவிடாது என்பது கதையின் உச்சகட்டத்தில் உரத்துச் சொல்லப்படுகிறது.

ஒவ்வொரு அத்தியாயத்தின் முன்பும் தத்துவப் பிழிவாக ஒரு கருத்தை நாவலாசிரியர் நவில்கிறார். அவற்றைத் தனியாக மீண்டுமொருமுறை வாசித்து, தியானிப்பது வாழ்வு குறித்த நம் புரிதலை வளமாக்கும்.

வாழ்க்கையில் நாம் சந்திக்கின்ற சம்பவங்கள் முற்றிலும் வேறுமாதிரியாக இருந்தாலும், நியாயத்தையும், நேர்மையையும் ஜெயிக்க வைக்க படைப்பாளிகள் தொடர்ந்து முயற்சி செய்து கொண்டேயிருக்க வேண்டும். அந்த நம்பிக்கை மட்டுமே நம்மிடம் எஞ்சியிருக்கிறது. அப்படிப்பட்ட ஆழமான நம்பிக்கையை வாசித்த பிறகு பல நாட்கள் வற்றாமல் ஈரமாக நம் உள்ளத்தில் வைத்திருக்கும் இந்த ரங்கநதி மனித நேயம் கலந்த இனிய படைப்பு.

ஆசிரியர் இந்திரா சௌந்தர்ராஜன் பாராட்டுக்கும், நம் நன்றிக்குமுரியவர்.

அன்புடன்

வெ.இறையன்பு

என்னுரை

ரங்க நதி என்னும் இந்த நாவல் என் வரையில் ஒரு யானை கர்ப்பம்! இதற்கு பின்னாலே நான் சொல்வதற்கு மலையளவு விஷயங்களும் இருக்கின்றன. அவைகளே ஒரு நாவலின் அளவு கொள்ளும். ஆனாலும் அவைகளின் சில திவலைகளை மட்டுமே இங்கு என்னுரையில் குறிப்பிட விரும்புகிறேன். அது அவசியம் என்றும் எனக்கு தோன்றுகிறது.

1978ல் இருந்து எழுதிவருகிறேன். நான் எழுதத் தொடங்கிய காலம்தான் சிறுகதை நாவல்களுக்கு பொற்காலமாகும். அந்த காலத்திற்கு முன்னாலே அமரர் கல்கி, சாண்டில்யன், ஜெகசிற்பியன் அகிலன், ஜெயகாந்தன் போன்றோர் நிறைய எழுதியிருந்த போதிலும் எழுத்தாளன் என்றாலே அவன் ஒரு வெற்றிகரமான வாழ்க்கை நடத்துபவராக இருக்க முடியாது என்கிற நிலைப்பாடும் சேர்ந்தே இருந்தது.

யாரையாவது சந்திக்கும்போது என்ன செய்கிறீர்கள்? என்று அவர்கள் கேள்வி எழுப்புவது இயல்பு. அந்த கேள்விக்கு பதிலாக எழுத்தாளனாக இருக்கிறேன் என்றால் உடனே சாப்பாட்டுக்கு என்ன செய்கிறீர்கள்? என்று அவர்கள் திருப்பிக் கேட்டு திணற அடிப்பார்கள்.

அவர்கள் கேள்வியில் நியாயமும் இருக்கத்தான் செய்தது. அந்த நாள் எழுத்தாளர்கள் பலரை நான் சந்தித்து மகிழ்ந்திருக்கிறேன். சிலரோடு நெருக்கமாக பழகியும் உள்ளேன். அவர்களிடம் நான் பொருளாதார பலத்தை பார்த்ததே இல்லை. ஒரு வேலையில் இருந்து கொண்டு பொழுதுபோக்காக எழுத வந்து பின் அதில் தீர்க்கம் காட்டியவர்கள் வேண்டுமானால் ஓரளவு செம்மையாக இருந்தார்கள். எழுத்தை முழுமையாக நம்பியவர்களை எழுத்து பொருளாதார ரீதியாக வாழ வைக்க வில்லை. அதற்கு அப்போதைய காலகட்டமும் ஒரு காரணம் இந்தியா சுதந்திரம் பெற்ற புதிது. அடியிலிருந்து நுனி வரை திட்டம் தீட்டி வளர

வேண்டியிருந்தது. மிகுந்த மக்கள் தொகை - ஆனால் அந்த மக்களின் உழைப்பை பயன்படுத்தவும் வகைப்படுத்தவும் இயலாத சூழல்!

இதனாலேயே புதுமைப்பித்தன் போன்றவர்கள் எல்லாம் போராடியே செத்துப் போனார்கள்.

நான் எழுதத் தொடங்கிய காலத்தில் மாத நாவல்கள் என்று ஒரு புதிய ஜாதி தோன்றி அது ஒரு புதிய வடிவமைப்பையும் கொண்டிருந்தது.

சிறுகதையோடும் சேர்த்தி இல்லை - முழு நாவலுக்கும் இடமில்லை - இதனை குறுநாவல் என்று அழைத்தார்கள். இதன் எண்ணிக்கை தான் பிறகு அதிகரித்தது. இம்மட்டில் ராஜேஷ்குமார் என்னும் ஒரு எழுத்தாளர் மட்டுமே இவ்வகை நாவல்களில் 1200 நாவல்களை எழுதிவிட்டார் என்றால் இதன் வேகத்தையும் வாசக உலகம் இதற்கு அளித்த வரவேற்பையும் உணரலாம்.

நானே இம்மட்டில் 400 நாவல்கள் வரை எழுதி விட்டேன். இவ்வகை நாவல்களே எழுத்தாளர்களை ஓரளவு வாழவைக்கவும் செய்தன. இதில் வாசக வரவேற்பு பெற்றவர்கள் வீடு வாசல் என்று நிலை பெற்றார்கள்.

கூடவே ஒரு முணுமுணுப்பும் இருந்து கொண்டே இருந்தது. இது ஒரு நல்ல நாவல் இலக்கியம் இல்லை என்று!

இவ்வகை நாவல்களில் பல நாவல்களை வாழைப்பழ தோலோடு உதாரணம் காட்டிப் பேசினார் ஒரு பிரபல எழுத்தாளர் அதில் பாதி உண்மை பாதி மிகை!

நானறிந்த வரையில் இவ்வகை நாவல்களை எழுத எல்லோருமே முயற்சித்தார்கள். கைவரப் பெற்றவர்களோ சிலர்தான். இதில் வெற்றி பெற முடியாது போனவர்கள்தான் பழம்புளிக்கும் என்று சொன்ன நரிகளாகிப் போனார்கள், என்பது இதில் வெற்றி பெற்றவர்கள் சிலர் சொல்லும் கருத்து...

எப்பொழுதுமே எழுத்தாளர்களிலும் இரு பிரிவுகள் இருந்து வருவதை பார்க்கிறேன். கடந்த ஒரு பத்து ஆண்டுகளாக தலித் பிரிவு இலக்கியம் என்று ஒரு மூன்றாவது பிரிவும் முளைத்துள்ளது.

பல காலத்துக்கும் ஒன்று வாழ வேண்டும் என்றால் வாழும் ஆற்றலும் அதற்கு இருக்கிறது என்றால் அது கிளைவிடும் என்பது தான் பேரறிஞர்கள் உணர்ந்து சொன்ன விஷயம்.

நமது ஆன்மீகமும் அப்படித்தானே வளர்ந்து வருகிறது?

சைவம் என்றும் வைணவம் என்றும் இருபெரும் கிளைகள். அதில் வைணவத்திலும் தென்கலை/ வடகலை என்கிற பிரிவுகள். அவர்களுக்குள் கருத்து வேற்றுமைகள் முட்டல் மோதல்கள் ஐயோ இப்படி இருக்கிறதே என்பது ஒரு கோணம். ஆஹா இத்தனை செரிவோடு இருக்கிறதே என்பது இன்னொறு கோணம். பார்க்கும் இடத்தை பொருத்து காட்சி மாறுகிறது.

எதற்கு இந்த பீடிகை என்பதையும் கூறி விடுகிறேன். ஏராளமான குறுநாவல்களை எழுதிய எனக்குள் எதற்கும் அடங்காது பொங்கிப் பெருகி, குமிழியிட்டு வெள்ளமாய்ப் பாய்ந்து, அந்த வெள்ளத்தில், ஜனித்த என்னையும் சேர்த்து இழுத்துச் சென்ற ஒரு படைப்புதான் இந்த ரங்க நதி.

முன்னாள் ஆனந்த விகடன் ஆசிரியரும், எனது ஊனக் கண்களை திறந்து விட்டவருமான திரு.எஸ். பாலசுப்பிரமணியன் அவர்கள் கதைகளைப் பற்றி கூறும் போது ஒரு கருத்தைச் சொல்வார். எப்பொழுதும் கதை நம்மை இழுக்க வேண்டும் கதை என்று ஒன்று இருந்து விட்டால் அது இழுக்கும். நாமும் சிரமமின்றி பயணிக்கலாம். இல்லாவிட்டால் அதை நாம் இழுக்க வேண்டிவரும். அப்போது மூச்சுத்திணறி நாம் பொதி கழுதைகள் ஆகி விடுவோம்' என்பார்.

இதில் ரங்கநதி என்னை இழுத்துச் சென்ற கதை மாத்திரமல்ல ஒரு குறுநாவல் போல எண்பது, தொண்ணூறு பக்கங்களில் அடங்கி விடாமல் ஐந்நூறு பக்கங்களையும் கடந்து விட்டது.

என் சமூகப் படைப்புகளிலேயே பெரிய நாவலும் இதுதான்.

இதை எழுதும்போது எனக்கு எழுதும் காதல் அதிகரித்தது. அத்தியாய அத்தியாயமாக எழுதிடும் போது எனக்கு பக்கக் கட்டுப்பாடு உண்டு. பத்து பக்கங்களை தாண்டாமல் இருப்பது நல்லது. ஆனால் உட்கார்ந்த வேகத்தில் பத்து பக்கம் முடிந்து,

பதினான்கு, பதினைந்து பக்கங்களில் தான் இந்தக் கதை போய்ப் போய் நின்றது. சிரமப்பட்டே நிறுத்த வேண்டி இருந்தது.

ரங்க நதி என்று நான் புதிதாக நாமகரணம் சூட்டியிருக்கும் காவிரியும் ஒரு பெண்ணாகவே உருவகப்படுத்தப்படுகிறது. இக்கதையின் நாயகியான மைதிலியும் திருமணத்திற்கு முன்பு பெண்களுக்கு நேரிடும் எல்லாவித சிக்கல்களையும் சந்திப்பவளாக இருந்தாள். இதனால் இது பெண் வாசகர்களுக்கு மிகப்பிடித்த கதையாக இருக்கும் என்று உணர்ந்து குமுதம் சினேகிதியில் இதை எழுதினேன்.

நான் உணர்ந்தது மிகச் சரி என்பதை அதன் பெண் வாசகர்களும் நிரூபித்தனர். இது ஒரு தொடர்கதைக்கான எல்லைகளை எல்லாமும் உடைத்த கதையாக மாறிப் போனது ஐம்பத்தெட்டு அத்தியாயங்கள் என்று நீண்டு, பிறகே முடிந்தது. குமுதம் சினேகிதியில் இது வெளியான போது சிலவாசகியர்கள் எனக்கு நண்பர்களாகிப் போனார்கள். மாதம் தவறாமல் ஒரு முறைக்கு பலமுறை பேசினார்கள். நான் எங்காவது திருமணங்களுக்கோ, பெண்கள் கூடும் இடங்களுக்கோ செல்ல நேர்ந்தால் அங்கே தேடி வந்து பேசினார்கள். அப்போதெல்லாம் அவ்வளவு பேருமே ஒன்று போல 'சார் ரங்கனையும் மைதிலியையும் எப்படியாவது சேர்த்து வெச்சுடுங்கோ பிரிச்சுடாதீங்கோ' என்று கூறுவதே வழக்கமாகவும் மாறிவிட்டது.

இதில் ஒரு ஆச்சரியம் என்ன வென்றால் ரங்க நதியின் மூலக்கருப் பொருளே 'பிரிவது' என்பதுதான்.

காவிரியின் கரையில் தனித்து விடப்படும் ஒரு பிஞ்சு பாலகன் ஒருவன் பின்னாளில் அந்த ஆற்றில் விழுந்தோ இல்லை இழுபட்டா மறிப்பவர்களை சுமக்கும் பிணந்தூக்கியாக மாற நேர்கிறது. அப்படி விழுந்த ஒரு இளம் பெண்ணை காப்பாற்றப் போய் காதலில் விழ நேர்கிறது. இந்த காதல் அந்த ஆற்றை விடவே சுழல்களும் சீற்றங்களும் நிரம்பியது.

ஒரு பிணந்தூக்கியை எந்த பெண்ணின் தகப்பன் விரும்புவான்?

எனவே இருவரும் இந்த காதல் சுழலுக்கு நதியின் சுழல் மேல் என்று அதில் மூழ்கி மாய்ந்து போவதுதான் கதை.

மிகவே துயரமான முடிவு!

இக்கதையைப்பற்றி கூறும்போது யானைக் கர்ப்பம் என்றேனே...? அது இதை வைத்துத் தான். பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு ஸ்ரீரங்கம் காவிரியில் குளிக்கச் சென்றபோது ஒருவரை சுழல் கொண்டு சென்று விட அதை நான் பார்க்க நேர்ந்து அப்போதுதான் இக்கதைக்கான விந்துத்துளி என்னுள் மனோ கர்ப்பம் கொண்டது.

அந்த நொடி முதலே ஒரு அவஸ்தை.

அனுமனை சுமந்த அஞ்சனை போல, சகுந்தலையை சுமந்த மேனகையை போல நானும் ராஜகர்பேந்திரன் ஆனேன். குமுதம் சினேகிதி வழியாக 15 ஆண்டுகளுக்கு பிறகே பிரசவிக்க நேர்ந்தது.

இடையில் பல இதழ்களில் எழுத வாய்ப்பு வந்தும் எழுத இயலவில்லை. அவைகளை விவரிக்கப் புகுந்தால் அதுவும் ரசமானதாக ஒரு நாவல் போலவே இருக்கும். ஆனால் அது இந்த புத்தகத்தை வாசிக்கப் புகுபவர்களுக்கு வேறு சுவையை அளித்து விடும். ஒரு ஆச்சரியம் அல்லது அதிசயம் என்னவென்றால் இந்த கதைக்கான கர்ப்பத்துக்கு இடையில் நான் பல்வேறு கதைகளை பல்வேறு தளங்களில் எழுதிக்கொண்டே போனதுதான்... ஆனால் இந்த நதிபாய ஏற்ற அல்லது உகந்த இடம் கிடைக்க வில்லை. இதுவும் மடங்கிச் சுருண்டு காத்திருந்தது. குமுதம் சினேகிதி கிடைக்கவும் ஒரே பாயாக பாய்ந்து விட்டது.

மிக வாகான இதழாக குமுதம் சினேகிதி அமைந்ததா இல்லை இக்கதை அமைத்துக் கொண்டதா என்பதும் எனக்கு முதலில் புரியவில்லை.

பிறகே புரிந்தது - இது அமைத்துக் கொண்டது என்று!

ஒரு கதை நம் வழியாகத்தான் வருகிறது - நம்முள் இருந்து வருவதில்லை. என்பது ஒரு கருத்து. அக்கருத்தின் மேல் எனக்கு உடன் பாடில்லாத காலம் ஒன்று இருந்தது. ஆனால் இக்கதை அக்கருத்தை நிரூபித்தது.

இது என் வழியாக வந்த கதை - என்னுள் இருந்து வந்ததாக என்னால் கருத முடியவில்லை. ரங்க நதி என்று பெயர் வைத்துவிட்டதாலோ என்னவோ, ஒரே வெள்ளப் பெருக்கு தான்.

உண்மையில் ரங்கநதியான காவிரி இன்று தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் இளைத்து எலும்பாகி விட்ட ஒரு நதியே! ஆனால் என் தொடரில் புஷ்டியான தேவதையாக விளங்கினாள்.

தொடக்கத்தில் நான் அவதானித்துக் கொண்ட சோக முடிவின் பக்கம் என்னை போக விடாமலும் பார்த்துக் கொண்டாள்.

வெள்ளத்தில் மிதக்கும் ஒரு துரும்புக்கு அதற்கென்று ஒரு திக்கு திசை இருக்க முடியுமா என்ன?

மொத்தத்தில் இந்த கதை என்னை பயன் படுத்தி தன்னை நிலை நிறுத்திக் கொண்டது. வாசகர்கள் எதிர் பார்த்த சுபமான முடிவிலேயே போய் நின்றது. 'தப்பு செய்து விட்டீர்கள் இந்திரா... சோக முடிவுதான் இதற்கு சரியானது' - என்று எனது அபிமானிகள் சிலர் கூறினார்கள்.

ஒரு எழுத்தாள நண்பரோ ஒரு படி மேலே போய் சாகித்ய அகாதமி மற்றும் ஞான பீட விருதுக்குரிய படைப்பு இது! என்றார். ஒரு சினிமா இயக்குநர் இது சினிமாவாகும் பட்சத்தில் சோகமாக முடிந்தாலே படம் நிற்கும் என்றார்.

அவ்வளவாக வெகு ஜனங்களுக்கு வசப்படாத ஒரு நல்ல எழுத்தாள நண்பர் 'காவிரியை ஒரு கடவுளாக காட்டப் போய் அந்த கடவுளிடம் சிக்கி ஒரு நல்ல கதையை இழந்து விட்டீர்கள். இதை எஸ்.ராமகிருஷ்ணனோ, நாஞ்சில் நாடனோ தொட்டிருந்தால் ஒரு நதியை நதியாகமட்டுமே பார்த்து அதனிடம் சிக்கிக் கொள்ளாமல் தங்கள் விருப்பத்திற்கு கதையை கொண்டு போயிருப்பார்கள்' என்றார்.

இப்படிப் பலப்பல விமர்சனங்கள்.

எனது நாவல்களில் இப்படி பன்முக விமர்சனத்துக்கு ஆட்பட்ட படைப்பு இது மட்டுமே.

ஒன்றுமட்டும் உறுதி.

இதை வாசித்த அத்தனை பேரும் இறுதியில் இறுதிப் பந்தில் சிக்கர் அடித்து வெற்றியை தனதாக்கிக் கொண்ட இந்திய அணி போல மகிழ்ந்து போனார்கள். அவ்வளவு கடிதங்கள்! அவ்வளவு பாராட்டுக்கள்.

எனக்கும் மிகுந்த மனநிறைவு. விருதுகளைவிட இது தானே உண்மையில் பெரியது? எல்லாவற்றுக்குமாக ஸ்ரீரங்கம் என்னும் ஒரு கலாசார நகரத்தை அந்த ஊரின் பிரதான குடிகளின் வாழ்க்கை விஸ்தாரங்களை ஊடுருவியும் உட்புகுந்தும் பார்க்க ஒரு வாய்ப்பு கிடைத்தது.

உண்மையில் ஸ்ரீரங்க நாயகன் அந்த ரங்கநாதப் பெருமானே! அவனில்லையென்றால் அந்த தீவுப்பகுதி ஒரு பெரிய தென்னந் தோப்பாக இருந்து யாராவது ஒரு தனவானின் பூர்வீக சொத்தாக மட்டுமே இருந்திருக்க முடியும்!

அப்பெருமானின் முன்னும் பின்னும் உள்ள புராண சங்கதிகள் எல்லாமே நம்புவோர்க்கு தேன். மற்றையோர்க்கு வீண்.

வீணை தேனாக்கிக் கொண்ட நம்பும் ரகம் நான்! எனவே ஆழ்வார்கள் வழியில் அவனையும், அவனது நதியான காவிரியையும் போற்றித் துதித்து கவிதைகள் செய்தேன். அதில் இலக்கண இடிபாடு இருக்கலாம். ஆனால் இதய நெகிழ்வுக்கு குறை இருக்காது.

இக்கதைக்கு ஒரு ஆழ்ந்த மதிப்புரை பெற்றிட நான் பல எதிர் மறையானவர்களையே முதலில் நினைத்தேன். பிறகு இறை தொடர்பான இக்கதைக்கு இறை அன்புக்கு ஆளான ஒருவரே பொருத்தமாக அமைந்து திரு.இறையன்பு ஐ.ஏ.எஸ். அவர்கள் இதற்கு மதிப்புரை அளித்துள்ளார்.

திரு.இறையன்புவோடு பெரிய பரிச்சயங்கள் எனக்கு நேரிடையாக இல்லை. ஆனால் அவரது பல நூல்கள் அவரைப் பற்றி வெகுவாக சிந்திக்கவைத்தன. பின் சில சந்திப்புகள். அதில் பல வித பேச்சுக்கள். அந்த பேச்சக்களே அவரைப் பூரணமாக விளங்கிக் கொள்ள போதுமானதாய் இருந்தன. பின் அவரை ஒரு Perfectionist ஆக உணர்ந்தேன். அவரை சந்தித்து விட்டு திரும்பிய பிறகு நிறைய வாசிக்க வேண்டும் என்னும் வேட்கை என்னுள்

மூண்டது. காரணம் அவரிடம் நான் உலக இலக்கியங்களின் வீச்சை ஒரு மயில் தோகைபோல பார்த்தேன்.

அடுத்து அவரிடம் நான் கண்டது தெளிவு. எந்த ஒரு விஷயத்திலும் துளியும் குழப்பத்திற்கு இடமின்றி இருக்கிறார். தெளிவாக இருப்பதால் பேச்சு செயல் என்று அனைத்திலும் அதன் எதிரொலிகள். அவரது மதிப்புரையில் அது பளிச்சிட்டது. அவருக்கு என் நன்றிகள். தொடராக வெளியிட்ட குமுதம் சினேகிதிக்கும் அதன் ஆசிரியரான லோக நாயகி மற்றும் துணை ஆசிரியரான சாந்திக்கும் என் நன்றிகள்.

'சார்... சோகமா முடிச்சிடாதீங்க சார்...' என்று ஒவ்வொரு முறையும் போனில் கதை கேட்கும் போது சாந்தி பேசுவார்.

சோகமாக முடிக்க என்னாலும் முடியவில்லை.

காவிரிக்கு காப்பாற்ற மட்டுமே தெரியும் என்று சொல்வதில் உள்ள ஆனந்தம் வேறு விஷயத்தில் இல்லையே...?

இதில் ஆறு திருடிகளான மணற் கொள்ளையர்கள் பற்றியும் சிந்தித்துள்ளேன். என் வரையில் பெற்ற தாயை கற்பழித்த குற்றத்துக்கு நிகரானவர்கள் இவர்கள்.

காவிரி தன்னை இழந்து இவர்களையும் வாழ வைத்துக் கொண்டிருக்கிறாள். புதிரானவள் இவள்! அரிதானவளும் கூட கொஞ்சம் போல இவளை விளங்கிக் கொள்ள செய்த முயற்சி தான் இந்த ரங்கநதி.

அன்புடன்
இந்திரா சௌந்தர்ராஜன்

27.10.2011
மதுரை-3

1

ஒரு கமண்டலத்தில் சிறைப்பட்ட
கன்னி அவள்.
மணி வயல் பயிர் நாவுக்கெல்லாம்
தண்ணி அவள்.
சிவச்சடை கங்கைக்கும், தவப்பொதிகைபரணிக்கும்
ஆடு தாண்டக் குறுகியும்,
ஆகாயமாய்க் பெருகியும் வந்த தங்கை அவள்!
பாம்பணைந்த அரங்கர் அடி தழுவிச்செல்லும்
இந்த மண்ணின் கதி அவள்! விதி அவள்!
ரங்கநதி அவள்!

பொலபொலவென்று விடிந்துவிட்டது பொழுது! பையை உதறும்பொழுது சிதறும் தூசித்துப்பு போல கருமைத்தனமான அந்த ராத்திரி இருளை 'ச்சூ... போ... போ...! என்று விரட்டியபடி கிழக்கில் ஏறிக் கொண்டிருந்தது சூரிய விளக்கு!

பள்ளிக்கூடம் முடித்து திரும்பும் பசங்களாட்டம் பட்சிக் கூட்டங்களிடமும் ஒரே குதூகலம்! எந்த மொழியிலும் இல்லாத சொற் பிரயோகங்களோடு அதன் அலகுகள் போடும் சப்தம் மனிதக் காதுகள் அத்தனைக்கும் பிடித்துப் போவதில் ஏதோ ஒரு மர்மம் இருக்கத்தான் செய்கிறது. ஆனாலும் பலருக்கு இந்த விடியல், அதன் பட்சி ஜாலச் சப்தமெல்லாம் பெரிதாய் ரசிக்கக் கூடிய ஒன்றாகவும் இல்லை.

அபூர்வ நிகழ்வுகளில்தான் அவர்களுக்கு நாட்டம் அதிகம். இது ஒரு அன்றாடச் சம்பவம் தானே?

இருந்தபோதிலும் மைதிலிக்கு மட்டும் இது அலுக்கவே யில்லை. அவள் வரையில் இது ஒரு அன்றாட அபூர்வம்! மாடி அறை ஜன்னலை திறந்துவிட்டுக்கொண்டு இனி கொசுக்கள் கடிப்பதற்காக வரும் வாய்ப்பில்லை என்கிற நம்பிக்கையோடு, ஜன்னலுக்கு வெளியே தெரிந்த கோயில் கோபுரங்களையும் அதன் சருக்கங்களில் கவியரங்கமோ இல்லை கருத்தரங்கமோ நடத்தியபடி இருக்கும் பறவை பாஷையையும் புரிய முயன்றாள். அப்படியே அவிழ்ந்துவிட்ட தன் மிக நீண்ட கூந்தலின் நுனியில் ஒரு பூ முடி மட்டும் போட்டுக் கொண்டாள்.

அந்த பட்சிக் கூட்டத்தின் கீச்சுவீச்சு சப்தத்துக்கு நடுவில் படுபடு சன்னமாய் எம்.எஸ்.ஸின் சஹஸ்ரநாம சங்கீத வரிகள் எங்கிருந்தோ கேட்டது.

'ரமேராமே மனோரமே.. சஹஸ்ராம தத்துல்யம் ராமநாம வரானனே...!'

இதத்துக்கும் பதத்துக்கும் பொருள் சொன்ன அதில் தொனித்த 'ராம' என்கிற பெயர் அடுத்த நொடியே அவளுக்குள் கல்மண்டபத்து ரங்கனைத்தான் நினைவுக்குள் பிடித்து இழுத்தது. அவனை நினைத்த மாத்திரத்தில் ஒரு வினாடி உடம்பெல்லாம் கூசி அத்துமெத்த பூனை முடிகளும் முனிக்கோயில் வேல்கம்பாய் விடைத்து நின்றுவிட்டன.

பக்கத்திலேயே இருந்தது நிலைக்கண்ணாடி. கொஞ்சம் ரசம் போன கண்ணாடிதான் அவள் தாத்தா சாரங்கபாணி ஐயங்கார் 'உபன்யாச ரத்னம்' பட்டம் பெறுவதற்காக இலங்கையிலுள்ள யாழ்ப்பாணத்துக்குப் போனபோது அங்குள்ள தமிழ்க் காதல் மிகுந்த ஒருவர் பரிசாகக் கொடுத்த கண்ணாடி அது.

''அய்யர்வாள் தெனம் இந்தக் கண்ணாடி முன்னே பிரசன்னமாகும் போதெல்லாம் இந்த ரத்ன நாயகம் ஞாபகம் அவதானிச்சுக் கொண்டே இருக்க வேணும் என்கிற பிரேமையால் தருவதாக்கும் இது.'' என்று அந்த மனிதர் சொன்னதை தாத்தாவும் உச்சரிப்புப் பிழற்சி இல்லாமல் சொல்லிக் காட்டுவார்.

அதை உடையாமல் கப்பலில் பத்திரமாக எடுத்து வரப்பட்ட பாட்டை எல்லாம் கூட அடிக்கடி வருவோர் போவோரிட மெல்லாம் ஸ்லாகித்துக் கொள்வார்.

நின்று நோக்கினால் முட்டிக் காலில் இருந்து தலைக்கு மேல் வரை முழுசாய்க் காட்டும் கண்ணாடி அது!

இந்த உலகில் உள்ள எல்லாப் பெண்களுக்கும் மிக மிகப் பிடித்த மூன்றாவது பொருள் அது. நகைக்கும் புடவைக்கும் பிறகு ஒரு பெண்ணின் அழகைக் கூட்டாமல் குறைக்காமல் காட்டுவது கண்ணாடி மட்டும்தானே?

அப்படிப்பட்ட கண்ணாடி கூட மைதிலியின் முழு உடம்பைப் பார்த்ததில்லை. ஏன் அவளே கூட அவளின் முப்பது வயதை நெருங்கிவிட்ட செழித்த, சிவந்த, நெகுநெகுத்த உடம்பை முழுவதுமாய் நின்று பார்த்துக் கொண்டதில்லை. அதற்கு அவளது வெட்கம் அனுமதி அளிக்கவேயில்லை. அப்படி ஒரு உடம்பை அவன் பார்த்து விட்டானே? அதிலும் பொட்டுத் துணி கூட இல்லாமல்!

மளுக்கென்று கண்ணில் ஜலம் சேர மொத்த உடம்பும் வீணைத் தந்தியில் விரல் நகம் தவறிப் படும்போது விதிர்ப்பது போல விதிர்த்துப் போக, அப்படியே போய் அதுவரை படுத்திருந்த பர்மாக் கட்டிலின் மேல் தென்னங்குலை ஒன்று பிடிமானமற்று மரத்தினின்றும் உதிர்ந்து விழுகிற மாதிரி விழுந்தாள்.

கிழக்குச் சூரியனும் வேகமாய் ஒரு பதினைந்து டிகிரி மேலேறியிருந்தான். அவனுக்கான கோடி வெளிச்சக் கைகளில் ஒன்று ஜன்னலின் கம்பிகளை ஒரு பொருட்டாகக் கருதாதபடி உள்ளே நுழைந்து படுத்திருந்த மைதிலியின் ஆரஞ்சு புடவை மார்பின் மேல் விழ ஆரம்பித்தது.

சரேலென்று நிமிர்ந்து எழுந்து அந்த ஒளிக்கரம் கூட மேலே படுவது பிடிக்காதவள் போல கொஞ்சம் பெருமூச்செறிந்தாள்.

இங்கே இப்படி விலக முடிந்துவிட்டது. ஆனால் ரங்கன் அவளை, வெள்ளக்காவிரியில் இருந்து தொட்டுத் தூக்கிக் கரையில் போட்ட போது அப்படிச் செய்ய முடியாத இயலாமை அவளைக் கொஞ்சம் பிசையத்தான் செய்தது! காவிரி மேல் கோபமாகக் கூட வந்தது.

★★★

ருக்குமணி பாட்டிக்கு பிராணன் போய்விட்டது. இன்னும் பத்து நாள் இருந்திருந்தால் நூறு வயசைத் தொட்டிருப்பாள்.

வாழ்க்கைக் கிரிக்கெட்டில் அவளை செஞ்சுரி அடிக்க விட எமனுக்கு விருப்பமில்லை. இம்மட்டில் எமன் ஒரு சரியான பிரெட்லீ என்று சிலர் ரசனையோடு அந்த சாவு வீட்டில் பேசிக் கொண்டார்கள்.

கல்யாணச் சாவு என்றாகிவிட்டதால் பெரிதாய் ஒப்பாரி அழுகை எல்லாம் இல்லை. இருந்தபோதிலும் 'மைதிலிக்கு ஒரு வரன் குதிரணும், அவளை கல்யாணக் கோலத்துல பாத்துடணும். அப்படிப் பார்த்துட்டா பிள்ளை, பேரன், அவன் வயித்துக் கொள்ளுப் பேத்தின்னு முப்போக வயலாட்டம் மூணு கல்யாணத்தைப் பார்த்த திருப்தியோட போயிருப்பா. ஆனா அதுக்கு இந்த கெழவிக்குக் கொடுப்பனை இல்லாம போயிடுத்தே.' என்று சிலர் மட்டும் மூக்கைச் சிந்தினார்கள்.

''பத்து நாள் தாங்கியிருந்தா மைதிலிக்கு வரப் போறவனையும் பார்த்துருப்பா. செஞ்சுரியும் அடிச்சிருப்பா. இப்ப எல்லாமே போயிடுத்து! டேய் சீமா.. திருக்கண்ணமங்கைக்காராளுக்குத் தகவல் கொடு. அவா பாட்டுக்கு நாளைக்கு பொண்ணு பாக்க வந்து நின்னுடப் போறா...''

''எல்லாம் கொடுத்தாச்சு. எப்படியோ ஒரு நல்ல காரியம் நடக்கப் போறதுன்னு நினைச்சேன். கிழவி உசுரை விட்டு அதைத் தடுத்துப்பிட்டாள். என்ன எழவெடுத்த ஜாதகமோ இவ ஜாதகம்!''

'சீமா' என்று விளிக்கப்பட்ட மைதிலியின் மூத்த அண்ணன் சடைத்துக் கொண்டதிலும் புழுதி பறந்தது.

''இவ மூல நட்சத்திரம்கறது பிள்ளையாத்துக்காராளுக்குத் தெரியுமோ?'' இது மன்னி ரேவதி.

''எல்லாம் தெரியும்டி. முதல்ல அதைத்தான் சொன்னேன். ஆனா பிள்ளையாத்துப் பெரியவர் எனக்கு இந்த நட்சத்திரம், ஜாதகம் இதுலலாம் நம்பிக்கையில்லை. எல்லாமே ஃப்ராடுன்னு சொல்லிட்டார்.''

''ஆச்சரியமா இருக்கே...''

''ஆச்சரியப்பட ஒரு மண்ணாங்கட்டியும் இல்ல. அவாத்துல மூத்த பொண்ணை ஜாதகமெல்லாம் பாத்துத்தான் பண்ணிக் கொடுத்தாளாம். ஜோசியரும் வந்துருக்கற மாப்ள ஜாதகம் குபேரன் ஜாதகம்னுல்லாம் அளந்து விட்டுருந்தாராம்.

ஆனா இப்ப டைவர்ஸ் ஆகி அவ இவா ஆத்தோடதான் இருக்காளாம். அதேமாதிரி அந்த ஆத்து மாமிக்கு எம்பது வயசு வரைக்கும் ஆயுள்னு ஜாதகத்துல இருந்ததாம். மாமியோ முப்பத்து அஞ்சு வயசுலேயே பெருமாள்ண்ட போய்ட்டாளாம்.

அதான் பிள்ளையோட அப்பாக்கு ஜாதகம்னு யாராவது பேசினாலே பத்திண்டு வந்துட்றது.''

''அப்ப மைதிலி விஷயத்துல ஜாதகத்தைத் தூக்கி குப்பைல போட்டுட வேண்டியது தானோ?''

''போட்டாத்தாண்டி இவ கழுத்துல தாலி ஏறும். இல்லேன்னா இவ இந்த சீரங்கத்துலையே தேவுடு காத்துண்டு இருக்க வேண்டியதுதான்!''

''எப்படியோ நல்லது நடந்தா சரி. காசையும் பணத்தையும் பொட்டி பொட்டியா கொடுத்த பகவான் இவ கல்யாண விஷயத்துல மட்டும் கிள்ளிப் பாத்துண்டேன்னா இருக்கான்..''

மேற்படி பேச்சுக்கள் எல்லாம் ருக்குமணி கிழவியின் பிராணன் விடுவதற்கு முன்னால் நிகழ்ந்தவை. கிழவி போன பிறகோ அது வேறு மாதிரி ஆகி மைதிலியை அந்தக் குடும்பமே சற்று அதிர்ஷ்டக் கட்டையாக பார்க்கும்படி வைத்து விட்டது.

கிழவிச் சாவுக்கு வந்தவர்கள் மைதிலியைத் தொட்டுப் பேசாமல் போகவேயில்லை.

அந்தப் பேச்சையெல்லாம் கிழவியை எரித்த கொள்ளிடக் கரையை ஒட்டிய பாடுவாந்துறையில் போட்டு எரிக்கவும் முடியவில்லை.

ஆனால் அத்தனை பேரின் துக்க விசாரணைக்கு நடுவிலும் மைதிலி மட்டும் உள்ளுக்குள் மிக சந்தோஷமாகத் தான் இருந்தாள்!

அவளுக்கு ஸ்ரீரங்கத்தை விட்டுச் செல்ல மனமில்லை. அதிலும் அந்த திருக்கண்ண மங்கைக்கார மாப்பிள்ளை போட்டோவில் தெலுங்குப்பட வில்லன் கணக்காய் பெரிய கிருதா மீசை என்றெல்லாம் இருந்தான். மும்பையில் எஞ்ஜினீயராக இருக்கிறானாம்.

கல்யாணம் என்று நடந்து முடிந்தால் அப்புறம் மைதிலி மும்பையிலுள்ள செம்பூரிலோ இல்லை அந்தேரியிலோதான் குடும்பம் நடத்த வேண்டும்.

''அங்கல்லாம் இந்தக் கோடிக்கும் அந்தக் கோடிக்குமெல்லாம் வீடு கிடையாது. புரவிஷன் ஸ்டோர் மாதிரி தீப்பெட்டி சைஸ்ல தான் வீடு. அதுவும் அபார்ட்மெண்ட் சிஸ்டத்துல ஏழாவது மாடியிலையோ இல்லை எட்டாவது மாடியிலையோ தான் இருக்கும். அக்கம்பக்கமெல்லாமும் அச்சாபச்சான்னு தும்மல் கணக்கா ஹிந்திதான் பேசுவா. மண்ட காஞ்சுடும்.

கொழாத் தண்ணிதான். அதுவும் டயத்துக்குதான் வரும். இங்க அம்மா மண்டபத்துல காவேரில முங்கிக் குளிக்கறதை எல்லாம் நினைச்சு நினைச்சு பாத்துக்க வேண்டியதுதான்.''

- என்று கிண்டலாக மைதிலியின் அத்தை பிள்ளை சுதர்சன் வேறு போட்டு தாளித்துவிட்டிருந்தான்.

நல்லவேளை... மைதிலியைப் பொறுத்த வரையில் சத்தியமாக நல்லவேளைதான்.

ருக்குமணிப் பாட்டி மண்டையைப் போட்டு இப்போதைக்கு பெண் பார்க்கும் படலம் இல்லை என்றாக்கி விட்டுப் போய்விட்டாள்.

தேங்க்ஸ் பாட்டி! என்று மைதிலியும் சாவு முழுக்குப் போட காவிரிக்குப் போனபோதுதான் எதிர்பாராத அந்தச் சம்பவம் நடந்தது.

★ ★ ★

பத்து பதினைந்து நாள் முந்தி வரை குற்றுயிரும் குலையுயிருமாய் கணுக்கால் தண்ணிக்கு வக்கில்லாதபடி ஓடிக் கொண்டிருந்த காவிரி திடீரென்று ராட்சஸமாகி விட்டாள்.

கர்நாடகா பக்கம் நல்ல மழை பெய்ததன் எதிரொலியாம்! புதுப்பணக்காரனாட்டம் காவிரியிடம் ஒரே திமிலோகம்.

நொப்பும் நுரைப்புமாய் சக்கையும் சகதியுமாய் பன்னீர் வடிவக்காரி சென்னீர்க் குழம்பாகி ஹோவென்று இரைச்சலெடுத்துப் பெருகி வந்ததில் அகண்ட காவிரியின் மணல் வெளி முழுக்க அவளது அட்டகாசப் பாய்ச்சல்தான்.

ஹைய்யா என்று மைதிலியிடமும் ஒரு குதூகலம். மார்புக்கு மேலே அப்பா தீபாவளிக்கு வாங்கிக் கொடுத்திருந்த வழவழா கார்டன் சாரியை முடைந்து கட்டிக் கொண்டு முங்கி முங்கி எழுந்தாள்.

இருட்டவும் தொடங்கி விட்டது. சாவுக்கு வந்த எல்லாரும் முழுக்குப் போட்டு முடித்துவிட்டு கிளம்பிப் போனதுகூட தெரியாதபடி 'தபக்கு திபக்கு' என்று சலங்கைக் கால்களை ஆட்டி நீச்சலடிப்பதாக நினைத்துக் கொண்டு, கணுக்காலிலும் ஜிலேபிக்கெண்டை மீன்களின் கூச்சமூட்டும் மென் கடிகளை அனுபவித்து ஏற்றுக்கொண்டு மல்லாந்து விழுந்து, நீரை வாயண்ணம் முழுக்க வாங்கி ஃபவுண்டைன் கணக்காய் பீறிட்டு துப்பி மகிழ்ந்து உல்லாசித்த போதுதான் ஒரு வட்ட நீர்ச் சுழல் கிருஷ்ண சக்கரம் கணக்காய் அவளை நோக்கி வர ஆரம்பித்தது.

2

'பரந்த மேகம் முதிர்ந்து கறுத்து
பறந்த வானில் ஆயுள் முடித்து
இறந்து இரங்கி உகுத்த ஆவி
சிறந்த மழை என்றேயானது!
விழுந்த மழைக்கு கால்கள் முளைத்து
விரைந்து ஓடியே நதி என்றானது
ஊருக்கு ஒரு நதி
மாறிடுமே ஏழைகளின் பசித்த விதி!'

அந்தப் பக்கம் சிந்தாமணிப் படித்துறை. இந்தப் பக்கத்தில் அம்மா மண்டபம். நடுப்பாகம் முழுக்க நீர்க் குதிரையின் வீறு கொண்ட ஓட்டம்.

அங்கங்கே அங்கங்கே பம்பர மயக்கம் போல நொதிச் சுழல். அதில் ஒன்றுதான் மைதிலியைக் கவ்விக் கொண்டது. இழுத்துக்கொண்டும் ஓடியது.

இந்த மாதிரிச் சூழலில் யானையே சிக்கிக் கொண்டாலும் தொலைந்தது. ஒரு பிரட்டுப் பிரட்டி வளைத்துச் சுருட்டி ஆழக் கொண்டு சென்று அடிமணல் படுகையில் போட்டுப் புதைத்து சப்தமின்றி சமாதியையும் எழுப்பிவிட்டுப் போய்க்கொண்டே இருக்கும்.

அதன்பின் கல்லணை வரை கரையோரமாக ஓடிப்போய் உடம்பைத் தேடிவிட்டு வந்து உயிரை வாங்கிய அந்த நதியின் கரையிலேயே அமர்ந்து எள்ளுத் தண்ணீரை விட்டுவிட்டுப் போனவர்கள் பலபேர்.

கல்மண்டபத்து ரங்கனைப் பற்றி அறியாதவர்கள் அப்படித்தான் செய்வார்கள். அறிந்தவர்களோ அம்மா மண்டபம் பக்கமாய் 'ரங்கா ரங்கா' என்று அவனைத்தான் தேடிக்கொண்டு ஓடுவார்கள்.

அவனைப் பிடித்துவிட்டால் ஆற்றோடு போன பிணத்தைப் பிடித்துவிட்டதாகத்தான் பொருள். நம்பிக்கையோடு பாடையைக் கட்டிக் கொண்டு காத்திருக்கலாம்.

அவனும் ஆற்றில் பாய்ந்து மூழ்கி மறைந்து அந்த செத்த உடம்போடுதான் கரை ஏறுவான்.

அப்படி ஒரு ஜித்தன்தான் ரங்கன்.

மைதிலிக்கு ஆயுள் கெட்டியோ என்னவோ அவளைச் சுழல் வட்டம் பிரட்டிப் போட்டுக் கொண்டு போனபோது கரையோர மாக ஒரு காரியமாக வந்த அவன் பார்த்துவிட்டான்.

அதன்பின் நாய் துரத்தும்போது ஓடிடும் கணக்காய் ஓடி அந்த ஆற்றில் அவன் அம்பு போல பாய்ந்தபோது நன்றாகவே

இருட்டிவிட்டது. இருந்தும் மைதிலியின் அதிர்ஷ்டம் அவள் நீண்ட தலைமுடி அவன் கையில் அகப்பட்டது.

போதுமே...?

இழுத்து அணைத்தபடி, ஆற்றின் போக்கில் போய் அவன் கரையில் ஒதுங்கியபோதுதான் அவளது கார்டன் புடவை ஆற்றோடு போன விஷயமே தெரிந்தது.

உடனடியாக அவன் தனது வேட்டியை அவிழ்த்து அவள் மேல் போட்டு மூடி வயிற்றை அழுத்தி நீரை எல்லாம் வெளியே எடுத்து, பாதச் சூடேற்றி நாடி, நரம்புகளைத் துடிக்கவிட்டு வானில் பாதி தூரம் போய்விட்டவளைத் திரும்பி இழுத்துக்கொண்டு வந்துவிட்டான்.

பிரக்ஞை திரும்பின அந்த நொடி எங்கிருந்து தான் அத்தனை தெம்பு வந்ததோ? உதை பந்துபோல சிலிர்த்து எழுந்து நின்றவள் அவனது வேட்டியை வேக வேகமாக வாகாகக் கட்டிக் கொண்டாள். ''பயப்படாதம்மா... பயப்படாத. நல்லவேளை தப்பிட்டீங்க. ஆமா ஆடிட்டரய்யா வோட மவதானே நீங்க?''

''அ... ஆமா...''

''பாட்டியம்மா சாவுக்கு முங்கு போட வந்தீங்களா?''

''ஆமாம்... ஆமாம்...''

''உங்க வீட்ல கிணறு இல்லையாக்கும். பெருசா இந்தக் கொலகார ஆத்துக்குக் குளிக்க வந்துட்டீங்க... நான் பாக்காட்டி என்ன ஆகியிருக்கும்?''

- அவன் கேள்வி எதுவும் அவள் காதில் விழவில்லை. அவன் தொட்டது, மார்பில் போட்டுக் கொண்டு நீந்தியது. கரையில் தூக்கிப் போட்டது வயிற்றை அமுக்கி நீரைக் கக்க விட்டது என்பதிலேயே மனது போய்ப் போய் நின்று அவளைக் குமையவிட்டது.

ஒரு கோடு போட்ட அண்டர்வியருடன் விசுவிசுவென்று வீசும் காற்றில் உடல் நடுங்காமல் பேசும் அவனிடம் ஆத்திரமும் ஆதங்கமும் தெரிந்த அளவுக்கு அவள் கூசிப் போகும்படியாய்

அவன் பார்க்கிற மாதிரியோ, இல்லை பார்த்துவிட்ட மாதிரியோ கூட தெரியவில்லை.

அப்போதைக்கு அந்தத் தெம்போடு அவன் முன்னே கை கூப்பினாள்.

''போவட்டும்... நடங்க. சேலை ஆத்தோட போயிடிச்சேங்கற கவலை வேண்டாம். வழியிலதான் என் சினேகிதன் வண்ணமுத்து வீடு இருக்குது. அவன் சம்சாரத்தோட புடவைல ஏதாவது ஒண்ணக் கட்டிக்கிட்டு வீட்டுக்குப் போங்க. வாங்கித்தரேன்.

அங்க உங்களைக் காணோமுன்னு ஒரே களேபரமா இருக்கப்போவுது. யாரும் கேட்டா 'ஆத்தோட போய்ட்டேன். ரங்கன்தான் அள்ளிப் போட்டான்'னு சொல்லி தவளத்தனமா பேசி வெக்காதீங்க.

ஒண்ணுமே நடக்காத மாதிரி சமாளிச்சிடுங்க எச்சரிக்கையாகப் பேசிக்கொண்டே நடந்தான். கரை ஓரமாய் ஒரு ஒற்றையடிப் பாதை. அந்தப் பக்கமாய்த் தென்னந்தோப்பு. நடந்து நடந்து பழகிய கால்கள் ஆதலால் நடையில் தடுமாற்றமில்லை. மைதிலியின் அதிர்ஷ்டம் கால் கழுவக்கூட ஒரு மனிதர் அந்தப் பக்கம் வரவில்லை. அவளுக்கும் நிம்மதியாக இருந்தது.

அந்த நாலு முழ வேட்டி மட்டும் போதியும் போதாமலும் அவளை மிகுந்த கூச்சத்துடனேயே நடத்திக்கொண்டு போனது.

கோயில் சிலைகளுக்குச் சுற்றி விடுகிற மாதிரி சுற்றிக் கொண்டிருந்தாள்.

தெரிந்த யார் பார்த்தாலும் 'என்னடி இது அலங்கோலம்?' என்று கேட்டுவிடுவார்களோ என்னும் பயம்.

இரவுப்பொழுது என்பதால் வசதியாகப் போய்விட்டது. சிறிது தூர நடையிலேயே ஒரு தென்னந்தோப்புக்குள் வண்ணமுத்து குடிசை கண்ணில் பட்டது.

பூவரசமரத்துக்குக் கீழே கோழிக்கொட்டாரங்களோடு கூடிய தட்டுக்குச்சியால் வேய்ந்த குடிசை.

முகப்பில் தென்னங் கிடுகுகளை பந்தலுக்காக முடைந்து போட்டு அடுக்கியிருந்தார்கள்.

ஒரு நாப்பது வார்ட்ஸ் கோலி பல்ப் வெளிச்சம் குடிசைக்குள் பரவிக் கிடந்தது.

போர்ட்டபிள் டி.வி.யில் மெகா சீரியல் ஒன்றில் மாமியார் ஒருத்தி மருமகளின் காலுக்கு சூடு போட்டுக் கொண்டிருந்தாள்.

அதை உச்சு உச்சுக் கொட்டியபடியே பார்த்துக் கொண்டு குழந்தைகளுக்கு சோறு ஊட்டிக் கொண்டிருந்தாள் வண்ணமுத்துவின் மனைவி வடிவு.

ராமன் நுழையவும் 'வாங்கண்ணே' என்று அவள் அழைப்பதும் 'ஒரு நல்ல சீலை ஒண்ணு கொடு வடிவு' என்று இவன் கேட்பதும் 'எதுக்குண்ணே புடவை?' என்று அவள் திருப்பிக் கேட்பதும் ''பேச நேரமில்ல முதல்ல ஒரு சேலையைக் கொடு. என்னயப் பாக்கறேல்ல. இந்தப் பட்டாபட்டி டவுசரோட நிக்கறேன்னா என்ன அர்த்தம்?'' என்று அவன் பதில் சொல்வதும் - காதில் விழுந்தது. அதன்பின் அவளும் புரிந்தவள் போல வெளியே வந்து கிடுகுகளை ஓட்டி நிற்கும் மைதிலியை ஒரு பார்வை பார்த்தவளாக ''உள்றவா தாயி'' என்று கூப்பிட்டு ரங்கனையும் வெளியே அனுப்பி குடிசையின் மரக்கதவையும் மூடினாள்.

அதன்பின் மைதிலி வெளியே வந்தபோது அவள் ஆற்றோடு போனவள் என்று யாராவது சொன்னால் சிரிப்பார்கள்.

அந்த அளவுக்கு நெற்றியில் குங்குமத்தோடு மளமளவென்று தலையையும் வாரிக்கொண்டு வந்திருந்தாள்.

''வடிவு... இரு நான் பெரிய கோபுரம் வரை போய் இதை விட்டுட்டு வந்துடறேன்'' என்று ரங்கனும் அவளுடன் சேர்ந்து புறப்பட்டான்!

★★★

வீட்டுக்குள் நுழைந்தபோது உடம்பெல்லாம் ஒரே நடுக்கம். யார் என்ன கேள்வி கேட்பார்களோ என்று... ஆனால் ஒருவரும் ஒரு கேள்வியும் கேட்கவில்லை. அந்த அளவு சாவு விழுந்த இறுக்கம்.

'எங்க போய்ட்டே... வழியில கண்ணா மாமா ஆத்துல நுழைஞ்சிட்டியா?' என்று அவள் மன்னி கேட்ட விதத்திலும் ஒரு அன்றாட யதார்த்தம்.

"ஆமாம்... அங்க தேவகி புடிச்சிண்டுட்டா-" என்று ஒரு மாதிரி சமாளித்து மாடியின் மரப்படிகளில் ஏறி அறைக்குள்ளும் நுழைந்து கதவைத் தாழிட்டுக் கொண்டபோது அப்பாடா என்றிருந்தது.

அருகிலேயே அந்த சிலோன் கண்ணாடி!

வடிவு கொடுத்த புடவையோடு ஒருமுறை பார்த்துக் கொள்ளவும் நன்றாகத்தான் இருந்தது.

சாதாரண நூல் புடவை, நல்ல கெட்டிச் சாயத்தில் இன்னமும் தண்ணீரில் நனையவில்லை என்கிற திடத்துடன் இருந்தது. வடிவு தனது புதிய புடவையில் ஒன்றையே கொடுத்திருக்கிறாள் என்கிற நினைப்பை அது அவளுக்குள் உருவாக்க நெகிழ்ச்சியில் மளுக் கென்று கண்ணீர் துளிர்த்து விட்டது.

பத்திரமாக இதைத் திரும்ப அவளிடம் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்.

காலில் கூட விழுந்து நமஸ்கரிக்கலாம். தொண தொணவென்று கேள்விகள் கேட்காமல் ஒரு புதிய புடவையை தூக்கிக் கொடுக்க எத்தனை பேருக்கு மனசு வரும்?

கேள்வி உள்ளே எழும்பும்போதே மன்னி ரேவதியின் ஒரு டெரக்கோட்டா புடவையை ஒருமுறை உடுத்திக் கொண்டதும் அவள் அதை ஒரு பத்துப் பதினைந்து முறை சொல்லிச் சொல்லிக் காட்டியதும் ஞாபகமாய் ஞாபகத்தில் குத்தியது.

கீழே எழவுக்கு வந்தவர்கள் சொல்லாமல் கொள்ளாமல் கிளம்பிப் போய்க் கொண்டிருந்தார்கள். ஒரு சம்பிரதாய துக்க விசாரிப்பும் அவள் அப்பா சக்கரவர்த்தி ஐயங்காரின் கண்ணீர் துளிர்க்காத முகச் சுருக்க அழுகையும் வேடிக்கையாகக் கூட இருந்தது.

எல்லாவற்றையும் பார்த்தபடி அப்படியே தூங்கிப் போய்விட்டாள்.

தூக்கம் போல இருந்தும் இல்லாமல் போகும் ஒரு விஷயம் இந்த உலகத்தில் ஏதாவது இருக்கிறதா என்ன?

★★★

ஒரு கூட்டமே பாடுவாந்துறை சுடுகாட்டுக்குப் போய் பால்வார்க்கவும், அஸ்தி எடுக்கவும் கிளம்பிக் கொண்டிருந்தது.

அண்ணாக்குட்டி வாத்தியார் தான் கர்ம காரியங்களை நடத்தி வைப்பவர். எல்லாரையும் விரட்டிக் கொண்டிருந்தார்.

"உம்உம்... சட்னு கிளம்புங்கோ. தொட்டுத் தொட்டு எவ்வளவோ காரியம் இருக்கே. பதினோறு மணிக்கெல்லாம் நான் ஒரு தெவச காரியத்துக்கு வேற போயாகணும் உம்... உம்..."

பரபரத்தார். சில பூணூல் கட்டுக்கள் கொத்துத் தர்ப்பை, பைசா மதிப்பில் பத்துப் பதினைந்து ரூபாய்க்கு மேல் போகாது.

அதுதான் அவரது முதல்.

ஆனால் ஐநூறு அறுநூறு என்று அன்றாடம் வரும்படி! எம்.ஏ., வும் எம்.காம்.,மும் நூறு நூத்தம்பதுக்கு சிங்கி அடித்துக் கொண்டிருக்க, அண்ணாக்குட்டி அதை எல்லாம் ஒரு மணி நேரத்தில் சம்பாதித்து விடுகிறவராக இருப்பதாலோ என்னவோ கள்ளுப்பானை கணக்காக தொந்தி விழுந்திருந்தது.

அதோடு அவர் ஸ்கூட்டியில் வரும்போது ஹைடெக்கும் வேதமும் பிணக்கமின்றி கலந்து விட்ட மாதிரி தான் இருந்தது.

முன்பெல்லாம் பாழும் நெற்றியோடு கூட்டமாக நடந்துதான் சுடுகாட்டுக்குப் போவார்கள். பார்க்கும்போது பளிச் சென்று தெரியும் இது அபர காரியத்துக்குப் போகிற கூட்டம் என்று.

இப்பொழுது அதில் பெரிய மாறுதல்.

எல்லாருமாய் போய் மாருதி ஆம்னியில் ஏறி உட்கார்ந்து கொண்டார்கள்.

பெரியவன் சீமா பூணூல் மார்போடு டிரைவிங் சீட்டில் அமர்ந்து காரைக் கிளப்பிக் கொண்டு நகர்ந்தான். வருவதற்குச் சில மணிகள் ஆகலாம்.

மாடியில் இருந்து அவ்வளவையும் பார்த்துக் கொண்டிருந்த மைதிலிக்கு வடிவின் புடவை ஞாபகம் வந்தது.

இப்பொழுதே போய் கொடுத்துவிட்டு வந்தால் என்ன என்றும் தோன்றியது.

கீழே மன்னி ரேவதி, அம்மா ஜானகி, அத்தைப் பாட்டி கோமளா, சித்தப்பா சாரதி என்று ஒரு கூட்டம்.

அத்திம்பேர் ஹிந்துவில் மூழ்கிப் போயிருந்தார். அத்தைப் பாட்டி அதிக சப்தமில்லாதபடி டி.வி.யை போட்டுக் கொண்டு அதில் லயித்திருந்தாள்.

அதில் யாரோ ஒரு ஜோசியர் ராசி பலன் சொல்லிக் கொண்டிருந்தார். அம்மாவும் மன்னியும் அடுப்படிக் காரியத்தில் மும்முரமாக இருந்தார்கள்.

ஒரு வயர்க் கூடையில் புடவையோடு புறப்பட சரியான வேளை. இருந்தும் 'எங்கடி கிளம்பிட்டே?' என்று கேட்டு வைத்தால் பதில் சொல்லத் தோதாக அப்பா அதிகாலையிலேயே எழுந்து எழுதி வைத்திருந்த பாட்டியின் வைகுண்டப் பிராப்தியை முன்மொழியும் போஸ்ட் கார்டுகளை தேடி எடுத்துக்கொண்டு நடந்தாள்.

நல்லவேளை... அவளை யாரும் எதுவும் கேட்டுவிடவில்லை.

வீதியில் இறங்கி நடக்கும்போது எதிரிலேயே ரங்கன் வந்து கொண்டிருந்தான்!

3

"ஆறுள்ள ஊருக்கொரு நல்ல ஆங்காரமுண்டு
அது பாயும் மண்ணெல்லாமும்
பச்சைப் பசேல் செண்டு!
அரிவாளும், களைக்கொத்தியும்
ஓய்ந்ததில்லை இங்கே சுருண்டு
அதனாலே ஆறுவாழ ஆர்ப்பரிப்பாய்
மனிதா நீ திரண்டு."

ஒரு நைந்த அழுக்குக் கைலி, காக்கி அரைக்கை சட்டை, வாரப்படாத நிலையிலும் வாரப்பட்டது போல அடங்கி நிற்கும்

தலைமுடி என்று எதிரே வந்த ரங்கன், ஒரு ஷணம் மைதிலிக்குள் நெருப்பெரித்தான். வெட்கத்தை ஒரு உருண்டை போல உருட்டவும் செய்தான். கால்கள் தன்னால் தேங்கி நின்றன. அவனும் நின்றவனாய்.

"என்னங்க ராத்திரி யாரும் எடமொடக்கா எதுவும் கேட்கலையே..."

"இ... இல்ல. நான்தான் உனக்கு ஒரு தேங்க்ஸ் கூட சொல்லாம வந்துட்டேன். தேங்க்ஸ்!"

"இருக்கட்டுங்க. இப்ப கூட அப்பா வரச் சொன்னாராம். அதான் பாக்கலாம்னு வந்தேன்."

"அ... அப்பாவா?"

"ஆமாங்க... நீங்க எங்க கிளம்பிட்டீங்க?" கேள்வியோடு அவன் பார்வை வயர்க்கூடை மேல் போனது. புடவையும் கண்ணில் பட்டது.

"அவா புடவை கொடுத்தாளோல்லியோ... அதான் திருப்பிக் கொடுத்திட்டு வரலாம்னு..."

"அட என்னாங்க அவசரம். கொடுங்க நா வேணா கொடுத்துடுறேன்." அவன் கை நீண்டது.

"இல்லே... பரவால்ல. நானே நேர்ல போய் தேங்க்ஸ்னு சொல்லி கொடுத்தா தான் எனக்கு செத்த ஆறுதலா இருக்கும். அப்புறம்... அப்பா இப்ப ஆத்துல இல்ல, பாட்டியோட அஸ்தி எடுக்க சுடுகாட்டுக்குப் போயிருக்கா..."

"அப்படியா... அவசரமா பாக்கணும்னு நம்ம திருமலைகிட்ட சொல்லி விட்டிருந்தாரே... சரி நான் சுடுகாட்டுக்கே போய் பாக்கறேன்..."

அவன் பதவிசாக நகர்ந்தான். அவளும் தன் நடையைத் தொடர்ந்தாள்.

மனசுக்குள் அப்பா இவனை எதற்காக அழைத்திருப்பார் என்கிற கேள்வியின் நிமிண்டல்.

'ஒருவேளை தன்னைக் காப்பாற்றியது எப்படியோ தெரிந்து அது சம்பந்தமாய் விசாரிப்பதற்காக இருக்குமோ? அப்படி

இருந்தால் தன்னிடம் கேட்காமல் இருந்திருப்பாரா என்ன? இருக்காது... வேறு எதற்காக இருக்கும்...'

கேள்வியும் பதிலுமாய் புரண்டு புழுங்கியபடி நடந்தவள் காதில் எதிர்ப்பட்ட பாட்டி ஒருத்தியின் குரல் வந்து ஒரு முட்டு முட்டியது.

''என்னடிம்மா மைதிலி... எங்க அப்டியே கிளம்பிட்டே? ருக்கா போய்ட்டாளாமே கொடுத்து வெச்சவ முந்திண்டுட்டா...''

பாட்டிக்கு பல்லெல்லாம் விழுந்து பொக்கை பூத்திருந்தது. அதில் ஆதங்கக் குமைச்சல். மைதிலி பதிலுக்கு என்ன சொல்வது என்று தெரியாமல் பாட்டியைப் பார்த்தாள்.

''அவளைப் பாக்க எனக்கு தைரியமில்ல. அதான் நான் வரலை. பத்துக்கு வரேன். உங்கப்பன் கிட்டச் சொல்லு.'' என்று அவளே தொடர்ந்தாள். பாட்டியின் உள்ளங்கையில் கிள்ளு திருத்துழாயும், தாயார் சன்னதி மஞ்சளும் தெரிந்தது.

''என்ன பாக்கறே... தாயார் சன்னதிக்குப் போய் என்னையும் சீக்கிரம் கூட்டிக்கோடின்னு அப்ளிகேஷன் போட்டுட்டு வரேன். சக்கரை இல்லாத காபி, உப்பில்லாத தளிகைன்னு ஒவ்வொரு நாளும் நரகமா இருக்கு. இதுல ஒயாத இருமல் வேற வந்துட்றது...''

''சொன்ன சூட்டோடு கொஞ்சம் இறுமிவிட்டு நெஞ்சைத் தேய்த்தபடியே பாட்டி விலக ஆரம்பித்தாள்.

வித்தியாசமான பாட்டி அவள். கல்யாணமே வேண்டாம் என்று அழிச்சாட்டியமா மறுத்து எப்படியோ தொண்ணூறு வயதை நெருங்கி விட்டாள்.

ஈரமுள்ள சொந்தங்களின் ஆதரவில்தான் அவள் நாட்கள் கடந்து கொண்டிருக்கின்றன. அடிக்கடி சொந்தங்களிடம் ஈரம் வறண்டு போகும். அப்போதெல்லாம் பாட்டி அவர்களுக்கு ஒரு அழுக்குத் துணியாகி விடுவாள். ருக்குமணியைத் தேடி வந்து ''தப்பு பண்ணிட்டேன் ருக்கா. உன்ன மாதிரி நானும் கல்யாணம் பண்ணிண்டு பிள்ளை குட்டின்னு விஸ்தாரமாய் இருக்கணும். அப்ப ஏதோ ஒரு வீம்புல மாட்டேன்னு சொல்லிட்டேன். இப்ப நாய் படாதபாடு படறேன். செத்தா கோவிந்தா கொள்ளி கூட கிடைக்குமோ கிடைக்காதோ தெரியலடி'' என்பாள்.

மைதிலிக்கு அதெல்லாம் ஞாபகத்தில் வந்தது. அப்போ தெல்லாம் பாட்டி மைதிலியைத்தான் பார்ப்பாள்.

''கேட்டுக்கோடி... கல்யாணமே வேண்டாம். அது ஒரு ஜெயில் அப்படி இப்படிம்பியே... கேட்டுக்கோ... நன்னா கேட்டுக்கோ'' என்று பாட்டியும் ஒரு பதில் பிலாக்கணம் பாடுவாள். ஒரு பெண்ணால் தனித்து தலைநிமிர்ந்தெல்லாம் வாழ முடியாது என்பதற்கான ஆலாபனை முகாரிகள் அவை. அப்போதெல்லாமும் மைதிலிக்கு அது பெரிதாய் அர்த்தமாகவில்லை. ஆனால் இப்போது பாட்டியைப் பார்க்கவும், மூக்கு வியர்வை தவறி உதட்டில் பட்டு நாக்கும் அதை வருடி அதன் உப்பை உணர்கிற மாதிரி சன்னமாய் ஒரு பயம் அர்த்தமாகியது.

அந்த காலை வேளையில் அப்படி ஒன்றும் சூரியக் கடுரமும் இல்லை. சுமாரான இதமான வெயில்தான். இருந்தும் பாட்டியால் அதையே தாள முடியவில்லை. ஒரு ஓரமாக வீட்டு வாசல் ஒன்றில் தழைத்திருந்த புங்கை மரத்தடி நிழலில் ஒதுங்கியிருந்தாள்.

நடந்து கொண்டிருந்த மைதிலியும் திரும்பிப் பார்த்துவிட்டு பயத்தை அதிகப்படுத்திக் கொண்டாள்.

சுடுகாட்டுப் பிண மேடையில் ருக்குமணியின் இறுதி வடிவமாய் சாம்பல் திட்டுகள். அங்கங்கே எலும்புகளும் இருந்தன.

சொம்புப்பாலை வாசல் தெளிக்கிற மாதிரி தெளித்ததில் 'ஜெய்ங்ங்' என்று ஒருவித சூடு அமுங்கும் சப்தமும் ஈர்க்குச்சி கணக்காய் புகைக் கோடுகளும் மேலெழும்பின.

அண்ணாக்குட்டி வாத்தியார் வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டும், மார்புத்துண்டை தலைப்பாகையாக்கிக் கொண்டும்

''ஆகட்டும் ஆகட்டும்... சக்கரவர்த்தி நீயே முதல்ல சாம்பலையும் எலும்பையும் அள்ளி சட்டியில போடு...'' என்று ஆடு விரட்டுவது போல அதிகாரமாய் விரட்டினார். சக்கர வர்த்தியும் சற்றே சூம்பிப்போன முகத்தோடு அந்த சாம்பல் படுகை அருகே போய் நின்றார். பின்னாலேயே சீமாவும் மற்ற பந்துக்களும் நின்று அந்தப் படுகையைப் பார்த்தனர்.

சீமா... இதாண்டா நம்மோட கடேசி சொரூபம். நன்னா பாத்துக்கோ, இதையும்கூட காவேரில கரைச்சாச்சுன்னா அந்த ஜலம்தான் நம்பளோட அல்டிமேட்.''

வாத்தியாரிடம் கொஞ்சம் கவிதையாய் அதேசமயம் சத்யமான ஒரு வியாக்யானம்.

அது சக்கரவர்த்தியின் மனதை கொஞ்சம் இம்சித்துவிட்டது போல தோன்றியது.

விசும்பிக்கொண்டே அந்த இடத்தில் மண்டிபோட்டு கேவி அழ ஆரம்பித்தார்.

''சீமா உன் அப்பன் அழட்டும், நீ மளமளன்னு எலும்பையும் சாம்பலையும் எடுத்து பானைல போடு பார்ப்போம். உம்உம்...''

வாத்தியார் சீமாவைத் தூண்டவும் அவன் அப்பாவைக் கடந்து சற்று தள்ளி அந்தப் பக்கமாய் போய் சாம்பல் மேட்டில் கையை நுழைத்தான்.

நிஜத்தில் உணர்வுபூர்மாய் மிகச் சுகமாக இருந்தது. புசுபுசு என்று திடமில்லாத ஒன்றை இளம் சூட்டுடன் தொட்டுப் பார்த்தாலன்றி இதை உணரவோ பிறருக்கு உணர்த்தவோகூட முடியாது என்று தோன்றியது.

கோபம் வந்தால் பாட்டி நறுக்நறுக்கென்று குட்டுவாள். வலியில் எமன் தெரிவான். அப்படி ஒரு வலு பாட்டியின் கைகளுக்கு. அதனாலோ என்னவோ பாட்டியின் முழங்கை எலும்பு ஓரளவு பூரணமாக பூச்சி அரித்த மாதிரியான புள்ளிப் புள்ளி துவாரங்களோடு அவன் கையில் அகப்பட்டது. சீமாவும் அதை எடுத்துப் பார்த்தபடியே சட்டியில் போட்டான்.

சக்கரவர்த்தியும் துக்கத்தை மூட்டைகட்டியவராக சாம்பலை கூம்பு கட்டி அள்ளி சட்டியில் போடத் தொடங்கினார்.

அதை சில பந்துக்கள் இமைக்காமல் பார்த்தார்கள். சிலரோ இதைப் போய் பார்த்துக் கொண்டு என்கிற மாதிரி ''மழை பெய்வேனாங்கறதே ஸ்வாமி... என்னமா வேகறது பார்த்தேளா...'' என்று லௌகீக கவலையில் இருந்தார்கள்.

''காவேரிய பார்த்தேளா... காட்டுக் குதிரை கணக்கா ஓட வேண்டியவ நொண்டின்னா அடிச்சுண்டுருக்கா. ஆடி மாசம் இப்படியா இருக்கும்? பதினெட்டாம் பெருக்கன்னிக்கு என்ன பண்ணப் போறோம்னு தெரியலியே...''

''அண்ணாந்து ஆகாசத்தைப் பார்த்துட்டு அடிச்சிண்டு அழவேண்டியதுதான். மழை வந்தாத்தானே ஓய்... நேத்து தெரியாத்தனமா கருகருன்னு மேகம் திரண்டு வந்தது. சரிதான் மழை பின்னப் போறதுன்னு நினைச்சு லால்குடிக்குப் போக இருந்த புரொக்ராமைக் கூட ஒத்திப் போட்டேன்.

பின்னாலேயே வில்லனாட்டம் காத்து வந்து இங்க பேஞ்சேன்னா கொன்னுப்புடுவேன்கற மாதிரி மேகத்தோட காதைத் திருகி இழுத்துண்டு போயிடுத்து.

வாயுபகவானுக்கு நம்ம மேலெல்லாம் என்ன கோபம்னே தெரியில...''

பாடுவாந்துறை சுடுகாட்டு மரத்தடியில் வித்யாசமான துக்க விசாரங்கள்.

நுழைவாயிலில் ரங்கன் நுழைந்து கொண்டிருந்தான். அங்கங்கே தீவுதீவாய் நிற்கும் பலருக்கு நடுவில் சக்கரவர்த்தி ஐயங்காரை கண்களால் தேடினான்.

அவர் கையை உதறிக் கொண்டிருந்தார். அஸ்திச் சட்டியின் வாயை ஒரு வெள்ளைத் துணியால் கட்டத் தொடங்கியிருந்தார் அண்ணாக் குட்டி வாத்தியார்.

சக்கரவர்த்தியும் எதார்த்தமாய் நிமிர்ந்தவர் எதிரில் சற்று தொலைவில் ரங்கனைப் பார்த்துவிட்டு அப்பொழுதுதான் அவன் ஞாபகம் வந்தவரைப்போல, ''டேய் ரங்கா...'' என்றபடியே அவனை நோக்கி நடந்தார். அவனும் அவரைப் பார்க்கவும் மடித்துக் கட்டியிருந்த லுங்கியை அவிழ்த்து விட்டுக் கொண்டு மரியாதையை ஒருவித பாடி லேங்வேஜில் காட்டி முடித்தான்.

''உன்னைப் பாத்தா வரச் சொல்லி நம்ம திருமலை கிட்ட சொல்லிவிட்டிருந்தேன். சொன்னானா?''

"அவர் சொல்லித்தான் சாமி உங்களைப் பாக்க வந்தேன். ரொம்ப அவசரம்னீங்களாம்."

"கெழவி போய்ட்டா கேள்விப்பட்டிருப்பியே?"

பதிலுக்கு ரங்கன் தலை ஆட்டமாய் ஆமோதித்தது.

"நன்னா வாழ்ந்துட்டு வைகுண்டம் போனவ இவ. என் அப்பா அம்மால்லாம் கூட எப்பவோ போய்ட்டா. ஆனா இவளுக்கு இப்பதான் வேளை வந்துருக்கு. போகட்டும் நீ ஒரு காரியம் பண்ணணுமே..."

"சொல்லுங்க சாமி..."

"சாவு காரியம்னு எல்லாரும் வீட்டோட கிடக்கும் போது நம்ம தோப்புல எவனோ ஒரு பய பூந்து இதுதான் சமயம்னு பிடுங்கிப் போட்டிருந்த ஒரு லாரி தேங்காய்ல சரிபாதியை லவட்டிண்டு போயிருக்கான். தோட்டக்காரன் மணியும் அப்ப பார்த்து இல்லை. அவனைக் கேட்டா இது கல்லுக்குழி கந்தசாமி வேலையா தான் இருக்கணும்கறான்.

நோக்குதான் அந்தக் கடங்காரனை நன்னா தெரியுமே. என்னன்னு கொஞ்சம் விசாரிச்சு எனக்குத் தகவல் சொல்லணும் நீ."

சக்கரவர்த்தியின் பேச்சில் கணிசமாய் கோபம் அலை அடித்தது.

"இருக்காதுங்க சாமி... கந்தசாமி இப்ப இந்த மாதிரி கைநீட்ற சோலி எல்லாம் வெச்சுக்கறதில்ல. தோட்டக்காரன் உங்களாண்ட தப்பா சொல்லியிருக்கான்னு நினைக்கறேன்."

ரங்கன் குரலில் நல்ல தணிவு.

"இதை நீ இங்க நின்னுண்டு சொல்லி என்னைச் சமாளிக்காதே. பாடின வாய் ஆடின கையெல்லாம் மட்டுமில்ல. திருடற கையும் என் வரைல சும்மா இருக்காது. நான் ஒண்ணும் வாய்பபுளிச்சதோ மாங்கா புளிச்சதோன்னு பேசலை. அவன் பீடி சிகரெட்டுன்னு இல்லாம சுருட்டு பிடிக்கற பயதானே...?"

"ஆமாங்களே."

"தேங்காக் கொட்டாரத்துண்டை ஒண்ணுக்கு ரெண்டு சுருட்டு துண்டு கிடந்தது. இந்த களேபரத்துலையும் நான் போய்ப் பார்த்தேன்."

"அப்ப நான் என்னன்னு விசாரிக்கறேன் சாமி."

"எனக்கு தேங்கா போனது பத்திக் கூட கவலை இல்லை. அவன் திரும்ப முருங்கை மரத்துல ஏற ஆரம்பிச்சுட்டான் பாரு அதுதான் பெரிய கவலையா இருக்கு.

இப்ப புதுசா வந்துருக்கற இன்ஸ்பெக்டர்ட்ட ஒரு வார்த்தை சொன்னா போதும். முட்டியைப் பேத்துடுவார். ஆனா,

சட்டுன்னு எனக்கு உன் ஞாபகம்தான் முதல்ல வந்தது. அதான் உன்னை வரச் சொல்லி பேசிண்டிருக்கேன்.

"நல்லது சாமி நான் விசாரிக்கறேன்..."

"தோ பார்... பத்து நாளைக்கு நான் எங்கையும் போக முடியாது. தோப்புலதான் கெழவி காரியம் நடக்கப்போறது. அங்கதான் இருப்பேன். நீ அவனைப் போடற போடுல அவன் என் கால்ல வந்து விழணும். என்ன?"

"முதல்ல அவன்தானான்னு தெரிஞ்சுக்கறேன். அப்புறம் மத்த விஷயங்கள பாத்துக்கலாம் சாமி."

"சரி... அப்புறமா மத்யானமா என்னை வந்து பார். செலவுக்கு வாங்கிண்டு போலாம்."

"இருக்கட்டும் சாமி. அப்ப நான் உத்தரவு வாங்கிக்கறேன்."

"சரி நீ கிளம்பு..."

அவனை கத்தரித்துவிட்டுத் திரும்பினார் சக்கரவர்த்தி. எதிரில் கூர்மையாக பார்த்துக் கொண்டிருந்தார் சக்கரவர்த்தியின் உறவுக்காரர் ஒருவர், பெயர் தேசிகன். சக்கரவர்த்தியை நெருங்கிய வேறு ஒருவர், "இவன் அந்த பொணம் தூக்கிப் பய இல்ல..." என்றார்.

"அவனேதான்..."

"இங்க எதுக்கு வந்துட்டுப் போறான்...?"

"எல்லாம் காரணமாகத்தான். நீ நட..."

''சக்கரவர்த்தி அவரைத் தள்ளிக் கொண்டு வாத்தியாரை நோக்கி நடந்தார்.

தேசிகன் பார்வையோ அவன் மேலேயே இருந்தது.

மார்பில் பூணூலுடன் நெற்றியில் ஸ்ரீ சூரணமுடன் அம்மா மண்டபக்கரையில் ஒரு ஐந்து வயதுச் சிறுவனாக அவன் அழுது கொண்டே நின்ற ஞாபகம் ஆற்று மீனாய் மனசைக் கிள்ளியது. அப்போது காவிரியிலும் அசாத்திய வெள்ளம்.

4

''மண்தரையை வருடிப் பின்
மாந்தரையும் வருடும்
கார் விண்தகையே
எங்கள் ரங்கநதி!
பெண் தனம் போல்
உயிர்ச் சோற்றை ஊட்டி, எங்கள்
கண்ணிமையாம் அரங்கனையும் நீராட்டி
நண்ணி வரும் நீராலே மாறிடுமோ கருமவிதி?''

அன்று வந்த அந்த வெள்ளத்தின் முன்னால் அதன் ஹோவென்ற சீற்றத்தின் முன்னால் அம்மா மண்டபக் கரையில் ரங்கன் அழுது கொண்டே நின்றிருந்தது. தேசிகன் ஞாபகத்திலும் அலையடித்தது.

''ஆருடா அம்பி நீ... ஏன் இப்படி அழுதுண்டுருக்கே...?'' - அவரே அவனிடம் முதலில் இந்தக் கேள்வியைக் கேட்டவரும் கூட.

பதிலுக்கு அவன் கரம் ஆற்று நீரைக் காட்டிற்று. சுற்றிலும் கூட சிலர் சூழ்ந்து நின்றார்கள். ''யாருன்னு கேட்டா இப்படி ஓடுற ஆத்தைக் காட்றியேடா. உம் பேரு என்ன?''

- அவன் பதில் சொல்லாமல் தொடர்ந்து அழுதான். நொதித்த கண்களையும் விசும்பலுடன். கசக்கிக் கசக்கி விட்டுக் கொண்டான். ''என்னடா அம்பி... இப்படி அழிச்சாட்டியமா அழுதா என்ன அர்த்தம்? இருட்டப் போறது பார். யாருன்னு சொல்லிட்டு அழு...'' அவர் சடைத்துக் கொள்ள தொடர்ந்த அவன் அழுகையிலும் ஒரு சிறு மாற்றம்.

''அம்மா... அம்மா...'' என்று கழுத்துப்பாகத்தில் விசும்பலோடு ஒரு வெட்டு விழ சற்று மாற்றி அழுதான்.

''அம்மாவா... என்னடா சொல்றே? உங்கம்மாவோட வந்தியா நீ... அவளைக் காணோமா...?''

அவரது கேள்வியின் ஊடே ஒரு பித்தளைச் சருவத்துடன் அங்கே வந்திருந்தாள் கல் மண்டப முகப்பில் இட்லிக்கடை போட்டிருக்கும் செம்பா என்கிற கிழவி.

அழும் அந்தச் சிறுவனைப் பார்த்தவள் ''என்னடா தம்பி எதுக்கு அழுவுறே... ஆமா எங்க உங்கம்மா?'' என்று அவனைத் தெரிந்த மாதிரி விசாரித்தாள்.

''உனக்கு இவனைத் தெரியுமா செம்பா?''

''இல்லசாமி... கொஞ்சம் முந்தி ஒரு அம்மாவோட என் கடை யாண்ட வந்தான் இந்தப் பையன். 'அம்மா பசிக்குதும்மா இட்லி வாங்கித்தா'ன்னான். ஆனா அவங்களோ, என் கடைலல்லாம் சாப்பிடறது தப்புங்கற மாதிரி கண்டிச்சு இழுத்துக்கிட்டு குளிக்கப்போனாங்க... அப்போதான் எனக்குத் தெரியும்.''

ஆமா எங்க அந்த அம்மா?''

''யாருக்குத் தெரியும். நானும் எவ்வளவோ கேட்கறேன். எதுவும் சொல்ல மாட்டேங்கறான். யாரு. என்ன ஏதுன்னு ஒண்ணும் புரியலியே...?''

''அடக் கொடுமையே... அந்த அம்மா எங்க போனாங்க? ஒரு வேளை ஆத்துல சுழல்ல கிழல்ல சிக்கிட்டாங்களா?''

அவள் சுழல் என்கவும் அவனிடமும் அழுகை உச்சபட்சம் போனது. கால்களிலும் எறும்புகள் ஏறியது போலத் துள்ளல்.

"அட அப்படித்தான் போல இருக்குது... எலேய் தம்பி வாயத்திறந்து சொல்லு ராசா... ஆத்தோட போய்டுச்சா உன் அம்மா...?"

"அ... ஆமாம்... கு... கு... குளிச்சிண்டே இருந்தா என் அம்மா அப்படியே... அப்படியே..."

- அவனால் முடிக்க முடியவில்லை.

"ரங்கநாதா... என்னடா இது சோதனை!" தேசிகன் உதடுகள் வருத்தத்துடன் முணு முணுத்தன.

கொடுமைசாமி... காவிரி ஆத்தாளுக்கு என்னா கோபமோ இன்னிக்கு மட்டும் இந்தக் கரைல இரண்டு பேர் போய்ட்டா. யாருக்கும் உடம்புகூட கிடைக்கலேன்னு கேள்விப் பட்டேன்..."

- செம்பா புலம்பலோடு அவனைப் போய் கட்டிக் கொண்டாள்.

"செம்பா... அவனைக் கொஞ்சம் சமாதானப்படுத்தி அவன் பேரென்ன... ஊரென்னன்னு விசாரி..."

"நிச்சயம் இந்த ஊர் இல்ல சாமி... அந்தம்மா கைல ஒரு ட்ரங்குப் பெட்டி இருந்திச்சு. அப்பவே வெளியூர்னு நினைச்சேன். அந்திக் கருக்கல்ல போய்க் குளிக்க வர்றாங்களேன்னும் யோசிச்சேன்.

நம்ம சாமியை கும்புடத்தான் எங்கிருந்தெல்லாமோ நேரம் காலம் பாக்காம வாராங்களேன்னு அதை நான் பெரிசா எடுத்துக்கல.

ஆனா அந்த மகராசி இப்படிப் புள்ளையை உட்டுப்புட்டு ஆத்தோட போவான்னு தெரியாமப் போயிடிச்சே..."

- செம்பா குரலில் ஒரு அசலான துக்கம் நன்றாகவே புலப்பட்டது.

"சரி சரி... அந்தப் பெட்டி எங்க இருக்குன்னு பாரு. அப்படியே இவனாண்டையும் விசாரி. அட்ரஸ் தெரிஞ்சா போலீஸ்ல சொல்லி உறவுக்காராள வரச் சொல்லு.

ஹூம்... எந்த ஜென்மத்துப் பாவமோ இந்தப் பயலை இந்தக் காவேரிக்கரைல இப்படி அனாதையா நிறுத்திப்பிடுத்தே..."

- ஒரு வெட்டிப் புலம்பலோடு அன்று நடையைக் கட்டினவர்தான் இந்த தேசிகன்.

"தேசீ... என்ன பிரமைபிடிச்சாப்ல நின்னுட்டே... எல்லாரும் தீர்த்தமாடக் கிளம்பிட்டா பாரு..."

- ஒரு குரல் வந்து கத்தரிக்கவும்தான் பிரக்ஞை திரும்பியது. நின்று கொண்டிருப்பது பாடுவாந்துறை சுடுகாடு என்பதில் இருந்து ரங்கனின் பூர்வ நினைவுகளுக்குள் முங்கிப் போனோம் என்பது வரை...

தலையை சிலிப்பிக் கொண்டு திரும்பி நடந்தார்!

★★★

அது என்னவோ தெரியவில்லை முதல் நாள் ஓடிய ஓட்டம் காவிரியிடம் இன்று இல்லை. கணுக்காலுக்கும் கீழே சோமாலியா நாட்டு பிரஜையாட்டம் இளைத்த தேகத்தோடு ஏதோ பேருக்கு ஓடிக் கொண்டிருந்தாள்.

அங்கங்கே தண்ணீருக்குள்ளேயே குழிகள் பறித்து அதில் அமர்ந்து தான் குளிக்க முடிந்தது.

அதற்கே ஏகக் கூட்டம்.

இதில் வேட்டுவக்கோனார் தன் பால்மாடுகளையும் எருமை களையும் ஓட்டிக் கொண்டு வந்து அவற்றை ஆற்றுக்குள் பத்திவிட அவையும் அடாவடியாகப் பாய்ந்து ஓடி அங்கும் இங்குமாக, இங்கும் அங்குமாக நின்று கொண்டன.

அதன் காரணமான ஜில்லிப்பால் சாணமும், சிறுநீரும் அவற்றிடம் இருந்து வெளிப்பட்டு நீரில் கலக்கவும், பக்கமாய் இடுப்பளவு குழி தோண்டிக் குளித்துக் கொண்டிருந்த ஒருவன் ஆவேசமானான்.

"யோவ் கோனாரே... மனுசன் குளிக்கறான்ல. நீ பாட்டும் நடுவுல மாடுகளை இறக்கி விட்டா என்னய்யா அர்த்தம்?

பாருய்யா அதுங்க தண்ணிய அசிங்கப்படுத்தறத."

கோனார் காதிலேயே வாங்கிக்கொள்ளவில்லை. கையோடு கொண்டு வந்திருந்த வைக்கோல் சொதியை ஓடும் தண்ணீரில் நனைத்து மாட்டின் பின்தொடையைத் தேய்க்க ஆரம்பித்தார். வர்க்கு... வர்க்கு... வர்ர்ர்க்கு...

- அந்த நபரிடம் எரிச்சல் மண்ட ஆரம்பித்தது.

''ஏய்யா நான் சொல்லிக்கிட்டே இருக்கேன். எனக் கென்னன்னு உன் மாட்டை குளிப்பாட்டறியே... இந்த ஆறு மனுசங்களுக்கா இல்ல மாடுங்களுக்காய்யா...?''

கோனார் சாவதானமாக திரும்பி ஒரு பார்வை பார்த்தார். பின் ''நீங்க ஒண்ணுக்கடிக்காமதான் குளிக்கிறீகளோ...'' என்றார்.

''என்னாது...?'' -குளிக்கும் நபர் சீற்றத்துடன் எழுந்திருந்தான். கோனார் அசரவில்லை.

''இல்ல நீங்க ஒண்ணுக்கடிக்காமதான் குளிக்கிறீகளான்னு கேட்டேன்...''

''மாட்டோட வந்து அசிங்கப்படுத்திருயேய்யான்னா என்னையே நீ மடக்கிறியா...''

''ஏன் நீ ஒதுங்கிப் போய் குளிக்கலாமுல்ல...?''

''அப்ப நீ அழிச்சாட்டியம் பண்ணுவே. நாங்க பயந்து ஒதுங்கிக்கிடணுமா?''

''இது அழிச்சாட்டியமில்ல... எனக்கும் ரைட் இருக்குது. என் மாடுகளுக்கும் ரைட் இருக்கு காவிரி ஒண்ணும் உங்க வீட்டுச் சொத்து இல்ல. எல்லாருக்கும் பொது...''

''அக்கிரமமா பேசாதே... உங்க அநியாயம் தாங்காமத்தான் அந்தக் கரைக்கும் இந்தக் கரைக்குமா ஓடிக்கிட்டிருந்த ஆறு இப்ப கணுக்காலுக்கு சுருங்கிடிச்சு. அப்புறம் இதுவும் இல்லாம போயிடும்.''

''நான் அக்கிரமமா பேசறேனா... நீ ரொம்ப யோக்யம். அப்படித்தானே?''

''ஆமாம்... நான் தான் இப்ப ஆத்தை சாக்கடை ஆக்கிட்டிருக்கேன். இல்ல?''

''சாக்கடை ஆக்குனா கூட பரவால்லியே... சாராயக் கடையால்ல ஆக்கிட்டே?''

- மாட்டைத் தேய்த்துக் கொண்டே கோனார் சொன்ன பதிலைத் தொடர்ந்து குத்து விழுந்தது போல ஒரு அவஸ்தை. மேற்கொண்டு எதுவும் பேச முடியாதபடி ஒரு சங்கடம் கோனார் சொன்ன பதிலில் ஒளிந்திருந்தது.

அதன்பின் கோனாரை ஏற இறங்க ஒரு பார்வை பார்த்துவிட்டு கரை ஏறத் தொடங்கினான். கரைமேல் உற்றுப்பார்த்தபடியே நின்று கொண்டிருந்தான். ரங்கன் அவனைப் பார்க்கவும் ஒரு சின்னத் தடுமாற்றம் அவனிடம்.

''என்ன கிட்டாப்புலி... கோனார் வாய்ல ஆப்பு வெச்சுட்டார் போல இருக்கு...?''

''அது... அது... பதிலுக்கு நானும் வைப்பேன்ல. அப்பத் தெரியும்.''

''ஆக, குளிக்க வந்து ஒரு வம்பு வந்ததுதான் மிச்சம்கறே...?''

''நீ வாயைப் புடுங்காதே ரங்கா... வழியைவிடு.''

''நான் வழியை விடறது இருக்கட்டும்... இந்த கந்தசாமிப்பய எங்க இருக்கான்னு தெரியுமா?''

''கந்தசாமியா... எந்தக் கந்தசாமி?''

''ஆமா இந்த ஊர்ல நூறு கந்தசாமி இருக்காங்கபாரு கல்லுக்குழிக்காரன்யா...''

''அவனா... கரியமாணிக்கம் வரை போகணும்னு சொல்லிக் கிட்டிருந்தான். என்ன விசயம்?''

''அப்ப அவன் கரியமாணிக்கம் போயிருக்கானா?''

''அப்படித்தான் நினைக்கறேன். தோப்புல இல்லையா?''

''இல்லாமத்தானே இந்தப் பக்கம் வந்தேன்...?''

''அப்படின்னா அவன் கரியமாணிக்கம் தான் போயிருக்கணும். ஒரு நல்ல மாடு ஒண்ணு அங்க விலைக்கு வருதுன்னு சொல்லிக்கிட்டிருந்தான்...''

- கிட்டாப்புலி என்னும் அவன் மெல்ல கோடு காட்டினான்.

"மாடா... இவனுக்கு எதுக்கு மாடு?"

"அவன்கிட்டத்தான் கேக்கணும். கை நிறைய பணம் வெச்சிருந்தான். இதுக்கு மாட்டை வாங்கிப்படணும்னான்."

"உன்னோட சேர்ந்து கள்ளச்சாராயம் விக்கற பய அவ. அவன் கை நிறையப் பணம் வெச்சிருந்தானா?"

"தொட்டுத் தொட்டு இழுக்கிறியே ரங்கா... எங்கியோ தேட்டை போட்டான்னு நினைக்கறேன்..."

"எங்கியோன்னா... ஆடிட்டர் ஐயா தோப்புலையா?"

"சரிதான்... விஷயம் அப்படிப்போகுதா - பய அங்க கைவெச்சுட்டானாக்கும்?"

"அப்ப அதுமட்டும் உனக்குத் தெரியாதுன்னு சொல்லு."

"சத்தியமாப்பா. சாமி சத்தியமா எனக்கு எதுவும் தெரியாது..."

"அது யார் சாமி...? அவரை எதுக்கு இங்க இழுக்கறே?"

"என்னப்பா ஒரு வார்த்தைக்குச் சொன்னா அதுக்கு போய் இந்த வெட வெடைக்கிறே...?"

"பின்ன... இல்லாத ஒண்ணு மேல சத்தியம் செஞ்சாத்தானே என்னால அதுகிட்ட போய் கேக்க முடியாது."

"சரி... இருக்கற இந்த காவேரி மேல சத்யமா சொல்றேன். எனக்கு எதுவும் தெரியாது. ஆளை விடு."

- கிட்டாப்புலி நழுவத் தொடங்கினான். ரங்கனுக்குள்ளும் யூகத்தறி வேகமாக ஓட ஆரம்பித்தது.

சக்கரவர்த்தியின் யூகம் சரிதான்.

'கந்தசாமிதான் தோப்புத் தேங்காய்களில் கை வைத்திருக்கிறான்!'

ஒரு முடிவுக்கு வந்ததுபோல எதிரே ஓடிக்கொண்டிருந்த காவிரியை ஒரு பார்வை பார்த்தான். பின் திரும்பி நடந்தான்!

★★★

மதியம் ஒரு மணி.

சுள்ளென்று வெயில் சவட்டி எடுத்துக் கொண்டிருந்தது. முகம் முழுக்க துளிர்த்துவிட்ட வியர்வையோடுதான் வீட்டுக்குள் நுழைந்தார் தேசிகன்.

டி.வி.யில் மத்யான மெகா ஓடிக் கொண்டிருந்தது. அதில் கவனமாக இருந்தாள் வத்சலா. அவர் மனைவி. அவர் வரவும் சீரியலில் இருந்து பார்வையை விலக்காமலே கேட்டாள்.

"காட்டுக்காரியமெல்லாம் முடிஞ்சுடுத்தா...?"

"உம்!"

"காரப்பட்டு முகுந்தன் வந்துருந்தானா...?"

"வரலைன்னு நினைக்கறேன்."

"சாப்ட்டாச்சோல்லியோ...?"

"ஆச்சு..."

"தளிகை எல்லாம் யாரு? ரேவதியும், ஜானகியுமே சமாளிச்சுட்டாளா?"

"அவாதான் வேற யாரு..." - சொன்னபடி ஊஞ்சலில் போய் சாய்ந்தார்.

எண்ணெய் காணாத சங்கிலிக் கண்ணிகள் 'கீச்சு வீச்சு' என்று எலிக்குஞ்சுகளாட்டம் கத்தின.

பெரும்பாலும் மனது சதா எதையாவது யோசித்தபடியே இருக்கும். ஆகையால் அந்த சப்தம் பெரிதாகக் காதில் விழாது. மனசுக்குள்ளும் போய்ச் சேராது.

ஆனால் இன்று எரிச்சல் மூட்டியது.

"செத்த இந்த கண்ணிக்கெல்லாம் எண்ணெய் போட்றதுக்கென்ன?" அலுத்துக்கொண்டார்.

"எனக்கு எட்டாது... நீங்களே போடுங்கோன்னு சொல்லியிருக்கேனோல்லியோ?"

-வத்சலாவிடமிருந்தும் பதில் வந்தது.

"ஆமா இது பெரிய காரியம்னு இதையே சொல்லு..."

"எண்ணெய் போட்றதுக்கு பக்கத்தாத்துல போட்டமாதிரி கிரீஸ் இருந்தா போடலாம். ஒழுகாமக் கொள்ளாம அப்படியே இருக்கும்..."

"க்ரீசுக்கு நான் எங்கபோக... இது என்ன பட்றையா?"

"பதிலுக்குப் பதில்... பதிலுக்கு பதில்னு சொல்லாம செத்த யோசிங்களேன். தூங்கத்தானே போறேள் எழுந்து போய் நம்ம சைக்கிள் கடை கோவிந்தன்ட்ட கேட்டா கொடுத்துட்டுப் போறான்."

"ஏன் அதை நீ போய் வாங்கிண்டு வரப்படாதோ...?"

"அப்புறம் எனக்குச் சீரியல்ல கதை புரியாமல் போயிடும். இப்பவே உங்களால கான்சன்ட்ரேட் பண்ணமுடியல. செத்தப் பொறுங்கோ..."

- வத்சலா தனது கோபத்தைக் கூட ஒரு குட்டுக் குட்டி அடக்கியவளாக சீரியலில் கவனமானாள். அதிலும் ஒருத்தி இவளைப் போலவே கோபத்தில் கத்திக் கொண்டிருந்தாள். தேசிகன் தலையிலடித்துக் கொண்டு வெளியே கிளம்பினார். சொல்லிவைத்த மாதிரி எதிரில் தபால்காரர்! சிரித்தபடியே ஒரு இன்லாண்ட் கடிதத்தை நீட்டினார். வாங்கின வேகத்தில் பின்பக்கம் பார்த்தவர் முகம் சற்றே கோணிக் கொண்டது.

உடனே பிரித்துப் படிக்க வேண்டும் என்கிற எண்ணமே இல்லாதபடி அத்தோடு அப்படியே வீதியில் இறங்கி நடந்தார்.

ஐம்பதடித் தொலைவில் தெருவின் திருப்பத்தில் சினிமா போஸ்டர் தட்டிகளின் நிழலில் கோவிந்தன் சைக்கிள் ட்யூப் ஒன்றுக்கு பஞ்ச்சர் போட்டபடி இருந்தான்.

தேசிகன் நெருங்கவும் நிமிர்ந்தான். எண்ணெப் பசை துலங்கும் மாநிற முகம். இடுங்கிய கண்களே 'என்னசாமி' என்றன.

"கோந்தா... கொஞ்சம் கிரீஸ் இருந்தா கொட்றாப்பா..." என்றார் தேசிகனும்...

"எதுக்கு சாமி? - கேட்டபடி எழுந்தான்.

"ஊஞ்சல் கண்ணி ஒரேடியா சத்தம் போட்றது படுக்க முடியலை பலகைல..."

- அவர் பதிலின்போதே அவன் அந்த சின்ன அறைக்குள் மேலே உள்ள ஸ்லாப்பில் இருந்து ஒரு தகரப் பெட்டியை வெளியே எடுத்தான். அவர் எதிரிலேயே திறந்தான். உள்ளே ஸ்பேனர் சுத்தியல், ஃபோர்க் கம்பிகள் என்று ஒரே அடப்பம். அவன் அதனுள் கிரீஸ் டப்பா ஒன்றை துழாவி எடுத்து நான்கு விரல்களால் கணிசமாக வழித்த போது அந்தப் பெட்டி தேசிகன் கவனத்தை வெகுவாகக் கவர்ந்தது.

-கோந்தா... இந்தப் பெட்டிய எங்கையோ பாத்த மாதிரி இருக்கே..." என்றார்.

"ஆமாஞ்சாமி... நம்ம கல் மண்டபம் ரங்கனோட ஒரே பொக்கிஷம். அவங்க ஆத்தா அவனையும் இதையும் விட்டுட்டுல்ல... ஒரேயடியா போய்ட்டா..."

அவன் பதில் அவர் யூகத்துக்கு நூறு மார்க்குகளைப் போட்டது. அதே வேகத்தில் நீ ஒரு நல்ல மனுஷனே இல்லை என்று மார்க் போட்ட வேகத்தில் அதை அழைத்து அவர் இதயத்தில் ஒரு கிள்ளும் கிள்ளியது.

5

'குடகின் மிசை குதித்து வரும்
குவலயத்து தேவதை - அவள்
குழையப் பெற்ற சேற்றுக்குள்
நுழைந்துவிட்டால் நெல் மழை!
தடையவளுக்கில்லை மண்ணில்
மடைகளுக்குள் புரவி - அவள்
தயை கொண்ட தாயதனால்
மனம் துதிக்கும் பிறவி!'

தனக்குத் தானே மனதைக் கிள்ளிக் கொண்டு ஒரு மாதிரி தேங்கி நின்று விட்டவரை கோவிந்தன் கலைக்க ஆரம்பித்தான்.

''சாமி... என்ன சாமி ரங்கன் பொட்டியப் பார்த்த உடனே எதாவது ஃப்ளாஷ்பேக்கா...?''

''சேச்சே... அதெல்லாம் ஒண்ணுமில்ல'' - அவரும் சமாளித்தார்.

''என்னா சாமி ஒண்ணுமில்லேங்கறீங்க... ரங்கன் நிர்க்கதியா நின்னப்ப அவனைப்பாத்த முத ஆளே நீங்கதானே?''

''அது என்னவோ வாஸ்தவம்தான்... இந்த நாள்தான் என்னமா ஓடிடுத்துப் பார்த்தியா... விளையாட்டு போல 28 வருஷம் ஓடியே போச்சு...''

''எனக்கும் ஞாபகம் இருக்கு சாமி... அந்த வருஷம்தானே சஞ்சய் காந்தி விபத்துல செத்துப் போனது?''

''ஆமாமா... நீயும் நன்னா ஞாபகம் வெச்சிண்டிருக்கியே?''

''வெச்சுக்காம...? எனக்கு இப்பக்கூட நல்லா ஞாபகம் இருக்கு சாமி. இந்த பொட்டில ஒரு டைரி, அதுல ஒரு போட்டோ, அப்புறமா ஒரு நூறு நூத்தம்பதுரூபா சில்லரைன்னு நிறைய ஐட்டம் இருந்துச்சு.

அதைவெச்சு ரங்கன் யார் என்ன ஏதுன்னு கண்டுபிடிக்கலாம்னு பேசிக்கிட்டிருக்கும் போதே அந்த டைரியும் போட்டோவும் காணாமப் போனதும் ரங்கனோட அரை டவுசர் சட்டையும் அவங்கம்மா புடவை ரவிக்கை மட்டும் அதுல இருந்ததையும் என்னால எப்படி மறக்கமுடியும்?''

கோவிந்தன் பழைய தூசியை பாந்தமாகத்தான் தட்டினான். அது தேசிகனின் மூச்சில் புகுந்து குடைந்தது போல ஒரு அவஸ்தை அவரிடம்.

''சரிடா... நீ கிரீஸைக் கொடு... நீ ஒரு சரியான வம்பு மடம்''

''ஹை... இந்த விசயம் பத்தி பேசினாலே வெட்டிக்கப் பாப்பீங்களே... வில்லங்கமான சாமி நீங்க...'' - என்று முணு முணுத்தபடியே கிரீஸை வழித்து ஒரு கிழித்த காகிதத்தில் வைத்துச் சுருட்டி நீட்டினான். அவரும் வாங்கிக் கொண்டு படுவேகமாக திரும்பி நடக்க ஆரம்பித்தார்.

அவர் விலகவும் ரங்கன் ஒரு சைக்கிளை மிதித்தபடி அங்கே வரவும் சரியாக இருந்தது. அவன் முகத்தில் யாககுண்டத்துக்கு பக்கத்தில் அமர்ந்தெழுந்து வந்தவன் போல அப்படி ஒரு வியர்வை.

''வா ரங்கா... ரொம்ப அலைஞ்சுட்டு வர போலருக்கு...'' என்றபடியே கடையில் பஞ்சர் போடும்போது பயன்படுத்தும் முக்காலியை இழுத்து ரங்கன் முன்னால் போட்டான். ரங்கனும் வியர்வையை தன் அழுக்கேறிய வேட்டியால் ஒத்தியபடியே அமர்ந்தான். அப்படியே பெட்டியையும் தற்செயலாகப் பார்த்தான். அவன் முகத்தில் ஷணத்தில் ஏராளமான மாற்றங்கள். கண்களில் ஒரு கலக்கம்.

''என்னப்பா பொட்டியப் பாக்கவும் அம்மா ஞாபகம் வந்துடுச்சா?'' - கோவிந்தன் கேட்க மௌனமாக ஆமோதித்தான்.

''தப்பா எடுத்துக்காத ரங்கா... இதை உன் கண்ணுல படாதபடி போட்டு வெச்சா துருவேறி ஒண்ணுமில்லாமல் போயிடும். அதான் இப்படி உபயோகப்படுத்திக்கிட்டிருக்கேன்... அப்படியே இதைவெச்சே நான் உன் உறவுக்காரங்களை கண்டுபிடிச்சும் காட்றேன் பார்...''

- கோவிந்தனின் பேச்சு ரங்கனின் கலங்கிய முகத்தில் ஒரு கேலிச் சிரிப்பை வரவழைத்தது.

''எதுக்கு சிரிக்கறே.. முடியாதுன்னு நினைக்கறியா?''

''எனக்குத் தெரிஞ்சு பத்துப் பதினைஞ்சு வருஷத்துக்கும் மேலா அப்பப்ப நீ இந்தப் பல்லவியைத்தான் பாடிக்கிட்டிருக்கே. அட விளையாட்டுக்குக் கூட உன்னால் ஒருத்தரை கண்டு பிடிக்க முடியலையே... விடுப்பா எனக்கு நீ தான் உறவுக்காரன்... ஆனா இந்த பொணந்தூக்கியை நீ உறவா நினைக்கறியா இல்லையான்னு எனக்குத் தெரியாது...'' - என்று ரங்கன் சொன்னபோது அவனது குரல் உடைந்து தொண்டையும் அடைத்துக் கொண்டது.

''அடப் போடா பேப்பயலே...! உன்னை நான் பொணந் தூக்கியா மட்டும் பார்த்திருந்தா இப்படி கடை முன்னால உட்காரவெச்சா பேசுவேன்? ஏன் நீ அப்பப்ப இப்படி கீழ போயிட்றே...?''

"கீழபோறதா... நான் எப்பப்பா மேல வந்தேன் கீழதானே இருக்கேன்..." - சொல்லும்போதே கண்கள் கலங்கி வடியாதபடி நீர் திரையிட்டுக் கொண்டது.

"சரி விடு... விட்டா நீ பூமியில பள்ளந்தோண்டி அதுக்கும் கீழ போய் நின்னுப்பே. உன்னைச் சொல்லியும் குத்தமில்லை. உன் தொழில் அப்படி... விட்டுத் தொலச்சிட்டு இந்தக் கடைய மட்டும் பாருன்னா கேக்கறியா? அப்புறம் கோவிந்தன் சைக்கிள் கடைங்கறது போய் பொணம் தூக்கி சைக்கிள் கடைன்னு பேர் மட்டும் தான் மாறும், அதனால ஒரு பிரயோஜனமும் கிடையா துன்னு எனக்கே உபதேசம் பண்ணுவே..."

- கோவிந்தன் ரங்கனை ரொம்பவே புரிந்து வைத்திருக்கிறான் என்பதெல்லாம் அப்படி அவன் பேசும்போது தெரியவரும் சமயம் கிணுங் கிணுங்...' என்று சைக்கிள் பெல் சப்தம்! நிமிர்ந்து பார்த்தான். மைதிலி தான் தன் லேடி பேர்ட் சைக்கிளில் வந்து இறங்கியிருந்தாள். அவள் வரையில் தொப்புளுக்குள் மென்தால் போல ஒரு குளுமை நங்கூரம் போட்டது போல இருந்தது.

"வாம்மா... வண்டிக்கு என்ன?" - கோவிந்தனும் ரங்கனின் முகத்தைப் பார்த்தபடியே தான் கேட்டான்.

"காத்து பிடிக்கணும்ணா..."

"பிடிச்சிட்டா போச்சு, ரங்கா கொஞ்சம் பாரேன்..."

- ரங்கனும் எழுந்து அவள் சைக்கிள் ட்யூப்புகளுக்குள் காற்றைப் புகுத்த ஆரம்பித்தான். அவள் அவனைப் பார்த்து சிரித்தாள். பின் மெல்லிய குரலில்.

"உங்கள பாக்கத்தான் சைக்கிள்ள காத்த பிடுங்கிவிட்டுட்டு இங்க வந்தேன்... அப்பவே நீங்க இங்க வந்ததைப் பாத்துட்டேன்..." என்றாள்.

அவளது ஜிலுஜிலுப்பு முதுகுத்தண்டு வடத்துக்குள் எல்லாம் பாய ஆரம்பித்துவிட்டது. கூடவே அவள் அவனை மரியாதையாக வாங்க போங்க என்று அழைப்பதில் ஒருவித பரவசம். அவனும் பிசுக்... பிசுக்...! என்று காற்று அடித்தபடியே கேட்டான்.

"என்னை எதுக்குப் பாக்க நினைச்சீங்க?"

"இல்ல... அப்பாவை பாத்தேளே... அவர் எதுனா கேட்டாரா?"

"தோப்புல தேங்கா திருட்டு போச்சு... திருடனைப் பிடிக் கணும்னார்"

"அப்பாடா... எங்க நான் காவிரியோட போனதையும் நீங்க காப்பாத்திக் கரை சேத்ததையும் பத்தித்தான் அவருக்கு தெரிஞ்சு போச்சோன்னு பயந்துட்டேன்..."

"நீங்களோ, இல்ல நானோ சொல்லாம அதெப்படி அவருக்குத் தெரிய முடியும்?"

"சந்தோஷம்... தெரியாத வரை சந்தோஷம். இப்பதான் நிம்மதியா இருக்கு மனசுக்கு..."

தழைந்த குரலில் அவள் பேசியது கோவிந்தனுக்குக் கேட்க வில்லை. ஆனால் குசுகுசுவென்று ஏதோ பேசிக் கொள்கிறார்கள் என்பது மட்டும் புரிந்தது.

அவளும் காற்று நிரம்பவும் 'சரி வரேன்..." என்றபடி சைக்கிளோடு விலகத் தொடங்கினாள்.

அவனும் வந்து முக்காலிமேல் அமர்ந்தான். "என்ன ரங்கா இது புது லிங்க்கு?" சக்கரத்தின் பெண்டை சரிசெய்து கோட்டம் பார்த்தபடியே கோவிந்தன் நேரடியாக விஷயத்தைத் தொட்டு விட்டான். கொஞ்சம் மிளகாய் நாக்கில் உரைத்த மாதிரி தான் இருந்தது ரங்கனுக்கு...

"லிங்க்கா?"

"பின்ன... குசுகுசுன்னு பேசிக்கிட்டீங்களே! என்ன விசயம்?"

"நான் எங்க கோவிந்தா பேசினேன்... அவதான் பேசினா... நான் ஒருத்தன் (தலையில் தட்டிக் கொண்டு) அவங்கதான் பேசினாங்க..."

"ஏன் பலமா பேசிக்கலாமுல்ல?"

"இல்ல... இப்ப நீ என்னங்கறே?"

"காலம் கலிகாலம்... பாத்து நடந்துக்கோ..."

"கோவிந்தா... நடந்தது தெரியாம எதையாவது கற்பனை பண்ணிப் பேசாதே. நான் பொணந்தூக்கி..."

– ரங்கன் பொணந்தூக்கி என்று சொன்னதில் ஒரு அழுத்தம்.

''டேய்... ஒரு நாளைக்கு எத்தனை தடவை உன்னை நீயே இப்படி தாழ்த்திக்குவே... சரி அப்படி என்னதான் நடந்தது?''

– கோவிந்தன் சட்டென்று கேட்டுவிட ரங்கன் தடுமாற ஆரம்பித்தான்.

''உன்னைத்தாம்ப்பா... அப்படி என்னதான் நடந்துச்சி...?''

''இல்ல... அதை நான் வெளிய சொல்றது அவ்வளவு நல்ல இருக்காது கோவிந்தா...''

''பார்றா... சொல்ல முடியாத அளவுக்குன்னா விவகாரமா ஏதோன்னு சொல்லு...''

''கோவிந்தா- விட்று - இதுக்குமேல அந்த விஷயம் பத்தி எதுவும் கேட்காதே நான் வரேன்...'' – ரங்கன் எழுந்து புறப்பட தயாரானான். அதே வேளையில் அவனை தேடிக்கொண்டு ஒரு காரும் வந்து அவனைப் பார்த்த மாத்திரத்தில் கிரீச்சிட்டு நின்றது. காருக்குள் ஒரே அழுகுரல்... அம்மா மண்டபக்கரையில் பூக்கடை வைத்திருக்கும் ஃப்ளவர் பாண்டி என்பவன் முன்பக்கம் டிரைவிங் சீட்டுக்கு அருகில் இருந்தான். நின்ற காருக்குள் இருந்து குதித்தபடியே ஓடியும் வந்தான்.

''ரங்கா... ரங்கா...''

''என்ன பாண்டி...?''

''ஒரு வயசுப் பொண்ணு ஆத்தோட போயிடிச்சுப்பா. கல்லணை வரை போய்த் தேடிப் பாத்துட்டோம் பாடி கிடைக்கல ரங்கா. பெத்தவங்க உடம்பைப் பாக்கத் துடிக்கறாங்கப்பா''

– ஃப்ளவர் பாண்டி எங்கே வருகிறான் என்பது ரங்கனுக்கும் புரிந்தது... அவர்களை பின் தொடரத் தொடங்கினான்.

பார்த்துக் கொண்டே இருந்த கோவிந்தனிடம் மட்டும் 'இவன் எப்பத்தான் நான் இனி பொணமெல்லாம் தூக்க மாட்டேன்னு சொல்லப் போறானோ தெரியலியே...'' – என்னும் அலுப்பு!

★★★

தேசிகன் வீட்டு ஊஞ்சலில் கிரீஸ் போடப்பட்டு ஆட்டிப் பார்த்தபோது சப்தமும் கேட்கவில்லை. ஆனால் அதற்கும் சேர்த்து

அவரது அருமைப்பத்தினி வத்சலா சப்தமிட்டபடி இருந்தாள். அவள் கையில் தேசிகன் கொடுத்திருந்த இன்னொண்ட் லெட்டர். அது அவள் கைகளில் தணலாய்க் காந்தியபடி இருக்கிறது. லைதராபாத்தில் இருந்து வந்திருக்கும் கடிதம் அது.

''நாசமாப் போன சண்டாளி அந்த சம்பத்திக்காரி... அவளை நட்டுவாக்கிளியும் நல்லபாம்பும் புடுங்க! என் பொண்ணை இந்த பாடுபடுத்தறாளே? அவ நன்னாருப்பானா?

தட்டுவாணி... தட்டுவாணி...

– வத்சலாவின் கொதிப்புக்குக் காரணமான கடிதம் தேசிகனையும் கொஞ்சம் அரட்டித்தான் ஆட்கொண்டிருந்தது.

'அன்புள்ள அப்பா அம்மா திருவடிகளில்!

உஷா அனேக தெண்டன் சமர்பித்த விக்ஞாபனங்களுடன் எழுதிக் கொண்டது... இப்பவும் இங்கே எந்த மாற்றமும் இல்லை. அவர் முன்பெல்லாம் எங்கேயாவது பார்ட்டி வகையறாக்களுக்குப் போனால் தான் குடிப்பார். இப்போது ஆத்திலேயே ஊற்றிக் கொள்கிறார். என் மாமனார் இதைத் துளிக் கூட கண்டு கொள்வதில்லை. 'ஜாப் ப்ரெஷர் குடிச்சாத்தான் அவனால ஆபீஸ்ல மறுநாள் வேலையே பார்க்க முடிகிறது' என்று வக்காலத்து வாங்குகிறார்.

இந்த லட்சணத்தில் கல்யாணமாகி மூணு வருஷமாக்க ஒரு புழு பூச்சிக்கு வழியை காணோம்... உன் கிட்ட தாண்டி ஏதோ கோளாறு... சரியான மலட்டுக் குடும்பமாக்கும் என்று மாமியார்க் கெழவி எப்பப்பார் பிடுங்கி எடுக்கிறாள்... இப்படியே போனா ஒருநாள் நான் தூக்கில் தொங்கி விட்ட சேதி உங்களுக்கு வரும். ஆத்தில் போன் இருந்தால் எங்கே நான் உங்களோடு தினமும் பேசி விடுவேனோ என்று பயந்து கொண்டு அதையும் சரண்டர் செய்து விட்டார்கள்... ஆனால் அவர்கள் ஆளுக்கொரு செல்போனை வைத்துக் கொண்டு என் நாத்தனாரோடு தினமும் பேசுகிறார்கள்.

அதனால் உங்களோடு போனில் பேசக்கூட முடியவில்லை. எனவேதான் இந்தக் கடிதம்... என்னை இனி அந்த ரங்க

நாயகித்தாயாரும் காட்டழகிய சிங்கரும்தான் காப்பாற்ற வேண்டும். வேணும் ஆசிகள்.

அன்புடன் உஷா.

- கடிதத்தின் சாராம்சம் தேசிகனுக்குள் குறுக்கும் நெடுக்குமாய் ஓடியபடியே இருந்தது.

தன் தவறுக்குக் காலம் தன் மகள் ரூபத்தில் வந்து தண்டிப்பது போல ஒரு உள்ளுணர்வும் ஓடி முடிந்தது. கரகரவென்று கண்ணீர் பெருகியது. யாரும் பார்த்துவிடாதபடி துடைத்துக் கொண்டார். அப்பொழுது பார்த்து வாசல் பக்கம் மோட்டார் சைக்கிள் சப்தம்... நிமிர்ந்து பார்த்தார். அவர் பிள்ளை ஸ்ரீதரன் தான் பைக்கை ஸ்டாண்ட் போட்டு நிறுத்தியபடி இருந்தான்.

கிரே கலர் பேண்ட் சிமெண்ட்டு கலரில் சட்டை பாக்கெட்டில் அவன் வேலை பார்க்கும் ஐ.டி. கம்பெனியின் அடையாள அட்டை - கழுத்திலும் டை!

MBA முடித்திருப்பதால் முப்பதாயிரத்துக்கும் மேல் சம்பளம், டெபுடி மேனேஜர் என்கிற ஹோதா!

வயர்கூடையில் டிபன் கேரியருடன் அவன் உள்ளே வரவும் கண்களை நன்றாகத் துடைத்துக் கொண்டு சகஜ நிலைக்கு வேகமாக வரப் பார்த்தார். ஆனாலும் ஸ்ரீதரன் கண்டுபிடித்து விட்டான்.

''என்னப்பா ஏன் ஒரு மாதிரி இருக்கேள்?'' என்றபடியே மரபெஞ்சின்மேல் அமர்ந்து ஷூக் கால்களின் லேஸ் முடிச்சுக் களை அவிழ்க்கத் தொடங்கினான்.

''ஒண்ணுமில்லப்பா...'' என்று அவர் அவரது ஜலதோஷமூக்கை ஒரு உறிஞ்சு உறிஞ்சினார்.

''அப்படி சொன்னாலே நிறைய இருக்குன்னுதான் அர்த்தம்...'' - அவன் சொல்லி முடிக்க ''ஸ்ரீதரா வந்துட்டியா... அந்த நாசமா போன சம்பந்திக் கெழவி உங்கக்கா உசுரை வாங்கிட்டுதான் விடுவாபோல இருக்குடா. மாப்ளை ஸ்வாமி இப்ப ஆத்துலையே போட ஆரம்பிச்சிட்டாராம்...'' - என்று வத்சலா ஆரம்பித்து விட்டாள். அவனுக்கும் அடுத்த நொடியே மனசு அலண்டு போனது.

''லெட்டர் வந்துருக்கா... இல்ல போன் பண்ணாளா?''

''லெட்டர்தான்... இந்த மனுஷன் கிட்ட அப்பவே அவ்வளவு தூரத்துல கொடுக்காதேன்னேன். கேட்டா தானே? குரங்கு கைல பூமாலை... இதுல நம்ம குடும்பமே மலட்டுக் குடும்பமாம். அந்த சம்பந்தி கெழவி உங்கக்கா கிட்ட சொல்லியிருக்கா...'' - என்றபடியே கடிதத்தை ஸ்ரீதரனிடம் காட்டினாள். அழுததால் கண்ணில் மை பொசிந்து போய் விகாரமாய் காட்டிற்று அவளை. ஸ்ரீதரன் வாங்கி மளமளவென்று ஒரு பார்வை பார்த்தவன் படித்த வேகத்தில் சுக்கு நூறாகக் அதைக் கிழித்தும் போட்டான்.

''நம்ம ஆத்திரத்தை இப்படி கடுதாசி மேலதான் காட்ட முடியும். வேற என்ன பண்ண முடியும்?'' என்றாள் வத்சலாவும்.

''ஏன் பண்ணமுடியாது... இந்த மாதிரி குடிகாரனோட குடும்பம் நடத்தறதுக்கு தாலியை கழட்டி அவன் மூஞ்சியிலையே விட்டெறிஞ்சுட்டு வந்துண்டே இருக்கலாம்... ஆனா உன் பொண்ணுக்கு தான் அதுக்கு த்ராணி இல்லை...''

''நீ ஏண்டா பேசமாட்டே கழட்டி எரிய எவ்வளவு நாழி ஆயிடும்... அப்புறம்?''

''என்ன அப்புறம்? ஒரு டெலிபோன் பூத்தோ இல்ல அப்பளக் கடையோ வெச்சுக் கொடுத்தா பொழைச்சுண்ட்டு போறா...''

''ஏண்டா என் பொண்ணு என்ன நொண்டியா மொடமா... பூத்துல உக்கார? இல்ல அவ என்ன மொட்டப் பாட்டியா அப்பளம் போட...?''

- வத்சலா ஆற்றாமையின் உச்சத்துக்குப் போக ஆரம்பித்தாள். ஏனோ தேசிகன் அமைதியாகவே இருந்தார். அவனும் அதற்கு மேல் பேசுவதில் அர்த்தம் இல்லை என்பது போல் மாடியில் இருக்கும் அவனது அறை நோக்கி படி ஏற ஆரம்பித்தான். அப்போது வத்சலாவும் தேசிகனைப் பார்த்துச் சொல்லத் தொடங் கினாள்.

''இவனுக்காவது நல்ல சம்பந்தம் அமையணும்... ஏன்னா மைதிலியை பொண்ணு பாக்க திருக்கண்ணமங்கைக்காரா வரலை தானே?''

- தேசிகன் மனைவியைச் சற்று அதிர்வோடு பார்த்தார். "ஒரு வேளை அந்த வரன் அமையலேன்னா நானே போய் சக்கரவர்த்தி அண்ணாண்ட அண்ணா உன் பொண்ணை நான் மாட்டுப் பொண்ணாக்கிக்கறேன்னு சொல்லிடப் போறேன். இந்த மூலம் கேட்டைன்னு நட்சத்திரத்துக்கெல்லாம் நான் இனி பயப்படப் போறதில்ல... இனி இந்த ஆத்துக்கு வெளியூர் சம்பந்தமே வேண்டாம். விட்டதை மைதிலிய வெச்சு பிடிச்சுடணும்"

- வத்சலாவின் கணக்கு தேசிகனை சுருக்கென்று தைத்தது. மௌனமாய் எதுவும் பேசாமல் அவரும் மாடியை நோக்கித்தான் நடந்தார்.

ஸ்ரீதரன் அவர் எதிரில் உடைமாற்றிக் கொண்டு கீழே இறங்கிட அவர் மட்டும் அறைக்குள் நுழைந்தார். அந்த நாளைய பழைய மரப் பெட்டி ஒன்று... அதில் அவருடைய பட்டு உத்திரியங்கள் இருந்தன. பகவத்கீதை, ஆனந்த ராமாயணம், கல்கியின் சிவகாமியின் சபதம், சாண்டில்யனின் கடல்புறா என்கிற பலதரப் பட்ட புத்தகங்களும் அதில்தான் இருந்தது. அவற்றுக் கெல்லாம் கீழே அந்த டைரியும் இருந்தது!

6

'ஆனியிலே வானிலையில் மேக
வடிவெடுத்தவள்
ஆடியிலே மண்ணகத்தில் கூடி
விழுந்திட்டவள்
ஆவணியில் அவனிக்குள்ளே அசுரப்
பாய்ச்சலிடுபவள்
ஐப்பசியில் துலாக்காவேரியாய்
மோட்சப்பசி தீர்ப்பவள்!'

கண்ணில் பட்ட அந்த டைரி தேசிகனின் விரல்களால் அதை வருடச் செய்தது. மிகமிக நிதானத்துடன் அதை அவர் கையில்

எடுக்கும் விதத்தில் ஒருவித தயக்கமும், பயமும் பொங்கலுக்குள் பிரண்டு கிடக்கும் நெய் உருக்கு கணக்காகத் தென்பட்டது. அந்த டைரி மேல் 1984 எனும் வருடக் குறிப்பு... நீலவண்ண அட்டை பாதி வெளிறிப் போய் இருந்தது. முன் அட்டையை மெல்லத் திறந்தால் டைரியின் முதல் பக்கம். அதில் பங்கஜம் என்கிற பெயர் எழுதப்பட்டிருந்தது. அதுவும் ஆங்கிலத்தில்... அந்த எழுத்தின்மேல் தேசிகனின் ஆட்காட்டி விரலின் சக்கர ரேகை கொண்ட பாகம் ஒரு வருடல் புரிந்தது. அடுத்த பக்கத்தைப் பிரட்ட அவர் முனைந்தபோது "ஏன்னா எங்க இருக்கேள்?" என்று வத்சலா சமையல்கட்டில் இருந்தபடியே அதிர்வது காதில் எதிரொலித்தது. "தோ வந்துட்டேன்..." என்றபடி திரும்ப அதை மூடினார். பழையபடியே அந்த மரப்பெட்டிக்குள் அதை வைத்து அதன்மேலே கடல்புறாவையும் பொன்னியின் செல்வத்தையும் வைத்து அதை மறைத்தார். எதனாலோ பனிக்கட்டி போடப்பட்ட பாத்திரத்தின் புறப்பாகம் போல வியர்த்திருந்தார். அந்த வியர்வைப் புள்ளிகளை எல்லாம் தோளில் கிடந்த உத்திரியத்தால் துடைத்தவாறு அங்கிருந்து விலகத் தொடங்கினார். ஸ்ரீதரன் உடைமாற்றிக் கொண்டு ஹாலுக்கு வந்திருந்தான். நுரை ததும்பத்ததும்ப அவன் காபிகுடிக்கும் நேரமது...! அதன் நிமித்தம் அந்த வீட்டின் சமையல்கட்டுக்குள் பித்தளை காபி ஃபில்டர் மேல் 'நொட்... நொட்...' என வத்சலா தட்டும் சப்தம் கேட்டது. சப்தத்தைத் தொடர்ந்து தழையப் பறந்து வந்தது டிகாஷனின் வாசம்...! மூச்சிருப்பது சுவாசிப்பதற்காக மட்டும் என்று யார் சொன்னது... அது காபி டிகாக்ஷன் வாசனையைப் பிடிப்பதற் காகவும் என்று தோன்றியது.

ஹாலுக்கு வந்தவர் சமையல் கட்டு நோக்கி நடந்தார். வத்சலா அதனுள் ஒரு கறுப்பு வடிவமாக தோலின் நிறம், புடவை வண்ணம், கழுத்து நகைகளின் ஜொலிப்பு என்று எதுவும் இன்றி இருட்டாகத் தான் தெரிந்தாள்.

"கூப்ட்டியா?"

"ஆமாம்..."

"என்ன விஷயம்?"

''நான் கொஞ்சம் ஸ்ரீதரனோட அந்தாத்துக்குப் போய்ட்டு வந்துட்றேன்...''

''இருட்டப் போறது... இப்பப் போய்...''

''பொழுதுன்னு இருந்தா விடியும்.. இருளும்.. அது ஒரு விஷயமாக்கும்?''

''அது எனக்குத் தெரியாது பார்... துக்கம் கேட்கறதுக்கு விளக்கு வெச்சதுக்கப்புறம் யாரும் போகமாட்டா. நாளைக்குக் காலம் பறப் போ...''

''நான்போவேன் ஸ்ரீதரனுக்கு டைம் இருக்குணுமே...?''

''அவன் எதுக்கு... துக்கம் கேட்க நீயும் நானும் போறாதா?''

''போறாது... அவன் வரணும் அதுவும் மாப்ள மிடுக்கோட வரணும். அவனைப் பாக்கற சக்கரவர்த்தி அண்ணாக்கு கைல வெண்ணெயை வெச்சுண்டு நெய்க்கு அலையறோமேன்னு தோணணும்.''

''வத்சலா... நீ பேராசைப் பட்றே! சக்கரவர்த்தி நல்ல பட்டு ஜரிகை வேஷ்டி மாதிரி - ஏழு தலைமுறையா செல்வச் செழிப் போட இருக்கற குடும்பத்துல வந்தவர். நாம அப்படி கிடையாது. கிழிசல் நூல் ரகம்! உன்னோட அப்பா இதே ஸ்ரீரங்கத்துல அபர காரியத்துக்கு உபாத்யாயம் பண்ணினார். எங்க தெவசம்னாலும் பிராமண போஜனத்துக்கு அவரைத்தான் கூப்பிடுவா. என் தாத்தா மடத்துல பர்ச்சாரகன்...! - (சமையற்காரர்) இப்பத்தான் நம்ம பிள்ளைகள் தலை எடுத்து நாமளும் நிமிந்துருக்கோம். என்னதான் சாதில சமமா இருந்தாலும் அந்தஸ்தையும் கணக்குல எடுத்துண்டு யோசிக்கறதுதான் மனுஷாளோட வழக்கம்.''

''போறும்... உபன்யாசம் கேட்டுக் கேட்டு உங்க பேச்சுலையும் பட்டுவேஷ்டி, நூல் வேஷ்டின்னு உபமானங்கள்ளாம் வந்துட்றது. கேட்க நன்னாத்தான் இருக்கு. ஆனா நாளும் நட்சத்திரமும் கை கொடுக்கலேன்னா அந்தஸ்து காசு பணமெல்லாம் பேருக்குத் தான். அங்க தழைஞ்சுதான் போயாகணும். பத்மாவதித் தாயார் ராஜாவோட பொண்ணுதான். ஆனாலும் ஆஸ்ரமத்துல இருந்த ஸ்ரீனிவாசனைதாதான் கல்யாணம் பண்ணிண்டா. பொண்ணுக்கு அந்தஸ்து விஷயம் கிடையாது. சுத்த ஜாதகம்தான் கணக்கு.

''அப்ப மைதிலியோட ஜாதகம் நன்னா இல்லேன்னு அவளை நம்ம புள்ளைக்குக் கொடுக்க சக்கரவர்த்தி சம்மதிச்சுடுவான்னு நீ நம்பறியா?''

''நிச்சயமா?''

''நன்னா இல்லாத அவ ஜாதகம் நம்ம புள்ளையை ஒண்ணும் பண்ணாதா?''

''அதுக்கெல்லாம் எந்த மாதிரி பரிகாரம் பண்ணணும்னு எனக்குத் தெரியும். நீங்க நகறுங்கோ...'' என்றபடியே காபியைத் தயாரித்தவள் நுரை ததும்பப் பிரியும் ஆவிகூட்டத்தோடு அதை தூக்கிக் கொண்டு ஸ்ரீதரன் நோக்கி நடந்தாள். அவன் டி.வி.யில் நியூஸ் சேனலில் குறியாக இருந்தான்.

''சன்ல கஸ்தூரி வரப்போற நாழி... ஹீம்! போகட்டும், ச்சீதா... (ஸ்ரீதரா) இந்தா காப்பி... குடிச்சுட்டு செத்த சட்டையை போட்டுண்டு என்னோட புறப்படு. நாம போய் சக்கரவர்த்தி அண்ணாவைப் பாத்து துக்கம் கேட்டுட்டு வந்துடுவோம்.''

''நான் எதுக்கும்மா... நீ போய்ட்டுவா.''

''இல்லப்பா... நீ அவசியம் வரணும்... சும்மா காரணமில்லாம ஒண்ணும் சொல்லலை...''

''எந்தக் காரணமா இருந்தாலும் நீ பார்த்துக்கோ. என்னை விடு - இன்னும் அரைமணில டுவெண்டி டுவெண்டி மேச் ஆரம்பிச் சிடும். நான் அதைப் பாக்கணும்.''

''சொன்னாக் கேளுப்பா. அம்மாக்காக செத்த புறப்படு. துக்கம் கேக்கறது ஒண்ணும் என் நோக்கமில்ல. அந்தக் கெழடு போனதுல அப்படி ஒண்ணும் யாருக்கும் ஒரு துக்கமும் இல்லை. எனக்கு உன்னை அந்தாத்து மாப்ளை ஆக்கிப் பாக்கணும்கறதுதான் ஆசை. நீ ஆனேன்னு மட்டும் வை இப்பதான் சொத்துபத்துல பொம்மனாட்டிகளுக்கும் பங்கு உண்டாமே? அப்படிப் பாத்தா அண்ணாவோட காவேரிக்கரை தென்னந்தோப்பே நமக்குத் தான்...

அவள் அவ்வளவுதான் சொன்னாள். அவனிடம் அசாத்ய மாற்றம். அதன்பிறகு ஒரு வார்த்தை அவளிடம் மறுதலிப்பாகப்

பேசவில்லை. ஆணிக் காதில் தொங்கிக் கொண்டிருந்த ஒரு அரைக்கை சட்டையை எடுத்து அணியப் போனான். தடுத்து பீரோவில் இருந்து ஏரோ டைப் முழுக்கை சட்டையை எடுத்துத்தந்து அணியச் சொன்னாள். அப்படியே மூணுபவுன் மைனர் செயின், தடித்த கரையுள்ள ஜரிகை வேட்டி என்று ஜிக்ஜாக்காக மாற்றியவள் ''போ... போய் ஸ்ரீசூர்ணம் மட்டுமான பளிச்சின்னு இட்டுண்டுவா. அண்ணாக்கு பாழும் நெத்தியோட யாரைப் பார்த்தாலும் பிடிக்காது...'' என்றாள். அதன்பின் ஸ்ரீசூரணமும் இட்டுக் கொண்டான். கிளம்பும்போது கேட்டான்.

''மாமா சம்மதிப்பாராம்மா...?''

அவளும் திருப்பிக் கேட்டாள்.

''நான் எதுக்குடா இருக்கேன்?''

★★★

கந்தசாமியின் வீடு திருமஞ்சனக்காவேரி வாய்க்காலை ஒட்டியிருந்தது.

வாய்க்காலில் கணுக்காலளவுக்கு தண்ணீரும் அதனுள் ஓரங்குல ஜிலேபிக் கெண்டைகளும் ஊர்வலம் போனபடி இருந்தன.

வீட்டுக் கொல்லையில் இருந்து ஒரு முப்பது டிகிரிச் சரிவு... அது வாய்க்காலில் போய் முடிந்தது. கொல்லையில் புத்தம் புதிதாய் இரண்டு காராம்பசுக்கள். ஒரு ரூபாய் பலூனை முடிந்த மட்டும் ஊதினாற்போல அவற்றுக்கு மடி! கண்ணிரண்டிலும் துளிகூட பீளையோ, நீர்க்கசிவோ இல்லை. அதுவே அவற்றின் ஆரோக்யத்துக்குக் கட்டியம் கூறிவிட்டன.

அந்த இரண்டு மாடுகளையும் வாய்க்காலுக்குள் அவிழ்த்து விட்ட கந்தசாமி, அவையிரண்டும் நீரில் நின்று ஊறட்டும் என்கிற மாதிரி திரும்பி வந்து ஊட்டமாய் வளர்ந்திருந்த பூவரச மரத்துக்கீழ் உள்ள கட்டிலில் அமர்ந்தான். இப்படி அவன் அமர்ந்தாலே அடுத்து சுருட்டை எடுத்து பற்றவைப்பான் என்பது இடியும் மழையும் மாதிரி ஒன்றோடொன்று தொடர்புடைய விஷயங்கள்.

பற்றவைத்தான்! புகையையும் அனுபவித்து உதட்டில் இருந்து விடுவித்தான். அது ஒருமாதிரியான முரட்டுப் புகையிலை வாசம். அந்த வாசம் அவன் பெண்டாட்டி செவ்வந்திக்குத் துளிகூட பிடிக்காது.

''நாசமாப் போன சுருட்டைப் பத்த வெச்சிகிட்டு உக்காந்துட்டியாகும். இதை எப்பய்யா விட்டொழிக்கப் போறே?'' என்றபடி குழம்புச்சட்டி, சோத்துப்பானை என்று சகலத்தையும் தூக்கிக் கொண்டு வாய்க்காலில் இறங்கிக் கொண்டிருந்தாள் அவள்.

''நீயும் இப்படி வெடவெடன்னு பேசறத விடப் போறதில்ல. நானும் இந்தக் கருமத்தை விடப்போறதில்லை...'' என்றான் அவனும்.

''மாடுங்க நல்லாத்தான்யா இருக்கு... நீ மாடுவாங்கப் போறேன்னு சொன்னப்ப நான் நம்பவேயில்லை. மளிகை கடை பாக்கி தொள்ளாயிரம் சில்லரைக்கே வழியக் காணோம். இதுல இவர் மாட்டை வாங்கிக் கிழிக்கப் போறாராக்கும்னுதான் நெனச்சேன். ஆனா நெசமாலுமே மாட்டோட வந்து நிக்கறே நீ... கேக்கறேன்னு தப்பா எடுத்துக்காதே... கோயிலுக்கு நேந்துவிட்ட மாடுங்கள யாருக்கும் தெரியாம தள்ளிகிட்டு கிள்ளிகிட்டு வந்துட்டியாய்யா...?''

''அடி போடி பொச கெட்டவளே... கோயில் மாடுங்கள் தள்ளிக்கிட்டுவர்றதுன்னா தான் தெனம் ரெண்டுன்னு தள்ளிகிட்டு வந்து ஒரு பண்ணையில்ல வச்சிருப்பேன். இது கரியமாணிக்கத்துல கார்மேகத்துகிட்ட இருந்த மாடுங்க. கடன் கொடுத்த பார்ட்டி பணத்தைத் திருப்பித் தரலைன்னு பிடிச்சு கிட்டு வந்து வெச்சிருந்தான். மார்கெட் ரேட் முப்பதாயிரம். நான் இருபதுக்கு முடிச்சேன்.

''இருபது ரூபாய்க்கு நீ எங்க போனே?''

''எல்லாம் பேங்க் லோனு பிள்ள...''

கந்தசாமி சொன்னபதில் செவ்வந்தியின் புருவத்தை வளைத்த போது திருமஞ்சனக்காவேரிவாய்க்காலில் ரங்கன் வருவது தெரிந்தது. அவனைப் பார்த்தவள் முகத்தில் சற்று பதற்றம்.

''யோவ் அந்த பொணந்தூக்கி வாரான்...''

"ஆமாம்..."

- இருவரும் கூர்மையாகினர். ரங்கனோ மாடுகள் அருகில் சென்றவனாக அவற்றை ஏற இறங்கப் பார்த்தான். கந்தசாமியோ லேசாக உதற ஆரம்பித்தது.

"என்ன ரங்கா பாக்கறே... இன்னிக்கு தான் வாங்கிட்டு வந்தேன். கரியமாணிக்கம் காராம் பசுங்க..."

"அதான் பாத்தாலே தெரியுதே. கார்மேகம் அடகு பிடிச்சிருக்கே மாடுங்கதானே?"

"அது... அது..."

"என்னா அதுஅதுன்னு ஹார்மோனியம் வாசிக்கறே... ஆமாம் ஐயர்தோப்பு தேங்காயிங்க ஒரு காய்க்கு மூணு ரூவான்னாலும் பத்தாயிரத்துக்கு முப்பதாயிரம் வரணுமே, நீ என்ன இருபதாயிரத்துக்கு வித்துருக்கே... திருட்டுத் தேங்காய்ங்கறாதலையா?"

"ரங்கா..."

"என்ன ரங்கா, நொங்கா... அதெல்லாம் இல்ல நான் உழைச்சு சம்பாதிச்சேன்னு புளுகப் போறியா?"

- அவன் கேட்கக் கேட்க செவ்வந்தி முகமும் கோணிக் கொண்டது. கந்தசாமியோ ஒரு உதறு உதறிக்கொண்டு "எலேய்... நீ யாருடா... பொணந்தூக்கிப் பயலே... உனக்கு நான் எதுக்குடா பதில் சொல்லணும்?" என்று ஈரக்கோழி போல ஒரு சிலுர்ப்புச் சிலிப்பினான். கட்டிலைவிட்டு எழுந்தும் நின்றான்.

ரங்கனிடம் ஒரு ஆழமான பார்வை! பின் எதுவும் பேசாமல் மாடுகள் இரண்டையும் கையோடு கொண்டு வந்திருந்த கயிற்றால் கட்ட ஆரம்பித்தான்.

"ரங்கா... வேணாம் என் மாடுங்கள கட்டாதே... அது உனக்கு நல்லதில்ல..."

யாருக்கு எது நல்லதில்லன்னு போகப்போக பாக்கத்தானே போறே. ஐயர் வீட்டுலதான் இப்ப பேசிகிட்டிருக்கான், நீ வித்த திருட்டுத் தேங்காயை வாங்கின தேங்கா கடை முனியப்பன் மாட்டை உனக்கு வித்த கார்மேகமும் ஐயர் வீட்லதான் இருக்கான். நான் மாடுங்களோட போனா அவங்க போலீஸ்

ஸ்டேஷன் பக்கம் போய் கம்ப்ளைண்ட் கொடுக்க மாட்டாங்க. இல்லாட்டி இப்ப நான் வந்தேன். அரை மணி நேரத்துல போலீஸ் வரும் பரவால்லியா?"

-அவன் கேட்ட கேள்வி கந்தசாமியை கட்டிப்போட செவ்வந்தியும் அவனை அகண்ட கண்களோடு முறைக்க ஆரம்பித்தாள். மாடுகள் இரண்டும் ரங்கனோடு நடக்க ஆரம்பித்தன!

★★★

கொல்லைப்புறம்!

பின்வழியாக மாடுகளைச் சுற்றி அழைத்து வந்து கொல்லையில் உள்ள தென்னை மரத்தில் அவற்றைக் கட்டியும் போட்டுவிட்டுத் திரும்பிய போது, சாப்பிட்ட எச்சில் இலைகளை எடுத்து வந்து கொல்லையில் உள்ள எருக்குழிக்கான தொட்டிக்குள் போடுவதற்காக வந்தபடி இருந்தாள் மைதிலி.

அந்த வேளையில் அங்கே அவன் இருப்பது கண்டு ஒரு சன்னமான அதிர்வுக்கும் ஆளானாள்.

"நீ... நீங்க எங்க இங்க?"

"மாடுங்கள கட்ட வந்தேன். அப்பா இல்லீங்களா?"

"அப்பா... அப்பா... ஆமா இதென்ன மாடு... இங்கதான் ஏற்கனவே மாடுகள் இருக்கே?"

"இது ஒரு கதைங்க. திருட்டுப்போன தேங்காய்ங்கல்லாம்தான் இங்க இப்படி மாடா மாறி நிக்குதுங்க. நீங்க அப்பாவைக் கூப்பிடுங்க..."

-அவன் சொல்லச் சொல்ல சக்கரவர்த்தியே கொல்லைப் பக்கம் வந்தபடி இருந்தார்.

"யாரது ரங்கனா?"

"ஆமாங்க சாமி... மாடுங்கள போய்ப் பத்திகிட்டு வந்துட்டேங்க, அந்த கந்தசாமி தான் களவாணின்னு நீங்க அனுமானிச்சது ரொம்ப சரிங்க..."

"இந்த மாடுகள்தானா அது?"

"ஆமாம்..."

"அது சரி... அவன் சரியான அராத்துப் பார்ட்டியாச்சே. உன் கிட்ட எப்படி மடங்கினான்? நானாவது திருட்றதாவதுன்னு இந்த ஸ்ரீரங்கத்துல இருக்கற அத்தனை கோபுரம் மேலயும் சத்தியம் பண்ணிருப்பானே?"

"அவன் அராத்துன்னா நான் பிசாசாச்சுங்களே...? இங்க உங்க வீட்லதான் கரியமாணிக்கம் கார்மேகமும், தேங்கா வாங்குன முனியப்பனும் இருக்காங்கன்னு சும்மா அளந்துவிட்டேன். அதுக்கு மேல அவனால எகிற முடியல..."

"பரவால்ல... பொணந்தூக்கியா இருந்தாலும் புத்திசாலி யாகவும் இருக்கே நீ..." - சக்கரவர்த்தியின் பாராட்டில் அவனுக் கான ஒரு குட்டு... அது அவனை நன்றாகவே குத்தியது.

"சரிங்க... இந்த பொணந்தூக்கி புறப்பட்றேங்க..." என்றபடி வினாடிகூட தாமதிக்காமல் ரோஷத்தைக் காட்டினான். அவருக்கும் தான் அவசரப்பட்டு வார்த்தையை விட்டது புரிந்தது. மைதிலிக்கோ காலைத் தேள்கடித்தது போல இருந்தது!

7

'ஊருக்கொரு ஆறு... அது போட்டிடுமே சோறு!
ஓரறிவு பச்சைக்கெல்லாம் உணவு தருமாறு
ஓடவிட்ட மேகத்துக்கு நன்றியைக் கூறு...!
தாகத்துக்கு மாத்திரமா ஆற்றணைந்த நீரு?
தேகம் கழுவுமதன் மோகச் செயலதனைப்பாரு
தனக்கென வாழாத தியாகியன்றோ தண்ணீரு...'

கொல்லையை விட்டு வேகமாக நீங்கிவிட்டான் அவன். சக்கரவர்த்திக்கும் தான் அவனிடம் பேசிய விதம் அவனை பாதித்துவிட்டது புரிந்தது. ஒருவேளை அவன் விலகிப் போகாமல் நின்றிருந்தால் 'சாரிப்பா... ஒரு வேகத்துல பேசிட்டேன். மனசுல

வெச்சுக்காதே' என்றிருப்பார். அவன் போய்விடவும் கொஞ்சம் போல மனம் கசங்கியவராக திரும்பினார்.

எதிரில் மைதிலி! அவளிடம் வெறிப்பு.. கைகளில் பந்தியில் வாரி எடுத்த எச்சில் இலைகள்... "நீ எதுக்கு இலை எடுக்கறே... உன் மன்னி இல்லையா என்ன பண்றா அவ?" - சற்று பெண் பாசத்துடன் அவர் கேட்டது மைதிலியின் காதுகளில் பெரிதாக விழவில்லை. பாவம் ரங்கன் என்பதில்தான் மனது மையம் கொண்டிருந்தது.

"உன்னைத்தான் மைதிலி... எதுக்கு இப்படி சிலை மாதிரி நிக்கறே?" அவரே சற்று அதிர்வாக பேசி அவளைக் கலைத்து விட்டார். அவளும் கலைந்தாள். இலைகளை உரக்குழிக்குள் வீசி எறிந்துவிட்டு மெல்லத் திரும்பத் தொடங்கினாள்.

உள்ளே அவளது மன்னி ரேவதி அவள் கணவன் சீமா என்கிற சீனிவாசனிடம் "கொல்லைப்புறம் உங்கப்பா பேசினது காதுல விழுந்ததா? எச்ச இலையை உங்க தங்கை எடுக்கப்படாதாம். அது என் வேலையாம். எங்கப்பாம்மா பெத்து வளர்த்து ஆளாக்கி உங்களுக்கு என்னை தாரை வார்த்துக் கொடுத்தது எச்சலை எடுக்கத்தானே?" என்று முனங்கிக் கொண்டிருப்பது காதில் விழுந்தது. கொஞ்சம்போல அது அவளை கிள்ளவும் செய்தது.

மன்னிக்கு ஏற்கெனவே தனிக்குடித்தன தாகம் அதிகம். அவ்வப்போது அப்பா இப்படிப் பேசுவது அந்த தாகத்தை அதிகமாக்குவதும் அவளுக்குப் புரியத்தான் செய்தது.

சக்கரவர்த்தியை பொறுத்தவரையில் மனதில் பட்டதைப் பேசிவிடும் சுபாவம் உடையவர்... அம்மட்டில் உதடுகளுக்கும் நாக்குக்கும் நடுவில் ஒரு செக்போஸ்ட் இருந்திருந்தால் உள்ளே மன்னி மட்டுமல்ல ரங்கனுக்கும் வருத்தம் ஏற்பட்டிருக்காது என்று தோன்றியது.

★★★

ஹாலில் உள்ள ஊஞ்சலில் சக்கரவர்த்தி உட்கார்ந்து கொண்டிருக்க எதிரில் வத்சலாவும், ஸ்ரீதரனும் ஒரு மர பெஞ்ச்சின் மேல் அமர்ந்திருந்தனர்.

"என்னமோண்ணா... உங்கம்மாக்கு மைதிலி கல்யாணத்தைப் பார்க்கக் கொடுத்து வைக்கல. அதை நினைக்கும்போது மட்டும்

கொஞ்சம் சங்கடமாத்தான் இருக்கு...'' என்று நன்றாகவே மனத்தறியில் நாடாவை ஓடவிட்டுக் கொண்டிருந்தாள்.

''எனக்கும் அதான் வத்ஸலா வருத்தம்... ஆனா தலை எழுத்த யாரால மாத்த முடியும்?''

''அதுவும்சரிதான்... ஏண்ணா உங்களை நான் ஒண்ணு கேக்கணு மின்னு.. இங்க உள்ளூர்ல மாப்ளப் பசங்களே இல்லையா என்ன... எதுக்கு வெளியூர்ல பாக்கறேள்...?''

வத்சலாதான் வந்த நோக்கத்திற்கானபாய்ண்ட்டைப் பிடித்து விட்டாள். சக்கவர்த்தி அதைக் கேட்டு சற்று எரிச்சலாக சிரித்தார்.

''என்னண்ணா சிரிக்கறேள்?''

''சிரிக்காம... ஜாதகப் பொருத்தம்னு ஒண்ணும் அமைய வேண்டாமா?''

''அப்ப உள்ளூர்ல அமையிலயாக்கும்?''

''அப்படி இல்ல... அவ இந்த ஊர்லயே வாக்கப்படமாட்டா. அவளுக்கு அசலூர்தான்னு சிங்கபெருமாள் கோயில் ஜோசியர் அடிச்சு சொல்லியிருக்கார்.''

''அடபோங்கோண்ணா... ஜோசியத்துக்கு ஆனாலும் நீங்க இத்தனை முக்கியத்துவம் கொடுக்கப்படக் கூடாது...''

''கல்யாணம்கறது சாதாராணமில்ல வத்ஸலா. உன் புருஷன் மாதிரி திராபையான குடும்பத்துல போய் மாட்டிக்கறதெல்லாம் ஜாதகக் கோளாறாலதான்... பொறந்த உடனேயே எதுக்கு ஜாதகம் கணிச்சு வைக்கறோம்...? கல்யாணம்கற ஆயிரம் காலத்து பந்தத்தும்போது கணக்கு போட்டு பாக்கத்தான்...''

சக்கரவர்த்தியின் பதிலில் அவருக்கு ஜாதகம், ஜோதிடம் மேல் இருக்கும் ஆழமான நம்பிக்கை அப்பட்டமாக புலப்பட்டது. அது வத்ஸலாவை எரிச்சலில் புதைத்தது. ஸ்ரீதரனுக்கும் அவர் பதிலில் உறுத்தல்தான்.

''சும்மா இரும்மா... ஜாதகம் ஜோசியம்கற கேசுகள் எல்லாமே தடுக்கிவிழப் போறவாதான். நீ வார்த்தைக்கு வார்த்தைன்னு பேசாதே...'' என்று அவள் காதைக் கடித்தான்.

''என்னப்பா அம்மா காதுல முணு முணுக்கறே... என்ன விஷயம்?''

''ஒண்ணுமில்ல மாமா... ஒருத்தரோட நம்பிக்கைகளை எப்பவும் தங்கத்தை சந்தேகப்பட்டு உரசிப்பாக்கற மாதிரி உரசிப்பாக்கக் கூடாது... அதான் வாய மூடுன்னேன்...''

அவன் தான் சொன்ன கருத்துக்கு நேர்மாறாக அவரிடம் பேசிவிட்டு வத்ஸலாவையும் பார்த்தான். அவளுக்கு கோபமே வரவில்லை. அவன் அவர் வரையில் அவர் மனதுக்குள் கம்பீரமாக நுழைந்து விட்டது போலத்தான் உணர்ந்தாள். பக்கத்து அறையில் இருந்தபடி மைதிலி கேட்டுக் கொண்டே இருந்தாள். சாவு வீட்டில் சாவை ஓரம்கட்டிவிட்டதே தன் கல்யாண முனைப்பு என்றும் தோன்றியது.

''சரிங்க மாமா நாங்க கிளம்பறோம்...'' என்று எழுந்து கொண்டான் ஸ்ரீதரன்.

''கிளம்பறோமா... சாவு வீட்டுக்கு வந்துட்டு போய்ட்டு வரேன்னு சொல்லப்படாது. இது கூட தெரியலையா உனக்கு?''

வத்சலா ஸ்ரீதரனை சாஸ்த்ர சம்பிரதாயங்களில் ஊறிய ஒருத்தி போல அதட்டினாள்.

''விளக்கு வெச்சதுக்கப்புறம் நீ மட்டும் துக்கம் கேக்க வரலாம். உன் பிள்ளை போய்ட்டு வரேன்னு சொல்லக் கூடாதாக்கும்...''

சக்கரவர்த்தி வத்சலாவை பதிலுக்கு ஒரு வாரு வாரவும் வத்சலா முகத்தில் ஈயாடவில்லை. வழிந்தபடியே அவனுடன் விலகத் தொடங்கினாள். அப்போது எதிரில் ஆட்டோவில் இருந்து இறங்கிக் கொண்டிருந்தாள் மைதிலியின் அம்மாவான ஜானகி.

காதிலும் மூக்கிலும் வைரம் ஜொலி ஜொலிக்க அரக்கு கலரில் ஒரு சாண் அகல பட்டுப்புடவை மடிசாரில் மகாலட்சுமியே அந்த வீட்டு முன் ஆட்டோவில் வந்து இறங்கியது போல இருந்தது.

இத்தனைக்கும் ஜானகியின் முகத்தில் சுரத்தேயில்லை. சரியான ஜுரம். டாக்டரிடம் உடம்பை காட்டிவிட்டு வந்திருக்கும் துவண்ட தோற்றம்.

''மன்னி என்ன இது... உடம்புக்கு முடியலியா என்ன?''

''ஆமாம் வத்சலா... அதான் ஜோசப் ராஜ்குமார் வீட்டு போய்ட்டு வரேன்...''

''ஓ.. அவரா? அவர் டிஸ்பென்சரி வந்ததுல இருந்து நம்ம ஊர் ரங்காச்சாரி டாக்டர்ல இருந்து கோமளா • நர்சிங்ஹோம் ஆண்டாள் டாக்டர் வரை எல்லார் டிஸ்பென்சரியும் காத்தாட்றதாம். அவ்வளவு கைராசியாமே...?''

''கைராசியோ கால் ராசியோ... ஊசிய போட்டுக்கும் போது உயிர்க்கூடே பதற்றதேடி... அதுலயும் நரம்புல நரம்புல போட்றான்...''

''உடம்பை பாத்துக்குங்கோ மன்னி...''

''ஆகட்டும் நீ பாத்துப்போ...''

- ஜானகி சற்று நிதான நடைநடந்து உள் நுழைய, வத்சலாவும் ஸ்ரீதரனும் தெருவில் இறங்கினர்.

''டேய் உன் வருங்கால மாமியாரோட காதையும் மூக்கையும் கவனிச்சியா... அவ்வளவும் வைரம். சாதாரண வைரமில்ல ரொம்ப ராசியான வைரம். இன்னிக்கெல்லாம் மூணு நாலு லட்சம் போகும்...''

''அது எப்படிம்மா... பேசிண்டிருக்கும்போதே இப்படி கணக்கும் போட்டு முடிக்கறே?''

''என்னடா பாராட்றியா... இல்ல ஊசி ஏத்தறியா?''

''பிரமிக்கறேன். ஆமா சக்கரவர்த்தி மாமா அவ்வளவு பேசியுமா உனக்கு இன்னும் நம்பிக்கை போகல. மாமியை என் வருங்கால மாமியார்ங்கறே?''

''அவர் அப்படி பேசினதாலதான் எனக்குள்ள ஒரு புது வேகமே ஏற்பட்டிருக்கு. நீ வேணா பாரு.. அந்த சக்கரவர்த்தி ஒருநாள் நம்மாத்துக்கு உன்னை கேட்டு வராரா இல்லையான்னு...''

''என்னம்மா... சக்கரவர்த்தின்னு சட்டுன்னு பேரைச் சொல்ல ஆரம்பிச்சுட்டே...''

''ஆமாண்டா... பெருசா ஜாதகம் ஜோசியம்னு பேசற இந்த மனுஷனை எல்லாம் சும்மாவிடக் கூடாது...''

''ஏம்மா நான் தெரியாமதான் கேக்கறேன். உன்னால என்னாம்மா பண்ண முடியும்?''

தெருவில் நடந்தபடியே கேட்ட ஸ்ரீதரனை வத்சலா சற்று கூர்மையாக பார்த்துவிட்டு ''அதை நான் பண்ணினதுக்கு அப்புறம் சொல்றேன்...'' எனறாள். அவள் பதிலுக்குள் நல்ல தீர்க்கம்.

''என்கிட்டையே சஸ்பென்சாம்மா...?''

''அப்பதானேடா அது சஸ்பென்ஸ்?''

அவள் பதிலுக்குக் கேட்டதிலும் அர்த்தம் இருந்தது.

மறுநாள்....

எங்கிருந்தோ எம்.எஸ்.ஸின் விஷ்ணு சஹஸ்ரநாம வரிகள் மிதந்து வந்திட கண்விழித்த மைதிலிக்குள் அந்த விடியல் ஒரு புதிய விடியலாகத்தான் தோன்றியது. முதல் நாள் இரவில் தூங்கப்போகும்போதே சீக்கிரம் இரவுப் பொழுது முடிந்து பகல் படுவேகமாக வந்துவிட வேண்டும் என்றுதான் விரும்பியிருந்தாள்.

அப்போதுதானே அழுக்குத் துணிகளை அள்ளிக்கொண்டு காவிரிக்கு போய்விட்டு வருகிறேன் என்று கிளம்ப முடியும்? அப்படிக் கிளம்பினால் தானே கரையோரமாக ரங்கனையும் பார்க்க முடியும்... அவனைப் பார்க்க வேண்டும். அப்பா வெடுக்கென்று பேசியதற்காக ஒரு மன்னிப்பையும் கேட்டுவிட வேண்டும் என்று ஏனோ அவளுக்குள் அப்படி ஒரு தவிப்பு.

எழுந்து சோம்பல் முறித்தவளாக பின் ஜன்னல் வழியாக கொல்லைப்புறத்தைப் பார்த்தாள். முதல் நாள் இரவில் அவன் கொண்டு வந்து விட்டிருந்த பசுக்கள்... தென்னை மர அடிப்பாகத்தோடு சேர்த்து கட்டப்பட்டிருந்த அவற்றுக்கு ஒரு புல் கட்டை வாங்கிப் போட வேண்டும் என்று பார்த்த மாத்திரத்திலேயே அவளுக்குத் தோன்றிவிட்டது.

வேகமாக அந்த மாடி அறையைவிட்டு கீழே இறங்கத் தொடங்கினாள். சமையல் கட்டுக்குள் மன்னி ரேவதி அவளுக்கும் அவள் கணவனுக்கும் மட்டுமாக காபி கலக்கிக் கொண்டிருந்தாள். மைதிலி வரவும் ''மைதிலி எல்லாருக்கும்

செத்த நீயே காபிய கலந்துடு... அவருக்குத் தான் பெட் காபி இல்லாம எழுந்திருக்க மாட்டாரே...'' என்றபடியே விலகிப் போனாள்.

மைதிலிக்கு உண்மைக் காரணம் தெரியும்?

''நான் என்ன சமையக்காரியா... எல்லாருக்கும் காபி, டிபன்னு சமையக்கட்டுலையே சாகறதுக்கு? உங்க தங்கைதான் நன்னா பாக்குமரமாட்டம் வளர்ந்துருக்காளே. எட்டு ஊருக்கு சமைச்சு கொட்ட முடியுமே...?'' என்று ஒருநாள் முணுமுணுக்கப்போய் அது காதில் விழுந்தது போதாதா என்ன...?

மளமளவென்று பேஸ்ட்டை எடுத்து பிரஷ்மேல் பரத்தி பல்தேய்த்துவிட்டு புதிதாக டிகாக்ஷன் போட்டு காபியை கலக்க முனையும்போது சக்கரவர்த்தியும் 'மைலா..' என்றபடியே உள் நுழைந்தார்.

''அப்பா பல்தேய்ச்சுட்டியா?''

''ஆச்சு... இன்னிக்கும் நீதான் காபியா?''

''ஏம்ப்பா... டெய்லி இந்தக் கேள்வியை காட்டாயம் நீ கேட்டாகணுமா?''

''அது இல்லம்மா... இன்னொரு ஆத்துக்கு போகப் போறவ நீ - காலமெல்லாம் நான் உன் கையாலயா குடிக்க முடியும்?''

அவரின் பதிலில் மைதிலியை விலக்கியே வைத்திருக்கும் அவரது உள்ளப்பாங்கு அவளுக்குள் ஒரு ஊமை வலியை ஏற்படுத்த, அந்த வலியோடு காபியை நீட்டினாள்.

''உன் மன்னி என்னிக்கு இதைத் தன் வீடு... நான்தான் அவளுக்கு தகப்பன்னு புரிஞ்சுக்கப் போறாளோ தெரியல...''

அவரிடம் ஆதங்கம் சுடர்விட்டது. அது எந்த அளவுக்குச் சரியானது என்று அவளுக்கு விளங்கவில்லை.

'அப்பா நான் உன்னை என் அப்பாவா நினைக்கறதுல அர்த்தமே இல்லையா?'

கேட்க வேண்டும் போல தோன்றியது. ஆனால் கேட்கப் பிடிக்கவில்லை. அவரும் காபியை குடித்து முடித்தார். கொல்லை மாடிரண்டும் 'மா' என்று பசிக்குரல் கொடுத்தது.

''அப்பா அந்த மாடுகள்...''

''ரங்கன் திருட்டுப் போன தேங்காய்க்கு பதிலா பிடிச்சுண்டு வந்துட்டான்.''

''அதுசரிப்பா அதுக்கு புல் வாங்கிப் போட வேண்டாமா?''

''அவன்கிட்ட தான் சொல்லணும். ஏதோ பின் பக்கம் கொல்லைன்னு ஒண்ணு இருக்கப் போய் அதைக் கொண்டுவந்து கட்டிட்டான். மாடுகளும் நன்னா இருக்கு. தினசரி அஞ்சுபடி பால் கறக்கும் போல தெரியறது... பேசாம அவனையே தினசரி வந்து பாத்துக்கடான்னு சொல்லப் போறேன். நீ என்ன சொல்றே?''

அவர் கேட்கவும் அவளுக்குள் ஒரு ஜிலீர் உணர்வு.

''அப்படியே செஞ்சுருப்பா.''

''அப்படித்தான் செஞ்சாகணும்... ஆனா தினசரி அவன் இந்த ஆத்துப் பக்கம் வந்துட்டுப் போறதப் பார்த்துட்டு என்னப்பா பொணம் தூக்கியப் போய் வேலைக்கு வெச்சிருக்கேன்னு யாரானா ஏகடியம் பேசுவாளோன்னும் கொஞ்சம் சஞ்சலமா இருக்கு.''

அவர் பதில் அவளுக்குள் முன்பு ஏற்பட்ட ஜிலீர் உணர்ச்சியை அப்படியே பகீர் உணர்ச்சியாக்கிற்று.

''அப்ப என்னப்பா பண்ணப்போறே?''

''யோசிப்போம்.. நேத்து ராத்திரி நான் வேற அவனை பொணந்தூக்கின்னு கொஞ்சம் குத்தலா பேசிட்டேன். பாவம் அவன் வருத்தப்பட்டுண்டே போய்ட்டான்.''

''நானும் கவனிச்சிண்டுதாம்ப்பா இருந்தேன்... உனக்கு உதவி செய்திருக்கான் அவன். அவனைப் போய்...''

''தப்புதான் மைலா. பல சமயங்கள் நான் மனசுல பட்டத அப்படியே பேசிட்றேன். பேசி முடிச்சதுக்குப் பிறகுதான் தப்பே தெரியறது. அவன் கொஞ்சம் நின்னுருந்தா 'சாரிப்பா'ன்னு சொல்லியிருப்பேன். அவன் பாட்டுக்குப் போய்ட்டான்.''

"இப்ப என்னப்பா அவன் வராமலா போய்டப் போறான். அப்ப சாரி சொல்லிட்டு ஆத்து மாடுகளையும் பாத்துக்கச் சொல்... அவ்வளவு ஏன்? நம்ம தோப்பையே பாத்துக்கச் சொல்லலாம்..."

"சொல்லலாம்தான்... ஆனா காவேரில யாராவது உசுரை விட்டா இவனைத்தானே எல்லாரும் தேடி வரா. அந்த வீணாப் போன வேலையை விட்டுட்டு தோப்புக் காவலுக்கு வருவானான்னு கேட்டுப் பாக்கணும். வந்தா அவனுக்கு நல்லது. பாப்போம்..."

சக்கரவர்த்தி பேச்சோடு விலகிக் கொண்டார். மைதிலிக்கும் மனசு சற்று லேசாக இருந்தது. தன் உயிரையே காப்பாற்றிய வனுக்கு உதவுவதற்கு இதுதான் சரியான சந்தர்ப்பம் என்றும் தோன்றிற்று. அடுத்த நொடியே அழுக்குத் துணிகளுடன் காவிரிக்கு கிளம்பிவிட்டாள்!

கந்தசாமி பளபளப்பான அந்தக் கத்தியை எடுத்து இடுப்புப் பக்கமாய் வெளியே தெரியாத படி செருகிக் கொண்டு கிளம்பின வேகமே மிக கடுமையாகத்தான் இருந்தது. அவனும் காவிரிக் கரைப் பக்கமாய் ரங்கனைக் குறி வைத்துத்தான் புறப்பட்டுக் கொண்டிருந்தான்!

8

ஆலயம் தொழுவது சாலவும் நன்றென்று
ஆன்றோர்கள் சொன்னவழி அரங்கனைத் தேடிச் சென்று
ஆருயிர் ஒடுங்கிட அவன் திருவடி நிழலில் நின்று
ஆபத்பாந்தவா, அனாதனே ஆட்கொள்ள வேண்டுமென்று
அர்த்தவர்க்கெல்லாமே வேள்வி புரிந்த பலனுண்டு
ஆதலாலன்றோ பாய்கிறாள் பொன்னியும் திரண்டு!'

முதுகுப்புறமாக கத்தியை மறைவாக செருகிக் கொண்டு நடந்த கந்தசாமியின் முகத்தில் அனலும் கனலும் கலந்து கிடந்தது. அவனது ஆக்ரோஷமான புறப்பாட்டை அவன் மனைவி செவ்வந்தியும் கவனித்தாள். அவன் முன்னே ஓடிச் சென்று

தடுத்தவளாக, "என்னய்யா இது.. கத்தியை முதுகுப் பக்கம் செருகிகிட்டு எங்கய்யா கிளம்பிட்டே?" என்றாள் கண்களில் பதற்றம் வழிய.

"இவ ஒருத்தி... போவும்போதே எங்கன்னு கேட்டுட்டியா, இனி போற காரியம் உருப்பட்டமாதிரி தான்..."

"ஆமாமா... கத்தி எடுத்துகிட்டு நீ ஆவேசமா போவே. பாத்துகிட்டு நான் எனக்கென்னன்னு இருக்குணுமாக்கும். நீ பாட்டுக்கு யாரையாவது குத்திட்டு ஜெயிலுக்குப் போனா, இங்க உன் புள்ளைங்கள வெச்சுகிட்டு நான் சீரழியணும்... இல்ல?"

"காலங்காத்தால தொண தொணங்காதே. அந்த ரங்கனைப் பாத்து அவன் வவுத்துலையே இந்தக் கத்தியால குத்துனாத்தான் என் ஆத்திரம் அடங்கும்...

மாட்ட வித்த கார்மேகம், தேங்கா வாங்குன மாரியப்பன்னு ரெண்டு பேரும் அய்யர் வீட்லதான் இருக்காங்கன்னு சொல்லி என்னை சாமர்த்தியமா ஆஃப் பண்ணிட்டான் அந்த நாயி."

"அதுசரி... ஆடி கழிஞ்ச பத்தாம்நாள் கோழி அடிச்சு கும்பிட்ட கதையா இருக்குதுய்யா உன் பேச்சு... அவன் சொல்லும்போதே நீ யோசிச்சிருக்கணும். உன் தப்பு அப்ப உன்னைக் கட்டிப் போட்டுச்சு. இப்ப போய் அதுக்கு கணக்குத் தீக்க பாக்கறியே... நீ எதுக்குய்யா தேங்காயைத் திருடி வித்தே...?

"செவ்வந்தி உனக்குச் சொன்னா புரியாது... எனக்கும் நியாயம் அநியாயம் தெரியும் புள்ள. தென்னந்தோப்பு சாமி ஒண்ணும் லேசான ஆள் இல்ல. பல வருசமா நாம தான் குத்தகை எடுத்து தோப்ப பாத்துகிட்டு வர்றோம்.

இன்னிக்கு எவனோ ஒருத்தன் சில ஆயிரம் கூடக் கொடுக் கறான்கறதுக்காக அவர் ஆள் மாறினா நாம எதவெச்சு பொழப்பு நடத்தறது?"

"இத நீ அவர் கிட்ட பேசு... சட்டைய கழட்டி கிட்டு சண்டை கூட போடு. அதுக்காக தேங்கா திருடி உனக்குன்னு ஒரு நியாயத்தை நீ தேடிக்காதே..."

– செவ்வந்தி அவனை அழகாகப் பேசி தடுத்தாள். அவனிடமும் தொடக்கத்தில் இருந்த வேகம் இல்லை. மலங்க மலங்கப் பார்த்து மிரண்டு மிரண்டு நின்றான்.

''போய்யா.. தலைக்கு வந்தது தலப்பாயோட போச்சுன்னு நினைச்சுக்கோ. வேணும்னா நானும் கூட வர்றேன். எனக்குத் தெரிஞ்சு சாமி ரொம்ப நியாயமானவர்தான். கேக்கற விதமா கேட்டா நிச்சயம் குத்தகையை நமக்கே கொடுத்துடுவாரு... நீ இரு... நான் போய் பேசிட்டுவரேன்...''

–என்று சிக்கலுக்கு ஒரு தீர்வையும் கண்டு முடித்தாள்!

★★★

அம்மா மண்டபத்தில் நல்ல கூட்டம்! கரை ஓரமாக தர்ப்பண காரியங்கள் நடந்து கொண்டிருந்தன. ஒரு வாத்தி மைக் முன்னால் ஆவேசமாக முழங்குவது போல மந்திரங்களைச் சொல்லி காரியங்களைச் செய்தபடி இருந்தார். வாங்கும் காசுக்குக் குறைவில்லாதபடி அவர் நடப்பதை நாலு பேர் உணர வேண்டும் என்று அவர் அடிமனம் நினைக்கிறார் போல் இருந்தது.

இன்னொருவர் குரல் ''அச்சுதாய நம... அனந்தாய நம... கோவிந்தாய நம... பிராணாயாமம் பண்ணுங்கோ...'' என்று சொல்லி கர்ஜிப்பது வைகுண்டத்தில் அந்த நாராயணனின் தூக்கத்தையே கலைத்து விடும் விதமாக ஒலித்துக் கொண்டிருந்தது.

சில அடி தூரத்தில் செம்பழுப்பு வண்ணத்தில் திமுதிமுவென்று ஓடிக் கொண்டிருந்தாள் காவிரி. அவளுக்குள் மூழ்கி எழுகின்றவர்களுக்கெல்லாம் தாங்கள் எல்லா விதத்திலும் லேசாகி விட்டது போல ஓர் உள்ளுணர்வு.

அந்த கரை வெளிப்பக்கமாய் ரங்கனும் வந்திருந்தான்.

அவனை வாதி ராஜ் என்பவன் தான் அழைத்திருந்தான்.

''ரங்கா... ஒரு வலுவான வடநாட்டுப் பார்ட்டி. மாந்திப் ப்ரீதி பண்றதுக்காக வந்திருக்காங்க. அப்படிப் பண்ணும்போது ஒரு பிரம்மச்சாரி பிராமணனுக்கு வேஷ்டி துண்டு வெச்சு வஸ்த்ர தானம் செய்யணும்கறது சம்பிரதாயம். கூடவே நூத்தியோறுரூவா சம்பாவணையும் உண்டு. இன்னிக்கு பாத்து எவனும் கிடைக்கல. உனக்கு நான் பூணூலையும் நாமத்தையும் போட்டு விட்றேன்.

வாங்கிட்டுப் போடா. எனக்கும் அவங்களுக்கு பிரீதி பண்ணி வெச்ச மாதிரி ஆகும்...'' என்றிருந்தான். ஆனால் ரங்கன் போலியாக பூணூலைப் போட்டுக் கொண்டு அந்த வேட்டி துண்டை வாங்கிக் கொள்ள மறுத்து விட்டான். ''ஏண்டா... ஊதிப் பெருத்துப்போன பொணங்கள தூக்கிப் போட்டு ஆயிரம் ஐநூறு வாங்கறதுக்கு இது உனக்கு மேலாப்படலையா?''

''வாதி... நான் யார் எந்த ஜாதின்னெல்லாம் எனக்கே தெரியாது. அடுத்து இந்த பூணூல் நாமம் இதுல எல்லாம் எனக்குக் கொஞ்சம் கூட விருப்பம் கிடையாது. நான் பார்க்க முதுகு சொறியறதுக்குத்தான் பூணூல், தான் ஒரு பெரிய பக்த சிகாமணின்னு காட்டிக்கத் தான் நாமம்... இப்படித்தான் நான் எல்லாரையும் பாக்கறேன். ஆகையால இதுங்கள போட்டு, நம்ம பாவம் போகணும்னு வந்திருக்கற பாவிங்க கிட்ட நான் பாவியாக விரும்பல. ஆள விடு... என் வரைல நான் பாக்க நீங்க அவ்வளவு பேருமே உயிருள்ள பொணங்கள்தான். இதுல உயிர் போன பிணத்தைத் தூக்கிப் போட்டு அதன் மூலமா வர்ற காசால வாழறது ஒண்ணும் எனக்குக் கேவலமா படலை...'' என்று ரங்கனும் சொல்லியிருந்தான். அப்படி எல்லாம் பேசியவன் அம்மா மண்டபக் கரைப் பக்கம் வந்திருப்பது வாதி ராஜிக்கே ஆச்சரியமானதாக இருந்தது. உட்கார்ந்த இடத்தில் பலத்த குரலோடு மந்திரம் சொல்லிக் கொண்டே ரங்கனைப் பார்த்தான்.

ஆனால் ரங்கன் பார்வை யாரையோ அங்கே தேடிக் கொண்டிருந்தது. இறுதியாக அந்த நபரைக் கண்டுபிடித்து அவரருகே சென்றவன், ''சார் என்னை ஞாபகம் இருக்கா?'' என்று கேட்டான்.

அவர் எரிகின்ற ஹோம நெருப்பில் சமித்து குச்சிகளைப் போட்டபடி இருந்தார். அவனை ஏற இறங்கப் பார்த்தார். ''என்ன சார் தெரியலியா... போன வருசம் இதே நாள் ஆத்தோட போயிட்ட உங்க பொண்ணை நான்தான் தூக்கிப் போட்டவன்..''

''ஓ... நீதானாப்பா அது... என்ன விஷயம்?''

''அப்ப பொணத்தை இழுத்து கட்டும்போது கால்ல கிடந்த கொலுசு, கைல இருந்த மோதிரத்தை நான் எடுத்து வெச்

சிருந்தேன். உங்க கிட்ட ஒப்படைக்கறதுக்குள்ள பொணத்தோட நீங்க கார்ல ஏறி ஊருக்குப் போயிட்டீங்க. அன்னிக்கே தேதியைக் குறிச்சு வெச்சுட்டேன். எப்படியும் வருஷ திதிக்கு நீங்க இங்க வருவீங்கன்னு எதிர்பார்த்தேன். வந்துட்டீங்க. இந்தாங்க உங்க பொண்ணோட கொலுசு மோதிரம்...''

அவன் நீட்டினான். கீழே ஹோமப் புகை பிரண்டு வர சன்னமான தீ நாக்குகள். மேலே அவனது கரங்கள், அவர் வரையில் அவரது மகளே நேரில் வந்து நிற்பது போல இருந்தது. கண்ணிரண்டிலும் நீர் திரண்டு விட்டது.

''யப்பா... எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியலை. ஒரு வருஷமா இதை நீ பாதுகாத்து வெச்சிருந்தியா...? எப்பேர்ப்பட்ட மனசுப்பா உனக்கு... நீ நல்லாருப்பேப்பா... ரொம்ப நல்லாருப்பே...''

- மார்பு விம்ம அவர் வாழ்த்தியது அந்தப் பக்கமாய் காவிரியில் குளிப்பதற்கு வந்திருக்கும் வாஜபேயம் சிங்கராச்சாயார் என்பவர் காதுகளிலும் விழுந்தது. பன்னிரு திருமண் துலங்கிட குண்டஞ்சி வேஷ்டியின் கச்சக் கட்டோடு அவர் நடந்து வருவதைப் பார்க்கும் போது வேதங்களுக்கெல்லாம் கால் முளைத்து அவையே நடந்து வருகிறார் போல் இருக்கும்.

அவரும் ரங்கன் வாழ்த்தப்படுவதைக் கவனித்தார்.

ரங்கனும் அவரைப் பார்த்துவிட்டு ஒரு அரைச் சிரிப்புடன் இரு கைகளையும் கூப்பினான்.

''என்ன ரங்கா எப்படி இருக்கே?'' - அவர் நடந்தபடியே கேட்டார்.

''நல்லாருக்கேன் சாமி.'' அவனும் அவரைத் தொடர்ந்தபடி பேசினான்.

''ஆத்துல தண்ணிய பாத்தியா...?''

''அதுக்கென்ன சாமி... அடங்காப்பிடாரிதானே இவ..''

''தப்புதப்பு... கோயிலுக்குள்ள இருக்கற தாயாரும் இவளும் ஒண்ணு...''

''அது உங்களுக்கெல்லாம் சாமி... என்வரைல இவ கொலகாரி... அடங்காப்பிடாரி...''

''நான் எப்ப கேட்டாலும் இப்படி தான் சொல்றே. ஒரு நாள் நீயே சொல்லப்போறே பார். இவளை விட உலகத்துலேயே எதுவும் ஒசத்தியில்லைன்னு...''

''சரி சாமி... நீங்கபோய் உங்க பாவத்தை எல்லாம் கழுவி விடுங்க. நான் வரேன்...''

ரங்கன் படித்துறை வரை வந்து விட்டு அவரிடம் இருந்து விடைபெற்றுக் கொள்ளப் பார்த்தான்.

படிக்கற்கள் மேல் அங்கும் இங்குமாய் ஏராளமான வைஷ்ண வர்கள், சிங்கராச்சாரியாரைப் பார்க்கவும் பவ்யம் காட்டினார்கள்.

ஒருவர் மட்டும் சிங்கராச்சாரியாரை நெருங்கி, ''மகா பெரிய மேதை நீங்கோ... போயும் போயும் அந்த பொணந்தூக்கியோட சரிக்குச் சமமா பேசிண்டு வரது எனக்கென்னமோ ஸ்லாக்யமா படலை...'' என்றார். சிங்கராச்சாரியாரிடம் ஒரு சிரிப்பு மட்டும் உதிர்ந்தது.

''என்ன சிரிக்கறேள்...''

''சிரிக்காம என்ன பண்றது... என்னை பெரிய மனிதன் னுட்டேள். அப்படிப்பட்ட மேதை தப்பா நடந்துக்க இடமில்லை. அவரே ஒரு விசர்ஜனனோட சமதையா பேசறார்னா அதுல ஏதோ காரணமிருக்கும்னு யோசிச்சிருந்தா, என்னை மேதைன்னு நீங்க புரிஞ்சிண்டிருக்கறதுல அர்த்தம் இருந்துருக்கும்... அப்படி இல்லாம சும்மா டி.வி.ல தினசரி வியாக்யானம் பண்றவன், வேதம் படிச்சவன்னு என்னோட புறத்தை மட்டும் பாத்துட்டு பேசறவாளைப் பாத்து சிரிக்காம என்ன பண்றதாம்?''

- சொல்லிக் கொண்டே இடுப்பளவு தண்ணீருக்குள் இறங்கி நின்று கொண்டு தொலைவில் தெரிந்த மலைக்கோட்டை உச்சியைப் பார்த்து கைகளைக் கூப்பினார். அதன் பின்னர் அப்படியே ஓடும் நீருக்குள் முங்கி முங்கி எழ ஆரம்பித்தார்.

அவரை கேள்விகேட்ட மனிதர் முகத்தில் அசடு வழிந்தபடி இருந்தது!

அம்மா மண்டபத்துக்கு வெளியில் எதிர்சாரியில் ராஜ கோபுரத்தைப் பார்த்தபடி நடந்து கொண்டிருந்தான் ரங்கன்.

எதிரில் ஒரு துணி மூட்டையுடன் வந்த படி இருந்த மைதிலிக்கு அவன் கண்ணில் பட்டதில் அத்தனை சந்தோஷம். அவனுக்கும் அவளைப் பார்க்கவும் ஒரு மரியாதை கலந்த உணர்ச்சி.

வேஷ்டியை மடித்து விட்டுக் கொண்டு நடந்தவன் அவளைப் பார்த்த மாத்திரத்தில் இறக்கி விட்டுக் கொண்டான்.

''உங்களப் பாக்கணும்னுதான் கொள்ளிடத்துக்குப் போறவ இந்தப் பக்கமா வந்தேன்...''

''என்ன விஷயங்க...?''

''சாரி.. அப்பா கொஞ்சம் அவசரப்பட்டு அப்படி பேசிட்டார். நீங்க அதை மனசுல வெச்சுக்க வேண்டாம்.''

''முதல்ல நீங்க என்னை வாங்க போங்கன்னு கூப்பிடாம சகஜமா வா போன்னே கூப்பிடுங்க. எனக்குப் பயமா இருக்கு.''

''பயமா இருக்கா.. இது என்ன பதில்?''

''ஆமாம்.. இந்த மாதிரி மரியாதை எல்லாம் எனக்கு புதுசு, உங்களால அதோட ருசி தெரிஞ்சு அதை நான் மத்தவங்க கிட்ட எதிர்பார்க்க ஆரம்பிச்சா என்னாகறது.. அதான் அப்படி சொன்னேன்..''

''நீங்க எதிர்பார்க்கணும், அதான் எனக்கும் வேணும்..''

''அதுக்கென்னங்க... நான் கனவுலயும் கற்பனைலயும் பல விஷயங்கள் எதிர் பார்க்கலாம். ஆனா அதெல்லாம் நடக்கணுமே..''

''எல்லாம் நடக்கும். நீங்க போய் அப்பாவைப் பாருங்கோ. எங்க தென்னந்தோப்பை இனிமே நீங்கதான் பாத்துக்கணும். அப்படியே மாடு கன்னுகளையும் பாத்துக்கணும்.''

''என்னங்க பகல் கனவு எதாவது கண்டீங்களா?''

''இப்ப அப்படித்தான் சொல்வேள்... அப்பாவே கூப்ட்டு சொல்லும்போது தெரியும். அப்படி அவர் சொல்லும் போது மாட்டேன்னு சொல்லாம கெட்டியா பிடிச்சுக்குங்கோ.'' மைதிலி அழுத்தம் கொடுத்துச் சொல்லும்போது சைக்கிளில் கோவிந்தன் வந்தபடி இருந்தான். ரங்கன் அருகே அவன் வரவும் மைதிலி

''அப்ப நான் வரேன்...'' என்றபடி விலக ஆரம்பித்தாள். ''என்ன ரங்கா... என்னப்பா இது இந்த பொண்ணு அடிக்கடி உன்னைச் சுத்தியே பறந்து கிட்டிருக்கு...'' என்றான் சற்று இடக்கான குரலில். ரங்கனுக்கு சுருக்கென்றது. ''கோவிந்தா.. விஷயமே வேறப்பா நீ பாட்டும் அவசரப் பட்டு கோபுரத்துக்கும் குப்ப தொட்டிக்கும் கனெக்ஷனைக் கொடுத்து வைக்காதே'' என்றான் மிக வேகமாக...

''அது என்ன தான் விசயம்... அத்தையாவது சொல்லு...''

''இப்ப அதான் ரொம்ப முக்கியம் பாரு... ஆமா எங்க இந்தப் பக்கம்?''

''வர்றியா கண்ணம்மா கடைக்கு டிபன் சாப்பிடத்தான் போய்கிட்டு இருக்கேன்...''

''எனக்கும் நல்லபசி... ஆனா பாக்கெட்ல சில்ர இல்ல. நீ போய்க்கோ...''

''உன்கிட்ட இல்லாட்டி என்ன... என்கிட்டதான் இருக்குல்ல?''

''அதுசரி எப்பப்பார் நீயே வாங்கித்தந்துகிட்டிரு...''

இருவரும் உசாவிக் கொண்ட அந்த நேரத்தில் எவனோ ஒருவன் 'ரங்கா ரங்கா...' என்றபடி ரங்கனை நோக்கி ஆற்றில் குளித்த ஈர உடம்புடன் வந்து கொண்டிருந்தான். வந்தவன் இளைப்பெடுத்து பொதும்பினான்.

''மொள்ள... மொள்ள... எதுக்கு இப்படி ஓடிவர்றே?''

''வை.. வை... வைரமோதிரம் ரங்கா... வைரமோதிரம்..''

''புரிஞ்சுபோச்சு... வைர மோதிரம் ஆத்துல உழுந்திடிச்சா... யாரோடது?''

''வா... உன்னைத்தான் கூட்டிகிட்டு வரச் சொன்னார். நீ கூட ஒரு ஐயர் கூட பேசி கிட்டே படிக்கட்டு வரை போனியே..''

அவன் கேட்க சிங்கராச்சாரியார் உருவம் எதிரில் தெரிந்தது. ரங்கனும் அவரை நெருங்கினான்.

''என்ன சாமி?''

"முங்கு போடும் போது வைரமோதிரம் கழண்டு உழுந்துடுத் துப்பா..."

"எவ்வளவு மதிப்பிருக்கும்?"

"மதிப்ப விடு... திருமலைல என்னைப் பாராட்டி என் விரல்ல ஆந்திரா கவர்னரே போட்ட மோதிரம் அது.."

"வாங்க... எந்த இடம்னு காட்டுங்க..."

"இல்லப்பா.. இந்த ஓட்டத்துல அதை எங்கன்னு தேட்றது அதுக்கு விதி அவ்வளவுதான்..."

"தப்பு சாமி. எப்ப என் காதுக்கு விஷயம் வந்துடிச்சோ அப்பவே அதுக்கு நல்ல விதி சாமி..." - ரங்கன் படித்துறை நோக்கி ஓடத் தொடங்கினான்.

9

'ஆயிரம் ஊருண்டு
அவனிக்குள் காண்!
ஈங்கு ஆயினும் ஆறுகள்
சிலதுக்குள்தான்...
மானுடம் ஜொலிப்பதும்
அதன் கோட்டத்தில்!
மணி மகுடங்கள் நிலைப்
பதும் அதன் ஓட்டத்தில்...
விதி வழி செல்வதே புவி
வாழ்க்கை!
ரங்கநதி வழி நல்குவதோ
விண் சேர்க்கை...'

ரங்கன் வைர மோதிரம் நிமித்தம் ஆற்றுக்குள் பாய்ந்த போது அம்மா மண்டபக் கரையின் ஒரு பக்கத்தில் மைதிலி தன் துணி

மூட்டைகளுடன் இறங்கியிருந்தாள். அவளும்கூட ரங்கன் ஆற்றுக்குள் பாய்வதைப் பார்த்தாள்.

திமுதிமுவென்று நீரோட்டம். ஆகாயத் தாமரை இலைகள் வேறு அடித்துக் கொண்டு வரப்பட்டதில் அங்கங்கே அதன் மண்டிய சேர்க்கை. தரையில் கால் பதித்து நிற்பதே காவிரியில் பெரும்பாடு. குறு குறுவென்று பாத மணல் அரிபட, குதிங்காலில் உணவு இருப்பதை எண்ணி மீன்கள் கடித்துக் கிள்ள, அவற்றை எல்லாம் தவிர்க்கும் விதமாய் ஒரு முங்கு போட்டு ஒரு பெரும் நீர் வட்டத்தை உருவாக்கி, பின் மூழ்கிய ஜோரில் தண்ணீரை வாயினுள் வாங்கி எழும்பிய வேகத்தில் அதை ஒரு வில் முதுகு போல உமிழ்ந்து, பின் முகம் புரளும் தலைபாக நீரை வழித்து விட்டு, திரும்ப ஒருமுறை ஒரு முங்கு போட்டு அப்படியே உடம்பை காவிரியின் பிடியில் 'இந்தா பிடிச்சுக்கோ' என்று கொடுத்தால் அவளும் ஒரு பதினைந்து நொடிக்குள் ஐம்பது அறுபது அடி தூரத்துக்கு இழுத்துச் சென்றுவிடுவாள். பின் அங்கே கால் ஊன்றி தத்தக்கா பித்தக்கா என்று போராடி கரை ஏற வேண்டும்.

இதயக்கூடு செருமாந்து போகும். கண்ணின் வெண் விழிப் படலம் சிவந்து விடும்.

காதுக்குள் பாய்ந்த சொட்டு நீர்க் கூட்டத்தால் 'பம்' எனும் சப்தம் சிரசுக்குள் கேட்கும்.

இதெல்லாம்தான் ஆற்று நீராடலின் அழியா அனுபவங்கள். நகரங்களில் பிளாஸ்டிக் பக்கெட்டுகளில் தகரக்குவளையால் மொண்டு குளிப்பவர்களுக்கெல்லாம் காவிரியின் பாய்ச்சலான தோற்றமே பிரமிப்பை ஏற்படுத்திவிடும். அத்தோடு ஆற்றில் இறங்கும்போது பயம் பரவசம் என்று ரெட்டை உணர்வும் சேர்ந்து அவர்களிடம் கொட்டமடிக்கத் தொடங்கிவிடும்.

மனிதப் பிறவி எடுப்பதால் எவ்வளவோ நன்மைகள் உண்டு. அதில் ஒன்றுதான் ஆற்று நீராடல் என்பது அப்போதுதான் அவர்களுக்குத் தெரியவரும்.

அதே ஆறு சிலரை கரகரவென இழுத்துக் கொண்டு போய் தன் அடி மணல் வெளியில் போட்டு புதைத்து வரும்போது அச்சமும் அதே அளவு மூளும்.

கரை ஓரமாய் குளித்துக் கொண்டிருப்பவர்களிடம் எல்லாம் இதுதான் நிலைப்பாடு. இவர்களில் ரங்கன் மட்டும் மாறுபட்ட வனாய் காவிரியின் ஓட்டம், வேகம், பாய்ச்சல் என்று எதற்கும் பயப்படாமல் அதனுள் புகுவதுதான் விசித்திரம் விநோதம்!

அதன் மடியில் ஒன்று விழுந்தால் பின் அது அவள் சொத்து. அதை மறந்துவிடுவதுதான் ஒரே வழி. ஆனால் ரங்கன் ஆற்றுக்குள் எந்த நம்பிக்கையில் மூழ்கினான் என்று தெரியவில்லை. கரைப் பாகத்தில் எல்லாரும் அப்படியே ஒருவித ஸ்தம்பிப்புடன் அவன் மூழ்கிய இடத்தையே பார்த்தபடி இருந்தனர். மைதிலியும்... அவளது மைவிழிகளில் ஆயிரம் அச்சச்சோக்கள்!

சிலர் அவன் ஆற்றோடு போய்விட்டதாகக் கூட கருதினர். நொடிகள் நிமிடத்தைப் பிடித்து அந்த நிமிடமும் நிமிடங்களாகி விடும் போது நீருக்குள் இருந்து ஒரு ஏவுகணை சீறிக் கொண்டு வெளி வருகிற மாதிரி வந்தான் ரங்கன்.

அவனைப் பார்த்த பிறகே சிங்கராச்சாரியாருக்கு உயிர் வந்தது. ஆனால் அவன் முகத்திலோ ஏமாற்ற ரேகைகள்!

''ரங்கா... போதும்பா எங்களுக்கு பக்கு பக்குன்னு இருக்கு என்னாச்சு?''

''இருங்கையா... இந்தத் தடவை எப்படியும் அதைக் கண்டுபிடிச்சிடுவேன்...'' திரும்ப நீருக்குள் மூழ்கப் போனான்.

''வேண்டாம்... வேண்டாம்... விட்று.. அது போனா போகட்டும்'' அலறினார் சிங்கராச்சாரியார். ஆனால் அவன் காதுகளில் விழுமுன் அவன் உடம்பு நீரைக் குடைந்து கொண்டு உட்புகுந்து விட்டது. அவரிடம் ஆயாசம்...

''சாமி போங்கசாமி... அவன் சீன் காட்றான். தொலைஞ்சது வைர மோதிரம்... ஆறடி உடம்பு இல்ல... முட்டி மோதி தூக்கிகிட்டு மேல வர்றதுக்கு..'' என்றார் கரையில் நிற்பவர்களில் ஒருவர். அவர் குரலில் அப்படி ஒரு ஏளனம். இந்த இடை வெளியில் மைதிலி அந்தப் பக்கமாய் வந்து அவன் மூழ்கிய நீர்ப்பாகம் மேலேயே பார்வையாய் இருந்தாள். மனதுக்குள்

பெருமாளே அந்த வைர மோதிரம் இந்தத் தடவை கிடைச்சுடணும் - கிடைச்சா சன்னதில நெய் தீபம் போட்றேன்' என்கிற பிரார்த்தனை.

மிகச் சரியாக ஐந்தாவது நிமிடம் திரும்ப மேல வந்தான். ஆடாமல் அசையாமல் நின்று மூச்செறிந்தான். இந்த முறையும் கிடைக்கவில்லை என்பது அவன் மூச்செறிவதிலேயே தெரிந்தது.

''டேய் அப்பா.. சீன் காட்டாம போய் ஆக வேண்டிய காரியத்த பார். செலவுக்கு காசில்லேன்னா சாமிகிட்ட நேரா கேள். இப்படி வெட்டி முங்கு போடாதே...'' என்றார் ஒருவர். மெல்ல நடந்து அவர் அருகில் வந்தான். தீர்க்கமாய் அவர் கண்களைப்பார்த்தவன் ''உன்கிட்ட நான் இப்ப கருத்துக் கேட்டேனா?'' என்றான். அவரிடம் சற்று தடுமாற்றம். சிங்கராச் சாரியாரோ ''ரங்கா விட்று... வைக்கப் போர்ல குண்டூசியக்கூட கண்டுபிடிச்சிடலாம். காவேரில தவறிவிழுந்தத கண்டுபிடிக்க முடியாது. அது போகணும்னு இருக்கு போயிடித்து.. விடு..'' என்றார். சொன்ன கையோடு திரும்பி நடக்க ஆரம்பித்தார். மற்றவர்களும் கலையத் தொடங்கினர். மைதிலியும் அவன் கண்ணில் பட்டாள். அவள் பார்வைக்குள் ஒரு செய்தி இருப்பதும் அவனுக்குப் புரிந்தது.

சட்டென்று அவனுக்குள் ஒரு ஆவேசம்!

வெகு தூரம் போய்விட்ட சிங்கராச்சாரியாரை பார்த்துக் கத்த ஆரம்பித்தான்.

''சாமி... அப்படியே நில்லுங்க... ஒரு அடி நீங்க இனி நடக்கக் கூடாது. இந்த காவிரி உங்களுக்கெல்லாம்தான் பயமுறுத்தறவ. என் வரைல இவ ராட்சஸி.. ஒரு ராட்சஸி உங்க வைர மோதிரத்தை எடுத்துக்கறத நான் பாத்துக்கிட்டு சும்மா இருக்க மாட்டேன். வந்தா வைர மோதிரத்தோட வருவேன். இல்ல அப்படியே இந்த ராட்சஸிக்கே எங்கம்மா மாதிரி, என்னை வளர்த்த பாட்டி மாதிரி இரையாயிட்றேன்'' என்று எல்லார்க்கும் கேட்கும்படியாக கத்தியவன் அப்படியே திரும்பி ப்ளிச்' என்று வாளை மீன் துள்ளி விழுவது போல உள்ளே விழுந்தான்.

மீண்டும் கரை முழுக்க ஒரு பயம் கலந்த பரபரப்பு!

சிங்கராச்சாரியாருக்கு அன்றைக்கு தான் காவிரிக்கு வந்ததே தவறோ என்று தோன்றியது. தர்ப்பணகாரியங்கள் செய்து வைப்பவர்கள் எல்லாம்கூட ஆற்றுப் படுகையை வெறிக்க ஆரம்பித்துவிட்டனர். தொலைவில் குளித்தலை நோக்கிய ரயில் பாலத்தில் இரும்புச் சதுர பெட்டிகள் ஓர் உலோக வீதியே நகர்வதுபோல நகர்ந்தபடி இருந்தது. மலைக்கோட்டை மேலே திருச்சியில் லேண்ட் ஆக இருக்கும் விமானம் ஒன்றும் அந்த தொலைவுக்குண்டான சப்தத்துடன் கண்ணில்பட்டது.

நீருக்குள் நுழைந்த ரங்கனும் கிட்டத்தட்ட ஆறு நிமிட காலம் கடந்தும் வெளிவராத நிலையில் ''சொன்ன மாதிரியே அப்படியே ஆத்தோட போயிட்டான் போல இருக்கு...'' என்று அந்த கேட் காமலே கருத்துச் சொல்லும் நபரும் வாயைத்திறக்க மைதிலியிடம் மட்டும் ஒரு இனம்புரியாத அவஸ்தை.

சிங்கராச்சாரியார் கண்ணிரண்டும் லேசாகக் கலங்கத் தொடங்கி விட்டது. தனது வைர மோதிரம் ஓர் உயிரை எங்கே காவு வாங்கி தன்னையும் பிரம்மஹத்திக்கு ஆளாக்கிவிடுமோ என்றெல்லாம் கற்பனை புரியத் தொடங்கிவிட்டார்.

''என்ன சாமி நீங்க... அவன் ஒரு பொணந்தூக்கிப் பய! அவன் கிட்ட எதுக்கு சாமி மோதிரம் விழுந்துச்சின்னீங்க. கேனப்பய..! இப்ப பாருங்க எது எதுகிட்ட மோதறதுன்னு ஒரு விவஸ்தை இல்லையா? அந்த மோதிரம் இந்த ஆத்தோட நீரோட்டத்துக்கு கல்லணைக்கே போயிருக்கும்... இல்ல நடு வழில சமாதியா யிருக்கும். இந்தப் பய எத்த நம்பி இப்படி உள்ற இறங்கறான். ஓட்டத்தைப் பாருங்க...''

- அதுவரை பேசாத ஒருவர் ஆற்றோட்டத்தைக் காட்டும்போது யாரோ எங்கோ விட்ட கொள்ளிச் சட்டி ஒன்று மிதந்த நிலையில் நடு ஆற்றில் படுவேகமாய் பயணித்தபடி இருந்தது.

சிங்கராச்சாரியார் பொறுமை இழந்து 'ரங்கா..' என்று கத்திவிட்டார். அது மூழ்கிய ரங்கனையா இல்ல கோயிலுக்குள் மோனத்துயிலுக்குள் இருக்கும் அந்த ரங்கனையா என்பது தெரியாத நிலையில், ''சாமி... போங்க சாமி.. போய் போலீஸ்ல சொல்லுங்க. அவன் அவ்வளவுதான்! ஒரு மனுஷனால அஞ்சு நிமிசம்தான் 'தம்' கட்ட முடியும். ஆனா அவன் தண்ணிக்குள்ள

போய் பத்து நிமிசம் ஆகப் போகுது. ஆத்துப் பொணங்கள எல்லாம் தூக்கித் தூக்கிப் போட்ட பய ஒரு வைர மோதிரத்தால அவனே பொணமாயிட்டான். உசுரோட அருமை தெரியாத பய... காவேரிய இவங்க வீட்டு ஏவலாத்தின்னு நினைச் சட்டான்-அதான் அவளும் விழுங்கிட்டா..'' என்றார் இன்னொருவர். விட்டால் இந்த மாதிரிப் பேச்சுக்கள் நிறைய உருவாகி காதை அறுக்க வைத்துவிடும் என்று பயந்த சிங்கராச் சாரியாரும் திரும்பி நடக்கத் தொடங்கினார்.

''தப்பு பண்ணிட்டேன். பெரிய தப்பு பண்ணிட்டேன். பெருமாளே தண்ணியால எனக்கு இப்படி ஒரு தோஷம் வரணுமா? இவளை ரட்சிக்கற தாயாரா நினைச்சது தப்பு போல இருக்கு. எனக்கு தெரிஞ்சு நான் ஒரு தப்பும் பண்ணலை. பெருமாளே என்னை இப்படி புலம்ப உட்டுட்டியே...'' என்று புலம்பியபடி நடந்த அவரை மைதிலியும் கவனித்தாள்.

கண்ணிரண்டிலும் நீர் துளிர்த்துவிட்டது.

கண் எதிரில் மின்னல் போல தோன்றி இப்படிப் போயே போய்விட்டானே... இப்படி ஒரு காட்சியைப் பார்ப்பதற்கா ராத்திரியில் இருந்தே தூக்கம் பிடிபடாமல் கண் பூத்துக் கிடந்தேன். ச்சே...!

அவளும் மனதுக்குள் அரற்றியபோது நீர்ப்படுக்கை மேல் சிறிக் கொண்டு எழும்பி நின்றான் ரங்கன். நின்ற வேகத்தில் கையை தான் உயர்த்தினான். அவன் விரல் நுனியில் அந்த வைர மோதிரம்! காலைச் சூரிய ஒளிக் கதிர்கள் அந்த விரல் நுனி மேல் பட்டு எட்டுத் திக்கும் ஒளிக் கோடுகளை ஓடவிட்டு ஜொலித்தன. மைதிலிக்கு மளுக்கென்று மார்புப் பக்கமாய் ஒரு சரிவு. மொத்த உடம்பும் பஞ்சாகி வானில் மிதப்பது போல் இருந்தது. ''சாமி ஈஈஈஈ...'' என்றான். அம்மா மண்டப கல் மண்டபத்துக்குள் செந்தூர ஆஞ்சநேயர் சந்நிதி வரைக்கும் சென்றுவிட்ட சிங்கராச் சாரியாருக்குள் அவனது குரல் ஒரு உயிர்க் குரலாகவே எதிரொலித்தது. திரும்பிப் பார்த்தார். ரங்கன் கரை ஏறுவது தெரிந்தது. அதைத் தொடர்ந்து ஓடி வந்தவன் அவரை நோக்கி அந்த வைர மோதிரத்தை நீட்டினான். அவர் கண்களில் ஆச்சரிய விரிவு!

"என்ன சாமி... அப்படியே போய்ட்டதா பயந்துட்டீங்களா? அப்படி எல்லாம் சீக்கிரமா நான் போய்ட மாட்டேன் சாமி... அதே மாதிரிதான் எனக்குத் தெரிஞ்சு காலணாவை இந்த காவிரிக்காரி விழுங்கவிடமாட்டேன். என்னை ஆளாக்குன செம்பாபாட்டிதான் இவ வரைல நான் கைவிட்ட கடைசி விசயம்.

எனக்கு இப்ப எவ்வளவு சந்தோசமா இருக்கு தெரியுமா சாமி..."

- அவன் பேச்சு அவருக்குள் ஏராளமான அதிர்வுகளை உருவாக்கிவிட்டது.

ஒரு புண்ணிய நதியை அவன் கொலைகாரியாகப் பார்க்கிறான். அது மட்டுமல்ல அவளா நானா பார்த்து விடுகிறேன் என்கிற மாதிரி மல்லுக்கும் நிற்கிறான்.

விநாடிக்குள் அவன் உள்ளக் கிடக்கையை உணர்ந்துகொண்ட சிங்கராச்சாரியார் "அப்புறமா என்னை ஆத்துல வந்து பார்.." என்றவாறு விலகத் தொடங்கினார்.

அவனும் திரும்பினான்... பலர் அவனையே வெறித்துக் கொண்டிருந்தனர். ஒருவன் "ரங்கன்... நீ எங்க ஊர்ல நடக்கற ஆறு தாண்ட்ற போட்டில கலந்துக்கலாம். இந்தப் பக்கமா சிந்தாமணில இறங்கி அந்த பக்கமா கொடி மரத்துக்கிட்ட ஏறணும் - முதல்ல வர்றவங்களுக்கு பத்தாயிரத்து ஒண்ணு பரிசு." என்றான் ஒருவன். இன்னொருவனோ "எப்படிப்பா மோதிரத்தை தண்ணிக்குள்ள இருந்து எடுத்தே... உள்ளையே உக்காந்து மண்ணை அளைஞ்சு சலிச்சியா?" என்றான். நடுவில் மைதிலி...!

அவனை ஒரு அதிசயத்தைப் பார்ப்பதுபோல பார்த்தாள்.

பின் அருகில் வந்து "அவசியம் ஆத்துப் பக்கம் வந்து அப்பாவைப் பாருங்கோ... இன்னொரு தடவை இப்படி எல்லாம் வீராவேசம் வேண்டாம். மோதிரம் போனா கடைல கிடைக்கும் வாங்கிக்கலாம். உசுர் போனா எந்தக் கடைல கிடைக்கும்?" என்றாள். குரலில் ஒருவித விம்மல். அவன் வரையில் அது ஒரு அதிசயக் குரல்!

அவனுக்காக கவலைப்பட்டுப் பேசவும் ஒரு குரல்.. ஈரத் தலையை ஒரு உதறு உதறிக் கொண்டான்.

"ரங்கா எங்க உனக்கு நான் தர்ப்பணம் பண்ண வேண்டி வந்துடுமோன்னு பயந்துட்டேன். நல்ல வேளை... எங்களுக்கெல்லாம்தான் இந்த ஆத்தக் கண்டா பயம்! ஆனா இந்த ஆத்துக்கு உன்னைக் கண்டாதான் பயம்!" - என்றான் ஒரு சோழிய பிராமணன். ரங்கன் சிரித்தான். அவன் பேச்சு அங்கு ஆற்றுப் பக்கம் குளிக்க வந்திருந்த ஒரு புலி நகச் ஜெயின் அணிந்த மிட்டா மிராசு போன்ற ஒருவனை திரும்பிப் பார்க்க வைத்தது. அவனும் தலையை துண்டால் துவட்டியபடி ரங்கன் அருகில் சென்றான்.

"தம்பி... ரொம்ப தில்லான ஆள்தான் நீ. இந்த ஆத்தை சும்மா தாயின்னு கும்புட்றவங்களுக்கு மத்தியில இவ என் வரைல ஒரு கொலைகாரின்னு பேசுன உன்னை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு.

நான் ஆத்து மண்ணை காண்ட்ராக்ட் எடுத்து தோண்டி விக்கற ஒரு வியாபாரி. உன்னை மாதிரி ஒரு ஆள் கூட இருந்தா நான் எங்கையோ போயிடுவேன். நீயும் என் கூட சேர்ந்தா ஒரு வருசத்துல அஞ்சாறு வீடு வாங்கிடலாம் என்ன சொல்றே?" - என்று கேட்டார்.

ரங்கன் முகத்தில் ஒரு கேலிச் சிரிப்பு. அந்த மனிதரோடு ஒருவன் வந்திருந்தான். அவன் ஒரு விசிட்டிங் கார்டை நீட்டினான். அதில் அவர் பெயர் முகவரி செல்போன் நம்பர் என்று எல்லாமே கூடவே கட்சி ஒன்றின் கொடி!

★★★

ஸ்ரீதரன் ஆபீசுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தான். வெளியே நின்றபடி இருந்த பைக்கை லேசாக ஒரு துடை துடைத்துவிட்டு அதை உதைத்து கிளப்ப முற்பட்டபோது உள்ளிருந்து ஓடிவந்த வத்சலா அவனிடம் ஒரு இன்லாண்ட் லெட்டரை தந்து 'போற வழியில போஸ்ட் பாக்ஸ்ல போட்று.." என்றாள். கடிதத்தின் முகவரியில் திருக்கண்ணமங்கை ஊருக்கான கடிதம் அது என்பது தெரிந்தது. பின் பக்கத்தில் அனுப்பும் வத்சலா முகவரியை எழுதியிருக்கவில்லை.

"அம்மா என்ன இது... நம்ம ஆத்து அட்ரசை எழுதலியா?"

"அட நீ வேற... அது மொட்ட கடுதாசி. அது என் வழக்கமான கையெழுத்தும் இல்ல. இடது கையால எழுதியிருக்கேன். இதுதான் மைதிலியை பொண்ணு பாக்க வரப்போற அந்த திருக்கண்ண மங்கக்காரனை தடுத்து நிறுத்தப் போறது.. புரியறதா?"

- வத்சலா வாசற்படி அருகே நின்றபடி கேட்ட தோரணையே அவனுக்கு மற்ற விஷயங்களை வெகு வேகமாக புரிய வைத்து விட்டது.

10

'ஆ'வுடைமேலே நிற்பதே லிங்கம்!
ஆதிடை மேலே கிடப்பதே ரங்கம்.!
நிற்பதும் கிடப்பதும் நிகழ்த்துவதே அரங்கம்..
கிடப்பவன் தாளடி கிடப்பதே அனந்தம்
கிடப்பவன் கிடந்ததும் முன்னம் வைகுந்தம்
கோசலா புத்திரன் விபீஷணன் தந்தக்கால்
நேசமாய் காவிடை கிடக்க வந்ததே
நாசமதை நாசமாக்கும் வாசக்கஸ்தூரி ரங்கம்!

கையில் கடிதமுடன் பெற்றவளை மேலும் கீழும் பார்த்தான் ஸ்ரீதரன். ஸ்ரீதரன் பார்வைக்குள் ஆயிரம் கேள்விகள். இப்படி மொட்டைக் கடிதம் போடுவதெல்லாம் கீழ்மை அல்லவா என்பதும் அதில் ஒன்று.. ஆனால், அதற்கெல்லாம் சேர்த்து அழகாக பதில் சொல்லத் தொடங்கினாள் வத்சலா.

"ச்சீதா.. ஆயிரம் பொய்யைச் சொல்லி கூட ஒரு கல்யாணத்த பண்ணலாம்னு பெரியவா சொல்லியிருக்கா. ஆனா நான் இந்தக் கடுதாசியில மைதிலி ஜாதகம் ஒரு கொலைகார ஜாதகம்னு ஒரே ஒரு பொய்யைத்தான் சொல்லியிருக்கேன்... அப்பத் தானே அந்த திருக்கண்ண மங்கைக்காரா திரும்பிக்கூட பார்க்க மாட்டா..."

"ஏம்மா இந்த ஆயிரம் பொய்யச் சொல்லிக்கூட ஒரு கல்யாணம் பண்ணலாம்கற ஒரு அபிப்ராயத்தை ஏதோ திருக்குறள், ஆத்திச்சூடி மாதிரி எல்லாரும் சொல்றேளே... இதை எந்த புண்ணியவான்மா சொன்னது?"

"இப்ப எதுக்குடா உனக்கிந்த ஆராய்ச்சி... யாரோ ஒருத்தர் சொல்லப் போய்த்தானே எல்லாரும் சொல்றோம்?" அது சரி இந்த வாசகம் மட்டுமா, மகாலெட்சுமி மாதிரி இருக்கான்னும் சொல்றா. மகாலட்சுமியை இவாள்ளா எப்ப பாற்கடல் பாக்கமாப்போய் பாத்துட்டு வந்தான்னே தெரியல... ஒருத்தரைப் பார்த்து ஒருத்தர்னு எந்தவித ஆதாரங்களும் இல்லாத நிலைல பிடிச்சுண்டு இருக்கற விஷயங்கள நினைச்சா எனக்கு மலைப்பா இருக்கு!"

- என்று சற்று சுவாரஸ்யமாகவே சலித்துக் கொண்டு பைக்கில் கிளம்பினான் ஸ்ரீதரன்.

"இன்னிக்கு பைக்ல போற நீ கூடிய சீக்கிரமா கார்ல போகணும் அதை இந்தம்மா பாக்கணும்டா..." என்றாள் வத்சலா. அது உள்ளிருந்து வெளியே வந்தபடி தேசிகன் காதிலும் விழுந்தது. அடுத்தநொடி ஒரு கேலிச்சிரிப்பு அவரிடம்... வத்சலாவுக்கு அந்த மாதிரி மட்டும் யாருமே சிரித்துவிடக் கூடாது. உடம்புக்குள் எந்தப் பாகத்தில் இருக்கிறது என்றே தெரியாது மனசையும் பிளேடால் அறுப்பது மாதிரி ஒரு விஷயம் இந்த மாதிரி நமுட்டுச் சிரிப்பு.

"நான் என்ன தப்பா சொல்லிட்டேன்னு இந்தச் சிரிப்பு?"

"வேண்டாம் வத்சலா என் வாயைப் பிடுங்காதே. பதிலுக்கு நான் எதையாவது சொல்லி வைக்கப் போறேன்.. அப்புறம் நாலு நாளைக்கு நீ அடுப்பே பத்த வைக்காம நெஞ்சு வலிக்கறதும்பே, கனவுல எருமை துரத்தறதும்பே... அடுக்கடுக்கா கூத்தடிப்பே. உன்னை வெச்சு நான் எவ்வளவோ உண்மைகளைத் தெரிஞ் சிண்டிருக்கேன். அது போதும் எனக்கு..."

"என்னை வெச்சு அப்படி என்ன தெரிஞ்சிண்டேள். இல்ல, தெரியாமத்தான் கேக்கறேன் உண்மைகளைத் தெரிஞ்சிக்க நான் என்ன வேதாந்த புத்தகமா இல்ல வேதபாராயணமா?"

"போடி போ, லூசு... உன்னை மாதிரி மாயையோட கைல சிக்கிண்ட பொம்மனாட்டிகள் முன்னால வேதாந்த மெல்லாம் தூசுடி. ஆளானப்பட்ட ராமானுஜரையே ஏழாம் பாவம் விடலை. அவரை மகாஞானியாக்கினதுல அவரோட ஆத்துக்காரிக்குதான் பெரும் பங்கு. இங்க உன்னால நானும் அப்படி ஆயிடப் போறேன். போ... போய் வேளையப் பார்.."

"ஆகக் கூடி நான் பிரமிடை கிருஷ்ணசாமி ஐய்யங்கார் புத்ரன் கே. தேசிகன் என்கிற தேசிகாச்சாரி கிடையாது. நானும் ஒரு ராமானுஜன்கறேள். அப்படித்தானே?"

"இன்னொரு ராமானுஜர் வந்தா நன்னாத் தாண்டி இருக்கும். ஆனா எனக்கு அந்தத் தகுதி கிடையாதுடி... அந்த ராமானுஜர் பாரபட்சமில்லாதபடி எல்லா உயிர்களையும் கடைத்தேறச் செய்தவர்டி. நான் ஒரு உயிரையே கடைத்தேற விடாம செய்துட்டவன்."

"இந்த டயலாக்கை இதுக்கு முந்தி கூட நீங்க ஒரு தடவை சொல்லியிருக்கேள். உங்களுக்குள்ள பெருசா ஏதோ ஒரு ரகசியம் இருக்கு..."

"ஆரம்பிச்சுட்டியா.. நான் பயந்தது நடக்கப் போறது. எனக்கு நாலு நாளைக்கு நல்ல சோறு கிடையாது. பழைய சாதம் தான்... வரேன்.."

- என்றபடியே தெருவில் இறங்கிவிட்டார் தேசிகன்... அந்த வேளைக்கு அவர் வெளியேறினால் அது அனேகமாக சிங்கராச்சாரியார் அகத்துக்காகத்தான் இருக்கும்.

அவர் வரையில் சிங்கராச்சாரியார் ஒரு மகான். அவரோடு ஒரு அரை மணி பேசிக் கொண்டிருந்தாலே போதும் மனதுக்குள் ஒரு தனித்தெம்பு உருவாகிவிடும். வேதாந்திதான். ஆனால் மிக வித்யாசமான வேதாந்தி...

★★★

திவ்யப்பிரபந்தத்தைத் திரும்பத் திரும்பப் படிப்பதிலே சிங்கராச்சாரியாருக்கு ஒரு தனித்த ஆனந்தம்! அவரது இல்லத்து மாடி முற்றத்தில் பிரம்பு நாற்காலியில் அமர்ந்து கொண்டு

காட்ராக்ட் ஆபரேஷன் ஆன கண்களுக்கு கிட்டப்பார்வை கிடையாதாகையால் அதற்கான கட்டாயக் கண்ணாடியை மூக்கின் மேல் ஒரு பதினைந்து டிகிரி சாயுமானத்தோடு கிடத்தியபடி அன்றைய ஆழ்வார்களின் பக்தி நெகிழ்வாலே உருவான அந்த பாடல் வரிகளைக் கண்களால் தீண்டி கருத்தால் உணரும்போது அவரே அந்தந்த ஆழ்வார்களைப் போன்ற மனோபாவத்துக்கு ஆளாகி விடுவார்.

அப்படிப்பட்ட தருணங்களில் 'சாமி போஸ்ட்' என்ற படியும், 'ஐய்யரே காஷ்மீர் ஆப்பிள்' என்றபடியும் பலப்பல இடையீடுகள் ஏற்படும். கண்களை விலக்காமலே வெச்சுட்டுப்போ என்றும், அப்புறமா வா என்றும்தான் சொல்வார். தேசிகன் வந்தால் தான் கலைவார்.

தேசிகனும் எதிரில் வந்த நிலையில் பஞ்சகச்ச வேட்டிக் கட்டுக்குக் கீழே தெரிந்த திவ்ய திருவடிகளைக் கண்களால் ஒற்றிக் கொண்டு எதிரில் தரையில் அமர்ந்தார்.

"வாப்பா... வழில பொடி வாங்கிண்டு வந்தியா?"

"அடடா மறந்துட்டேண்ணா. ஆத்து வாசல் வரை ஞாபகம் வந்தது. வத்சலா பண்ண ரகளைல மறந்துபோச்சு."

"இன்னிக்கு என்ன கூத்து?"

"அது வழக்கம் போலதான்... ராத்திரி தூங்கும் போதும் பட்டுப் புடவையோடதான் தூங்கணும். காது மூக்கு கழுத்து கைன்னு அத்தனையிலையும் வைரம் மின்னணும். குறிப்பா ஸ்ரீரங்கத்து பொம்மனாட்டிகள் வத்சலாவைப் பார்த்து அப்படியே பிரமிச்சுப் போய் நிக்கணும். அவாளுக்கு நடுவுல இவ கார்ல இறங்கணும்.. அடுத்த வாரம் நியூயார்க் போலாம்னு இருக்கேன். அங்கிருந்தே மச்சினர் ஆத்துக்கு ஆஸ்திரேலியா போகும்படி இருக்கும். நடுவுல காரடையான் நோன்பு வருது. அன்னிக்கு நம்ம ஊருக்கு வந்து தாயாரை சேவிச்சுடணும் ஏன்னா நம்ம தாயாரை எவ்வளவு தூரம் போனாலும் மறந்துடக் கூடாது பாருங்கோ...? - இப்படிப் பேசிண்டு திரியணும்கறது தான் அவளோட விருப்பம். ஆனா சுட்ட அப்பளம் வெந்தயக் கொழம்புக்குத்தான் விதி... நான் என்னண்ணா பண்ணட்டும்?"

- தேசிகனிடம் ரசனையான வியாக்யானம். சிங்கராச்சாரியாரும் சிரித்தார். சிரிக்கும்போது காவிரியில் காணாமல் போய் பின் அகப்பட்ட அந்த வைரமோதிரத்தைக் கழட்டுவதும் துடைப்பதுமாக இருந்தார். அப்படியே தேசிகனுக்கொரு பதில்.

''தேசி... நீ சொல்லிய விஷயத்துக்குப் பின்னாலே ஒரு பெரிய மனோதத்துவமே இருக்குப்பா. உன் ஆம்படையான்னு இல்ல.. இந்த ஊர்னு கிடையாது. இந்தியா பூரா இப்படித்தான்... இப்படிக் கற்பனை பண்ணிப் பார்த்து அதுல மட்டுமே திளைக்கறவாளாத் தான் நம்ம பொம்மனாட்டி சமூகமே இருக்கு. காரணம், நம்ம வாழ்க்கை முறைப்பா. பொட்டச் சின்னா சமையல் கட்டு. அதை விட்டா பெட்ரும் அப்புறமா தொட்டில்னு ஒரு வட்டத்துக்குள்ள தானே அவாள நாம் வெச்சிருக்கோம்? அதுக்குத் தோதா பெண்களுக்கு வீடு தான் உலகம். ஆண்களுக்கோ உலகமே வீடுங்கறோம். வீடுதான் உலகம்னு அவாளை அமுக்கறோம். அவாளும் வேறவழி இல்லாம அமுங்குறா. அதே சமயம் அவாளுக்கும் பிரத்யேக ஆசாபாசங்கள் இருக்கத்தானே செய்யும்? ஒருமுழம் பூவைக் கூட புருஷன்தான் வாங்கித்தரணும்கற அளவுக்குல்ல பழக்கி வெச்சிருக்கோம்? பள்ளிக்கூடம், காலேஜ்னு படிக்கும்போது அப்பாக்களோட முடிவு... அப்புறம் ஆம்படையானோட முடிவு - இப்படி அவா எல்லாக் காலத்துலையும் ஒரு வித ஆணாதிக்கத்திலதான இருக்கா? உடனே இது தானே பாதுகாப்புன்னு சொல்லாதே எத்தனைக்கெத்தனை அது பாதுகாப்போ அத்தனைக்கத்தனை அது ஜெயில்.

ஒரு ஜெயில் கைதிக்கிட்ட போய் உனக்கென்னப்பா நீ ரொம்ப கொடுத்து வெச்சவன் மணியடிச்சா சோறு.. ராத்திரி வந்தா தூக்கம்.. உங்களுக்குப் பாதுகாப்பா சுத்தி போலீஸ் காரங்க... வேலைக்குப் போக வேண்டாம் சம்பாதிக்க வேண்டாம். வாடகை, கரண்ட் பில்னு ஒரு கழுத்தறுப்பும் கிடையாது. மழைபேஞ்சாலும் காத்தடிச்சாலும் உங்களுக்கு ஒரு குறைவும் கிடையாது. கொடுத்து வெச்சவங்க நீங்கன்னு சொல்லிப்பாரேன்...

அப்ப எனக்குப் பதிலா நீ உள்ள வந்து இந்த சொர்க்கத்தை அனுபவியேன். நான் கொஞ்சம் வெளியே வந்துக்கறேன்னுதான் சொல்வான்.

ஒவ்வொரு பெண்ணும் கூட கைதி தாம்ப்பா.! எங்க அவ தன்னை கைதின்னு உணர்ந்துண்டு கண்ணக் கசக்கிடப் போறாளோன்னு பயந்துண்டு தான் அவாளுக்கு நகை நட்டு பண்ணிப் போட்டு ஏமாத்தறோம். அடுத்து அந்த நகை நட்டெல்லாமும் ஒருவித இன்வெஸ்ட்மெண்ட் பாரு. அதுவும் ஒரு காரணம். அப்புறம் மானேதேனே குயிலே மயிலேன்னு கவிதை பாடி கவுக்கப் பார்ப்போம்... ஆணாதிக்கம்கற மன அழுத்தம்தான். பெண்கள் புரளி பேசவே காரணம். இதனால தான் ஒரு பெண்ணே இன்னொரு பெண்ணுக்கு எதிரியா இருக்கற அல்லது மாறிப் போற ஒரு நிலை ஏற்பட்றது. எந்தக் காலத்துலயும் ஒரு ஆணை புத்திப்பூர்வமா அவளால நெருங்க முடியறதில்லை. அதனால தான் ராத்திரி படுக்கைல தலையணை மந்திரம் போட்டு அவனைக் குறுக்கு வழில கைல எடுத்துக்கப் பாக்கறா. ஆண்டு பாக்கணும்கற ஆசைகளை எல்லாம் வெறியா மாட்டுப் பெண்கள்கிட்ட காட்டி ராட்சஸ மாமியாரா ஆயிட்றா.

எல்லாத்துக்கும் காரணம் வாழ்க்கை முறை, வாழ்க்கை முறை, வாழ்க்கை முறைதான். ஒரு பெண்ணை அவளுக்குண்டான நியாயமான ஆசாபாசங்களோட வாழவிடணும்.. அவ்வளவு ஏன்? எனக்கெதுவெல்லாம் சரியோ அதெல்லாம் உனக்கும் சரின்னு தராசு மாதிரி நம்மளைப்போல அவாளை நினைச்சாலே போதும்ப்பா.

அந்த வீடே சொர்க்கமாயிடும்.

நான் இப்ப ஒரு சத்தியத்தைச் சொல்றேன். உண்மைலயே ஆண் இனத்தை விட பெண் இனம்தான் மகாசக்தியானது. அவாளோட தோற்றம் அழகு. அவா குரல் அழகு. அவா மனசு அழகு... அழகுக்கெல்லாம் அழகு அவாளோட தாய்மை. வலியைத் தாங்கறதுலயும் அவ தான் பெரியவா. அவளோட ஒரு இடுப்புவலில நூறுல ஒரு பாகத்தை பீமன்னு தன்னை சொல்லிக்கற ஒரு பலசாலியால தாங்க முடியாது.

காத்தால முதல்ல எழுந்துக்கறதுல ஆரம்பிச்சு ராத்திரி விளக்கை அணைச்சுட்டு வந்து படுக்கற வரை அவா பட்ற பாடு முன்னால ஆண் இனமே வெட்டிகள்னு சொல்வேன்.

நாமெல்லாம் அம்மட்டுல முருங்க மரம். அவா தேக்குப்பா! அவா கொஞ்சம் திரும்பிண்டாலும் நம்பளால தாங்க முடியாது. நம்ம பசங்க நம்மை எல்லாம் அப்பான்னு கூப்பிட காரணமே அவாதான்... இவர் தாண்டா உன் தகப்பனார்னு அவ அடையாளம் காட்டிதானே நாம அப்பா ஆகறோம்? அப்ப அவ கொஞ்சம் யோசிக்கறான்னு வை... நம்ம கதி என்னாகும்? யோசிச்சுப்பார்...

பதிமூணு வயசுல கல்யாணமாகி பதினாலு வயசுல புருஷன் செத்துப்போய் தொண்ணூறு வயசு வரை ஒரு விதவையா கிட்டத்தட்ட ஒரு பெண் சன்யாசியா வாழ்ந்த பலபேரை நாம பாத்துருக்கோம். ஏன் உன் பெரியம்மாவே அப்படிப் பட்டவதானே? என் அத்தை ஒருத்தி அப்படித்தானே...?

ஆனா நாப்பது வயசுல பொண்டாட்டி செத்துட்டாலும் அந்த பிரிவைத் தாங்கிக்க முடியாம இன்னொருத்திய தேடி அவ தோள்ள சாஞ்சிக்கறதுதானே ஆண் இனம்? 'பொண்டாட்டியை இழந்தவன் புது புருஷன்னு' ஒரு பழமொழியே உண்டே...''

சிங்கராச்சாரியார் நெடிய தன் விளக்கத்திற்கு ஒரு இடைவெளி கொடுத்து தொண்டையைச் செருமிக் கொண்டபோது டக்கென்று எகிறி அவர் காலைப் பிடித்தார் தேசிகன்.

''ஏய் என்னப்பா இது... எதுக்கு காலை பிடிக்கறே?''

''எப்படிண்ணா இப்படி உங்களால யோசிக்க முடியறது?''

''வைஷ்ணவன்கற வார்த்தைக்கு தர்மன்னும் ஒரு அர்த்தம் உண்டு. தர்மத்துல நிக்கறதுதான் லட்சியம்னு முடிவு எடுத்துடு. அப்ப உனக்கு எல்லா சத்யமும் தானா புரிய வரும். நம்ம பெருமாளே யாரு...? அந்த சிவன் கூட சரிபாதிதான் கொடுத்தான். இவர் மார்பையேல்ல கொடுத்துட்டார். அப்படின்னா என்ன அர்த்தம்? உடம்பு மட்டும் தான் நான்... உசுர் நீ தான்... இதயம் நீ, இயக்கம் நீ, சுவாசம் நீ, வாசம் நீ...ன்னு சொல்லாம சொல்லிட்டாரே...

அதனாலதானே அவ சிபாரிசு செஞ்சாதான் பெருமாளண்ட பருப்பு வேகும்னு தேசிகன்ல இருந்து ராமானுஜர் வரை எல்லாரும் சொல்றா..''

''கேக்கவே எனக்கு சிலிர்ப்பா இருக்குண்ணா, ஆனாலும் ஒரு குட்டி சந்தேகம்..''

''சந்தேகத்துல குட்டி, நீளம்னுல்லாம் கிடையாது. சும்மா கேளு...''

''இல்ல.. பெருமாள் சயனிச்சிண்டிருக்கார். மகாலட்சுமி கால் பிடிச்சு விட்டுண்டு இருக்கா ஒரு அடிமை மாதிரி.. இங்க எனக்கு கொஞ்சம் நெருட்றதே..''

''நான் உன்னைத் திருப்பி கேக்கறேன்... யாருக்கு கால் வலிக்கும்?''

''அலைஞ்சு திரிஞ்சுட்டு வந்தவாளுக்கு...''

''இதையாவது சரியா சொன்னியே... பெருமாளும் லோகம்கற இந்தப் பூமியை நிர்வாகம் பண்ணி களைச்சுப் போய் படுத்துக் கெடக்கறான். எல்லாம் மார்புல லக்ஷ்மி இருக்கற தெம்பால! அதான் அவனோட வலியைப் போக்க தாயார் காலை அமுக்கி விட்றா. வலியை வாஸ்தவத்துல எது போக்கும்?''

''மருந்து..''

''இங்க மருந்தா மகாலட்சுமி இருக்கா. அவ எப்படி உன் கண்ணுக்கு மட்டும் அடிமை மாதிரி தெரிஞ்சா..?''

''அது... அது...''

''உனக்குத் தெளிவு இல்ல... அதான் தப்பா பாத்துட்டு, தப்பா யோசிச்சு, தப்பா கேள்வி கேட்டே எதையும் எங்க இருந்து எப்படிப் பாக்கறோம்கறதுல தான் இருக்கு. பாவ புண்ணியங்களுக்குக் காரணம் அறியாமை மட்டுமில்ல. பாய்ண்ட் ஆஃப் வியூவும் தான்.''

அந்த பதிலோடு அவர் மாடி கைப்பிடி கட்டைச் சுவர் அருகே வந்து நின்றபோது அவர் பாய்ண்ட் ஆஃப் வியூவில் அவர்

அழைத்ததன் பேரில் வந்தவனாக வாசற்புறம் வந்திருந்தான் ரங்கன்!

11

'ஐவகை பூதத்தால் ஆனதே உயிரினம்
ஆறெனும் அறிவதை கொண்டதோ மானுடம்!
ஆறதும் ஒலிவழி ஏழது கொள்ளும்
ஏழதே சப்தமெனும் மானுடர் சொல்லும்!
ஏழதை தன்வழியாய் கொண்டவனே ரங்கன்
ஏழதன்வழி எட்டுவோர்க்கெலாம் அவனே வைகுந்தன்!'

வீட்டு வாயிலில் ரங்கனைப் பார்த்த மாத்திரத்தில் சிங்கராச்சாரியாரிடம் ஒரு சின்ன பரபரப்பு. தேசிகனுக்கோ அதே அளவுக்கு மனதுக்குள்ளே அடைப்பு! ''வா ரங்கா... உள்ற வா!'' - சிங்கராச்சாரியார் அவனை உள்ளே அழைத்தார். கீழே பெரிய சிமெண்ட் பூசிய சிலீர் திண்ணை ஒன்றிருக்கிறது.

ஸ்ரீரங்க லட்சணங்களில் வீட்டுத் திண்ணைகளுக்கு ஒரு தனி இடம் உண்டு. அதன் மொழுமொழுப்பும் சரி, ஜில்லென்ற குணமும் சரி ஒரு இரண்டு 'டன்' ஏ.சி. மெஷினில் கூட வராது. ரங்கனும் சரி, பிற சமூகத்தவர்களும் சரி அந்தத் திண்ணையைக் கடந்து உள்ளே நுழைய நிறைய யோசிப்பார்கள். அதிலும் வயதான தாத்தா பாட்டிகள் இருக்கும் வீடென்றால் இந்திய எல்லைப்புறம் மாதிரி அந்த பாகத்தில் ஒரு கண்காணிப்பு இருந்தபடியே இருக்கும். சின்ன சப்தம் கேட்டாலும் 'யாரது?' என்று ஒரு குரல் உள்ளிருந்து ஒலித்து விடும். அதை உத்தேசித்து ரங்கன் திண்ணையோடு தன்னை நிறுத்திக் கொண்டான்.

மேலிருக்கும் சிங்கராச்சாரியாருக்கோ ரங்கன் கீழே திண்ணையோடு நின்று விட்டதில் ஒரு சின்ன சங்கடம். தேசிகனைப் பார்த்து ''தேசிகா... ரங்கனை இங்க மாடிக்கு அழைச்சுண்டு வா... போ.'' என்றார். தேசிகன் மறுபேச்சு

பேசாமல் போய் அவனை அழைத்து வந்தார். உள்ளே மரப்படிகள் மேலே ஏறும்போது தன் அழுக்கு லுங்கியை இறக்கிவிட்டுக் கொண்டவனாய் சிங்கராச்சாரியார் முன்னாலும் உடம்பை குறுக்கிக் கொண்டுதான் நின்றான்.

''நன்னா நேரா நிமிர்ந்து நில். இது உன் அகம் மாதிரி..'' - சிங்கராச்சாரியின் பேச்சால் தேசிகனிடம் ஒரு அதிர்வு.

''இருக்கட்டும்க... வீட்டுப் பக்கம் வந்துட்டுப் போன்னு சொன்னீங்க அதான் வந்தேன்.''

''இருக்கட்டும்க... உன்கிட்ட நான் நிறைய பேசணும்.''

''நீ முதல்ல உக்கார்... உன்கிட்ட நான் நிறைய பேசணும்.''

''இருக்கட்டும். நான் நிக்கறேன்க.''

''உக்காருன்னா உக்காந்துடணும். மனுஷனுக்கு மனுஷன் எதுக்கு இந்தத் தாழ்வு மனப்பான்மை?''

''எனக்கு தாழ்வு மனப்பான்மையெல்லாம் கிடையாதுங்கய்யா. உங்களுக்கு இங்க என்னால இப்படிதான் மரியாதை கொடுக்க முடியும். அதான்...''

''மரியாதை மனசுல இருந்தாபோறும். முதல்ல உக்கார். வாஸ்தவத்துல நான் உனக்கு கடமைப்பட்டவன். தர்மப்படி உன்னை உட்கார வெச்சு உனக்கு முன்னால நான்தான் நிக்கணும்.''

''ஐய்யா எதுக்குங்க பெரிய பேச்செல்லாம் பேசிகிட்டு...''

''நீ உக்காரு முதல்ல.. இல்ல நான் எழுந்து நின்னுப்பேன்.''

சிங்கராச்சாரியாரின் அதட்டல் வேலை செய்தது. அவனும் நெளிந்து குழைந்து லுங்கியைச் சுருட்டி முன்னிடுக்கில் அடைத்துடி அமர்ந்தான். அவரும் தேசிகனைப் பார்த்து ''தேசி... செத்த உள்ள போய் வனஜாகிட்ட சொல்லி உனக்கு எனக்கு ரங்கனுக்கு மூணு பேருக்குமா குடிக்க மோர் வாங்கிண்டுவா பார்ப்போம்..'' என்றார். திரும்பவும் தேசிகனிடம் ஒரு அதிர்வு. ஆனாலும் ஏதும் பேசாமல் சென்று ஒரு தட்டில் வைத்து மூன்று தம்ளர்களில் மோர் எடுத்து வந்தார். அதை ரங்கனுக்கு ஒன்று, சிங்கராச்சாரியாருக்கு ஒன்று என்று தரவும் செய்தார். மூன்றாவதை

தட்டோடு கீழே வைத்து விட்டார். சிங்கராச்சாரியார் அதைக் கவனித்தார். ஆனால் எதுவும் சொல்லவில்லை.

ரங்கன் குடிப்பதற்கு மிக யோசித்தான். அவனுக்கு இந்த அங்கீகாரமே புதிது.

''குடிப்பா... மோர் பிடிக்கலேன்னா சொல். காபி தரச் சொல்றேன்..''

அவன் பதிலுக்கு வேகமாய் தலையாட்டி விட்டு மோரை ஒரே மடக்கில் குடித்து முடித்தான்.

அவரும் குடித்தார். பின் தம்ளரை அருகில் வைத்தபடியே ''ரங்கா... எனக்காக நீ ரொம்பவே சிரமப்பட்டே உனக்கு நன்றின்னு நான் ஒரு வார்த்தைல பதில் சொல்லிட்டா அது ரொம்ப சாதாரணம். அந்த மோதிரம் என் வரைல ரொம்ப மதிப்பானது. திருப்பதில ஒரு பத்து நாள் ஹரி கதை சொல்ற பாக்யம் கிடைச்சது. அதைத் தொடர்ந்து கேட்ட ஒரு பெரிய செல்வந்தர் ஆசையா எனக்கு செய்து போட்டார். அதுவும் கவர்னர் கையால... அது வந்ததுக்குப் பிறகு என் வாழ்க்கைலயும் நிறையவே பட்டம் பதவிகள் வர ஆரம்பிச்சிடுத்து. பாரதத்துல கிருஷ்ணன் கைல சமந்தக மணின்னு ஒண்ணு கிடைக்கும். அது இருக்கற இடத்துல எப்பவும் ஜெய பேரிகைதான் முழங்கும்னு சொல்வா. அந்த மாதிரி எனக்கும் இந்த மோதிரம் அமைஞ்சது. அதை நீ இன்னிக்கு மீட்டுக் கொடுத்துட்டே. நிஜமா நீ நிகழ்த் தினது ஒரு அதிசயம். அறுபது வருஷமா நான் இந்த ஸ்ரீரங்கத்துல இருந்துண்டு காவிரியையும் பார்த்துண்டு வர்றவன்... காவிரி முன்னால மனுஷாள்ளாம் எவ்வளவு சின்னவான்னு எனக்குத் தெரியும். எனக்கு நிகர் யாருமில்லேன்னு தெரிஞ்ச பலபேரை அப்படியே பலகாரமா விழுங்கியிருக்கா அவ! ஆனா அப்படிப் பட்ட காவிரி உன்கிட்ட மட்டும் ஒரு வாலை சுருட்டிண்ட நாய் மாதிரி நடந்துக்கற மாதிரி எனக்குத் தெரியறது... அதனாலதான் உன்னால அதுல அகப்பட்டுண்டு உசுரை விட்ட பொணங்களை யெல்லாம் அள்ளிப் போடவும் முடியறது. நீ பண்றது தூர இருந்து பாக்கறவாளுக்கு ஒரு நீசக் காரியமா தெரியலாம். உண்மைல நீ அந்த ஈஸ்வரனோட வேலையச் செய்யறே. அரிச்சந்திரனும் கொஞ்ச காலம் பிணங்கள எரிச்சவன் தான். இப்ப அவன் பேர்

எதாலயும் எரிக்கப்பட முடியாதபடி புகழோட இருக்கு. அப்படி ஒரு புகழ் உனக்கும் வரும். உன் கடமையை நீ தைரியமா செய். உன்னை யாராவது பிணந்தூக் கின்னா வருத்தப்படாதே. பணந்தூக்கியா (திருடன்) இருந்தா தான் தப்பு. பிணந்தூக்கறது பெரிய சேவை. செத்துப் போன அந்த உயிர் வாழ்த்தற வாழ்த்து உன்னோட பலதலைமுறைகளை நல்லபடியா வைக்கும்.''

என்று ஒரு பிரசங்கம் போல பேசி முடித்தார். ஏனோ ரங்கன் இதழ்க்கடையில் ஒரு கேலிச் சிரிப்பு.

''எதுக்கு சிரிக்கறே...?'' - கேட்டு விட்டார் சிங்கராச்சாரியார்.

''இல்ல என் தலைமுறைகள்னு சொன்னீங்களே. எனக்கு ஏதுங்க தலைமுறையும், வால்முறையும்...? என்னிக்கோ ஒருநாள் இதே காவேரில ஏதோ ஒரு பொணத்தைத் தேடும் போது வசமா மாட்டி நானும் பொணமாகப் போறேங்கறதுதான் நான் நினைச்சுக்கிட்டிருக்கற விஷயம்...''

''நீ ஆயிரம் நினைச்சுக்கோ. அப்படி எல்லாம் நடக்கணும்னு இல்லையே..''

''என்னங்கய்யா நீங்க இந்த பூமில பன்னி மேய்க்கறவனுக்கு கூட ஒரு ஜாதி அடையாளம் இருக்கு. அது கூட இல்லாதவன் நான். இப்படிப்பட்ட எனக்கும் ஒரு கல்யாணம் நடந்து, பிள்ளைங்க பிறந்து அவங்கள்ளாம் வாழ்ந்து... ஐய்யா இன்னிக்கு தான் உங்களால நான் இப்படி நினைச்சே பாத்துருக்கேன். சிரிப்புதாங்க வருது. இருந்தாலும் உங்களுக்கு ரொம்ப பெரிய மனது. அதான் என்னைக் கூப்பிட்டு சமதையா உக்கார வெச்சு இப்படி வாழ்த்தவும் செய்திருக்கீங்க. ரொம்ப சந்தோஷங்க. வேற எதாவது இருக்குதுங்களா?''

''ஒண்ணுமில்ல... நீ கிளம்பு உனக்கு எப்ப எந்த உதவின்னாலும் என்னை வந்து பார்...''

''-சந்தோஷம்க!'' - ரங்கன் கும்பிட்டபடி விலக ஆரம்பித்தான். சிங்கராச்சாரியார் கவனம் தேசிகன் பக்கம் திரும்பியது.

''என்ன தேசிகா... மோர் குடிக்கலையா நீ...?''

''இல்லண்ணா குடிக்கணும்னே தோணல.''

"ஒரு பொணந்தூக்கி எதிர்க்க அவனுக்கு சமமா குடிக்க உன் ஆசாரம் இடம் தரலை அப்படிதானே?"

"சத்யமா அப்படி எல்லாம் இல்லை. உங்க எதிர்க்க குடிக்க எனக்குத் தகுதியில்லைன்னு நான் நினைச்சேன் நினைக்கறேன்.. அதான்.."

-தேசிகன் பதிலுக்குள் ஒரு ஆச்சர்யம்.

"அட.. உனக்குள்ளேயும் தாழ்வு மனப்பான்மையா?"

"இப்படி நடந்துக்கறதுக்கு பேர்தான் தாழ்வு மனப்பான் மைன்னா இருக்கலாம்."

"தாழ்வு மனப்பான்மை ரொம்ப ஆபத்தானது... யாரையும் ரொம்ப பெரிசாவும் நினைக்காதே - சிறுசாவும் நினைக்காதே. மத்திமமா இருக்கறதுதான் எப்பவும் நல்லது."

"வாஸ்தவம்தான்... அதுதான் சரி! இந்தக் காலத்துல ஆசாரம்கறதுல ஒரு பெரிய அர்த்தம் இருக்கறதா எனக்குத் தெரியல. எல்லாமே மாறிப் போச்சு. கடல் தாண்டறது தோஷம்னு சாஸ்திரம் சொல்றது. இதை சாஸ்திரம் தெரியாத சாமான்யன் செய்தா பரவால்ல... ஆனா பிராம்மணா நாமளே செய்யறோம். குடும்பத்துக்கு ஒருத்தர் அமெரிக்காவுல இருக்கறது தான் இப்போ ஃபேஷன். தினசரி சந்தியா வந்தனம் பண்ணணுங் கறதும் நமக்கு விதிக்கப்பட்ட ஒண்ணுதான் ஆனா எவ்வளவு பேர் பண்றோம்?

வேத ரட்சணம்தான் பிராமண லட்சணம்கறது நூறு வருஷத்துக்கு முந்தைய நிலை. ஆனா இப்ப எத்தனை வேதம் இருக்குனே நம்மள்ள பலருக்குத் தெரியாது. பாதிசிக்கலுக்கு இடஒதுக்கீடும் ஒரு காரணமாயிடுத்து! வயிற்றுப் பாட்டுக்காக எந்த வேலை கிடைச்சாலும் ரைட்டுங்கற சூழல் வந்தாச்சு. ஒரு செருப்புக் கடைல காலைத் தொட்டு செருப்பைப் போட்டு விடற சேல்ஸ்மேன் வேலைல இருந்து பிராந்தியும், ரம்மும் விக்கற கம்பெனில கணக்கெழுதற வேலை வரை கிடைக்கறத பிடிச்சுக்கறவாளா மாறிட்டோம். அதனால ஆச்சாரம்கறத திவசம் திங்கள்னா மட்டும்தான்னு மாத்திண்டுட்டோம்.

உத்யோக நிமித்தம் தினமும் ஷேவ் பண்ணிக்கறதுக்காக ரேசரை வாங்கி வெச்சுண்டு, நாவிதனோட வேலைக்கும் ஆப்புவெச்சு நாமளே பாதி நாவிதன் ஆய்ட்டோம். சட்டை போட்டா மறைஞ்சுக்கறதால பூணூலை மட்டும் சிலர் விடாம போட்டுண்டுருக்கா... இல்ல அதையும் கழட்டி... ஆணியில மாட்டிடுவோம்."

தேசிகனும் சற்று அர்த்தபூர்வமாகவே பேசிக்கொண்டு வந்தார். அது ரசிக்கும் படியாகவும் இருந்தது.

"தேசிகா. பரவால்ல - உனக்கும் தெளிவான ஒரு பார்வை இருக்கு. அதே சமயம் ஆசாரம்கறதையே சிலர் இப்ப அனாசாரமா ஃபீல் பண்ண ஆரம்பிச்சுட்டா. ஆசாரம்கறது ஒரு அற்புதமான விஷயம். தீண்டாமைக்கும் அதுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கு. நோயாளியை, ஒரு டாக்டர் யாரும் தொடக் கூடாதுன்னு சொல்றது ஒரு நல்ல எண்ணத்துல... அது தீண்டாமை உணர்வால கிடையாது. அதே மாதிரி நம்ம ஆச்சார்யன் தன்னை நாமெல்லாம் தீண்டக்கூடாதுன்னு சொல்றதும் ஒரு நல்ல எண்ணத்துலதான். நாம சமுதாயத்துக்குள்ள பல இடத்துல லைன்ல நிக்கறோம், பஸ்ல ஏறி நசுங்கிண்டு வர்றோம். இதெல்லாம் தவிர்க்க முடியாததாயிருக்கு. ஆதலால் சாவுத்தீட்டு, பொம்மனாட்டி தீட்டு, பிள்ளை பெத்தத் தீட்டுன்னு எதிர்மறை யான அலை அம்சங்கள் நம்மைத் தாக்கியிருக்க வாய்ப்பு அதிகம்... அவரோ நம்மோட நல்லதுக்காக தவம் இருக்கறவர். ஒதுங்கி தூய்மையா வாழறவர். அவரைத் தீண்டி நம்மோட தீட்டுக்களால அவருக்குப் பாதிப்பு வந்துடக்கூடாதுங்கறதுக்காக தான் இங்க அவர் ஆச்சாரமா இருக்கார்... இதை ஏன் நான் சொல்றேன்னா... ரங்கன் மாதிரி ஆத்மாக்களை அரவணைக்கவும் தெரியணும் அதே சமயம் சாஸ்த்ர பங்கம் வந்துடாமலும் பாத்துக்கணும். ரங்கனுக்கு நான் பல ஆயிரம் கொடுத்திருந்தாலும் சந்தோஷப்பட்டிருக்க மாட்டான். ஒரு டம்ளர் மோர் குடுத்து சமதையா நடத்தினேன் பாரு... அதான் அவனுக்கு நான் காட்டின அசலான நன்றி..."

-சிங்கராச்சாரியார் ஆசாரம், தீட்டு என்று பேசினாலும் அதை அழகாக ரங்கனிடம் கொண்டு வந்து முடித்தார். தேசிகனிடம் ரங்கனை நினைக்கும் போதெல்லாம் ஒரு நெருடல். அவரையும் மீறிக் கொண்டு அவரது எண்ணங்கள் அந்த டைரியிடம் சென்று

சென்று நின்று விடுகின்றன... ஆதலால் மேற்கொண்டு பேச முடியாதபடி ஒரு ஸ்தம்பிப்பு.. இப்பொழுதும் அதுதான் தேசிகனின் நிலை. சிங்காரச்சாரியாருக்கும் புரிந்தது.

''ரங்கனைப் பத்தி நான் எப்ப பேசினாலும் உன்கிட்ட ஒரு தடுமாற்றம், அப்புறமா ஒரு சஞ்சலம்... ஏன் அப்படி?'' - என்று கேட்டே விட்டார்.

''நான் பொய் சொல்ல விரும்பல.. ஆனா ஒரு நாள் நிச்சயமா நான் அவனைப் பத்தி பேசத்தான் போறேன்... இந்த உலகத்துல ரொம்ப பெரிசு இமயமலைன்னு சொல்வா.. அது தப்புண்ணா! ஒருத்தர் மனசுக்குள்ள இருக்கற ரகசிய பாரம் தான் பெரிசு. அதை நான் எப்ப எப்படி இறக்கப்போறேனோ தெரியலை..'' என்ற போது சிங்கராச்சாரியாருக்கே அது பெரிய ஆச்சரியமாகத்தான் இருந்தது.

''தேசிகா.. எதுக்கு இந்த பீடிகை. அதை நீ இப்ப சொன்னா யாருக்கு எது குறைஞ்சுடும்?'' - திருப்பிக் கேட்டார்.

''வேண்டாண்ணா... இதுக்கு மேல என்னை எதுவும் கேட்காதேள்...'' என்றவரை சிங்கராச்சாரியாரும் தொணப்பத் தயாரில்லை.

''சரி உன் பிள்ளைக்கு வரன் பாக்கணும்னியே... அமைஞ்சதா ஏதாவது?''

''பாத்துண்டே இருக்கோம். சொன்னா ஆச்சரியப்படுவேள். நம்ம சமுதாயத்துல பெண்ணைப் பெத்தவன் பாடுதான் எப்பவும் திண்டாட்டமா இருக்கும். அதுலயும் கல்யாணத்தின் போது பிள்ளையாத்துக்காரா பொண்ணாத்துக்காராளை சப்பாத்தி மாவை பிசையற மாதிரி பிசைஞ்சு தட்டியே போட்டுடுவா. பர்ச்சாரகன் சரியா காபி போடலைன்னா அதுக்கெல்லாம் ஒரு சண்டை போட்டு துவம்சம் பண்ணுவா... மாப்ளையோட தங்கைகளுக்கும் அக்காக்களுக்கும் கொம்பு முளைச்சிடும். எது சிக்கும்னு அலைவா... இதெல்லாம் பழைய காலம்னு ஆயிடுத்து. இப்ப நம்ம ஜாதில பொண்ணே கிடைக்க மாட்டேங்கறது! சாதாரண அகடமிக் டிகிரி முடிச்ச பையனுக்கு கை போனது, கால் போனது, காது கேக்காததுன்னு ஊனமான பெண்கள்தான் இருக்கா. ஏன்னா எல்லா பெண்களும் M.B.A, M.SC, MCA.,ன்னு

படிச்சுட்டு தனக்கும் மேல படிச்சவன் தான் மாப்ளையா வரணும்னு சொன்னா எங்க போக?

''நீ என்னதான் சொல்லவரே?''

''என் பிள்ளைக்கும் அந்த சிக்கல்... அதனால என் ஆம்படையா உள்ளூர்லையே வரன் பாக்கறா...''

''யாருடா இருக்கா?''

''ஏன் இல்லாமா... நம்ம சக்கரவர்த்தியோட பொண்ணு மைதிலி இருக்காளே...?''

''மைதிலியா...?'' சிங்கராச்சாரியாரே அதைக் கேட்டு வாயைப் பிளந்து விட்டார்.

''ஏண்ணா?''

''சக்கரவர்த்தி எங்க. நீ எங்கடா?''

''அது எனக்கும் தெரியும். ஆனா மைதிலிக்கு ஜாதகம் சரியில்லையாமே...''

''அதனால?''

''நாம பண்ணிப்போம்கறது என் ஆம்படையா அபிப்ராயம்.''

''ஜாதகம் உன் பையனுக்குப் பொருந்தணுமே...?''

'பொருந்தலேன்னா பரிகாரம் பண்ணிக்கலாம்கறா...''

''அதுக்கும் அடங்கலன்னா?''

''அதை இப்ப எப்படிண்ணா சொல்ல முடியும் பார்ப்போம்.''

''பைத்தியக்காரா... நான் அவ ஜாதகத்தைப் பார்த்தவன். அவ உன் பிள்ளைக்குக் கிடைக்க மாட்டா...''

''அப்படியாண்ணா!..''

''உன் பிள்ளைக்கு வேற இடம் பாரு. அந்தப் பக்கம் போகாதே. மீறிப்போனே ரொம்ப கஷ்டுப்படுவே நீ...''

''எந்த விதத்துலன்னா...?''

-தேசிகன் கேள்விக்கு சிங்கராச்சாரியாரும் சிரித்தபடியே. ''நீ ஒரு ரகசியத்தை வேளை வரும்போது சொல்றேன்னு சொன்னே

பாரு... அப்பவே நானும் உனக்குச் சொல்லிக்கிறேன்...'' என்றார். தேசிகன் முகத்தில் ஈயாடவில்லை!

★★★

மைதிலியின் வீடு!

முகப்பு பாகத்தில் பிரம்பு நாற்காலியில் சாய்ந்து கொண்டு ஹிந்துவை மேய்ந்தபடி இருந்தார் சக்கரவர்த்தி.

ஐயா.. 'என்கிற குரல் கேட்டு நிமிர்ந்தார்

ரங்கன்.

''அடடே ரங்கனா... வாப்பா! உனக்கு என் மேல ஒண்ணும் கோபமில்லையே...?'' எடுப்பிலேயே அவர் கேட்ட கேள்விக்கு மறுப்பாக தலையை ஆட்டினான் ரங்கன்.

''சந்தோஷம்... ஆமா உன்னை யார் வரச் சொன்னது. என் புள்ள சீமாவா இல்ல மைதிலியா?''

''அம்மாங்க... மைதிலி அம்மா...''

''மைதிலி உன் வரைல அம்மாவா... பலே! நானும் நேராவே விஷயத்துக்கு வந்துட்றேன். நேத்து ராத்திரி கூட நம்ம தோப்புல திருட்டு போயிருக்கு. அப்புறம் உள்ள நிறைய தப்பு தண்டா நடக்கறதுங்கறது அங்க கிடக்கற பிராந்தி பாட்டில், சிகரெட் பாக்கெட்டை வெச்சே தெரியறது. என்னதான் முள்வேலிய போட்டாலும் தாண்டிக் குதிச்சு ஒரு குரூப் வந்துட்றது... கிட்டத்தட்ட நூறு, நூத்தம்பது இளநியை வேற காணோம்!

குத்தகையை மாத்தியும் புண்ணியமில்லை. புது குத்தகைக் காரன் இன்னும் முழுசா பணம் தராததால அக்ரிமெண்ட்ல கையெழுத்துப் போடலை. நீ பாத்துக்கறேன்னு சொல். நான் குத்தகைக்கே விடலை...

என்ன சொல்றே?''

-சக்கரவர்த்தி கூர்மையாக விஷயத்துக்கு வந்து விட்டார். ரங்கன் முகத்தில் தீவிர யோசனை... மெல்ல திறந்த ஜன்னலுக்குப் பின்னாலே இருந்து மைதிலியின் கண்ணிரண்டும் ரகசியமாக ரங்கன் என்ன சொல்லப் போகிறானோ என்று பார்த்தபடியே இருந்தன!

அவனும் அரைமனதாக ''சரிங்க...'' என்றான். அது உள்ளே மைதிலியின் மன்னியான ரேவதி காதிலும் விழுந்து அவள் தன் கணவனான ஸ்ரீனிவாசனிடம் முனங்கச் செய்தது.

''அந்தத் தோப்பை அழிச்சுட்டு மல்டி காம்ப்ளெக்ஸ் கட்டி வாடகைக்கு விட்டா ஒண்ணுக்கு பத்தா லாபம் வரும். எதுக்கு இன்னும் அந்த தோப்பை உங்கப்பா கட்டிண்டு அழறார்...?''

''விட்றி... அவர் இருக்கற வரை என்னவேணா பண்ணிட்டுப் போகட்டும். நாம எதாவது சொன்னா விவசாய நிலங்களை எல்லாம் எல்லாரும் அழிக்கப்போய் தான் மழையே பெய்ய மாட்டேங்கறதுன்னு பெருசா ஆரம்பிச்சிடுவார்...''

''நான் இப்பவே சொல்லி வெச்சுட்டேன்... அது நமக்குத்தான் வரணும் பாத்துக்குங்கோ...''

-மைதிலி அறைக்குள் இருப்பது தெரிந்து அவள் காதுகளில் விழவேண்டும் என்றே பேசினாள் ரேவதி. ரேவதிக்கு மன்னி அப்படி எல்லாம் பேசுவது அதிர்வை உண்டாக்கி ஒரு வித புழுக்கத்தையும் உருவாக்கி விட்டது!

12

'ஒன்றே பத்தாயிற்று - பத்தும்
ஒன்றின் வித்தாயிற்று...!
ஒன்றே வழியாயிற்று - வைணவர்க்கும்
ஒன்றே வழியாயிற்று!
ஒன்றே மொழியாயிற்று - பன்னிருவர்
ஒன்றிய திருவாய் மொழியாயிற்று!
ஒன்றே எல்லாமாயிற்று - நாராயணா
என்றே சொல்லாயிற்று!

மன்னி ரேவதியின் அந்தத் தீர்க்கமான பேச்சும், அவள் வெளிக்காட்டிய ஆசையும் மைதிலிக்கு ஒன்றும் புதிதில்லை.

இருந்தாலும், அவ்வப்போது அடிக்கோடு போடுவது போல பேசுவதும், அவளை உறுத்திற்று. எங்கே அந்த தோப்பை சக்கரவர்த்தியாகிய அவளது அப்பா மைதிலிக்கே கொடுத்து விடுவாரோ என்று பயப்பட்டும், அவ்வாறு நடந்து விடக் கூடாது என்று கருதியும், அவள் பேசுகிற மாதிரிதான் அவள் உணர்ந்தாள். ஒரு அளவிற்கு மேல் அவளால் ரேவதியின் பேச்சை மனசுக்குள் சுமக்க முடியவில்லை. நேராக ரேவதி எதிரில் போய் நின்றாள். தன் பேச்சைக் கேட்டு விட்டே மைதிலியும் வந்து நிற்கிறாள் என்பதை ரேவதியும் புரிந்து கொண்டவளைப் போல அவளைப் பார்த்தாள்.

''மன்னி...''

''சொல்லு...''

''நம்ம காவேரிக்கரை தென்னந்தோப்பைப் பத்தி நீங்க பேசினது காதுல விழுந்தது..''

''சரி.. அதுக்கென்ன இப்போ?''

''ஒருவேளை அப்பா அதை என் கல்யாணச் சீராகக் கொடுத்தாலும், நான் அதை வாங்கிக்க மாட்டேன். அது அண்ணாவுக்கும் உங்களுக்கும்தான். நீங்க இனி பயப்பட வேண்டாம். ஜாடையும் பேசவேண்டாம்.'' - என்றாள்.

''அடேங்கப்பா... அப்புறம்?''

''என்ன மன்னி அப்புறம்... நான் என் மனசுல உள்ளதைச் சொல்லிட்டேன். வேணும்னா எழுதிக்கூட கொடுத்துட்றேன். போறுமா?''

''சரிதான்... அடியேங்கறதுக்கு ஆத்துக்காரி இல்லாதவன் ஆடிப்பூரத்துல ஆண்டாள் மாதிரி பிள்ள பெத்துக்க ஆசைப் பட்டானாம். அப்படி இருக்கு நீ பேசறது. அந்தத் தென்னந் தோப்பை உங்கப்பா என்னமோ உனக்குதான் கொடுக்கப்போற மாதிரியும், நீ என்னமோ எங்களுக்குப் பிச்சை போட்ற மாதிரியும்ல இருக்கு நீ பேசறது:...''

''நான் பேசல மன்னி. உங்கஜாடைப் பேச்சு என்னைப் பேச வெச்சது அவ்வளவுதான். நீங்க இப்ப சொன்ன மாதிரி, அப்பா

அதை எனக்குத் தராம உங்களுக்கே தந்துட்டாலும் சந்தோஷம் தான்...''

''அதை நீ என்ன சொல்றது. அது எங்களுக்குதான்! அதே சமயம் அந்த தென்னந்தோப்புக்காகவெல்லாம் உனக்கு ஒரு கல்யாணம் நடந்துடும்னு யாராவது நினைச்சா அவனுக்காக நான் பரிதாபம் தான் பட முடியும்...''

அங்கு தொட்டு இங்கு தொட்டு ரேவதி அவள் கல்யாணத்திடம் வந்து நின்றாள். அதுவும் விஷமமான ஒரு கருத்தோடு. அதுவரை வாயை மூடிக்கொண்டிருந்த அவள் அண்ணன் சீமாவும் அதற்கு மேல் சும்மா இருக்கக்கூடாது என்கிற மாதிரி பேச ஆரம்பித்தான்.

''ரேவதி... கொஞ்சம் வாயமூடிண்டு சும்மா இருக்கியா? தோப்பைப் பத்தி பேசிண்டிருக்கச்சே அதுக்கு நடுவுல எங்க இருந்து வந்தது இவ கல்யாணம்? எதுக்காக இப்படி மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போட்றே?''

''நான் ஒண்ணும் முடிச்சும் போடலை, அவுக்கவும் செய்யலை. உள்ளதச் சொன்னேன். இதுவரை எவ்வளவோ ஜாதகத்தைப் பார்த்தாச்சு. ஒரு ஜாதகம் கூட பொருந்தல... அதனால உங்கம்மாதான் அன்னிக்கு ஜாதகம் கேட்டு வந்த ஒருத்தர்கிட்ட அந்தத் தென்னந்தோப்பு என் பொண்ணுக்குத் தான்னு சொன்னா... அதுக்காகவாவது எந்த மாப்ளையாவது வரமாட்டா னான்னு?''

-ரேவதி அப்படிச் சொல்லி கொண்டிருக்கும் போதே சர்ச்சையான குரல்களைக் கேட்டு சக்கரவர்த்தியும், ஜானகியும் அவர்களை நோக்கி வந்து விட்டனர்.

''என்ன இங்க வாக்குவாதம்... ஏண்டா சீமா... என்னடா?''

''ஒண்ணும் இல்லப்பா... ரேவதியும் மைதிலியும் சும்மா அவாளுக்குள்ள ஜாலியா பேசிக்கறாப்பா...''

''ஓஹோ... தென்னந்தோப்பு எனக்குத்தான், உனக்குத் தான்னு அடிச்சுக்கறதுக்கு பேர் ஜாலியா உன் அகராதில..''

''ஐயோ அப்பா... நீங்க போங்கோ. ரேவதிக்கும் அறிவில்ல. இவளுக்கும் அறிவில்ல..''

- சீமா மைதிலியை குற்றம் சொல்லவும், அவளுக்குச் சிடுசிடு என்று கோபம் வரத் தொடங்கிவிட்டது. "வேண்டாண்ணா... மன்னிக்கு அறிவிருக்கா இல்லையாங்கற ஆராய்ச்சிக்கெல்லாம் நான் வர விரும்பல. இதுதான்.சாக்குன்னு எனக்கு அறிவில்லன்னு என்கிட்ட மோதாதே. நான் ஒண்ணும் பேராசைப் படலை. நான் ஒண்ணும் ஜாடை பேசலை..."

"சரிதாண்டி... நான் பொதுவா ரெண்டு பேரையும் சொன்னா, நீ என்னமோ பெருசா சிலிர்த்துக்கறையே...

"சீமா நீ செத்த வாயைமூடு. நல்ல ஆம்பளைன்னா உன் பொண்டாட்டியை அடக்கு. இந்த ஆத்துல யார் எப்ப எப்படிப் பேசுவான்னு எனக்கும் தெரியும். சொத்து பத்துன்னு இருந்தா சர்ச்சைகள் வரும்கறது எனக்கும் தெரியும். ஆனா ஒரு பொண்ணே இன்னொரு பொண்ணைப் பார்த்து உனக்கு அவ்வளவு சீக்கிரத்துல கல்யாணம் ஆகாது - அதுக்காக தோப்பையே கொடுத்தாலும் எவனும் கல்யாணம் பணணிக்க மாட்டான்னுல்லாம் பேசறது ரொம்ப மோசமான கெட்ட பேச்சு. இப்ப சொல்றேன் கேட்டுக்கோ... அந்த தோப்பு மைதிலிக்குத் தான். மைதிலிக்கு என்ன மைதிலிக்கு... அவ கழுத்துல தாலிகட்டப் போற என் மாப்ளை யாரோ அவனுக்கு நான் அதைக் கல்யாணச் சீராவே தரப்போறேன். அது நான் சம்பாதிச்ச சொத்து... பரம்பரைச் சொத்துலயும் உன்தங்கைக்கு சம உரிமை இருக்கு பேராசைப்படாம ஒழுங்கா இந்த ஆத்துல இருக்கறதா இருந்தா இரு. இல்ல தனிக்குடித்தனம் கிளம்பிடு. எங்களுக்கு எந்த ஆட்சேபனையும் கிடையாது. இந்த ஆத்துல ஜாடை பேசறதோ, இல்ல கண்டபடி வார்த்தைகளை விட்ற வேலையோ கூடவே கூடாது... ஜாக்ரதை! நீ வாம்மா..."

-சக்கரவர்த்தி வந்த வேகத்தில் அழுத்தமாகப் பேசிவிட்டுப் மைதிலியையும் அழைத்துக் கொண்டு விலகவும் சீமாவிடம் ஒருவித ஸ்தம்பிப்பு. ஆனால், ரேவதி அவர் பேசினதையே அஸ்திரமாக்க விரும்பினாள்.

"உங்கப்பாவே வெளிய போன்னு சொல்லிட்டார். இனியும் இங்க இருக்கறதுக்கு பேசாம காஷாயம் உடுத்திண்டு தெக்கு கோபுரத்துக்குக் கீழ போய் உக்காந்துக்கலாம்..." - என்றாள்.

"அவர் எங்கடி வெளிய போகச் சொன்னார்?"

"தனிக்குடித்தனம் போங்களேன்னா அதுக்கு வேற என்ன அர்த்தமாம்?"

"அதுக்கு முந்தி ஒழுங்கா இந்த ஆத்துல இருக்கறதா இருந்தா இருன்னு சொன்னதை நினைச்சுப் பார்த்தியா?"

"இப்ப நான் என்ன ஒழுக்கம் கெட்டுப் போய் வீதி வீதியா சுத்திண்டிருக்கேன். என் மனசுலபட்டதையும் காதுல விழுந்ததையும் பேசினேன். நான் பேசினதுலையும் என்ன தப்பு? கடைசியா உங்கப்பா என்ன சொன்னார்? அவளை கல்யாணம் பண்ணிக்கறவனுக்குத்தான் அந்த தோப்புன்னு சொன்னாரா இல்லையா?"

"அடிப்போடி கூறு கெட்டவளே... சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்தவளே நீதாண்டி நீ கோடு போட்டே... அப்பா வந்து அது மேல ரோடே போட்டுட்டுப் போய்ட்டார்."

"அப்ப சூடு சொரணை இல்லாம இந்த ஆத்துலயே கிடந்து செத்தாலும் சாவேன்.. சுயமரியாதையோடு வெளிய போக மாட்டேங்கறேள். அப்படித்தானே?"

-ரேவதி கேட்ட மறு வினாடி அவள் கன்னத்தின் மேல் சீமாவின் வலது கரம் ஒரு அறை விட்டு முடிந்தது.

நல்ல ஆவேச அறை... ரேவதியின் காதுக்குள் கதம்ப வண்டுகள் ஓடிப்பிடித்து விளையாடுவது போல இருந்தது அப்படி ஒரு சப்தம்!

★★★

தென்னந்தோப்பு முழுக்க திம்மென்ற நிழல். அங்கங்கே குறும்பைக் காய்களும், மட்டைகளும் விழுந்து கிடந்தன. பார்த்துக் கொண்டே நடந்து கொண்டிருந்தான் ரங்கன்.

கிட்டத்தட்ட பத்து ஏக்கரில் ஓங்கி உலகளக்கும் தென்னைகள். அவற்றில் ஓடி விளையாடும் அணில்கள். தரைப்பரப்பு ஆற்று மணல் பரப்பு போல நரநரவென்று இருக்க ஏராளமான தும்பைச் செடிகளும் புற்களும் மானாவாரியாக வளர்ந்திருந்தன. நல்ல

இடைவெளி விட்டு தண்ணி பாய்ந்து தேங்கிட வசதியாக ஒவ்வொரு தென்னையையும் சுற்றி வட்டமாய் குழிவெட்டி யிருந்தது. ஆனால் பல இடங்களில் அந்தக் குழிகளை மணல் மூடி விட்டிருந்தது.

அவற்றை எல்லாம் திரும்பத் தோண்டி தண்ணீரை அதனுள் தேக்கி நிறுத்த வேண்டும் என்று நினைத்துக் கொண்டே நடந்தான் ரங்கன்.

அண்ணாந்தும் பார்த்தான். கொத்துக் கொத்தாய் காய்கள். அவ்வளவுக்குள்ளும் சுத்தமான இளநீரும் பருப்பும் இருப்பதுதான் எத்தனை பெரிய விந்தை. ஒரு மோட்டார் இயக்கம்போல பூமிக்கடியில் இருக்கும் தண்ணீரை ஏதோ ஒரு சக்தி நீண்ட மரத்தண்டின் வழியாக மேலேற்றுகிறது... அதை சொம்பு போல காய்களும் வாங்கிக் கொள்கின்றன. மற்ற மரங்களைப் போல எல்லாப் பக்கங்களிலும் கிளை விட்டால் ஒரே நோக்கமாய் நிலத்து நீரை மேலே கொண்டு சென்று இளநீராக்க முடியாது என்று இயற்கையே தீர்மானித்து கிளைகளே இல்லாதபடி ஒரே தண்டாக மரத்தை வடிவமைத்து அதுவும் வானை நோக்கி நேராக ஒரு நேர்கோடு போல வளர வேண்டும் என்று திட்டமிட்டது யாராக இருக்கும்?''

சில நேரங்களில் ரங்கனுக்குள் இப்படி எல்லாம் கேள்விகளும் விசாரங்களும் எழும். ஆச்சரியமாய் அது குறித்தெல்லாம் சிந்தித்தபடி நடந்தவன் கண்களில் ஒரு இடத்தில் காண்டம் ஒன்று கண்ணில் பட்டது. சற்றுத்தள்ளி ஒரு குவார்ட்டர் பிராந்தி பாட்டில் ஒன்று! சக்கரவர்த்தி எச்சரித்ததெல்லாம் சரிதான் என்பது அப்போதே அவனுக்குத் தோன்றிவிட்டது.

பரந்த பெரிய தோப்பும் அதன் அடப்பமான நிழலும் தவறு செய்ய நினைப்பவர்களுக்கு மிகவே சாதகமாக இருப்பதுதான் காரணம்!

அப்படியே தோப்பின் பின்பகுதி நோக்கி வேகமாக நடந்தான். காவிரியின் கரைவெளி கண்ணில்பட்டது. காவிரியில் ஜலமும் மையப் பாகத்தில் மட்டும் ஓடியபடி இருந்தது.

நேற்றுவரை இந்தக் கரைக்கும் அந்த கரைக்கும் ஓடிய காவிரி இப்படி அடக்கமாக காட்சி தருகிறாள் என்றால், மேட்டூரில் தண்ணீர் திறந்து விடுவதை நிறுத்தி விட்டார்கள் என்று தான் அர்த்தம்.

மேட்டூரில் கூட அவள் திமிலோகப்படுவதும் திகைத்துப்போன மான் போல பெயருக்கு தேங்கி நிற்பதும் கர்நாடகா கையில் இருக்கும் சமாசாரங்களாகும்... அங்கிருந்து தண்ணீரை தோப் புக்குத் திருப்பி விடுவதும் அப்போதைக்கு சாத்தியம் இல்லை என்று தோன்றவே என்ன செய்யலாம் என்பது போல சிந்திக்கத் தொடங்கினான். அப்போது பார்த்து ஆற்று நீருக்குள் நீந்தி வந்த நிலையில் உடம்பெல்லாம் ஈரத்துடன் இருக்க தலையில் ஒரு பிரம்புக் கூடையுடன் இரண்டு பேர் தோப்பின் ஒரு பக்கமாய் உள் நுழைந்து குறிப்பிட்ட ஒரு இடத்தில் குழியையும் தோண்டத் தொடங்கினர். அவர்கள் தோண்டிய இடத்தில் ஒரு தகர டின் புதைக்கப்பட்டிருக்க, அதை வெளியே எடுத்தனர்.

அதனுள் கள்ளச்சாராயம்!

அந்த டின்னைத் தூக்கி கூடைக்குள் வைத்தவர்களாக நிமிர்ந்தனர். அதே சமயம் எதிரில் ரங்கன்!

''அட பொணந்தூக்கி ரங்கனா... எங்கப்பா இந்த பக்கம்?'' - ஒருவன் படுகேஷுவலாகக் கேட்டான்.

''நான்தான் இனி இந்தத் தோப்புக்குக் காவல்காரன். ஆமா அது என்ன கூடைல?''

''என்ன ரங்கா எதுவுமே தெரியாதவன் மாதிரி கேக்கறே?''

''கேட்ட கேள்விக்கு மட்டும் பதில் சொல்லு. அப்படியே அந்தக் கூடையையும் கீழ இறக்கு...''

''வேண்டாம் ரங்கா... இது இடும்பன் சரக்கு. இன்னிக்கு இதோட மதிப்பு மூவாயிரம் ரூபா. இருபது லிட்டர் சரக்கு. இன்னும் இருபது லிட்டர் தண்ணி சேர்க்கலாம் ஒரு கிளாஸ் சரக்கு இன்னிக்கு முப்பது ரூவா. குவார்ட்டரை விட காசு கம்மி. ஆனா போதைல குவார்ட்டருக்கு அண்ணன்.''

"நான் உன்கிட்ட அது எப்படிப் பட்டதுன்னா கேட்டேன்? இங்க எப்படி வந்துச்சுன்னு தானே கேட்டேன்?"

"அதெல்லாம் உனக்கெதுக்கு ரங்கா. இந்த தோப்புக்குச் சொந்தக் காரரான ஐயரே இங்க எங்களப் பார்த்தாலும் பாத்தும் பாக்காத மாதிரி போய்டுவாரு. நீ என்னடான்னா சிலிர்த்துக் கறையே...?"

"ஐயர் போகலாம். நான் போக முடியாது. அதை இப்ப கீழ இறக்கறையா இல்ல நான் இறக்கவா?"

"வேண்டாம் ரங்கா... நீ ஒரு அனாதைப்பய. அநாவசியமா எங்களோட மோதி கை காலை இழந்து நிக்காதே... கையும் காலும் உனக்கு நல்லா இருந்தா தான் உன்னால பொணம்தூக்கிப் போடமுடியும். ஞாபகம் வெச்சுக்கோ..."

"என்னடா மிரட்டிப் பாக்கறீங்களா?"

"பாக்கறதென்ன... அதுதான்." - அந்த சாராயக் கூடைக்காரன் மூர்க்கம் காட்டவும் ரங்கனிடம் ஒரு புது ஆவேசம்! அவன் கத்தியையும் கையில் எடுத்து விட்டான்.

வாக்கு வாதம் வலுத்தபடி இருந்த அந்த தென்னந்தோப்புக்குள் வாடிய முகத்துடன் மைதிலி நுழைந்து கொண்டிருந்தது தான் ஆச்சரியம்!

அவளும் ரங்கனையும் அந்த இரண்டு பேரையும் பார்த்தாள். ஆனால் ரங்கன் அவளைப் பார்க்கவில்லை. அவனுக்கு முன் இருந்த சாராய வியாபாரிகளோ ரங்கனுக்கு பின்னால் மைதிலி வருவதைப் பார்த்து விட்டு சுருதியை மாற்றிக் கொண்டு "டேய் இவன் விஷயத்துல தாமதிக்காம போட்டுட்றா." என்றபடி ஒருவன் கை கத்தி ரங்கனை நோக்கி பறந்து சென்றது.

ஆனால் ரங்கனின் சுதாரிப்பு, அந்தக் கத்தியை மைதிலியை நோக்கித் திருப்பி விட்டது தான் கொடுமை.

மைதிலியிடம் அலறல்!

13

'தேசம் பெரிது - இதனில்
திவ்யதேசம் அரிது!
கோஷம் எளிது - கோவிந்த
கோஷமோ வலிது!
மார்க்கம் பலது - வைணவ
மார்க்கமே பலமது!
கோவில் பெரிது - ஸ்ரீரங்கமோ
பெரிதினும் பெரிது...'

மைதிலியை அவர்களும் பார்த்தனர். ரங்கன் அவளைப் பார்த்துவிட்டு "நீங்க எங்கம்மா இங்க வந்தீங்க போங்கம்மா..." என்றான் சற்று பதற்றமாக. அவன் கவனம் அவள் பக்கம் திரும்பவும் இடும்பனின் ஆட்கள் சாராயக் கூடையுடன் கம்பி நீட்டப் பார்த்தார்கள். ஆனாலும் ரங்கன் அவர்களை விடுவதாக இல்லை. ஓடிப்போய் அவர்கள் இருவர் முன்னாலும் நின்ற நிலையில், தலையில் இருந்த கூடையை ஆவேசமாகத் தட்டியும் விட்டான்.

கூடையும் கீழே விழுந்தது சாராய தகர டின்னின் முகப்பில் அடைக்கப்பட்டிருந்த ஆப்பு போன்ற மரத்தாலான அடைப்பு விலகி சாராயமும் குதித்துக் கொண்டு கொப்பளிக்க ஆரம்பித்தது. கூடவே பயங்கரமான வாடைவேறு மைதிலி மூக்கைப் பிடித்துக் கொண்டாள். "அம்மா நீங்க போங்க... வீட்டுக்குப் போய் அப்பா கிட்ட சொல்லி போலீஸை நம்ம தோப்புக்கு வரச் சொல்லுங்க. நான் இவங்கள மரத்துல கட்டி வெச்சிருக்கேன்" என்றான். அவர்கள் அதைக் கேட்டுப் பதறியதோடு "ரங்கா... நீ ரொம்ப ஓவராய் போறே..." என்றனர்.

"காவேரிக்கரை தென்னந்தோப்பை சாராயம் பதுக்கற இடமா நீங்க ஆக்கறது ஓவர் இல்ல - நான் பேசறது ஓவரா? நான் இப்ப

இந்த தோப்புக்குக் காவல்காரன் சாமி என்னை நம்பி தோப்பை ஒப்படைச்சிருக்கார். ஞாபகம் இருக்கட்டும்...''

பேச்சோடு பேச்சாக அவர்களில் ஒருவனை எகிறிப் பிடித்து அவனது தலையில் கட்டப்பட்டிருந்த தலைப்பாகை துண்டாலேயே கை இரண்டையும் பின் பக்கமாய் வளைத்துக் கட்ட ஆரம்பித்தான். அதைப் பார்த்த அடுத்தவன் ரங்கனை கட்ட விடாமல் தடுக்க முனைய, ரங்கன் விட்ட குத்து அவனை பக்கத்து தென்னை ஒன்றின் அடிப்பாகம் மேல் மோதி விழ வைத்தது. அவன் சுதாரித்து எழுவதற்குள் துண்டால் கட்டி முடித்துவிட்டுத் திரும்பினான். விழுந்து எழுந்தவனிடம் லேசான போதை வேறு... கைகளால் கட்டப்பட்டிருப்பவன் அவனைப் பார்த்து ''அம்புலி நீ ஓடிப்போடா... போய் இடும்பண்ணன்கிட்ட சொல்லு... போலீஸ் இங்க வரத்துக்குள்ள நம்மாளுங்க சும்மா ஒரு பத்து பேராச்சும் வரணும். இவனை ரெண்டுல ஒண்ணு பார்த்துடணும்'' என்றான். அடுத்த நொடியே அவனும் திரும்பி ஓடத் தொடங்கினான்.

ரங்கன் குனிந்து அந்த சாராய டின்னை நிமிர்த்தி கூடையில் வைத்தான். திரும்ப மைதிலியைப் பார்த்தவன் ''சும்மா போங்கம்மா. போய் எவ்வளவு சீக்கிரம் போலீஸை வரவழைக்க முடியுமோ வரவழையுங்க'' என்றான்.

''இல்ல ரங்கா... ஓடிப்போனவன் சொன்ன மாதிரி ஒரு பத்துப் பதினைந்து பேரோட வந்துட்டா...?''

''அதெல்லாம் வரமாட்டாங்கம்மா... அப்படியே வந்தா அவ்வளவு பேரையும் போலீஸ்ல பிடிச்சுக் கொடுப்போம். நீங்க லேட் பண்ணாம ஓடுங்கம்மா...'' - மைதிலி அவனுக்கு ஏதாவது ஆகிவிட்டால் என்ன செய்வது என்பதிலேயே மையம் கொண்ட வளாய் நின்றபடியே இருந்தாள்.

''சரி நீங்க போக வேண்டாம்... நான் போறேன்...'' என்று அவளை தனக்கு முன்னால் தள்ளி விட்டவனாக நடக்க ஆரம்பித் தான் ரங்கன்.

அதற்கு மேல் அவள் அங்கே நிற்கவில்லை. ''வேண்டாம் இங்கையே இருங்கோ... நான் போய் அப்பாகிட்ட சொல்றேன்...''

என்றவளாய் அவனை திரும்பத் திரும்பப் பார்த்தவளாக நடந்தாள்.

''சீக்கிரம் போங்கம்மா...'' என்று அவன் கத்தவும் ஓடவே தொடங்கினாள்!

★★★

வெளியே புறப்பட்டுவிட்ட ஒருவித வேகத்தோடு சக்கரவர்த்தி முழுக்கை சட்டையின் பட்டனை போட்டபடியே நிலைக் கண்ணாடிமுன் நின்று கொண்டிருந்தார். பின்னாலேயே அவரின் அருமைப் பத்தினி ஜானகி.

''போற இடத்துல திருக்கண்ணமங்கக்காரா மைதிலிய பொண்ணு பார்க்க எப்ப வரப்போறானு ஒரு வார்த்தையைக் கேட்டுண்டு வந்துடுங்கோ... இங்க பத்து சகுண்டின்னு வரிசையா காரியங்கள் இருக்கு. அவா பாட்டுக்கு விஷயம் தெரியாம வந்து நிக்கப் போறா...'' என்றாள்.

''இல்ல ஜானா... நான் அவாளுக்கு போன் பண்ணியே விஷயத்தை சொல்லிட்டேன்... ஊனமாஸ்யம் கழியறவரை அவா வரமாட்டா. முடிஞ்ச உடனே போன் பண்ணா மறுநாளே வரதுக்கு அவா தயாரா இருக்கா. வர்ற ஐப்பசி, கார்த்திகைல கல்யாணத்தை எப்பாடு பட்டாவது பண்ணியே தீர்ரதுங்கற முடிவுல நானும் இருக்கேன். அவாளும் இருக்கா. இப்ப பண்ணாத்தான் எங்கம்மாவோட ஆத்மாவும் மைதிலிய குளிரக் குளிர வாழ்த்தும்...''

என்றபடி வெளியே புறப்படத் தயாராகி விட்டவர் முன்னால், மைதிலி மூச்சிரைக்க ஓடிவந்து நின்றாள்.

''என்னம்மா எதுக்கு இப்படி ஓடிவரே?''

''அப்பா... அப்பா...''

''முதல்ல மூச்சை நன்னா விட்டு முடி அப்புறமா விஷயத்த சொல்.''

''அது வந்துப்பா... நம்ம தென்னந்தோப்பில ரெண்டு பேர் சாராயத்தை புதைச்சு வெச்சு அதை எடுத்துண்டு போகப் பார்த்தப்போ ரங்கன் அவாள்ள ஒருத்தனை பாஞ்சுப்

பிடிச்சுட்டான். அவனை கட்டியும் போட்டுருக்கான். நான் யதார்த்தமா போனப்பா உடனே உங்க கிட்ட சொல்லி போலீஸை வரவைக்கச் சொன்னான்பா... அதான்பா ஓடி வந்தேன்...''

''போலீஸா...'' வாயைப் பிளந்தார் சக்கரவர்த்தி.

''ஆமாம்ப்பா... அவனை போலீஸ்ல பிடிச்சுக் கொடுத்தா தானே நாளைக்கு நம்ம தோப்புல அவங்களும் அந்த கண்ராவிய புதைச்செல்லாம் வெக்கமாட்டாங்க?''

''அட என்னம்மா நீ... போலீசு கேசுன்னு போனா விஷயம் பேப்பர்ல வந்து பாக்கறவன்லாம் கேட்பான். அத்தோட சாராயம் காச்சற பசங்க எதுக்கும் துணிஞ்சவனுங்க வேற. நாளபின்ன ரங்கனை குத்திக் கொன்னாலும் கொன்னுடு வானுங்க.''

''இப்ப போலீசுக்குப் போகலேன்னாலும் அதாம்ப்பா நடக்கப் போறது. ஒருத்தன் தப்பிச்சு ஓடியிருக்கான். அவன்தன் ஆட்களோட வந்தா ரங்கன் அவ்வளவுதான்...''

''நாராயணா இது என்ன சோதனை...'' சக்கரவர்த்தி அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் தவிக்கவும் அதைத் திறந்து கிடக்கும் ஜன்னல் ஒன்றின் வழியாகப் பார்த்தபடியே இருந்தாள் ரேவதி. சீமா வெளியே போயிருந்தான். அவன் மட்டும் இருந் திருந்தால் ''பார்த்தேளா... வில்லங்கம் எப்படி வந்திருக்குன்னு - இதுக்குத்தான் அந்தத் தோப்பை வித்துட்டு அங்க ஒரு மல்டி காம்ப்ளக்ஸ் கட்டித் தொலையுங்கோன்னு அடிச்சுக்கறேன்.'' என்றிருப்பாள்.

மைதிலிக்கோ சக்கரவர்த்தியின் தேக்கமும் தடுமாற்றமும் எரிச்சலைத் தந்தது. தொலைபேசியை நோக்கிச் சென்று கார்ட்லெஸ் தொலைபேசியான அதை வேகமாக எடுத்து வந்து நீட்டினாள்.

''இல்லடா கண்ணு... போலீசுக்கெல்லாம் போக வேண்டாம். அந்த சாராயம் காச்சற பசங்க கிட்ட நானே போய் கால்ல விழுந்து கெஞ்சிக் கேட்டுக்கறேன். இந்த ரங்கன் அவாளை

மிரட்டுவான்னு பார்த்தா போலீஸ் வரை போகப் பாக்கறானே...! அவனுக்கென்ன... அப்பா அம்மா, அக்கா, தங்கைன்னு குடும்பமா குட்டியா...? மேல ஆகாசம் கீழே பூமி... நமக்கு அப்படியா?''

சக்கரவர்த்தி பேச்சோடு பேச்சாக தென்னந் தோப்பு நோக்கிப் புறப்பட ஆரம்பித்தார் மைதிலியும் உடன் செல்ல முயல ''நீயெல்லாம் அங்கு எதுக்கு வரே? பொம்மனாட்டிக்கு அங்க என்ன வேல... ஆத்தோட கிட, நான் பாத்துக்கறேன். அடுத்து யாரும் யார்கிட்டேயும் இந்த தோப்பு விவகாரத்தை பேசிண் டிருக்க வேண்டாம். இதெல்லாம் காதும் காதும் வெச்ச மாதிரி முடிய வேண்டிய விஷயம்...''

என்றவராக வராண்டாவில் கிடந்த அவரது செருப்பை எடுத்து மாட்டிக் கொண்டவர். அங்கேயே ஆணிக்காதில் தொங்கியபடி இருந்த குடையை எடுத்துக் கொண்டு வீதியில் இறங்கினார்.

மைதிலியால் பொறுக்க முடியவில்லை. ஓசைப் படாமல் பின்கொல்லை வழியாக அவள் அவரைப் பின் தொடரத் தீர்மானித்தவளாக கொல்லைப் பக்கம் செல்லத் தொடங்கினாள். ரேவதி எதிர்ப்பட்டு வெறித்தாள். மைதிலியும்...

''என்ன போலீஸ் அப்படி இப்படின்னு காதுல விழுந்தது...''

''போலீஸா... அதெல்லாம் ஒண்ணும் இல்லையே...''

''நன்னாவே சமாளிக்கிறே. இப்பக்கூட நீ கொல்லப் பக்கம் எதுக்குப் போறேனு எனக்குத் தெரியும். அவர்தான் இல்ல. துணைக்கு அனுப்ப... நீயாவது போ. அங்க அந்த சாராயக் காரனுங்க உங்கப்பாவை குத்திகித்தி வைக்கப் போறான்...'' என்று ஏற்றிவிட்டாள். **அவளே** மைதிலியை போகச் சொன்னது பிடித் திருந்தது. **ஆனால்,** அதன் உள் சூது மைதிலிக்குப் புரியவில்லை. அதை எல்லாம் புரிந்து கொள்ளும் கால அவகாசமும் அவளுக்கு இல்லை. ஓடத் தொடங்கினாள்.!

★★★

காவிரி நீரின் மேல் அசுரவேகத்தில் வந்தபடி இருந்தன அந்தப் பரிசல்கள்!

ஒவ்வொரு பரிசலிலும் நான்கு பேர்... ஒரு பரிசலில் ஏழுபேர்கூட இருந்தனர். கிருஷ்ண சக்கரம் போல சுழன்றபடி அது வந்த வேகமும் சக்கரவர்த்தியின் தோப்புக்குப் பின்புறமாய் கரையோரமாய் முட்டி மோதி அது நின்ற விதமும் அசுரத்தனமாக இருந்தது.

அதிலிருந்து திபுதிபுவென்று குதித்த அவ்வளவு பேருமே ஐந்தரை அடிக்குமேல்தான் இருந்தார்கள். தேக்கு போல உடம்பு பின் முதுகில் வேட்டி கட்டின பிடியில் கூர்மையான அரிவாள்கள் பதுங்கியிருந்தன. முன் பக்கம் ஒருவன் கூட சட்டைக்கு பட்டனைப் போடவில்லை.

அவர்கள் நீரில் குதித்து திபுதிபு என்று தோப்பு நோக்கி ஓடிய வேகமே அரட்டலாக இருந்தது. தான் பிடித்த சாராயக்காரனை மரத்தில் கட்டிப் போட்டுவிட்டு அருகிலேயே அந்த சாராய டின்னையும் வைத்துவிட்டு முன்பக்கமாய் பார்த்தபடி நின்று கொண்டிருந்த ரங்கன் சப்தம் கேட்டுத் திரும்பினான்.

திபுதிபுவென்று அவர்கள் தோப்பின் வேலியை ஒடித்துத் தள்ளியபடி உள்ளே நுழைந்து கொண்டிருந்தனர். நுழைந்த வேகத்தில் தங்கள் ஆள் கட்டப்பட்டிருக்கும் மரத்தை நெருங்கி அருகில் நின்றபடி இருந்த ரங்கனையும் சேர்த்துக் கொண்டு வட்டம் கட்டி நின்றனர்.

ரங்கன் அவர்களை வெறித்தான்.

அவர்களில் மொட்டைத் தலையும் பூனைக் கண்ணுமாய் இடும்பனும் இருந்தான். கொள்ளிடம் இடும்பன் என்றால் திருச்சி மதுவிலக்குப் பிரிவில் மிகவே பிரசித்தம். ஒரு மாசத்துக்கு பத்து லட்ச ரூபாய்க்கு வியாபாரம்! லஞ்சம் மட்டுமே அதில் மூன்று நான்கு லட்சம் போய்விடும். செலவு ஐம்பதாயிரம் கூட ஆகாது. நிகர லாபமாக ஐந்து லட்ச ரூபாய் தரும் தொழில் இது!

நம் நாட்டு ஜனாதிபதிக்குக் கூட இந்த அளவு வரவு கிடையாது. இப்படி ஒரு தொழிலுக்கு எதிராக யாராவது ஒரு துரும்பை கிள்ளிப் போட்டாலும் அவர்கள் என்ன ஆவார்கள் என்பது இடும்பனுக்கே தெரியாது. பலபேரை கொள்ளிடக்

கரையில் டயர்களை கொளுத்தும்போது சேர்த்துப் போட்டுக் கொளுத்தியிருக்கிறான்.

ரங்கனுக்கும் அதெல்லாம் தெரியும் இருந்தும் அவனுள் ஒருவித அச்சமில்லாததனம் அந்த இடும்பனைப் பார்த்து வெறிக்க விட்டது.

''என்னாடா முறைக்கறே... பொணந்தூக்கிப் பயலே... இப்ப உன்ன பொணமாக்கி தூக்கிட்டுப் போவ வந்துருக்கோம். மனசுக்குள்ள என்னா சினிமா ஹீரோன்னு நினைப்பா...?''

''நான் அப்படி எல்லாம் நினைக்கல. ஆனா நீ சினிமால வர்ற வில்லன் மாதிரி தான் பேசறே... அவங்க எப்படிக் கூட்டமா வருவாங்களோ அப்படியே வந்துருக்கே. நான் ஒரு ஆளு... என்னை சந்திக்க அருவாளும் கையுமா இத்தினி பேரா?'' ரங்கனும் எதிர்த்துக் கேட்டான்.

அதுதான் சமயம் என்கிற மாதிரி தோப்பின் முக்கிய நுழை வாசல் வழியாக உள்ளே நுழைந்து கொண்டிருந்தார் சக்கரவர்த்தி. அவரைப் பின்தொடர்வது தெரியாதபடி தொடர்ந்து கொண்டிருந் தாள் மைதிலி!

இடும்பனோ ரங்கன் கட்டிப் போட்டவனை அவிழ்த்து விட்டவனாக மதுவிலக்கு போலீஸ் அதிகாரி ஒருவருக்கே போன் போட்டு, போனை ரங்கன் எதிரிலும் நீட்டியவனாக ''பேசு... நீ யாரை கூட்டிக்கிட்டுவரச் சொல்லி ஒரு பொட்டச்சியை அனுப்பியிருக்கியோ... அவருதான்! சர்க்கிள் இன்ஸ்பெக்டரு. இப்பதான் அவர் மக கல்யாணத்துக்கு லட்ச ரூபாய்க்கு எட்டு பவுன்ல சங்கிலிய மொய்யா செஞ்சேன் பேசு...'' என்றான். அந்த சர்க்கிளும் ரங்கன் காதில் ஒலி வடிவில் பாய்ந்தார்.

''ஏம்பா தம்பி... என்ன இது இடும்பன்கிட்டபோய் மோதிக் கிட்டு. டிபார்ட்மெண்ட்ல இருக்கற நாங்களே எனக்கென்னனு இருக்கிறோம்... நீ என்னப்பா? ஆள் அம்புன்னு கூட்டமா இருக்கறவங்களையே இடும்பன் போட்டு வாங்கறவன். நீயோ ஒரு பொணந்தூக்கி - அனாதப்பய! அழகா அவன்கிட்ட சரக்கு வாங்கிக் குடிச்சிட்டு பொழுதைப் போக்காம இது என்னப்பா மோதிக்கிட்டு...''

- அவர் ஒரு தினுசாக மிரட்டாமல் மிரட்டினார். ரங்கன் அதற்கு மேல் அவர் பேச்சைக் கேட்கப் பிடிக்காமல் அந்த செல்போனைத் தூக்கி காவிரி நீருக்குள் போய் விழுமாறு எறிந்தான்.

இடும்பனுடைய கோபம் எகிற ஆரம்பித்தது!

14

'மாநிலத்தில் ஒரு கோயில்
மன்னுயிர்க்கும் ஒரு கோயில்
நலம்தரும் சொல்லுக்கு ஒரு கோயில்
வலம் வருவார்க்கு பலம் தரும் ஒருகோயில்
நிலமிசை நீர்மாலையணிந்த பெரியகோயில்
உளம் நெகிழ்த்தும் திருவரங்கத் திருக்கோயிலே!'

உச்சபட்ச கோபத்துடன் இடும்பன் பதிலுக்கு ரங்கனின் கன்னத்தில் அறைந்தான். ரங்கனும் பதிலுக்கு அறைந்தான். இடும்பன் முன்னே எல்லாரும் நின்று பேசவே பயப்படுவார்கள். அப்படிப்பட்டவனை ஒருவன் அடித்து விட்டான் எனும் போது அவனது அவ்வளவு சகாக்களுக்கும் புடைத்துக் கொண்டு வந்தது கோபம்.

கச்சிதமாக் இந்த வேளையில் தோப்புக்குள் ஓட்டமும் நடையுமாக அவர்களை நோக்கி வந்தபடி இருந்தார் சக்கரவர்த்தி அவர் வருவதைப் பார்த்த நிலையில் அவ்வளவு பேர்களும் ரங்கன் முன் ஒரு மூட்டை போல விழுந்து அவனை அமுக்கிப் பிடிக்க முனைய, சக்கரவர்த்தி கத்த தொடங்கினார் ''டேய் டேய் விட்டுருங்கடா... வேண்டாண்டா... ரங்கா என்ன இது அநியாயம். டேய் அப்பா... ஐய்யோ...'' சக்கரவர்த்தியின் குரல் தந்தி அடித்தது. அவர்கள் காதிலேயே அது விழவில்லை. பின்னாலேயே ஓட்டமும் நடையுமாக வந்த மைதிலியும் அந்தக் காட்சியைப் பார்த்து விட்டுப் பதைத்து போனாள்.

ஆனால் ரங்கன் அவ்வளவு சுலபமாக அவர்களிடம் சிக்கத் தயாராக இல்லை. கீழே விழுந்த நிலையில் தந்திரமாக கையில் மணலை அள்ளி எல்லோர் கண்களிலும் படும்படி தூற்றினான். அதுவும் நன்றாக வேலை செய்தது!

எல்லாரும் கண்களைக் கசக்கிக் கொண்டு நிற்கும்போது இடும்பனிடம் ஒரு வேகமான முடிவு. முன்பு எறிந்த கத்தி அவன் காலடியில்தான் கிடந்தது. அதை வேகமாக எடுத்துக் கொண்டு சக்கரவர்த்தியை நோக்கிப் பாய்ந்தான்.

''ஏய்யா எங்களை எல்லாம் அடிக்க ஒரு பொணந்தூக்கியையே நீ வேலைக்கு வெச்சுட்டியா?'' என்றபடி அவன் பாய்ந்த வேகம் மைதிலியை அலறச் செய்தது.

''அப்பா...!'' என்று அலறினாள். நல்லவேளை ரங்கன் எழுந்து சக்கரவர்த்தியைத் தள்ளி விட்டுத் திரும்பின நொடி அந்தக் கத்தி ரங்கனின் அடிவயிற்றில் ஏறியது!

அதைப் பார்த்த மைதிலிக்கு மயக்கம் வராத குறை. 'சக்கரவர்த்தியிடம் ஸ்தம்பிப்பு. இடும்பனோ அதற்குமேல் அங்கே ஒரு வினாடி கூட நிற்கத் தயாராக இல்லை.

''டேய் வாங்கடா...'' என்று திரும்பி ஓடத் தொடங்கினான். காவிரி ஆற்று நீரில் அவர்கள் இறங்கிய விதமும் முட்டிக் கொண்டு கிடந்த பரிசலில் ஏறிய வேகமும் அசுரத்தனமாக இருந்தது.

ரங்கன், தோப்புக்குள் மண்மேல் இரத்தப்பாம்பு நெளிய அப்படியே சுருண்டு கிடந்தான். தொட்டுத்தூக்கி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லத் தோன்றிய போதும் 'பார்ப்பவர்கள் எல்லாம் என்ன ஏது என்று கேட்பார்களே' என்கிற கேள்வி அவர் முன் எழும்பி அவரைத் தடுத்து நிறுத்தியது.

''ஐயோ அப்பா அவரைத் தூக்குங்கோ... சீக்கிரமா டாக்டர் கிட்ட கூட்டிண்டு போவோம்...'' மைதிலி கூக்குரலிட்டாள்.

''அது.. அது... அது...'' சக்கரவர்த்திக்கு ஏனோ காலே வர வில்லை. பொறுமையிழந்த மைதிலி ஓடிப்போய் சட்டென்று தூக்கி அவனைத் தன் மடிமேல் போட்டுக் கொண்டாள். அவனோ அவளது ஸ்பரிசத்தைத் தவிர்க்க விரும்பி வேகமாக

அந்த நிலையிலும் எழுந்து நின்றான். இருவரையும் பார்த்து "சாமி நீங்க அம்மாவோட முதல்ல திரும்பிப் போங்க... எனக்கு ஒண்ணு மில்லை. நான் பாத்துக்கறேன்" என்று ஹீன சுரத்தில் சொன்னான்.

"இ... இந்த நிலைல நீ எப்படிப்பா டாக்டர் கிட்ட போவே. நா... நான்போய் டாக்டரை கூட்டிண்டு வரட்டுமா?"

"வே... வேண்டாம் சாமி. நீங்க போங்க அம்மாக்கு இன்னும் கல்யாணம் ஆகலை. இந்த ரசாபாசத்தோட அவங்கள சம்பந்தப் படுத்தி கண்டபடி கதை கட்ட ஆரம்பிச்சிடுவாங்க. நீங்களும் போயிடுங்க. நான் என்னைப் பாத்துக்கறேன்..."

சொன்ன வேகத்தில் இடுப்பு வேட்டியை அவிழ்த்து அப்படியே வயிற்று மேல் இறுக்கச் சுற்றிக் கொண்டு பட்டாபட்டி அண்டர் வேர் வெளியில் தெரிய தடுமாறியபடியே நடந்து ஆற்றை நோக்கிச் சென்றான். சக்கரவர்த்தி பார்த்தபடியே நிற்க ஆற்றுக் குள்ளும் இறங்கியவன் அப்படியே அந்தப்பக்கத்துக் கரைப்பக்கம் ஏறி குளித்தலை மெயின்ரோட்டைப் பிடிக்கப் பார்த்தான்.

மைதிலிக்கு அழுகை பொங்கிக் கொண்டு வந்தது!

★★★

வீட்டு வாசலிலேயே வான்கோழி போல தலையை உயர்த்தி உயர்த்தி வெளியே பார்த்தபடி இருந்தாள் ரேவதி. அவளுக்கு சில அடிகள் பின்னாலே ஜானகி. அவள் முகத்திலும் பதற்றம்.

முகம் கழுவிக்கொண்டு டவலால் கழுத்துப் பாகத்தை ஒத்தியபடியே வந்த சீமாவிடம் "செத்தப் போய் பாத்துட்டு வாடா... அப்பா தனியா போறார். நானும் போறேன்னு பின்னாலேயே மைதிலியும் போயிருக்கா. தோப்புல என்ன நடந்ததோ எது நடந்ததோன்னு பதைக்கறதுடா மனசு." என்று துடித்தாள் ஜானகி.

"இவர் எதுக்குமா வெடுக்கு வெடுக்குன்னு விழுந்தடிச்சிண்டு போகணும். போலீசுக்கு போன் பண்ணிச் சொன்னா அவா பாத்துக்கமாட்டா...?"

சீமா பதற்றமேயின்றிக் கேட்டான்.

"ஏண்டா நீ புரிஞ்சு தான் பேசறியாய... போலீசுக்குன்னு போனா அது பேப்பர் வரை போகும் கடைசில 'அய்யர் தோப்பில் சாராயம்'னு கொட்ட எழுத்துல போடுவான். பாக்கறவாள்ளாம் கேப்பாடா. பதில் சொல்லமுடியுமாடா நம்மால...?

இங்க நம்ம தெருவுல ஒரு போலீஸ்காரர் யூனிஃபார்மோட தன் சிநேகிதனைப் பாக்கறதுக்கு வந்திருக்கார். உடனே தெருவே 'அந்த ஆத்துக்கு போலீஸ் வந்துருக்கு. அங்க ஏற்கெனவே மாமியார் மாட்டுப் பொண்ணு தகராறு. அது அபுதாபி வரை போயிடுத்தாட்டம் இருக்கு'ன்னு பேச ஆரம்பிச்சிடித்து...

ஒருத்தி ஒரு படி மேலபோய் 'யார் ஆத்துக்குப் போலீஸ் வந்ததோ அந்த ஆத்து மாட்டுப் பொண்ணு தூக்கு மாட்டிக்கப் போய் போலீஸ் காரர் வந்து கதவை உடைச்சு கடைசி நிமிஷத்துல காப்பாத்திட்டார்'னுல்லாம் பேசிட்டா! கடைசில பார்த்தா அந்த போலீஸ்காரரும் அவாத்துப் பையனும் சிரிச்சுப் பேசிண்டு பைக்ல ஏறிண்டு போனா! ஒண்ணுமேயில்லாத ஒரு விஷயத்துக்கே இந்த அளவு கை கால் வைக்கறவா, நம்ம தோப்பு விஷயம் தெரிஞ்சா எந்த அளவு பேசுவான்னு என்னால கற்பனையே பண்ணிப் பார்க்க முடியலடா"

என்று மூக்கைச் சிந்தி ஒரு பாராயணம் படித்து முடித்தாள் ஜானகி.

"சரி சரி..." என்று சட்டையை மாட்டிக் கொண்டு கிளம்பப் பார்த்தவனை பார்வையாலேயே தடுத்தாள் ரேவதி.

"என்னடி...?"

"அதுதான் நம்ம தோப்பில்லயே... நீங்க எதுக்குப் போறேள்?"

"என்னடி ஃபுல்டாஸ்ல பால் போட்றியா, நகருடி", அவன் அவளை அலட்சியப்படுத்தி விட்டு வாசலைத் தாண்டும் போது நல்லவேளையாக சக்கரவர்த்தியும் மைதிலியும் வந்து விட்டனர்.

சக்கரவர்த்தி ஊஞ்சலில் அமர்ந்தவராக அப்படியே இறுக்கிக் கண்களை மூடிக்கொண்டார். உதடிரண்டும் "தப்புப் பண்ணிட்டேன்... தப்புப் பண்ணிட்டேன். பாவம் ரங்கன். அவனை நான் அப்படியே விட்டுட்டு வந்துருக்கக் கூடாது" என்றது. மைதிலி முகத்தில் ஒருவித அசூயை.

''அப்பா.. என்னப்பா ஆச்சு..'' சீமா ஆரம்பிக்க ஜானகியும் தொடர்ந்தாள்.

''ஏன்னா என்னாச்சு... ஆமா மைதிலி என்னடி இது புடவைல ரத்தம்?''

''கத்தில குத்தினா ரத்தம் வராம பாலாம்மா வரும்?'' மைதிலி பதிலுக்குக் கேட்டதில் ஒரு பருமனான கோபம் தெரிந்தது.

ரேவதி மிகவே ஆவலானாள்.

''யாரை யார் கத்தியால குத்தினா... தோப்புல கொலை கிலை விழுந்துடுத்தா? இதுக்குத்தான் அதை வித்து தலை முழுகிட்டு... இல்ல அழிச்சிட்டு அங்க ஒரு காம்ப்ளக்ஸ் பில்டிங் கட்டலாம்னேன். என் பேச்ச யார் கேட்டா?''

ரேவதியின் அவசரம் சக்கரவர்த்தியை தீயை மிதித்தது போல நிமிர்த்தியது.

''அம்மாடி இந்தாத்துக் குளவிளக்கே! கொஞ்சம் வாய மூடிண்டு சும்மா இருக்கியா? எப்ப எது சிக்கும் அதை வெச்சுப் பத்தவைக்கலாம்னே இருக்கியே...

நீ ஆசைப்பட்ட மாதிரி கொலை விழத்தான் இருந்தது. நானும் போய் சேர்ந்திருக்கணும். ஆனா என் வயித்துல ஏற வேண்டிய கத்தியைத் தன் வயத்துல வாங்கிண்டு என்னைக் காப்பாத்திட்டான் ரங்கன். ஆனா நான்தான் இதோ இந்த பொண்ணோட கல்யாணம் அது இதுன்னு கண்ட எழவுகளை மனசுல நினைச்சுண்டு அவனைக் காப்பாத்தாம வந்துட்டேன்...''

''ஐய்யய்யோ என்னன்னா சொல்றேள்? அப்ப ரங்கனை அந்த சாராயக்காரன் கத்தில குத்திட்டானா?''

''ஆமாம்மா... சுருண்டு புழுமாதிரி தரைல நெளிஞ்சவன டாக்டர் கிட்ட கூட்டிண்டு போகிற தைரியம் கூட எனக்கு இல்ல. ஸ்தம்பிச்சு நின்னுட்டேன். ஆனா அவன் அந்த நிலையிலயும் எங்களப் போகச் சொல்லிட்டு தடுமாறிண்டே ஆத்துல இறங்கிட்டான்.

எனக்கு மேல அவன் ஊரைப் பற்றித் தெரிஞ்சு வெச்சுண்டுருக்கான். இந்த மாதிரி விஷயத்துல இப்ப நம்ம குடும்பம்

சிக்கிக்கக் கூடாதுங்கறது அவன் எண்ணமா இருக்கு... மைதிலி கல்யாணம் இன்னும் நடக்காத நிலைல சாராயக்காரா கத்தியால குத்தினான்னும் அதுக்கு சாட்சி மைதிலின்னும் ஆகி அடிக்கடி கோர்ட்டுபடி ஏறி இறங்கினா, அவ எதிர்காலம் பாதிக்கப் படலாம்கற அளவுக்கு அவனுக்கு யோசிக்கத் தெரிஞ்சிருக்கு...''

என்று சக்கரவர்த்தி சொன்னபோது, அவர் கண்களில் கண்ணீர் பெருகி விட்டது. அடுத்த நொடி ஜானகி ரேவதியைத் தான் பார்த்தாள். அவள்தானே மைதிலியைத் தூண்டிவிட்டு அவர் பின்னாலேயே போக வைத்தவள்!

ரேவதிக்கும் அவள் பார்வையின் பொருள் தெரிந்தது. அதற்கு மேல் அங்கே இருந்தால் அடுத்தடுத்து சிக்கிக் கொள்ள வேண்டி வரலாம் என்று யோசித்தாள்.

''எப்படியோ இந்த மட்டுல அந்த ரங்கன் புண்ணியத்தக் கட்டிண்டானே சந்தோஷம்.. சரின்னா நான்போய் பாட்டியோட பத்தா நாள் காரியக் கடுதாசிகளை போஸ்ட் பாக்ஸ்ல போட்டுட்டு வந்துட்றேன்.'' என்றபடியே ரேவதி நழுவத் தொடங்கினாள். அவள் வாசலை எட்டியபோது இடுப்புக் குழந்தையுடன் பழைய குத்தகைக்காரன் கந்தசாமியோடு அவன் மனைவி நின்று கொண்டிருந்தாள். ரேவதி, கந்தசாமியை ஒரு திநுசாகப் பார்த்தாள் ''அம்மா ஐயா இருக்காருங்களா?'' என்று கந்தசாமி மனைவி செவ்வந்தி கேட்டிட, ''நீ என்னத்தத் தோப்ப பாத்துண்டே? சாராயப் புதையல், கத்திக்குத்துன்னு அங்க ஒரே ரசாபாசம்'' - என்று நடந்த விஷயத்தை நெற்றி வகிடு எடுப்பது போல எடுத்தாள்.

கந்தசாமிக்கு பகீர் என்றது!

சப்தம் கேட்டு சக்கரவர்த்தியே வரவும் இவ்வளவு போதும் என்பது போல ரேவதி வீதியில இறங்கிவிட அவர் அருகே வந்த நொடி 'பொதேல்' என்று காலில் விழுந்தாள் கந்தசாமியின் மனைவி. கைக் குழந்தையோடு அவள் விழுந்த விதமே பரிதாபமாக இருந்தது. அப்படியே கந்தசாமியைப் பார்த்து அவனையும் விழச் சொன்னாள்.

அவனும் விழுந்தான்!

"அட என்னம்மா இது... எழுந்துருங்கோ. எழுந்துருங்கோ" - சக்கரவர்த்தி தர்மசங்கடப்பட இருவரும் எழுந்து கொண்டனர்.

"ஐயா எங்கள பெரிய மனசு பண்ணி மன்னிக்கணும் தென்னந்தோப்பு விசயத்துல இவர் பண்ணது பெரிய தப்பு தான்யா. புத்திகெட்டுப் போய் இந்த மனுசன் திருட்டுத்தனம் பண்ணிப்புட்டார். இனி அந்த மாதிரி தப்பெல்லாம் பண்ண மாட்டார் இந்தப் புள்ள மேல சத்தியம் பண்ணித்தரச்சொல்றேன். நீங்க பழையபடி தோப்புக் குத்தகையை இவருக்கே தரணும்" - என்று வந்த விஷயத்தையும் சொன்னாள்.

சக்கரவர்த்தியின் நெற்றியில் வரிகள் விழுந்து அவரை யோசிக்க வைத்தது.

"ஆமாங்கய்யா என்னை மன்னிச்சிடுங்க... அதே சமயம் நம்ம தோப்புல கத்திக்குத்து அப்படி இப்படின்னு நம்ம வீட்டம்மா சொன்னாங்க. என்னங்கய்யா ஏதாவது தப்பு நடந்துருச்சிங்களா?"

-கந்தசாமியே நேராக விஷயத்துக்கு வந்தான். சக்கரவர்த்தியின் தர்மசங்கடம் இரு மடங்காகியது. கந்தசாமியை இழுத்துக்கட்டா விட்டால் அவன் மூலம் விஷயம் வெளியே பரவி நாலுபேர் நாலு விதமாய்ப் பேசும் ஆபத்தை படு வேகமாக உணர்ந்தவர் சட்டென்று ஒரு முடிவுக்கு வந்தார்.

"கந்தசாமி உனக்கே குத்தகையைக் கொடுத்துறேன் ஆனா நீ ரங்கனோட சிநேகமா இருக்கணும் இப்ப நீ எனக்கு ஒரு உதவியும் செய்யணும்"

"ஐயா என்னய்யா செய்யணும் சொல்லுங்க?"

"அது ஒண்ணுமில்ல... இந்த சாராயக்கார இடும்பன் கோஷ்டி தோப்புக்குள்ள வந்துருக்கு - ரங்கன் தடுத்துருக்கான் கை கலந்ததுல ரங்கனுக்கு வயத்துல லேசா காயம்...

"ஐய்யய்யோ...!"

"சத்தம் போடாதே... இந்த விஷயம் வெளியே ஒருத்தருக்கும் தெரியக் கூடாது. தெரிஞ்சது, உனக்குக் குத்தகை கிடையாது. நான் இப்ப உனக்கு பணம் தரேன்... நீ ரங்கனைப் போய் பார்த்து அவன் வைத்தியச் செலவுக்கு அதைக் கொடுத்துடு. அதோட நீ கூட இருந்து அவனை டாக்டர் கிட்ட கூட்டிட்டுப்போ...!

டாக்டர் எப்படி ஆச்சுன்னு கேட்டா மரம் ஏறும் போது கீழே விழுந்ததுல இடுப்புல இருந்த கத்தி, குத்திடுத்து அப்படி இப்படின்னு ஏதாவது சொல்லி சமாளிச்சுடு... என்ன?"

சக்கரவர்த்தி சொன்ன கையோடு உள்ளே போய் சில ஆயிரங்களோடு வந்தவர் அதைக் கந்தசாமியிடம் தந்தார்.

அவனும் சந்தோஷமாக வாங்கிக் கொண்டான்.

"யோவ்... பண்ணினதப்ப திருத்திக்க இது ஒரு சந்தர்ப்பம், போய் அதுக்கு எவ்வளவு உபசாரம் பண்ண முடியுமோ பண்ணு! ரங்கன் நியாயஸ்தன். உன்னை மாதிரி இல்லை." என்றாள் இடையில் நுழைந்த செவ்வந்தியும்.

கந்தசாமியும் பணத்தை வாங்கிக் கொண்டு வேகமானான்!

தபால் ஆபீஸ்!

ரேவதி தபால்களை பெட்டியில் போட்டுவிட்டு திரும்பியபோது எதிரில் வத்சலா!

அவள் வரையில் கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தது போல இருந்தது!

15

'ஆயிரம் பாடல்கள் நாலாயிரம் பாடல்கள்...
நாரணன் கழலடியே அதன் நலமிகு தேடல்கள்!
பூரணன் அவனே என்பதன்றோ தேடலின்
காரணங்கள்...
காரணனும் அவனாதனால் தானிந்த கவி வரிகள்!
ஓரணுவும் அவனின்றேல் அசைந்திடுமோ உலகில்?
சேரணும் உயிர்களெல்லாம் அவன் திவ்விய
திருவடியில்!'

★★★

ரேவதியைப் பார்த்த வத்சலா முகத்தில் ஒரு குபீர்ப் பிரகாசம்! ரேவதிக்கும் அப்போது அவள் இருக்கும் இருப்புக்கு ஒரு தூது தேவைப்பட்டது.

கிடைத்தாள் வத்சலா! அவளும் பேச்சைத் தொடங்கினாள் "அடடே சக்கரவர்த்தியார் மாட்டுப் பொண்ணா... எங்க இந்த பக்கம்?"

"போஸ்ட் ஆபீஸ் பக்கம் எதுக்கு வருவா மாமி... எல்லாம் தபால்களை போஸ்ட் பண்ணத்தான்...

"அட என்னடி கண்ணு நீ.. இந்த சீரங்கத்துலையே கோடீஸ்வரனாத்து மாட்டுப் பொண் நீ - நீயா இதுக்கெல்லாம் வரணும்? உன் மாமனாரும் மாமியாரும் ஆனாலும் கஞ்சம்... ஆத்து வேலைகளுக்குன்னு ஒருத்தரை வேலைக்கு வெச்சா என்ன...? இதே சீரங்கத்துல எத்தன கெழடுகள் திண்ணலை உக்காந்துண்டு சீட்டாடிண்டு இருக்கறதுகள்... அதுல ஒருத்தர் கூடவா வேலைக்கு வராம போயிடப்போறா?"

வத்சலா ஒரு முடிவோடு பேசுகிற மாதிரி தான் இருந்தது.

"அட நீங்க ஒண்ணு மாமி... என் மாமனார்க்கு என் நாத்தனார் கல்யாணமே ஒரு பெரிய கல்யாணமா இருக்கு. அவர்க்கு ஏது நாழி மத்த விஷங்கள நினைக்க?"

"மைதிலி கல்யாணம் அப்ப ஒரு பெரிய கிரகசாரம்னு சொல்..."

"கிரகசாரமா... அதுக்கு மேல ஒரு வார்த்தை இருந்தா அதையும் சொல்லலாம் கல்யாணம் பண்ணிக்க போறவனுக்கு தான் காவிரிக்கரை ஓரமா உள்ள தென்னந் தோப்புன்னா பாத்துக்குங் களேன்... அப்படியாவது வரன் வராதான்னு பாக்கறார் என் மாமனார். ஆனா அந்த தென்னந்தோப்பே இப்ப பெரிய விவகாரமான்னா இருக்கு..."

போஸ்ட் ஆபீஸ் வாசலிலேயே இருவரிடமும் கும்மியடித்து கோலாடும் கணக்காய் பேச்சுப் பரிவர்த்தனைகள் ஒரு உற்சாகம் போல தொடங்கிவிட்டன.

"என்ன ரேவதி அது விவகாரம்... தோப்பு உனக்கு எனக்குன்னு எதான சொத்துத் தகராறா?"

"அதுவும் தான்... வாஸ்தவத்துல ஒரே பிள்ளையான என் ஆத்துக்காரருக்குதான் அது சேரணும். ஆனா அதை மைதிலிய கல்யாணம் பண்ணிக்க போறவனுக்குத்தான்னு நிர்மானமா சொல்லிட்டார் என் மாமனார். ஆனா அவனை எவன் கல்யாணம் பண்ணின்டாலும் சரி, மூணு மாசம் சேர்ந்து வாழ முடியாது. அந்த அளவுக்கு களத்திர தோஷம், புத்ர தோஷம், சர்பதோஷம்னு ஒரு தோஷப் புதையலாவே அவ ஜாதகம் இருக்கு... அது அவருக்கு தெரியலியே...?"

ரேவதி வருத்தப்படுவது போல பேசி நிறுத்த வத்சலாவுக்குள் பேராசை பால் போல பொங்க ஆரம்பித்தது.

"ஸ்ரீதரா... உனக்கு மட்டும் மைதிலி கிடைச்சுட்டா நாம கோடீஸ்வராடா...!" என்று மனதுக்குள் உச்சி குளிர்ந்து போனாள். ஆனால் ரேவதி அதை அமுக்குவது போல அந்த கத்திக்குத்து சம்பவத்தையும் சொல்ல ஆரம்பித்து விட்டாள்.

"தோப்பு அவளுக்குத்தான்னு சொல்லி இருபத்திநாலு மணிநேரம் கூட ஆகல மாமி. தோப்புல காவல் காத்துண்டிருந்த காவக்காரன் ரங்கனுக்கு கத்திக் குத்து விழுந்துடுத்து. ஒரு சாராய கோஷ்டிக்கும் அவனுக்கும் தகராறு. விஷயம் வெளிய தெரியக் கூடாதுன்னு தவிக்கிறார் என் மாமனார். ஒரு பக்கம் பாட்டி யோட 'பத்து' வேற வரது. இந்தப்பக்கம் கத்திக்குத்து ரவுடிக்கும் பல்னு ஒரே ரசாபாசம். மொத்தத்துல எங்காத்துக்கு நேரமே சரியில்லை..."

எதை வெளியே பேசவே கூடாதோ அதை பேசி முடித்த பிறகே அவளுக்கும் கொஞ்சம் போல சமாதானம். கூடவே கொஞ்சம் பயமும் கூட... "மாமிமாமி... இதை நீங்க உங்களுக் குள்ள வெச்சுக்கோங்கோ... வெளிய தெரிஞ்சுடப் போறது. அப்புறம் என் மாமனார் என் முன்னால ஒரு கதகளியே ஆடிடுவார். நான் வரேன்..." என்றபடி நழுவ ஆரம்பித்தாள்.

வத்சலாவுக்கோ அவள் ஒரு நல்ல வழியைக் காட்டிவிட்டு போகிறார் போல் தான் இருந்தது.

★★★

வெற்றிலையும் சுண்ணாம்புமாக வெளியே திண்ணையில் உட்கார்ந்து கொண்டிருந்தார் தேசிகன். வெற்றிலையில் சுண்ணாம்பைத் தடவுவது என்பது ஒரு கலை. அதில் கூட சாஸ்த்ரம் இருக்கிறது! வெற்றிலையின் முன்பக்கம் தடவலில் ஒரு அர்த்தம். பின்பக்கம் தடவினால் இன்னொரு அர்த்தம். எந்தப் பக்கம் தடவவேண்டும் என்பதில் ஒரு குழப்பம் அவருக்கு வந்து விடும். வெற்றிலையை திருப்பித் திருப்பி பார்ப்பார்.

'ச்சே... சுண்ணாம்பு தடவறதுல கூட நம்மளவா ஒரு சாஸ்த்ரத்தை சொல்லி வெச்சு பிராணனை வாங்கறா. இதுல முன்னால தடவினா தரித்ரம். பின்னால் தடவினா செல்வம்னு அபிப்ராயம் வேற. தரித்ரமும் செல்வமும் சுண்ணாம்புலயும் வெத்தலயிலையுமா இருக்கு?' என்று முனங்கிக் கொண்டே சுண்ணாம்பை இரண்டு பக்கமும் தடவி கடவாய்க்குள் அதை சுருட்டி அடக்கி பற்களால் வதைத்து அதன் காரமான சாற்றை ஸ்லாகித்து உள்வாங்கி கொஞ்சமாய் கண்கள் செருகிப் போய் ஒரு வித அனுபவிப்பில் ஆழ்ந்த போது எதிரில் கச்சிதமாய் வந்து நின்றாள் வத்சலா. கையில் வயர் கூடை. அதுக்குள்ளே அரைகிலோவுக்கு சாரதி காபியும் ஒரு கொத்துமல்லிக் கட்டும் இருந்தது.

''வெத்தலயும் கையுமா உக்காந்தாச்சா?''

''ஏண்டி, என்ன விஷயம்?''

''கடத் தெருவுல சக்கரவர்த்தியண்ணா மாட்டுப்பொண்ணு ரேவதிய பாத்தேன்..''

''அதுக்கென்ன?''

''ஏன் இதை கொஞ்சம் சுவாரஸ்யமா கேக்கக் கூடாதா? நான் என்ன அந்தக் காலத்து அல்லி அரசாணி மாலை கதையா சொல்றேன்?''

''நீ அப்படி எல்லாம் சுவாரஸ்யமா பேசறவளே இல்லையே வத்சலா.''

''இந்த கிருத்தனத்துக்கு ஒண்ணும் கொறச்சலில்ல. விஷயத்தை கேளுங்கோ.. அண்ணாவோட தென்னந்தோப்பு மைதிலிய

கல்யாணம் பண்ணிக்கப் போறவனுக்குதான். அண்ணாவே சொல்லிட்டாராம். அப்புறம் அந்த தென்னந்தோப்புலயும் ஏதோ ரசாபாசம். இந்த பொணந்தூக்கி ரங்கன் இல்ல ரங்கன்...''

அவள் ரங்கனிடம் வந்து நின்றாள். தேசிகனும் சுண்டி விட்ட மாதிரி நிமிர்ந்தார்.

''ரங்கனுக்கு என்னடி?''

''அவனை ரவுடிப் பசங்க கத்தியால குத்திட்டாளாம்ல...?''

''ஐய்யய்யோ...''

''உங்களுக்கு ஏன் ஷாக் அடிக்கறது. என்னமோ நம்ம ஸூதேரனை குத்திட்ட மாதிரி ஐய்யய்யோங்கறேள்.''

''அது... அது... அது சரி ரங்கனுக்கு அப்புறம் என்ன ஆச்சு?''

''யாருக்கு தெரியும்? உயிரோட இருக்கானோ இல்ல போய்ச் சேர்ந்துட்டானோ... போனாக்கூட தேவலை! ஏன்னா அந்த தென்னந்தோப்பும் ராசியில்லன்னு ஆயிடும். அதை அண்ணா ஒருவேளை விக்க ஆசைப்பட்டாலும் அவ்வளவு சுலபத்துல நடக்காது கொலை நடந்த தோப்புன்னு ஊர் பூரா பேச ஆரம்பிச் சிடுவா. எனக்கும் 'நான் இருக்கேண்ணா உங்களுக்குன்னு' சொல்ல சௌகர்யமா போயிடும்.''

வத்சலா தன் ஆசை மிகுந்த அடிமனதை காட்டியபடியே உள்ளே போனாள். தேசிகனுக்கு ரசமான வெற்றிலைச் சுவை கசந்து வடிந்தது. அப்படியே ஒரு ஓரமாக காரி உமிழ்ந்து விட்டு சக்கரவர்த்தியைப் பார்க்க புறப்பட்டார்.

கால்களில் அப்படி ஒரு வேகம்.

★★★

காவிரிக்கரை ஓர கல்மண்டபம் மாந்தோப்பு, மந்தாகிழவியின் இட்லிக்கடை என்று கந்தசாமி தன் சைக்கிளில் ரங்கனைத் தேடித் தேடி இறங்கிக் கொண்டிருந்தான்.

ஜி.எச்-சுக்கு போய் தானாக அட்மிட் ஆகியிருப்பானோ என்றும் கேட்டுக் கொண்டவன், ஆற்றோடு செத்துப்போய் பிணமாய் மிதக்க வாய்ப்பிருப்பதாகவும் கருதிக் கொண்டான்.

கல்லணை ரோடில் ஒரு கரும்பு லாரி திணறலோடு வந்து கொண்டிருந்தது. கைகாட்டி அதை தடுத்து நிறுத்திக் கேட்டான்.

''ஏங்க வழில காவிரிக் கரை ஓரமா பொணம் எதுவும் ஒதுங்கிக் கிடக்கலையே...?''

''இல்லையே... ஏம்ப்பா அம்மா மண்டபத்துல யாராவது சுழல்ல சிக்கிட்டாங்களா?''

''இல்ல.. அ.. ஆமாம்..''

''என்ன இல்ல ஆமான்னுகிட்டு... என்கிட்ட கேக்கற நேரம் ரங்கன் கிட்ட போய் கேட்டா அவன் ஒரு பாடி எங்க எப்படி ஒதுங்கும்னு ஸ்கெட்ச் போட்டுச் சொல்வானே....''

அந்த டிரைவருக்கு ரங்கனை தெரிந்திருந்ததுதான் ஆச்சரியம். கேட்டதே அவனைத்தான் என்றால் டிரைவருக்கு எப்படி இருக்கும்? நினைத்ததை கேட்கவும் செய்தான்.

''நான் இப்ப கேட்டதே அவனைத்தான்... கத்திக்குத்தோட ஆத்துல இறங்கினவன் உசுரோட இருக்கானா இல்லை பொண மாயிட்டானான்னே தெரியல...'' -என்றபடி தன் சைக்கிளை திரும்பவும் மிதிக்கத் தொடங்கினான். கரும்புலாரி டிரைவருக்கு பகீர் என்றது.

சைக்கிளில் சிறிது தூரம்வரை சென்றுவிட்ட கந்தசாமிக்குள் சட்டென்று பொறி தட்டினது போல ஒரு எண்ணம்.

'குளித்தலை மெயின்ரோட்டில் ஒரு நாட்டு வைத்தியர் இருக்கிறார். ரங்கன் உடம்புக்கு ஏதாவது என்றால் அவரிடம்தான் போவான் என்றும் தெரியும். ஒருவேளை அவரைத் தேடி போயிருப்பானோ? அவன் அங்கே இல்லை என்றால் ஆள் அவுட் என்று முடிவு செய்ய வேண்டியதுதான்...!'

கந்தசாமியின் சைக்கிள் குளித்தலை மெயின் ரோடு நோக்கி திரும்ப ஆரம்பித்தது.

★★★

தேசிகாச்சாரி வந்த வேகத்தைப் பார்த்து விடைத்துப்போய் விட்டார் சக்கரவர்த்தி.

''அண்ணா... அண்ணா...''

''என்ன தேசி.. நாய் கீய் துரத்தித்தா என்ன, எதுக்கு இத்தனை வேகம்?''

''இல்லண்ணா... ஆமா நம்ம ரங்கனை யாரோ ரவுடிப் பசங்க கத்தியால குத்திட்டாளாமே..?''

தேசிக்காச்சாரி எடுத்த எடுப்பில் தொட்ட விஷயம், சக்கரவர்த்தி மேல் தெரு விளக்கு கம்பத்தின் ஹை வோல்டேஜ் வயரே அறுந்து அவர் மேலே விழுந்த மாதிரி ஆக்கியது.

'சர்தான்... விஷயம் உன் காதுவரை வந்துடுத்தா?'

''வத்சலா தான் சொன்னா... அவளுக்கு உங்க மாட்டுப் பொண் ரேவதிதான் சொன்னான்னா...!''

அந்த பதில் சக்கரவர்த்தியை ஒரு அப்பளமாக்கிட அவரும் நொறுங்கிப் போனார். அப்பொழுதுதான் உள் நுழைந்திருந்த ரேவதியும் அதைக் கேட்டு அதிர்ந்தாள்.

பூஜை அறைக்குள் ரங்கனுக்கு பெரிதாக எதுவும் ஆகிவிடக் கூடாது என்று நெய்விளக்கு போட்டபடி இருந்த மைதிலிக்கும் அதிர்ச்சிதான்.

சக்கரவர்த்தியிடம் ஒரு வேகம் ஆரம்பமானது. ''அம்மா, மாட்டுப் பொண்ணே செத்த வரியா இப்படி?''

என்று அழைக்க அவளும் அவர் எதிரில் சற்று பயந்த நிலையில் வந்து நின்றாள்.

''நீ லெட்டரும் கையுமா கிளம்பும்போதே நினைச்சேன். ஆமா விஷயத்தை வத்சலாகிட்ட மட்டும்தான் சொன்னியா, இல்ல தெருவுல எல்லாரையும் பார்த்துப் பார்த்து சொன்னியா?''

''ஐய்யய்யோ... மாமிகிட்ட மட்டும்தான் பேசினேன். அதுவும் ஏதோ ஞாபகத்துல பேசிட்டேன்..''

''ஏதோ ஞாபகமா.. மைதிலி அவ வாழ்க்கைல கொஞ்சம் கூட உருப்பட்டுடக் கூடாதுங்கற ஞாபகத்துலன்னு சும்மா தைரியமாத் தான் சொல்லேன்..''

''என்ன மாமா இது. இப்படிப் பேசறேள்... அவ எங்க இருந்தாலும் நன்னா இருக்கணும்னு தான் மாமா நான் நினைக்கறேன்..''

''அப்படின்னு உன் உதடு சொல்றது. ஆனா உன் மனசுல நீ என்ன நினைச்சுண்டிருக்கேன்னு எனக்கு நன்னா தெரியும்..''

சக்கரவர்த்தியின் பாய்ச்சல் தேசிகாச்சாரியை நெருடியது.

''அண்ணா.. தப்பு என் மேலதான்.. நான்தான் ஒரு அவசரத்துல நாலாபக்கமும் யோசிக்காம வந்து கேட்டுட்டேன். என்ன மன்னிச்சிடுங்கோ..''

''எதுக்கு தேசி மன்னிப்பெல்லாம் கேட்கறே. உன் பேர்ல ஒரு தப்பும் இல்ல. பூனைய மடில கட்டிண்டு ஜோசியம் பார்த்த கணக்கா இந்த வீட்லையே வினையை வெச்சுண்டு நான் ரசாபாசங்களுக்கு பயந்தது என் தப்புதான்.''

சக்கரவர்த்தியின் ஆயாசத்தின் போதே வாசலில் எங்கோ போயிருந்த சீமா வாசலில் காரை ஓரமாக நிறுத்தியபடி இறங்கி வந்து கொண்டிருந்தான். அவன் முகத்திலும் ஒரு ஆவேசம். வந்த வேகத்தில் ரேவதியின் கன்னத்தில் மாறி மாறி அறைய ஆரம்பித்தான்.

''நாசமாய் போனவளே.. ஏண்டி இப்படி இருக்கே? வாய வெச்சுண்டு சும்மா இருக்க மாட்டே... ஊர்ல யார்கிட்ட என்னத்தடி சொன்னே.. நம்ம தோப்புல ரங்கனை குத்திக் கொன்னு தோப்புக்குள்ளையே புதைச்சுட்டோம்னு பேசிக்கறாடி. 'எனக்கு ஒண்ணுமில்ல'ன்னு அவன் மட்டும் வரலை, நாம அத்தனை பேரும் கம்பி எண்ணனும்டி.... இதுக்கா நீ வெளியபோனே?''

அடிக்கும்போதே அவன் கேட்ட கேள்விகள் அவன் கோபத்துக்கான காரணத்தை எல்லாருக்கும் உணர்த்தி விட்டது. தேசிகாச்சாரி மட்டும் வேகமானார். ''அப்பா சீமா.. நீ கேள்விப்பட்ட விஷயம்லாம் என் ஆத்துக்காரி உபயமாதான் இருக்கணும் ஒரு விஷயத்தை கண் காது மூக்கு வெச்சு உருவாரமா படுவேகமா தெருவுல விட்றதுல அவ பி.எச்டியே வாங்கினவ' -என்று அவர் சமாதானம் செய்ய முனையும்போது

தொலைபேசியின் அமட்டல். சக்கரவர்த்தி மெல்ல அதனருகே சென்று எடுத்து காதைக் கொடுத்தார். யார் என்ன பேசினார்களோ தெரியாது அவருடைய கண்களிரண்டும் அகண்டு கொள்ள ரிசீவர் அவர் கைகளில் இருந்தும் நழுவியது!

16



அந்த தொலைபேசி சக்கரவர்த்தியின் கைகளில் இருந்து நழுவி விழுந்து தொங்கியதை வைத்தே ஏதோ விபரீதம் என்பதை எல்லாருமே புரிந்துகொண்டனர். ஜானகியிடம்தான் அதிகபட்ச பாதிப்பு.

''என்னன்னா... யாரு போன்ல... ஏதாவது துக்க சேதியா?'' என்று அடுப்பு மிளகாயாய் வெடித்தாள்.

''துக்க சேதிதான் ஜானகி... அதுக்கும் ஒரு படி மேலன்னு கூட சொல்வேன்...''

''என்னன்னா... யார் போய்ச்சேர்ந்தது?''

''வேற யார்... கத்திக்குத்துப்பட்ட ரங்கன்னு போலீஸ் சந்தேகப் படறது...'' அவரது பதில் மைதிலியின் உச்சந்தலை முடியை வெடுக்கென்று பற்றி ஒரு தூக்கு தூக்கினது போல இருந்தது.

''அப்பாரா...!'' என்றாள் மிகவே ஹீனமாய்...

"ஆமாம்மா... காவிரிக்கரை ஓரமா ஊதிப் பருத்த நிலையில் ஒரு பொணம் ஒதுங்கியிருக்காம். வயித்துலயும் கத்திகுத்தின காயமாம். பார்க்க ரங்கன் மாதிரியே இருக்காம். அதுக்கு தோதா போலீசுக்கு ஒரு அநாமதேய போன்கால் ஒண்ணு தோப்புல ரங்கன் சாராயக் கார இடும்பன் கூட சண்டை போட்டதை சொல்லிடுத்தாம்...!"

"அப்ப போன்ல உங்களோட பேசினது போலீஸாப்பா?"

"ஆமாம்ப்பா... உடம்பைப் பார்த்து அடையாளம் காட்ட வர முடியுமான்னு கேக்கறா தோப்புல நடந்த கலாட்டாவை புகாராவும் எழுதிக் கொடுக்கச் சொல்றா..."

சக்கரவர்த்தியின் குரல் நடுங்கியது. மைதிலிக்கு மளுக்கென்று கண்களில் நீர் துளிர்ந்து விட்டது. வேகமாக அங்கிருந்து விலகி மாடியில் உள்ள அவளது அறை நோக்கி அழுது கொண்டே செல்லத்தொடங்கினாள். இதை கவனித்த ரேவதிக்குள் 'ஒரு பொணந்தூக்கி செத்துப் போனதுக்கு இவ ஏன் அழறா... அவன் என்ன இவ புருஷனா? என்று ஒரு எண்ணம். அது நாக்கு நுனி வரை வந்துவிட்டது. சூழலின் கடுமையை உத்தேசித்து அப்படியே விழுங்கினாள்.

"அப்பா... இப்ப என்னப்பா பண்ணப்போறேள்?" சீமா பதற்றம் குறையாமல் கேட்டான்.

"என்ன பண்றதுன்னா... போலீசுக்கு அவ்வளவு விஷயமும் தெரிஞ்சு போன் பண்ணிக் கூப்டுருக்கா. நல்லவேளை ஜீப்பை எடுத்துண்டு விசாரிக்கறேன்னு வீட்டுக்கே வராமப் போனாளே... அந்த மட்டுல எல்லாம் பெருமாள் அனுக்ரகம்னு நினைச்சுக்க வேண்டியதுதான்."

"அப்ப விஷயம் ஊர் பூரா பரவி எல்லாரும் பேசற ஒரு விஷயமாகப் போறதுன்னு சொல்லுங்களோ."

ஜானகி தன் பயத்தை கேள்வியாக்கினாள்.

"ஊருக்கு தெரிஞ்சு பேப்பர்லயும் வந்துட்டா தோப்போட மதிப்பே சரிபாதியா குறைஞ்சுடுமே... இன்னிக்கெல்லாம் ஒன்ரை கோடில இருந்து ரெண்டு கோடி போகும் இனி சில்ரைல்ல

கேப்பான். கேட்டாக்கா கொலை நடந்த இடம்னு சொல்வானுங்களே..."

அத்தனை அறை வாங்கியும் ரேவதியால் பேசாமல் இருக்க முடியவில்லை. சீமாவிடம் திரும்பும் ஆவேசம்.

"டீ நீ வாய மூட மாட்டே... இப்ப யாருடி அதை விக்கப் போறா? அதுக்கு இப்ப என்ன அவசியம்?"

"அது சரி... இனி அதை நாமதான் வெச்சுப் பராமரிக்க முடியுமா. நானே குத்தகைக்கு எடுத்துக்கரேன்னு வந்த கந்த சாமியே 'நீங்க வேணா பாருங்கோ'னு உட்டுட்டு ஓடப் போறான்."

"ரேவதி... நீ உன் ஆசையை எல்லாம் அபிப்ராயம் மாதிரி சொல்லிண்டிருக்கே. இதுவரை நான் கையால் தான் அடிச்சேன். இனி நீ பேசினே நான் உலக்கையை கைல எடுத்துக்க வேண்டியிருக்கும்."

அவர்கள் இருவரின் முட்டல் மோதலுக்கு நடுவில் தன் வெள்ளை ஜிப்பாவை எடுத்து அணிந்து கொண்டவராக சக்கரவர்த்தி போலீஸை பார்க்கத் தயார் ஆனார்.

அப்போதுதான் அவரே தேசிகாச்சாரி அங்கு இல்லாததை உணர்ந்தவராக "எங்க தேசிகன்? நாம அடிச்சிக்கறதப் பார்த்து பயந்து போய் ஓடியே போய்ட்டானா?"

"அதானே... இதுவரை இங்க தானே இருந்தார். எங்க போய்ட்டார்? ஜானகியும் விசாரப்பட்டாள்.

"அப்பா, நானும் கூட வரேன். நீங்க தைரியமா இருங்கோ. கரை ஓரமா மொதக்கற பொணம் ரங்கனாவே இருக்கட்டும். நாம, நமக்குத் தெரியலம்போம்! அதேபோல தோப்புலயும், எந்த அசம்பாவிதமும் நடக்கலன்னு அடிச்சுப் பேசுவோம். காவேரில டெய்லி நாலு பேர் சுழல்ல மாட்டி செத்துத்தான்போறா... அதுக்கெல்லாம் போய் அடையாளம் காட்டிண்டு இருக்கிறது தான் நம்ம வேலையா என்ன?"

சீமா பிரமாதமாய் சமாளிப்பதாக நினைத்துக்கொண்டு பேசியதைக் கேட்டு, அந்த நிலையிலும் சக்கரவர்த்திக்கு சிரிப்பு வந்துவிட்டது.

"சீமா எதையாவது பேசணும்னு பேசாம வாடா. கால நேரம் கெடும்போது சுத்தி இருக்கிறவாளும் அதுக்குத் தகுந்த மாதிரி மாறிண்டு தப்புத்தப்பாதான் பேசுவா... இந்த அறுபது வருஷத்துல இந்த மாதிரி எவ்வளவோ விஷயங்களைப் பார்த்தாச்சு. டயத்தோட நாம மோதவே முடியாது. டிராஃபிக்ல மாட்டிண்ட காரைப் போலத்தான் இப்ப நாமும்... போகப்போகத்தான் எந்த திசை, அதுல எவ்வளவு வேகம்கறதெல்லாம் நமக்குப் புலப்படும். நீ கிளம்பு..."

சக்கரவர்த்தியின் பேச்சில் ஒரு அனுபவப் பளபளப்பு இருந்தது. சீமாவும் தனது டெரிகாட்டன் முழுக்கை சட்டையை அணிந்து கொண்டு முகத்தில் பாதியை மறைக்கும் பட்டையான கூலிங் கிளாஸையும் எடுத்து அணிந்து கொண்டு வெளியே நிற்கும் காரை நோக்கி நடந்தான். காரில் ஏறப்போன சமயத்தில் கிணிங் கிணிங் என்கிற சைக்கிள் மணி சப்தம்.

தபால்காரர்தான் கையில் ஒரு இன்லாண்ட் லெட்டருடன் எதிரில்.

"என்ன குப்புசாமி தபாலா?"

"ஆமாம் சார்..." அவனும் பவ்யமாய் நீட்டினான்.

"என்ன ஒரே ஒரு கடுதாசி தானா?"

"ஏதோ இதாவது வந்ததேன்னு நினைங்க... இப்பல்லாம் தான் எல்லாத்துக்கும் போன்லயே பேசி முடிச்சிட்றாங்களே"

"அதுசரி... உனக்கு பொழப்பு போயிடப் போறதேங்கற கவலை..."

"ஆமாம் சார்... எங்களுக்கு போட்டியோ கொரியர் சர்வீஸ் காரங்க வேற வந்துட்டாங்க. ஏதோ நினைவுச்சின்னம் போலத் தான் நாங்கள்லாம் நடமாடிக்கிட்டிருக்கோம்..."

"அதுசரி... இந்த லெட்டரை இரண்டு நாளைக்கு முந்தி போஸ்ட் பண்ணியிருக்காங்க. என் கைக்கு வர 3 நாள் உங்க இலாகாவுக்கு தேவைப்பட்டிருக்கு. அப்புறம் நினைவுச் சின்னமான்னு வருத்தப்பட்டுக்கறதுல என்ன அர்த்தம்?"

காரில் ஏறி அமர்ந்து கொண்ட சக்கரவர்த்தி கேட்ட கேள்விக்கு குப்புசாமி என்கிற அந்த தபால்காரரிடம் பதிலில்லை. முகத்தில் வழிசல்தான் பதில்!

சீமா காரைக் கிளப்ப சக்கரவர்த்தி கடிதத்தை உடைத்துப் படிக்கத் தொடங்கியிருந்தார்.

தெருவில் வேட்டி கட்டிய பிராமண விடலைப் பையன்களின் கிரிக்கெட் விளையாட்டு அவர்களில் ஒருவனுக்கு தான் ஒரு டோனி என்கிற நினைப்பு. அவன் சிக்ஸருக்கு எய்ம் செய்த பந்து பக்கவாட்டில் சீமாவின் காது மேல் வந்து மோதி, சீமாவின் காதுக்குள் நான்கைந்து விமானங்கள் கிளம்ப ஆரம்பித்தன.

சக்கரவர்த்தியோ கடிதத்தில் கவனமாக இருந்தார்.

திருக்கண்ணமங்கை மாப்பிள்ளை வீட்டுக்காரர்களிடம் இருந்து வந்திருந்தது. நறுக்கென்று நாலே வரிகள்! 'ஸ்ரீமான் சக்கரவர்த்தி ஐய்யங்கார் அவர்களுக்கு இப்பவும் எங்கள் பிள்ளைக்கு வேறு இடம் குதிர்ந்து விட்டபடியால் தங்கள் அகத்துப்பெண் பார்த்தலுக்கு அவசியமில்லாது போய்விட்டது. சௌ மைதிலிக்கு நல்ல வரன் அமைந்து அவள் வாழ்க்கை சௌக்யமாய் அமைய பெருமாள் திருவடிகளை பிரார்த்திக் கிறோம்" என்று இருந்தது.

காரைவிட்டு இறங்கி சீமா பந்து எறிந்த விடலைகளோடு கட்டி ஏறிக்கொண்டிருந்தான். எப்போதுமே கோபத்தில் மறைவான மனித உறுப்புகளைச் சொல்லித்திட்டுவது சராசரி மனுஷ சுபாவம். யார் பழக்கி விட்டதோ...? காலம் காலமாய் எல்லா ஊர்களிலும் எல்லா மொழியிலும் இதுதான் நிலை.

ஆனாலும், அந்தக் கோபத்திலும் தப்பித்தவறியும் அந்த மாதிரி வார்த்தைகளை பயன்படுத்தாதவர்கள் நிறையவே உண்டு. அவர்களில் சக்கரவர்த்தியையும் சேர்க்கலாம். ஆனால் சீமா அவர் லிஸ்டில் சேராமல் வெளுத்து வாங்கிக்கொண்டிருந்தான். நடுவில் காதைக் காதை தேய்த்துக்கொண்டான். சக்கரவர்த்தி அய்யங்கார் வரையில் ஒரு மோசமான கால கட்டம், எல்லா திசைகளின் வழியாகவும் படைதிரட்டிக்கொண்டு வருவது போல தோன்றியது.

சீமா ஒரு வழியாக காரில் ஏறி அமர்ந்து காரைக் கிளப்பத் தொடங்கினான்.

"ஏண்டா சீமா... உனக்கு இவ்வளவு கெட்டவார்த்தைகளா தெரியும்?"... சக்கரவர்த்தி கேட்ட விதம் சீமாவை தர்மசங்கடப்படுத்தியது.

"அது வந்துப்பா..."

"காரைப் பார்த்து ஓட்டு... தினமும் சஹஸ்ரநாமமும் காயத்ரியும் சொல்ற நாக்கால எதைச் சொல்லணும்கறத விட எதைச் சொல்லக்கூடாதுன்னு இருக்கு..."

"அப்படியெல்லாம் சாதாரணமா பேசினா இந்தப் பசங்களுக்கு பயம் இருக்காதுப்பா. எல்லாம் சரியான வானரக் கூட்டம்."

"இந்த வயசு அப்படிடா... நீயும் இப்படித்தான் இருந்தே. நம்மாத்துலயே எவ்வளவு கண்ணாடியை பந்தால் அடிச்சே உடைச்சிருப்பே தெரியுமா நீ...?"

சீமாவுக்குள் பேச்சு நின்று போனது. கண்களிரண்டும் அப்படியே சரிந்து கையில் இருக்கும் கடிதத்தைப் பார்த்தது.

"திருக்கண்ணமங்கக்காரா தான் லெட்டர் போட்ருக்கா."

"என்னவாம்ப்பா. நாளைக்கே வரப்போறோம்னு நிலைமை தெரியாம எழுதியிருக்காளா?"

"இல்லப்பா... மைதிலிக்கு நல்ல வரன் அமைய பெருமாள்ட்ட வேண்டிக்கறாளாம். புரியலை உனக்கு."

"ஓ... நம்பளைப் புடிக்கலையாமாக்கும்?"

"ஆமாம்ப்பா... மாப்ளைக்கு அங்க வேற இடம் அமைஞ் சுருக்காம்."

என்னப்பா, போனவாரம் வரை எப்ப வரலாம். எப்ப வரலாம்னு கேட்டுண்டு இருந்தவாளுக்கு இடைல நாலு நாள்ல வரன் அமைஞ்சுடுத்தாமா... இதை நாம நம்பவா?"

"அது நம்ம இஷ்டம். அவாளுக்கு இஷ்டம் இல்லேங்கறதுதான் முடிவான பதில்."

"என்னப்பா இது... மைதிலிக்கு இந்த இடம் கட்டாயம் முடிஞ்சிடும்னு ரொம்பவே நான் நம்பிண்டிருந்தேன்பா..."

"விடுப்பா எது எப்ப நடக்கணுமோ அது அப்பதான் நடக்கும். அரைக்கால் நொடிய கூட நம்மால் முந்தி நடத்திக்க முடியாது. பிந்தி நடத்திக்கவும் விடாது" என்றபோது கார் தெற்கு வாசல் ராஜகோபுர அடி நிழலுக்குள் கொஞ்சம் சிலுசிலுப்பை உணர்ந்தபடி ஓடிக்கொண்டிருந்தது. சீமாவிடம் அடப்பமாக வருத்தம்.

"இந்த கோபுரத்துல உள்ள பொம்மைகளுக்கு உயிர் இல்ல. நமக்கு இருக்கு அவ்வளவுதாம்ப்பா வித்யாசம்" என்று முத்தாய்ப்பாக அவர் சொன்னது சீமாவை ரொம்பவே பாதித்தது.

★★★

தேசிகாச்சாரி அகத்துக்குள் நுழைந்த விதமே அலாதியாக இருந்தது. உடம்பெங்கும் ஒருவித படபடப்பு அங்கங்கே வியர்வைச் சொத சொதப்பு வேறு... ஹாலில் அரிசி உப்புமாவுக் காக கல்லுரலும் கையுமாக இருந்தாள் வத்சலா. தேசிகாச் சாரியை பார்த்து விட்டு புருவத்தை விதம் விதமாக வளைத்துக்கொண்டு யோசிக்க ஆரம்பித்து விட்டாள்.

தேசிகாச்சாரி அவளிடம் ஏதோ பேச விரும்பி பின் விருப்பம் இல்லாதவர் போல் ஆகி மளமளவென்று கொல்லைப் புறம் நோக்கிச் சென்றார்.

"இந்த மனுஷனுக்கு என்ன ஆச்சு? விறுவிறுன்னு அந்த ஆத்துப் பக்கம் போன மனுஷன் எதுக்கு இப்படி திறுதிறுன்னு வந்து நிக்கணும்?" கேள்வியோடு உள்ளங்கையில் தேங்கி நிற்கும் சொல்ப அரிசியோடு கொல்லைப் பக்கம் போனாள்.

கொல்லையில் தேசிகாச்சாரி கிணற்றில் இருந்து தண்ணீர் இறைத்து தலைக்கு விட்டுக்கொண்டிருந்தார்!

"என்னதிது... ஏதோ கேக்கக் கூடாத சேதியை கேட்ட மாதிரி தலைக்கெல்லாம் விட்டுண்டு...?"

அவள் கேள்விக்கு அவரிடம் பதிலில்லை. ஆனால் உடம்பில் அந்த நடுக்கம் நிற்கவேயில்லை. பேந்தப் பேந்த ஒரு பார்வையும்

துண்டோடு துவட்டலுமாய் திரும்ப உள் நுழைந்தார். அவளும் விரட்டிக்கொண்டு பின்னாலேயே வந்தாள்.

''என்னாச்சு உங்களுக்கு? யார் வைகுண்டம் போய்ட்டான்னு இந்த மத்யான வேளைல தலைக்கு விட்டுண்டுருக்கேள்...?''

''அது... அது...''

''எது... சக்கரவர்த்தி அண்ணாக்குதான் எதாவது நடக்கக் கூடாதது நடந்துருக்கா?''

''வாய அலம்பு வத்சலா. எப்படிடி இப்படி நினைச்ச மாத்திரத்துல உன்னால எதையும் பேச முடியறது?''

''என் கேள்விக்கு பதிலச் சொல்லுங்கோ... யாருக்கு என்ன?''

''அது... குணசீலத்துல என் சிநேகிதன் ஒருத்தன் காவேரில குளிச்சிண்டு இருக்கும் போது சுழல்ல மாட்டிண்டு போய் சேர்ந்துட்டான்கற தகவல் காதுல விழுந்தது. அதான்.''

''சிநேகிதன் ஒருத்தன்னா... அவனுக்கு பேர் இல்லையா என்ன?''

''அதாண்டி... பிச்சுமணி. பிச்சுமணின்னு பரிச்சாரகனா இருந்தானே?''

''எந்த பிச்சுமணியைச் சொல்றேள்...''

''கல்யாணச் சமையலுக்கெல்லாம் வருளாளே. அவனோட மாமா கூட மடத்துல நம்ப ஆச்சார்யளோட இருக்காரேடி...''

''அவன் பேர் வரதன்னா.''

''ஆங் வரதன்தான்... வரதன்தான். நான் தான் தப்பா பிச்சுமணின்னு உளறிட்டேன்.''

''சரி. உடம்பு கிடைச்சுதா இல்லையா?''

''அது அது தெரியல.''

''கிரகச்சாரம். கிரகச்சாரம். இப்படி தண்ணில மூழ்கிச் சாகணும்னு விதிபோல. ஆனா நான் தெரியாமதான் கேக்கறேன் எங்கையாவது சிநேகிதனுக்காக யாராவது தலைக்குக் குளிப்பாளா என்ன? பத்து நாள் பங்காளிகள்னா தீட்டு சமாச்சாரத்துக்கு

சேதிகேட்ட உடனேயே குளிக்கணும் இந்த வரதன் என்ன பங்காளியா?''

வத்சலாவின் கேள்வி தேசிகாச்சாரியை இடித்தது.

''அது... அது...'' என்று தடுமாற்றம் குறையாதபடி தந்தி அடித்தவர், சட்டென்று கோபவயப்பட்டு ''என்னடி நீ... வக்கீல் மாதிரி வளைச்சு வளைச்சுக் கேள்வியா கேக்கறே... அந்த வரதன் என் பந்துக்கள்ல ஒருத்தன்னு நான் நினைக்கிறேன். போறுமா?'' என்று அதட்டலான குரலிலேயே கூறிவிட்டு மாடி அறை நோக்கிச் செல்லத் தொடங்கினார். அறைக்கதவை சாற்றிக் கொள்வதில் ஒரு வேகமும் அவர் செயலிலும் ஒரு மர்மம் இழையோடுவதை உணர்ந்த வத்சலாவிற்குள் சந்தேகப்பூச்சி நெளிய ஆரம்பித்துவிட்டது.

''என்னமோ நடந்துருக்கு. இந்த மனுஷன் எதையோ மறைக்கறார்.'' என்கிற முணுமுணுப்போடு ஓசைப்படாமல் அவளும் மாடிப்படி ஏறி மூடியிருக்கும் கதவுக்கு புறத்தில் நின்று கொண்டு சாவித்துவாரம் வழியாக உள்ளே பார்த்தாள்.

உள்ளே தேசிகாச்சாரி அந்த மரப்பெட்டியை திறந்து அதனுள் அடியில் பத்திரமாக பதுக்கி வைத்திருந்த அந்த டைரியை எடுத்துக் கொண்டிருந்தார்!

வத்சலாவுக்குள் படபடப்பு பெருக ஆரம்பித்தது.

அவரோ உள்ளே தேடி எடுத்திருந்த டைரியை கண்களில் ஒற்றிக்கொண்டு விசும்பி விசும்பி அழத்தொடங்கியிருந்தார்.

★★★

காவிரிக்கரை ஓரமாக ஒரு ஜீப் ஒன்றின் பின்னால் சக்கரவர்த்தியின் கார் மிதமான வேகத்தில் வந்த நிலையில் ஒரு புளியமரத்தடியில் நின்றது. அங்கிருந்து பக்கவாட்டில் ஒரு இருபது டிகிரிக்கு சரிவு... சரிவைத் தொடர்ந்து தர்ப்பையும் தாழையும் மண்டிக்கிடக்கும் புதர்... புதருக்கு அப்பால் காவிரியின் நுரைத்துப் பொங்கிய பாய்ச்சல்.

புதருக்கு முன்னாலே ஒரு சிறு மண்திட்டு, மேலே ஒரு உடம்பு கிடந்தது. பல அடிகள் தள்ளி காவலுக்கு நின்றபடி இரண்டு

போலீஸ்காரர்கள். இது போக அந்தப் பக்கமாய் போவோர் வருவோரெல்லாம் அங்கங்கே நின்று திட்டுமேல் கிடக்கும் உடம்பைப் பார்த்தபடியே இருந்தனர்.

காரில் இருந்து சக்கரவர்த்தியும், சீமாவும் இறங்கி அந்த உடம்பை நோக்கி வந்தபடி இருக்க உடன் அவர்களோடு வந்த போலீஸ் ஆபீசர்!

சீமா அந்த சடலத்தை நெருங்கும்போதும் ''அப்பா அது ரங்கனாவே இருந்தாலும் நாம தெரியலேன்னு தான் சொல்லணும்'' என்று அவருடைய காதைக் கடித்துக்கொண்டே தான் சென்றான். சக்கரவர்த்தியை ஒரு வித தர்மசங்கடமும் அசூயையும் ஆக்ரமித்துக்கொண்டிருந்தது.

'பெருமாளே... நான் என்ன பாவம் பண்ணேன்? எதுக்கிந்த மாதிரி எல்லாம் என் வாழ்க்கைல நடக்கறது? என்று மருகிக் கொண்டேதான் அருகில் சென்றார். அந்த சடலம் பருத்த நிலையில் முகத்தை மீன்கள் கடித்துக் குதறியிருந்தன. ஆனால் உயரம், உடை எல்லாமே ரங்கனைப் போலவே இருந்தது. தலை முடியும் கூட ரங்கனின் கிராப்புதான்... உற்று உற்றுப் பார்த்த சக்கரவர்த்திக்கு நிஜமாலுமே குழப்பமாக இருந்தது. சீமாவோ ''சார் இது ரங்கன் கிடையாது...ரங்கன் இப்படி தண்ணீரில் மூழ்கி மூச்சு விடமுடியாமப் போய் செத்தெல்லாம் மெதக்க மாட்டான். அவன் வரைல காவேரிங்கறது ஒரு ஸ்விம்மிங் ஃபூல் மாதிரிதான். பெரிய பெரிய வெள்ளத்துலையே அவன் இக்கரைக்கும் அக்கரைக்கும் நீச்சல் போட்டவன். அவனாவது தண்ணில மூழ்கி சாகறதாவது?''

சீமா அடித்துப் பேசினான். அந்த போலீஸ் அதிகாரியும் சளைக்கவில்லை.

''எல்லாம் சரி சார்... வயித்துல கத்திக்குத்து விழுந்து ரத்த மெல்லாம் போய்ட்ட நிலையில யாரால ஆத்துல இறங்கி எதிர் நீச்சலெல்லாம் போட முடியும்? இந்த பாடியோட வயித்துல ஆழமா கத்தி இறங்கின காயம் இருக்கறத பாருங்க...''

''அதனால?''

''தொண்ணுத்தொம்போது பர்சண்ட் இது ரங்கன்தான். ரங்கனுக்கு உறவுக்காரங்கன்னு யாரும் இல்லையாம். சைக்கிள் கடை கோவிந்தன் தான் ஓரளவு நெருங்கின பழக்கம். அந்த கோவிந்தன் இது ரங்கன்தான்னு சொல்றார்.''

''ஓ... ஆனா எங்களுக்கொண்ணும் ரங்கனோட பெரிய பரிச்சயம் இல்லே. அதனால எங்களால சொல்ல முடியலை...''

''பரிச்சயம் இல்லாமதான் தோப்புல வேலை போட்டுக் கொடுத்தீங்களோ...? ரங்கனும் உங்களுக்காக குத்தகைக்காரன் கந்தசாமி கிட்டல்லாம் மோதியிருக்கான். அவன் மாட்டைக் கூட பிடிச்சிகிட்டு வந்து உங்க வீட்டு கொல்லையில கட்டிட்டதா எங்களுக்கும் தகவல் வந்ததே...?''

போலீஸ் ஆபீசர் பேசவில்லை. விசுவரூபமே எடுத்தார். சக்கரவர்த்திக்கும் இனி ஒரு சின்னப் பொய் தான் சொன்னாலும் அது தன் இமேஜிக்கு பெரிய கேவலமாகிவிடும் ஆபத்து பளிச்சென்று புரிந்தது.

''நீங்க கேள்விப்பட்ட எல்லாமே உண்மை ஆபீசர். சாராயக்கார இடும்பன் கோஷ்டிக்கு அவாளோட சாராய ஊறல்களை புதைச்சு வைக்க கரை ஓரமா இருக்கற என் தோப்பு ரொம்ப சௌகர்யமா இருந்துருக்கு. ரங்கன் அதைத்தட்டிக் கேட்டதால் தான் பிரச்சினையே!

அது இப்படி இங்க நான் ரங்கனை பொணமாப் பாக்கற அளவுக்கு கொண்டுவிடும்னு நான் கனவுல கூட நினைக்கல...'' என்றார் சக்கரவர்த்தி.

சத்யசந்தன்!

உள்ளதை உள்ளபடி பேசிவிட்டார்.

சீமாவுக்கு அப்படியே வாரிக்கொண்டு வந்தது கோபம். சக்கரவர்த்தி பேசிய உண்மை தன் குடும்பத்தையே ஸ்ரீரங்கத்தில் ஒரு தர்க்கப் பொருள் ஆக்கிவிட்ட ஆபத்தை அப்போதே உணர்ந்தவனாய் ''போச்சு... போச்சு... அந்த ஆபீசர் தட்ட வேண்டிய விதமா தட்டி எல்லாத்தையும் வாங்கிவிட்டார். இனி கோர்ட்டு ஸ்டேஷன்னு அலைஞ்சே சாகணும். அந்தத் தோப்பும்

உருப்படப் போறதில்ல...!'' என்று தலையில் அடித்துக் கொண்டான்.

அறைக் கதவை திறந்துகொண்டு வெளியில் வந்த தேசிகாச்சாரி சட்டையை மாட்டிக்கொண்டு வாசலில் முன்பக்கம் நின்றபடி இருந்த அவரது சைக்கிளை எடுத்துக்கொண்டு வீதியில் இறங்கினார். அவர் எப்போது அப்படி வெளியேறுவார் என்று காத்துக் கொண்டிருந்த வத்சலாவும் விறுவிறுவென்று மாடி அறைக்குப் போய் அந்த மரப்பெட்டியை திறந்து திரும்பவும் தேசிகாச்சாரியால் அடியில் வைத்து அடுக்கப்பட்டுவிட்ட அந்த டைரியை தேடி எடுத்தாள். அவள் கைகளிலும் ஒரு இனம் புரியாத நடுக்கம். அப்படியே முதல் பக்கத்தை புரட்டினாள். பங்கஜம் என்கிற பெயர் கண்ணில் பட்டு இதயத்தை வேகமாக துடிக்கவிட்டது. அடுத்தடுத்த பக்கங்களை கை இரண்டும் புரட்டப் புரட்ட அவளுக்கு மயக்கமே வர ஆரம்பித்துவிட்டது. ''பாவிமனுஷா... பாவிமனுஷா...'' என்றாள் உக்ரமாக!

17

''நாகமதன் தேகமதில் நாடி துயில்கொண்டு
வாடி உயிர் தேடிவரும் வானவர்க்கும் தானவர்க்கும்
நீடுசுகம் தானளிக்கும் நீலமணிவண்ணன்
பீடுடைய வாழ்வளிக்கும் பீஷ்மதுதி கண்ணன்
வீடதுவும் பூவுலகில் பெரிய கோயில் என்றே
பன்னிருவர் பாடிதுதிசெய்ததும் திருவரங்கமன்றோ?''

வத்சலா 'பாவிமனுஷா' என்று மட்டும் சொல்லவில்லை. கிறுகிறுவென்று தலைசுற்ற அப்படியே தரைமேல் பக்கத்தில் உட்கார்ந்துவிட்டாள். கை நழுவி விழுந்தது அந்த டைரி. அதன் பக்கங்களும் படபடத்தன! அதில் ஒரு பக்கத்தில் இருந்து பழுப்பேறிப்போன ஒரு இன்லாண்ட் லெட்டர் விழுந்தது. 1986-ன் முத்திரை அதில் காணப்பட்டது. முகவரியில் 'திருமதி

பங்கஜம் தேசிகன், பண்டாரி என்க்ளேவ் பாஞ்ச்பத்தி, பாரூச், குஜராத்-3920021 என்றிருந்தது.

அது சன்னக்காற்றில் பக்கத்தை விரித்துத் திறந்தது. உள்ளே கடித வரிகள்.

''என் ப்ரிய பங்கஜத்துக்கு!

அனேக ஆசிகள். நான் இங்கு மிகவும் ஷேமம். உன் ஷேமம் குறித்த கவலையே என்னை பெரிதாய் ஆட்டிப்படைத்தபடி உள்ளது. குழந்தை ரங்கராஜன் எப்படி இருக்கிறான்? நான் நிச்சயம் வரும் சனி ஞாயிறுகளில் அங்கு வருகிறேன். உன் விஷயத்தை இங்கே யாரிடமும் என்னால் பேசவே முடியவில்லை.

அப்பாவும் அம்மாவும் உன் குடும்பப் பெயரை எடுத்தாலே எரிந்து விழுகிறார்கள். உன் அப்பாவும் என் மாமாவுமான அனந்தநாராயணனை என் அப்பா எப்ப எப்பொழுதும் 'அழுத்த நாராயணன், அழுக்கு நாராயணன்' என்றே கூறுகிறார். அவ்வளவு வெறுப்பு. நீங்கள் எந்த ஒரு நல்லது கெட்டதற்கும் வராமலே 25 வருடங்கள் ஓடிவிட்டது. நான் மட்டும் உன் பொருட்டு தொடர்பில் இருக்கிறேன் என்பது தெரிந்தால் அதனால் குடும்பம் ஒன்று சேருமா இல்லை, பிரிவு இன்னும் பலமாகுமா என்றால் இப்போதைக்கு பலமாகும் என்பதே நிலை. அப்பாவுக்கு ஹார்ட் ஆபரேஷன் ஆகியிருப்பதால், நாம் துவாரகையில் திருமணம் செய்து கொண்ட விஷயத்தை சொல்லப்போய் அது அட்டாக்கில் அவரைக்கொண்டு விட்டுவிடுமோ என்று பயமாக உள்ளது. நீ இன்னும் சில காலம் பொறுமையோடு இருப்பதே நல்லது. நான் அனுப்பும் தொகை போதவில்லை என்றால் எனக்கு ஆபீசுக்கு போன் போடு. உடனேயே தந்தி மணியார்டர் செய்கிறேன். கவலைப்படாமல் தைரியமாக இரு. ரங்கனை ஸ்ரீரங்கம் பள்ளியில் சேர்த்து அவனை தமிழில் படிக்க வைத்து பெரிய பண்டிதன் ஆக்க வேண்டும் என்பது என் கனவு. எனவே அவனை அங்கே பள்ளியில் சேர்ப்பது எனக்கு உசிதமாய் படவில்லை. நீயும் என் பிள்ளையும் இங்கே என்னோடு ஸ்ரீரங்கத்தில் தான் வாழப்போகிறீர்கள். அவனை தினசரி ஸ்கூட்டரில் கொண்டு போய் ஸ்கூலில் விடவேண்டும். கைப்பிடித்து பெருமாள் சேவைக்கும் கூட்டிச்செல்ல வேண்டும் இதெல்லாம் என்

கனவுகள்! நிச்சயம் இந்த வருஷம் இல்லை அடுத்த வருஷத்தில் ஈடேறும். இங்கே என்னுடைய ஜெயா அத்தையின் பொண்ணான வத்சலாவை என் தலையில் கட்ட ஒரு பெரும் முயற்சி நடந்தபடி உள்ளது. அதுவும் என்னைப் பார்த்து இளி இளி என்று இளிக் கிறது. அவளையும் அத்தையையும் சமாளித்துவிட்டு உன்னோடு நான் சேர்ந்து வாழ அந்த ரங்கநாதர் தான் அனுக்ஹரம் செய்ய வேண்டும். இப்படி நான் எழுதுவதால் உன்னைக் கைவிட்டு நான் வத்சலாவை மணந்துகொண்டு விடுவேன் என்று மட்டும் எண்ணிவிடாதே. தைரியமாக இரு. உன்னை மணந்து கொண்டு மாமாவின் இறுதி ஆசையை நிறைவேற்றினேன். உன்னோடு இங்கே வாழ்ந்து என் அம்மாவின் ஆசையை நிறைவேற்றுவேன். இரண்டு குடும்பத்து பகையை நாம் தீர்த்து வைப்போம். நம்பிக்கையோடு இரு. குழந்தை ரங்கராஜனுக்கு என் அன்பு முத்தங்கள். இப்படிக்கு

உன் அத்தான் தேசிகன்.

கடிதத்தைத் தொடர்ந்து அந்த டைரியின் பல பக்கங்களில் பலவிதமான குறிப்புகள். அவ்வளவும் ஹிந்தியில் இருந்தது. சில இடங்களில் கொச்சைத் தமிழிலும் சில குறிப்புகள்!

அதில் ஒரு குறிப்பு ''கிருஷ்ணா என்னை அவரோடு நல்ல விதமாய் சேர்த்து வை. ஒரு வருஷமாய் அவரிடம் இருந்து பதிலே இல்லை. ஆபீசுக்கு போன் செய்தால் அவர் ட்ரான்ஸ்ஃபர் ஆகி விட்டார் என்கிறார்கள். எனக்கு பயமாக இருக்கிறது. வீட்டுக்குப் போகும் கடிதங்களும் முகவரி மாறிவிட்டது என்று திரும்பி வந்து விடுகின்றன. ஒரு குழந்தையோடு நான் என்ன செய்வேன் இங்கே அக்கம் பக்கத்திலும் ஒரு மாதிரி பேசத்தொடங்கி விட்டார்கள்'' என்றிருந்தது.

இன்னொரு பக்கத்தில் நாளை நான் ஸ்ரீரங்கத்தை நோக்கிப் புறப்படப்போகிறேன். வருவது வரட்டும் அவரைப் பார்த்து அவர் காலடியில் விழுந்து விடவேண்டும். ''நான்கூட ஒழிந்து போகிறேன். இந்தப் பிள்ளையை பெரிய பண்டிதன் ஆக்குகிறேன் என்று சொன்ன நீங்கள் தயவு செய்து அதையாவது செய்யுங்கள்'' என்று கூறப்போகிறேன். காவிரி பற்றி அப்பாவும் அம்மாவும் கதை

கதையாக கூறியுள்ளார். கங்கைக்கு காவிரி எந்த விதத்திலும் குறைந்ததில்லையாம்... அவரை சந்திக்க முடியாத பட்சத்தில் காவிரியில் உயிரோடு ஜலசமாதி ஆகிவிட வேண்டும். என் பிள்ளையை அந்த காவிரியின் பிள்ளையாக்க அவள் மடியில் விட்டுவிடப் போகிறேன். அவளாகப் பார்த்து உயிரோடு விடுவதும் வாரி விழுங்குவதும் அவள் விருப்பம்.!

இதில் ஒவ்வொரு பக்கத்திலும் அன்றைய தேதிகளில் அவளுக்குள் பொங்கிய எண்ணங்கள் பதிவாகி இருந்தது. வத்சலாவுக்குள் உட்கார்ந்த இடத்தில் இதயம் படபடத்து கிறுகிறுவென்று வரத்தொடங்கிவிட்டது.

தெருவில் இருக்கும் பல ஆண்களைப் பற்றி சபலகேஸ். ஜொள்ளுப்பொணம் என்றெல்லாம் விமர்சனம் செய்தவள்! இப்போது தேசிகனே ஒரு பெண்ணை, வத்சலாவை கைப் பிடிக்கும் முன்பே மணந்தவர்-அவருக்கு பிறந்த பிள்ளை தான் ரங்கன் என்பதெல்லாம் வெளியே தெரிந்தால் வத்சலாவை அவர்கள் மட்டைக்கு நாலு கீற்றாக உரித்துப் போட்டு விடுவார்கள் என்பதுதான் அவளது பிரதான பயம்.

''ஏண்டி வத்ஸா... அந்தப் பொணந்தூக்கி உங்காத்துப் பிள்ளையா? ஆனாலும் உன் ஆம்படையானுக்கு அழுத்தம்டி. இப்படியா கண் எதுக்க அவனைப் பொணம் தூக்கவிட்டுட்டு வேடிக்கையும் பாத்துண்டு இருந்துருப்பார்?

''என்ன நெஞ்சழுத்தம்... என்ன நெஞ்சழுத்தம்!''

''ஆமா இப்ப இருக்கற சொத்துல பங்கு கேட்டுண்டு வந்து நிப்பானே என்னடி பண்ணுவே? ஓ அவன்தான் செத்தே போய்ட்டானே?''

''நல்லவேளை, சொந்த மாமா பொண்ணைத்தான் கல்யாணம் பண்ணிண்டிருக்கார். இப்பல்லாம் அமெரிக்காவுக்குப் போகற நம்ம மனுஷாள்ளாம் அங்க இருக்கற மேரியையும் க்யூரியையும் பண்ணிண்டு குடும்பம் நடத்தறதுக்கு இது தேவலை...''

வத்சலாவின் மனசுக்குள் வரிசையாக அவள் பழகும் மாமிகள் எலக்ஷனில் க்யூவில் நின்று ஓட்டுப்போடுகிற மாதிரி அவளுக்குள் கருத்துகளை போடுவது போல ஒரு பிரமை.

பலி கோழிபோல உடம்பை உலுக்கிக் கொண்டாள். சிரமப் பட்டு எழுந்து நின்றாள். அந்த டைரி கடிதத்தை எடுத்து தனது நகை லாக்கருக்குள் வைத்து பூட்டி கழுத்து சங்கிலியோடு அதன் சாவியை ஒரு ஊக்கின் உதவியோடு சேர்த்துக் கொண்டாள்.

வாசல் பக்கமாய் ஸ்ரீதரன் வந்திருப்பதற்கான சப்தங்கள் கேட்டன. பைக்கை நிறுத்துவது, ஷூவைப் கழட்டுவது, சாக்ஸை கையில் கழட்டி உதறுவது என்பதெல்லாம் அவன் பழக்கங்கள்.

மெல்ல மாடியில் இருந்து இறங்கினாள். ஸ்ரீதரனும் உள்ளே நுழைந்தான். எப்போதும் எகிறலாய் பளிச்சென்று தெரிபவளை ஏதோ ஒரு பொருளை இழந்துவிட்டதைப் போல இருந்ததைப் பார்த்தான்.

''என்னம்மா... ஏன் ஒரு மாதிரி இருக்கே?''

''ஒரு மாதிரின்னா?''

''ரொம்ப டல்லாயிருக்கியே...?''

''ஏதோ... உசுர்போகாத அளவுக்கு இந்த மட்டும் தெம்பா இருக்கேனே...''

''என்னாச்சு உனக்கு... இவ்வளவு விரக்தியா பேசறியே?''

''ஒண்ணுமில்லப்பா எதைப் பேசியும் இனிமே ஒரு பிரயோ ஜனமும் வரப்போறதில்ல. விடு...''

''வத்சலாவால் தனக்கு ஏற்பட்ட அதிர்ச்சியை அவ்வளவு சுலபத்தில் ஜீரணிக்க முடியவில்லை. அது ஏதோ ஒரு விதத்தில் அவள் இதயத்தில் இருந்து எலிக்குஞ்சுகள் வெளியே வந்து வந்து செல்வதுபோல் சென்றது.

ஸ்ரீதரன் அவளை இதற்கு மேல் பார்க்க முடியாத வியப்போடு பார்த்தான். அப்படியே அவனாக ஒரு யூகத்தில் ''புரியதும்மா... உனக்கு உஷாக்கா ஞாபம் வந்துடுத்து அவ ஏதாவது போன் பண்ணி அவாத்து சிக்கல பேசினாளா?''

அவன் கேட்டதையே வத்சலாவும் பிடித்துக் கொண்டாள்.

''ஆமாமா... அதை ஏன் கேக்கறே... ஒரு கிளியை ஹைதரா பாத்ல இருக்கற ஒரு குரங்கு கைல கொடுத்துட்டு இங்க டெய்லி நான் பாடா பட்டுண்டு இருக்கேன்.''

வத்சலா சமாளித்தபோது தொலைபேசி ஒலித்தது. அவள் போய் எடுக்கும் முன் அவனே எடுத்தான். மறுபக்கம் அவன் சில நொடி முன் குறிப்பிட்ட அதே உஷா!

''யாரு ஸ்ரீதரனா?''

''அடடே உஷாவா. என்னடி உம் புருஷன் என்ன லிமிட்டை தாண்டி போய்ண்டுருக்கானா? இன்னிக்கு என்ன பிரச்சினை?''

எடுத்த எடுப்பில் ஸ்ரீதரன் கேட்ட கேள்வியில் அந்த பக்கத்தில் அவளிடம் ஒரு ஸ்தம்பிப்பு. பேச்சும் அவளிடம் இல்லை.

''உன்னத்தான் வாயத்திறந்து பேசு. நீ அங்க அடிவாங்கினா இங்க அம்மா கண்ணுல தண்ணி கொட்றது. இப்ப உளறவும் ஆரம்பிச்சுட்டா...''

''ஸ்ரீதரா... என்ன பேசறே நீ? நான் என் லைஃப்லயே வெரி ஃபர்ஸ்ட் டைம் சந்தோஷமா இன்னிக்குத்தான் போன் பண்றேன். அவரும் இப்ப பழைய மாதிரி இல்லை. இப்ப அவர் எவ்வளவு மாறியிருக்கார் தெரியுமா?''

உஷாவின் கேள்வி ஸ்ரீதரனை வாயடைக்கச் செய்தது. திருதிருவென்று முழித்துக்கொண்டிருந்தாள் வத்சலா. மெல்ல அவளிடம் பேசு என்பது போல ரிசீவரை கொடுத்தான். அப்படியே சிந்தனையோடு மாடி ஏற ஆரம்பித்தான். வத்சலாவிடம் பாசப் பரிவர்த்தனை...

''உஷாக்குட்டி... எப்பிட்றா இருக்கே?''

''நன்னா இருக்கேம்மா, அம்மா இங்க நான் தினசரி ஆஞ்ச நேயர் கோயிலுக்குப் போய் அடிப்பிரட்சணம் பண்ணது வீண் போகலம்மா. அவர் இப்ப ரொம்பவே மாறிட்டார். ''உஷா டார்லிங், எனக்கு மெய்ன்டனன்ஸ் ஹாலிடே ஒரு பத்து நாள் வரது. இந்தத்தடவை நாம ஸ்ரீரங்கத்துக்குத்தான் போகப் போறோம். ரெடியா எல்லாத்தையும் பேக் பண்ணி வெச்சுக்கோ

நாளைக்கே கிளம்பறோம்னார். உனக்கு அப்பாவுக்கு புடவை வேஷ்டி எல்லாம் எடுத்துருக்கார்.''

''உஷாக் குட்டி... நிஜமாவா சொல்றே?''

''என்னம்மா நீ... நானே நடந்துருக்கறது கனவா இல்ல நெஜமான்னு தெரியாத ஒரு சந்தோஷத்துல இருக்கேன். அப்புறம் இன்னொரு ஹாப்பி நியூஸ் என் மாமியார் கிழவியை அவர் தன்னோட அண்ணாவாத்துக்கு மும்பைக்கு அனுப்பிட்டார். கெழவித்தொல்லையும் இப்ப இல்லை...''

''என்னமோ... அங்க உன் புருஷனாவது உனக்கு இப்ப சந்தோஷத்தைத் தந்தானே. அந்த மட்டுல மாப்ளையை நான் இங்க இருந்துண்டே சேவிச்சேன்னு சொல்லு.''

''உன் புருஷனாவதுன்னு இக்கு வெச்சுப் பேசறியேம்மா. ஏம்மா உனக்குப் அப்பாக்கும் எதான தகராறா?''

''போறுண்டி என் வாயைப் பிடுங்காதே. நீ நல்லபடியா புறப்பட்டுவா. எல்லாத்தையும் நேர்ல பேசுவோம்.''

போனை கத்தரித்தாள்! ஸ்ரீதரன் வேஷ்டி பனியன் என்று மாறியவனாக படி இறங்கிக் கொண்டிருந்தான். அவனைப் பார்க்கவே அவளுக்கு என்னவோ போல் இருந்தது.

''என்னம்மா... சாதாரணமா மூணாம் மனுஷாகிட்ட நீ கேஷுவலா பொய் சொல்வே. ஆனா என்கிட்டேயும் பொய் பேச ஆரம்பிச்சுட்டே... என்ன விஷயம்?''

அவன் கேட்க அவளுக்கும் ''ஸ்ரீதரா மோசம் போயிட்டோண்டா'' என்று சொல்ல நுனி நாக்கு வரை வந்துவிட்டது வார்த்தைகள். அப்படியே அதைப் பின்னுக்குத் திருப்பி விழுங்கினவள் மனதுக்குள்ளேயே அந்த ரங்கன்தான் செத்து ஒழிஞ்சுட்டானே... அந்த ரகசியத்தை எதுக்கு பசங்ககிட்ட பேசணும்? ஆனா அந்த மனுஷனை மட்டும் விடவே கூடாது. அந்த டைரியை காட்டிக் காட்டி ஆட்டி வைக்கணும் என்று மின் வேகமாய் ஒரு முடிவுக்கு வந்தவள் சமாளிக்க ஆரம்பித்தாள்.

''அது வந்து ஸ்ரீதரா. இன்னிக்கு நம்ம சக்கரவர்த்தி அண்ணா வாத்துல ஒரு பெரிய ரசாபாசம்...''

''என்னம்மா அது?''

''நீ வழில நம்ம தெருப்பசங்க யாரையுமே பாக்கலையா?''

''பாத்தேன். ஆனா யாரும் எதுவும் என்கிட்ட பேசலையே.''

''அதை ஏன் கேட்கறே... உனக்கு அந்த பொணம் தூக்கி ரங்கனைத் தெரியும் தானே?''

''எந்த ரங்கன்...?''

''என்னடா நீ... நம்ம கோவிந்தன் சைக்கிள் கடைலயே எப்பப்பார் உக்காந்துண்டிருப்பானே?''

''ஓ அவனா... அவனுக்கென்ன?''

''அவன் இப்ப உசுரோட இல்லை தெரியுமோ தோக்கு...?''

அதைக்கேட்ட விநாடி ஸ்ரீதரன் முகத்தில் ஒரு கேலிச் சிரிப்பு.

''என்னம்மா இது உளறல். இப்பதான் ஒரு அரை மணிக்கு முன்னால மாம்பழச்சாலைகிட்ட அவனைப் பாத்தேன்.''

''என்னது... ரங்கனை நீ மாம்பழச் சாலைகிட்ட பாத்தியா?''

''ஆமாம்மா... நான் என்ன ரஜினிகாந்தை பாத்தேன்னா சொன்னேன், நீ இந்த அளவு வாயப் பொளக்கறதுக்கு?''

''நீ ரஜினியை பாத்தேன்னா கூட நான் வாய பொளக்க மாட்டேண்டா. இது என்னடா இப்படி என் தலைல இடியத் தூக்கி போட்றே''

''உனக்கு என்ன ஆச்சு... ஏன் இப்படி பெனாத்தறே? நீ சொன்னதுக்கு நான் பதில் சொன்னேன். ரங்கன் செத்துப் போயிட்டான்னு உனக்கு யாரு சொன்னது?''

''ஊரே பேசிக்கறதே... சக்கரவர்த்தி அண்ணாவே போலீஸை எல்லாம் போய் பார்த்துருக்காளே...''

''அது வேற எதுக்காவது இருக்கும். எனக்கு நன்னா தெரியும். நான் ரங்கனைத் தான் பார்த்தேன். ரொம்ப மொள்ள நடந்துண்டு இருந்தான். 'என்ன ரங்கா உடம்புக்கு ஏதாவது பிரச்சினையா'ன்னு நானும் கேட்டேன். 'அதெல்லாம் ஒண்ணுமில்லன்னு சொன்னவன் 'பைக்ல நிதானமா போ... நீ எப்பவும் ரொம்ப ரேஷ் டிரைவ்

பண்றே'ன்னான். நானும் அதுதான் என் ஸ்டைல்'னு சொல்லி சிரிச்சேன். 'இல்லப்பா அது நல்லதில்ல... கவனமா இரு. தப்பா எடுத்துக்காதே உனக்கொரு பிரதர் இருந்தா சொல்ல மாட்டானா... அப்படி எடுத்துக்கோ'ன்னானே...?

ஸ்ரீதரன் சொன்னதுதான் தாமதம், வத்சலாவிடம் நிஜமாலுமே மயக்கம்!

18

'கோடான கோடி உயிர் வாழுகின்ற மண்ணிது
ஆனாலும் சிச்சிலரே காலம் வென்று வாழ்கிறார்
மேடதனை சமதையாக்கி பள்ளமதை பாங்காய்மூடி
நாடதனை நல்வழிக்கு நலமுடனே செலுத்துகிறார்
வாடாது அவர் புகழும் வானகமும் உள்ளவரை!
அம்மவரில்
வாராது வந்த மாமணியே இராமானுஜர்! இவர்
சீரார்ந்த திருமேனி இருப்பதுவும் அரங்கநகர்...!'

கிட்டத்தட்ட மயங்கி விட்ட தன் தாயை ஸ்ரீதரன் தாங்கிப் பிடித்தான். அவனுக்கு அவளது மயக்கம் ஆச்சரியமாக இருந்தது. அவன் அவளை ஒரு அடாத பெண்மணியாகத்தான் உணர்ந் திருந்தான்.

அவளுக்கே மயக்கமென்றால், பின்புலத்தில் பெரிதாக ஏதோ இருக்க வேண்டும் என்று அவனுக்கும் தோன்றியது. அவள் கன்னத்தைத் தட்டி, தோளை உசுப்பி அவள் கண்களை விழிக்கச் செய்தவன்.

''என்னம்மா... என்னாச்சு உனக்கு? நான் என்ன சொல்லக் கூடாததை சொல்லிட்டேன்னு இப்படி கண்ணுச் செருகிண்டு விழறே...?''

அவள் கேள்வி முன், முதலில் பேந்தப் பேந்த விழித்தவள் ''அப்ப அந்த ரங்கன் சாகலையா... பொழச்சிண்டுட்டானா?'' என்றாள்...

''அதைத்தானே நானும் சொன்னேன்... ஆமா அவன் பொழச்சா என்ன... செத்தாதான் நமக்கென்ன... நீ ஏன் இவ்வளவு ஓவர் ஆக்ட் பண்றே?''

''ஓவர் ஆக்ட்டா... போடா! என் மனசு இப்ப இருக்கற இருப்பு உனக்குத் தெரியாதுடா. தெரிஞ்சா இப்படி எல்லாம் நீ என்னைப் பார்த்து கேலியால்லாம் கேட்கமாட்டே...''

''சரி அது என்னன்னுதான் சொல்லேன்...? ஸ்ரீதரன் சாதாரண மாய்க் கேட்டுவிட்டான். ஆனால் வத்சலா பதைத்துப் போனாள்.

''வேண்டாம்ப்பா... வேண்டாம்... வேண்டவே வேண்டாம். எல்லா எழவும் என்னோட போகட்டும். போகட்டும் என்ன... போயாகணும். உங்கப்பன் வரட்டும்... வெச்சுக்கறேன் அந்த ஆளை...''

சம்பந்தமே இல்லாம இப்ப எதுக்கும்மா அப்பாவை இழுக்கறே...? இதுல 'அப்பன்'னு ரொம்ப தேர்ட் ரேட்ல வேற பேசறே... சம்திங் ராங்...''

ஸ்ரீதரன் தாடையை தேய்க்கத் தொடங்கினான்.

''ஸ்ரீதரா... விஷயம் இதுதான். அந்த ரங்கனை சக்கரவர்த்தி அண்ணாவோட தென்னந்தோப்புல வெச்சு ஒரு சாராயக்கும்பல் கத்தியால குத்திடுத்து. விஷயம் போலீசுக்கெல்லாம் போயாச்சு. இந்த சமயம் பாத்து காவேரில சுத்து குத்துப்பட்ட ஒரு உடம்பும் வேற ஒதுங்கியிருக்குபோல, உடனே அதை ரங்கன்னு நினைச் சுண்டு எல்லாரும் பதறிப்போய்ட்டா. பிரச்சினை ரங்கன் போய்ட்டானேங்கறதுக்காக இல்ல. தோப்போட பேர் கெட்டுப் போய்டுத்தேன்னு ஒரு பக்கம் கவலை. ஏன்னா நாளைக்கு நீ மைதிலியை கல்யாணம் பண்ணிக்கறச்சே அதுதானே உனக்கான சீர்?''

அவள் சமாளித்ததும் ஓரளவு ஸ்ரீதரனிடம் வேலை செய்யத் தொடங்கியது.

"ஓ... நீ அதை நினைச்சுத்தான் இந்தப் புலம்பு புலம்பினியாக்கும்? ஆமா அன்னிக்கு ஒரு லெட்டர் எழுதி அந்த திருக்கண்ணமங்கக்காராளுக்கு அனுப்பினியே... அந்த தபால் வெடிகுண்டு வெடிச்சுதா?" அவனும் திசைமாறத் தொடங்கி விட்டான்.

"வெடிச்சுதாவா. வெடிச்சே தீரணும்! நீ வேணா பார் இன்னும் அதிகபட்சம் ஆறு மாசத்துக்குள்ற சக்கரவர்த்தி அண்ணா உன்னை மாப்ளையா கேட்டு இந்த ஆத்துக்கு வரப்போறாரா இல்லையான்னு."

"அவர் நம்மாத்துக்கு வருவாரா?"

"வர வைப்பேனே..! லைஃப்ல சில விஷயங்கள் கேரம்போர்டு காய்ன் மாதிரி. நாம பாக்கெட் பண்ண வேண்டிய காய் நம்ம கைக்குப் பின்னால இருந்தா ஸ்ட்ரைக்கர நாலா பக்கமும் மோதவிட்டு அந்த காய்ன் மேல பட வெச்சு அதைக்கொஞ்சம் கொஞ்சமா நகத்தி குழில விழ வைக்கற மாதிரி அண்ணாவையும் நான் விழவைப்பேன். இந்த ஆத்துல அந்த மைதிலி 'மாமியா'ரேன்னு என் காலைப் பிடிக்கணும். 'ஏன்ன'ான்னு கேட்டு உனக்கு காபி போட்டுக்கொடுக்கணும். அதைத்தெருவே பார்க்கணும். அப்பத்தெரியும் இந்த வத்சலா யாருன்னு."

வத்சலாவின் கண்களில் பால் பொங்குவது போல ஆசையானது பொங்கி வழிந்தது. ஸ்ரீதரன் சற்று விலகவும் அதுவே பயமாக மாறி 'பாழாப் போனவனே... செத்து ஒழியாம உசுரோட வந்துட்டியேடா. உன்னைப் பாக்கும் போதெல்லாம் என் மனசு கிடந்து அடிச்சுக்குமே...!" என்று எதிரொலிக்கவும் செய்தது!

★★★

சோர்ந்து போய் திரும்பிக்கொண்டிருந்த கந்தசாமியின் கண்களில் ரங்கன் பட்டது தான் தாமதம்... கந்தசாமி தன் சைக்கிளோடு தடதடவென்று முன்னால் வந்தான். "யப்பா... ரங்கா... எங்கப்பா போய்ட்டே? எல்லாரையும் கொல்லாம கொன்னுட்டப்பா" என்று பெருமூச்சுசெறிந்தான். அப்படியே வயிற்றுப் பாகத்தைப் பார்த்தான். கட்டுப் போட்டு அது தெரியாதபடி மேலே சட்டை போட்டு மூடியிருந்தான் ரங்கன்.

"என்னய்யா பாக்கறே?"

"இல்ல, கத்திக்குத்து பட்டு குடலெல்லாம் வெளிய வந்துடிச் சின்னாங்க."

"ஏன் செத்து எமலோகத்துல க்யூவுல நிக்கறேன்னு யாரும் சொல்லலியா?"

"எலேய்... நீ இப்ப இந்த சீரங்கத்தைப் பொருத்தவரை செத்த பயதான்! அய்யர் சாமி உன்னை நினைச்சு துடிச்சுப்போய் என்கிட்ட பணத்தக் கொடுத்து கொடுக்கச் சொன்னாரு. நானும் பணத்தோட உன்னைத் தேடாத இடம் இல்ல. வழில ஒரு பொணம் ஆத்தோரமா கிடக்குது. அது நீதான்னு ஒரு பேச்சு. சரிதான் பொணந்தூக்கற நீயும் ஒரு பொணமாயிட்டேன்னு தான் நானும் நினைச்சேன்.

ஆனா உனக்கு ஆயுசு நூறுப்பா. அதான் உசுரோட பாத்துட்டு பேசிட்டுப் இருக்கேன்."

கந்தசாமி கிட்டத்தட்ட அவனது அப்போதைய நிலைப் பாட்டை ஓரளவு கூறிவிட்டிருந்தான். அது ரங்கனிடமும் அதிர்வலைகளை உருவாக்கியிருந்தது.

"என்ன யோசிக்கறே?"

"இல்ல நான் செத்துட்டேன்னா போலீஸ் நம்ம அய்யரை குடைய ஆரம்பிச்சிருப்பாங்களே?"

"அதெல்லாம் குடைஞ்சு முடிஞ்சாச்சு. ஆமா நான் தெரியாமத்தான் கேக்கறேன் நீ அப்படி எங்கதான் போனே?"

"அதை விடு... நீ என்ன என்னமோ பெரிய யோக்யன்மாதிரி பேசிக்கிட்டுருக்கே? அய்யர் சாமியை நீ எங்க பார்த்தே. அவர் எதுக்கு எனக்கு பணம் தரச் சொல்லி உன் கிட்ட தரணும்?"

"கேக்க மாட்டே? அது நான் காவக்காத்த தோப்பு. பாத் துருப்பயே பிரச்சினையை-டெய்லி அந்த இடும்பன் ஆளுங் களோட ரோதனைதான் செத்துச் செத்துதான் பொழச்சேன்."

"தேங்காயைத் திருடி வித்து வித்துப் பொழச்சேன்னு சொல்லு. இதுதான் சாக்குன்னு சத்யவான் மாதிரி பேசாதே."

"இதோ பார்... அது பழைய கத! நான், என் பொண்டாட்டி ரெண்டு பேரும் போய் அய்யர் காலடில விழுந்துட்டோம். நான் திரும்ப எனக்கே குத்தகைக்குக் கேட்டேன். அப்பதான் உன் சமாச்சாரம் தெரியவந்துச்சு. அய்யரும் கத்திக்குத்துப்பட்ட உன்னை அப்படியே விட்டுட்டு வந்துட்டதுக்காக ரொம்பவே வருத்தப்பட்டு மருத்துவச் செலவுக்குன்னு என்கிட்ட பணமும் கொடுத்தாரு. முதல்ல இந்தப் பணத்தைப் பிடி"

கந்தசாமி ரங்கன் கையில் கத்தையாக பணத்தைத் திணித்தான். விக்கித்து நிற்கும் ரங்கனிடம் "நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதே சாமிய பார்த்து நீ உயிரோட இருக்கேங்கறதச் சொல்லிட்டு எங்கையாவது ஓடிப்போயிடு. ஏன்னா இடும்பன் ஆளுங்க ரொம்பப் பொல்லாதவங்க. நீ உசுரோடதான் இருக் கேன்னு தெரிஞ்சா நிச்சயம் கொல்லாம விடமாட்டாங்க. அவனுங்க கொன்னு இந்த காவிரி ஆத்துல வீசி எறிஞ்ச பொணங்களுக்கு ஒரு அளவே இல்லை..."

"என்னய்யா... மிரட்டிப் பாக்கறியா?"

"நான் ஏன் உன்னை மிரட்றேன். உள்ளதச் சொன்னேன். இனி நானும் அந்தத் தோப்புல எதையும் கிழிக்க முடியாது. ஆகையால அந்தத்தோப்புக் குத்தகைக்காக நான் பேசறதா நீ நினைச்சிடாதே. எனக்குக் குத்தகையும் வேணாம். ஒரு மண்ணாங்கட்டியும் வேண்டாம். இதையும் சாமிகிட்ட நீயே சொல்லிடு. நான் வரேன்."

கந்தசாமி சொன்ன வேகத்தில் தன் சைக்கிளில் ஏறிக்கொண்டு கிளம்பி விட்டான். ரங்கனிடம் ஒரு புது முடிவு!

★★★

வீடே சோபையிழந்து கிடந்தது. ஊஞ்சலில் ஒரு பக்கம் ஜானகி. இன்னொரு பக்கத்தில் சக்கரவர்த்தி. மைதிலி மாடி அறைக்குள் முகம் புதைத்தவளாக அழுது கொண்டிருந்தாள். தான் அழுகிற சப்தம் கீழே கேட்டு விடாத ஒரு எச்சரிக்கையும் அவளிடம் இருந்தது. எதற்காக அழுகிறோம் என்பதிலும் ஒரு சின்னக்குழப்பம்... ரங்கனுக்கு நேர்ந்த கொடுமைக்காகவா...? இல்லை, இனி ரங்கனைப் பார்க்க முடியாது என்பதற்காகவா?

அதுவுமில்லை தன் கல்யாண விஷயம் நாளுக்கு நாள் சிக்கலாகிக் கொண்டே போகிறதே அதற்காகவா என்று அவளுக்குள்ளேயே பல கேள்விகள்.

கீழே "மாமி மாமி" என்றபடி ஒருகுரல்!

ஜானகியும் யாரென்று பார்த்தாள்.

பக்கத்து அகத்தைச் சேர்ந்த பிருந்தா! மைதிலியோடு ஒன்றாகப் படித்தவள். ஆனால் நான்கு வருடங்களுக்கு முன்பே இவளுக்குத் திருமணமாகி விட்டதில் இரண்டு குழந்தைகள்!

"வாம்மா... வா..."

"மைதிலி இல்லையா மாமி...?"

"மாடி ரூம்ல இருப்பா போய்ப் பார்..."

"சரி... அப்புறம் மாமி..."

"சொல்லு..."

"ஜெயந்தி மாமி உங்களையும் மைதிலியையும் வெத்தலபாக்கு வாங்கிக்க வரச்சொன்னா. ராகவிக்கு தலைக்கு விட்டாச்சாம். மணைல (மணைப்பலகை) உக்காத்தி வெச்சு நலுங்கு செய்யப் போறாளாம்..."

"அட ஆமாம்ல... ஜெயந்தியோட கடைக்குட்டி ராகவி பெரியவ ஆனதையே நான் மறந்துட்டேன். நீ போய் மைதிலியை கீழ அழைச்சுண்டு வா. எல்லாரும் ஒண்ணாவே போவோம். எனக்கும் செத்த இந்த ஆத்தை விட்டு வெளிய போய்ட்டு வந்தாதான் தெம்பா இருக்கும்."

பேசியபடியே சக்கரவர்த்தியைப் பார்த்தாள். அவர் மார்பின் மேல் முக்கூர் லக்ஷ்மி நரசம்மாச்சாரியார் எழுதிய 'குறையொன்று மில்லை' புத்தகம் கிடந்தது. பிருந்தாவும் படி ஏறி மைதிலியை நெருங்கி நின்றாள்.

"வாடீ"

"என்னடி இது இப்பபோய் கவுந்தடிச்சு படுத்துண்டுருக்கே?"

"உடம்பே சரியில்லடி..."

"இதோ பார்... அது பழைய கத! நான், என் பொண்டாட்டி ரெண்டு பேரும் போய் அய்யர் காலடில விழுந்துட்டோம். நான் திரும்ப எனக்கே குத்தகைக்குக் கேட்டேன். அப்பதான் உன் சமாச்சாரம் தெரியவந்துச்சு. அய்யரும் கத்திக்குத்துப்பட்ட உன்னை அப்படியே விட்டுட்டு வந்துட்டதுக்காக ரொம்பவே வருத்தப்பட்டு மருத்துவச் செலவுக்குன்னு என்கிட்ட பணமும் கொடுத்தாரு. முதல்ல இந்தப் பணத்தைப் பிடி"

கந்தசாமி ரங்கன் கையில் கத்தையாக பணத்தைத் திணித்தான். விக்கித்து நிற்கும் ரங்கனிடம் "நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதே சாமிய பார்த்து நீ உயிரோட இருக்கேங்கறதச் சொல்லிட்டு எங்கையாவது ஓடிப்போயிடு. ஏன்னா இடும்பன் ஆளுங்க ரொம்பப் பொல்லாதவங்க. நீ உசுரோடதான் இருக் கேன்னு தெரிஞ்சா நிச்சயம் கொல்லாம விடமாட்டாங்க. அவனுங்க கொன்னு இந்த காவிரி ஆத்துல வீசி எறிஞ்ச பொணங்களுக்கு ஒரு அளவே இல்லை..."

"என்னய்யா... மிரட்டிப் பாக்கறியா?"

"நான் ஏன் உன்னை மிரட்றேன். உள்ளதச் சொன்னேன். இனி நானும் அந்தத் தோப்புல எதையும் கிழிக்க முடியாது. ஆகையால அந்தத்தோப்புக் குத்தகைக்காக நான் பேசறதா நீ நினைச்சிடாதே. எனக்குக் குத்தகையும் வேணாம். ஒரு மண்ணாங்கட்டியும் வேண்டாம். இதையும் சாமிகிட்ட நீயே சொல்லிடு. நான் வரேன்."

கந்தசாமி சொன்ன வேகத்தில் தன் சைக்கிளில் ஏறிக்கொண்டு கிளம்பி விட்டான். ரங்கனிடம் ஒரு புது முடிவு!

★★★

வீடே சோபையிழந்து கிடந்தது. ஊஞ்சலில் ஒரு பக்கம் ஜானகி. இன்னொரு பக்கத்தில் சக்கரவர்த்தி. மைதிலி மாடி அறைக்குள் முகம் புதைத்தவளாக அழுது கொண்டிருந்தாள். தான் அழுகிற சப்தம் கீழே கேட்டு விடாத ஒரு எச்சரிக்கையும் அவளிடம் இருந்தது. எதற்காக அழுகிறோம் என்பதிலும் ஒரு சின்னக்குழப்பம்... ரங்கனுக்கு நேர்ந்த கொடுமைக்காகவா...? இல்லை, இனி ரங்கனைப் பார்க்க முடியாது என்பதற்காகவா?

அதுவுமில்லை தன் கல்யாண விஷயம் நாளுக்கு நாள் சிக்கலாகிக் கொண்டே போகிறதே அதற்காகவா என்று அவளுக்குள்ளேயே பல கேள்விகள்.

கீழே "மாமி மாமி" என்றபடி ஒருகுரல்!

ஜானகியும் யாரென்று பார்த்தாள்.

பக்கத்து அகத்தைச் சேர்ந்த பிருந்தா! மைதிலியோடு ஒன்றாகப் படித்தவள். ஆனால் நான்கு வருடங்களுக்கு முன்பே இவளுக்குத் திருமணமாகி விட்டதில் இரண்டு குழந்தைகள்!

"வாம்மா... வா..."

"மைதிலி இல்லையா மாமி...?"

"மாடி ரூம்ல இருப்பா போய்ப் பார்..."

"சரி... அப்புறம் மாமி..."

"சொல்லு..."

"ஜெயந்தி மாமி உங்களையும் மைதிலியையும் வெத்தலபாக்கு வாங்கிக்க வரச்சொன்னா. ராகவிக்கு தலைக்கு விட்டாச்சாம். மணைல (மணைப்பலகை) உக்காத்தி வெச்சு நலுங்கு செய்யப் போறாளாம்..."

"அட ஆமாம்ல... ஜெயந்தியோட கடைக்குட்டி ராகவி பெரியவ ஆனதையே நான் மறந்துட்டேன். நீ போய் மைதிலியை கீழ அழைச்சுண்டு வா. எல்லாரும் ஒண்ணாவே போவோம். எனக்கும் செத்த இந்த ஆத்தை விட்டு வெளிய போய்ட்டு வந்தாதான் தெம்பா இருக்கும்."

பேசியபடியே சக்கரவர்த்தியைப் பார்த்தாள். அவர் மார்பின் மேல் முக்கூர் லக்ஷ்மி நரசம்மாச்சாரியார் எழுதிய 'குறையொன்று மில்லை' புத்தகம் கிடந்தது. பிருந்தாவும் படி ஏறி மைதிலியை நெருங்கி நின்றாள்.

"வாடீ"

"என்னடி இது இப்பபோய் கவுந்தடிச்சு படுத்துண்டுருக்கே?"

"உடம்பே சரியில்லடி..."

''உடம்பா... மனசா?''

''ரெண்டும்தான். பாட்டி செத்ததுல இருந்து ஒரே இருளோகமா இருக்கு அகமே!''

''நானும் எல்லாம் கேள்விப்பட்டேண்டி உன் மன்னி உன்னை அப்பப்ப பிடுங்கி எடுக்கறான்னும் அம்மா சொன்னா. ஆமா இப்ப எங்க அவ?''

''யாருக்குத் தெரியும்... கீழ இல்லன்னா மொட்டை மாடில அவ அம்மாவோடயோ இல்ல அக்காவோடையோ செல்போன்ல பேசிண்டு இருப்பா. இன்னிக்கு இந்த ஆத்துல என்ன சமையல்ங்கறதுல ஆரம்பிச்சு நான் என்ன புடவை கட்டிண்டு என்னல்லாம் பண்ணின்டிருக்கேன்கறது வரை தகவல் அங்க போகும். பதிலுக்கு அவா எதையாவது சொல்வா. நிஜமா செல்போன் மட்டும் இல்லேன்னு வை. என் மன்னி தூக்கு மாட்டிண்டு செத்தே போயிடுவா. ஒருநாள் ராத்திரி ஒரு மணிக்கு அவ அம்மாவோட பேசிண்டிருக்காடி. கேட்டா நைட்ல 10 மணிக்கு மேல பேசிண்டா ஃப்ரீயாம்!''

மைதிலி சொல்லும்போதே ரேவதியின் கலகல சிரிப்பு சப்தம் கேட்டது. பிருந்தா கழுத்தை வளைத்து ஜன்னல் வழியாக பார்த்த போது கைப்பிடி சுவர் அருகில் ரேவதி முகம் தெரிந்தது. காதோர மாய் மைதிலி சொன்னதை போலவே செல்போன் முகத்தில் ஒரு குதூகலம் தெரிந்தது.

''ஆமாமா... அந்த தோப்பு இனிமே அவ்ளோதான்! அவளுக்குக் கல்யாணம்தான் சிக்கல்னா அவளுக்குன்னு என் மாமனார் கொடுக்க ஆசைப்பட்ட தோப்புலயும் இப்ப சிக்கல். அதை நான் சீரா தரேன்னா மாப்ளையா வரப்போறவன் என் மாமனார் கொமட்டுலயே குத்துவான். உனக்கு நான்தான் கிடைச்சானாக்குனும் கேட்பான். எனக்கு என்ன பயம்னா இவ காலம் பூரா ராக்கோழியா என் கூடத்தானே இருப்பா? இப்பவே இவ இருக்கான்னு எங்காத்துக்காரர் பயந்து பயந்துதான் என்கிட்ட வரார்.''

ரேவதி பொங்கிப் பிரவாகித்துக்கொண்டிருப்பது பிருந்தா காதில் தூரத்து பாட்டுபோல வந்து விழுந்தது. முகமும் மாறிப்

போனது. மைதிலியின் கண்ணிரண்டிலும் கூட கண்ணீர் பிரள ஆரம்பித்து விட்டது.

''மைதிலி... இதுக்கெல்லாம் நீ அழாதடி. நான் இப்ப சொல்றேண்டி உன் மனசுக்கு ஏத்த புருஷனோட எல்லாரையும் விட சந்தோஷமா நீ வாழத்தான் போறே... உன் மன்னி அப்ப நன்னா அனுபவிப்பாடி'' அவள் சொன்ன நொடி மைதிலியிடம் ஒரு விரக்திச் சிரிப்பு.

''எதுக்குடி சிரிக்கறே?''

''நீ சொன்ன ஜோசியத்த நினைச்சு சிரிச்சேன். பிருந்தா... நிஜமாலுமே நான் ஒரு ராசியில்லாதவதான் போல இருக்குடி. மன்னி சொல்லிண்டிருக்கறதும் வாஸ்தவம்தான்''

''போதும் உளறாம என்கூடப் புறப்படு... ஜெயந்தி மாமி பொண்ணு ராகவிக்கு நலங்கு. மாமி உன்னையும் உங்கம் மாவையும் கூட்டிண்டு வரச்சொன்னா. நீ நன்னா பாடுவேங் கறதால கட்டாயம் பாடணும்னும் சொல்லச் சொன்னா.''

''போடிபோ... நான் இப்ப இருக்கற மனநிலைல ஒப்பாரி தான் வைக்கணும்.''

''இந்த விரக்திதானே வேண்டாங்கறது?''

''நான் என்னடி பண்ணுவேன். எனக்கு நல்லதே நடக்க மாட்டேங்கறதே. நான் யார் மேலெல்லாம் ஆசை வெச்சேனோ அவாளுக்கெல்லாமும் கஷ்டம் வந்துட்றதே?''

''அப்படி நீ யார் மேல ஆசை வெச்சே யாருக்கு என்ன கஷ்டம் வந்தது?''

பிருந்தாவின் கேள்வி முன் ஆழ்ந்த மௌனத்தில் மூழ்கத் தொடங்கிய மைதிலியின் மனதுக்குள் ரங்கன் நிமிர்ந்து கொண்டிருந்தான். ஆனால் அவனைப் பற்றிப் பேசும் தைரியம் மட்டும் வருவேனா என்றது.

''சொல்லுடி... யாருக்கு என்ன நடந்தது?'' பிருந்தா விடாமல் தூண்டினாள்.

"அப்புறமா சொல்றேன். எனக்கும் நான் சொல்லி அழறதுக் குன்னு இருக்கற ஒரே ஃப்ரெண்ட் நீ தானே?"

"இப்ப சொன்னா என்னடி?"

"நான் சொல்லிடுவேன். ஆனா நீ தாங்க மாட்டே. அடுத்து நாம வேற இப்ப நூறுங்குக்குப் போகணும். அங்க நீ பேயறஞ்ச மாதிரி திப்பே. அதனாலதான் அப்புறமா சொல்றேன்னு சொன்னேன்."

"நீ பீடிகை போட்றதப் பார்த்தா விஷயம் பெருசா இருக்கும் போல இருக்கே?"

"பெருசா மட்டுமில்ல... அது முடிஞ்சும் போயிடுத்து பிருந்தா. எனக்கு இனி கல்யாணம் நடக்காமலே போறது தான் நல்லது."

"ஐய்யோடா... மைதிலி நீ பேசறதைப் பார்த்தா ஏதோ லவ்ஸ் மாதிரி எனக்கு தோண்றது! சரியா?"

"இப்ப என்ன எதுவும் கேட்காதே... வா போகலாம்..."

"ஒரு பெருமூச்சோடு அவளையும் அழைத்துக்கொண்டு கீழே இறங்கினாள். அப்போது தொலைபேசியின் சிணுங்கல். சக்கர வர்த்தி மைதிலியை நீயே எடுத்துப் பேசு என்கிற மாதிரி பார்த்திட அவளும் போய் ரிசீவரை எடுத்தாள். மறுபக்கம் போலீஸ் ஸ்டேஷனில் இருந்து இன்ஸ்பெக்டர் சங்கரபாண்டியன் பேசினார்.

"நான் ஸ்டேஷன்ல இருந்து சங்கரபாண்டியன் பேசுறேன். சார் இல்லையாம்மா?"

"இருக்கார்... இருங்கோ அப்பாவை பேசச்சொல்றேன்."

"இருக்கட்டும்மா, விஷயத்தை நீங்களே கூட சொல்லிடுங்க. சாருக்கு நல்ல நேரம் போல... அந்த ரங்கன் சாகலை! இங்க என் எதிர்லதான் இருக்கான்! காவிரிக்கரைல பாத்த பாடி வேற யாரோ ஒருத்தனோடது. சாருக்கு தலைவலி விட்டுச்சி. ஆனா எங்களுக்குத்தான் இப்ப அது யார்னு துப்பு துலக்கற வேலையா மாறிப்போச்சு."

சங்கரபாண்டியன் சொல்லி முடிக்கவும் மைதிலியிடம் ஒரு இன்பத் திக்கு முக்காடல்.

"அப்பா... அப்பா..."

"என்னம்மா?"

"அது வந்து, அது வந்து..."

"எதுக்கு இப்படி எக்ஸைட் ஆகறே... ரிலாக்ஸ்..."

"அது வந்துப்பா, ரங்கன் நிஜமாலுமே சாகலையாம். போலீஸ் ஸ்டேஷன்ல இருந்து இன்ஸ்பெக்டர் பேசினார். ரங்கன் இப்ப அங்க தான் இருக்காராம். உங்கப்பாக்கு நல்லநேரம்தான் போலன்னும் சொன்னார்ப்பா..." மைதிலி முடிக்க, சக்கரவர்த்தி எழுந்து வெளியே சென்று தூரத்தில் தெரிந்த அரங்கனின் கோபுரத்தைப் பார்த்து கன்னத்தில் போட்டுக் கொண்டார். பிருந்தா மட்டும் மைதிலி பேசியதை வைத்தே கணக்குப் போடத் தொடங்கியிருந்தாள்!

19

'மானுடம் முழுவதும் ஏழுதன் அங்கம்
பஞ்சமம் அதனுளே தேகத்தில் அடங்கும்
ஆறதும் அறிந்திடும் அறிவெனத் துலங்கும்
ஏழதே சப்தமாய் மொழிகொண்டு இலங்கும்
ஏழதை கொண்டவர் எட்டுவதற்கே பிறவி
எட்டுவதென்பதும் சப்தமரங்களின் திருவடியன்றோ?"

மைதிலியிடம் ஒரு புது உற்சாகம்... முகத்திலும் ஒரு தனி ஜொலிப்பு. எல்லாமே மின்னல் வேகத்தில் அவளிடம் தென் பட்டது. மனித உடம்பு ஒரு உலக மகா அதிசயம்தான். எண்ணத்தின் தன்மைக்கேற்ப கறுப்பதும் வெளுப்பதும் துள்ளு வதும் துவளுவதும் என்று அது அடைகின்ற மாற்றங்கள் மனதுக்கு இருக்கும் சக்தியைத்தான் உணர்த்துகின்றன.

பிருந்தாவும் நன்றாகவே உணர்ந்து கொண்டாள்.

மைதிலி பிருந்தாவோடு குதி போட்டுக்கொண்டு நடந்தாள். ஜெயந்தி மாமி அகத்தின் வாசலில் பெரிதாக கோலம் போடப் பட்டிருந்தது.

மாமி ஒரு கோலப் பைத்தியம். ஆயிரம் புள்ளிக்கோலம் என்று ஒரு கோலத்தை மாமி போட்டால் தெருவே விடைக்கும். அன்றும் மாமி தன் பெண்ணின் திரளலை உத்தேசித்து ஆயிரம் புள்ளிக்கோலம் போட்டிருந்தாள். மைதிலி அதை நின்று கவனித்தாள்.

ஒவ்வொரு வளைவும் அடைவும் ஏதோ காம்பஸ் பாக்ஸ் கொண்டு அளந்து போட்டது போல் இருந்தது. உள்ளேயும் நல்ல கூட்டம்!

மைதிலியைப் பார்க்கவும் ஜெயந்தி மாமி உற்சாகமாய் வரவேற்றாள்.

ஹாலில் ஒரு நாற்காலிபோட்டு அதில் ராகவியை உட்கார்த்தி வைத்திருந்தனர். இரு கன்னத்திலும் மாமிகள் பலர் மாறி மாறி இட்ட சந்தனம் நெற்றியிலும் இடமில்லாதபடி ஹவுஸ்புல் போர்டு தொங்கியது.

ஜெயந்தி மாமி, ஆத்து நகை அவ்வளவையும் மாட்டி விட்டிருந் தாள். அதே 'ஒரு நாப்பத்தஞ்சு பவுன் இருக்கும் போல இருக்கு' என்று கணக்கு பண்ணிக்கொண்டிருந்தாள் ஒரு வயதான பாட்டி.

அந்த இடம் கோலாகலமாக இருந்தது. மருக்கொழுந்து வாசம் தூக்கலாக விசைந்தபடி இருக்க ஜெயந்தி மாமியின் கணவரான நரசிம்மனும் அவரது வயதான அப்பாவும் இதெல்லாம் பொம் மனாட்டிகள் சமாசாரம் என்கிற ஒரு எல்லைக்கோடு போட்டு அதற்கு வெளியே போய் நின்று விட்டிருந்தார்கள்.

ஜெயந்தி மாமியின் தங்கையும் நாத்தனாரும் வந்திருப்பவர் களுக்கு பூ கொடுப்பது, பால் கொடுப்பது என்கிற உபசரிப்பில் இருக்க, வேணுப்பாட்டி என்று ஒரு பாட்டி பாடுகிறேன் பேர்வழி என்று தொண்டைக்குள் கோலிகளை உருட்டிக்கொண்டிருந்தாள். பாதியில் நிறுத்தச் சொன்னால் சங்கடப்படுவாள் என்று கூட்டமும் கேட்டபடி இருந்தது. ஒரு வழியாக பாட்டி நிறுத்தவும் பிருந்தா மைதிலியைத் தூண்டத் தொடங்கினாள்.

''மைதிலி பாடுடி.... இன்னிக்கு நீ ரொம்ப சந்தோஷமா வேற இருக்கே... உன்னோட ஃபேவரைட்டான 'தெண்டனிட்டேன் என்று சொல்லடி....' ய பாடுடி....' என்று பல பேர் காதில் விழுவது போல் கூறிட மைதிலியிடம் மறுப்பே இல்லை.

வாடிவாசலுக்குள் இருந்து வரும் காளைமாடு கணக்காக அவளுக்குள் இருந்து பாடலும் பிறக்கத் தொடங்கியது.

அதே 'தெண்டனிட்டேன் என்று சொல்லடி!' பாடல்தான்...

'தெண்டனிட்டேன் என்று சொல்லடி...

ஸ்ரீராமனுக்கு தெண்டனிட்டேன் என்று சொல்லடி!

பங்கஜமாய் கரம் கூப்பி, செண்டுபோலே சிரம் தாழ்த்தி 'தெண்டனிட்டேன் என்று சொல்லடி...

ஸ்ரீரங்கனுக்கு தெண்டனிட்டேன் என்று சொல்லடி....'

பாடலில் போக்கில் ராமன் ரங்கன் ஆனதை எத்தனைப் பேர் கவனித்தார்களோ தெரியாது. பிருந்தா கவனித்தாள். தீர்மானமே செய்து விட்டாள்.

★★★

சைக்கிள் பெல் சப்தம் கேட்டு எட்டிப் பார்த்தாள் வத்சலா! தேசிகாச்சாரிதான் சைக்கிளை நிறுத்திக்கொண்டிருந்தார். வத்சலாவுக்குள் படபடப்பு ஆரம்பமாயிற்று. தேசிகாச்சாரியின் தோற்றமே அன்னியப்பட்டு போய் அவரே ஒரு புது உருவமாகத் தெரிகின்ற மாதிரியெல்லாம் மனதுக்குள் பிரமை தட்டியது. எத்தனைப் பெரிய ரகசியத்தை மனசுக்குள் வைத்துக்கொண்டு இத்தனை வருஷமாய் இந்த மனிதர் வாழ்ந்து விட்டாரே... இவரால் முடிந்திருக்கிறதே என்கிற அந்த கேள்வி அவளைக் கவ்விக் கவ்வி விட்டது.

அவரும் செருமிக் கொண்டே உள்ளே வந்தார். பளிச்சென்று அவர் நெற்றியில் திருமண்ணும் ஸ்ரீசூரணமும் எப்பொழுதும் இருக்கும்.

காவிரிக்குப் போய்விட்டு ஈரத்தோடு நுழையும்போது மட்டும் தான் பாழும் நெற்றியைப் பார்க்க முடியும். அதுவும் சில பல

நிமிடங்களுக்குதான்... மற்றபடி பெருமாளின் திருவடி களையும் பிராட்டியின் கமலடிகளையும் சென்னியானது பிடித்துக் கொண்டே இருக்கும் பாவனைதானே நெற்றியில் திகழும் திருமண்ணுக்கான பொருள். அந்த பாவனையில் ஒரு மாற்றம் போல அன்று உள் நுழைந்தவரின் நெற்றி பாழ்பட்டிருந்தது. அதைக் கவனித்த வத்சலாவுக்கு மேலும் அசூயை.

நல்லவேளை ஸ்ரீதரன் ஏதன் நிமித்தமாகவோ வெளியே போயிருந்தது வசதியாகப் போய்விட்டது. மனிதரை அனகோண்டா கணக்காக வளைத்து விழுங்கி விடும் ஆவேசமும் அவளுக்குள் பெருகத்தொடங்கியது. உள் நுழைந்தவர் துண்டை உதறிப் போட்டு ஊஞ்சலில் அமர்ந்தார். வத்சலாவும் மெல்ல எதிரில் வந்து நின்றாள்.

"ஒரு வா காபி கிடைக்குமா வத்சலா..." அவர் குரலில் சுரத்தே இல்லை.

'ஒரு வா' என்ன... ஒரு சொம்பே போட்டு எடுத்துண்டு வரேன். மனசு கனத்துக்கிடக்கும் போது ஒரு பிராம்ணனுக்கு காபி தானே பெரிய ரிலாக்சேஷன்! இதுவே மத்தவாளா இருந்தா டாஸ்மாக் பாட்டிலைத் திறந்து நாலஞ்சு ரவுண்டு போயிருப்பா..."

என்றபடியே சமையல்கட்டு நோக்கி நடந்தாள் அவள். தேசிகனுக்கு சுருக்கென்றது. வத்சலா எப்படியெல்லாம் பதுங்கு வாள். பின் பாய்வாள் என்பதை அத்தனை வருஷ தாம்பத்தி யத்தில் அவர் நன்றாகவே அறிந்தவர். அதனால் அப்போதே அவருக்கு ஒரு சுனாமி வரப்போவது தெரிந்து விட்டது.

அவளும் சொன்னது போலவே ஒரு வெள்ளிச்சொம்பில் காபியை எடுத்து வந்து நீட்டினாள்.

"என்னடி இது... நான் என்ன ஆடா மாடா... சொம்புல போய் காபி தர்ரே..."

"அச்சா..."

"என்ன அச்சா... எதுக்கு இப்படி நடந்துக்கறே?"

"நான் அச்சான்னு சொன்னது உங்களுக்குப் புரியல போல இருக்கு. இரு கோடுகள்னு பாலசந்தரோட படத்தை ஞாபகப்

படுத்திக்கோங்கோ. அதுல ஜெமினிக்கு ஜெயந்தி ரெண்டாவது பொண்டாட்டி. ஆனா அந்த பேக்கு முண்டம் தன் புருஷனை ஸ்ரீராமன்னு நினைச்கண்டு இருக்கும். ஆனா ஜெமினிதான் பெரிய காதல் மன்னன் ஆச்சே. அவருக்கு முதல்லயே கல்யாண மாகியிருக்கும்.

எத்தனை நாளைக்குத்தான் இந்த மாதிரி விஷயங்களை மூடி வைக்க முடியும். ஒருநாள் ஜெயந்திக்குத் தெரிஞ்சிடும். இதுல ஒரு வேடிக்கை என்னன்னா முதல் பெண்டாட்டி சௌகார் வடநாட்டுல படிச்சு வளர்ந்தவ. அதனால வார்த்தைக்கு வார்த்தை இங்க நாம 'அப்படியா'ன்னு சொல்ற மாதிரி அவ அதுல 'அச்சா அச்சா'ன்னு சொல்லுவா.

ஜெயந்திக்கு உண்மை தெரிஞ்ச நிலை அவளும் ஒரு நாள் அச்சான்னு வா பாருங்கோ... நம்ம காதல் மன்னன் ஆடிப் போயிடுவார். இங்க நீங்க எப்படி?"

வத்சலா இருகோடுகள் கதையைச் சொல்வதுபோலவே தன் கதையையும் சொல்லி தேசிகாச்சாரியைப் பார்த்துக் கேட்கவும், அவருக்கு பின் முதுகில் யாரோ அயன் பாக்சை வைத்து ஒரு தேய் தேய்த்த மாதிரி இருந்தது.

'வத்சலா...' என்றார் தீனமாக, "வத்சலாவேதான்... ஒளிச்சு ஒளிச்சு வெச்சிருந்த மர்ம டைரிய படிச்சுட்ட வத்சலா இவ... என்ன ஒரு நெஞ்சழுத்தம்... என்ன ஒரு பித்தலாட்டம்... இதுல அந்த சக்களத்திக்குப் பொறந்த அந்த பொணந்தூக்கி செத்துட்டா னேங்கற துக்கம் வேற. அதான் நெத்திக்கு இட்டுக்கக் கூட தோணலையோ?"

தேசிகாச்சாரியின் முகத்திற்கருகே வந்து கையை ஒரு விச்சு விசி மூர்க்கமாய் விழிகளை அகட்டி வத்சலா பார்த்த விதமும் கேட்ட விதமும் தேசிகாச்சாரியை வியர்க்க வைத்துவிட்டது.

"மொள்ளப் பேசுடி... மொள்ளப் பேசு... நான் இப்ப பாக்கத் தாண்டி உசுரோட இருக்கேன். நெஜத்துல நான் ஒரு நடை பொணம்..."

"இது என்ன டயலாக்... நடைபொணத்துக்கு எதுக்குக் காபி... அதுவும் வெள்ளிச் சொம்புல?" கேள்வியோடு காபியை அப்படியே பிடுங்கி அது ஹால் என்றும் எண்ணாமல் சாக்கடையில் கொட்டுகிற மாதிரி கொட்டிக் கவிழ்த்தாள்.

"வத்சலா என்னை மன்னிச்சிடுடி... உனக்கும் எனக்குமான கல்யாணம், அதைத் தொட்டு வாழ்க்கை போன போக்கு எதுவுமே என் கைல இல்லாமப் போயிடுத்துடி..."

"ஓஹோ... இல்லாமத்தான் ஒரு பொண்ணையும் புள்ளையையும் என் பக்கத்துல படுத்துண்டு பெத்தெடுத்தீரோ?"

"இதோ பார். நான் உன் கால்லகூட விழறேன். தயவு செய்து இதைப் பெருசுபடுத்தாதே. நான் ஏற்கனவே நொறுங்கிப் போய் இருக்கேன். நான் இப்படி பெரும்பாவியாவும் இருக்கேன். எனக்கு ஏழு ஜென்மத்துக்கு விமோசனமில்லை."

"இப்படி எல்லாம் சொல்லி அழுதா எனக்கு செஞ்ச துரோகம், துரோகம் இல்லைன்னு ஆயிடுமா?"

"துரோகம்தான்... சந்தேகமே இல்ல, துரோகம் தாண்டி! அதுக்கு நீ என்னை நடுத்தெருவுல நிக்கவெச்சு கொளுத்து. நான் ஏத்துக்கறேன். அதுக்கு முந்தி எனக்கு சில கடமைகள் இருக்கு. அதை நான் முடிச்சிட்டு வந்துடறேன்.

தேசிகாச்சாரி ஒரு வித ஆவேசத்தோடு எழுந்திருந்தார்.

"நில்லுங்கோ கடமை கிடமைன்னு எங்க கிளம்பிட்டேள்...?"

"ரங்கன் என் பிள்ளைன்னு ஊர்ல எல்லார்கிட்டேயும் சொல்லப் போறேன். அவன் உயிரோட இருந்தப்பதான் அவனுக்கு நான் எதையுமே செய்யல. குறைஞ்ச பட்சம் இப்ப செத்துப்போய்ட்ட அவனுக்கு கர்ம காரியங்களையாவது நான் பண்ண விரும்பறேண்டி."

"உசுரோட இருக்கறவனுக்கு எதுக்குக் கர்மமும் கத்தரிக்காயும்?"

"என்னது... என்னது... ரங்கன் உசுரோட இருக்கானா? நெ... நெ... நெஜமாவா?"

"எதுக்கு இத்தனை எக்ஸைட்மெண்ட்? அவன் உயிரோட இருந்தாலும் என் வரைல அவன் செத்தவன் தான்..."

"பெருமாளே... எனக்கு நீ ஒரு சந்தர்ப்பத்தைத் இரும்பக் கொடுத்துட்டே... சந்தோஷண்டாப்பா... ரொம்ப ரொம்ப சந்தோஷம். இவ்வளவு நாள் நான் பண்ண தப்பை எல்லாம் திருத்திக்கறதுக்கு ஒரு சந்தர்ப்பத்தையும் கொடுத்துட்டே... உனக்கு அனந்தகோடி நமஸ்காரம். ரங்கன் இனி பொணந்தூக்கி இல்ல. அவன் என் புள்ள. அவன் யாரோ இல்ல. பாணையங்கால் வம்சம் அவன். இப்பவே போய் ஊர் முழுக்க சொல்றேன். இத்தனை நாள் பண்ண தப்புக்கு பிராயச்சித்தம் பண்ணிக்கறேன். இனியும் நான் எனக்கென்னன்னு இருந்தா எனக்கு நரகத்துலகூட இடம் கிடைக்காது. நல்லவேளை... உனக்கும் விஷயம் தெரிஞ்சது வசதியாப் போச்சு. நான் வரேன்."

தேசிகாச்சாரி விறுவிறுவென்னு நடக்க ஆரம்பித்தார். வத்சலாவோ பிள்ளையார் பிடிக்கக் குரங்காகிவிட்டது போல உணர்ந்து, அவருக்கும் முந்திசென்று வாசல் கதவை அடைத்துத் தாழிடவும் செய்தாள்.

"வத்சலா எதுக்குக் கதவை சாத்தறே?"

"போங்கோ உள்ளே"

"வேண்டாம்... வத்சலா... என்னைத் தடுக்காதே!"

"தடுக்காதேவா! பாவி மனுஷா! நான் இங்க இடிஞ்சு போய் உக்காந்துருக்கேன். நான் உக்காந்தது போதாதுன்னு என் பசங்க இந்த குடும்பம்னு அவ்வளவு பேரும் இடிஞ்சு போகணுமா?"

"பிராயச்சித்தத்தை எதுக்கு இப்படி தப்பா அர்த்தம் பண்ணிக்கறே?"

"மண்ணாங்கட்டி. பிராயச்சித்தமாம் பிராயச்சித்தம்! உம்ம அறிவு ஏன் இப்படி எல்லாம் போறது. நான் எத்தனை பெரிய கனவெல்லாம் கண்டுண்டு இருக்கேன். இந்த பொணந்தூக்கிய இந்த ஆத்து பிள்ளையாக்கி சகலத்தையும் நாசப்படுத்தறதுதான் உங்க பிராயச்சித்தமா?"

"இல்ல வத்சலா... நீ தப்பா புரிஞ்சுண்டு பேசறே. என் இடத்துல இருந்து பார் உனக்குப் புரியும்."

"வாய மூடுய்யா... பிராயச்சித்தமாம் பிராயச்சித்தம். இப்ப சொல்றேன் கேட்டுக்கும் இனி நீர் இந்த ஆத்தை விட்டு எதுக்காகவும் வெளியே போகக்கூடாது. யாராவது கேட்டா உங்களுக்கு வாதம்னோ காக்கா வலிப்புன்னோ நான் சொல்லிக்கிறேன். அதே போல அந்த பழைய கதையைப்பத்தி யார்கிட்டேயும் மூச்சும் விடக்கூடாது. மீறி ஒரு வார்த்தை விட்டாலும் சரினு நா, என் பசங்க மூணு பேரும் இதே வீட்டுல 'உங்களாலதான் நாங்க தற்கொலை செய்துக்கறோம். நீங்க ஒரு மகா துரோகின்னு போலீசுக்கு போன் பண்ணி சொல்றது மட்டுமில்ல. கமிஷனருக்கே கடுதாசி எழுதிப் போட்டுட்டுத் தொங்கிடுவோம். ஜாக்கிரதை. இது என் மேல சத்தியம்?"

என்ற வத்சலாவை அப்படியே இடிந்துபோய் பார்த்தார் தேசிகாச்சாரி!

★★★

வீட்டு வாசலில் கோவிந்தனின் மொபட்டில் வந்து இறங்கிய ரங்கனைப் பார்க்கவும் சக்கரவர்த்தி பூரித்துப் போனார்.

"ரங்கா வா... வா... என் வயித்துல பாலவார்த்தே நீ. ஐய்யோ நீ செத்துட்டேன்னு போலீஸ்காரா என்னப் பாடாபடுத்திட்டா..." என்று வாசலிலேயே பொலபொவென்று கொட்டினார் சக்கரவர்த்தி.

"மன்னிச்சுடுங்க சாமி. நான் கொஞ்சம் லேட்டா போலீசுக்குப் போயிட்டேன். எனக்கு இப்படி எல்லாம் ஆகும்னு தெரியாது."

"போகட்டும். இப்ப எப்படி இருக்கு உனக்கு உடம்பு? கந்தசாமி கிட்ட பணம் கொடுத்துவிட்டேனே. கொண்டு வந்து கொடுத்தானா?"

"கொடுத்தான் சாமி. எதுக்குங்க பணம். வயித்துல சின்ன காயம்தாங்க. இந்தாங்க."

ரங்கன் அவர் கொடுத்த பணத்தை அவர் முன்னாலேயே திரும்ப வைத்தான்.

20

'ஊடல்மிசை உறுப்புக்கெல்லாம் உயிராதாரம்!
உளமிசை நினைப்புக்கெல்லாம் மொழியாதாரம்!
கடல்மிசை உயிர்களுக்கெல்லாம் நீராதாரம்!
வளமிசை நாடுகளுக்கெல்லாம் பொருளாதாரம்!
மடல்மிசை கவிதைகளுக்கெல்லாம் உணர்வாதாரம்'
நலமிசை நாடுவோர்க்கெல்லாம் தசாவதாரம்!'

தான் தந்த பணத்தை தன் வசமே திருப்பித் தந்து விட்டு எதுவுமே நடவாதவன் போல "அப்ப நான் புறப்படறேங்க..." என்ற ரங்கன் சக்கரவர்த்திக்குள் ஒரு புதிய அனுபவத்தை அவருக்குத் தந்து கொண்டிருந்தான்.

அதை ரேவதியும் ஓரிடத்தில் இருந்தபடி பார்த்துக் கொண்டே தான் இருந்தாள். சக்கரவர்த்திக்கு அடுத்து அவனிடம் என்ன பேசுவது எதைப் பேசுவது என்பது புரிபடவில்லை.

எப்பொழுதுமே நமது குணச்சித்திரம் சிதிர்த்திடும்போது செயல் மறந்துபோவது இயற்கை. அவனே அதன் பிறகும் தொடர்ந்தான்.

"ஐயா... கந்தசாமி ரூபாயைத் தந்துட்டு திரும்ப அவனே தோப்பை குத்தகைக்கு உங்ககிட்ட கேட்ட விஷயத்தையும் சொன்னான்."

"அ... ஆமாம் ரங்கா! அவன் மனைவியும் காலை கட்டிண்டு அழுதா. இங்க உனக்கும் முதல் நாளே இந்தத் தோப்பு ராசி இல்லேன்னு ஆயிடுத்து... அதனால நானும் 'சரி'ன்னு அவனையே பாத்துக்கச் சொல்லிட்டேன். நீ தப்பா எடுத்துக்காதே."

அவர் சொல்லவும் அவன் சன்னமாய் சிரித்தான்.

"ஏம்ப்பா... அவன் தலைகீழா, நான் அவன் கால்ல விழுந்து தோப்பை பார்த்துக்க சொன்ன மாதிரி சொன்னானா? அவன் அப்படி பேசக் கூடியவன்தான்."

''அவசரப்படறீங்களே... அவன் அப்படி எல்லாம் சொல்லல. 'இனி எனக்கு அந்தத் தோப்பே வேண்டாம். அங்க இனி யாராலையும் குப்பை கொட்ட முடியாது. சாராயக்கார இடும்பன் குறிவெச்சுட்டான். நீயும் இந்த சீரங்கத்தை விட்டே எங்காவது ஓடிப்போயிடுன்னு சொல்லிட்டுதான் போனான்...''

''ஓ... பயப்பட ஆரம்பிச்சுட்டானா?'' சக்கரவர்த்தியின் முகம் இருளத் தொடங்கியது. கவனித்துக்கொண்டேயிருந்த ரேவதி மெல்ல முன் வந்து ''இப்பக்கூட ஒன்னும் கெட்டுப் போகல மாமா எப்ப ரங்கனுக்கு எதுவும் ஆகலைன்னு தெரிஞ்சு போச்சோ அப்பவே தலைக்கு வந்தது தலப்பாவோட போயாச்சுன்னுதான் அர்த்தம். இனியும் அந்த தோப்பை கைல வெச்சுண்டு அந்த சாராயக்காரனையும் நினைச்சிண்டு பயந்துண்டு கிடக்க வேண்டாம். அதை வர்ற விலைக்கு வித்துடுவோம். இல்லையா அவ்வளவு மரங்களையும் வெட்டி எறிஞ்சுட்டு காம்ப்ளக்ஸ் பில்டிங் கட்டி வாடகைக்கு விடுவோம்.'' என்றாள்.

கச்சிதமாய் அவள் புருஷனும் வந்து சேர்ந்தான்.

சுயமாக ஷேவிங் செய்து கொண்டு துண்டால் முகம் துடைத்தபடி வந்தவன் ''ஆமாம்ப்பா... அந்த இடும்பன் கூட்டம் ஒரு சரியான அசுரக்கூட்டம். அவாளோட நம்மால் போராட முடியாது. இந்த விஷயத்துல ரேவதி சொல்றதுதான் சரி'' என்றான். ரேவதி முதல் தடவையாக தன் கணவனை ''அட என் சமர்த்தே'' என்கிற மாதிரி பார்த்தாள்.

சக்கரவர்த்தியிடம் சிந்தனையின் தீவிரம் கூடிக்கொண்டே போனது கவனித்துக்கொண்டேயிருந்த ரங்கனிடம் திரும்பவும் ஒரு சிரிப்பு.

''என்ன ரங்கா எதுக்குச் சிரிக்கறே?''

''இல்லய்யா... இடும்பன் ஒரு பூச்சி! அவனுக்கு இவ்வளவு பயப்பட்றீங்களேன்னுதான்...''

''அவன் பூச்சியா... என்னப்பா அவனால் பாதிக்கப்பட்ட நீயா இப்படிப் பேசறே?''

''என்னங்க நீங்க. சண்டைன்னா காயம் சகஜங்க. அதைப் போய் பாதிப்புங்கற அளவுக்கு பெருசா எடுத்துக்கக் கூடாதுங்க.''

''நீ என்ன சொல்றே?''

''தோப்பை நான் பாத்துக்கறேன்னு சொன்னதுல எந்த மாற்றமும் இல்லைங்க! அதைப் பத்தின கவலையை நீங்க விட்ருங்க. இனிமே என்னை நினைக்க அந்த இடும்பன்தாங்க கவலைப்படணும்.''

''ரங்கா நீ என்ன சொல்றே?''

அந்தத் தோப்பு இனிமே என் சொத்து... அதாவது என் சொத்து மாதிரிதான். இனிமே தாங்க எனக்கு பொறுப்பும் அதிகம்... என் வயித்துல தையல் போட்டுட்டான் அந்த இடும்பன். பதிலுக்கு நான் போட வேண்டாம்?''

கேள்வியையே பதிலாக்கிவிட்டு அதற்கு மேல் அங்கே நின்று கொண்டிராமல் வெளியேறியவன் வாசலைக் கடந்து தெருவில் இறங்கியபோது கச்சிதமாக எதிரில் மைதிலி!

அவள் கைகளில் ஜெயந்தி மாமி வைத்துக்கொடுத்திருந்த தாம்பூலம்... ரங்கனைப் பார்த்தவளுக்கு குபீர் என்று ஒரு பரவசம். சற்று திக்குமுக்காடத் தொடங்கினாள். அவன் ஒரு நூலளவு மெலிசான சிரிப்போடு அவளைக் கடக்க முற்படவும் அவனை 'என்னங்க...' என்று குரல் கொடுத்தாள். அவனும் நின்றான். பார்த்தான்.

''இப்ப எப்படி இருக்கு காயம்?'' அவள் சகஜமாக பேச முடியாதபடி சற்று திணறினாள்.

''அதுபாட்டும் இருக்கு.''

''நான்... நான் பதறிப் போய்ட்டேன்'' அவளிடம் அந்த பதிலை அவன் எதிர்பார்க்கவில்லை. ஆச்சரியத்துக்கு மாறினான்.

''இங்க எல்லாரும் தவிச்சுப் போயிட்டோம்.''

அவனிடம் ஆச்சரியம் மேலும் கூடியது. 'தனக்காக கவலைப் படக்கூட ஒருத்தியா?' முதல் தடவையாக ஒரு கேள்வி உருவாகி ஒரு விக்கிப்பும் தோன்றியபோது கச்சிதமாக தந்தி கொடுத்து அழைக்கப்பட்டவள் போல வத்சலாவும் வந்ததுதான் ஆச்சரியம். மைதிலி ரங்கனோடு பேசிக்கொண்டிருந்தது அவளுக்குள், நெருப்பை திரவமாக்கி அவள் மேல் தெளித்த மாதிரி இருந்தது.

அவள் வந்து விட்டது தெரிந்து மைதிலியும் "உடம்பைப் பார்த்துக் குங்கோ..." என்றபடி விலகப் போனாள். கைத்தாம்பூலம் பதற்றத்தில் கீழே விழுந்து வெற்றிலை ஒரு பக்கம் வாழைப்பழம் ஒரு பக்கம் ரவிக்கை துணி ஒரு பக்கம் என்று சிதறியது. அதை அவனே குனிந்து எடுத்து அவள் கையில் திரும்பத் தந்தான்.

அவளுக்கு அது தான் இழந்ததை அவன் மீட்டுத் தந்துவிட்டது போன்ற ஒரு பிரமிப்பைத்தான் மூட்டியது. வத்சலாவோ காயத் தொடங்கிவிட்டாள்.

"மைதிலி... என்ன இது? வெத்தல பாக்கு கீழ தவறதே? ஆகாதும்மா. இதுல இவன்லாம் அதை எடுத்துத்தந்தா அது பெருந்தீட்டு ஆச்சே? உனக்கென்ன இதெல்லாம் கூடவா தெரியாது...?"

அவள் கேட்ட விதமும் அந்தத் தொனியும் ரங்கனை வேகமாக விலக்கிற்று. மைதிலி சற்று ஷாக் அடித்தவள் போலாகி வீட்டினுள் நுழைந்தாள்.

வத்சலாவும் பின்தொடர்ந்தாள்.

உள்ளே நுழையும் போதே "என்னமோம்மா என் மனசுல பட்டதைக் கேட்டேன். எனக்கு உள்ள ஒண்ணு வெச்சிண்டு வெளிய ஒண்ணு பேச வராது." என்று ஹாலில் அமர்ந்திருந்த சக்கரவர்த்தி முதல் ஜானகி வரை எல்லோர் காதுகளிலும் விழுகின்ற மாதிரி பேசிக்கொண்டு உள்ளே நுழைந்தவளை அவர்களும் அதிர்வோடு பார்த்தனர்.

மைதிலி உள் நுழைந்த வேகத்தில் மரப்படிகளில் ஏறி மாடிக்குள் நுழைந்துவிட சக்கரவர்த்தியும் "என்னம்மா வரும் போதே வம்போட வர... என்ன விஷயம்?" என்று அவளை எதிர் கொண்டார்.

"வம்போடையா... என்னண்ணா நீங்கோ? எனக்கெதுக்கு வம்பும் தும்பும்... நானே இப்பதான் கொஞ்சம் போல நிமிந் துருக்கேன்."

"அப்ப இவ்வளவு நாளா விழுந்தா கிடந்தே?"

"என்னண்ணா தெரியாத மாதிரி கேட்கறேனே... வரதைரா பாத்ல என் பொண்ணு உஷா அவ மாமியார்கிட்ட என்ன பாடு பட்டுண்டு இருந்தாங்கறதுதான் இந்த ரெங்கத்துக்கே தெரியுமே...?"

"அப்படியா... எனக்கெதுவும் தெரியாது வத்சலா. ஏன் ஜானகி உனக்குத் தெரியுமா?"

"போறும்ணா... நான் ஏன் புலம்பினேன்னு கேளுங்கோ"

"திரும்பவுமா?"

சக்கரவர்த்தி ஐயங்காரிடம் ஒரு புது உற்சாகம் தென்பட்டது வத்சலாவுக்கும் தெரியாமல் இல்லை.

"அண்ணா நடந்ததை முதல்ல கேளுங்கோ... மைதிலி கைல இருந்த தாம்பூலம் தெருவுல கீழ விழுந்துடுத்து. அதை அந்த பொணந்தூக்கி ரங்கன் பொணங்கள தூக்கற கையால எடுத்து தரான். இவளும் இளிச்சிண்டு வாங்கிக்கறா. யாராவது பார்த்தா என்ன நினைப்பா?"

"இதுல நினைக்க என்ன இருக்கு?"

"என்னண்ணா நீங்கோ இவ்வளவு சாதாரணமா கேட்டுட்டேள். எல்லாரும் என்னைப் போல விகல்பமில்லாமலா எடுத்துப்பா? கண்ணு காது மூக்கு வெச்சுப் பேசமாட்டா?"

"நீ தப்பா எடுத்துக்கலேன்னு உன் வாயாலையே சொல்லிட்டி யோல்ல... அப்புறம் என்ன விடு! நீயே எடுத்துக்காதப்ப வேற யார் எடுத்துக்கப்போறா...? அடுத்து ரங்கனை பத்தி எனக்குத் தெரியும். இப்ப இந்த ஆத்துக்குள்ள ஒரு வெளிச்சத்தை நீ பாக்கறேன்னா அதுக்கு காரணமே அவன்தான்!"

என்று அவன் பாலான நன்றி உணர்ச்சியோடு அவர் பேசியது அவளை மிகவே அரட்டியது.

"என்னண்ணா நீங்க... அவன் ஒரு கூலிக்கு மாரடிக்கற பய. அவனைப் போய் என்னமோ ஆபத்பாந்தவன் மாதிரி நினைச் சுண்டு பேசிண்டிருக்கேள்... ஆமா இது என்ன ரூபா நோட்டுக் கட்டு இப்படி வெளிப்படையா டேபிள் மேல கிடக்கு?"

"நீ சொன்ன அந்தக் கூலிக்கு மாரடிக்கறவன் வேண்டாம்னு திருப்பிக் கொடுத்த கூலிதான் இது..." அவர் சொன்ன பதில் அவள் முதுகுத்தண்டை உரசிற்று. அவசரப்பட்டு பேசிவிட்டோமோ என்று கூட நினைத்துக்கொண்டாள். சக்கரவர்த்தியும் இனி உன்னோடு பேசுவது தவறு என்கிற மாதிரியில் மௌனமாக எழுந்து வீட்டு கொல்லைப்புறம் சென்றார். ஜானகியும் சமையல் கட்டு நோக்கி நகர்ந்தாள். அவர்கள் இருவருமே அவளை போகாமல் போகச் சொல்வது அவளுக்கு புரியாமல் இல்லை. செருப்பால் அடிபடுகிற மாதிரி உணர்ந்தாள். நல்லவேளை ரேவதி வந்து, வாங்கோ மாமி என்று தன் அறைக்கு அழைத்துச்சென்றாள்.

அறைக்குள்...

"எங்க மாமி இந்தப் பக்கம்?"

"நான் வந்தது இருக்கட்டும். இங்க இந்த ஆத்துல என்ன ரேவதி நடக்கறது?"

"ஏன் மாமி. திரும்ப புதுசா ஏதாவது வம்பு காதுல விழுந்ததா?"

"கண்ணுலயே விழுந்தது... அந்த ரங்கன் பொழச்சு வந்துட்டான் போல இருக்கு... கடங்காரக்கட்டைல போறவன்..."

சொல்லும்போதே கன்னத்து தசைகள் இறுகி முறுக்கிக் கொண்டன.

"ஆமாமா... இப்பதான் இங்க வந்து பெரிய சூரனாட்டம் அந்தத் தோப்பை பத்திக் கவலையே படாதீங்க. இனி அது என் சொத்து மாதிரின்னுட்டு போறான். என் மாமனாரும் அதைக்கேட்டு உச்சி குளிர்ந்து போயிட்டார்."

"பாத்தேன்... உன் மாமனார் பேச்சுல ஒரே எகத்தாளாம்! உன் நாத்தனாரோ, என்னமோ அவன்தான் அவளோட வருங்கால புருஷன் மாதிரி அவன் முன்னால சிலுத்துக்கறா, குலுக்கிக்கறா... உடம்பை ஜாக்ரதையா பார்த்துக்கோங்கோன்னு ஒரே கரிசனம் வேற."

"அப்படியா சங்கதி... நான் கூட பார்த்துண்டுதான் வரேன். மைதிலி ரங்கன்னாலே பிரைட் ஆயிட்றா."

"ஐயோ... என்னடி நீ சொல்றே உனக்கே அசிங்கமாயில்ல?"

"அசிங்கமா... அப்படி ஆகணும்கறதுதானே என் விருப்பம்" என்னடி குண்டைத்தூக்கிப் போடறே?

"நீங்க ஒண்ணு மாமி. இவ இருக்கற யோக்யதைக்கு எனக்கு தெரிஞ்சு ஒரு பய இவளை கல்யாணம் பண்ணிக்கப் போறதில்ல. இவளுக்கும் இந்த பொணந்தூக்கி மாதிரி யாராவது மாட்டினாத் தான் உண்டு. மாட்டட்டுங்கறேன். அப்பதானே இந்த வீட்டோட மானம் போகும். என் மாமனாருக்கும் புத்தி வரும்?" வத்சலா அரண்டு போய் ரேவதியை பார்த்தாள்.

"என்ன பாக்கறேள்... நான் சொல்றது சரிதானே?"

"அது... அது..."

"என்ன மாமி அது இதுன்னு மென்னு துப்பிண்டு..."

"இல்ல நான் தெரியாமதான் கேக்கறேன். உனக்கு இந்த ஆத்துல அப்படி யார் மேல பயம்?"

"எல்லார் மேலயும்தான் இங்க யார் என் பேச்சு கேட்கறா? என் ஆத்துக்காரரே அவா பக்கம்தானே? மாட்டுப் பொண்ணுன்னா சமையல்கட்டுல சமைக்கிற ஒரு சமையல் காரிங்கறதுதானே இந்த ஆத்துல அர்த்தம்..."

"இல்ல ரேவதி... நான் சொல்ல வர்றது கொஞ்சம் கேளு. நீ உன் கோபத்தை மைதிலி மேல காட்டு. அது நியாயம். பாவம் உன் மாமனார் மாமியார்..."

"என்ன மாமி... திடீர்ன்னு உங்களுக்கு என் மாமனார் மாமியார் மேல கரிசனம்?"

"கரிசனமெல்லாம் இல்ல. என் நோக்கமே வேற..."

"வேறன்னா... புரியுற மாதிரி சொல்லுங்கோ..."

"சொல்றேன். ஆனா நீ எனக்கு ஒத்தாசையா இருக்கணும்."

"விஷயம் என்னன்னு சொல்லாமலே ஒத்தாசையா இருன்னா எப்பிடி?"

"சொல்றேன்... சொல்றேன். நான் இப்ப சொல்லப்போறது உனக்கு கொஞ்சம் அதிர்ச்சியா இருக்கும். இருந்தாலும் பரவால்ல. சொல்லிடறேன்."

"முதல்ல சொல்லுங்கோ..."

"உன் நாத்தனார் மைதிலி எனக்கு மாட்டுப் பொண்ணு ஆகணும்."

வத்சலா சொல்லி முடிக்க ரேவதிக்கு நெற்றியில் நாலைந்து வரிகள் விழுந்து வாயும் பிளந்து கொண்டது.

"இப்படி வாயப் பொளந்துண்டா எப்படி... எனக்கு ஒரே டார்கெட்தான். அது இந்த ஆத்து சம்பந்தியாகி உன் மாமனார், மாமியார், நாத்தனார்னு மூணு பேரையும் சும்மா ஆடு ஆடுன்னு ஆட்டி வைக்கணும்."

"மாமி ஈ...!"

"ரங்கனோட ஒரு வேளை உன் நாத்தனார் ஓடிப்போறான்னு வை. நாலு நாள் தெருவே பேசும். அவ்வளவுதான்! இப்பவே அவனை கிட்டதட்ட ஆபத்பாந்தவனா நினைக்க ஆரம்பிச்சுட்ட உன் மாமனாரும் அந்தக் கல்யாணத்தை ஒத்துண்டாலும் ஒத்துண்டுடுவார். ஏன்னா இன்னிக்கு பிராம்ணாளுக்குள்ளேயே சைவா, மாத்வான்னு பேதமெல்லாம் பாக்காம கல்யாணம் பண்ணிக்கற ஒரு கலாசாரம் வேகமா பரவிண்டு வருது.

நம்ப காலத்துல பசங்களுக்குத்தான் டிமாண்டா இருந்தது.

அதனால நாமளும் பொண் பார்க்கற படலத்தின்போது கொலு பொம்மை மாதிரி நின்னு ஆடினோம். பாடினோம். கண்ட கண்ட கிழடுகள் கால்லல்லாம் விழுந்து விழுந்து எழுந்தோம். அப்புறமா போய் தபால் போடறதா சொல்வா. நாமளும் தபால் கரானுக்கு தவம் கிடந்தோம். இப்ப அப்படி எல்லாம் இல்லை. எல்லா பொண்களுமே பி.ஈ., எம்.ஈ'ன்னு படிச்சுட்டு கை நிறைய சம்பாதிக்கறதுகள். ஒருத்தி கூட பாவாடை தாவணியும் கட்ற தில்ல. எல்லாம் சுடிதான், மிடிதான்... என் பிள்ளை ஸ்ரீதரனே ஆத்துல இப்ப வேஷ்டி கட்டமாட்டேங்கறான். ஏதோ பெர மூடாசோ கரமுடாசோ முழங்காலுக்கு இருக்கு ஒரு அரை டிராயர்! அதைதான் போட்டுண்டு திரியறான்! இந்த காமெடியன் செந்தில் சினிமால போட்டுண்டு வந்தப்போ சிரிச்சோம். இப்ப வீட்டுக்கு வீடு எல்லா பசங்களுமே செந்திலாத்தான் இருக்கா."

"மாமி நீங்க எங்கையோ ஆரம்பிச்ச எங்கையோ போயிட்டேள்."

"நான் ஒருத்தி... நான் சொல்ல வந்தது இதைத்தான்! மைதிலி எனக்கு மாட்டுப் பொண்ணா வரணும். அவளை நான் ஆட்டிப் படைக்கணும். என்ன சொல்றே?"

"அதுக்கு உங்க பிள்ளை ஒத்துக்கணுமே...?"

"நீ வேறடி.... அவன் நான் நில்லுன்னா நிப்பான், ஓடுன்னா ஓடுவான்."

"அதெல்லாம் கல்யாணத்துக்கு முன்னாலயா இருக்கலாம். அப்புறமா மைதிலி மைதிலின்னு அவ பக்கம் தபலா வாசிச்சா என்ன பண்ணுவேள்?"

"அப்படி எல்லாம் விட்ற மாட்டேண்டி நீ ஏன் கவலைப் படறே? இங்க இவாகிட்ட நீ பட்றது ஒரு பங்குன்னா மைதிலி என்கிட்ட நூறு பர்சண்ட் அனுபவிப்பா. நான் உனக்கு கேரண்ட்டி தரேன். என்ன சொல்றே நீ?"

ரேவதி யோசிக்கத் தொடங்கினாள்.

"என்ன ரேவதி யோசிக்கறே...?"

"இல்ல உங்க குறி என் நாத்தனார் மேலயா இல்ல அந்தத் தென்னந்தோப்பு மேலயான்னு யோசிக்கறேன்."

ரெண்டு மேலயும் தான்"

"அதானே பார்த்தேன்..."

ரேவதி எக்களித்தாள்.

"நான் என்னத்தடி தப்பா சொல்லிட்டேன். உன் நாத்தனாரை எவனோ ஊர் பேர் தெரியாதவன் கல்யாணம் பண்ணிண்டு அந்தத்தோப்பை அவன் கொண்டு போகலாம். இதே ஊர்ல பொறந்து வளர்ந்து எல்லா நல்லது கெட்டதுலையும் பங்கெடுத் துண்ட நான் அடைய ஆசைப்படக் கூடாதா?"

"கூடாது மாமி... கூடவே கூடாது."

"ரேவதி!"

"அது எங்காத்துக்காரருக்குத் தான் சேரணும். வேணும்னா வைரமூக்குத்தி வைரத்தோடு, கார் பங்களான்னு என் மாமனாரை பிச்சு பிறாய்ஞ்சுக்கோங்கோ. நானும் கூட சேர்ந்துண்டு வத்சலா மாமி போல கிடையாது. அந்த ஸ்ரீதரன் ஒரு ஸ்ரீராமன்னு அள்ளி விடறேன். தோப்பை மனசுல வெச்சுண்டுல்லாம் உறவுக்கு ட்ரை பண்ணாதேள்."

"சரி... நானா இருக்கவும் என்கிட்ட சொல்லிட்டே... மத்த வாளா இருந்தா என்ன பண்ணியிருப்பே?"

"யாரா இருந்தாலும் என் பதில் இதுதான் மாமி. அது எங்களுக்கு வேணும்."

"பைத்தியக்காரி... உன் மாமனாரை பத்தி தெரிஞ்சுதான் பேசறியா? அவர் ஒரு முடிவு எடுத்தா எடுத்ததுதாங்கறது உனக்குத் தெரியாதா?"

"அதுக்காக நீங்கள்ளாம் எங்காத்து தோப்பை அப்படியே லபக்கிக்க பார்த்தா அது என்ன மாமி நியாயம்?"

"நீங்களாம்னா...? உன் தொனியே சரியில்லையே..."

"கொஞ்சம் உங்க கடந்த காலத்தைத் திரும்பிப்பாருங்கோ... நீங்க ஒண்ணும் பரம்பரை பணக்காரா கிடையாது. அடுப்படில பரிசாரகம் பாத்த குடும்பம்தான் உங்க குடும்பம்..."

"பரிசாரகம் ஒண்ணும் கேவலமில்லை ரேவதி"

"நான் கேவலம்னு எப்ப சொன்னேன். எங்களப் போல மிட்டா மிராசு இல்லைங்கறத சொல்ல வந்தேன்..."

"ஒத்துக்கறேன்... ஆனா நீ சொல்ற உயரத்துல இருக்கறவா உன் நாத்தனார் ஜாதகத்துக்கு கிட்டையே வரமாட்டா. நான் தைரியமா பண்ணிக்கிறேன்னு சொல்றேன். அதுக்கு அந்த ரிஸ்க்குக்கு இந்த பெனிஃபிட் கூட இல்லன்னா எப்படி?"

வத்சலாவின் கேள்வி நன்கு வேலை செய்தது. ரேவதி முகத்தில் தீவிரமாய் சிந்தனை ஓடியது.

"என்ன ரொம்ப யோசிக்கறே... நீயும் நானும் இந்த மட்டுல கூட்டணி அமைச்சா இந்த ஆத்தையே உருட்டி உருட்டி விளையாடலாம்."

"அது சரி மாமி... ஆனா பலகோடி மதிப்புள்ள சொத்தை அதுக்காக விட்டுத்தர எனக்கு மனசு வரமாட்டேங்கறதே?"

"சரிடி... உனக்கு பாதி என் பிள்ளைக்கு பாதி. இந்த டீல் ஓ.கே.யா?"

வத்சலா இழுத்து ஒரே பிடி பிடித்தாள்.

"நாளைக்கு பல்டி அடிச்சு பேச்சு மாறமாட்டேனே..."

"சத்யம் வேணா பண்றேன் வேணுமா?"

"அப்ப சரி" புன்னகையோடு ரேவதி வத்சலாவின் கையை தேடிப்பிடித்து குலுக்கினாள். பாகிஸ்தானும் சீனாவும் ஒன்றாகி விட்ட மாதிரி இருந்தது.

"ரேவதி... நீ வேகமா கல்யாணப் பேச்சை எடுத்து அதை அப்படியே எங்காத்து பக்கம் திருப்பி விடு. முதல்ல உன் ஆம்படையான் மனசை மாத்து."

"அது இன்னிக்கு ராத்திரியே முடிஞ்சிடும். இவரைக் கொண்டே மாமனாரையும் சாய்ச்சிடுவேன். டோண்ட் ஒர்ரி..."

கண் சிமிட்டினாள் ரேவதி. வத்சலாவும் இறுதி ஒப்பந்தம் கையெழுத்தானது போல குஷியோடு கிளம்பினாள். பாவம் மைதிலி இது தெரியாமல் ஸ்ரீராமஜெயம் எழுதிக் கொண்டிருந்தாள்!

★★★

புலியூர் காட்டுப் பகுதி!

நார்க்கட்டிலில் இடும்பன். சில அடி தொலைவில் அடர்ந்த மரக்கூட்டங்களுக்கு நடுவில் சாராயம் காய்ச்சும் பணி மும்முரமாக நடந்து கொண்டிருந்தது.

யாரோ நான்கு பேர் அழுகின வாழைப்பழத்தில் இருந்து ஊசிப்போன அன்னாசி வரை ஒன்றாக்கி கால்களாலேயே அதை சேற்றை மிதிப்பது போல மிதித்துக் குழைத்துக்கொண்டிருந்தனர். பழைய பேட்டரியின் உடைந்த கார்பன் தூள், ஊமத்தங்காய், கருப்பட்டி வெல்லம் என்று சாராய மூலப்பொருள்களை ஒரு கூட்டம் கூறுகட்டி சேமித்துக்கொண்டிருந்தது.

ஊடே ஒரு யமஹா பைக் நுழைந்து நின்றது!

பைக்கில் ஒரு மைனர்! இறங்கியவன் நேராக இடும்பனிடம் வந்து "அந்த பய தப்பிச்சிக்கிட்டான் பா. அது மட்டுமில்ல காவேரி கரைல தோப்பை ஒட்டி முள்வேலி வேற போட்டுக் கிட்டிருக்கான். அவனுக்கு நம்மள நெனைச்சு கொஞ்சம்கூட பயமில்ல. அவன என்ன பண்ணலாம்?" கேட்டான்.

இடும்பன் முகத்தில் தீவி சிந்தனை!

21

மனமுடைத்த மனிதரே மனிதரென்றாக, அவர்
மனம் கொண்ட ஒலியதே மொழியென்றானது!
மொழியதனில் தமிழதுவும் முதலென்றாக,
அதன் வழியதனில் பலப்பலவும் உலகுண்டானது!
முதலான தமிழதுவும் அமிழ்தென்றாகிட ஆழ்வர்
குரலாலே அவ்வளவும் பாசுரங்களானது! அமிழ்தான
பாசுரங்களே இன்றளவும், தமிழின்
தகைமைக்கும் உயிர்மைக்கும் வித்தானது!

இடும்பன் முகத்தில் தீவிரமாய் எண்ணங்கள் ஓட ஆரம்பித்தன! உலகில் எவ்வளவோ உயிரினங்கள்... இதில் தாவர பட்சிணிகள் மாமிச பட்சிணிகள் என்று இரு வேறு பிரிவுகள் வேறு... தப்பித்தவறியும் ஒரு பசுவானது மாமிசத்தை உண்டதில்லை. ஒரு புலியும் துளி புல்லைக் கடித்ததில்லை. அது அதற்கு அதனதன் இயல்புகள்.

ஆனால் மனிதர்களிடம் மட்டும் இம்மட்டில் ஒரு ஒழுங்கில்லை. மாமிசம் உண்பவனும் மனிதன்தான். உண்ணாதவனும் மனிதன்தான். தோற்றத்தை வைத்து எடைப்பாடுகள் கிடையாது. உள்ளுக்குள்ளே ஒளிந்திருக்கும் அம்சங்களை வைத்தே ஒருவனை எடையிட முடிகிறது.

அம்மட்டில் இடும்பன் ஒரு மனிதனாக காட்சி தந்த போதிலும் ஒரு புலியைப் போலவே யோசித்தான். ரங்கன் பற்றிய செய்தியோடு வந்த இளைஞனைப் பார்த்து "அவனை அப்படியே விட்றக் கூடாதுடா... விட்டா நாம தொழில் பண்ண முடியாது. இந்த தொழில்ல கோட்டை கட்டிட்டு இதை இடிக்கவும் என்னால முடியாது" என்றான் சற்று கவிதையாக.

"என்னண்ணே நீ... அவன் ஒரு சின்ன பிரச்னைண்ணே! இன்னிக்கே அவன் கதையை முடிக்க முடியும்ணே... இதுக்கு போய் இவ்வளவு கவலைப்பட்றே நீ..."

என்றான் அந்த பைக்கில் வந்தவன்.

"இல்லடா... அவனுக்கு சுழி கொஞ்சம் நல்லாயிருக்கு! எப்ப ஒருத்தன் என் முதல் அடிக்கு தப்பிட்டானோ அப்ப அவன் ஜாதகம்! பலமாத்தான் இருக்கணும். அவனை ரொம்ப கவனமாகத்தான் தொடணும்."

"அடப் போண்ணே நீ வேற... வெட்டிக் கூறுபோட்டாலும் தேக்க நாதி இல்லாத பயண்ணே அவன். அம்மா மண்டபத்துல இருக்கற அய்யிருங்களுக்கும் இவனைக் கண்டா கொஞ்சமும் ஆகாது. காவேரியாத்தாளை ஒரு கொலகாரி, பஜாரின்னுல்லாம் வையறவனாம் அந்தப் பய! பொணம் விழுந்தா எடுக்கறதுக்குத் தான் ஐயா ஆத்துக்குள்ள இறங்குவாராம்! மத்தபடி மாந்தோப்பு கிணத்துல தான் குளிப்பானாம். காவிரி தண்ணில வாயக்கூட கொப்பளிக்க மாட்டானாம். அம்மட்டு வெடாக புடிச்சவனாம்..."

"நீ இப்படி எல்லாம் சொல்லச் சொல்ல அவனப் பத்தின என் அபிப்ராயம் அதிகமாயிட்டு தாண்டா போகுது. மனகல ஒரு திட்டமும் திடமும் உள்ளவங்கதான் இப்படி இருப்பாங்க."

"சரிண்ணே... இப்ப நாம என்ன பண்ணலாம்கறே?"

"விட்டுப்பிடிப்போம்..."

"அப்ப சரக்கை அதுவரை எங்க வைக்க?"

"எங்கையாவது வையுங்கடா அந்த தோப்பு ஒண்ணு தான் இந்த ஊர்லையே இருக்குதா என்ன?"

"இப்படி தெரிஞ்சும் தெரியாத மாதிரி பேசினா நான் என்னத்தச் சொல்ல...? அங்க இருந்து தான் பாலம் பக்கம் பாலத்துமேல பார்ட்டிங்கள வரச்சொல்லி ஊரல் டின்னுங்கள பரிசல்ல போட்டு கொண்டுகிட்டு வந்து ஏத்தி விட்றதுக்கு பத்து நிமிசம் போதும். கேஸ் வேணுமின்னு காசவாங்கிகிட்ட பின் னாலயும் போலீஸ் வந்தாலும் அங்கன்னா சிக்கல் இல்லை. அதிகபட்சமா ஆத்து மையத்துல பத்தடி ஆழம் தான். ஊரலை உள்ள போட்டாலும் எடுக்கறது சுலபம்.

"இதோ பார்... நீ பேசினதையே பேசிகிட்டு இருக்காம போய் ஆக வேண்டியதப் பாரு. அவன் விசயத்தை என்கிட்ட விட்ருங்க! தடயமே இல்லாம அவன் கதையை நானே முடிக்கிறேன். உங்கள விட்டா மிச்சம் வெச்சுட்டு வந்து சிக்கல்ல விட்ருவீங்க. இனி ஒரு வார்த்தை பேசக் கூடாது நீ."

இடும்பன் மீசையை நீவிக்கொண்டு சொன்ன விதமே அலாதி யாக இருந்தது. அவனும் அதற்கு மேல் பதில் பேச விரும்ப வில்லை!

★★★

சாத்தார வீதியில் சக்கையான கூட்டம்! நல்ல கீரைக் கட்டுக்கும், கேரட்டுக்கும் அலைபாய்ந்தபடி இருந்தான் சீமா!

புசுபுசுவென பச்சை பொசிய ஒருத்தி கீரைக்கடை போட்டிருந் தாள். அவளிடம் ஒரு மாமி இல்லாத பேரம் பேசிக்கொண்டு இருந்தாள். சீமா அவளிடம் வந்து அவள் சொன்ன விலைக்கு கட்டுக்களை வாங்கிப் போட்டுக் கொண்டான். ஐந்து ரூபாய்க்கு மூன்று மணத்தக்காளி கீரைக்கட்டுகள்!

மாமிக்கு சன்னமாய் கோபம் வந்துவிட்டது.

"ஏண்டாப்பா நான் நாலு கட்டு கேட்டுண்டிருக்கேன். நீ இப்படி பொசுக்குன்னு வாங்கிண்டு போனா என்ன அர்த்தம்?" என்று அவனைப் பிடித்து இழுத்தாள்.

"விடுங்கோ மாமி... இவ வயசைப் பாருங்கோ, நிச்சயம் அறுபதுக்கு மேல இருக்கும். அக்கடான்னு இருக்க வேண்டிய வயசுலயும் உழைக்கறா! இவகிட்டையா நம்ம வாய் ஜாலத்தையும்

வீர தீரத்தையும் காட்டணும்? போய் பூ...லைக் கட...லையும், தங்க நடைக்கடைலயும் காட்டுங்கோ. ஏத்தனையோ இருபத்திரண்டு காரட்டுன்னு பதினெட்டு காரட்டையும் பதினைஞ் காரட்டையும் பீரோவுக்குள்ள வெச்சிண்டுருக்கேன் தெரியுமா?" ஒரே போடாய் போட்டுவிட்டு, நடந்தான். யாரிடமும் பேரமே பேசவில்லை. 'காய்கறி நல்ல விலை விற்க வேண்டும். அது ஒரு அன்றாட ஜென்மம். நமக்கான நல்ல விதமான சக்தி ஆகாரம் அது. முகப்பவுடருக்கும், ஆடம்பரமான ஆடைகளுக்கும் கொடுப் பதற்கு இதற்கு தாராளமாய் கொடுக்கலாம்!" என்பது சீமாவின் கொள்கை.

வழியில் எதிர்ப்பட்டார் வம்பு பிடித்த தெரிந்த மனிதர் ஒருவர்.

"யாரு சீமாவா.... என்ன இது நீயெல்லாம் காய்வாங்க வந்துண்டு உன் ஆத்துக்காரி ஊரில இல்லையா?"

"அது சரி... ஏன் மாமா நான்லாம் வந்து காய் வாங்கக் கூடாதா?"

"உனக்கு இளசு தெரியுமா, முத்தல் தெரியுமா? பொம்மனாட்டி கன்னா கண்ணுலையே தரம் பிரிச்சிடுவாளே?"

"இப்ப இதுதான் தேசிய பிரச்சினையா மாமா?"

"பாத்தியா... விளையாட்டா பேசினா விநயமா பதில் சொல்றியே. ஆமா உன் தங்கை மைதிலிக்கு வரன் பாத்துண்டு இருந்தேளே அமைஞ்சுடுத்தா?"

"பாத்துண்டே இருக்கோம்."

"இந்த பதிலேயே எத்தனை வருஷமா சொல்வேள்? ஆமா உன் தங்கை என்ன அஜித் மாதிரி, இல்லேன்னா சூர்யா மாதிரிதான் மாப்ளை வேணும்னு அடம் பிடிக்கறாளா என்ன?"

அவரின் கேள்விக்கு பதில் சொல்லாமல் அவரை ஒரு மாதிரி பார்க்கத் தொடங்கினாள் சீமா.

"என்னப்பா பதிலைக் காணோம்?"

"சொல்லிடுவேன்... ஆனா உங்க வயசுக்காக பாக்கறேன்."

"நீ என்ன சொல்றே?"

"மூடிண்டு காய் வாங்க வந்தா அதை வாங்கிண்டு போங்கோ. வாய்ப்பிடுங்கற வேலை எல்லாம் வேண்டாம். என் தங்கைக்கு அஜித்தையும் தெரியாது. சூர்யாவையும் தெரியாது. நாங்க பார்த்து ஒரு நொண்டிய கட்டிக்கோன்னாலும் சந்தோஷமா ஏத்துக்கறவ அவ. அதுக்காக அவளை உங்கள மாதிரி வம்புக்கு அலையற குடும்பத்துல தள்றதுல எங்களுக்குத்தான் விருப்பம் இல்லை... புரிஞ்சுக்கோங்கோ..."

ஒரே போடாய் போட்டுவிட்டு நடந்தான். வழியில் கோவிந்தனின் சைக்கிள் கடையும், கடை பெஞ்சில் ரங்கனும் கண்ணில் பட்டனர். ரங்கன் கோவிந்தனுக்கு உதவியாக ட்யூப் ஒன்றின் பஞ்சர் ஆன பாகத்தை உப்புக் காகிதத்தால் தேய்த்துக் கொண்டிருந்தான்.

நிமிரவும் எதிரில் காய்கறிகளோடு சீமா!

ரங்கன் தன்னையும் அறியாமல் எழுந்து நின்று சிரித்தான்.

"என்ன ரங்கா... நீ தோப்புல இருப்பேன்னு நினைச்சேன், இங்க இருக்கே."

"அங்க வேலியெல்லாம் போட்டு முடிச்சிட்டேங்க. ஒரு நாய் ஒண்ணுக்கு சொல்லியிருந்தேன். இங்க கோவிந்தன் கடைக்கு கொண்டுகிட்டு வர்றதா சொல்லியிருந்தார். எனக்கு வேண்டப் பட்ட ஒருத்தர்.

"நாயா... தோப்பு காவலுக்கு உனக்கு துணையாவா?"

"ஆமாங்க... ஒரு குட்டி நாட்டு நாய் ஒண்ணு! ஒரு நாள் காவிரி ஆத்துல அடிச்சிகிட்டு வந்துச்சு. நான்தான் காப்பாத்தி என் கூடவே வெச்சுகிட்டிருந்தேன். அப்புறமா வேலாயுதம் பாளையம் பக்கமாவெத்தலைக் கொடிக்கால் காரர் ஒருத்தர் நான் வளர்க்கறேன்னு கேட்டு வாங்கிட்டு போனாரு. இப்ப நல்லா வளர்ந்துடிச்சி. திருப்பி எனக்கு வேணும்னு கேட்டேன். மாருதி ஆம்னில போட்டு எடுத்துகிட்டு வரேன்னாரு. காத்துகிட்டு இருக்கேன்."

"உனக்கு ஒண்ணும் பயமில்லையே?"

"அப்படி என்னா?"

"சபாஷ்... இந்த தைரியம்தான் உன்கிட்ட எனக்கு ரொம்ப பிடிச்ச விஷயம். பை த பை உன்கிட்ட நான் ஒரு விஷயம் சொல்லணும்னு... சொல்லலாமா?"

"தாராளமா... இதுல என்னங்க கேள்வி?"

"தயவு செய்து இனி இந்த பொணம்தூக்கற உன் தொழிலை விட்டுடேன்."

"சீமாவின் கோரிக்கை ஒரு விநாடி ரங்கன் நெஞ்சில் திம்மென்று குத்தியது!

கோவிந்தன் விருட்டென்று திரும்பினான்.

"தம்பி... நல்லா சொல்லுங்க. நான் சொல்லிச் சொல்லி ஓய்ந்து போய்ட்டேன்" என்றான் தன் பங்கிற்கு!

ரங்கனோ மௌனமாகவே இருந்தான்.

"என்ன ரங்கா பேசமாட்டேங்கறே?"

"என்னத்தங்க பேச... நான் என்னமோ எம்ப்ளாய்மெண்ட் ஆபீஸ்ல பதிவு பண்ணி அப்புறமா இண்டர்வியூவுக்கெல்லாம் போயா இந்த வேலையை வாங்கினேன். வந்து ஒட்டிகிக்க! ஜனங்களும் விடமாட்டேங்கறாங்க."

"உனக்கு இதைப் பாக்கறதுல இஷ்டமில்லை தானே?"

"காவிரில யாருமே சாகக்கூடாது. இது என் முதல் ஆசை. அடுத்து உயிர்போன பிணத்தைத் தேடி எடுத்துத்தான்னு யாரும் என்கிட்ட வந்து நிக்கவும் கூடாது. இது என் இரண்டாவது ஆசை. என் வாழ்க்கைல எப்பவும் பொணங்களையே தொட்டு தூக்கி யிருக்கேன். பொணங்கள தூக்கற உதவியைவிட பொணமாகப் போறவங்களுக்கு உயிர் கொடுக்கற உதவி பெரிசு இல்லையா? ஆனா அதுக்கு மட்டும் வாய்ப்பே எனக்கு வரமாட்டேங்குதே?"

ரங்கனின் மனது எப்படிப்பட்டது என்பது அந்த நொடியில் சீமாவுக்கு புரிந்து போயிற்று.

"நல்ல எண்ணம்தான். இப்படியே இரு. யாராவது வந்து இனி பொணம் விழுந்துடுத்து தேடி எடுத்துத்தான்னா முடியாதுன்னு துணிச்சலா சொல்லு. ஏன்னா நீ இனி எங்காத்து தோப்புக்கு

காவல்காரன் உனக்கு நான் அப்பாகிட்ட சொல்லி நல்ல சம்பளம் போட்டுத்தரச் சொல்றேன்.''

சீமா அவன் தோள்களை வாஞ்சையாக பேசியபடியே தட்ட வந்தவன் இடையில் அப்படியே கையை வளைத்து ஒடித்துக் கொண்டான். அதை கோவிந்தனும் கவனித்தான். சீமா விலகவும் சிரித்தபடியே.

''என்னடா அய்யருக்கு திடீர்னு உன் மேல அக்கறை வந்து பார்த்தேன். நீ இப்ப தோப்புக்கு காவல்காரனாயிட்டே பாரு! அதான்'' என்றான். கச்சிதமாய் மாருதிவேன் ஒன்றும் வந்து நின்றது. உள்ளிருந்து பாய்ச்சலான பாய்ச்சலில் ரங்கனை நோக்கி ஓடி வந்தது ஒரு வெள்ளை நிற நாய்!

நல்ல உயரம்-வாளிப்பு-காதல் கொள்ளவைக்கும் நேசமான பார்வை.

ரங்கனும் அதை அணைத்துக்கொண்டான்!

''கிட்டத்தட்ட மூணு வருசமா நான்தான் வளக்கறேன். ஆனா இந்த வெள்ளையனுக்கு ரங்கன்னா மட்டும் உசிரு. பாரு எப்படிப் போய் ஒட்டிகிட்டிருக்கு'' என்று சற்று பொறாமைப் பட்டார் வேன்காரர்.

''நீங்க உசுரை வளக்கறீங்க... ஆனா ரங்கன் உசுரைக் கொடுத்த வனாச்சே!''

கோவிந்தனுக்கும் பஞ்ச் டயலாக் வரும் என்பது அப்போது தான் ரங்கனுக்கும் தெரிந்தது.

''ரங்கா... இடும்பன் கோஷ்டி குறி வெச்சிருக்குன்னு தெரிஞ்ச தாலதான் வெள்ளையன உன்கிட்ட திரும்ப கொண்டு வந்து விட்டிருக்கேன். வெள்ளையன் நாலு புலிக்கு சமம். கட்டுப் பாட்டுலயும் ஒரு நல்ல ராணுவவீரன் மாதிரி. கவனமாப் பார்த்துக்கோ...''

அந்த வேன்காரர் சொல்லிவிட்டுக் கிளம்பினார். கோவிந்தன் அந்த நாயை வெறித்தவாறு ''இவனுக்கு நான் ஒருத்தன் தான்னு நினைச்சுகிட்டிருந்தேன். நீ இப்ப போட்டிக்கு வந்துட்டியாக்கும்'' என்றான்.

ரங்கன் சிரித்தான்.

வீட்டுக்குள் நுழையும்போதே சீமா முகத்தில் ஒரு ஒடுக்கம் தெரிந்ததை அவன் மனைவி ரேவதி பார்த்துவிட்டான். உடனேயே போட்டு வாங்க ஆரம்பித்தாள்.

''என்னன்னா... காய்வாங்கப் போன இடத்துல யாராவது வாயப் பிடுங்கினாளா என்ன?''

கச்சிதமான அந்த கேள்வி முன் ஒரு அதிர்வோடு நிமிர்ந்தான் சீமா!

''உனக்கு எப்படிடி தெரியும்''

''நானும் காய் வாங்கப் போறவ தானே... இதைவிட நீங்க கோயிலுக்குள்ள உற்சவம் பாக்கப்போகணும். அப்ப கடைத் தெருவே தேவலாம்னு தோணிடும்.''

''அது என்னவோ தெரியில, யாருக்கும் அவா அவா வீடே தெரியறதில்ல. அடுத்த வீட்டு மேலதான் கண்ணாயிருக்கா?''

''இதைத்தானே சமூகம்னு எல்லாரும் சொல்லிக்கறோம்.''

''அதுசரி என்ன நடந்தது யார் என்ன பேசினான்னே தெரியாம நீ பேசிண்டு போனா என்ன அர்த்தம்?''

''யாரா இருந்தா என்ன... மைதிலி பத்திதான் பேசியிருப்பா? எப்ப கல்யாணம் வரன் அமைஞ்சதா-அமைஞ்சதுன்னா யார் மாப்ளை எவ்வளவு பவுன் போடப் போறேள்...? இதை விட்டா கேள்விகளே கிடையாதுங்கறது எனக்குத் தெரியாதா என்ன?''

''பரவால்லியே... முகத்தை பார்த்து அருள் வாக்கு சொல்ற சாமியார்கள் மாதிரி அப்படியே சொல்றியே.''

''நான் இன்னும் கூட சொல்வேன். ஆனா நான் பேசினாதான் உங்க யாருக்குமே பிடிக்காதே.''

''பிடிக்கற மாதிரி நீ பேசறதில்ல. அதுக்கு நாங்க என்னடி பண்ண முடியும்?''

''சரி இப்ப பேசறேன்-கேப்பேளா?''

''நீ பேசி முடி-அப்புறம் சொல்றேன்.''

"மைதிலி கல்யாணம் நல்லபடியா ஒரு குந்தகமும் இல்லாதபடி படி நடக்க ஒரு வழி இருக்கு. அதுவும் வேகமா நம்ம ஸ்ரீரங்கத் துலையே நடக்க..."

"நம்ம ஜாதில கல்யாணம்கறது பொண்ணோட ஊர்ல தானேடி நடக்கும். இதுல என்ன இருக்கு பெருசா?"

"மாப்ளையும் ஸ்ரீரங்கமா இருந்தா இன்னும் சௌகர்யம் தானே?"

"நம்ம அந்தஸ்துக்கும் தேஜசுக்கும் ஏத்த மாறி யாருடி இருக்கா?"

"ஏன் இல்லாம... அந்தஸ்துல வேணா கொஞ்சம் தாழ இருக் கலாம். ஆனா தேஜஸ், அப்புறம் உத்யோகம், சம்பளம்னு எல்லாத்துலயும் நம்ம மைதிலிக்கு ஏத்தவன் இதே ஊர்ல இதே தெருவுலயே இருக்கான்."

"அது யாருடி எனக்கு தெரியாம அப்படி ஒருத்தன்..."

"சொன்னா அதிர்ச்சி அடையக்கூடாது."

"அப்ப வில்லங்கமா யாரையோ சொல்லப் போறேன்னு சொல்லு."

"வில்லங்கமா இல்ல... நல்லங்கமா..."

"வாலி மாதிரி சந்தத்துல போகாதே. விஷயத்துக்குவா..."

"சொல்லிடுவேன்."

"அட சொல்லித்தொலைடி..."

"சீமா சற்று கோபப்பட மாடியில் இருந்து மைதிலியும் சக்கரவர்த்தியும் ஒன்றாக கீழே இறங்கி வர அவர்களையும் பார்த்தபடியே "நம்ம தேசிகாச்சாரி மாமாவோட புள்ள ஸ்ரீதரனைத்தான் சொன்னேன். மாசம் நாப்பதாயிரம் சம்பளமாம். நாம பாக்க நம்ம கண் எதிர்ல வளர்ந்த பிள்ளை. ஒரு கெட்ட பழக்கம் கிடையாது. திவ்யபிரபந்தம் அவ்வளவும் தலைகீழ் பாடம் வேற... என்ன... பர்ச்சாரகனா அவன் தாத்தா. தாத் தாவுக்கு தாத்தாவெல்லாம் இருந்துருக்கா. அதுவும் அந்தக் காலத்துல. இப்ப தான் அவ நன்னாவே மேல வந்துட்டாளே...?

ரேவதி கேட்டு நிறுத்த சீமா பதிலுக்கு பட்டென்று கோபம் கொள்ளாமல் யோசிக்க ஆரம்பிக்க... சக்கரவர்த்தியும் எதுவும் பேசாதபடி போய் ஊஞ்சலில் அமர்ந்தவராக "ஸ்ரீதரன் நல்ல பிள்ளதான்" என்றிட மைதிலிக்கு இதயத்தை தேனீ ஒன்று கிள்ளிக்குதறத் தொடங்கிவிட்டது போல இருந்தது!

22

"மண் கொண்ட பிறப்பதில் மண்ணுயிர் மிளிர்ந்திட
கண் கண்ட வழிகள் ஆறு!
விண் கொண்டு சேர்த்திட ஆறதுவும் வழியாயினும்
கண் ணனவன் கீதை மொழி ஏழு!
பண்பட்ட நெஞ்சிற்கு கீதை வழிபாதை தந்த
புண்டரீகன் அட்சரங்கள் எட்டு!
எண்ணமெலாம் எட்டானால் அடைந்திடுமே
திண்ணமாய் ஆத்மாவும் வைகுந்தம் தொட்டு..."

மைதிலியின் முகம் போன போக்கை ரேவதியும் கவனித்தாள். அவளுக்கு ஸ்ரீதரன் பற்றி பேசுவதிலேயே இஷ்டமில்லை என்பது தெரிந்து விட்டது. அதுவே ரேவதியை வேகமாக தூண்டிவிட்டது. நமது எதிரிக்கு எது பிடிக்காதோ அதுதானே நமக்கு இன்பம்?

"மாமா இப்பதான் நான் பேசறது நீங்க சரியா புரிஞ்சுண்டு 'சரி'ன்னு ஒத்துண்டுருக்கேள். பக்கத்துலயே புதையல வெச்சுண்டு பக்கத்து ஊர்ல கடன் கேட்டு கிளம்பின மாதிரி இருந்தது முந்தி நம்ம நிலை. இனி அது மாறினா போதும்."

ரேவதி சற்று பாட்டி மாதிரி பேசியது, சீமாவுக்கே ஆச்சரியத்தை அளித்துவிட்டது. அவளை ஒரு மாதிரி சிரிப்புடன் பார்த்தான். அவளுக்கும் புரிந்தது.

"இப்படி சிரிச்சா என்ன அர்த்தம்? போங்கோ. போய் முதல்ல கேலண்டரை எடுத்து நல்ல நாழி எப்பன்னு பாருங்கோ. நானும்

"மைதிலி கல்யாணம் நல்லபடியா ஒரு குந்தகமும் இல்லாதபடி படி நடக்க ஒரு வழி இருக்கு. அதுவும் வேகமா நம்ம ஸ்ரீரங்கத் துலையே நடக்க..."

"நம்ம ஜாதில கல்யாணம்கறது பொண்ணோட ஊர்ல தானேடி நடக்கும். இதுல என்ன இருக்கு பெருசா?"

"மாப்ளையும் ஸ்ரீரங்கமா இருந்தா இன்னும் சௌகர்யம் தானே?"

"நம்ம அந்தஸ்துக்கும் தேஜசுக்கும் ஏத்த மாறி யாருடி இருக்கா?"

"ஏன் இல்லாம... அந்தஸ்துல வேணா கொஞ்சம் தாழ இருக் கலாம். ஆனா தேஜஸ், அப்புறம் உத்யோகம், சம்பளம்னு எல்லாத்துலயும் நம்ம மைதிலிக்கு ஏத்தவன் இதே ஊர்ல இதே தெருவுலயே இருக்கான்."

"அது யாருடி எனக்கு தெரியாம அப்படி ஒருத்தன்..."

"சொன்னா அதிர்ச்சி அடையக்கூடாது."

"அப்ப வில்லங்கமா யாரையோ சொல்லப் போறேன்னு சொல்லு."

"வில்லங்கமா இல்ல... நல்லங்கமா..."

"வாலி மாதிரி சந்தத்துல போகாதே. விஷயத்துக்குவா..."

"சொல்லிடுவேன்."

"அட சொல்லித்தொலைடி..."

"சீமா சற்று கோபப்பட மாடியில் இருந்து மைதிலியும் சக்கரவர்த்தியும் ஒன்றாக கீழே இறங்கி வர அவர்களையும் பார்த்தபடியே "நம்ம தேசிகாச்சாரி மாமாவோட புள்ள ஸ்ரீதரனைத்தான் சொன்னேன். மாசம் நாப்பதாயிரம் சம்பளமாம். நாம பாக்க நம்ம கண் எதிர்ல வளர்ந்த பிள்ளை. ஒரு கெட்ட பழக்கம் கிடையாது. திவ்யபிரபந்தம் அவ்வளவும் தலைகீழ் பாடம் வேற... என்ன... பர்ச்சாரகனா அவன் தாத்தா. தாத் தாவுக்கு தாத்தாவெல்லாம் இருந்துருக்கா. அதுவும் அந்தக் காலத்துல. இப்ப தான் அவ நன்னாவே மேல வந்துட்டாளே...?

ரேவதி கேட்டு நிறுத்த சீமா பதிலுக்கு பட்டென்று கோபம் கொள்ளாமல் யோசிக்க ஆரம்பிக்க... சக்கரவர்த்தியும் எதுவும் பேசாதபடி போய் ஊஞ்சலில் அமர்ந்தவராக "ஸ்ரீதரன் நல்ல பிள்ளதான்" என்றிட மைதிலிக்கு இதயத்தை தேனீ ஒன்று கிள்ளிக்குதறத் தொடங்கிவிட்டது போல இருந்தது!

22

"மண் கொண்ட பிறப்பதில் மண்ணுயிர் மிளிர்ந்திட
கண் கண்ட வழிகள் ஆறு!
விண் கொண்டு சேர்த்திட ஆறதுவும் வழியாயினும்
கண் ணனவன் கீதை மொழி ஏழு!
பண்பட்ட நெஞ்சிற்கு கீதை வழிபாதை தந்த
புண்டரீகன் அட்சரங்கள் எட்டு!
எண்ணமெலாம் எட்டானால் அடைந்திடுமே
திண்ணமாய் ஆத்மாவும் வைகுந்தம் தொட்டு..."

மைதிலியின் முகம் போன போக்கை ரேவதியும் கவனித்தாள். அவளுக்கு ஸ்ரீதரன் பற்றி பேசுவதிலேயே இஷ்டமில்லை என்பது தெரிந்து விட்டது. அதுவே ரேவதியை வேகமாக தூண்டிவிட்டது. நமது எதிரிக்கு எது பிடிக்காதோ அதுதானே நமக்கு இன்பம்?

"மாமா இப்பதான் நான் பேசறது நீங்க சரியா புரிஞ்சுண்டு 'சரி'ன்னு ஒத்துண்டுருக்கேள். பக்கத்துலயே புதையல வெச்சுண்டு பக்கத்து ஊர்ல கடன் கேட்டு கிளம்பின மாதிரி இருந்தது முந்தி நம்ம நிலை. இனி அது மாறினா போதும்."

ரேவதி சற்று பாட்டி மாதிரி பேசியது, சீமாவுக்கே ஆச்சரியத்தை அளித்துவிட்டது. அவளை ஒரு மாதிரி சிரிப்புடன் பார்த்தான். அவளுக்கும் புரிந்தது.

"இப்படி சிரிச்சா என்ன அர்த்தம்? போங்கோ. போய் முதல்ல கேலண்டரை எடுத்து நல்ல நாழி எப்பன்னு பாருங்கோ. நானும்

அத்தையுமே போய் வத்சலா மாமிகிட்ட பிள்ளையார் சுழி போட்டுட்டு வரோம்.''

ரேவதி அடுத்தடுத்து தாவினாள். சக்கரவர்த்தி மகளின் விருப்பம் அறிய விரும்பியவர் போல மைதிலியைப் பார்த்தார். அவர் பார்க்கவும் அவள் கண்களை தழைத்து தலையை குனிந்து கொண்டாள். கண்ணிரண்டும் கலங்கி விட்டிருந்தது! அதை அவர் கவனித்தால் அது பல கேள்விகளுக்கு இடம் கொடுத்து விடும். ரேவதியோ அவள் தவிப்பை அழகாக தனக்குச் சாதகமாக மொழிபெயர்க்கத் தொடங்கி விட்டாள்.

''இப்பவே மைதிலிக்கு வெட்கம் வந்துடுத்து... அதுலயும் ஸ்ரீதரன்னா உடனே அப்பாடான்னு இருந்திருக்கும். நாம பார்க்க நம்ம கண் எதிர்க்க வளர்ந்த பிள்ளை அவன். எப்படிப் பட்ட வனோங்கிற கவலைக்கே இடமில்லை. இல்ல மைலி...?''

''மைதிலியால் அதற்குமேல் அங்கு நிற்க முடியவில்லை. விறுவிறுவென்று மாடிப்படிகளில் ஏறத்தொடங்கி விட்டாள். சக்கரவர்த்தியும் ரேவதி பக்கமே சாய்ந்தவராக ''ரேவதி சொன்ன மாதிரி வெட்கம் வந்துடுத்து என் பொண்ணுக்கு! எப்படியோ நல்லது நடந்தா சரி. நீங்க யாரும் இது விஷயமா பேச வேண்டாம். தேசிகாச்சாரி எப்படியும் என்னைப் பார்க்க வருவான். அப்ப நானே அவன் கிட்ட பேசிக்கறேன்'' என்றபடி ஒரு சின்ன ஏமாற்றத்தை ரேவதிக்கு அளித்துவிட்டு சக்கரவர்த் தியும் விலகத் தொடங்கினார்.

தன் முயற்சி இவ்வளவு சீக்கிரம் வெற்றி பெறும் என்று ரேவதியே எதிர்பார்க்கவில்லை என்பது அவள் முகம் இருக்கும் இருப்பில் தெரிந்தது.

சீமா அவளை நெருக்கமாக சமீபித்தான். ''ரேவதி... உன் வாழ் நாள்ளையே இன்னிக்கு தாண்டி நீ ஒரு நல்ல காரியம் பண்ணி யிருக்கே.'' என்றான். அவளுக்கு அந்த பதில் பாராட்டாகவும் இருந்தது. தலைக்குட்டாகவும் விழுந்தது!

★★★

மொட்டை மாடி!

நாலாபுறமும் கோபுரங்கள் தெரியும் ஏகாந்தமான சூழல்... புறாக்களின் ஒடிப்பிடித்த விளையாட்டு வேறு! ஸ்ரீரங்கம் வரும் எவருக்கும் மொட்டை மாடிக்காட்சி என்பது ஒரு எடுக்கப்படாத மணிரத்ன திரைப்படம் மாதிரி! உள்ளூர்வாசிகளுக்கு அருகிலேயே இருப்பதால் அத்தனை ஈர்ப்பு இருக்க வாய்ப்பற்ற ஒரு சூழல்! ஆனாலும் மைதிலி வெகுவாக ரசிப்பாள். அன்று அவளால் முடியவில்லை. மனதுக்குள் யானைகள் சண்டை போடுவது போல ஒரு அதிர்வு. ஸ்ரீதரனை விட வத்சலாவை நினைக்கும் போதே உடம்பெல்லாம் காந்தியது. ஒரு மடிசார் உடுத்திய எருமை போலவெல்லாம் மனதுக்குள் உருவங்கள் தோன்றியபடி இருந்தன.

க்ஷணத்தில் தன் வாழ்க்கை இப்படி திரும்பும் என்று அவள் கற்பனை கூட செய்திருக்கவில்லை. தவிப்பென்றால் தவிப்பு... அப்படி ஒரு தவிப்பு...! தாங்கிக்கொள்ளவோ இல்லை சாய்ந்து கொள்ளவோ உடனடியாக ஒன்று தேவைப்பட்டது. அது ரங்கனின் மார்பாகத் தோன்றி, தோன்றிய வேகத்தில் அழிந்தும் போனது.

அவளாலேயே முழுமையாக பரிபூரணமாய் ரங்கனை நினைக்க முடியவில்லை. நினைக்காமல் இருக்கவும் முடியவில்லை. காதல் என்பது இப்படித்தான் செயலாற்றுமா? இதனால்தான் நம்ப முடியாதபடி மாளிகையும் மண்குடிசையும் ஒன்று சேர்ந்து ஊரைவிட்டே ஓடிப் போவதெல்லாம் நடக்கின்றதா?

அவளிடம் குடைச்சல். நல்லவேளை புழுக்கத்தின் போது விசிறிக்கொள்ள ஒரு கைவிசிறி கிடைத்த மாதிரி அவள் தோழி பிருந்தா வந்தபடி இருந்தாள்.

''மைலி...''

''பிருந்தா...''

''என்னடி பேயடிச்சமாதிரி இங்க வந்து பேந்தப்பேந்த முழிச்சிண்டிருக்கே?''

''பேய்தாண்டி அடிச்சிடுத்து.''

''என்னடி உன் மன்னியோட படுத்தல் இன்னும் தீரலையா?''

"பேய்ன உடனே கரெக்டா மன்னிகிட்ட போய்ட்டியேடி... எப்படிடி?"

பிருந்தா சிரித்தாள். அப்படியே "நம்ம தெருவுல மொத்தம் எத்தனை பேய் எத்தனை பிசாசு, இது போக பிரம்ம ராட்சஸிகள் எவ்வளவு பேர்னு ஒரு கணக்கேல்ல எடுத்து வெச்சிருக்கேன்."

"அதுல வத்சலா மாமிக்கு எந்த இடம்?"

"வத்சலா மாமி... யூ மீன் தேசிகாச்சாரி மாமாவோட பத்னி."

"எக்ஸாக்ட்லி."

"சாரிடி... மாமிதான் பேய் கூட்டத்துக்கே தலைவி."

பிருந்தா சொன்ன நொடி மைதிலி கண்களில் குபீர் என்று ஒரு குற்றாலம்!

"என்னாச்சு மைலி..."

"அது... அது..."

"புரிஞ்சிடுத்துடி... மாமியோட பிள்ளை ஸ்ரீதரனுக்கு உன்னை கேட்டாளா?"

பிருந்தா பட்பட்டென்று பாய்ன்ட்டுக்கு வந்தாள் மைதிலியிடம் மௌனத்தின் நீட்சி.

"நினைச்சேன். மாமியும் தெருபூரா சொல்லி வெச்சுருக்கா! எனக்கென்னவோ அந்த வத்சலா மாமி திட்டம் போட்டு உன்னைப் பிடிக்க வர்ற மாதிரி தான் தெரியறது."

பிருந்தா பேசப் பேச மைதிலியிடம் குற்றாலம் கொட்டத் தொடங்கி விட்டது.

"புரியறது மைதிலி... உனக்கோ மனசுக்குள்ள ரங்கன் இருக்கான். அதனால பொறி எலி மாதிரி சிக்கிண்டிருக்கே நீ..."

பிருந்தாவின் அடுத்தகட்ட பாய்ச்சல் மைதிலியை மின்னல் போல தாக்கியது.

"பிருந்தா...!"

"என்ன பிருந்தா...? எல்லாம் எனக்குத்தெரியும்! ஆனா உன் காதல் எப்படி ஈடேறும்னுதான் எனக்குப் புரியல..."

"நீ காதல்னு கன்ஃபார்மே பண்ணிட்டியா?"

"என்னடி சொல்றே... அப்ப அப்படி எல்லாம் எதுவும் இல்லேன்னு என்கிட்ட பொய் சொல்லப் போறியா?"

"பொய்யா?"

"பின்ன... அப்படி நீ சொன்னா அது பொய் தான். ரங்கன்ற பேரைக் கேட்டாலே ஃப்ளோரோசென்ட் பல்பாட்டம் எரியறது உன் முகம். இன்ஃபாக்ட் அவனுக்கும் அதுக்கு தகுதி இருக்குங்கறது தான் என் அபிப்ராயம்..."

"இவரா... பாத்தியா உன் காதல் இவனை 'இவர்' ஆக்கிடுத்து."

"அது அந்த கேரக்டர் பேர்ல வந்த மரியாதையால பிருந்தா."

"கேரக்டர்-மரியாதை-சபாஷ்-அடுத்தடுத்து நீ டாப்ல தான் போறே. இதோ பார் மைதிலி நான் வெட்டு ஒன்று துண்டு ரெண்டுன்னே சொல்லிடறேன். வத்சலா மாமிக்கு மாட்டுப் பொண்ணா நீ போறதுக்கு ரங்கனுக்குப் பொண்டாட்டியாகி நீ அவன் கூட சேர்ந்துண்டு பொணம் தூக்கவே போகலாம்."

"பிருந்தா எப்படிடி நீ இப்படி பட்டுபட்டுன்னு பேசறே. எனக்கோ புகை மூட்டத்துல பக்கத்துல இருக்கறதே தெரியாத நிலைலதான் நான் இருக்கேன்."

"எனக்குன்னு வரும்போது நானும் அப்படித்தான் இருப்பேன். உன் விஷயம்கறதால உணர்ச்சிபூர்வம் என் கிட்ட இல்லை. அதான் புத்திபூர்வமா யோசிச்சு பேச என்னால முடியறது."

"சரி இப்ப என்னடி பண்றது?"

"எப்படியாவது இந்த வலைல இருந்து அறுத்துண்டு வெளிய வந்துரு. அப்புறமா உன் ரங்கனை பொணந்தூக்க விடாம பண்ணு. அதான் உன் தோப்புலயே ஒரு வேலைய போட்டு கொடுத்துட்டீங்களே. அப்புறம் என்ன? கொஞ்சம் நாள் போகட்டும் தானா எதாவது ஒரு வழி பொறக்கும்."

"பிருந்தா எப்படிடி இந்த வலைல இருந்து வெளிய வர்றது?"

"சரிதான்... விட்டா என்னையே வெட்டிவிடச் சொல்லே போல இருக்கே?"

"இவ்வளவு சொல்ற நீ அதை செய்தாதான் என்ன?"

"மக்கு மாதிரி பேசாதே. எதை யார் செய்யணும்னு இருக்கு. உனக்கு ஸ்ரீதரனை பிடிக்கலங்கறத உன் அப்பா கிட்டயும் அண்ணன் கிட்டயும் பளிச்சுன்னு சொல். மீறி கல்யாணத்துக்கு ட்ரை பண்ணினா தற்கொலை பண்ணிப்பேன்னு சொல். தற்கொலைங்கற ஒரு டாப்பான அஸ்திரம் கைல இருக்கும் போது நான் எதுக்கு? மத்தவாதான் எதுக்கு?"

"அதுக்கில்லடி... ஏன் பிடிக்கலே... அவன் கிட்ட என்ன குறைன்னு கேட்டா என்னத்த சொல்றது?"

"மனசுக்குப் பிடிக்கலே. அவ்வளவுதான்"னு ஒருவார்த்தைல முடிச்சுக்கோ."

"எடுபடுமா?"

"இதுக்கு மேல் எனக்கு சொல்லத் தெரியல. அப்புறம் உன் தலை எழுத்து."

பிருந்தா கச்சிதமாய் ஒரு வட்டம் போட்டு முடித்தும் விட்டாள். மைதிலி கழுத்து தங்கச்சங்கிலியின் ஸ்வஸ்திக் டாலரை பல்லால் கடித்தபடி தவிப்பைத் தொடர்ந்தாள்.

"என்ன யோசனை... போய் ஒரே போடா போட்டுட்டு போயிண்டே இரு. உன்னோட எதிர்காலம் உன் கைலதான் இருக்கணும் அதைத் தீர்மானிக்க உன் மன்னி யாருடி?"

"எல்லாம் சரிடி... ஆனா எனக்கு எப்படி ஆரம்பிக்கறதுன்னு தான் தெரியல."

"அப்ப பேசாம அந்த ஸ்ரீதரனையே கல்யாணம் பண்ணிண்டு அடுப்படி பூனையாகவே இருந்துடு. வத்சலா மாமி பச்சையாகவே சொல்லிண்டு திரியறாளாம்... 'மாட்டுப் பொண்ணுன்னு ஒருத்தி வரும்போது எங்காத்துக்கு எதுக்கு தனியா ஒரு வேலைக்

காரி'ன்னு போ... போய் நன்னா அவ புடவை தலைமாணியை அலசிப் போட்டுண்டு அவளுக்கும் கவரி வீசிண்டிரு... நான் வரேன்."

பிருந்தா கோபத்தோடு புறப்படவும் செய்தாள். மைதிலி அவளை கூப்பிடக் கூப்பிட போயே விட்டாள்.

மைதிலியிடமும் ஒரு தீர்க்கமான முடிவு! அப்படியே மிதந்து வந்தாள். சொல்லி வைத்த மாதிரி அப்பாவும் அண்ணனும் எங்கோ வெளியேறியிருந்தனர். அம்மா ஜானகி யூலிப்டஸ் எண்ணெய் வாசத்துடன் சுருண்டு படுத்திருந்தாள் நல்ல தூக்கம்!

ரேவதி மட்டும் உற்சாகமாய் டி.வி. பார்த்தபடி இருந்தாள். மைதிலியின் தேடலை ஜாடைமாடையாக கவனித்தவள் டி.வி.யில் இருந்து பார்வையை கொஞ்சமும் விலக்காமல் வாயைத் திறந்தாள்.

"யாரைத் தேட்றே?"

".....''

"உன்னைத்தான்... நான்லாம் கேட்டா பதில் சொல்லக் கூடாதுன்னு அந்த பிருந்தா போட்டுக் கொடுத்துட்டுப் போறாளோ?"

மைதிலிக்கு பகீர் என்றது.

"அவ உன்கூட பேசிண்டிருந்தது எல்லாம் காதுல விழுந்தது. கண்ணன் என் காதலன்னு ராதை சொல்லி ஸேவிப் பட்டிருக்கேன். இங்க ரங்கன் என் காதலனோ?"

ரேவதி கேட்டு முடிக்க மைதிலிக்கு தொண்டையில் விசுக் கென்று முள் ஏறியது.

"ரங்கனுக்காக ஸ்ரீதரன் வேண்டாமா?"

ரேவதியின் அடுத்த கேள்வி அந்த முள்ளை பின் பிடறிக்கு வெளியே கொண்டு சென்றது.

"பிரமாதம்... ரொம்ப ரொம்ப பிரமாதம். வேதாந்த சிரோன் மணி வைஷ்ணவ சிம்மம் சக்கரவர்த்தி ஐயங்கார் பொண்ணு ஒரு

ஐ.டி. படிச்ச, ஐம்பதாயிரம் சம்பளம் வாங்கற மாப்ளையை உதறிட்டு அன்றாடம் ஐம்பதுக்கும் நூறுக்கும் பொணம்தூக்கற ஒரு சாதி கெட்டவனை விரும்பறாள்னு இந்த ஊருக்கு தெரிஞ்சா... ஆஹா நினைக்கவே எனக்கு சிலிர்ப்பா இருக்கு. இப்பதான் ஒரு கெழவி செத்துப்போய் காரியங்கள்லாமும் முடிஞ்சிருக்கு. அடுத்து உடனடியா ஒரு பொணத்துக்கு மூணு பொணம் கட்டாயமா விழும். ஒண்ணு உன் அப்பா. அதாவது என் அருமை மாமனார். அடுத்து உன் அம்மா. என்னோட அருமை மாமியார். மூணாவது என் ஆத்துக்காரர்!

நீ என்ன தூக்குல தொங்கறது! அதுக்கு அவசியமே இல்லாம இவா மூணு பேருமே கேட்ட மாத்திரத்துல உயிரை விட்ருவா! பாக்கறியா?''

ரேவதி ராட்சஸ பலூனாட்டம் உருண்டு நிமிர்ந்தாள்! மைதிலிக்கு இதயத்துடிப்பு கூடிப்போய் காதுகளையே அடைக்கத் தொடங்கியது.

''இவாளோட நல்ல நாழி... உன் ஃப்ரெண்டு வந்து ஏத்தி விட்டுட்டுப் போனதை நான் கேட்டேன். இல்லன்னா உன் வாழ்க்கையும் பாழாகி இந்த மொத்த குடும்பமேன்னா அழிஞ்சு ஒழிஞ்சு போயிருக்கும்?''

''மன்னி...''

''என்னடி மன்னி... நீ என்னை மன்னியாவா நினைக்கறே? அதான் சொல்லிட்டியே பேய்னு! ஒருவகைல நான் பேய் தாண்டி... பேய் ஒருத்தரை பிடிச்சா எப்படி ஆட்டி வைக்கும் தெரியுமா?''

''இல்ல மன்னி... நான் என்ன சொல்ல வரேன்னா.''

''அதான் எல்லாத்தையும் அவசொல்ல நீயும் வழிமொழிஞ் சிட்டியே... இன்னும் என்ன?''

''தயவு செய்து நான் சொல்றத கேளுங்கோ. இது என் வாழ்க்கை...''

''போதும் நிறுத்து. இப்ப கூட உன் வாழ்க்கை நன்னா இருக் கணும்னுதான் நாங்க போராடிண்டிருக்கோம். ஒரு பொணந்

தூக்கியை போய் கல்யாணம் பண்ணிக்க ஆசைப் பட்றியே. உனக்கு வெட்கமா இல்லை. நீ எல்லாம் படிச்சவ தானே? இந்த ஆத்து அந்தஸ்து என்ன, பாரம்பரியம் என்ன? எனக்கே தெரிஞ்ச அடைக்கறது. தெருவுக்கு தெரிஞ்சா காறித்துப்பிடுவாடி.''

''மன்னி நீங்க தேவையில்லாம இந்த பிரச்னையை பெரிசு படுத்தறேள்... எனக்கு இந்த ஸ்ரீதரனை பிடிக்கல. அவ்வளவு தான். ரங்கனை நான் காதலிக்கறதா நான் எப்ப சொன்னேன்?''

''மைதிலியும் ஒரு முடிவுக்கு வந்தவள் போல பேச ரேவதியிடம் ஒரு கூர்மையான பார்வை. புடவை முந்தியை சுருட்டியபடியே மைதிலியை உற்று பார்த்தபடியே ஒரு சுற்று சுற்றி வந்தவள். ''அப்ப நீ ரங்கனை காதலிக்கலேங்கறே... அப்படித்தானே?'' நைச்சியமாக ஆரம்பித்தாள்.

''நான் அதைப்பத்தி இப்ப பேச விரும்பல...''

''மழுப்பாம நேரா பதில் சொல். அந்த ரங்கனை நீ காதலிக்கிறியா இல்லையா?''

''இ...இ...இல்ல.''

''ஏன் தடுமாற்றே. இரு வந்துட்டேன்...''

ரேவதி உள்ளே போனாள். சக்கரவர்த்தி ஐயங்கார் தினம் எடுத்து படிக்கும் சுந்தரகாண்டம் புத்தகத்தை எடுத்து வந்தாள்.

''எங்க இது மேல அடிச்சு சத்தியம் பண்ணி சொல்லு பார்ப்போம்.''

ரேவதியின் கைகளில் புத்தகம் மைதிலியிடம் படபடப்பு.

''நன்னா யோசிச்சு சத்யம் பண்ணணும். சுந்தரகாண்டம் அந்த நாலு வேதத்துக்கும் சமம். பண்ணிட்டு மாறக்கூடாது.''

ரேவதி சுருதியை கூட்டிக்கொண்டே போனாள். மைதிலியால் தாள முடியவில்லை புத்தகத்தை பிடுங்கி வீசி எறிந்தவள். ''நான் எதுக்கு உங்க கிட்ட சத்யம் பண்ணணும். நீங்க என் அப்பாவா, இல்ல அம்மாவா? அதுவும் இல்ல என் கூடப் பொறந்த பொறப்பா?'' சீறி வெடித்தாள்.

"சரி... அவா வரட்டும். அவாகிட்ட விஷயத்த சொல்றேன். அவா நான் சொன்னதைக் கேட்டுட்டு உயிரோட இருந்து அப்புறமா உன்கிட்ட சத்யம் பண்ணுன்னா நீ அவாகிட்டயே சத்யம் பண்ணு... வரட்டும்! அவ்வளவு ஏன் உன் அம்மா தலைவலின்னு தைலத்த பூசிண்டு தன்ன மறந்து தூங்கிண்டிருக்கா. எழுப்பட்டுமா?"

ரேவதி தான் ஒரு ஆக்டோபஸ் என்பது போல நாலாபுறமும் சுற்றி வளைத்திட மைதிலியிடம் தடுமாற்றம் ஆரம்பமானது.

"சொல்லு எழுப்பட்டுமா?"

"இல்ல வேண்டாம்..."

"அப்ப சத்யம் பண்றியா என்னண்ட?"

"மாட்டேன்."

"அப்ப நான் அவாகிட்ட உன் காதல் கதையை சொல்லிட்றேன்."

"மன்னி ஈ..."

"என்ன மன்னி... மூடிண்டு அவனை தூக்கி உடப்புல போட்டுட்டு ஸ்ரீதரனை கல்யாணம் பண்ணிக்கற வழியப் பார். ஒரு உயிருக்கு மூணு உயிர் இருக்கறதும் போறதும் நீ ஸ்ரீதரனை கல்யாணம் பண்ணிக்கறதுலதான் இருக்கு. ஒருவேளை உன் அப்பா போனா போறதுன்னு உன் பக்கம் சாயப் பார்த்தாலும் நான் விடமாட்டேன். என் உசுரை விட்ருவேன்னு ஒரு ஆட்டம் ஆடுவேன். நீ தப்பிக்கவே வழி கிடையாது. ஏராளமா ரசாபாசம் ஆகி அப்புறமா அடங்கிப் போறதுக்கு பேசாம இப்பவே அமைதியா அடங்கிப் போயிடு. அது தான் எல்லாருக்கும் நல்லது. இங்க இப்ப நீயும் நானும் பேசிண்டது இதுதான் கடைசி. இனி இந்த பேச்சே வரக்கூடாது வந்ததுன்னா...?"

ஒரு இழுவையோடு பேச்சை முடித்து விட்டு விலகிய ரேவதியை கண்ணீர் கொப்பளிக்கப் பார்த்த மைதிலிக்கு தன் மேல் விழுந்த வலை ஒரு அறுக்க முடியாத இரும்பு வலை என்று மெல்ல புரியத்தொடங்கியது!

23

'தூயினும் ஆயின செய்யும் நாரணன் நாமம்
தாவென கேட்குமுன் தந்தே நிற்கும்!
தாடாளன் அனுமனுக்கோ இதுவே ராமநாமம்
தாழ்வதில் தயையுடன் தாங்கி நிற்கும்!
தாரமர் கொன்றை கொள் அபிராமி நாமம்
தாரணியில் காரிருளில் நிலவுமிழ்ந்தார் போல்
தாமோதரன் தண்ணருளே நாமுயர
தாசர்களாம் நம்மையெலாம் முக்தியில் சேர்க்கும்!'

தேசிகாச்சாரியின் வீட்டு வாசலில் தேங்கி நின்றது அந்த கால் டாக்சி. உள்ளிருந்து இறங்கினாள் தேசிகாச்சாரியின் செல்வ மகளான உஷா-கூடவே அவளது கணவனான ராம்குமார் என்கிற ராம்!

இருவரையும் பார்த்துவிட்டு மடிசார்புடவை தடுக்கி விடாத குறையாக வாசலுக்கு ஓடிவந்தாள் வத்சலா.

"உஷாக்குட்டி... வா... வா... வாங்கோ மாப்ள வாங்கோ..." பதிலுக்கு சிரித்த உஷாவும்.

"அம்மா டிக்கில லக்கேஜ் இருக்கு. எங்க அப்பா?" களைப்பை முகத்தில் காட்டியபடி லக்கேஜை எடுக்க வேண்டிய ஒருவராகத் தான் தேசிகாச்சாரியை கேட்டாள் உஷா.

"ஏன்னா... இங்க யார் வந்துருக்கா பாருங்கோ..." வாசலில் இருந்தே ஒரு அறை கூவல்.

தேசிகாச்சாரியும் மெல்ல வெளியில் வந்தார்.

முகத்தில் சுரத்தே இல்லை. தாடையில் வெள்ளிக் கம்பிகளை நட்டாற் போல நான்கைந்து நாள் விளைச்சலில் முடிகள்.

"வாம்மா... வாங்கோ மாப்பிள்ளை..." என்றார் அதில் ஒரு உற்சாக மின்சாரமோ பாசத்தின் பரவசமோ சுத்தமாய் இல்லை. அதை உணர்ந்து உஷாவும் கேட்டாள்.

"அப்பா... என்னப்பா ஆச்சு உனக்கு உடம்பு சரியில்லையா என்ன?"

"ஆமாமா... நாலு நாளா ஒரே காய்ச்சல் இப்படத்தான் கொஞ்சம் தேவலை..."

வத்சலாவே பதிலைச் சொல்லி சமாளித்தாள். அங்கேயே அந்த இடத்திலேயே உஷாவுக்கு ஏதோ குளறுபடி என்பது புரிந்துவிட்டது.

டிரைவர் டிக்கியைத் திறந்து சூட்கேஸ், பேக்குகளை எடுத்து வெளியில் வைத்திட, தேசிகாச்சாரி அதன் அருகே சென்று ஒரு போர்ட்டரைப் போல அதை எடுத்துக்கொண்டு திரும்ப வீட்டினுள் நுழைந்தார். டிரைவர் சற்று ஆச்சரியமாகப் பார்த்தான்.

உள்ளே நுழைந்த ராம், ஹாலில் கிடந்த சோபாவில் அமர்ந்தான். சோம்பல் முறித்தான். சட்டென்று ஞாபகம் வந்தவன் போல் எழுந்து வெளியே சொல்லத் தொடங்கினான்.

"எங்க போறேன்னா?" உஷா கேட்டாள்.

"டாக்சிகாரனுக்கு பணம் கொடுத்துட்டு வரேன்..."

"எல்லாம் எங்கப்பா கொடுத்துப்பார். நீங்க பேசாம இருங்கோ" என்று சற்று கிசு கிசு குரலில் சொன்னாள்.

"பரவால்ல உஷா... உங்கப்பாவுக்கு வேற உடம்பு சரியில்ல, பாக்கவே பாவமா இருக்கு. இரு நான் போய் கொடுத்துட்டு வரேன்" என்று அவன் விரைந்தான். உஷா திரும்பினாள். தேசிகாச்சாரி துண்டால் முகத்தை துடைத்தவராக "என்னம்மா... பிரயாணம்லாம் நல்லபடியா இருந்ததா?" என்று நைச்சியமாக விசாரிக்கத் தொடங்கினார்.

"என்னப்பா நீ... அவர் டாக்சிக்கு பணம் கொடுக்கப் போயிண்டிருக்கார். நீ பாத்துண்டு நிக்கறே... நான் தரேன்னு போமாட்டே?"

"ஓ... மாப்ளை அதுக்குத்தான் போறாரா?"

"இது என்ன கேள்வி...? போப்பா... போய் முதல்ல பணத்தைக் கொடு..."

அவரை ஒரு இழு இழுத்துவிட்டாள். தேசிகாச்சாரியும் எழுந்து ஹேங்கரில் தொங்கும் தன் சட்டையில் இருந்து பணத்தை எடுத்துக்கொண்டு போவதற்குள் ராம் பணத்தை கொடுத்துவிட்டு உள்ளே வந்து அமர்ந்தேவிட்டான். உஷாவின் முகத்தில் பலத்த சிடுசிடுப்பு. ஆரம்பமே சரியில்லையே என்கிற மாதிரி ஒரு பேதலிப்பு வேறு. ராம் மிக சகஜமாக இருந்தான்.

"என்ன மாமா உடம்புக்கு?" என்று தேசிகாச்சாரியிடம் சகஜமாக விசாரிக்கத் தொடங்கினான்.

"ஒண்ணுமில்ல மாப்ள... நீங்க எப்படி இருக்கேள். ஊர்ல உங்க அம்மா சௌக்யமா?"

"எல்லாரும் சௌக்யம் மாமா. வரும்போது பாத்தேன். காவிரில நிறையத் தண்ணி போறதே...?"

"ஆமா... இந்த தடவை கர்னாடாகவுல நல்ல மழை!"

"இப்பல்லாம் அங்க மழை பேஞ்சாதான் நமக்கு தண்ணின்னு ஆயிடுத்து... இல்ல...?"

"பெருமாள் கிருபைல ஏதோ இந்த மட்டும் குடிக்கத் தண்ணி கிடைக்கறதே. அதுவே பெரும்பாடு. ஸ்ரீரங்கம் இப்ப முன்ன மாதிரி இல்ல மாப்ள... முன்னெல்லாம் திரும்பின பக்கமெல்லாம் தென்னந்தோப்பும் வாழைத் தோப்புமான்னா இருக்கும்! இப்ப எல்லாம் போயே போயிடுத்து! எங்கப்பார் காம்ப்ளெக்ஸ் கட்டடம் தான். ரங்கா என்க்ளேவ், ராமா என்க்ளேவ்'னு ஊரே மாறிடுத்து...

மாப்பிள்ளையும் மாமனாரும் சகஜமாக பேசிக்கொள்ள ஆரம்பித்தனர்.

சமையல்கட்டில் காபி டிகாஷன் மூடியை நொட்... நொட்' என்று தட்டியபடியே வத்சலா அருகில் உஷா!

வத்சலா முகத்தில் தீபாவளி.

''உஷா... என்னடி... இது ஆச்சரியம்... மாப்ளே உ
அப்பாண்ட இவ்வளவு சகஜமா பேசிண்டிருக்கார்! நிஜமா
ரொம்பத் தான் மாறியிருக்கார்டி. இந்த ஆத்துக்குள்ள வந்தாலே
சார்லஸ் இளவரசன் மாதிரி கால்மேல் கால் போட்டு
உக்காந்துண்டு 'ஸோ ஹாட்... வெரிபேட் வெதர்'னு தஸ்ஸு
புஸ்ஸுன்னு பேசாம சௌஜன்யமா பேசறாரேடி...?''

வத்சலா மகிழ்ச்சியை வார்த்தைப்படுத்தினாள்.

''அவர் மாறினது இருக்கட்டும். உனக்கும் அப்பாக்கும்
என்னம்மா சண்டை?'' உஷா நறுக்கென்று பாய்ண்ட்டைத்
தொட்டாள்.

''சண்டையா... உங்கப்பாவோடையா?''

''அம்மா... நான் உன் பொண்ணு திருச்சி ஸ்டேஷன்ல
இறங்கறப்பவே எனக்குள்ள ஒரு மாதிரி ஃபீலிங்ஸ்! உண்மையைச்
சொல். அப்பாவோட சண்டையா?''

உஷா ஒரு குட்டி வத்சலாவாய் அவளே அவள் எதிரில் நின்று
மடக்குவது மாதிரி மடக்கினாள். அதற்காக அந்த ரங்கன் பற்றிய
உண்மையைச் சொல்ல வத்சலா சராசரிப் பெண்ணா என்ன?
சமாளிக்க ஆரம்பித்தாள்.

''அது ஒண்ணுமில்லடி... உனக்கு மைதிலிய தெரியும் தானே?''

''மைதிலியா... சக்கரவர்த்தி மாமா பொண்ணு மைதிலியா?''

''கரெக்ட் அவளேதான்''

''அவளுக்கென்ன இப்ப...?''

''அவ ஜாதகம் பத்திதான் உனக்கே தெரியுமே!''

''அவ ஜாதகத்துக்கு என்ன?''

''என்னடி இது கேள்வி... உனக்குத் தெரியாது, சுத்த அட்டு
ஜாதகம்னா அவளோட ஜாதகம்.''

''சரி அதுக்கென்ன இப்போ...?''

''சொல்றேன். நீ போய் முதல்ல காபியை மாப்ளைகிட்ட
கொடுத்துட்டு வா. ஆமா, டிபன் பண்ணட்டுமா பசிக்கறதா?''

''எனக்கு இப்ப உனக்கும் அப்பாவுக்கும் என்ன சண்டைன்னு
தெரிஞ்சாகணும். காபி டிபன் எல்லாம் அப்பறம்.''

''பைத்தியமே. ஒரு சண்டையும் இல்லடி. மைதிலியை நான்
நம்ம ஸ்ரீதரனுக்கு பண்ணிக்கலாம்கறேன். உங்கப்பாவோ அவா
அந்தஸ்துக்கு என்ன, நம்ம அந்தஸ்து என்னன்னு ஒத்துக்க
மாட்டேங்கறார். அந்த சண்டை தான். வேறென்ன?''

''நெஜமாவா?''

''சத்தியமாடி...''

''அதுசரி... நானும் கேக்கறேன். அந்த நாள்ளையே அந்த
மைதிலி எல்லாரும் நடந்து ஸ்கூலுக்கு போனா இவ கார்லதான்
போவா. நம்மாத்து பக்கம் வந்தாகூட வாசலத் தாண்டி உள்ள
வரமாட்டா. நீயும் உள்றவா மைதிலின்னு அவ கால்ல பூவா
போட்டுப் பார்ப்பே. அவ அப்படியே இருக்கட்டும் மாமின்னு
தெருவோட போயிடுவா. அந்த அளவுக்கு தான் ஒரு பணக்கார
ஆத்துப் பொண்ணுங்கற மப்பு. இவளை நீ நம்ம ஸ்ரீதரனுக்கு
கேக்கறியா?''

''போடி அசடு. அதெல்லாம் அப்ப! இப்ப நீ அவளைப்
பார்த்தேன்னா இவளா அந்த மைதிலின்னு ஆச்சரியப்படுவே.
சக்கரவர்த்தி அண்ணா அவ ஜாதகத்தை எடுத்துண்டு பாக்காத
மாப்ளை இல்லை. இப்பக்கூட கடைசி கடைசியா திருக்கண்ண
மங்கைல இருந்து ஒரு மாப்ள வந்து பார்த்துட்டுப் போனான்.
போனவன் போனவன்தான்...''

''ஏன், மைதிலிக்கு என்ன குறை?''

''அதான் மகா மட்டமான ஜாதகம்னு சொன்னேனே...''

''என்னம்மா நீ... இந்தக் காலத்துல இன்னுமா ஜாதகமல்லாம்
பாத்துண்டு இருக்கா?''

''போடி போ... ஜாதகம் அப்புறம் என்னதுக்கு இருக்கு... இந்தா
முதல்ல போய் காபியை கொடுத்துட்டு வா...''

''என்ன இது ஒரு கப் தான் இருக்கு. அப்பாக்கு?''

"அவர் இப்ப தான் குடிச்சார். குடிகாரன் மாதிரி எப்பப்பார் என்ன காபி... நீ போய் மாப்ளைக்கு கொடுத்துட்டு வா..."

உஷாவும் காபியோடு வெளியேறி காபியை ராம் முன்னால் நீட்டினாள்.

"உங்கப்பாக்கு...?"

"இப்பதான் சாப்ட்டாராம். நீங்க சாப்பிடுங்கோ."

"நோ... நோ... நீ போய் இன்னொரு தம்ளரை எடுத்துண்டு வா. நாங்க இதே காபியை ஒன் பை டூவா குடிச்சுக்கறோம்."

"பரவால்ல, நீங்க சாப்டுங்கோ. நான் அப்பாக்கு வேற ஒரு காபி போட்டு எடுத்துண்டு வரேன்."

உஷா அங்கிருந்து விலகி திரும்ப சமையல் கட்டுக்குள் புகுந்தாள்.

"அம்மா இன்னொரு கப் காபியைக் கொடு."

"உனக்கு தோ இங்க இருக்கு பார்."

"இது அப்பாக்கு... இல்லேன்னா உன் மாப்ள விடமாட்டார் போல இருக்கு."

"உஷா எப்டி இந்த மனுஷன் இப்படி மாறினார்? நீ போன் பண்ணி சொன்னப்பவே என்னால நம்ப முடியல. இப்ப நேர்ல பார்க்கச்சே என் கண்ணையே நம்ப முடியலடி... இந்தா எடுத்துண்டு போ."

"இரு கொடுத்துட்டு வந்து பேசறேன்..."

காபியோடு சென்றவள் திரும்பி வந்தாள். தனக்கான காபியைப் பருகியபடியே "உம்... மைதிலியோட ஜாதகத்துல விட்டே நீ" என்று ஆரம்பித்தாள்.

"கரெக்ட். இப்ப அந்த ஜாதகம்தான் அவ பிரச்சினை அதைக் கண்டுக்காம அவளை யார் கல்யாணம் பண்ணிண்டாலும் அவனுக்குத்தான் அந்த காவேரிக்கரை ஓரமா இருக்கற தென்னந்தோப்பு..."

"என்னது... அத்தனைப் பெரிய தென்னந்தோப்பு வைத்திரு கல்யாணம் பண்ணிக்கப் போறவனுக்கா?"

உஷாவின் கண்ணிரண்டும் முடிந்த மட்டும் விரிந்து பெரிதானது.

"ஆமாண்டி... இப்பப் புரியறதா நான் ஏன் நம்ம ஸ்ரீராமுக்கு அவளைக் கேக்கலாம்கறேன்னு."

"நீ கேப்பே சரி... அவா சம்மதிப்பாளா?"

"என்ன சம்மதிப்பாளா... எல்லாம் சம்மதிச்சாச்க..."

வேறு ஏதோ ஒரு குரலில் ஒரு பதில். உஷா அதிர்ந்தாள். எதிர்ச் சமையல் கட்டுக்குள்ளேயே நுழைந்தவளாய் ரேவதி!

"ரேவதி நீயா...?"

"நானே தான்... என்ன மாமி அதிர்ச்சியாயிருக்கா...?"

"ஆமாண்டி.. முதல் அதிர்ச்சி நீ என் ஆத்துக்கே வந்தது. அடுத்தது சம்மதிச்சுட்டான்னு சொன்னே பார்... அது!"

"அதான் சம்பந்தியாகப் போறோமே. இனிமே என்ன பெரிய அந்தஸ்துன்னுதான் நேராவே வந்துட்டேன். நீ எப்ப வந்தே உஷா?"

"இப்பதான் ரேவதிக்கா... நீங்க எப்படி இருக்கேள்...?"

"ஏதோ இருக்கேன்... நீ நன்னா இருக்கியோல்லியோ?"

"என்னக்கா ஏதோ இருக்கேன்கறேள். 'புரியாத புதிர்' சினிமால வர்ற ரகுவரன் மாதிரி ஒரு கேரக்டருக்கு வாக்கப்பட்ட நானே இப்ப நன்னா இருக்கேன். கோடீஸ்வராளாத்து மாட்டுப் பொண்ணு... உங்களுக்கு என்ன?"

"என்ன கோடீஸ்வரனாகமோ போ... எனக்கு என் ஆத்தை விட்டு என் நாத்தனாரை தள்ளிவிட்டா போதும். டெய்லி அவளை வெச்சுண்டு பெரும்பாடா இருக்கு. ஆத்துல இருக் கறதோ மூணு பெட்ரூம். இதுல ஒண்ணு என் மாமனார் மாமியாருக்கு... ஒண்ணு என் மாமனாரோட அம்மாக் கெழவிக்கு... இன்னொண்ணுலதான் நாங்க. கூடவே இவளும்

எங்களோடதான் படுத்துப்பா. போய் அந்தக் கெழவி
படுத்துக்கலாம்தானே? இவ போனாலும் அந்த கெழவி
துரத்திவிடுவா! கேட்டா அவளுக்கு டி.பி.யாம். இவளுக்
தொத்திண்டுடுமாம். ஒருவழியா கெழவி போய்ச்சேர்ந்தாள்
வை... என்னமோ போ... நாங்க சந்தோஷமா பேசின்டு
ஹனிமூனுக்குன்னு காஷ்மீர் போனப்போதான். அங்கேயும்
ஹோட்டலச் சுத்தி ஒரே போலீஸ். டும்டும்னு ஒரே குண்டு
சப்தம்!''

ரேவதியின் வருத்தத்தில் ஏராளமான உள்ளடக்க விஷயங்கள்.

'விட்றி... அதான் உன் மாமனார் ஸ்ரீதரனுக்கு தர சம்மதி
சுட்டார்னுட்டியே... இனி என்ன? நீயும் சீமாவும் 'உன்னிடத்தி
என்னை கொடுத்தேன் உள்ளமெங்கும் அள்ளித் தெளித்தேன்னு
பூந்து விளையாடுங்கோ.''

வத்சலாவிடம் உற்சாகம் எகிறியது. அப்படியே தன் மகன்
உஷாவின் கன்னம் வருடி திருஷ்டி கழித்தவள். ''உஷா. நீயும்
மாப்ளையும் சரியான சமயத்துல தாண்டி வந்துருக்கேள்.
மும்பைல இருக்கற உங்கக்காவுக்கும் ஒரு போனை போட்டு
வரச் சொல்லிட்டா சட்டுபுட்டுன்னு நிச்சயத்தார்த்தத்தை
முடிச்சுண்டுடலாம். என்ன சொல்ற ரேவதி நீ?

''என்னத்த சொல்றது... முதல்ல மும்பைக்கு போனைப்
போடுங்கோ. நான் ஜோசியர் ஆத்துக்குப் போய் எல்லாத்துக்கும்
நாளையும் பார்த்துட்டேன். இன்னிக்கு சனிக்கிழமை வர்ற
வெள்ளிக்கிழமை நாள் நன்னா இருக்கு. அன்னிக்கு நிச்சய
தார்த்தம். அடுத்த மாசம் 12ஆம் தேதி ஒரே ஒரு முகூர்த்தம்தான்
இருக்கு. அதுல கல்யாணம்!''

''அட்றா சக்கைன்னானாம்... நீ என்னடி இத்தனை வேகமா
இருக்கே...?''

''ஆமாம் மாமி... இந்தத்தடவை ஒரே பிடி. பெரியவா செத்த
முதல் மூணு மாசத்துக்குள்ள ஆத்துப் பெண்களுக்கு எந்த நல்லது
நடந்தாலும் ரொம்ப விசேஷமாமே? நான் அதையே கெட்டியா
பிடிச்சுண்டு என் ஆத்துக்காரர் மாமனார்னு இரண்டு பேரையும்
இழுத்துடமாட்டேன் இழுத்து...

''அது சரி... மைதிலிக்குத் தெரியுமா... அவ ரீ ஆக்ஷன் என்ன?''

''ஆக்ஷனாவது ரீ ஆக்ஷனாவது. உங்க பிள்ளை ஸ்ரீதரனுக்கு
என்ன குறைச்சல். இன்னிக்கெல்லாம் மணிரத்னம் பார்த்தா
ஸ்ரீதரன்தான் அடுத்த மாதவன்.''

ரேவதி ஆனாலும் உச்சிக்கே போனாள். அங்கே அவர்
களுக்குள் ஒரு கொண்டாட்டமான மனநிலை!

★★★

தென்னந்தோப்பு! தென்னங்கீற்றுகளில் காற்றின் உசாவல்.
ஓரிடத்தில் குடிசை ஒன்று உருவாகிக்கொண்டிருந்தது. முன்
பக்கமாய் ரங்கன், வெள்ளையன் என்கிற அந்த நாய்க்கு தான்
வாங்கி வந்திருந்த பிஸ்கட்டை தூக்கித் தூக்கி போட்டபடி
இருக்க அதுவும் பாய்ந்து பாய்ந்து அதை பற்றிக்கொண்டிருந்தது.
தோப்பின் முடிவுப் பக்கத்தில் ஆறடி உயரத்துக்கு பெரிய
முள்வேலி ஒன்றும் உருவாகியிருந்தது. அப்பால் காவிரியில்
நீரோட்டம்... புதிய நீர் என்பது அதன் செங்காவி நிறத்தில்
தெரிந்தது.

ரங்கன் அதைப் பார்த்தபடி வெள்ளையனோடும் குலாவிக்
கொண்டிருக்கையில் கொலுசுச் சப்தம்.

திரும்பினான், மைதிலி!

''ஓ முதலாளியம்மாவா...?'' அவனிடம் ஒரு தன்னடக்கம்.

''இது என்ன புதுசா... நான் மைதிலி அவ்ளோதான்.''

''எங்கங்க இந்தப் பக்கம்?''

அவன் நேராக விஷயத்தைத் தொட்டான். அவளோ ஏறிட்
டாள். ஏறிட்ட விழிகளுக்குள் மளமளவென்று கண்ணீர் சுரக்கத்
தொடங்கியது!

''ஐயோ என்னங்க... வந்தீங்க... நின்னீங்க... அழ ஆரம்பிச்
சிட்டீங்க...'' அவனிடமும் பதற்றம்.

''எனக்கு என்ன பேசறதுன்னே தெரியல. ஆத்துல எனக்கு
கல்யாணம் நிச்சயம் பண்ணப்போறா.''

''அட. நல்ல விஷயம் தாங்களே?''

"இல்ல. என்வரைல அது கெட்ட விஷயம்..."

"கெட்ட விஷயமா... என்னங்க சொல்றீங்க..."

"ஆமாம்... எனக்குப் பிடிக்கல."

"அதுக்கு நான் என்னங்க பண்ணட்டும்?"

"சொல்லட்டுமா?" அவளும் கேட்டாள்.

"சொல்லுங்க... நான் என்ன செய்யணும்?"

"அது... அது... அது..."

"உம் சொல்லுங்க..." அவன் தூண்ட அவளும் எப்படியாவது அவனிடம் 'நீ தான் எனக்கு இஷ்டமானவன்...' என்று கூறிவிடும் ஒரு அவாவுடன் வாயைத் திறக்க முனைந்தபோது முள்வேலிக்கு அப்பால் காவிரிக்கரையில் பரிசல் ஒன்று ஒதுங்கி, அதிலிருந்து ஒரு கைத்துப்பாக்கியோடு இறங்கிக்கொண்டிருந்தான் சாராயக்கார இடும்பன்!

24

'உடம்பொடு உள்ளம் என இரண்டாலே
உயிர் கொண்டவரே மாந்தர்!
உடம்பது சுவாசத் தவத்தால்
திடம்பல திண்ணமாய்க் கொள்ளும்
உள்ளத் திடமோ நாமத்தாலே
தெள்ளத் தெளிந்து துள்ளும்!
ரங்கநாமம் பங்கம் நீக்கும்...
ராமா என்றிட சொர்க்கம் சேர்க்கும்!'

இடும்பன் வருவதை ரங்கனும் பார்த்தான். மைதிலியிடம் பயம் தொற்றிக்கொள்ளத் தொடங்கியது. எதை எல்லாம் பேச வேண்டும் என்று வந்தாளோ அதெல்லாம் அப்படியே அடைத்துக்

கொண்டு விட இடும்பன் என்னும் ஆபத்தை இரண்டு கண்களாலும் வெறிப்புடன் கவனிக்கத் தொடங்கினான்.

அவன் வேலிப்படப்பருகே வந்து காளைவேலை அதை உதைத்து ஒரு வழி ஏற்படுத்த முயன்றான். ரங்கனும் பதற்றமில்லாமல் அவனைக் கவனித்தபடியே இருந்தான். ரங்கனை விட வெள்ளையன் என்கிற அந்த நாயும் குலைக்காமல் கொள்ளாமல் இடும்பனைப் பார்த்ததுதான் ஆச்சரியம்! ஒரு வழியாக வேலிப் படல் ஒடிந்து விழுந்தது. இடும்பன் ஏதோ கல்யாண விட்டுக்குப் போய் விட்டு வந்தவன் போல ஜரிகை வேட்டி கட்டி இருந்தான். முழுக்கைச் சட்டை வேறு! மார்பில் முப்பது பவுன் மதிப்பில் விரல் பருமனுக்கு தங்கச் சங்கிலி, நெற்றியில் விபூதி அணிந்து அது முக்காலே மூணு வீசம் அழிந்திருந்தது.

வேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டே ரங்கன் அருகில் வந்தவன் தீர்க்கமாய் பார்க்கத் தொடங்கினான். பார்வையில் ஒரு வித இளக்காரம். முக பாவனையில் நீதான் இந்தத் தோப்புக்கு காவல்காரனா? என்பது போல் ஒரு கேள்வி.

அப்படியே அவன் பார்வை மைதிலி மேல் போனது.

ரங்கனும் மைதிலியைப் பார்த்து, "அம்மா நீங்க போங்க. நீங்க கேட்ட மாதிரி இருவத்தஞ்சு இளநீர் கொஞ்ச நேரத்துல வீட்டுக்கு வரும்..." என்றான்.

அவன், தான் தோப்புக்கு வந்திருப்பதை இடும்பன் தவறாக கருதிவிடக் கூடாது என்பதற்காக இளநீர் கேட்டு வந்தது போல அர்த்தம் கொடுக்க முனைந்ததை அவளும் உடனேயே புரிந்து கொண்டாள்.

அவனது வேகமான புத்திசாலித்தனத்தை அந்த நிலையிலும் வியக்கத் தொடங்கினாள். இருந்தும் விலகாமல் இடும்பனையே பார்த்தாள்.

"போங்கம்மா... எனக்கு மரம் ஏறத் தெரியாமதான் யாரைக் கூட்டிகிட்டு வந்து இளநி வெட்டலாம்னு யோசிச்சுக் கிட்டிருந்தேன். நல்லவேளை இதோ இந்தத் தடியன் வந்துட்டான்! இவனை வெச்சு அவ்வளவு மரங்களையும் மராமத்தே பார்த்துடுவேன்ல..."

ரங்கன் இடும்பனை தடியன் என்று குறிப்பிட்டது இடும்பனை மேல் ஆசிட்டை தெளித்தது போல ஆக்கியது.

"என்னடா பொணந்தூக்கி... கொழுப்பா?" இடும்பன் வாய் திறக்கத் தொடங்கினான்.

"ஆமாமா... அதுவும் கொஞ்ச நஞ்சமில்ல... மொத்த உடம்புல எலும்பு சதையை விட கொழுப்புதான் அதிகம்னா பாத்துக்கயேன்."

ரங்கனின் அசராத பதில் இடும்பனிடம் துப்பாக்கியை வெளியே எடுக்க வைத்தது. அவன் முகமும் மாறிவிட்டது. மைதிலியும் வெலவெலக்கத் தொடங்கினாள். இடும்பனும் சீறத் தொடங்கினான்.

"ஆள் தெரியாம அதுலயும் நான் யார்னு தெரியாம விடலப்பய மாதிரி பேசறே. பொணங்கள பாத்துப்பாத்து மனசு வெறுத்துப் போய் கெடக்கறேன்னு நீ பேசறதுல இருந்து தெரியுது. இருந்தாலும் உன் தெகிரியத்தை நான் பாராட்றேன். ஆமாம், இந்தத் தோப்புல உனக்கு எவ்வளவு சம்பளம்? இது யாரு... பாக்க ஐயர் ஊட்டுப் பொண்ணு மாதிரி தெரியுது..."

"முதல்ல தெளிவா பேசக் கத்துக்க... ஒரே சமயத்துல ஒம்பது கேள்வி கேக்காதே..."

ரங்கனிடம் துளிகூட பயமே இல்லை. பேச்சோடு அண்ணாந்து எந்த மரத்தில் இளநீர் வெட்டலாம் என்கிற மாதிரி பார்க்க ஆரம்பித்தான்.

அவன் பதில், அவன் தோரணை, அச்சமில்லாத்தன்மை இந்த மூன்றுமே இடும்பனை கிண்டிக் கிழங்கெடுத்தது. அதன் எதிரொலியாக துப்பாக்கியின் ஸ்ட்ரைக்கரை ஒரு அழுத்து அழுத்தினான். தோட்டா சீறிக்கொண்டு பாய்ந்து மரம் ஏறிக் கொண்டிருந்த ஒரு அணிலைச் சிதற அடித்தது.

மைதிலி அடுத்த நொடியே காதுகளைப் பொத்திக் கொண்டாள். புகை கசியும் துப்பாக்கி முனையோடு ரங்கனை வெறித்த இடும்பனிடம் ஆவேசப் பேச்சாக வெளிப்படத் தொடங்கியது.

"எலேய்... என்னா? பாத்தில்ல... அணில் தெறிச்ச மாதிரி நீயும் தெறிச்சிடுவே. இது என்ன தீபாவளிக்கு வாங்குன பொம்மத் துப்பாக்கின்னு நினைச்சுட்டியா? விட்டா ஒரேயடியா பேசிகிட்டே போறே... ரொம்ப சினிமாப் படம் பாப்பியோ? அதுலதான் கதாநாயகன் உதாரா பேசுவான். ஏன்னா அவனுக்குப் பதிலா சண்டை போட ஸ்டண்ட் மாஸ்டர் இருக்கற தைரியம். இங்கு அப்படி எல்லாம் யாரும் கிடையாது. ஜாபகம் வைச்சுக்கோ. இந்தத் துப்பாக்கியால ரொம்பப் பேத்தை நான் வைகுண்டத்துக்கும் கைலாசத்துக்கும் அனுப்பியிருக்கேன். நீ எல்லாம் எனக்குக் கொசுடா... கொசு..."

இடும்பனின் ஆவேசம் ரங்கனை துளி கூட கலங்கடிக்க வில்லை. மாறாக அவனும் ஆவேசம் காட்டத்தொடங்கினான்.

"நான் கொசுவா... சரி வெச்சுக்கோ! கொசுவைப் பத்தின சில உண்மைகளைத் தெரிஞ்சுக்க. இந்தக் கொசுவுக்கு மட்டும்தான் பணக்காரன்ல இருந்து பிச்சைக்காரன் வரை அவ்வளவு பேரும் பயப்படறாங்க.

பிளாட்ஃபாரத்துல படுத்திருக்கறவன் கூட கொசுவர்த்தி இல்லைன்னா இன்னிக்குத் தூங்கமுடியாது. ஒவ்வொரு ராத்திரியும் சுமாரா எட்டு மணி நேரம் நல்லபடியா தூங்கறதுக் காக இந்த இந்திய நாடு கொசுவை கட்டுப்படுத்தறதுக்காக செய்யற செலவு எவ்வளவு தெரியுமா?"

ரங்கன் இப்படி புள்ளிவிவரக் கணக்குக்கு மாறுவான் என்று இடும்பன் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை.

"என்ன பாக்கறே? இந்த இந்திய நாட்டு மக்கள் தொகை 120 கோடி! அவ்வளவு பேரும் ஒரு ராத்திரி கொசு. மருந்துக்கு மட்டும் செலவழிக்கற தொகை சராசரியா 45 கோடி ரூபா! மாசத்துக்கு கணக்குப் போடு. 1400 கோடி பக்கம்.

இந்தப் பணத்துக்கு தமிழ்நாடு பூரா கண்ணாடி மாதிரி ரோடு போட்டு ஓரமா லட்சக்கணக்குல மரமும் நட்டுடலாம்! இதுவும் கூட கொசுவை அழிக்க இல்ல... கொசுவை அடக்கறதுக்கு... இன்னிக்கு நாட்டுல சிங்கம் புலி எல்லாம் மக்களுக்கு சிக்கல்

கிடையாது. கொசுதான் பெரிய சிக்கல். சிக்குன்குனியாதான் சகிக்க முடியாத காய்ச்சல்...!''

''எலேய்? என்னடா பிரசங்கம் பண்றே... நான் என்ன உன்கிட்ட புள்ளிவிவரம் கேட்கவா வந்துருக்கேன்...''

''அது எனக்கு என்ன தெரியும்? ஆனா ஒண்ணு மட்டும் நல்லாத்தெரியும். வேலிப்படப்பை உடைச்சுட்டு உள்ள வந்த உனக்கு இங்க நிறைய வேலை இருக்கு. அதை முடிக்காம நீ இந்த இடத்தை விட்டுப் போக முடியாது.''

''என்னடா ஜூ காட்றியா?''

''காட்டல்லாம் மாட்டேன்-வேடிக்கையப் பார் வெள்ளையா...''

ரங்கன் பேச்சோடு பேச்சாக வெள்ளையன் நாய்க்கு சைகை காட்டவும். அது மின்னல் வேகத்தில் இடும்பனின் துப்பாக்கியைப் பற்றியிருக்கும் கையை நோக்கி வாயைத் திறந்து கொண்டு பாய்ந்தது. மணிக்கட்டைப் பற்றிய நொடி துப்பாக்கி கீழே விழுந்தது. ரங்கன் அதை விழுந்த வேகத்தில் எடுத்துக் கொண்டான்.

அப்படியே காட்சி மாறிவிட்டது!

இடும்பன் மருண்டு போனான். ரங்கன் இடும்பன் காலருகே கிடந்த ஒரு குறும்பைக் காயைப் பார்த்து அவன் கால்களைச் சுடுவது போல சுடவும் செய்து இடும்பனை எகிறிக் குதிக்க விட்டான்.

''என்ன குதிக்கறே... எனக்கு சுடத்தெரியாதுன்னு நீ நினைச் சுடக்கூடாது பாரு...''

''வேண்டாம் ரங்கா. இப்பவும் சொல்றேன் என்னோட நீ சேர்ந்தின்னா பொணம் தூக்க வேண்டாம். இந்தத் தோப்புல காவக்காரனா சீரழிய வேணாம். லட்சலட்சமா சம்பாதிக்கலாம்! உன்னை மாதிரி தில்லான பயலுக மட்டும் என்கூட இருந்தா டாஸ்மார்க் பிசினஸையே நான் ஸ்தம்பிக்க வெச்சுடுவேன். சரின்னு சொல்லிட்டு என்கூட சேர்ந்துக்கோ. இப்படி கொசுக் கதை பேசிகிட்டு வீணாப் போகாதே.''

''கையத்தூக்குய்யா முதல்ல... நான், உன் கூட சேரணுமா? அதுக்கு நான் ஒரு குப்பதொட்டி பன்னி கூட சேருவேனே... கையத்தூக்குங்கறேன்...''

ரங்கனின் அதட்டல் இடும்பனின் கையை உயரத்தூக்கச் செய்தது.

மைதிலி பக்கம் திரும்பியவன். ''அம்மா நீங்க இப்பவாச்சும் போங்க'' என்றான்.

''இந்த நிலைலயா... உங்கள இப்படியே விட்டுட்டா?''

''எனக்கென்னம்மா... நீங்க போங்கம்மா...''

''இல்ல... நேக்கு பயமா இருக்கு... இவன் உங்கள ஏதாவது பண்ணிடுவான்?''

''நான் தாம்மா இவனை இப்ப ஏதாவது பண்ணப்போறேன். ஏதாவது என்ன... தோப்பையே இவனை வெச்சுதான் சுத்தம் பண்ணப் போறேன். எவ்வளவு நாள் இந்தத்தோப்பை இவங்க தப்புக்குப் பயன்படுத்தியிருப்பான்? அதுக்கு பரிகாரம் பண்ண வேண்டாம்? நீங்க கிளம்புங்க. இனிமே தனியா இளநீர் வேணும் தேங்காவேணும்னு நீங்க தோப்புப் பக்கமே வரக்கூடாது. எதுவா இருந்தாலும் நம்ம சைக்கிள் கடை கோவிந்தன் கிட்ட சொல்லிடுங்க. கல்யாணம் வேற நடக்கப்போகுது. இப்படியா தனியா வர்றது?''

ரங்கனின் பேச்சில் அவன் இறுதியாக அவள் கல்யாணத்தைத் தொட்டது அவளைப் பிசைந்தது. இடும்பன் மெல்ல கையை இறக்கப் பார்த்தான். ரங்கன் தாமதிக்காமல் அடுத்த தோட்டாவை வெடிக்கச் செய்தான். அது இடும்பனின் இரண்டு கால்களுக்கு நடுவில் புகுந்து சென்று அவனை எகிறிக் குதிக்க வைத்தது.

''என்னா... அசந்துடுவேன்னு பாத்தியா? நான் ஓடற இந்த காவேரிக்கே பயப்படாதவன். நீ எல்லாம் பேஞ்ச மூத்திரம்டா... போடா... போய் கீழ உழுந்து கெடக்கற காஞ்ச மட்டையை எல்லாம் எடுத்து ஒரே இடத்துல போட்டு சீரா அடுக்கு பாக்கலாம்... ஓடு...ஓடு...''

''வேண்டாம் ரங்கா... நீ ரொம்ப ஓவராப் போறே...''

"நான் ஓவராப் போனால்லாம் நீ தாங்கமாட்டே. இது உனக்கு நான் கொடுக்கற குறைந்தபட்ச நியாயமான தண்டனை. நிம்மதி கிட்டு சளம்பாம பேச்சைக்கேளு.. அப்படியே தாண்டிக் குதிக்க ஓடிடலாம்னு மட்டும் நினைச்சுடாதே! தோட்டா தொடைலைப் பேத்துடும்..."

ரங்கனின் அதிரடிப் பேச்சு இடும்பனைக் குதறி விட்டது. வெள்ளையன் வேறு அருகே சென்று குலைக்க ஆரம்பித்தது. மைதிலிக்கு மலைப்பாக இருந்தது. எதற்கு வந்தோமோ அதைப் பற்றி பேசாமலே போகிறோமே என்று வருத்தமாகவும் இருந்தது.

"போங்கம்மா... உங்க கல்யாணத்துக்கு நம்ம தோப்பு தென்னங்கிடுகுகளை வெச்சே பந்தல் போட்டுருவோம். கல்யாணம் சும்மா ஊரே பாக்க விமரிசையா நடக்கணும். அதான் இந்த ரங்கனோட ஆசை...

அவள் நடந்து விலக விலக அவளைப் பார்த்து அவன் சொன்னது அவளுக்கும் புரிந்தது. அவள் சொல்ல நினைத்ததை எல்லாம் சொல்லிவிட்டது போலவும் அதற்கு அவனும் இதுதான் என் முடிவு என்று ஒரு பதிலைச் சொல்லிவிட்டது போலவும் இருந்தது.

'ஸ்ரீதரனோடு நிச்சயம் என்று ஒன்று நடந்தால் தூக்கிலே தொங்கிவிடவேண்டியதுதான்' என்கிற ஒரு உறுதிப்பாட்டுக்கும் மைதிலியின் மனம் சென்றுவிட்டதுதான் கொடுமை!

★★★

வடக்குக் கோபுர முகப்பு!

மார்பில் அங்கவஸ்திரமுடன் 'ஸ்ரீ சூக்தம்' சொன்னபடியே உள் நுழைந்து கொண்டிருந்தார் சக்கரவர்த்தி. முகத்தில் ஒரு தெளிவு தெரிந்தது. பெற்ற தாயின் மறைவுக்கும் காரியங்களுக்கும் பிறகு கோயில் பிரவேசம் செய்கிறார்! அப்படியும் உள்ளே போய் சன்னதி முன் நிற்க என்னவோ போல் இருந்தது. ஒரு ஊன மாஸ்யமாவது! (இறந்தவர்களுக்குச் செய்யும் மாதாந்திர கர்ம காரியம்) கழிந்தபிறகே திருச்சன்னதிகளுக்குள் நுழைவது அந்த சன்னதியின் மாண்புக்கு நல்லது என்று அவருக்குள் ஓர் எண்ணம்!

எனவே கோயிலுக்கு வெளியே பிராகாரத்தைச் சுற்றிவிட்டு வருவோம் என்பதுதான் இப்போது அவருடைய திட்டம். வடக்குக் கோபுரம் கடந்து உள் நுழைந்த மாத்திரத்தில் எதிரில் சற்று உயரத்தில் மேட்டழகிய சிங்கர் என்று ஸ்ரீரங்கவாசிகளால் பக்தியோடு அழைக்கப்படுகின்ற நரசிம்மர் சன்னதி கண்ணில் பட்டது.

கம்பர் ராமாயணத்தை அரங்கேற்றிய மண்டபத்தில் அமர்ந்து கொண்டு நரசிம்மரை தியானித்துவிட்டு ராம நாமத்தை ஒரு ஆயிரம் முறைக்கு குறைவின்றி ஜெபித்துவிட்டுப் புறப்பட்டால், போகிற காரியம் முழு வெற்றி பெறும் என்பது ஊரில் சிலருக்கு மட்டுமே தெரிந்திருக்கும் ஒரு ரகசியம் போன்ற விஷயம்!

மைதிலி திருமண நிமித்தம் அடுத்தடுத்து இனி எல்லாமே நல்லவிதமாக நடக்க வேண்டும் என்கிற கவலையோடு தனக்குத் தெரிந்த அந்த ரகசியத்தை செயல்படுத்தப் பார்த்தார்.

எதிரில் ரங்கநாயகித் தாயார் சன்னதி முன் பிராகாரம். அதில் டி.வி.கேமராவும் கையுமாய் ஒரு கூட்டம். பிராகாரத்தில் அரையர் சேவை நிகழ்வுக்கான ஷூட்டிங் நடந்தபடி இருந்தது. மார்கழி மாதத்தில் அரங்கனுக்கு ஆடிப்பாடிச் செய்யும் அற்புத மான இசையும் நடனமுமான ஒரு நிகழ்வு! கோயில் நிகழ்வு களிலேயே ஒரு தனித்த சிறப்பும் பார்வையும் உடைய நிகழ்வு.

அரையராக வேடம் கட்டிக்கொண்டிருக்கும் இருவர் திவ்ய பிரபந்தத்தமிழை தங்களுக்கேயுரிய பாணியில் பாடி நிற்கும் காட்சியை டி.வி.கேமரா விழுங்கிக்கொண்டிருந்தது. ஒரு கூட்டமும் நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க சக்கரவர்த்தி தன்னைக் கடந்து சென்ற ஒருவரைப் பார்த்துக்கேட்டார்.

"என்ன ஓய் அங்க நடக்கறது...?"

"டி.வி.ஷூட்டிங் மாமா... ஏதோ டாக்குமென்ட்ரி படம் பண்றாளாம். நம்ம கோயிலப் பத்தி பண்ணும்போது அரையர் சேவையை விட முடியாமா?"

அரையர் கோலத்தோடு நின்றவர்கள் பாடிய வரிகள் சக்கரவர்த்தி ஐயங்காருக்குள் ஒரு சிலிர்ப்பை ஏற்படுத்தின. அவர்

அமர்ந்திருந்த மண்டபம் கம்பன் அமர்ந்து ராமாயணத்தை
அரங்கேற்றிய மண்டபம். அங்கே அமரும் போதெல்லாம்
காலத்தை வென்ற கம்பனின் இடத்தில் அமர்கின்றோம் என்கிற
உணர்வு ஒரு பெருமிதமாய் இலக்கிய ருசி உள்ளவர்க்கெல்லாம்
எழும். சக்கரவர்த்தியாருக்குள்ளும் எழுந்தபோது அதே வடிவில்
வாயில் வழியாக தேசிகாச்சாரியும் வந்து கொண்டிருந்தார்.

சக்கரவர்த்திக்கு அவரைப் பார்க்கவும் ஒரே பிரகாசம்.
தேசிகாச்சாரியும் அவரைக் கவனித்தார். ஏனோ ஒரு நிரடல்.

''ஓய் தேசி... வாருமய்யா இப்படி...''

சக்கரவர்த்தியாரிடம் தேசிகாச்சாரி வரையில் ஒரு படி
மரியாதை. அவரும் நெருங்கி வந்தார். செயற்கையாகச் சிரித்தார்.

''என்ன ஓய் இங்க உட்கார்ந்துட்டேள்... பெருமாள் சேவை
ஆயிடுத்தா?''

''இப்போதைக்கு என் வரையில் பெருமாள் நீர்தான்.''

''என்ன இது. புதுசா வாங்கோ போங்கோன்னுண்டு''

''சம்பந்தியாகப் போறவரை மரியாதை இல்லாமக் கூப்பிட
லாமா?''

சக்கரவர்த்தி அந்த ஒரு வார்த்தையில் சொல்லவேண்டியதைச்
சொல்லிவிட்டார். திக்கென்றது தேசிகாச்சாரிக்கு. சட்டென்று
பேச்சுவராமல் ஒரு ஸ்தம்பிப்பு.

''என்ன தேசி... நம்ப முடியலியா? நெஜமாத்தான்யா
சொல்றேன். உம்ம பிள்ளை ஸ்ரீதரனுக்கு நான் என் பொண்ணைக்
கொடுக்கறதா முடிவு பண்ணிட்டேன். வத்சலாவுக்கும் இதுதான்
விருப்பம்கறதையும் தெரிஞ்சுண்டேன். உமக்கு ஆட்சேபணை
இல்லையே?''

தேசிகாச்சாரி தொடர்ந்து மௌனத்தில் ஊர்ந்தார்.

''என்ன ஓய்... கேட்டாசந்தோஷத்துல திக்கு முக்காடுவேன்னு
நினைச்சேன்... இப்படி பேந்தப் பேந்த முழிக்கறேளே...''

''அண்ணா... அது வந்து...''

''அண்ணா இல்ல சம்பந்தி...''

''இல்ல... எதனால இப்படி திடீர்னு ஒரு முடிவுக்கு
வந்துருக்கேள்னு தெரிஞ்சுக்கலாமா நான்...''

''என்னய்யா... சம்பந்தின்ன உடனேயே பிள்ளையாத்துக்
காரனுக்கே உண்டான செத்தும் திமிறும் வந்துடுத்தோ... கேள்வி
எல்லாம் கேட்கறே?''

''ஐயோ தப்பா எடுத்துக்கப்படாது. மைதிலி என் வரைல
இதோ அந்தத்தாயார் மாதிரி. அவ ரொம்ப நன்னா இருக்கணும்.
அதான் அப்படிக் கேட்டேன்.''

''அப்படின்னா நான் பொறுப்பில்லாம முடிவெடுத்துட்ட
மாதிரி தோன்றதா உனக்கு?''

''அண்ணா... இத்தனை நாளா இல்லாம திடீர்ன்னு இந்த ஏழை
பர்ஜாரக குடும்பத்தவனை சம்பந்தின்னா அதை எப்படிண்ணா
சட்டுன்னு ஏத்துக்க முடியும். உங்க சம்பந்தியாகறதுங்கறது
பாக்யப்பட்ட விஷயம். நான் ஒரு பாவப்பட்ட ஜென்மம்னா...''

''போடா பைத்தியகாரா! நம்ம ஜாதில வயதான கன்னிப்
பொண்ணை கல்யாணம் பண்ணித்தர வக்கில்லாம ஒருத்தன்
இருந்தான்னா அவன்தாண்டா பாவப்பட்ட ஜென்மம். உனக்
கென்னடா? ரெண்டு பொண்ணை அழகா கல்யாணம் பண்ணிக்
கொடுத்துட்டே கைநிறைய சம்பாதிக்கற ஒரு அழகான புள்ளை.
இனி நீ நாட்டாமை பண்ணி வாழ வேண்டியவண்டா...''

''அது சரிண்ணா... வத்சலா வந்து கால்ல கைல விழுந்து
கெஞ்சினாளா... அதான் இப்படி ஒரு முடிவா?''

''என்ன உளர்றே நீ... உன் பொண்டாட்டியாவது கெஞ்சற
தாவது... அவளுக்கு பிறத்தியாரை கெஞ்ச வெச்சுப் பார்த்துத்
தானேடா பழக்கம்...''

''அப்ப இந்த முடிவுக்கு எப்படிண்ணா வந்தேள்?''

''முதல் காரணம் என் மாட்டுப் பொண் ரேவதி. அடுத்த
காரணம் நீ மூணாவது காரணம் நான் பார்க்க நல்லபடியா

வளர்ந்தவன் உன் பிள்ளை ஸ்ரீதரன்... இந்த மூணு காரணம் போறாதா?''

''அப்ப ஜாதகம் கீதகம்...?''

''அதை வழக்கம் போல பாத்துட்டா போச்சு.''

''அதுல ஒரு வேளை பொருந்தலன்னு வந்தா?''

தேசிகாச்சாரி நெகடிவ் பக்கமாவே போவதை சக்கரவர்த்தியால் நன்றாகவே உணர முடிந்தது.

25

'கஷ்டமெலாம் தீர்ப்பது அஷ்டம்' அதை
இஷ்டமுடன் கூறுவது சிரேஷ்டம்.
மட்டகலா துன்பம் நமைவிட்டும்; சிதை
பட்டகல இன்பம் வந்து முட்டும்,
தொட்டதெலாம் தங்கமாகி கொட்டும்; இதை
விட்டகலார் மாலடியார் சுற்றம்!'

சலனப்பட்ட முகத்துடன்சக்கரவர்த்தி ஐயங்கார் தேசிகாச்சாரியை கூர்மையாக பார்த்தார். அவர் பார்ப்பதை தேசிகாச்சாரியால் தாளமுடியவில்லை. தன் கவனத்தை அப்படியும் இப்படியுமாக்கிக் கொண்டார்.

''தேசி...''

''ண்ணா...''

''ஜாதகம், ஜோசியம்னு பொண்ணப் பெத்த நானே பேசாதப்ப நீ பேசினே. அதுக்கென்ன பாத்துட்டா போச்சுன்னேன். ஒருவேளை நெகடிவா வந்துட்டான்னு இப்பவே நீ சொல்றதப் பார்த்தா உனக்கு மைதிலிய உங்காத்து மாட்டுப் பொண்ணாக் கிறதுல இஷ்டம் இல்லேங்கற மாதிரி எனக்குத் தோன்றது.

அப்படின்னா இங்கேயே நான் உனக்கு சாதகமா முடிவு எடுத்துடறேன். ஆனா எனக்கு ஒரு விஷயம் மட்டும் தெளிவா தெரியணும்...''

சக்கரவர்த்தி வளவளக்காமல் நெட்டுக் குத்தாக விஷயத்துக்கு வந்து விட்டார். தேசிகாச்சாரிக்கு அவர் அப்படி கேட்டதும் மனது படபடக்க ஆரம்பித்தது.

''ண்ணா... நீங்க தப்பா புரிஞ்சுண்டுட்டேள். நீங்க என்ன கேக்கப் போறேள்னு எனக்கு நன்னா தெரியும். மைதிலியோட ஜாதகத்தை நினைச்சு உனக்குக்கூட பயமான்னு கேக்கப் போறேள் சரிதானே?''

''பரவாயில்லியே... கரெக்டா புரிஞ்சிண்டுட்டியே...''

''அண்ணா... மைதிலி ஜாதகம் மகா மட்டமாவே இருந்துட்டுப் போகட்டும். எனக்கு அதப் பத்தி அக்கறையில்லை. என் வரைல அவ மகாலக்ஷ்மி. தங்கமான பொண்ணு. அவ என் ஆத்துக்கு மாட்டுப் பொண்ணா வர நான் கொடுத்து வெச்சிருக்கணும். ஆனா எனக்குள்ள திகட்டலே வத்சலாவை உத்தேசிச்சுதான்...''

தேசிகாச்சாரி வத்சலாவைத் தொடவும் சக்கரவர்த்தியிடம் ஒரு சிரிப்பு.

''என்ன... உன் பொண்டாட்டி படுத்தி எடுத்துடுவாள்னு பயப்படறியா?''

''அதை நான் எப்படிச் சொல்வேன்? அவ அப்புறமா உங்களையே எந்த அளவுக்கு மதிப்பாள்னு என்னால சொல்ல முடியாது. வத்சலா வரைல பணம் காசு பட்டம் பதவி இதெல்லாம் தான் பெரிய விஷயங்கள். இந்த நாலையுமே என்னால அவ எதிர்பார்த்த அளவுக்கு தரமுடியல. உங்க சம்பந்தம் மட்டும் அமைஞ்சுட்டா உங்க சம்பந்தி உங்க சம்பந்தின்னு சொல்லியே அவ ஊரை ஒரு வழி பண்ணிடுவா!''

''அப்ப உன் பயமே வத்சலாதானா?''

''எனக்கு மட்டுமில்ல எல்லாருக்கும் நரகமே அவதானே?''

"அவளை உன்னால சரியா புரிஞ்சுக்க முடியலைன்னு நினைக்கிறேன். நீ ரொம்பவே பயப்படறே... அவகிட்ட பேசினா உன்னைப்பத்தி ஒத்துக்கற மாதிரி எதையாவது சொல்வா! எல்லாம் நாம எங்க இருந்து எப்படி பாக்கறோம்கறதுலதான் இருக்கு..."

"இல்லண்ணா... நான் என்ன சொல்றேன்னா..."

"நீ எதையும் சொல்லாதே... உன் பொண்டாட்டியை நான் சமாளிச்சுக்கறேன். உன் பிள்ளை மைதிலிகிட்ட ஆத்மார்த்தமா இருப்பான்தானே?"

"இவ இல்லைன்னா என் ஆத்துல நல்ல பாம்பு கூட மண்புழுவாதான் கிடக்கும்."

"அப்ப எனக்கு அது போதும். நான் நிச்சயதார்த்தத்துக்கு நாள் குறிச்சுடட்டுமா?"

"....."

"இப்படி திறு திறுன்னு முழிச்சா எப்படி... வாயத்திறந்து சொல்."

"அண்ணா இன்னொரு சமாச்சாரம்..."

"என்ன... கல்யாண சீர் செனத்தி சம்பந்தமா ஏதாவதா?"

"அதெல்லாம் எதுவுமில்லைண்ணா. ஒரு விஷயத்துல நான் ஒரு குற்றவாளி... குற்றவாளின்னா சாதாரண குற்றவாளிகூட இல்ல... மகா மோசமான குற்றவாளி."

"நீயா... பீடிகை எல்லாம் பலமா இருக்கு. அப்படி என்ன குத்தம் பண்ணினே?"

"அதை இப்ப ஒத்துக்கற தைரியம் எனக்கு இல்லை! ஆனா ஒருநாள் அது ஊருக்குத் தெரிய வரலாம். அப்ப நீங்க அதை கேட்டுட்டு என்னை நினைச்சு வருத்தப்படக் கூடாது. உங்க வரைல நான் இப்பவே அதை சொல்லிக்கறேன்..."

"என்ன குத்தம் பண்ணேன்னே சொல்லாம இப்படி புதிர் போட்டா எப்படி தேசிகாச்சாரி...?"

"புதிர்தாண்ணா... புதிரேதான்! ஆனா தயவு செய்து இப்ப என்னை எதுவும் கேக்காதேள்."

"இதுக்கு நீ இந்த டாபிக்கை ஓபன் பண்ணியிருக்கவே தேவையில்லையே..."

"நீங்க மூணாம் மனுஷனாவே இருந்துருந்தா ஓபன் பண்ணியிருக்க மாட்டேன்தான். சம்பந்தி ஆகப்போறேளே..."

"வினோதமா இருக்கு உன் பேச்சு. சினிமா தியேட்டர்ல டிக்கெட்டை ரிசர்வ் பண்ணிக்கற மாதிரி நான் நாளைக்கு உன்ன தப்பா நினைக்க கூடாதுங்கறத நீ ரிசர்வ் பண்ணி வெச்சுக்க ஆசைப்படற மாதிரி தெரியறது..."

"இல்லண்ணா... அப்ப தப்பா கூட நினைச்சுக்குங்கோ... அப்ப உங்களுக்கு அடக்க மாட்டாம கோபம் வந்தா நீங்க என்னை கட்டிவெச்சும் அடிக்கலாம். வாங்கிக்கறேன். ஆனா முன்னாடியே தெரிஞ்சிருந்தா நான் உன் பிள்ளைக்கு என் பொண்ணை கொடுத்துருக்கவே மாட்டேன்னு அப்ப சொல்லக் கூடாது. அதுக்காகதான் நான் இப்பவே சொல்லிட்டேன்."

"தேசி... ஏன் இப்படி என்னை குழப்பறே? அப்படி நான் நினைக்கற அளவுக்கா நீ தப்புப் பண்ணி வெச்சிருக்கே?"

"என்வரைல அது அப்படிதான்... ஆனா இன்னிக்கு பலர் பண்ற தவறுகளைப் பாக்கறச்சே என்னோடது ஒண்ணு மில்லேன்னும் தோன்றது."

"இவ்ளோ பேசற நீ அது என்னன்னு இப்பவேதான் சொல்லிடேன்."

"இல்லண்ணா... எனக்கு இப்ப அதைப்பத்தி பேச தைரிய மில்லை. அதோட நான் வத்சலாவுக்கு சத்யம் பண்ணி வேற கொடுத் துட்டேன். என்னால சத்யத்த மீற முடியாது."

"ஓ... அப்ப அது உன் ஆத்துக்காரிக்கும் தெரியும்னு சொல்."

"ஆமாம்... அவளுக்கும் தெரியும்!"

"சரி. சத்யம்கறே, புதிர்ங்கறே... ஒரு விஷயம் மட்டும் உன்கிட்ட எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. நீ உண்மையா

நடந்துக்க ரொம்ப பிரயத்தனப்படறே... எனக்கு அது போதும்
மிச்சத்த நான் வத்சலாகிட்ட பேசிக்கறேன்...''

''வேண்டாண்ணா... அது இன்னும் ஆபத்து?''

''சரி... நான் பேசலை. போறுமா?''

''இது போறும்... இது போறும்னா... அப்ப நான் உத்தரவு
வாங்கிக்கட்டுமா?''

''நீ கிளம்பு... நான் கொஞ்ச நாழி உக்காந்து இருந்துட்டு
கிளம்பறேன். ஆங்... ஜாதகம்னு ஆரம்பத்துல ஏதோ சொன்னியே
பாக்கலாமா இல்ல வேண்டாமா?''

''வேண்டாண்ணா... பெருமாளையும் தாயாரையும் நம்பி
எல்லாத்தையும் பண்ணுவோம். நான் உசுரோட இருக்கறவரை
மைதிலியை தங்கமா பாத்துப்பேன்...''

''அது போதும் எனக்கு...'' சக்கரவர்த்தி கூறி முடிக்க தேசிகாச்
சாரி பணிவான உடல் மொழிகளோடு அகலத் தொடங்கினார்!

★★★

பத்தாறு வேஷ்டியில் கச்சம் உடுத்தி சந்தனக்கலர் பாலியஸ்டர்
துணியில் முழுக்கைச் சட்டை போட்டுக்கொண்டு மிடுக்காய்
வெளியே புறப்பட்டுக் கொண்டிருந்தார் சிங்கராச்சாரியார்!

கும்பகோணத்தில் ஒரு கோயிலில் அன்றைக்கு அவரது
உபயன்யாசம். அவரது உபன்யாசங்களில் 'சரணாகதி' பற்றி அவர்
பேசக்கேட்க வேண்டும். மனதை பக்திப் பரவசத்தில் மிதக்கவே
வைத்து விடுவார். அன்றைக்கும் சரணாகதிதான் தலைப்பு.
அவரை அழைத்துச் செல்ல வாசற்புறத்தில் கார் காத்துக்
கொண்டிருந்தது.

சிங்காரச்சாரியார் வரையில் காலமும் ஒரு வகையில் கடவுள்.
எனவே ஒரு நொடித்தாமதம் கூட அவருக்கு ஆகாது! காலை கண்
விழிப்பதில் கூட அத்தனை துல்லியமிருக்கும்.

அன்றைக்கு சரியாக ஏழு மணிக்கு உபன்யாசம் ஆரம்பம்!
மூன்று மணிக்கே கிளம்பலில்தான் சரியாக இருக்கும். மணியும்

மூன்றைத் தொட்ட சமயம் சிங்கராச்சாரியார் புறப்படவும்,
எதிரில் தேசிகாச்சாரி!

''வாப்பா... நான் கும்பகோணம் கிளம்பிண்டிருக்கேன்
ஏழுமணிக்கு அங்க இன்னிக்கு உபன்யாசம்.''

''அடடா... முக்கியமான பல விஷயங்களைப்பற்றி
பேசலாம்னுதான் வந்தேன்.

''நாளைக்கு காலம்பற ஒரு பதினோரு மணிக்கு வந்துடேன்.
பேசுவோம்.''

''சரி...''

''சரி... நான் புறப்படறேன்...''

சிங்கராச்சாரியார் நிதானமாக நடந்து கார் ஏறப்போன சமயம்
பக்கவாட்டில் இன்னொரு கார் வந்து நிற்க உள்ளிருந்து ஒரு
போட்டோ கிராபரும் பத்திரிகையாளரும் இறங்கினார்கள்.

''வணக்கம்... நாங்க அமுதம் வார இதழ்ல இருந்து வந்துருக்
கோம். எங்க பத்திரிகையோட ஆன்மிக சிறப்பு மலர்ல உங்க
பேட்டியை வெளியிடறது தொடர்பா போன் பண்ணியிருந்
தோமே...?''

''அது சரி... காலை 11 மணிக்கு வரேன்னுட்டு இப்ப வந்தா
எப்படி?''

''மன்னிக்கவும். வழியில எதிர்பாராத விதமா பல
தடங்கல்கள்.''

''நீங்களும் என்னை மன்னிக்கணும் நான் இப்ப கும்பகோணம்
உபன்யாசத்துக்குக் கிளம்பிண்டு இருக்கேன்...''

''உங்களுக்கு ஆட்சேபணை இல்லேன்னா உங்ககூட கார்ல
வந்து பயணத்தின் போதே பேட்டியை எடுத்துக்கறோம்.''

''அதுவும் சரிதான்... தாராளமா வாங்கோ. எனக்கும்
பயணத்துல பேசறது... ரொம்பப் பிடிக்கும்.''

அவர் கூற அவர்கள் ஏறிக்கொள்ள, கார் புறப்பட்டது.
ஏக்கத்துடன் பார்த்துவிட்டு கிளம்பினார் தேசிகாச்சாரி!

26

'இனித்த மொழி தமிழென்றே
அழுத்தமுடன் பாரதியும்
பனித்தலைவன் தலைவனென்றே
குறுமுனி அகத்தியனும்
கனித் தமிழை மதித்த விதம்
உதித்தகதிர் போலாமே!
நனிதந்த தமிழாலே நாலாயிரம்
பாடல்களை பன்னிருவர்
அணிதந்த செயலதுவோ அரிதின்
அரிதாமே...!
மணிநாதம் மனதின் மிசை
அருளமுதம் அளித்தார் போல்
பிணி போக்கும் பிரபந்தத்
தமிழ்பாடுவோர்க்கு பட்டுத்
துணி போர்த்தி பாதம் பற்றி
வணங்குவமே!'

காருக்குள்...

''நீங்க உங்க கேள்விகளை கேட்க ஆரம்பிக்கலாம்?'' என்றார் சிங்காரச்சாரியார்.

''கேள்விகள் கொஞ்சம் காண்ட்ரவர்சியா இருந்தாலும் நீங்க பதில் சொல்லணும்'' சொன்னார் நிருபர்.

''எனக்கு எது தெரியுமோ அதைச் சொல்வேன். காண்ட்ரவர்சி... ஆர்டினரிங்கறதெல்லாம் உங்க பார்வையைப் பொறுத்த விஷயங்கள்...''

''சரிங்க... விஞ்ஞானம் வெகுவா முன்னேறிட்ட இந்தக் காலத்துலயும் கோயில்கள்ல கூட்டத்துக்குக் குறையில்ல. சபரி

மலைக்கும், திருப்பதிக்கும் லட்சக்கணக்குல போறாங்க. இது பக்தியா... இல்ல வீக்கமா?''

''சந்தனத்தை விரலால தொட்டு திலகமா இட்டுண்டாலும் மணக்கும் வாரித் தெளிச்சிண்டாலும் மணக்கும். விதங்கள் மாறுவதால சந்தனத்தோட குணம் மாறுமா என்ன?''

''இதை நீங்க எதுக்கு சொல்றீங்கன்னு...?''

''புரியலியா... பக்தியில பக்திப் பெருக்கம், வீக்கம்னுல்லாம் இடையாது. நீங்க அதை எப்படிக் கையாண்டாலும் முடிவுல அது உங்களுக்கு நன்மையை மட்டுமே செய்யும்.''

''அப்படி இல்லாத நாத்திகர்கள் பக்தி உங்க கருத்து?''

''தரைல நிறைய இடம் இருக்கும்போது தலைல சுமக்கற வங்கள பத்தி என்னத்தச் சொல்ல? அது ஒரு நிலைப்பாடு!''

''அது தப்பா, சரியா?''

''இப்படிக் கேக்கறதுதான் பெரிய தப்பு.''

''எப்படி?''

''நாத்திகம்கறதே சந்தேகத்தால வருவது... பக்தியோ நம்பிக்கையால வருவது. சந்தேகமும், நம்பிக்கையும் யோசிக்கறதப் பொறுத்து வருவது... யோசிக்கறதுங்கறது சூழலால உருவாவது கூடவே உங்க கர்ம வினைகளுக்கும். அதுல நிறைய இடம் இருக்கு... இப்படி நீங்க பக்திமானாவும், நாத்திகம் பேசற வராகவும் இருக்கறதுக்கு பின்னால ஒரு அடுக்கு இருக்கு... இதை தப்பு சரின்னு பாக்காம நிலைப்பாடா மட்டுமே பாக்கணும்.''

சிங்கராச்சாரியாரிடம் எந்தத் தயக்கமும் இல்லை. பதில்களுக்காய் அவர் மூளையை கசக்கிக்கொள்ளவுமில்லை. 'உள்ளத்தில் ஒளியுண்டாயின் அது வார்த்தையில் வெளிப்படும்' என்பதற்கு சான்றாக இருந்தது அவர் பேச்சு.

காரிடமும் நல்ல வேகம்... வழியில் ஒரு மணல் திருட்டு லாரியை போலீசார் பிடித்து நிறுத்தி விசாரித்துக்கொண்டிருந்தனர். அதைப்பார்த்த நிருபர் அது தொடர்பாகவும் கேள்வி கேட்டார்.

"காவிரியை தெய்வம்னு சொல்றாங்களே...?"

"தெய்வம்தான்! எத்தனை உயிர்களும் பயிர்களும் அவளால தழைக்கறது... அவ தெய்வம் இல்லாம வேற யார்?"

"அப்படிப்பட்ட காவிரி ஆத்துல மண் திருடறாங்களே அதை அந்த தெய்வம் தட்டிக் கேட்கக் கூடாதா?"

"காவிரியால பலன் அடையற நாம வேடிக்கை பாக்கணும். ஆனா காவிரி வந்து தட்டிக்கேட்கணுமா?"

"நாம சாதாரண மனிதர்கள் காவிரியோ தெய்வம்! தெய்வம் நினைச்சா அந்த மண் திருடர்கள் மனசுக்குள்ள புகுந்து நொடியில் திருடவிடாம செய்துடலாமே? உங்க வரைல காவேரியை நீங்க எப்படி உணர்ந்திருக்கீங்க?"

"காவிரிக்கு நான் வெச்சிருக்கற பேர் ரங்கநதி, அவளுக்குள்ள என் வைர மோதிரம் ஒருமுறை விழுந்திடுச்சி. ஆனா அவ அதை எனக்கே திருப்பித் தந்துட்டா..."

"ஓ... உங்களுக்கு தந்துட்டதால உங்க வரைல காவேரி தெய்வம். பலபேர் அதுல மூழ்கி செத்துருக்காங்க... அப்ப அவங்களுக்கு காவேரி, ராட்சஸியா?"

"இருக்கலாம்... மணக்க மணக்க தயாரிக்கப்பட்ற உணவு தானே சகிக்க முடியாத மலமாகவும் மாறுது."

"உங்க பதில் சாதுர்யமா இருக்கு... ஆனா எங்களுக்கு முழு நிறைவைத் தரலையே..."

"நான் சாதுர்யமா பதில் சொன்னதாகவே நினைக்கல. சரியான பதில்தான் தந்துருக்கேன். நிறைவு உங்களுக்கு வரலேன்னா குறை உங்ககிட்டதான் இருக்கணும்."

"சாதுர்யமான பதில். மிகுந்த மன வருத்தத்தோட இந்தக் கேள்வியை சமூக நலனுக்காக கேட்கறோம். பொன் பொருளை திருடின மனிதன் இன்னிக்கு ஆறுகளையே திருடத் தொடங்கிட்டான். இவர்களை உங்க ரங்கநதி தண்டிக்குமா இல்லை மன்னிக்குமா?"

"வெட்டும்னு தெரிஞ்ச பிறகும் ஒரு வாள் கிட்ட ஜாக்ரதையா இல்லாதவனை அந்த வாள் எப்படி வெட்டாமல் விடாதோ அதேபோல இவர்களையும் எங்க ரங்கநதி நிச்சயம் தண்டிக்கும்."

அவரது பதில் நிருபர் முகத்தில் ஒரு மகிழ்ச்சியை உருவாக்கிற்று!

சிங்கராச்சாரியார் குரலில் தொனித்த உறுதி அந்த நிருபருக்கு மிகப் பிடித்துப் போய் விட்டிருந்தது. "காவேரி வரைல அந்த ஆத்துல மண் திருடறவங்க மட்டுமில்ல. உலகத்துக்கே பொதுவான அந்த நதியை எங்களுக்கு மட்டுமே சொந்தம்னு சொல்லி சொந்தம் கொண்டாடறவங்க கூட குற்றவாளிகள் தான். இந்த குற்றவாளிகளை நிஜமாலுமே அந்த ஆறு தண்டிக்குமோ தண்டிக்காதோ, தண்டிக்கணும்னு உறுதியோட சொன்ன உங்க கருத்து நிச்சயமா மகிழ்ச்சி தர்க்கூடிய கருத்து. கடைசியா ஒரே ஒரு கேள்வி அதுக்கும் பதில் சொல்லிட்டா ரொம்ப சந்தோஷப்படுவேன்..." என்ற அந்த நிருபரிடம் "தாராளமா கேளுப்பா" என்று ஊக்கப்படுத்தினார் சிங்கராச்சாரியார்.

"அறிவு வேற ஞானம் வேறயா?" அந்த நிருபர் கேட்ட அந்த இறுதிக் கேள்வி சிங்கராச்சாரியாரை சற்று சிந்திக்கவும் சிரிக்கவும் வைத்தது.

"அறிவுக்கு, தான் அறிஞ்சது மட்டும்தான் கணக்கு. ஞானம் அப்படி இல்லை. அது சூட்சுமமானது! தவம், த்யானம், அனுபவம், அப்புறமா உள்தேடல்னு நால்வகையான செயல்பாடுகளால வருவது ஞானம்."

"உங்க பதில் இன்னும் கொஞ்சம் எளிமையா இருந்தா நல்லா இருக்கும்."

ஒரு கதையாவே சொல்றேனே! திருவிளையாடல் சினிமாவுல நாரதர் சிவபெருமான் கிட்ட ஒரு பழத்தைத் தருவார். அதுக்கு பிள்ளையாரும் முருகனும் போட்டி போடுவாங்க. போட்டி வந்தாலே சில நிர்ப்பந்தங்களும் விதிகளும் உருவாகிவிடுமே...?"

"புரியது..." "யார் இந்த உலகத்தை முதல்ல சுத்திவர்றாங்களோ அவங்களுக்கு அந்தப் பழம்னு சிவபெருமான் சொல்லிடுவார்.

முருகன் மயில் மேல ஏறிக்கிளம்பிடுவார். ஆனா பிள்ளையார் பார்வதி பரமேஸ்ரனைச் சுற்றி பழத்தை வாங்கிடுவார்... அப்படி அவர் வாங்கினார் இல்லையா? அதுதான் ஞானம். மயில்மேல ஏறி உலகைச் சுற்றி வந்த முருகனோட செயல் அறிவோட செயல்பாடு...''

''பிள்ளையார் செயல்பாடு ஏமாத்து வேலை இல்லையா?''

''அது உங்க உலகப் பார்வை... அறிவோட கோணம். ஞானிகள் அந்த ஈஸ்ரனையே உலகமா நினைச்ச ஞானத்தை தான் பெருசா எடுத்துப்பாங்க. மிக நேராத் தெரியாமல் ஒளிந்திருப்பதை உணர்வதில்தான் ஞானத்துக்கு சிறப்பு. கூர்மையான அறிவு உங்களுக்கு உங்க வேலைல நல்ல முன்னேற்றம் தரும். ஞானம் மட்டும்தான் உயிருக்கு முன்னேற்றம் தரும்.''

சிங்கராச்சாரியாரிடம் தொடர்ந்து பேசிக்கொண்டே இருக்கலாம் என்றுதான் அந்த நிருபருக்குத் தோன்றியது.

★★★

ஸ்ரீதரனும் மாப்பிள்ளை ராம்குமாரும் உற்சாகமாக சீட்டு விளையாடிக்கொண்டிருந்தனர். உஷாவும் வத்சலாவும் நிச்சய தார்த்ததுக்கு நாள் குறிக்க ஜோதிடரைப் பார்க்கச் சென்றிருந்தனர். இனம் புரியாத ஒரு சோர்வோடு உள் நுழைந்த தேசிகாச்சாரியை ராம்குமார் சீட்டாட அழைத்தான்.

''மாமா எங்க போய்ட்டேள்... வாங்க ஒரு ரவுண்டு விளையாடுவோம்...''

''இல்ல மாப்ள... எனக்கு இப்ப ஒரே தலைவலி... நீங்க விளையாடுங்கோ. ஸ்ரீதரா நீ என்ன இன்னிக்கு லீவு போட்டுட்டியா?''

''ஆமாம்ப்பா... இன்னிக்கு வியாழக்கிழமை. ஒரு நாள் லீவு போட்டா நாளைக்கு பக்ரீத் லீவு. அடுத்த நாள் செகண்ட் சாடர்டேன்னு லீவு. சன்டே ஆஸ் யூஷ்வல் லீவு... மொத்தத்துல நாலு நாள் லீவு...''

''ஓ அதான் கோவில்ல அப்படி ஒரு கூட்டமா?''

''பின்ன... நாலு நாள் லீவுன்னா எங்கயாவது கிளம்பிப் போயாகணுமே? அதான் கூவிக்கூவி கார் விக்கறாளே...? ஒரு காரை வாங்கிண்டு ஊரைச் சுத்த வேண்டியதுதான்.''

''எங்க ஸ்ரீதர் சுத்தறது? பார்க் பண்ண முதல்ல எங்க இடம் இருக்கு? கஷ்டப்பட்டு எங்கயாவது நிறுத்தினா டோக்கன் போடுறவன் வந்துடுறான். இதுல டோல் கேட் கொடுமை வேற... என்னமோ கார் வெச்சிருக்கற அவ்வளவு பேரும் நோட் அடிக்கற மெஷினும் வெச்சிண்டிருக்கற மாதிரி...''

''அது என்னமோ வாஸ்தவம் தான். இங்க திருச்சில இருந்து வைகைலயும், பல்லவன்லயும் போறதுக்கு ஒரு நபருக்கு நூறு நூத்திப்பத்து ரூவாதான்... அதுவே கார்ல போனா பெட்ரோலுக்கு ஒரு இரண்டாயிரம் டோல்கேட்டுக்கு ஒரு முன்னூறு...

இதுக்கெல்லாம் என்னிக்கு தான் விமோசனமோ?''

''எனக்குத் தெரிஞ்சு சுனாமிதான்... எனக்கு டவுட்டே கிடையாது. இரண்டாயிரத்து பன்னெண்டோட எல்லாரும் போய்ச்சேர வேண்டியதுதான்...''

''ஓ... டு யூ பிலீவ் தட்?''

''யா...யா... ஆனா நான் மட்டும் அதுல எப்படியாவது தப்பிச்சிடுவேன்...''

''அவ்வளவு செல்ஃபிஷா ஸ்ரீதர் நீங்க...?''

''அட என்ன மாப்ளை நீங்க. சக்கரவர்த்தி ஐயங்காருக்கு மாப்ளையாகப் போறேன். ஒரு பெரிய தென்னந்தோப்பு வேற வரப்போறது. அதை ஒரு அஞ்சாறு வருஷமாவது ஆண்டு அனுபவிக்க வேண்டாமா?''

ஸ்ரீதரன் சீட்டை இறக்கியபடியே கேட்ட விதத்தில் அவன் அப்போதே மாப்பிள்ளை ஆகிவிட்ட மாதிரிதான் இருந்தது.

கச்சிதமாக கால் செருப்பை உதறிக்கொண்டே உள்ளே நுழைந்த வத்சலாவும் உஷாவும் ''நாள் குறிச்சாச்சு...'' என்று கோரஸாவே ஆரம்பித்தனர்.

"எப்ப உஷா...?"

"சொன்னா அதிர்ச்சியடையக்கூடாது..."

"என்ன சொல்றே நீ?"

"நாளைக்கே நிச்சயதார்த்தம்...?"

"என்னது நாளைக்கேவா?"

"ஆமாம். நாளைக்குதான் நாள் நன்னா இருக்காம். அதை விட்டா பதினைஞ்சு இருபது நாள் தள்ளிப் போறது. அவ்வளவு நாள் நாம எப்படி இங்க இருக்க முடியும்."

உஷா அப்போதே வானில் மிதக்கத் தொடங்கிவிட்டாள். "அம்மா சாயந்தரமா போய் சாரதாஸ்ல மைசூர் சில்க் ஒண்ணு வாங்கிக்கறேன். ஸ்ரீதரா இது உன் கல்யாணம். நீதான் வாங்கித்தரே... நாளைக்கு அதைத்தான் உடுத்திப்பேன். அந்த அலட்டல் ரேவதி பாத்தா ஆடிப்போயிடணும்..."

"அது எதுக்கு மைசூர் சில்க்? பரம்பரா பட்டுன்னு டிவில கூட விளம்பரத்துல வரதே... அந்த பட்டுப்புடவையையே வாங்கிக்கோ... உனக்கு வாங்கும்போதே அக்கா மாலாவுக்கும் சேர்த்து வாங்கிடு."

"தேங்க்ஸ்டா ச்சீதா... தேங்க்யூ சோ மச்?"

பார்த்துக்கொண்டே இருந்தார் தேசிகாச்சாரி. அவரிடம் சுரத்தே இல்லை.

"ஏன்னா இப்படி செத்த உள்ற வரேளா?" அவரை சமையல் கட்டுப்பக்கம் தள்ளிக்கொண்டு போனாள் வத்சலா.

"என்ன இது எழவு விழுந்த மாதிரி முகத்தை வெச்சுண்டு..."

"உன்னண்ட எப்ப நான் மாட்டினேனோ அப்பவே எழவு விழுந்த மாதிரிதானேடி...?"

'போதும்... எனக்கு பளிச்சின்னு பதில் சொல்லிட்டதா நினைப்பாக்கும்... உங்க துரோகத்துக்கு நான் உங்களை இன்னும் ஆம்படையானா நினைச்சுண்டுருக்கறதே பெருசு..."

"நான் பண்ண துரோகத்துக்கு இப்படி துடிக்கிறியே... பாவம்டி அந்த மைதிலி... அவளுக்கு நீ பண்ண நினைக்கறதுக்குப் பேர் என்னடி?"

"என் பிள்ளையாண்டான் அவளுக்கு வாழ்க்கை கொடுக்கப் போறான். இதுக்குப் பேர் துரோகம் இல்ல தியாகம்!"

"தோப்பு என்ன தியாகத்துக்கு இலவச இணைப்பாடி....?"

"வாய மூடுங்கோ... உங்களுக்குதான் சம்பாதிக்கத் துப்பு இல்லை. என் பிள்ளையைத் தேடி வர சொத்தை ஏத்துக்கறது என்ன தப்பு?"

"எல்லாம் சரி. ஜாதகம்னு ஒண்ணு பொருந்த வேண்டாமா?"

"அமெரிக்காவுல ஒபாமாவும் அவர் வைஃபும் ஜாதகம் பாத்துதான் கல்யாணம் பண்ணிண்டாளாக்கும்?"

"நல்ல வேளை ரங்கநாதருக்கும் தாயாருக்கும்னு நீ உதாரணம் காட்டலை. இருந்தாலும் சொல்லிக்கறேன். இந்த ஊர்லயே ஒரு மகானைப் போல வாழ்ந்துண்டுருக்கறவர் சிங்கராச்சாரியார். அவர் மைதிலிக்கும் ஸ்ரீதரனுக்கும் கொஞ்சமும் பொருந்தாது. கல்யாணத்தைப் பத்தி நினைக்கவே நினைக்காதேன்னுட்டார்..."

"அப்படின்னு இப்ப சொல்லி எதையும் தடுத்து நிறுத்த முடியாது. நாளைக்கு இத்தனை நாழி லக்ன பத்திரிகை எழுதி முடிஞ்சிருக்கும். கல்யாணத்துக்கும் நாள் பாத்துட்டேன். எண்ணி இருபதே நாள்!

நடுவுல உங்களால ஏதாவது தடங்கல் வந்தா உங்களோட பித்தலாட்டத்தை நன்னா விஸ்தாரமா எழுதி போலீசுக்கு அனுப்பிட்டு மண்ணெண்ணெயை விட்டுண்டு எரிஞ்சு கரிக் கட்டையாகிட்டுதான் மறுவேலை பார்ப்பேன் ஞாபகம் இருக்கட்டும்.

போங்கோ போய் நிச்சயத்துக்கு ஆக வேண்டியதப் பாருங்கோ. வர்ற வழியிலயே சக்கரவர்த்தி அண்ணாக்கு போன் பண்ணி தகவல் சொல்லிட்டேன். இங்க இப்ப தலைக்கு மேல வேலை இருக்கு. ஞாபகம் இருக்கட்டும்?"

★★★

ஒரு மூட்டை நிறைய உரித்த தேங்காய்களோடு வந்திருந்தான் ரங்கன். வீட்டில் ஒரே பரபரப்பு...!

"வா ரங்கா... நானே தேங்காய் கொண்டு வரச்சொல்லணும்னு இருந்தேன். தோப்புல இப்ப எதுவும் சிக்கல் இல்லையே...?"

"ஒண்ணும் இல்லீங்கய்யா... ஆமா ஏதாவது விசேஷங்களா...?"

"நன்னா கேட்டே போ... விசேஷம்தான்! மைதிலிக்கு நாளைக்கு நிச்சயதார்த்தம்"

"ரொம்ப சந்தோஷம். மாப்ளை...?"

"எல்லாம் உனக்கு நன்னா தெரிஞ்ச பயதான். நம்ம தேசிகாச்சாரியோட ஒரே பிள்ளையான ஸ்ரீதரன்..."

"அட ஸ்ரீதரன் தம்பியா... நல்ல ஜோடிப் பொருத்தம்தாங்க."

ரங்கனும் சக்கரவர்த்தியும் பேசிக்கொள்வது மாடியில் இருந்த மைதிலி காதில் விழ அங்கிருந்தபடியே எட்டிப் பார்த்தாள். கண்களில் மளுக்கென்று கண்ணீர் திரண்டுவிட்டது. அதை தேசிகாச்சாரி பார்க்கவில்லை. ஆனால் மன்னி ரேவதி பார்த்துவிட்டு பதைத்துப் போனாள்.

விறுவிறுவென்று ரங்கனை நோக்கி வந்தவள் "இந்தாடா... நீ போய் இன்னும் ஒரு மூட்டை காயைக் கொண்டு வா, மாமா என்னதிது? எவ்வளவு வேலை இருக்கு.. இவன் கூடல்லாம் நின்னு பேசிண்டு டயத்த வேஸ்ட் பண்ணிண்டிருக்கேளே..." என்ற ரேவதியை ரங்கனே சற்று அதிர்வோடுதான் பார்த்தான். சக்கரவர்த்தி கூட அவனை டேய் போட்டு அழைத்ததில்லை. அதன் எதிரொலி. இருந்தும் அடக்கிக் கொண்டு "சரிங்கய்யா நான் போய் தேங்காயோட வரேன்..." என்றவனாக அவன் மிக வேகமாக கிளம்பினான்.

சக்கரவர்த்திக்கே ரேவதியின் பேச்சு வலித்தது. ரேவதி அடுத்த அட்டாக்கிற்காக மைதிலியை குறி வைத்து மாடி ஏறத் தொடங்கினாள்.

27

'தூள்ளி வரும் நீர்த் தேவதையே
அள்ளித் தரும் நவநிதியே...
வெள்ளி ஒளிப் பிழம்பணைய
பள்ளி கொண்ட ரங்கனவன்
உள்ளம் மகிழ ஓடும்
வெள்ளக் குளிர் நதியே...
கள்ளம் வெல்ல ஒரு வழியை காட்டியே
பள்ளம் பாய்வாய் குடகுக் குதிரையே!'

மாடி அறை! தாத்தாவுக்கு இலங்கையில் பரிசாக அளித்த நிலைக்கண்ணாடி. எப்பொழுதும் அதில் தன்னைப் பார்த்துப் பார்த்து இன்புறும் மைதிலிக்கு அன்று அந்தக் கண்ணாடி ஒரு எதிரியாகத் தோன்றியது. கதவைச் சாத்திக்கொண்டு கதறி அழவேண்டும் என்றும் உத்தேசித்தவள், அதற்காக கதவைத் தாழிட வந்தபோதே அந்தக் கதவை தள்ளிக்கொண்டு உள்ளே வந்தாள் ரேவதி. வந்த வேகத்தில் அவளே கதவைச்சாத்தி தாழிட்டாள். திரும்பினாள். எதிரில் வெறிப்போடு மைதிலி. இரண்டு கன்னக்கதுப்பின் மேலும் உருண்டை உருண்டையாக கண்ணீரின் நிதான ஓட்டம்.

"நினைச்சேன்... நீ ரொம்ப தீவிரமா இருக்கேன்னு நினைச்சேன்... அது ரொம்ப சரியா இருக்கு. இப்ப என்ன... நான் வரலைன்னா கட்டிண்டு இருக்கற புடவையாலேயே இதோ இந்த ஃபேன்ல தூக்கு மாட்டிருப்பியா?"

தன் விருப்பத்தையே மைதிலியின் செயலாக்கி அதை கேள்வியாகவும் ஆக்கிவிட்டு மார்புக்கு குறுக்கே இரு கைகளையும் கோர்த்து கட்டிக்கொண்டாள் ரேவதி.

இந்த மாதிரி பாடி லாங்வேஜெல்லாம் மிக அழுத்தமான வர்களின் தோரணை...

மைதிலி தலையைத் தாழ்த்திக்கொண்டாள்.

அவளிடம் பேசப் பிடிக்கவில்லை. ரேவதியுடன் பேசுவதில் அர்த்தமும் இல்லை என்பதும் அவளுக்கு தெரிந்திருப்பது ஒரு காரணமாக இருக்கலாம்.

"வாயத் திறந்து பேசு... அதான் உன் ஆசை! கவலைப்படாதே. நான் இப்ப போயிடுவேன். நீ உன் இஷ்டம் போல தூக்குல தொங்கலாம். அந்த பொணந்தூக்கிக்காக நீ பொணமா ஆகி உன்னைப் பாத்துட்டு உன் அப்பா, அம்மா, அப்புறம் உன் அருமை அண்ணா அதாவது என் திவ்ய புருஷனும் மானம் போச்சுடி ரேவதின்னு செத்து ஒழியலாம். நான் என்ன செய்வேன்னு கேக்கறியா? சத்தியமா இவாள மாதிரி என்னோட பிராணனை அவ்வளவு சுலபத்துல நான் விட்டுட மாட்டேன். உங்க யாரோட தொல்லையும் இல்லாமல் அவ்வளவு சொத்தையும் நான் அனுபவிச்சு வாழுவேன். மொத்தத்துல நீ சாகறதால எனக்குத்தான் லாபம். உடனேயே என்னை ராட்சஸி, மகாபாதகி, கைகேயி அப்படி இப்படின்னுல்லாம் சபிச்சுடாதே. நீ சபிச்சாலும் எனக்குக் கவலையில்லை. ஏன்னா நான் புத்திசாலித்தனமா கௌரவமா வாழற ஆசையுள்ள ஒருத்தி. உயிரோட மதிப்பையும், வாழ்க்கையோட மதிப்பையும் தெரிஞ்சவ நான். உன்னை மாதிரி தன்னையும் அழிச்சிண்டு தன் குடும்பத்தையும் அழிக்கற குலத்துரோகி இல்ல நான்...

ரேவதியின் பேச்சு மதியான சீரியலில் வரும் ஒரு காட்சி போலவே இருந்தது.

"போதும் நிறுத்துங்க மன்னி... விட்டா ஒரேடியா பேசிண்டே போறேளே? உங்களுக்குத் ரொம்பத் தெரியுமோ... நான் தூக்குல தொங்கப் போறதா நீங்களா நினைச்சுண்டு உங்க ஆசையை எல்லாம் என் மேல திணிக்காதேள். நாங்க எல்லாரும் ஒழிஞ்சுட்டா சொத்தை நன்னா ஆண்டு அனுபவிப்பேள்னு நீங்க சொன்னது மட்டும்தான் உங்க பேச்சுல நிஜம். மத்ததெல்லாம் உங்க வக்ரம். ஆனா உங்க ஆசை இந்த ஜென்மத்துல ஈடேறாது. ஞாபகம் வெச்சுக்குங்கோ..."

மைதிலியும் படபடத்தாள்.

"அப்போ இந்தக் கல்யாணம் நடக்கும்னு சொல்..."

"அதை நீங்க போகப்போக பார்த்தே தெரிஞ்சுக்குங்கோ. எத்தனை பொம்மனாட்டிகளுக்கு அவா விரும்பின வாழ்க்கை அமைஞ்சிருக்கு? இந்தத் தெருவிலையே பல மாமிகள் மூக்கணாங்கயிறுப் பசுவாட்டம் தாலிக்கயித்துல மாட்டிண்டு கூடப்பொறந்தவா எதிர்காலம், குடும்ப மானம், அது இதுன்னு உயிர்ப் பொணமா தானே வாழ்ந்துண்டுருக்கா. அந்த லிஸ்ட்டுல தான் எனக்கும் இடம்னா, நான் என்ன பண்ணமுடியும். என்னையும் மீறிண்டு அழுகை வரது. அதையும் கதவைச் சாத்திண்டு ரகசியமாத்தான் செய்றேன். நான் அழக்கூடவா கூடாது...?"

"சந்தோஷண்டி... ரொம்ப சந்தோஷம். நன்னா அழு. பிழியப் பிழிய அழு... நான் இனி இந்த ரூமுக்குள்ளையே வரமாட்டேன். ஆனா அடக்க ஒடுக்கமா கல்யாணத்தை பண்ணிண்டு நல்லபடியா போய்ச்சேர். உன் மனசுல இருக்கறத தெரிஞ்சுக்கத்தான் நான் அப்படி எல்லாம் பேசினேன். நீ பேசினப்ப பல மாமிகள் மூக்கணாங்கயிறுப் பசுவாட்டம் மாட்டிண்டு கிடக்கறதா சொன்னே?

இங்க நானும் அப்படித்தானே இருக்கேன்? கல்யாணமாகி ரெண்டு வருஷமாகப் போறது. ஆசையா உன் அண்ணன் ஒரு நாள் பேசினதில்லையே? காலேஜ்ல என்னை எல்லாரும் குஷ்பூவாட்டாம் இருக்கேம்பா. உங்கண்ணா கண்ணுக்கு நான் ஒரு காகிதப்பூவா கூட தெரியலையே... எப்பப் பார் ஒரு பாக்கைப் போட்டுண்டு நாரவாயோட தான் கிட்ட வரார். வாடை பிடிக்காம மூஞ்சியை திருப்பிண்டா இதாண்டி புருஷ லட்சணம்கறார். ஏதோ இந்த மட்டுல சிகரெட் பீடின்னு போயிடாம பாக்கோட போயிடுத்தேன்னு நானும் அட்ஜஸ் பண்ணிண்டு தான் குடும்பம் நடத்திண்டு இருக்கேன்.

நாமல்லாம் சேவிக்கற ரங்கநாயகித் தாயாருக்கே என்ன வேலை? பெருமாள் காலை அமுக்கி விட்ற அடிமைத் தொழில்தானே...?

வேண்டாம் விடு... நான் பொங்கி வழிஞ்சா இந்த வீடு மட்டு மில்ல, ஆண்வர்க்கமே தாங்காது. உனக்கு ஒண்ணு சொல்றேன்

கேட்டுக்கோ... இந்த உலகத்துல எந்த ஆம்பளையும் யோக்கியம் கிடையாது. உங்கப்பா, எங்கப்பான்னு எல்லாரையும் சேர்த்துத் தான் சொல்றேன். மகாபாரதத்துல வத்சலா கல்யாணத்தும் போது உண்மை பேசற பலகைன்னு ஒண்ணு இருக்கும். அது மேல யார் உக்காந்தாலும் அவாளால பொய்யே பேச முடியாது. அந்த பலகைக்கு அப்படி ஒரு சக்தியாம்! அது மேல சகுனியை உட்கார வெச்சு சகுனியோட சதித்திட்டங்களை எல்லாம் அம்பல மாக்குவார் கிருஷ்ணபகவான். அப்படி ஒரு பலகை இப்ப இருந்து அது மேல இந்த ஆண்வர்க்கத்தை ஏறி நிற்க வெச்சேன்னு வை. அவா பேசற உண்மைகளை கேட்டு காதுல ரத்தம் வடிய ஆரம்பிச்சிடும்!''

ரேவதியும் தீப்பிடித்தவள் போல் திகுதிகுத்து முடித்தாள். அதுவே அவளது அடாவடியான போக்குக்கு காரணத்தை சொல்லாமல் சொல்லிவிட்டது. ஒரு பொதுப்படையான நம்பிக்கை - அதன் காரணமான தாக்கங்கள் அது ஒவ்வொரு வரையுமே அவரவர் குண இயல்புக்கு ஏற்ப வழி நடத்துகிறது என்பதை ரேவதி உணர்த்திக்கொண்டிருந்தாள்.

அவள் வரையில் மைதிலிக்கு ஒரு பதிலைச் சொன்னது போலவும் ஆயிற்று. தனக்குள் இருந்த ஆதங்கங்களை எல்லாம் கொட்டித் தீர்த்தது போலவும் இருந்தது!

★ ★ ★

திபுதிபுவென்று ஓடிக்கொண்டிருந்தாள் காவிரி!

இந்தப் பக்கமாய் திருச்சியிலிருந்து முசிறிக்குப் போகும் தார்ச்சாலை அந்தப் பக்கத்தில் குளித்தலைக்கு போகும் சாலை! நடுவில் ஓரிடத்தில் சவுக்குத் தோப்பு. ஒரு இருநூறு சதுர மீட்டர் பரப்பளவுக்குள் ஆயிரக்கணக்கான சவுக்கு மரங்கள்.

அந்த தோப்பை மட்டும் விழுங்காமல் அல்லது விழுங்க முடியாமல் அங்கே மட்டும் பிரிந்து பின் அந்தப் பக்கமாக போய் சேர்ந்து கொண்டிருந்தது காவிரி!

- ஒரு பரிசல் இருந்தால் அதில் ஏறிக்கொண்டு அந்த குட்டித் தீவுக்கு போய் வரலாம். நீந்திச் செல்ல பெரிய அளவில் திராணி வேண்டும். நீரின் இழுவை அதிகமாக இருந்தால் தீவில் போய் ஏற

முடியாது. ஆற்றோடு போய்க்கொண்டே இருக்க வேண்டியது தான்.

இடும்பன் வரையில் அந்தத்தீவுதான் அவனுக்கான சாராயக் களம்! இரவு எட்டுமணிக்குத் தொடங்கி காலை ஐந்து மணிக்குள் ஐநூறில் இருந்து எட்டு நூறு லிட்டர் வரை சாராயத்தை காய்ச்சி அதை கேன்களிலும், பீப்பாய்களிலும் அடைத்தும் விடுவான். அதன்பின் திசைக்கு ஒரு பரிசலில் அழுக்குத் துணி மூட்டை களுக்கு நடுவில் மறைக்கப்பட்டோ, இல்லை கயிறு கட்டி காவிரி ஆற்றுக்குள்ளே போட்டு பரிசலோடு கட்டி இழுத்துக் கொண்டோ, அந்த கேன்களையும், பீப்பாய்களையும் இடம் மாற்றிவிடுவான்.

அவ்வளவும் அன்று மதியமே விற்றுத் தீர்ந்து அன்று மாலையே அவனை நோக்கி கசங்கிய ரூபாய் நோட்டுக்களாக வந்து குவிந்து விடும்.

பத்து ரூபாய் முதலுக்கு நூறு ரூபாய் லாபம் தரும் சரியான குபேரத் தொழில். இடும்பன் அதில் கரை கண்டு விட்டவன். அந்த சவுக்குத் தோப்புக்குள் குண்டு குண்டாய் அங்கங்கே கற்கள் கிடக்கும். அந்த கற்கள் உள்ள இடங்களை எல்லாம் தோண்டி னால் உள்ளே பாலிதீன் பைக்குள் கட்டுக்கட்டாய் பணம் இருக்கும். ஒரு பைக்குள் மூணு லட்சத்துக்கு குறையாது. இடும் பனுக்கு சேஃப்டி லாக்கரே அந்த சவுக்குத்தோப்பின் தரைத்தளம் தான்!

மொட்டை மணி என்னும் பெயரில் ஒரு கால் ஊனமானவன் தான் தோப்புக்காவலாளி. இரண்டு சவுக்கு மரங்களுக்கு நடுவில் வலை ஊஞ்சல் கட்டி அதில் படுத்துக்கொண்டிருப்பான். அவனுக்குத் தேவையான அவ்வளவும் இடும்பன் கரையில் இருந்து வரும் போதே வந்து விடும்.

அந்த மொட்டைமணி வேட்டியை கவிழ்த்து ஆற்று மீன் பிடித்து சாராயக்கணப்பில் அப்படியே அதை வாட்டத் தொடங்கினான். வாட்டும்போது வாடை எழும். இடும்பனுக்கு அது மிகவும் பிடிக்கும்.

''எலேய், மிளகாய் பொடியை தூவி எடுத்தாடா...'' என்று கத்துவான். ஆனால் இப்போது அப்படி எல்லாம் கத்தாமல் செத்த பிணம் போல கிடந்தது மணியை உறுத்தியது.

"என்ன முதலாளி சத்தத்தையே காணோம். மீன் வாட்டிகிட்டு இருக்கேன். வாடை வரலையாக்கும்" என்று குரல் கொடுத்துப் பார்த்தான். இடும்பனிடம் இருந்து பதிலே இல்லை. மாறாக பரிசல் ஒன்று வந்து கரை தட்டும் சப்தம் கேட்டது. அதில் இருந்து இடும்பனின் தம்பி ராஜாங்கமும் கள்ளத்துப்பாக்கி வில்சனும் இறங்கிக்கொண்டிருந்தனர். வில்சனைப் பார்க்கவும் மொட்டை மணியிடம் விதிர்ப்பு.

இடும்பனை நோக்கி வில்சன் ஒரு கும்பிடு போட்டான்.

"ராஜாங்கம் எல்லா விஷத்தையும் சொன்னான் முதலாளி. ஒரு சின்ன பய உங்ககிட்ட ரொம்பவே விளையாடிட்டானே..."

"பதிலுக்கு விளையாடத்தான் உன்னை கூட்டிகிட்டுவரச் சொன்னேன்...

"அந்த பொணந்தூக்கியை நீயும் ராஜாங்கமும் போய் எப்படியாவது இங்க தூக்கிகிட்டு வந்துடுங்க. இனி அவனுக்கு இங்க சாராயம் காச்சறது தான் தொழில். நாய்க்கு சோறு போட்ற மாதிரி அவனுக்கு சோத்தைப் போட்டு இங்க எரி அடுப்புல கரி அள்ளிப் போடற வேலைல அவனை அமர்த்தப்போறேன். அந்தப் தென்னந்தோப்புல என்னை குப்பை அள்ள வெச்சான். அதுக்கு தண்டனையா காலம் பூரா அவன் இங்க சாராயம் காய்ச்சணும் மறுத்தா சவுக்கடி... சுருக்கமா சொன்னா காலம்பூரா அவன் என் அடிமையா இருக்கப்போறான்..."

இடும்பன் சொன்னதில் இருந்தே ரங்கன் எந்த அளவுக்கு கஷ்டப்படப்போகிறான் என்பது ராஜாங்கத்துக்குப் புரிந்து விட்டது.

"இதுவும் நல்லாத்தான் இருக்கு முதலாளி. இது ஒரு விதமான தண்டனையாத்தான் தெரியுது."

"ஆயுள் தண்டனை வில்சா, ஆயுள் தண்டனை! அவன் இங்க இருந்து தப்பி ஓடிடாம இருக்க காலுக்கும் கைக்குமா சங்கிலியைப் போட்டு பூட்டப் போறேன். அது சரிப்பட்டு வராட்டி ஒரு காலை துண்டா வெட்டி ஆத்துல எரிஞ்சிடுவேன். என் விஷயத்துல வாலாட்டுனா என்னாகும்கறத இந்த ஊர் உலகமே இவனை வெச்சுத்தான் தெரிஞ்சிக்கணும்."

காவிரி ஆற்றின் காற்று வீச்சலை மீறி கழுத்து கன்னம் எங்கும் வியர்வை வழிந்தது இடும்பனிடம். அதை வழித்துவிட்டபடியே அவன் காட்டிய ஆக்ரோஷத்தை மீனை வாட்டிக்கொண்டிருந்த மொட்டை மணியும் உணர்ந்தவனாக 'ஹூம் என்ன பாவம் பண்ணானோ அந்தப் பய. இங்க வந்து சீரழியப்போறான்" என்று முணுமுணுத்தான்.

★★★

நிச்சயதார்த்த வைபவம் களைகட்டத் தொடங்கிவிட்டது. வீட்டு முகப்பில் மாவிலைத் தோரணத்தை கட்டிவிட்டு அப்படியே தான் கொண்டு வந்திருந்த தேங்காய் மூட்டையை ஒரு மூலையில் இறக்கிய ரங்கனைப் பார்த்த படியே வந்தாள் ரேவதி.

"ரங்கா உனக்கு இந்த ஆத்துல இன்னிக்கு நிறைய வேலை இருக்கு. வாழை இலை அறுக்கறதுல இருந்து கொல்லைல தொட்டில தண்ணீர் நிரப்பறது வரை நிறைய வேலை இருக்கு. நீ இப்ப என்ன பண்றேன்னா தோட்டத்துல போய் வாழை இலையை நறுக்கி எடுத்துண்டுவரே. அதுக்கு தகுந்த மாதிரி இலை நன்னா பெருச கிழிசல் இல்லாம இருக்கணும். அப்புறமா சாப்ட்ட இலையை பின்னால போட்றதுக்கு ஒரு எச்சக்குழியை வெட்டிடு. அதுல எல்லாரும் போட்டதுக்கு அப்புறம் அதை எல்லாம் எடுத்துண்டு போய் எங்க போடணுமோ போட்டுடு..."

ரேவதி படபடவென்று அதிகாரம் பண்ணி முடித்தவளாய் அவன் முகத்தைக் கூட பார்க்காமல் திரும்பினாள். அவனோ 'அம்மா ஒரு நிமிஷம்' என்றான். அவளும் திரும்பினாள். பார்வையே என்னவென்று கேட்டது. 'இலை அறுத்துட்டு வரேன். தொட்டில தண்ணியும் நிரப்பிட்றேன். ஆனா இந்த எச்ச இலையை எல்லாம் நான் எடுக்கமாட்டேன். அதை நீங்களே எடுத்து எங்க போடணுமோ போட்டுருங்க. நான் வேலைக்காரன் தான் ஆனா இழிவேலை செய்யறவன் கிடையாது."

என்ற ரங்கனை மளுக்கென்று தொற்றிக்கொண்ட கோபத் தோடு பார்த்த ரேவதி "பொணம் மட்டும் தூக்குவியோ. அது இழிவில்லையோ?" என்றாள் வெடுக்கென்று.

அவளது அதட்டலான பேச்சு அந்தப் பக்கமாய் வந்த அவன் கணவன் சீமாவையும் திருப்பியது. மைதிலியும் எட்டிப் பார்த்தாள்.

அவனோ 'உயிர்போயிட்ட உடம்பு பொணா இருக்கலாம்... ஆனா அதுவும் எச்சிலையும் ஒண்ணு கிடையாதும்மா. அப்படி இருந்தா சாமியாருங்களோட உடம்பைப் புதைச்சு அதுக்கு மேல கோயில் கட்டி கும்பிடுவாங்களா? இல்லை வீட்டுக்குள்ளதான் கட்டிகிட்டு அழுவீங்களா? எதையும் கேக்கறதுக்கு முந்தி யோசிச்சிட்டு கேளுங்கம்மா?''

என்ற அவன் பதில் ரேவதி வரையில் கன்னத்தில் விழுந்த பலமான அறையாக மாறியது.

''வேணும்டி உனக்கு'' என்று சீமாவும் சேர்ந்து கொண்டாள். மைதிலிக்கு மட்டும் அவன் கன்னத்தை வருடி திருஷ்டி கழிக்க வேண்டும் போல இருந்தது!

28

''ரங்கா என்றிட பங்கம் நீங்கும்!
ரங்கநாதா என்றிட செல்வம் சேரும்
ரங்கராஜா என்றிட ஞானம் கூடும்
ரங்க தேவா என்றிட அமைதி தவழும்
ரங்கமூர்த்தி என்றிட ஆனந்தம் மலரும்
ரங்கரங்க ரங்கனென்றிட விண்ணகம்
வசமாகும்!''

மனதுக்குள் ரங்கனுக்கு திருஷ்டி கழித்த மைதிலிக்கு இனியும் அவனை நினைப்பது தவறு என்றும் தோன்றத் தொடங்கியது!

'எல்லாம் தான் கை மீறிப்போய்விட்டதே...? ஒரு பெண்ணுக்கு அவளுக்கான வாழ்க்கை என்பதே அமைவதைப் பொறுத்து என்றுதானே இருக்கிறது? தேர்வு செய்கிற உரிமை ஆண்களுக்கு மட்டுமே என்று சட்டம் வகுத்தது யாராக இருக்கும்?

மனதுக்குள் கேள்வியோடு மாடி அறைக்குள் நுழைந்து சுதவையும் சாற்றிக்கொண்டாள். இமே பசும்நெய்யில் முந்திரி வறுபடும் வாசனை மேல் வரை வந்து அவள் நாசியையும் நிமிண்டியது. அந்தக் கை மணம் முசிறி ராமபத்ரனுடைய தாசுத்தான் இருக்க வேண்டும்.

நினைத்துக்கொண்டாள். நடுநடுவே ரேவதியின் கித்தாப்பான குரல் கேட்டபடியே இருந்தது. சீமாவும் அவளோடு ஓடியாடிக் கொண்டிருக்க வீட்டுக்கு வெளியே புஷ்டியாய் ஒரு சாமியானா பந்தல்! அதில் ஒரு மாவிலைத் தோரணத்தையும் கட்டியிருந்தனர். கிட்டே போய்ப் பார்த்த போதுதான் தெரிந்தது பிளாஷ்டிக் மாவிலைகள்!

நிச்சயத்துக்காக பந்தலுக்குள் பிரவேசித்திருந்த ஒரு தாட்டியான வைணவர் ''ஏண்டாப்பா... தோரணத்துல கூடவா பிளாஸ்டிக்! இந்த ஸ்ரீரங்கத்துல அசல் மாவிலைகளுக்கா பஞ்சம்?'' என்று கேட்டபடியே வந்தார்.

''ஏள்ள... ஏள்ள... பெரியவா ஏள்ளணும். ('ஏள்ள' என்பது வைணவர்கள் மட்டும் பயன்படுத்தும் சொல் வழக்காகும்) என்று மிகப்பணிவாக ஓடிவந்து வரவேற்றார் சக்கரவர்த்தி. பட்டு பஞ்ச கச்சமும் அங்கவஸ்திரமுமாக ஒரு மினுக்கல் தெரிந்தது. உடம்பிலும் பன்னிரண்டு திருமண்.

''என்ன சக்கரவர்த்தி... அம்மாவை வைகுண்டத்துக்கு அனுப் பிட்டு பொண்ணுக்கு மாப்ளையை பிடிச்சுட்டையாட்டம் இருக்கே?'' என்று சிரித்தபடியே கேட்டுக்கொண்டு நாற்காலி ஒன்றில் அமர்ந்தார்.

''சரியாச் சொன்னேள்... அவதான் பெருமாளாண்ட சொல்லி என் பொண்ணுக்கு ஒரு வழிய உருவாக்கியிருக்கா...''

''கடைசில அங்க சுத்தி இங்க சுத்தி உள்ளூர்லையே மாப்ளையை மடக்கிட்டே? பொண்ணைப் பார்க்கணும்னா பொடி நடையா நடந்தா போதும்...''

பரஸ்பரப் பேச்சுக்கள் எப்பொழுதும் இப்படித்தான் இருக்கும். இடையில் காபி வந்தது. ரேவதியே கொண்டு வந்து கொடுத்தாள்.

நல்ல செங்குழம்பாய் நாவில் மிழற்றியது... அந்த வைன வருக்கும் பரமானந்தமாய் இருந்தது.

''அருமையா இருக்கு காப்பி... யாரோட கைவண்ணம்?''

''முசிறி ராமபத்ரன்தான் மாமா... வேற யாரு?''

''நீங்களும் இப்படி காபி போட கத்துக்கணும்...''

அவர் ரேவதியை கொஞ்சம் வாரவும் செய்தார். அப்போது பக்கவாட்டில் தாண்டிக்கொண்டு போனாள் மைதிலியின் தோழி சௌம்யா.

விறுவிறுவென்று மாடிப்படி ஏறி அவளது அறைக்கதவையும் தட்டினாள். ஜன்னல் வழியா பார்த்துவிட்டுத்தான் மைதிலியும் கதைத் திறந்தாள்.

''என்னடி... மசமசன்னு உட்கார்ந்துண்டிருக்கே. டிரெஸ் பண்ணிக்கல நீ?''

''ப்ச்ச்...'' மைதிலியின் உதட்டில் அலட்சியமாக ஒரு சுழிப்பு.

''என்ன ஆச்சுடி உனக்கு... புரியறது. உனக்கு இந்தக் கல்யாணத்துல இஷ்டம் இல்ல.. அதானே?''

''வேற பேசசு பேசு சௌம்யா...''

''நான் கேட்டதுக்கு பதில் சொல்... உங்கப்பாதான் நீ கேட்டா எதையும் செய்யறவராச்சேடி...''

''எல்லாம் கைமீறி போயிடுத்துடி... விட்டுத்தள்ளு. தலை யெழுத்தை யார் மாத்த முடியும்?''

''பைத்தியக்காரி... வத்சலா மாமிக்கு மாட்டுப்பொண்ணா போறதுக்கு ஒரு எருமை மாட்டை கல்யாணம் பண்ணிக் கலாமேடி.''

''போதும் எரியற நெருப்புல எண்ணெயை ஊத்தாதே... நான் வேற மாதிரி திட்டங்களோட இருக்கேன்...''

''அது என்னடி திட்டம்?''

''அது நடக்கும்போது தெரியத்தானே போறது?''

அந்த நொடியே தன் உடம்பில் தீயை வைத்துக்கொண்டு வத்சலாவையும் கட்டிக்கொண்டு இருவருமாக கருகத் தொடங்குவது போல ஒரு கற்பனையைச் செய்து பார்த்தாள்.

''நான் இப்ப தற்கொலை பண்ணிண்டா கூட நீங்க தப்பிரு வேள். கல்யாணம் பண்ணிண்டு வந்து பண்ணிண்டாதான் உங்களையும் ஒழிக்கமுடியும். உங்க பிள்ளைக்கு அடுத்து வரப்போற மாட்டுப்பொண்ணாவது நிம்மதியா இருப்பா'' என்றும் தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டாள்.

ஸ்ரீதரனோடுதான் திருமணம் என்று ஊர்ஜிதமானதில் இருந்தே இப்படித்தான் அவள் மனம் விதம் விதமாய் கற்பனைகளைச் செய்து பார்த்துக்கொள்கிறது. இப்படி எல்லாம் கற்பனை செய்து கொள்ள முடிந்ததாலேயே தற்காலிகமாய் எந்த முடிவையும் எடுக்காமல் இருக்கவும் முடிகிறது.

சௌம்யாவுக்கு மைதிலியின் இந்த உளவியல் சிக்கல் புரிய வாய்ப்பில்லை. மேலும் கீழுமாக பார்த்துவிட்டு ''தாயார்தான் உனக்குத் துணையா இருக்கணும்'' என்றபடியே விலகிப் போனாள்!

★★★

தேசிகாச்சாரி வீடு! எல்லாருமே புது ஆடைகளுக்குள் மின்னித் தள்ளினார்கள். உஷாவும் வத்சலாவும் இருக்கும் நகைகள் போதாது என்று அக்கம் பக்கத்திலும் வாங்கிப்பூட்டிக் கொண்டிருந்தனர்.

வத்சலா ஒரு படி மேலே போய் தங்க ஒட்டியாணம் அணிந்து வந்து கண்ணாடிமுன் நின்று அழகு பார்த்தாள். அதைப் பார்த்த உஷா முகத்தில் அப்படி ஒரு கோபம்.

''அம்மா, என்னம்மா இது? நீ எந்தக் காலத்துலம்மா இருக்கே... கண்றாவியா இருக்கும்மா... முதல்ல கழட்டும்மா...'' என்று கத்தினாள்.

''என்னடி நீ... அம்பது பவுன்டி இது மட்டும்...''

அது சரி... இது என்ன கிளிச்சோழ சக்கரவர்த்தி காலமா? மடிசாரே இப்பல்லாம் அவுட் ஆஃப் பேஷன். மார்வாடிக் கட்டு, பஞ்சாபிக்கட்டுன்னு புதுசா கட்டிக்கறதுதாம்மா ஃபேஷன்.''

"இருக்கட்டும் ஒட்டியாண ஃபேஷனை நான் கொண்டு வந்ததா இருக்கட்டுமே?"

"அது சரி... அந்த நாராயணி மாமி நேரா உன்னண்ட வந்து இது சுபத்ரா மாமிது தானேன்னு கேட்டு மானத்தை வாங்குவா. பரவாயில்லியா?"

"அவாள்ளாம் நிச்சயத்துக்கு வருவாளா என்ன?"

"ஐநூறு சாப்பாட்டுக்கு சொல்லியிருக்கறதா அந்த ரேவதி சொன்னதை நீ கேட்கலையா... கிட்டத்தட்ட இது ஒரு அரைக்கல்யாணம்... உன் சம்பந்தி, ஊர்ல ஒருத்தரை விடல..."

"என்னவோ போ... இந்த நாராயணி ஒருத்தி! ஐம்பதடி தூரத்துல இருந்து பார்த்தாலும் கரெக்டா சொல்லிட்றா. கடங்காரி... அன்னிக்கு கண்ணுல பாத்தே ஒரு கைவளையல் ஒண்ணரை பவுன்தான்னு கரெக்டா சொல்லிட்டா. வளையல் போட்டுண்டுருந்த லட்சுமியோ மூணு பவுனுங்கறா. ஒரே கூத்து போ." -இதெல்லாம் மாப்பிள்ளை வீட்டு பரஸ்பரங்கள்! இடையிட்டது தொலைபேசி!

"யார்னு போய்ப் பார்... அவாளாதான் இருக்கும்!"

"வேற யார்... கிளம்பிட்டேளான்னு கேப்பா..."

"கிளம்பிண்டே இருக்கோம்னு சொல். இன்னும் இரண்டு தடவை போன் பண்ணட்டும். அப்புறமா கிளம்பலாம்."

உஷாவும் அவ்வண்ணமே செய்தவளாக திரும்பி வந்தாள். மாப்பிள்ளை ஸ்ரீதரன் ராம்குமாரின் பைஜாமா குர்தாவில் ஒரு தினுசாக இருந்தான். நெற்றியில் திருமண் இன்றி! ஸ்ரீசூரணம் மட்டும் தரித்திருந்தான். ராம்குமாரும் ஸ்ரீசூரணம் மட்டும்தான் தரித்திருந்தான்.

தேசிகாச்சாரி அதை கவனித்தவராக "ஸ்ரீதரா திருமண்ணும் சேர்த்து இட்டுக்கோப்பா. நல்ல காரியம் நடக்கும்போது திருமண் ஸ்ரீசூரணத்தோடதான் இருக்கணும்" என்றார்.

இருக்கட்டும்பா... எனக்கு நாமத்துல அந்த 'ப' டர்ன் மட்டும் சரியாவே வரமாட்டேங்கறது.

"வா, நான் போட்டு விட்றேன். சக்கரவர்த்தி மாமா பாத்தா வருத்தப்படுவார். அப்புறம் யாரான எதாவது சொல்வா..."

"யார் என்ன சொல்றது? இவா பொண்ணை நாம கல்யாணம் பண்ணிக்கிறதே பெருசு... நீங்க போங்கோ எல்லாம் இதுவே போறும்..."

இப்படி அரு அதிரடிக்குரல் வத்சலாவிடம் இருந்துதான் ஒலித்தது.

தேசிகாச்சாரி வரையில் பளார் என அவர் கன்னத்தில் அறைந்ததுபோலக் கூட இருந்தது.

மீண்டும் தொலைபேசி அமட்டல்...

தேசிகாச்சாரி துரிதமானார். வாசலில் அவர்கள் அனுப்பியிருந்த டாடா சுமோ தயாராக இருந்தது.

"கிளம்புங்கோ... டயமாச்சு. இரண்டாவது தடவை போன் வந்துருக்குது பார்" என்றபடியே தங்கள் தரப்பு தாம்பூலப் பை வெள்ளித்தட்டு இத்தியாதிகளோடு தேசிகாச்சாரி தயாரானார். ராமும் உடன் சேர்ந்து கொண்டான்.

உஷா அவர்களிடம் வந்தவளாக "செத்த பொறுங்கோப்பா... கூப்பிட்ட உடனே போனா பறக்கறா பாருன்னு அக்கம் பக்கம் நினைக்கமாட்டா?" என்றும் கேட்டாள்.

"எனக்கு அப்படித்தோணலை உஷா. உங்கம்மா இப்பவே நட்டுவாங்கம் பண்ண ஆரம்பிச்சுட்டான்னு வேணா பேசுவா."

"ஐயோ அப்பா... மெல்லப் பேசுங்கோ. அம்மா காதுல விழுந்ததுன்னா அவ்வளவுதான்."

கவனித்துக்கொண்டேயிருந்த ராம் உஷா அருகில் நெருங்கி, 'உஷா... நம்ம நிச்சயதார்த்தத்தும்போது இப்படி எல்லாமா? எங்காத்துல நடந்ததுண்டா?" என்று அவள் எதிர்பாராத ஒரு கேள்வியை கேட்டான். அதே வேகத்தில் "உங்கம்மா பண்றது சரியில்லடி. நீயும் இங்க வந்ததுல இருந்து தரைல நடக்க மாட்டேங்கறே... சரியில்லடி... ஒட்டியாணம்லாம் போட்டுப் பாத்துண்டு... கர்மம்டி... நான் பழையபடி மாறினேன் தாங்காது, ஆமா..."

ராம் ஒரு போடு போட்டுவிட்டு "மாமா நீங்க வாங்கோ... நாம நடந்தே போகலாம். இவா கார்ல வேணா வரட்டும் இல்ல பல்லக்குலகூட வரட்டும்" என்றான்.

"சபாஷ் மாப்ளே!" என்று முதல் தடவையாக மனதுக்குள் சொல்லிக்கொண்டார் தேசிகாச்சாரி. அதற்கு மேல் அவர்களைத் தெருவில் விட்டால் ஆபத்து என்று எல்லாருமே கிளம்பினார்கள்.

மறுநாள்!

காலைவேளை...

தன்னந்தனியாக மைதிலி காவிரி நோக்கிப் புறப்பட்டாள். மனதுக்குள் ஒரு தீர்மானம்.

29

'**தி**ருவில்லி தந்த செல்வி
ரங்கன் சேர்ந்த ஆண்டாள்!
அருட்கவிசொல்லி காலைவெள்ளி
போலும் புகழ்கொண்டாள்
ஒரு நெல்லி பெற்ற கிழவி(அவ்வை)
அருளன்றி ஏதும் வேண்டாள்!
தனைவெல்ல முதுமையையே
வரமாக்கி புதுக்கோலம் பூண்டாள்
செல்வி ஒரு மணவாட்டி!
கிழவி ஒரு தவப்பாட்டி!
எவர் வழியில் மைதிலியும்
அரங்கமதில் செல்வாள்?'

காலை நேரத்து காவிரியிடம் எப்போதுமே ஒரு தனியழகு... நிறைய வேத பிராம்மணர்கள் சந்தி செய்தபடியே கையை உயர்த்தி காவிரி நீரை அர்க்யம் விடும் காட்சி முதல், புடவை யோடு முழுக்கு போடும் பெண்கள் தங்கள் ஈரப்புடவையின்

கொசுவக்கட்டுப் பாகத்தைப் பிழிந்துவிட்டுக் கொண்டு திரும்புவது வரை பல காட்சிகள். சில விடலைகள் காவிரிக்கு நூறு மீட்டர் முன்பாகவே ஓட்டம் எடுக்க ஆரம்பித்து விடுவார்கள். அந்த ஓட்டம் துளியும் குறையாதபடி திபுதிபு வென்று ஆற்றுக்குள் நெடுந்தூரம் ஓடிச்சென்றுதான் நிற்பார்கள். அப்போது காலடிபட்டுத் தெறிக்கும் நீர் ஒரு பறவைச் சிறகு கணக்காய் இருக்கும். கூடவே "எரும... எரும... கட்டேல போற கம்மினாட்டிக' என்று சில பாட்டிகளின் கோவக் குரல்களும் சேர்ந்து கொள்ளும்.

ரசிக்கத் தெரிந்தவர்களுக்கு காவிரிக் கரை ஒரு கலா மண்டபம், முசுடுகளுக்கோ காவிரியில் எவ்வளவு ஜலம் ஓடுகிறது என்பது மட்டும்தான் கணக்கு...

மைதிலியும் நன்றாக ரசிக்க முடிந்தவள்தான்!

ஆனால் நிச்சயதார்த்தம் என்கிற இரும்புச் சங்கிலியை முதல்நாளில் போட்டுவிட்டதால் மாயமாய் அது கனத்துக் கொண்டிருக்க எவ்வளவு முயன்றும் மனது அந்த சம்பவத்திலேயே போய்ப் போய் நின்றது.

அவளது அப்பா சக்கரவர்த்தி அய்யங்காரும் மாமனாராக வரப்போகிற தேசிகாச்சாரி அய்யங்காரும் ஏதோ ஒபாமாவும் மன்மோகன்சிங்கும் தேசிய நிமித்தம் ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போடுவது போல போட்டுக் கொண்டதும் அதை வாங்கி அவளது மாமா நரசிம்மன் வாசித்ததும்தான் நிச்சயதார்த்தத்தின் முக்கிய சாராம்சம்.

ஸ்ரீமதே ராமானுஜாய நமஹ. ஸ்ரீ வேதாந்த தேசிக பரம் பரம்மணே நம... என்று பிள்ளையார் சுழிக்கு கீழே ஆச்சார்யர் களுக்கான வந்தனங்களோடு தொடங்கியது அந்த லக்னப் பத்திரிகை. வரும் பங்குனியிலேயே உசிதமான ஒரு முகூர்த்த நாளில் மாங்கல்ய தாரணத்தை நடத்த உத்தேசித்து இரு வீட்டாரின் பரிபூரண சம்மதத்தோடும், இஷ்டமித்ர பந்துக்களின் பூர்ணமான ஆசீர்வாதங்களோடும் ஸ்ரீரங்கத்திலேயே ஸ்ரீரங்கமே வியக்குமளவிற்கு நடத்தும் சக்கரவர்த்தியின் ஒப்புதலோடு ஈடேறியிருந்தது. நான்கு மூலையிலும் மஞ்சள் தடவிய அதை

இரண்டு காபி எடுத்து ஒன்றை தான் வைத்துக்கொண்டு ஒன்றை தேசிகாச்சாரி வசம் சக்கரவர்த்தி தந்தபோது அது நழுவிக் கீழே விழுந்தது. ''உடனே தவர்றது... ரொம்பவே நல்ல சகுனம்'' என்று ஒருவர் ஆறுதலாக குரல் கொடுத்தார்.

அதெல்லாமே மைதிலிக்குள் வந்து அலைமோதுகிறது.

கரையோரம் துணி துவைக்கும் கல்லின் மேல் வந்து அவள் உட்கார்ந்து கொண்டு காவிரியை பார்த்தபடியே இப்படி நடந்த நினைவுக்குள் மூழ்கியிருப்பதை ரவிவர்மா மாதிரி ஓவியக் காரர்கள் பார்த்தால் காலகாலத்தை வெல்லப்போகும் ஒரு ஓவியம் தங்களுக்குக் கிடைக்கப் போவதாகத்தான் நினைப்பார்கள்.

அவளுக்குள் லக்னப் பத்திரிகை நினைப்பு மட்டுமா முந்தியது? வத்சலா சார்பில் அவளது கனிஷ்ட குமாரத்தியான உஷா சாதுர்யமாய் கேட்ட கேள்விகளும்தான்...!

''நல்லபடியா லக்னப் பத்திரிகை எழுதி சபைல வெச்சு வாசிச்சாச்சு. இதுவே கிட்டத்தட்ட அரைக் கல்யாணம் முடிந்த மாதிரிதான். சக்கரவர்த்தி மாமா ஆத்துக்கு எங்கண்ணா மாப்ளையா போறத நினைச்சு எனக்கெல்லாம் ரொம்பவே சந்தோஷம்.

அதே சமயம் மாமா என்னென்ன சீர் பண்ணப் போறேன்னு இந்த சபைலயே சொல்லிட்டா இன்னும் சந்தோஷமா போயிடும்'' என்று அவள் ஆரம்பிக்கவும் சக்கரவர்த்திக்கு அது கொஞ்சம் தர்ம சங்கடமாகத்தான் இருந்தது.

வேகமாய் தேசிகாச்சாரியை பார்த்து ''என்ன தேசிகா, சீர் செனத்தி பத்தி பப்ளிக்கா இங்கையே பேசிடலாமா? எனக்கு ஒண்ணுமில்லை... மைதிலி எனக்கு ஒரே பொண்ணு. அவளுக்கு குன்னு நான் புதுசா எதையும் பண்ணப் போறதில்ல... அந்த காவிரிக்கரை தென்னந்தோப்புல இருந்து நகை நட்டு வரை சப்ஜாடா லிஸ்ட் போட்டுத் தந்துடட்டுமா?'' என்று கேட்டார்.

தேசிகாச்சாரி பதிலுக்குப் பதறிப்போய் ''ஐய்யோ... என்ன நீங்கோ... அவ ஏதோ ஆசைல உளர்றா. எதை எப்படி

பண்ணனும்னு உங்களுக்குத் தெரியாதா என்ன... அவ கிடக்கறா விடுங்கோ...'' என்றபடியே உஷாவை முறைத்தார்.

முறைத்தது அவர்மட்டுமல்ல... அவள் கணவன் ராம்குமாரும் தான்! ஆனாலும் காவிரிக்கரை தென்னந்தோப்பு என்று சபையறிய சக்கரவர்த்தி சொன்னதே வத்சலாவுக்குப் போதுமானதாக இருந்தது.

அந்தக் காட்சிகள் எல்லாமும் மைதிலிக்குள் வந்து வந்து போனது. அப்போதே அப்படியே காவிரிக்குள் இறங்கிவிடலாம் என்றுகூட தோன்றியது. ஆனால் அன்றைக்குப் பார்த்து இடுப்பளவு தண்ணீர் கூட ஆற்றில் இல்லை.

காவிரியின் வேக ஓட்டத்துக்கான ஸ்பீடா மீட்டர் இப்போது பெங்களூரில் இருக்கிறது. அங்கே ரேஸ் செய்தால் மட்டுமே இங்கே வேகம். இடையில் மேட்டூரில் ஒரு வேகத்தடை வேறு.

மைதிலிக்கு ஏமாற்றமாக இருந்தது!

இடையிட்டது அவளது தோழி பிருந்தாவின் குரல். செருமியபடியே அவளுக்குப் பக்கத்தில் அழுக்குத் துணி மூட்டையை போட்டாள்.

''கொஞ்சம் தள்ளி உக்காருடி... நான் இந்தக் கல்லுல தோச்சுக்கறேன்'' என்றாள். நிச்சயதார்த்தத்துக்கு அவள் வரவும் இல்லை. அது குறித்துக் கேட்கவும் அவள் பிரியப்படவில்லை.

தெரிந்த விடைகளுக்கு எதற்குக் கேள்விகள்?

ஒரு இன்ப அதிர்வு போல அந்தப் பக்கம் ரங்கன் வந்ததுதான் ஆச்சரியம். கரையோரம் சைக்கிள்கடை கோவிந்தனுடன் பேசியபடி போய்க் கொண்டிருந்தான்.

அவன் குரல் கேட்டு மைதிலி திரும்பிப் பார்ப்பாள் என்றுதான் பிருந்தா கூட நினைத்தாள். ஆனால் இறுக்கமாய் முகம் மாறிவிட, அவள் தலை தாழ்ந்து கொண்டது சொட்டுச் சொட்டாய் கண்ணீர் காவிரியில் விழுவது நன்றாகத் தெரிந்தது.

''மைதிலி. ரங்கனை இங்க கூப்பிடட்டுமா? இப்பக் கூட கெட்டுப் போயிடல. உன் மனசுல இருக்கறத சொல்லிடு. கரையோரமா பெருசா யாரும் இல்லை.''

என்ற பிருந்தாவை பதிலுக்கு நிமிர்ந்து பார்த்தவள் ''இல்லை பிருந்தா என்னோட அப்பா அப்புறம் உயிரையே விட்ருவார்டி... நீ இதோட இந்த பேச்சை விட்டுடு'' என்ற அவள் பதில் கன்னத்தில் அறைந்த மாதிரி இருந்தது.

''நீ உன் மனசை அப்ப மாத்திண்டுட்டியா?''

''மாத்திண்டாகணும்டி... மாத்திண்டாகணும்''

''என் காதுல மாட்டிண்டாகணும்னு விழறது மைலி.''

''இரண்டும் ஒண்ணுதான்... ஆனா ஒண்ணு. நான் இனி இந்த ஊர்லையே இருக்கமாட்டேன்.''

''என்னடி சொல்றே?''

''கல்யாணத்துக்குப் பிறகு ஸ்ரீதரை ட்ரான்ஸ்ஃபர் வாங்கச் சொல்லி வற்புறுத்தி இந்த ஊரை விட்டே போயிடப் போறேன். அப்படி நான் போகப் போற ஊர்ல இதோ இந்த மாதிரி காவேரி எல்லாம் ஓடவே கூடாது. இவ சும்மாடி... அம்மா மாதிரிங்கற தெல்லாம் கற்பனை...''

மைதிலியிடம் வெறுப்பு. ஒருவிதமான கோபமாக வெளிப்படத் தொடங்கிவிட்டது.

''இப்ப எதுக்குடி காவிரிய வைய்யறே?''

''பின்ன... பொறந்த நாள்ல இருந்து இவளைத்தானே குடிச்சேன். இவ மடிலதான் தவழ்ந்தேன். எவ்வளவு பூஜை புனஸ்காரங்களை இவளுக்கு நாம பண்ணியிருப்போம்? எத்தனை ஆடிப் பெருக்குல மட்டை தீபம் (வாழைப் பட்டை மேல் அகல் விளக்கை மிதக்கவிடும் நிகழ்வு) போட்டு மனசுக்குப் பிடிச்சவன் புருஷனா வரணும்னு வேண்டிண்டு இருப்போம். அதுக்கெல்லாம் துளிகூட அர்த்தமே இல்லாம போய்டுத்தே பிருந்தா'' மைதிலியின் நெஞ்சு விம்மியது.

''வாஸ்தவம் தாண்டி... ஆறுங்கறது வெறும் ஜலம் மட்டும்தான். அதைக் கடவுளா நினைச்சது நம்ப தப்பு. உனக்கு மட்டுமில்ல மைதிலி, நம்ம செட்டுல யாருக்குமே அவா ஆசைப்பட்ட மாதிரி புருஷன் கிடைக்கலடி எல்லாரும் அட்ஜஸ் பண்ணிண்டு வாழறதாதான் சொல்றா.

அப்பா அண்ணான்னு ரத்த சம்பந்தப்பட்டவா கூட பாக்காத படி உடம்பை மூடிமூடி வெச்சிண்டுருந்துட்டு, முதல் நாள் காத்தால பக்கத்துல உக்காந்து கழுத்துல ஒரு கயித்தை கட்டிட்ற வலுக்கு அன்னிக்கு ராத்திரியே அவ்வளவையும் திறந்து காட்டணும்கறத என்னால நினைக்கக்கூட முடியல. ஆசையா நடக்க வேண்டியத, டயத்த குறிச்சு வெச்சு முகூர்த்தம் போயிடப் போறதுன்னு சொல்லி உள்ள தள்ளிவிட்டு காலம் காலமா நடக்கற கூத்துக்குப் பேர் முதல் ராத்திரி! கொடுமைடி.

பிருந்தா கடுமையாகவே மைதிலியின் மனக்குமுறலுக்கு சுருதி கூட்டினாள்.

அப்போது மூன்றாவதாய் ஒரு உருவம். அங்கே... திரும்பியவள் பார்வையில் திரிபுர சுந்தரி மாமி!

''என்னடி பிருந்தா... நீ பேசினதை எல்லாம் கேட்டுண்டுதான் இருந்தேன். உன் முதல் ராத்திரி அன்னிக்கு நீ என்ன பண்ணப் போறேன்னு பாக்கறேன்'' என்றபடியே மைதிலியையும் பார்த்தாள். அவள் முகமே காட்டிக் கொடுத்துவிட்டது.

''என்னம்மா கல்யாணப் பொண்ணே... வத்சலாவுக்கு மாட்டுப் பொண்ணா போகப் போறத நினைச்சு கதிகலங்கிப் போயிருக்கி யாக்கும். முகமே சொல்றதே'' என்றவள். அப்படியே புடவையை களைந்து உள் பாவாடையை மேலேற்றிக்கொண்டே மலைக் கோட்டையை பார்த்தபடியே தொடர்ந்து பேசினாள்.

''அம்மாடி... இந்த காவிரி எப்பவுமே நமக்கெல்லாம் அம்மா தாண்டி. இவ சும்மால்லாம் கிடையாது. இவளை கர்நாடகா காரன் பிடிச்சு வெச்சுண்டு ஆயிரம் பேசாலம். அதெல்லாம் அரசியல். இவளும் அதை எல்லாம் ஒரு எல்லை வரைதான் பாத்துப்பா. இவ வரைல தமிழ்நாட்டுக்காரனும் இவளோட குழந்தைகள்தான். நமக்கு இவ ஒண்ணு கொடுக்க நினைச்சுட்டா அதை கண்ணம்பாடியாலல்லாம் கட்டுப்படுத்த முடியாது.

இவகிட்ட உடம்புல அழுக்குப் போக குளிக்கறது ஒரு விதம்னா மனசுல அழுக்குப் போக குளிக்கறது இன்னொரு விதம். நம்பிக்கையோட குளிக்கத் தெரியணும்.

அப்படிக் குளிச்சு இவ கிட்ட நீ என்ன கேட்டாலும் கொடுப்பா. நம்ம கர்மா காரணமா கொஞ்சம் முன்ன பின்ன நடக்கலாம். ஆனா இவ மட்டும் தன் குழந்தைகள் அழுத வேடிக்கை பார்த்ததேயில்லை.

அழுகைன்னா அதுல பல அழுகை இருக்கு. மனசை குழப்பத்தோட பயந்து அழுறதெல்லாம் அழுகையாகாது. அது மனசு நடுங்க அடிவயிறு பதற ஒரு அநியாயத்தால தாக்கப்பட்டு அழற ஆத்மார்த்தமான அழுகை இருக்கே அதுக்கு சக்தியும் அதிகம். இவகிட்ட அதுக்கான அனுக்ரகமும் அதிகம். மைதிலி நீ இப்ப அப்படித்தான் அழுதிருக்கேன்னு உன்னை பார்த்தாலே தெரியறது. கவலைப்படாதே. உன்னை இந்த காவேரிக்காரி கைவிடமாட்டா! எந்த ட்ரான்ஸ்பரும் வாங்கிண்டு நீ எங்கேயும் போயிட முடியாது''

என்றபடியே திரிபுர சுந்தரி மாமி நீருக்குள் மூழ்கினாள். ஏதோ திருவானைக்காவல் கோயிலுக்குள் இருந்து அகிலாண்டேஸ்வரியே அந்த மாமி வடிவம் எடுத்து மைதிலிக்கு ஆறுதல் சொல்ல வந்த மாதிரி இருந்தது.

''அம்மா... என் மன பாரத்தை எப்படி குறைப்பியோ தெரியாது. ஆனா நீ கட்டாயம் குறைக்கணும்...'' என்றபடியே நீருக்குள் அவளும் மூழ்கி எழுந்தாள். மாமி சொன்ன மாதிரியே ஆத்மார்த்தமாய் அழுதாள்!

அந்த நொடியில் காவிரியில் திடீர் என்று நீரோட்டத்தில் ஒரு புதுவேகம், தண்ணீரும் அகண்டு கொண்டே கரைகளை விழுங்கியபடி மேலே ஆரம்பித்தது. மைசூரில் குடகுமலையில் திடீர் என்று பெருமழை. அதன் எதிரொலியாக கர்நாடகாவில் வெள்ளப் பெருக்கு. அது ஸ்ரீரங்கம் வரை எதிரொலிக்கத் தொடங்கிவிட்டது.

''முன்னல்லாம் மழை பெய்ய காலம்னு ஒண்ணு இருந்தது. இப்ப எல்லாம் தலைகீழா மாறிண்டு வரது... இது என்ன வெள்ளம் வர்ற காலமா?'' என்று கேட்டுக் கொண்டே திரிபுர சுந்தரி மாமியிலிருந்து அவ்வளவு பேரும் கரை ஏறினர்.

அப்போதுதான் எதிரில் ஸ்ரீதரும் அவன் மாப்பிள்ளை ராமும் குளிப்பதற்காக எதிரில் வந்தபடி இருந்தனர்.

மைதிலியைப் பார்த்துவிட்ட ஸ்ரீதரனிடம் ஒரு மையல். அவளோ அவனைப் பார்ப்பதை தவிர்த்தவளாக ஈரத்துணி மூட்டையோடு கடந்து போனாள்.

''என்ன ஸ்ரீதர், உங்க உட்பி இவ்வளவு வெக்கப்பட்றா நான்லாம் உங்க தங்கையை கூட்டிண்டு கல்யாணத்துக்கு முன்னால சினிமாக்கெல்லாம் போனேன்?'' என்றான் ராம்.

''விடுங்கோ மாப்ளை. பணக்கார குடும்பம்கற இறுமாப்பு கொஞ்சம் இருக்கும். அதெல்லாம் எங்காத்துக்கு வரும்போது சரியாயிடும். எங்கம்மா எதுக்கு இருக்கா?'' என்ற அவன் பதிலுக்குள் ஏராளமான உட்பொருள் அது மைதிலியின் காதில் விழுந்ததோ இல்லையோ நொப்பும் நுரையுமாய் புதிய வெள்ளத்தோடு ஓடிவரும் காவிரியின் காதுகளில் நன்றாகவே விழுந்தது!

30

'தூயே - தயவே.
சேயென் பயத்தை
நீ என் செய்யப் போகிறாய்?
நோயென் மனத்துள்...
நேயமுடன் ஒரு கணத்தில் அதை நீக்கி அருள்!''

காவிரியில் புதுவெள்ளம் பாயத் தொடங்கி விட்டதை செம்பழுப்பு நீரே காட்டிக் கொடுத்தது. அதைப் பார்த்த ஸ்ரீதரனிடம் உற்சாகம். ராம்குமாரும் குதூகலிக்க ஆரம்பித்தான். நதி என்பதே ஒரு அழகுதான்... அதிலும் அதை எப்போதாவது அபூர்வமாக பார்ப்பவர்களுக்கு ஒரு அலாதியான இன்பம் தோன்றும்.

ஹைதராபாத் போல மேடும் பள்ளமுமான ஒரு நெருக்கடி நகரத்தில் அன்றாடம் தவலையில் தண்ணீர் பிடித்து அதில் மொண்டு குளித்து ஒரு காக்கை போல தன்னை உணர்த்திருப் பவர்களுக்கெல்லாம் வெள்ளம் பாயும் நதி என்பது கனவுக்காட்சி.

ராமிடமும் காவிரி ஒரு பரவசத்தை கொளுத்திப் போட்டது. உற்சாகம் தாளமாட்டாமல் திபுதிபுவென்று தண்ணீருக்குள் ஓடினான்.

''ராம் நோ... புதுவெள்ளம் வந்துண்டுருக்கு. இழுவை அதிகம் இருக்கும்...'' என்று ஸ்ரீதர் கத்தியதெல்லாம் காதிலேயே விழ வில்லை ராமுக்கு.

அப்படியே பொதேர் என்று விழுந்தான்... விழுந்தவேகத்தில் எழுந்தான்... ''ஹேய்ய்ய்...! என்று உற்சாகமாக கத்தவும் செய்தான்.

''ராம் என்ன ஒரே குஷியா இருக்கா? பாத்து ரொம்ப உள்ள போக வேண்டாம்...''

''நோ ஸ்ரீதர்... நீ பயப்படாதே... கீழ கால்பதிச்சு நிற்க முடியல. குறுகுறுன்னு கிச்சுகிச்சு மூட்ற மாதிரி மண் அரிபட்றது... தண்ணி அவ்வளவு ஸ்பீடு...''

''கெண்ட மீனும் நன்னாவே கடிக்கும். அதுலயும் கால்லபுண் இருந்தா பிடுங்கி எடுத்துடும்.''

''பைதபை தண்ணிக்குள்ள நீ எவ்வளவு நாழி தம் கட்டுவே ஸ்ரீதர்...?''

''ராம் நான் சீரங்கத்தான். இங்க மூழ்கி மறுகரைல எழுந்திருப் போம் எங்களண்டல்லாம் பந்தயம் வேண்டாம்.''

''ஏய் சும்மா பீலா விடாதே... உன்னைவிட நான் ஒரு நிமிஷம் அதிகமா தம் கட்டிட்டா என்ன தருவே''

''வேண்டாம் ராம். இப்ப அதுக்கெல்லாம் நாழியில்லை... இன்னிக்கு தண்ணியும் தெளிவா இல்லை. இதுல ரொம்பநாழி கிடந்தா நிச்சயம் ஜலதோஷம் பிடிச்சிடும். புதுத்தண்ணி. ஒரு முக்கு போட்டுட்டு கிளம்புவோம்... இந்தத் தண்ணில சுழல் நிச்சயம் இருக்கும். அதுல சிக்கினா அவ்வளவுதான்...!

''நோ... நோ... மினிமம் ஒன் அவராவது (One hour) இன்னிக்கு தண்ணில இருக்றதுன்னு முடிவு பண்ணித்தான் வந்துருக்கேன்...''

''வேண்டாம் ராம். புதுத்தண்ணி உடம்புக்கு வந்துடப் போறது...''

''நத்திங்... நத்திங்... உடம்புக்கு வந்தா டாக்டர் கிட்டபோய் ஊசிபோட்டுண்டா போறது. கிடைச்சிருக்கற சந்தர்ப்பத்தை என்னால விடமுடியாது.''

பேசிக்கொண்டே எகிறி விழுந்தான். நீரை வாயில் தேக்கி ஒரு நீரூற்று போல பீரிடச் செய்தான்.

இரு கைகளாலும் மார்புக்கு முன் நீரை அரைவட்டம் போட்டு பிரித்துவிட்டான். அப்படியே நகர்ந்து நகர்ந்து சிறிது தூரம் போய்விட்டான். ஸ்ரீதரனுக்கு அச்சமாக இருந்தும் அவன் பேச்சு எடுபடவில்லை. ராம் குளித்தபடி இருக்கட்டும் நாம் வேட்டிக்கு சோப்பு போடுவோம் என்று திரும்பவும், எதிரில் ஒரு பானையும் கையுமாக ரங்கன் வருவது தெரிந்தது. ரங்கனும் ஸ்ரீதரனைப் பார்த்தான். மிகக்குறைந்த அளவில் கண்ணியமாக ஒரு சிரிப்பு.

''அட ரங்கனா... வாப்பா வா... என்ன இது கைல பானை?''

''செட்டியார் கடைல குடிக்க தண்ணி தீர்ந்து போச்சு. கொஞ்சம் பிடிச்சுக்கொடுக்கச் சொன்னார்...''

''தண்ணி நல்லால்ல ரங்கா... பாரு ஒரே குழம்பா இருக்கு...''

''அட ஆமாம்ல... இதுக்கு கேணித்தண்ணி மேலாச்சே...?''

இருவரிடமும் பேச்சு வளரும்போது 'ஸ்ரீதர்ர்ர்...?' என்று ஒரு அவலக்குரல். ராம்தான் காவிரி நீரின் இழுவையில் சிக்கிய நிலையில் கூப்பிட்டிருந்தான்.

''ஐயோ ராம்...'' ஸ்ரீதர் ராமைக் காப்பாற்ற தண்ணீரில் திரும்பிப் பாய்ந்திட ரங்கனுக்கு பகீர் என்றது.

''ஸ்ரீதர் வேண்டாம்... அவரை நான் இழுத்துண்டு வரேன். நீங்க போகாதீங்க...'' ரங்கன் கத்தியது ஸ்ரீதரன் காதிலேயே விழவில்லை. ரங்கனும் அதற்கு மேல் நின்று பேசாமல் பானையை ஓடும் தண்ணீரில் வீசிவிட்டு விசையோடு கரையோரம் ஓடி

குறிப்பிட்ட இடத்தில் அம்பைப் போல தண்ணீருக்குள் இறங்கி
கொண்டு பாய்ந்தான்.

கரையோரம் குளித்தபடி இருந்த பலரும் பார்த்து வாயைப்
பிளந்து நிற்க ரங்கன் தத்தளித்தபடி நடுக்காவிரியில் நிற்கிற
கொண்டு விட்ட ராமிடம் சென்று அப்படியே தன் தோளை
அண்டக் கொடுத்து தூக்கிப் போட்டுக் கொண்டு அவன்
மூழ்கிடாதபடி சுவாசிக்க இடம் கொடுத்தபடியே எதிர்கரையில்
ஓதுங்கத் தொடங்கினான்.

பாவம் ராமைக்காப்பாற்ற வந்த ஸ்ரீதரனைத்தான் அந்த இ
வெளிமேல் எங்கும் பார்க்க முடியவில்லை. ஒரு சுழல்வட்டம்
மட்டும் தெரிந்தது.

★★★

வெளிவீதி!

பூம்பூம் மாட்டுக்காரன் ஒருவன் தொம்தொம் என்று ஒரு
சட்டிப்பானை முரசில் சப்தமிட்டபடியே தேசிகாச்சாரி வீட்டு
வாசலுக்கு வந்திருந்தான்.

அவன் முகத்தில் எதிர்பார்ப்பு... நடுநடுவே தன் முன் மார்பு
மேல் கிடக்கும் தப்பட்டையில் 'ரொய்ங்ங்... ரொய்ங்ங்...' என்கிற
சப்தத்தை வேறு எழுப்பி வீட்டினுள் எட்டிப் பார்த்தான்.

மாடும் கழுத்து மணி கிணுகிணுக்க சப்தமிட்டது.

சப்தம் வத்சலாவை வெளியே இழுத்து வந்தது.

அவள் முகத்தில் கோபம்!

''ஏண்டாப்பா... இது என்ன எழவு வீடா? எதுக்கு இப்படி
சத்தம் போட்றே. பிச்சை வேணும்னா குரல் கொடு. இப்படி
கண்ட கருமாந்தர சத்தத்தை எல்லாம் போடாதே...'' என்று ஒரு
அதட்டும் குரல் கொடுத்தவள் திரும்பி உள்ளே சென்றாள். சில
வினாடிகளில் திரும்ப வந்தவள் கைகளில் முந்தைய நாளில்
நிச்சயதார்த்தத்தின் போது கொடுக்கப்பட்ட வாழைப் பழங்களில்
நசுங்கியதும் பிதுங்கியதுமாய் சில இருந்தன.

''உன்னோட மாடு வாழைப்பழம் சாப்பிடும் தானே?'' என்று
கேட்டபடியே நீட்ட 'அம்மணி, அரிசி இல்லாட்டி காசு
கொடுங்க'' என்றான் அவன்.

''ஏன் இந்த வாழைப்பழம் உன் மாட்டுக்குப் பிடிக்காதோ?''

''பல ஊட்ல இதையேதான் கொடுத்தாங்க. வேற கொடுங்க''
அவன் பேச்சைக் கத்தரித்தது ஓடி வந்த ஒருவரின் குரல்.

''மாமிமாமி... உங்க பிள்ளையையும் மாப்ளையையும்
வெள்ளம் அடிச்சிண்டு போயிடுத்து நல்ல வேளையா ரங்கன்
கரை யோரமா இருந்ததுல உங்க மாப்ளையை காப்பாத்திட்டான்.
ஆனா உங்க பிள்ளை ஆத்தோட போய்ட்டான்!''

அந்தக் குரல் அடிமர வெட்டுபோல வத்சலாவை கீழே விழச்
செய்தது. உஷாவோ தெருவில் இறங்கி அம்மா மண்டபம் நோக்கி
ஓட ஆரம்பித்தாள்.

★★★

சிங்கராச்சாரியார் அகம்!

பை நிறைய பழங்களும் நிச்சயதார்த்த பட்சணமுமாய் அவர்
எதிரில் தேசிகாச்சாரி. சிங்கராச்சாரியார் நாமஜெபத்தில் இருந்தார்.
முடியும் தருணம்! காத்துக்கொண்டிருந்தார் தேசிகாச்சாரி.
சிங்காரச்சாரியார் மனைவி நடுவில் காபி தம்ளரோடு வந்தாள்.

''நிச்சயமெல்லாம் நல்லபடி முடிஞ்சுதா?''

வாஞ்சையாக விசாரித்தாள்.

''ஆஹா... நன்னா நடந்தது மன்னி...''

''கடைசில உள்ளூர் பொண்ணே மாட்டுப் பொண்ணா
வந்துட்டா...''

''ஆமாம் எல்லாம் ரங்கநாதர் க்ருபை.''

இருவரின் பரஸ்பரத்தின் ஊடே சிங்கராச்சாரியாரின் நாம
ஜபமும் பூர்த்தியடைந்தது. எதனாலோ எதிரில் அமர்ந்திருந்த
தேசிகாச்சாரி உருவம் கருத்து ஒரு நிழல் பூச்சாட்டம் தெரிந்தது.
கண்களைக் கசக்கிக்கொண்டார் சிங்கராச்சாரியார்.

''என்னண்ணா... கண்ல தூசு விழுந்துடுத்தா...?''

''இல்ல தேசி... திடீர்னு நீ கருப்பா தெரிய ஆரம்பிச்சுட்டே!''

''கருப்பாவா... எதனாலண்ணா...?''

''தெரியல... ஆமா உன் பங்காளிகள் வகையறால எல்லாரும் நன்னா இருக்காளா?''

''என்னண்ணா கேள்வி இது. திடீர்னு இப்ப எதுக்கு எங்க பங்காளிகளைப் பத்தி கேக்கறேள்?''

''இல்ல. நம்ம சொந்தபந்தங்கள்ள யாருக்காவது வைகுண்ட பிராப்தி ஏற்படும் போது சூதகம் நம்மைப் பிடிக்கும். ஒரு தடவை காஞ்சீபுரத்துல மகா பெரியவர் தீர்த்தப் பிரசாதம் தரும்போது ஒருத்தர் இப்படி தான் அவர் கண்ணுக்கு கருப்பா தெரிஞ்சாராம். தீர்த்தம் தராம எழுந்து போன பெரியவர் தன் உதவியாளரை கூப்பிட்டு அவரை வேகமா ஊருக்குத் திரும்பிப் போகச் சொல்லியிருக்கார். அடுத்த அரை மணில மடத்துக்கே தகவல் வந்தது. அவர் போகச் சொன்னவரோட மனைவி ஹார்ட் அட்டாக்ல இறந்துட்டானு...!''

சிங்கராச்சாரியார் சொல்லவும் தேசிகாச்சாரிக்கு மார்பின் மேல் திடீரென்று ஒரு குத்து விழுந்தது போல் இருந்தது.

''நீ அநாவசியமா கவலைப்படாதே... மகாபெரியவர் பெரிய தபஸ்வி. நான் ஒரு சராசரி கிரஹஸ்தன். இருந்தாலும் நாமஜபம் சொல்லி முடிக்கும்போது உன் உருவம் கருப்பா தெரியவும் எனக்குள்ள ஒரு சின்ன சஞ்சலம். அப்புறம் நிச்சயம்லாம் நன்னா நடந்ததுன்னு கேள்விப்பட்டேன். என்னாலதான் வர முடியலை...''

''வரமுடியலையா... இல்ல வரத்தோணலையாண்ணா...?''

''நான் நாசூக்கா சொன்னாலும் நீ உண்மையைத் தெரிஞ்சுக்காம விடமாட்டே போல இருக்கே தேசி...''

''உங்க ஆசீர்வாதம் எப்பவுமே எனக்கு பெருசுண்ணா...''

''அது உன்வரைல நிறையவே இருக்கு. அநாவசியமா மனசை போட்டுக்குழப்பிக்காதே. அந்த மைதிலி ஒரு குத்து விளக்கு! என் வரைல ஆண்டாளும் அவளும் ஒண்ணு. அப்படிப்பட்டவளே உன் மாட்டுப் பொண்ணா வரப் போறா. நீ கொடுத்து வெச்சவனு தான் சொல்வேன்.''

''இதெல்லாமே உங்க மனசுல இருந்து வர்ற வார்த்தைகள் தானே?''

''தேசி. என்கிட்ட இரண்டு பேச்சே எப்பவும் கிடையாது. உள்ளதைத் தான் பேசுவேன். கசப்பான விஷயமா இருந்தா அமைதியா இருந்துடுவேன். என்னத்தையாவது பேசமாட்டேன்.''

''தெரியும்ணா இருந்தாலும் எனக்கென்னவோ மனசுக்குள்ள ஒரு தப்பு பண்ணிட்ட மாதிரியே உறுத்தல்.''

''பைத்தியக்காரா... இப்ப சொல்றேன் கேட்டுக்கோ. உன் பிள்ளை ஜாதகம் எனக்குத் தெரியாது. ஆனா அவ ஜாதகம் எனக்கு நன்னா தெரியும். அவ ஜாதகத்துல பன்னெண்டாம் இடத்துல சேது இருக்கான். செவ்வாயும் சந்திரனும் சேர்ந்து வேற இருக்கான் ரொம்ப ஞானமுள்ள பொண்ணு அவ. அவளுக்கு பிரார்த்தனை பலிதம் உண்டு. அவ ஒண்ணை பெருமாள் கிட்ட கேட்டா பெருமாளால தராம இருக்க முடியாது. கல்யாணம்னு ஒண்ணு ஆனதுக்குப் பிறகு அவ பிரார்த்தனை என்னவா இருக்க முடியும்...? தீர்க்க சுமங்கலியா வாழணும்ங்கறதுதானே? அப்ப அந்த பிரார்த்தனையை பெருமாள் நிறைவேத்திக் கொடுக்காம இருப்பானா?''

சிங்கராச்சாரியார் கேட்டபோது தேசிகாச்சாரியின் சட்டை பாக்கெட்டில் செல்போனில் அழைப்பு எடுத்தார். மறுபக்கம் உஷாவிடம் புலம்பல்.

''அப்பா எங்கப்பா இருக்கே? சீக்கிரமா அம்மா மண்டபக் கரைக்கு வாப்பா. ஸ்ரீதரன் நம்பளை எல்லாம் ஏமாத்திட்டு ஆத்தோட போட்டாம்ப்பா...'' என்று அழுதபடி சொன்னதைக் கேட்டவர் ஒரு வினாடி ஸ்தம்பித்தார். மிடறு விழுங்கினார். நெஞ்சை தடவி விட்டுக்கொண்டார். மிரள மிரள சிங்கராச்சாரியாரைப் பார்க்கவும் தொடங்கினார்.

''தேசி என்னாச்சு?''

''அண்ணா...''

''என்னாச்சுப்பா...?''

"எப்.எப்...எப்படிண்ணா சொல்வேன். நீ... நீங்கதான் பெரியவரைப் போலவே பெரிய தபஸ்விதான்ணா...!"

"என்னப்பா...பங்காளிகள்ல யாரான தவறிட்டாளா?"

"பங்காளில்லாம் இல்லண்ணா..."

"பின்னே... யாரான தூரத்து உறவா?"

"இல்லண்ணா இது... இது நெருக்கமான உறவு! என் தப்புக்கு பெருமாள் சரியான தண்டனையைக் கொடுத்துட்டான்"

"தேசி..."

"ஆமாண்ணா... சரியான தண்டனை! எனக்கு வேணுண்ணா... வேணும். நன்னா வேணும்... நிறையவும் வேணும்."

"போறும் நேரா பேசு யாருக்கு என்ன ஆச்சு?"

"இனி என்ன ஆணும்? அதான் ஆயிடுத்தே...! ஏண்ணா அந்தப் பொண்ணை ஆண்டாள்னு சொன்னேள்... அவ பேச்சை கட்டாயம் பெருமாள் கேப்பார்னும் சொன்னேளே. ஆனா கேக்காம போய்ட்டானே. ஒருவேளை கல்யாணம்னு ஒண்ணு ஆகியிருந்தா தான் அது சாத்தியமோ? நிச்சயதார்த்தத்துக்கு அந்த சக்தி கிடையாதோ?"

நாக்குதழுதழுக்க தாடைதுடிக்க, கண்கள் கலங்க தேசிகாச்சாரி பேசியது இறுதியாக சிங்கராச்சாரியாருக்குப் புரிந்து விட்டது.

"என்ன தேசி... ஸ்ரீதரனா?" என்றார் கிசுகிசுப்பான காற்றுக் குரலில்...

"ஆமாண்ணா...!" என்றபடியே சிங்கராச்சாரியாரின் கால்களில் விழுந்து கதறத் தொடங்கிவிட்டார் தேசிகாச்சாரி!

★★★

இதயத்தைக் குறிபார்த்து யாரோ சுட்டதுபோல் இருந்தது சக்கரவர்த்தி அய்யங்காருக்கு! 'பெருமாளே...' என்று நிலை குலைந்தவராக அமர்ந்திருந்த ஊஞ்சலிலேயே சாய்ந்து விட்டார்.

ஜானகிக்கோ மயக்கமே வந்துவிட்டது.

ரேவதி மயக்கம் தெளிவித்து எழுப்புவதில் மும்முரமாகிட ஸீமா நெற்றியை தேய்த்துக்கொண்டிருந்தாள். நடுநடுவே "ஜாதகம் பாக்கணும்னு ஒருத்தருக்கும் தோணாமப் போயிடுத்து. கடைசில அது இப்படி வந்து முடிஞ்சுடுத்தே... ச்சே..." என்று புலம்பவும் செய்தாள்.

மாடியில் இருந்தாள் மைதிலி. பிருந்தா பூனை போல் அவள் அறைக்குள் நுழைந்தவளாய் அந்தச் செய்தியையும் சொல்லி முடிக்க மைதிலியிடம் ஒரு இனம்புரியாத தடுமாற்றம்! அது ஒரு கோணத்தில் துக்கமாகவும் இன்னொரு கோணத்தில் மகிழ்ச்சியாகவும் இருந்ததுதான் ஆச்சரியம்!

நெடுநேரத்திற்கு அவளுக்குப் பேச்சே வரவில்லை.

"மைலி... காவிரிய நீ அம்மா இல்ல சும்மான்னியே. இப்ப என்ன சொல்றே?"

"இப்பவும் அதே அபிப்ராயம் தான் பிருந்தா. பாவம் ஸ்ரீதர்."

"அது என்னவோ வாஸ்தவம் தான். ஆனா நீ வத்சலாங்கற ராட்சசி கிட்ட இருந்து தப்பிச்சுட்டியே?"

"இருக்கலாம். ஆனாலும் மாமிக்கு இப்ப எப்படி இருக்கும்னு நினைச்சு பாக்கறேன். பாவம் மாமி! துடிச்சுப் போயிருப்பா... இல்ல?"

"எனக்னென்னவோ பிள்ளை போனதுக்குச் கூட அந்த மாமி பெருசா வருத்தப்படமாட்டா. நீ இல்லாம போயிட்டியே... அதுதான் மாமியைப் போட்டு குடைஞ்சிண்டிருக்கும்..."

"சேச்சே... அப்படி எல்லாம் இருக்காது பாவம் ஸ்ரீதர்... இப்படியா போய் தண்ணில விழுவார்?"

"அவர் எங்க விழுந்தார்... எல்லாம் அவரோட மாப்ளையால வந்த வினை. இதுல ஒரு ஆச்சரியத்தப் பார் அந்தாள் பொழச் சுண்டுட்டான். அவரை காப்பாத்தினது யார் தெரியுமா?"

"யாரு?"

"வேறு யாரு... எல்லாம் உன் ஆள் தான்...!"

"யாரு ரங்கனா?"

"ரங்கனே தான்... வத்சலா மாமி பொண்ணு உஷாவுக்கு காலி கெட்டிடி..."

பிருந்தா ரங்கன் நினைப்பை மூட்டவும் மைதிலியிடம் இரைந்து தெரியாத ஒரு சலனம். கீழே அவள் அம்மா மயக்கம் நீங்கி ஓங்கலாய் குரல் எடுத்து அழும் சப்தமும் காதில் ஒலிக்கத் தொடங்கியது. குறுக்கில் அக்கம் பக்கத்தின் குரல் கலந்தும்...

"ஐயோ மாமி... இப்படி ஆயிடுத்தே மாமி! ஜாதகம் பாத்தேளா பாக்கலையா?"

"ஜாதகம் பாத்தா மட்டும் ஒருத்தர் இத்தனாம் தேதி இத்தனாவது நிமிஷத்துல, இவர் செத்துப் போயிடுவார்னு சொல்ற அளவுக்கு ஞானமுள்ள ஜோசியக்காரனும் இருக்கானா என்ன?..

"நாளைக்கு மைதிலி ஜாதகம் கல்யாணத்துக்கு முந்தியே அடிச்சிடுத்துன்னுதானே பேசுவா..."

பேச்சு அங்கு தொட்டு மைதிலி ஜாதகம் தான் காரணம் என்கிற மாதிரி மையம் கொள்ளும்போல தெரிந்தது!

சக்கரவர்த்தி ஐயங்கார் அதை எல்லாம் எதிர்பார்த்தவர் போல விசும்பி விசும்பி அழத்தொடங்கியிருந்தார்.

★ ★ ★

கல்லணைக்கு ஒரு கிலோ மீட்டர் முன்பாக தாழையும் கொடிவேரியும் தழைத்திருந்த இடத்தில் கவிழ்ந்த நிலையில் சிக்கிக் கொண்டிருந்த சடலத்தை ரங்கன் மிகபதவிசாக இழுத்தபடி கரை ஏற ஆரம்பித்தான்.

கரைக்கு மேல் வரிசையாக கார்கள்... ஏராளமான மனிதர்கள்! ஆம்புலன்ஸ் வேன் ஒன்றும் நின்றபடி இருக்க அதில் இருந்து இரும்பு ஸ்ட்ரெச்சர் ஒன்று இறங்கி ரங்கன் கொண்டு வந்த போட்ட உடம்பை அள்ளிப் போட்டுக் கொண்டது. கரைமேல் நிற்கும் காருக்குள் வத்சலா கண்ணாடியை ஒட்டி அமர்ந்திருந்தாள். அவளிடம் அழுகையை மீறி ஒரு குரூரமான வெறிப்பு அதுவும் ரங்கன் மேல்...!

31

ஊர்வோர் மிகுமிடம் ஊராகும்
ஊரே உயிர்களின் நாடாகும்
ஊருக்குள் நம்மனை கூடாகும்
ஊரே சமயத்தில் போர்க்களமாகும்
ஊருக்குள் வாழ்ந்திட ரணமாகும்.

காருக்குள் அமர்ந்திருந்த வத்சலா இறங்கி ஓடிவந்து ஸ்ரீதரனின் பிணத்தைப் பார்த்து கதறி அழுது அதகளப்படுத்தி விடுவாள் என்று கருதியிருந்த பலருக்கு, அமைதியான அவளது வெறிப்பு பெருத்த ஏமாற்றமாக இருந்தது. ஆனால் தேசிகாச்சாரி குலுங்கிக் குலுங்கி அழுதார்!

சில காட்சிகள் அபூர்வமானவை.

தேசிகாச்சாரி அப்படி அழுவார் என்பது அபூர்வமானதாகத் தான் இருந்தது. அவரைச் சுற்றி இருந்தவர்கள் தேற்றப் பார்த்தார்கள். சிலர் அழட்டும் விட்டுவிடுங்கள் என்பது போல ஒதுங்கி நின்று கொண்டார்கள். முதல் நாளில் பட்டு வேட்டி, பட்டுச் சட்டை, மைனர் செயின் இவைகளுடன் திருமண் ஸ்ரீசூர்ணம் சகிதம் ஒரு வைணவ ராஜனாக தோற்றம் காட்டியவன், இன்று நேர் எதிராக சற்றே நீரில் ஊதிப்பருத்த சரீரமாக வேனுக்குள் ஏறி அடங்கினான்.

இதுதானா வாழ்க்கை?

இவ்வளவுதானா... எது எப்போது நிகழும் என்பது தெரியாத நாம் தானா உயரிய இனம்?

★★★

போலீஸ் ஜீப்பும் கிளம்பிவிட்டது. போலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் மட்டும் ரங்கனை நெருங்கி நன்றி கூறுவது போல அவன் தோளைத் தட்டிவிட்டுப் போய் ஜீப்பில் ஏறிக்கொண்டார்.

ரங்கனுக்கு இது பழகிவிட்ட காட்சி... ஆனால் அப்போது சற்றும் எதிர்பாராதபடி தேசிகாச்சாரி அவனை நெருங்கி, ''ரங்கா என் மாப்ளையை நீ காப்பாத்தித் தந்ததுக்கு உனக்கு தேங்க் நன்றிப்பா இந்தப் பிள்ளையையும் காப்பாத்தியிருப்பே... ஆனா இவனுக்கு விதி இல்லாததுக்கும் நாங்க தெரிஞ்சே செய்த தப்புக்கும் நீ என்ன பண்ணுவே?'' என்றபடியே அவனை இழுத்து அணைத்துக்கொண்டவர் ரெண்டுல ஒண்ணு போயிடுத்து. நீயாவது நன்னா இருக்கணும்பா... நீயாவது நன்னா இருக்கணும் என்று அவனை கட்டிக்கொண்டே கதறத் தொடங்கிவிட்டார். அந்த நிலையிலும் வத்சலா அதைப் பார்த்து கொந்தளிக்கத் தொடங்கிவிட்டாள். அதுவரை இறுக்கமாக ஒரு சிலை போல இருந்தவள், கார் கதவைத் திறந்து கொண்டு ஆவேசம் வந்தவளைப்போல இறங்கினாள்.

''பாவி மனுஷா... பாவி மனுஷா... அவன் ஒரு பொண்ணு தூக்கி, அவனோட என்ன தழுவல் வேண்டிக் கிடக்கு? பிள்ளை யோட பொணத்த கட்டிண்டு அழாம, பொணந்தூக்கியை கட்டிண்டு அழறியேய்யா... நீர் எல்லாம் ஒரு புருஷனா?'' என்று ஒரு வெடி வெடித்தாள்.

தேசிகாச்சாரி அதைக் கேட்டெல்லாம் வெகுளவில்லை. மெல்ல ரங்கனிடமிருந்து திரும்பினார்.

கண்ணீரைத் துடைத்தபடியே நிமிர்ந்தார். அதுவரை கண்ணீர் சிந்திய விழிகளில் சட்டென்று ஒரு மாற்றம்.

'இனி நீ ஒரு வார்த்தை பேசினாலும் நீயும் பொணமாயிடுவே' என்பது போல ஒரு பார்வை. அவள் அருகே நெருங்கினார். தன் வலக்கரத்தை சற்றுத் தளர்த்தி அசைத்துவிட்டுக் கொண்டு, பின் அதில் ஒரு வேகத்தை வரவழைத்து ஒரு அறை விட்டார்.

காருக்குள் வத்சலாவிற்கு துணையாக அமர்ந்திருந்த அவளுடைய சகோதரியில் இருந்து அவ்வளவு பேருக்குமே அது ஒரு அபூர்வ சம்பவமாகத்தான் தோன்றியது.

★★★

தென்னந்தோப்புக் கட்டிலின் மேல் வந்து விழுந்தான் ரங்கன், வெறுத்துப்போயிருந்தான். விழுந்த வேகத்தில் எழுந்து வேகமாக

காவிரி நோக்கி ஓடி கரைத்தண்ணீரில் நின்றுகொண்டு காலாலே மாறி மாறி உதைத்தான். அதன் செங்குழம்பு நீர் எகிறிச் சிதறியது.

''ஏ காவிரி... ராட்சஸி... தைரியம் இருந்தா வாடி என் முன்னால... தண்ணிப் பேயே... காட்டேரி... மூதேவி...''

வாய் விட்டு வெடித்தான்...

தென்னை மரத்தின் மேல் அங்கும் இங்குமாய் அமர்ந்திருந்த காக்கைகளில் சில அவன் கத்துவதை ஆச்சரியமாகப் பார்த்தன.

''உனக்கு இப்ப திருப்தியா? தினம் தினம் ஒருத்தரை விழுங்கினாத்தான் உனக்கு சந்தோஷமா? உன் உயிர்ப்பசி தீரவே தீராதா? விழுங்கறதுதான் விழுங்கறே ஒரு வாழ்ந்து முடிச்ச வயசான கிழடு கட்டையெல்லாம் உன் கண்ணுக்குத் தெரியாதா? வாலிப உயிர்தான் உனக்கு வேணுமா? பாவம் அந்த மைதிலிப் பொண்ணு... அது வாழ்க்கைல போய் மண் அள்ளிப் போட்டுட்டியே...''

அவனது வெடிப்பு தோப்புக்குள் நுழைந்திருந்த கோவிந்தன் காதிலும் விழுந்து கொண்டிருந்தது.

''நினைச்சேன்... கிறுக்கனா மாறி நீ கத்திகிட்டு இருப்பேன்னு நினைச்சேன்...''

அய்யர் மவனுக்கு காவிரி பத்தி தெரிஞ்சிருந்தும் புது வெள்ளத்துல கவனமா இருக்கணும்னு தெரியாமப்போய் சுழல்ல சிக்கி உசுரை விட்டதுக்கு காவேரி என்னப்பா பண்ணுவா?'' என்றவனாக ரங்கன் எதிரில் வந்து நின்று கூர்மையாகப் பார்த்தான். ரங்கன் கண்களில் கண்ணீர் பெருகியிருந்தது.

''ரங்கா நீயா அழுவறே?''

''ஏன் கோவிந்தா... நானும் மனுசன்தானே?''

''இல்ல... இப்படி நூறு பொணமாவது பாத்திருப்பியே நீ... அப்பல்லாம் இப்படி நீ யாருக்காகவும் அழுததில்லையே?''

''அவங்களப் பத்தி எனக்கு எதுவும் தெரியாதது காரணமா இருக்கலாம்.''

"அதுவும் சரிதான்... இன்னிக்கு பூரா இந்தப் பேச்சுதான் பேசறவங்க செத்தவனைப் பத்தி பேசினா பரவால்ல... பாவம் அந்தப் பொண்ணையும் போட்டு தாளிக்கறாங்க..."

"எனக்கும் அதான் கோவிந்தா கவலை... மைதிலி தங்கமான பொண்ணு. ஜாதி அழுக்கே இல்லாதவ..."

சொல்லும்போதே கண்ணீரைத் துடைத்துவிட்டுக் கொண்டான்.

"அப்ப அதுக்கு உன் மேல ஒரு மரியாதை இருக்குன்னு சொல்லு..."

"கோவிந்தா என்கிட்ட போட்டெல்லாம் வாங்கப்பாக்காதே. நீ எங்க வந்தே... அதைச் சொல்லு..."

"ஊருக்குள்ள வில்சனையும் ராஜாங்கத்தையும் பார்த்தேன்..."

"இடும்பன் தம்பிதானே ராஜாங்கம்?"

"ஆமாம்... தப்பித் தவறிக் கூட நம்ம வெளிவீதிப்பக்கம் அவன் இதுவரைல வந்ததில்ல. அவனுங்க உலகமே காவிரிக் கரைக்கு அந்தப் பக்கம்தான்."

"என்ன சொல்ல வரே நீ..."

"எனக்கென்னவோ அவங்க உன்னை தேடித்திரியறாங்க களோன்னு டவுட்டா இருக்கு..."

"அவங்களப் பார்த்தா நான் இங்கதான் இருக்கேன்னு சொல்லி அனுப்பு. போடறதா இருந்தா போட்டுட்டு போய்க்கிட்டே இருக்கட்டும். எனக்கும் பொணந்தூக்கியா இருந்து இந்த சண்டாளி காவிரியோட தினம் சண்டை போட்டுகிட்டு இருக்கறதுக்கு போய்ச் சேர்ந்துட்டா நல்லதுன்னுதான் தோணுது."

"நீ இப்படிப் பேசறதுல இருந்து உனக்கே இந்தப் பொணம் தூக்கறது பிடிக்கலே... அதை நீ கேவலமா நினைக்கறேன்னு நல்லா தெரியுது. உண்மைல பொணமும் குழந்தையும் ஒண்ணு ரங்கா. குழந்தை பிறப்பை நாம என்னன்னு சொல்றோம் யோசிச்சுப் பாரு..."

ரங்கன் சற்று கோபமாக கோவிந்தனைப் பார்த்தான்.

"அட முறைக்காதப்பா. நான் ஒண்ணும் பேசணுமேன்னுல்லாம் பேசல. நம்ம சிங்கராச்சாரியார்தான் பேசினார்.

"பிரசவத்துல குழந்தை அழுது.

மரணத்துல சவம் முன்னால நாம அழறோம்.

அது அசையும்-இது அசையாது.

மத்தபடி குழந்தையும் தெய்வமும் மட்டுமில்ல, குழந்தையும் சவமும்கூட ஒண்ணுதான். ரெண்டுக்கும் எதுவும் தெரியாது. அங்கேயும் தீட்டு. இங்கேயும் தீட்டு. அது இந்த பூமியில வாழப்போகுது. இது பூமியை விட்டு அது வந்த இடத்துல போய் வாழப் போகுது'ன்னு அப்படியெ தொட்டுத் தொட்டு அவர் பேசினதைக்கேட்டு நான் அன்னிக்கு பிரமிச்சுப் போய்ட்டேன் தெரியுமா?"

"கேக்க நல்லாத்தான் இருக்கு. ஆனா நான்தான் ரசிக்கற நிலைல இல்லை."

"ரசிப்பா... இதை எல்லாம்தான் ரசிக்கணும். நீ பண்றது ஒண்ணும் கேவலமில்ல. அதுக்காக பெரிய சேவை செய்யறேன்னு சொல்லி உன்னை குளிப்பாட்ட விரும்பலை. தண்ணிக்குள்ள மீன்பிடிக்கத் தெரிஞ்சவன் மீன்பிடிக்கறான். முத்துக்குளிக்கத் தெரிஞ்சவன் முத்துக்குளிக்கறான். நீ பொணம் தூக்கறே... இதுல பெரிசு சிறிசுன்னு எதுவும் கிடையாது.

நீ வேணா பாரு இன்னும் ஒரு பத்துப் பதினைந்து வருஷத்துல ஊருக்குள்ளே சுடுகாடுன்னே ஒண்ணு இருக்காது. இப்பவே மேல் நாடுகள்ல யாராவது செத்தா புதைக்க இடம் கிடைக்கறது பெரும்பாடா இருக்குதாம். உயரமா சுவர் கட்ற மாதிரி சமாதிங்கள ஒண்ணு மேல ஒண்ணா அடுக்கிட்டுப் போறாங் களாம். அங்க அப்படின்னா இங்க அவங்கவங்க வீட்டுப் பொணத்தை அவங்கவங்களே எரிக்கணும்கற நிலை வரத்தான் போகுது. ஏன்னா இப்பல்லாம் இந்த மாதிரி வேலைக்கு ஆள் கிடைக்க மாட்டேங்கறாங்கப்பா... எல்லாருக்கும் பல்லாக்குல போகத்தான் ஆசை. தூக்க ஆள் இல்லை. இந்த மாதிரி சமயத்துலதான் 'உன்னை நான் தூக்கறேன். என்னை நீ தூக்கு'ன்னு ஒரு புதுவிதி உருவாகும். வேற வழி கிடையாது.

அப்ப ஒரு வேளை காவிரி இருந்து அதுல தண்ணியும் ஓடி, இப்ப போலவே அதுல யாராவது மூழ்கி செத்துப்போனா அப்ப பொணந்தூக்கறவன்தான் பெரிய வீரன். நம்ம சச்சின் டெண்டுல்கர் ஒருநாள் மேட்சுல டபுள் செஞ்சரி அடிக்கவும் மிரண்டு போய் பாத்தோமே... அப்படி ஆத்துல இறங்கி பொணந்தூக்கிட்டு வர்றவன பாப்பாங்க. ஊர் கலெக்டர் பத்மஸ்ரீ விருது கொடுக்கறதுக்காக அரசாங்கத்துக்கு ரெகமண்ட் எல்லாம் பண்ணுவார்.''

கோவிந்தன் பேச்சை எந்த ரகத்தில் எடுத்துக்கொள்வது என்று தான் ரங்கனுக்குத் தெரியவில்லை. அது அவனை தேற்றுவதற்காகப் பேசிய மாதிரியும் இருந்தது. சத்தியம் போலவும் இருந்தது.

அதேசமயம் அவன் எச்சரித்த வில்சனும், ராஜாங்கமும் வருவதை தோப்புக்குள் திரிந்துகொண்டிருந்த வெள்ளையன் நாயின் குரைக்கும் சப்தம் காட்டிக்கொடுத்தது. திரும்பிப் பார்த்த ரங்கனும் கோவிந்தனும் ஒரு அநியாயத்தையும் பார்த்தனர். வில்சன் ஒரு கட்டாரியை வெள்ளையனை நோக்கி அது வந்த வேகத்துக்கு வீச, அது மிகச்சரியாக அதன் கழுத்தில் பதிந்து அதை அப்படியே சுருட்டி கீழே விழவைத்து துடிக்கவும் விட்டது.

''ஏய்ய்ய்...!' ஆவேசமான ரங்கன் முன்னால் ராஜாங்கம் தன் நாட்டுத்துப்பாக்கியை நீட்டி, ''வேணாம் ரங்கா... அசையாதே சத்தியமா துளிகூட யோசிக்கமாட்டேன் கால்ல சுட்டு நொண்டிப் பயலாக்கிடுவேன்...'' என்றான். வில்சன் கோவிந்தனைப் பார்த்து ''ஏ சைக்கிள்... நீ மூடிக்கிட்டு திரும்பிப் போறியா இல்ல இவன் கூட வந்து சவுக்குத் தோப்புல காலம்பூரா கால்ல சங்கிலியோட அடிமையா இருக்கப் போறியா?'' என்று கேட்டான்.

''டேய் வேண்டாண்டா-அநியாயம் பண்ணாதீங்கடா.''

''அதுக்குன்னு பொறந்துட்டு மாறி நடக்கச்சொன்னா எப்படி சைக்கிளு... போ... போ... பொத்திகிட்டு திரும்பிப் போ... நீதான் எங்களுக்கு சாட்சி!

இந்தப் பொணந்தூக்கியை காணோம்னு ஊரே பேசணும். அப்ப நீ சொல்லணும். 'இடும்பன் ஆளுங்க அவனைத் தூக்கி

விட்டுப் போனாங்க'ன்னு! அப்பதான் ஒருபயம் எப்பவும் இருக்கும்.

முடிஞ்சா போலீஸ்ல கூட கம்ப்ளைண்ட் கொடு. அவனுங்கள எலும்புத்துண்டு நாயா ஆக்கி வெச்சிருக்கோம். யாராலயும் புடுங்கக் கூட முடியாது.''

ராஜாங்கம் குரலில் ஒரு பிரத்யேகத் தெனாவெட்டு. ஹிரண்யர்களும் சூரபத்மர்களும் யுகங்கள் தோறும் பலப்பல வடிவங்கள் எடுத்து வந்து கொண்டே இருப்பார்கள் போலும்!

பேச்சோடு பேச்சாக ரங்கனை இடுப்புத்துண்டால் கட்டி கரையோரம் தேங்கி நின்ற பரிசலில் தூக்கிப் போட்டுக்கொண்டு நொப்பும் துரையுமான வெள்ளத்தில் வெகுவேகமாக செல்லத் தொடங்கினர்.

கோவிந்தன் விக்கித்துப் போயிருந்தான்!

32

'விதி விதி என்றோர் வலையுண்டு
மதியும் அதனுள் மடங்கக் கண்டு
கதி கலங்கியவர் பலருண்டு!
துதித்தால் விதிவலை அறுகுமென்று-ரங்க
நதிக்கால் பற்றி சிலர் அழுதே-விதியின்
சதிக்கால் இரண்டாய் முறிந்ததுண்டு!
நாமஜெபத்தில் குதித்தால் மதிக்கேது
விதியும் சதியும்?'

ரங்கனைக் கட்டி இழுத்துச் சென்ற அந்த பரிசல் ஆளரவமில்லாத ஒரு இடத்தில் தரைதட்டி நின்ற போது நன்றாக இருட்டத்தொடங்கி விட்டது. சற்றுத்தள்ளி ஒரு சரக்கடிக்கும் வேன் ஒன்று நின்று கொண்டிருந்தது. பரிசல் வருவதைப் பார்த்து வேனுக்குள் இருந்து இரண்டு பேர் ஓடி வந்தனர்.

கட்டிப் போடப்பட்டிருந்த ரங்கனை, ராஜாங்கமும், [illegible] ஆளுக்கொருபக்கமாய் தூக்கிக் கரைத் தண்ணீரில் போட்[illegible] ஒரு மூட்டை விழுவது போல் விழுந்தான் ரங்கன். [illegible] வரும் போதே வாய்க்குள் துணியை வைத்து இழுத்துக்[illegible] விட்டதால் அவன் வரையில் மூச்சு விடுவதே பெரும் [illegible] இருந்தது.

வேனில் இருந்து இறங்கி வந்தவர்கள் ரங்கனை ஒரு [illegible] தூக்குவது போல தூக்கிக்கொண்டு போய் வேனுக்குள் [illegible] போட்டனர். பின்னாலேயே சென்று வில்சனும், ராஜாங்கமும் [illegible] அந்த வேனில் ஏறிக்கொள்ள வேன் ஓட்டமெடுக்க ஆரம்பித்[illegible]

கதி கலங்கிப் போயிருந்தான் கோவிந்தன். ரங்கனைத் தூக்[illegible] சென்றவர்கள் நிச்சயம் அவனைக்கொன்று புதைக்காம[illegible] விடமாட்டார்கள் என்றே அவன் மனது எண்ணியது. யாரை[illegible] போய் பார்த்தால் ரங்கனைக் காப்பாற்ற முடியும் என்பதும் [illegible] தெரியவில்லை. போலீசுக்கு போகலாம் என்றாலோ அவர்[illegible] சொன்னது தான் ஞாபகத்துக்கு வந்தது.

'நாங்க போடற எலும்புத்துண்டுக்காக ஓடிவர்ற நாயுங்க தான் போலீஸ்காரர்கள்' என்று ராஜாங்கம் சொன்னதிலும் உண்மை இல்லாமல் இல்லை. அதற்காக இப்படியே மருகிக் கொண்டிரு[illegible] பதிலும் அர்த்தம் இல்லை என்றே தோன்றியது. சிலப்ப[illegible] நிமிடங்கள் தத்தளித்த கோவிந்தன் ஸ்ரீரங்கத்திலேயே பெரிய தாதா எனப்படும் பெருமாள் நாயக்கனைப் போய்ப் பார்ப்பது என்று முடிவுக்கு வந்தான்.

கொள்ளிடக்கரை!

பாடுவாந்துறை சுடுகாட்டில் ஸ்ரீரங்கமே திரண்டு வந்தது போல கூட்டம். தகனக்கட்டத்துக்கு முதல் நிலையில் ஸ்ரீதரனின் உடல் கிடந்தது. ஆஸ்பத்திரியில் மொத்த உடம்பையும் கூறு போட்டு முடித்து, பின் பேண்டேஜ் துணியாலேயே சுற்றிக்கொடுத்து விட்டனர்.

முகம் மட்டும் பார்க்கும் விதத்தில் தெரிந்தது.

நெற்றியில் சாஸ்திர நிமித்தம் போட்டிருந்த நாமம் பளிச் சிட்டது. பிரம்மச்சாரி சடலம். அதற்குண்டான கர்மகாரியங்களில்

ஈடுபட்டிருந்தார் தேசிகாச்சாரி. நடு நடுவே சுடுகாட்டு வாயிற் புறம் பார்வை போய் போய் வந்தது. அவர் கிட்டத்தட்ட உறைந்து போய் விட்டிருந்தார்.

பிள்ளைகள் கொள்ளி போட, பேரப்பிள்ளைகள் நெய்ப்பந்தம் பிடித்திட வெற்றிகரமாக வாழ்ந்து முடித்த மனநிறைவோடு பிரிந்த உயிர் வைகுண்டம் சேர்வது ஒருவிதம். பிள்ளைகளுக்கே கொள்ளி போட்டு, அவர்கள் செய்ய வேண்டியதை அவர் களுக்காக செய்வது மனதுக்கு நேருகின்ற ஒரு பெரிய ஊனம். இது என்ன விதிப்பாடோ?

அந்த ஊனத்தில் அரற்றிக்கொண்டிருந்தது அந்த மனது. இருந்தும் திரும்பித் திரும்பி பார்வை, ஈம காரியம் செய்து கொண்டிருக்கும் அவருக்கு அதை செய்வித்துக்கொண்டிருந்த பராசர அய்யங்கார் "இந்த இடத்துல இந்த நேரத்துல யாரைத் தேசிகா எதிர்பார்க்கறே?" என்று கேட்டே விட்டார்.

"எதிர்பார்க்கல ஸ்வாமி... எங்க வந்துடப் போறாரோன்னு பயப்படறேன்..."

"யாரது?"

"சக்கரவர்த்தி ஐயங்கார்...?"

"ஓ சம்பந்தி ஸ்வாமியா?"

"இல்ல... அவர் என் சம்பந்தி இல்ல... நிச்சயம்கறது பாதி கல்யாணம் மாதிரிங்கறது ஒரு ப்ரேமைல சொல்ற வார்த்தை. உண்மை கிடையாது. ஒரு ஸ்னேக பாவத்தோட கூட அவர் வந்துடக்கூடாது."

"இது என்ன பேத்தலான பேச்சு?"

"இல்ல ஸ்வாமி... அவர் வந்தா சம்பந்தி பந்தம் உறுதிப்படும். பாவம் அவர் பொண்ணு மைதிலி. அவளுக்கு வேற இடத்துல நல்லபடியா கல்யாணம் நடக்க வேண்டாமா?"

ஈனஸ்வரத்தில் தேசிகாச்சாரி கேட்கவும் பராசர ஐயங்காருக்கே மளுக்கென்று கண்களில் கண்ணீர்த் துளிர்த்து விட்டது.

அப்போது திருவேங்கடம் என்பவன் ஓடிவந்து தேசிகாச் சாரியின் காதுகளில் "மாமா நீங்க சொன்ன விஷயத்தை போன்

மூலமா சக்கரவர்த்தி மாமா கிட்ட சொல்லிட்டேன். மயானத்துக்கு புறப்பட இருந்தவர் நின்னுட்டார்'' என்றான்.

அப்பாடா என்கிற பெருமூச்சோடு அடுத்தடுத்த காரியங்களில் ஈடுபடத்தொடங்கினார்.

நாமதாரியாக தெரிந்த ஸ்ரீதரன் முகத்தை பெட்ரோமாக்ஸ் வெளிச்சத்தில் அவ்வப்போது பார்த்துப் பார்த்துப் பெருமூச்சை விட்டார்.

இனி அந்த முகம் அதனுள் இருந்து வரும் குரல் எதையும் பார்க்கவும் கேட்கவும் எக்காலத்திலும் சாத்தியமில்லை. சில மணிகள் கூட இல்லை. சில நிமிடங்களில் அந்த முகத்தை தீயானது பிடித்துத் தின்னப் போகிறது.

ஈமகாரியத்தின் உச்சமாக வாய்க்கரிசி போடும் கட்டம் வந்தது. பிணத்திடமும் விருந்தோம்பல்? இந்த மனிதன் தான் எத்தனை பெரிய நாகரிகன்!

தன் கைப்பட அரிசியைப் போடும் போது 'ஸ்ரீதரா' என்று வெடித்து விட்டார் தேசிகாச்சாரி. அந்தச் சுடுகாடு இப்படிப்பட்ட துக்க வெடிப்புக்களை ஏராளமாக கேட்டு விட்டது. இனியும் கேட்கப்போகிறது.

புலையன் மட்டும் எந்த பாதிப்புமின்றி எந்திரமாய் விறகுத்துண்டுகளை சார்த்தத் தொடங்கினான்.

அழுது முகம் வீங்கியிருந்தாள் வத்சலா! அவ்வப்போது அவள் பார்வையும் வாசற்பக்கம் போகத்தான் செய்தது. அது எதற்கு என்று உஷாவுக்கு தெரிந்தே இருந்தது.

'கடைசிவரை அந்த கடங்காரி வரவே இல்லை பார்த்தியா... வந்தா சம்பந்தி உறவு பலமாயிடும்னு பயம். துணிச்சலா இவ பொண்ணை நான் மாட்டுப் பொண்ணாக்கிக்க நினைச்ச பாவத்துக்கு எனக்கு இதுவும் வேணும். இன்னமும் வேணும்'' என்று வெளிப்படையாகவே அவள் பேசியது துக்கவீட்டுக்கு வந்திருக்கும் பலர் காதுகளிலும் விழத்தான் செய்தது.

மாப்பிள்ளை ராம்குமார் மௌனத்தில் புதைந்து போயிருந்தான். அவன் வரையில் எடுத்திருப்பது மறுஜென்மம். ஸ்ரீதரன்

சாவுக்கு மைதிலி ஜாதகமெல்லாம் காரணமில்லை. சொல்லச் சொல்ல கேட்காமல் தான் தண்ணீருக்குள் போட்ட ஆட்டம் தான் காரணம் என்பதைச் சொல்லிவிட அவன் மனது துடித்தது. அதை அத்தனை பேர் நடுவில் சொல்லத்தான் தயக்கமாக இருந்தது. இருந்தும் உஷாவைக் கூப்பிட்டு அவளிடம் பற்கள் நரநரக்க கடிந்து கொண்டான்.

''உங்கம்மா வாய மூடிக்கச் சொல்லு...''

என்ன ஜென்மம்டி இவ! அவா துக்கம் கேட்க வரதா இருந்தாலும் யாரையாவது அனுப்பி நீங்க யாரும் வரக் கூடாதுன்னு சொல்லணும்டி அதுதான் நல்ல எண்ணம். இப்பக் கூட உங்கம்மாவுக்கு பிள்ளை போய்ட்டான்கறத விட அவ ஏன் வரலைங்கறது தான் பெருசா தெரியறது. ராட்சஸிடி உன் தாய்...'' என்று வெடித்தான்.

''என்ன நீங்க... அம்மா அப்படி நினைக்கறதுல என்ன தப்பு? அவர் போய்ட்டா என்ன, மாமி நான் இருக்கேன் இனிமே உங்களுக்குன்னு அந்த மைதிலி வந்து அம்மாவை கட்டிண்டு சொன்னாத்தானே அவ நல்ல பொண்ணு...''

உஷா தான் ஒரு குட்டி ராட்சஸி என்று சொல்லாமல் சொன்னாள். ராம்குமாருக்கு பகீர் என்றது. ஆத்திரத்தை அடக்க முடியாமல் விட்டான் ஒரு அறை! ''அறிவு கெட்டவளே... மண்டூகம்... நீ அப்படியே உன் அம்மாவோட ஜெராக்சுடி... இப்ப நான் சொல்றத நன்னா கேட்டுக்கோ... உன் அண்ணன் போய்ச் சேர்ந்ததுக்கு மைதிலி காரணமில்ல. நான் தான் காரணம்! ஆத்தை பாக்கவும் காணாததை கண்ட குஷில நான்தான் கன்னா பின்னான்னு குதிச்சேன். வேண்டாம் ராம். புதுத்தண்ணி, ஆபத்துன்னு அவன் கரடியா கத்தியும் நான் கேட்கலை. அதனால சுழல்ல மாட்டிண்டதும் நான் தான். என்னக் காப்பாத்த வந்துதான் உன் அண்ணன் செத்துப்போனான். உங்கம்மா கரிச்சு கொட்றதா இருந்தா என்னை கரிச்சு கொட்டணும்.

இப்ப சொல்றேன் கேட்டுக்கோ. நாளைக்கு காலம்பற உன் அண்ணனுக்கு பால் தெளிச்ச மறு நிமிஷம் நாம ஹைதராபாத் கிளம்பறோம். இனியும் நான் இந்த ஊர்ல இருந்தேன், குற்ற

உணர்ச்சியிலேயே செத்துப் போயிடுவேன். அதுக்கு முந்தி உங்கம்மாவை நான் கொலை செய்தாலும் செய்துடுவேன். இப்பவே பெட்டி படுக்கையை எடுத்து வை.

போறதுக்கு முந்தி அந்த ரங்கன் எங்க இருந்தாலும் சரி அவர் கால்ல தேடிப்பிடிச்சு விழுந்துட்டு தான் புறப்படறோம். என் வரைல என்னைக் காப்பாத்த வந்த உன் அண்ணனா, நான் இப்ப அந்த ரங்கனைத்தான் நினைக்கறேன்.

ஸ்ரீதர் சாகலை. ரங்கன் ரூபத்துல வாழப் போறதா நான் நம்பத்தொடங்கிட்டேன். இதை நீ கேட்டா என் பொண்டாட்டி இல்ல நான் கட்டின தாலியை இப்பவே இங்கையே என் கையில் கழட்டிக் கொடுத்துடு. நான் போய்ண்டே இருக்கேன். அப்புறம் உன் இஷ்டம்!''

ராம்குமார் போட்ட போடு அவளை அப்படியே அவன் காலடியில் விழ வைத்தது. விசும்பி விசும்பி அழுதாள்.

அவளெல்லாம் அழுவதே நல்ல மாற்றத்துக்கான ஒரு அறிகுறி தான் என்று அவனுக்குத் தோன்றியது.

மழவராயரின் மாந்தோப்பில் ஆண்டாளம்மா குடிசையில் இருந்தான் பெருமாள் நாயக்கன். தலைமுடியை விட மீசையில் முடி அதிகம் இருந்தது. நல்லவேளை போதையில் இல்லை. குடிசைக்கு வெளியில் மீன் குழம்பு கொதித்துக்கொண்டிருந்தது.

''வாவே... சைக்கிளு... வா! எங்க இம்புட்டு தூரம்?'' என்று வரவேற்றவனிடம் கோவிந்தனும் நடந்ததை சொல்லி முடித்தான்.

''அடக்கெரகம் பிடிச்சவனே... இடும்பன் கிட்டையா அந்த பொணந்தூக்கி வெச்சுகிட்டான்? இந்த நியாயத்தை நீ என் கிட்ட கேட்க வந்துட்டியா?'' பெருமாளின் ஆரம்பமே அதட்டலாக இருந்தது?

''இடும்பன் என் போட்டி ஆள்தான். ஆனாலும் எங்களுக்குள்ள ஒரு அக்ரிமெண்ட்டு உண்டு. யாரும் யாரோட லைன்லயும் குறுக்க நுழைய மாட்டோம். இப்ப என்ன ரங்கன் செத்துருவான்னு பயப்பட்றியா நீ...? கவலையே படாதே. இடும்பன் அப்படி எல்லாம் பொசுக்குன்னு கொன்னுப்புட மாட்டான்.

குறைஞ்சது ஏழெட்டு வருசம் கூடவே வெச்சிருந்து டவுசரை கழட்டுவான்.

சினிமாவுல தான் ஹீரோ நாயுங்க எகிறிக் குதிப்பானுங்க. வில்லன் அடிவாங்குவான். அப்பதான் படமும் ஓடும். இது என்ன சினிமாவா? நிஜவாழ்க்கைல வில்லன் தாண்டி எப்பவும் ஹீரோ..''

பெருமாள் நாயக்கன் ஒரு புது வியாக்கயானமே செய்து முடித்தான்.

கோவிந்தனுக்கு ஏன் வந்தோம் என்றிருந்தது.

'சரி வருகிறேன்' என்று சொல்லிக்கொள்ளக் கூட பிடிக்க வில்லை. அடுத்து அவன் சைக்கிள் சென்ற நின்ற இடம் போலீஸ் ஸ்டேஷன்! வருவது வரட்டும் கம்ப்ளைண்ட் கொடுப்போம் நடவடிக்கை எடுக்காவிட்டால் கலெக்டரைப் போய் பார்ப்போம் என்ற முடிவோடு தான் ஸ்டேஷனுக்குள் நுழைந்தான். அப்போது மணி ஒன்பது! இரண்டே இரண்டு போலீஸ்காரர்கள் இருந்தனர்.

''நம்ம ரங்கனை கடத்திகிட்டு போய்ட்டான்யா. சவுக்குத் தீவுல வெச்சு கொலை செய்துடுவாங்களோன்னு பயமா இருக்குய்யா...''

''நீ எந்த ரங்கனை சொல்றே?''

''ஆத்துல பொணம் விழுந்துட்டா அசராம இறங்கி தூக்கிப் போடுவானே அந்த ரங்கனைத் தான்யா சொல்றேன்...''

''அப்படி யாரையும் எனக்குத் தெரியலை. சரி நீ காலைல வா பேசிக்கலாம்... போகட்டும் நீ என்ன உறவு அவனுக்கு?''

''என்னய்யா விட்டுத் தொட்டு விட்டுத் தொட்டு கேக்கறீங்க ரங்கன் என் உசுர் சினேகிதன்யா...''

''அப்ப உன் உசுரைக் கொடுத்து காப்பாத்தாம இங்க எதுக்கு வந்தே?''

கோவிந்தன் நின்று அந்த போலீஸ்காரரை ஒரு வெறித்துவிட்டு அந்த நிலையிலும் சிரித்தான்.

''என்னய்யா சிரிக்கறே?''

''இடும்பன் சொன்னது கூட தப்புய்யா வரேன்.'' என்று புறப்பட்ட பின் தான் அந்த போலீஸ்காரருக்கே இடும்பன்

தங்களை நாய் என்று சொன்னதாகச் சொன்னது நினைவுக்கு வந்தது.

'அது தப்பு என்றால் இவன் என்ன சொல்ல வந்திருப்பான்?' கொட்டாவி பிரிய யோசிக்கத் தொடங்கிவிட்டார்.

★★★

மறுநாள் காலை!

எந்த சலனமும் இல்லாதபடி காவிரிக்கு புறப்பட்டு விட்டாள் மைதிலி. எதிரில் வந்த ரேவதி "நீ இனிமே வெளியே போகக் கூடாது!" என்றாள். "அதை ஒண்ணும் நீங்க சொல்லத் தேவை யில்லை" என்று துணிச்சலாக கூறிவிட்டு தெருவில் இறங்கி நடக்கத்தொடங்கினாள் மைதிலி.

ஆனால் ரேவதி வரையில் அவள் அந்த வீட்டைவிட்டு ஓடுவது போலவும், குறிப்பாக ரங்கனைத்தேடி அவள் ஓடுவது போலவும் பிரமை தட்டியது. இதனாலே ஒரு ஆவேசமும் அவளுக்குள் உருவானது.

33

'ஆழ்கடல் நடுவிலோர் தீவு-இதனை
இலங்கை எனுமே நம் நாவு-ஈங்கு
பாழ்படக் கிடந்தாள் ஒருபேதை-இவள்
ராமனவன் தேடிய சீதை-முன்னம்
பாய்ந்தங்கு சென்றவன் அனுமன்-இவனே
ஆபத்துக்குதவிடும் இறைவன்-அடி
சேவிப்பவர்க்கு மிக இனியவன்-அவர்
ஆவித்துயர் துடைக்கும் வலியவன்!'

மைதிலி தெருவில் இயல்பாக நடந்து செல்வதைப் பார்த்த பலருக்கு அது ஒரு ஆச்சரியமான காட்சியாகத்தெரிந்தது. இவளை இனி கண்ணிலேயே பார்க்க முடியாது. சக்கரவர்த்தி ஐயங்கார்

இவளை ஒருநாள் கூட இனி ஊரில் வைத்திருக்க மாட்டார்- அமெரிக்காவிலும், ஆஸ்திரேலியாவிலும் எவ்வளவோ பெண்டாட்டி செத்த நடுத்தர வயது மாப்பிள்ளைகள் இருக் கின்றார்கள். அவர்களில் ஒருவருக்கு யோசிக்காமல் இவளைக் கொடுத்து விடுவார் என்பது போலெல்லாம் கற்பனை செய்து வைத்திருந் தவர்களுக்கு மைதிலியின் காவிரிக்கான நடை அதிர்ச்சியாகக் கூட இருந்தது.

அவளுக்கோ தான் ஒருபெரிய சிறைக்குள் இருந்து மீட்கப்பட்டு விட்டது போல்தான் இருந்தது. இனி இந்த ஸ்ரீரங்கத்திலேயே வாழப்போவதில்லை. எங்காவது வெகுதூரத்துக்குப் போய்விட வேண்டும் என்றெல்லாம் நினைத்து ஸ்ரீரங்கத்தை அன்னியப் படுத்திக்கொண்டவளுக்கு திரும்ப ஸ்ரீரங்கம் கிடைத்து இனி நீ இங்கே உன் இஷ்டம் போல வாழ்ந்து கொள்ளலாம் என்று அந்த ரங்கநாயகித் தாயாரே வழிப்படுத்திக் கொடுத்து விட்டார் போலவும் உணர்ந்தாள்.

மைதிலி வருவதை தன் வீட்டு வாசலில் இருந்த பிருந்தாவும் கவனித்தாள்.

"மைதிலி எங்கடி காவிரிக்கா?"

"ஆமாம்... வரையா?"

"எப்படிடி உங்காத்துல விட்டா?"

"அவா என்ன விடறது... என் ஊரு... என் ஆறு..."

"புரியறதுடி... ஊரோ, பாவம் நீன்னு நினைச்சுண்டுருக்கு. எனக்குத்தானே தெரியும் நீ எவ்வளவு புண்ணியம் பண்ணியிருக் கறவன்னு...

"வா பேசிண்டே போவோம்..."

"நீ முன்னாடி போ... நான் பின்னாடியே வரேன்."

"என் கூட வந்தா யார் என்ன சொல்லிடுவா?"

"எல்லாரும் எல்லாமும் சொல்வா... இது என்ன அமெரிக்காவா இல்ல ஐரோப்பாவா? பக்கத்து வீட்ல இருக்கறவா யாருங்கறது கூட தெரியாம வாழறதுக்கு...? இது சீரங்கம்டி... நீயோ நிச்சய மானவ... அந்த நிச்சயத்துக்கோ இப்ப உயிர் இல்லை. இந்த மாதிரி

சமயங்கள்ல அழுகை வரதோ இல்லையோ அழணும். இருட்டு ரூமுக்குள்ள முடங்கியும் கிடக்கணும். இதைத்தான் எல்லாரும் எதிர்பார்க்கறா... இது தெரியாதா உனக்கு?''

''வேண்டாம் பிருந்தா... நீ என்னோட வராதே... உனக்கெல்லாம் என் மன்னி மாதிரி ஆட்கள் தாண்டி சரி...''

மைதிலி சற்று ஆவேசமாய் சொல்லிவிட்டு வேகமாய் நடக்கத் தொடங்கினான். பிருந்தாவுக்கே தான் சற்று அதிகம் பேசி விட்டோமோ என்றும் தோன்றியது. வலித்தது. வேகமாய் அதை சரி செய்து கொண்டாள்.

''நில்லுடி நானும் வரேன்... சொல்றவா சொல்லிண்டு தான் இருப்பா. நம்ம வாழ்க்கை நம்ம மனசு அதைப்பத்தி நமக்குத் தானே தெரியும்?''

என்று முணுமுணுத்துக் கொண்டே உள்ளே ஓடிப்போய் கட்டிவைத்திருந்த துணி மூட்டையை எடுத்துக் கொண்டு புறப்பட்டாள். அவள் வீட்டுக்குள்ளேயும் அதன் நிமித்தம் சில எதிர்ப்புக் குரல்கள் ஒலிக்கத் தொடங்கின.

''அடியே கடங்காரி... காலங்காத்தால கிளம்பிட்டியா வெளிய யாருடி அவ...?''

''கத்தாதம்மா காவிரிக்குத் தானே போறேன்.''

''இது நாள் வரை போய் நீராடினது போதும். ஆத்துலயும் கிணறு இருக்கு. தோச்சுத்தர வாஷிங்மெஷினும் இருக்கு. இங்கேயே நீ கிழிச்சா போதும்...''

''இன்னிக்கு ஒரு நாள்மா... ப்ளீஸ்மா!''

''அடிப்போடி சூறு கெட்டவளே வெள்ளமா போய்ண்டுருக்கு. வயசுப்பிள்ளையை உசுரோட கொண்டும் போயிருக்கு. உனக்கெல்லாம் காவிரின்னாலே பகீர்னு வயறு கலங்க வேண்டாம்?''

''நான் ஒண்ணும் நீந்திக்குளிக்கறேன்னு இக்கரைக்கும் அக்கரைக்குமா போகப்போறேன்? கரையோரமா அமத்தலா உக்காந்து எல்லாத்துணியையும் தோச்சு எடுத்துண்டு வந்துட்றேம்மா அப்பாவோட வேஷ்டில அவர் மூக்குப் பொடிய

போட்டுப் போட்டு சிந்தன கறை எல்லாம் வாஷிங் மெஷின் இல்ல ஆசிட்லையே போட்டாலும் போகாதும்மா. காவிரின்னா அப்படி விரிச்சு அலசின நொடில பளீர்னு வெளுத்துடும் வரேம்மா...''

பதிலோடு வாசலுக்குப் பாய்ந்தாள். மைதிலியோ அவளுக்காக காத்திராமல் வெகுதூரம் போய்விட்டிருந்தாள். முன்பெல்லாம் காவிரிக்குப் போவதே ஒரு கலையாக ஒரு அணிவகுப்பு போல இருக்கும்.

ஸ்ரீரங்கத்து ஆண்களுக்கு ஒரு கலாசார சுதந்திரமே இம்மட்டில் உண்டு. இடுப்பில் ஒரு வேட்டி தோளில் ஒரு துண்டு இத்தோடு எங்கும் போகலாம் வரலாம்!

ஈரத்துண்டு தோள் மேல் காய விஷ்ணு சகஸ்ரநாமம் சொன்னபடி அந்த நாளில் பலநூறு பேர் செல்வர்!

இன்று அந்த மாதிரி காட்சிகள் எல்லாம் வெகுவாக மாறி விட்டன. மைதிலியைப் போல சில பெண்கள் மட்டும் மாறாதபடி வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். சகஸ்ரநாமம் சொன்னவர்களின் பிள்ளைகள் ஐ-பாடில் இப்போது பாட்டு கேட்டுக்கொண்டு பைக்கில் பறந்து கொண்டிருக்கின்றனர்.

காவிரியே கூட கர்நாடகாகாரர்களின் வேலைக்காரி போல ஆகிவிட்டபடியால் எப்போது தண்ணீர் பாயும் எப்போது அது காயும் என்பதெல்லாம் உள்ளூர்காரர்களுக்கே தெரியாத ஒரு ரகசியம் போல் ஆகிவிட்டது!

★★★

வராண்டாவில் ஹிந்து பேப்பர் விரிந்த விசிறி போல விழுந்து கிடந்தது. அதைக் குனிந்து எடுத்து விரித்துப் படித்தபடியே ஹாலில் கிடந்த சோபாவில் அமர்ந்த சீமாவுக்கு அது காபி குடிக்கும் நேரம். சமையல் கட்டில் காபி ஃபில்டரை தட்டும் சப்தம்தான் பெரும்பாலான பிராமண வீடுகளின் காலை நேர சங்கீதமே...

அடுத்து அந்த டிகாக்ஷனின் வாசனை... சீமாவுக்கு மிகப் பிடித்தமான விஷயங்களில் அதுவும் ஒன்று... ஆனால் அன்று

ஸ்ரீதரனுக்கு நேரிட்ட துர்மரணமும் அதன் தொடர்பான சிந்தனைகளும் அவனை அமைதிக்குள் புதைத்திருந்தன. எதிரில் காபியோடு வந்து நின்ற ரேவதியின் முகத்திலும் ஒரு விலகியிராத ஆவேசம்.

காபியை வாங்கும்போதே கவனித்தான்.

''என்னடி... காலங்காத்தால கண்ணகி மாதிரி பெருமூச்சு விட்டுண்டு...?''

''விடாம... உங்க அருமைத் தங்கையை நினைச்சா பெருமூச்சு விட்றதுக்கு பேசாம உசுரை விட்டுட்டா தேவலைன்னு தோண்றது...''

''நீ சொல்ல வேண்டியத நேரா சொல்லு...''

அவன் அப்படிச் சொல்லும்போது சக்கரவர்த்தி அய்யங்காரும் காவிரி ஸ்நானம் முடிந்தவராக உள் நுழைந்தபடி இருந்தார். அவரும் வரவும் ரேவதியிடம் வேகம் கூடியது. ''இவ்வளவு நடந்துருக்கே, உங்க தங்கை இப்ப எப்படி இருக்கணும்?''

''நீ நேராவே விஷயத்துக்கு வர மாட்டியா?''

''வரேன்... உங்க தங்கை இப்ப ஆத்துல இல்லை. பெருசா ரிஷி பத்னி மாதிரி காவிரில நீராட்றதுக்குக் கிளம்பிப் போய்ட்டா. இப்படி ஒரு சூழ்நிலையில் எப்படித்தான் தெருவுல இறங்கி நடக்க அவளால முடியறதோ? ஊர்ல இருக்கறவா பார்த்தா என்ன நினைப்பா?''

ரேவதி சொல்லி முடிக்கவும் புசுக்கென்று காற்றுப் போன பலூனைப் போல அந்த விஷயத்தைக் கருதிய சீமா, ''இதுக்குத் தான் இவ்வளவு பெரிய பீடிகையாக்கும்?'' என்று சாதாரணமாகத் திருப்பிக்கேட்டான். சக்கரவர்த்தியும் கிட்டத்தட்ட அப்படித்தான் நினைத்தார்.

''நிச்சயம்கறது கிட்டத்தட்ட பாதி கல்யாணம் மாதிரி. ஏற்கெனவே பாழாப்போன ஜாதகம். இதுல இப்படி ஒரு சம்பவம் வேற. இனி யார் இந்த ஆத்துக்கு சம்பந்தம் பேச வருமா?''

''என்னம்மா... எதுக்கு இப்ப இந்த டாபிக்கை இந்தக் காலம்பர வேளைல கிளப்பறே? மைதிலி எங்கேயும் போகாம ஆத்துக்குள்ள

அழுதுண்டே இருக்கணும்கறியா? அப்படி இருந்துட்டா சம்பந்தம் பேச வந்துடுவாளா?''

சக்கரவர்த்தியும் கேள்விகளை அவளை நோக்கி அடுக்கினார்.

''அது இல்லை மாமா... கொஞ்சம் கூட துக்கமே இல்லாம கல் நெஞ்சுக் காரியா இருக்காளேன்னு ஊர்ல இருக்கறவா நினைப் பாளேன்னுதான் சொன்னேன்...''

''நீ பேசறது. ஊர் நினைக்குமேன்னு கவலைப்பட்ற மாதிரியே இல்லடி... ஊர் நினைக்காம போய்ட்டா என்ன பண்றதுன்னு நீ கவலைப்பட்ற மாதிரிதான் இருக்கு...

போய் இன்னிக்கு என்ன சமையல் பண்றதுன்னு யோசிச்சு அந்த காரியத்தைப் பார். மைதிலிக்கு எப்ப என்ன பண்ணணும்னு எனக்குத் தெரியும்...''

சீமா ரேவதியைப் பார்த்துப் பேசியதில் ஒரு காட்டம் இருந்தது. அது அவளை நெருடியது. 'பாவிமனுஷா...' என்று தனக்குள் சூறிக்கொண்டே விலகிப்போனாள். எதிரில் பாத்ரூமில் குளித்து விட்டு தலை துவட்டியபடியே வந்தாள் ஜானகி.

''உன் பொண்டாட்டி வாயை அடக்கறது இருக்கட்டுண்டா... நான் இப்ப நேராவே கேக்கறேன். மைதிலியை இனி யாருடா சுவாதீனமா பொண்ணு கேட்டு வருவா?''

''ஏன் வரணும்... நாம தேடுவோம். வந்தாத்தான் கொடுக் கணுமா?''

''இப்பவும் தேடாமலா இருக்கோம்... ஆனா ஒரு வரணும் குதிர மாட்டேங்கறதே?''

''நீ இப்ப அநாவசியமா அதை நினைச்சு எல்லாம் கவலைப் படாதம்மா. நெஜத்துல இப்ப நம்ம ஜாதியில பொண்ணு கிடைக் கறதுதான் குதிரைக் கொம்பா இருக்கு. உங்க காலத்துலதான் மாப்பிள்ளை ஆத்துக்காரா ஆடாத ஆட்டம் எல்லாம் ஆடினா... மாப்பிள்ளையோட ஒண்ணுவிட்ட அக்கா தங்கைகளுக்கெல்லாம் வெத்தல பாக்குல ரவிக்கை துணி வெச்சு தரணும்னும். அத்தை பேரனோட மாட்டுப் பொண்ணுக்கெல்லாம் முகூர்த்த தாம்பூலம் தரணும்னும் தர்பார் பண்ணினா! இதுல சம்பந்தி சண்டைன்னு

ஒரு புது சடங்கையே உருவாக்கி பொண்ணாத்துக்காரனை உதை பந்தா நினைச்சு ஆளுக்கு ஆள் உதைச்சு விளையாடினா... இப்ப அப்படி எல்லாம் கிடையாது. நாலு நாள் கல்யாணம் இப்ப நாலு மணில முடிஞ்சடறது''

''ஆமாண்டா... நான் இன்னிக்குதான் அந்தமான் ஜெயில்ல இருந்து விடுதலையாகி வந்துருக்கேன். இப்ப ஊர் இருக்கற இருப்பு எதுவுமே எனக்குத் தெரியாது பாரு...''

அம்மாவும் பிள்ளையும் மாறி மாறி வாக்குவாதம் செய்யும் அத்தருணத்தில் அவர்கள் கவனத்தைத் திருப்பி தன் பக்கம் இழுத்தது லேண்ட்லைன் டெலிபோன்.

சீமா போய் ரிசீவரை எடுத்து காதில் வைத்தான். ''சக்கரவர்த்தி மாமாவா?''

''இல்ல... நான் அவர் புள்ள சீனிவாசன்... நீங்க யார்னு நான் தெரிஞ்சுக்கலாமா?''

''ஓ சீமாவா... சீமா நான் ஸ்ரீவத்சன் பேசறேன்''

''ஸ்ரீவத்சன்... எந்த ஸ்ரீவத்சன்...?''

''சரிதான். நான் அமெரிக்கா வரவும் சுத்தமா என்னை மறந்துட்டியா? போபால் நந்தகுமார் மாமா பிள்ளை ஸ்ரீவத்சன்பா...''

''ஏ... அந்த ஸ்ரீவத்சனா... எங்க அமெரிக்கால இருந்தா பேசறே?''

''ஆமாம்ப்பா... நான் இப்ப ஹூஸ்டன்ல இருக்கேன்... தெரியும்தானே?''

''சொல்லுங்க என்ன விஷயம்?''

''நத்திங்... சும்மாதான் பண்ணேன். அப்பா இல்லையா ஆத்துல...''

''இருக்காரே... கொடுக்கட்டுமா?''

ரிசீவர் கைமாறியது. சக்கரவர்த்தி பேசத் தொடங்கினார்.

''ஸ்ரீவத்சனா... சௌக்யமா இருக்கியாப்பா?''

''நன்னா இருக்கேன் மாமா... பை த பை நான் சட்டுன்னு விஷயத்துக்கு வந்துடலாம்னு நினைக்கறேன். இப்பதான் எனக்கு தேசிகாச்சாரி மாமா பிள்ளை ஸ்ரீதரன் காவிரில மூழ்கி செத்துப்போன விஷயம் தெரியவந்தது...''

''ஆமாம்ப்பா... நடக்கக்கூடாத ஒரு கொடுமை நடந்து முடிஞ்சிடுத்து... உனக்கு யார் தகவல் தந்தது?''

''அது இப்ப முக்கியம் இல்ல மாமா... இங்க ஹூஸ்டன்ல கிட்டத்தட்ட உங்க நிலைலதான் எங்க குடும்பமும் இருக்கு...''

''என்னப்பா சொல்றே நீ?''

''ஆமாம் மாமா... என் தம்பிக்கு நான் இங்கேயே நம்ம ஜாதியிலையே ஒரு வரன் பாத்திருந்தேன். சான்ஃபிரான் ஸிஸ்கோவுல இருக்கற சிவா விஷ்ணு கோயில்ல வெச்சு வரப்போற 23ஆம் தேதி கல்யாணம்னு நாளும் குறிச்சாச்சு. ஆனா துரதிர்ஷ்டவசமா கல்யாணப் பொண்ணு ஒரு கார் ஆக்சி டென்ட்டுல நேத்துதான் உயிரை விட்டா...''

''நாராயணா... நாராயணா... என்ன கொடுமை. இது... அப்புறம்?''

''அப்புறம் என்ன மாமா... நேத்து ராத்திரியே கிரிமிடோரி யத்துல எரிச்சு சாம்பலையும் மிசிசிபி ரிவர்ல கரைச்சாச்சு. தம்பி இடிஞ்சு போய்ட்டான். அப்பதான் ஸ்ரீதரன் பத்தின தகவலும் வந்தது.''

''ஆமாம்ப்பா... அங்க பொண்ணுன்னா இங்க பிள்ளை... எல்லாம் கிரகச்சாரம் கர்மா வேற என்னத்த சொல்ல?''

''அப்படி சொல்லி இடிஞ்சு போறதுக்கு ஏம்மாமா நாம கொஞ்சம் வித்யாசமாவும் முற்போக்காகவும் யோசிக்கக் கூடாது...?''

ஸ்ரீவத்சன் எங்கே வந்து நிற்கப் போகிறான் என்பது சக்கரவர்த்திக்குப் புரிந்து விட்டது!

34

‘நல்ல விதி நல்ல மதி நல்ல நிதி நல்ல கதி
எவர்க்கும் வேண்டும்-என்றும்
சூழ்சதி, சீழ்சொதி, வெங்குருதி, நோய்மிகுதி
எவ்வுயிர்க்கும் வேண்டாம்.

சோதிப் பரிதி ஒளிபோலப் பெருகி-மிகவும்
சாதிக்கும்படி வாழ்வதே வாழ்வாம்.
மோதும் துயர் வாதம் தனில் உருகி, பிறர்
பாதிக்க வாழ்வதுவும் உயிருக்குத் தாழ்வாம்!’’

சக்கரவர்த்தி ஐயங்கார் ஸ்ரீ வத்சன் பேச்சைக் கேட்டவராக கொஞ்சம் போல ஸ்தம்பிக்கவும் செய்திருந்தார்.

‘‘என்ன மாமா எதுவும் பேசாம இருக்கேளே...?’’

‘‘எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியல வத்சா...’’

‘‘ஒண்ணும் அவசரமில்லை மாமா. ஆத்துல எல்லாரோடையும் கலந்து பேசிட்டு முடிவைச் சொல்லுங்கோ. ஆனா ஒண்ணு. சொல்லப் போற பதில் நல்ல பதிலா இருக்கட்டும்.

‘‘வத்சா... இங்க நான் ரொம்ப டெலிகேட்டான நிலைல இருக்கேன். உன் தம்பிக்குப் பார்த்த பொண்ணுக்கு அங்க அஸ்தி கரைச்சாலோ, கரைக்கலையோ இங்க இனிமேதான் அந்த சடங்கு நடக்கவே போறது. இப்ப பேசற பேச்சாப்பா இது?’’

‘‘வாஸ்தவம் தான் மாமா. ஆனா நாம பேசாம இருக்கறதால எதாவது மாறிடப்போறதா? நான் ரொம்ப பிராக்டிகலா பேசறவன். வெளிப்படையாவும் பேசறவன். அதான் பேசிட்டேன். தப்பா எடுத்துக்காம எனக்கொரு நல்ல பதிலை இரண்டு நாள்ல சொல்லுங்கோ... நான் இப்ப போனை வெச்சுட்றேன்.’’

அவன் அந்தப் பக்கமாய் போனை வைக்க சக்கரவர்த்தியும் ரிசீவரை அதன் இடத்தில் வைத்தார். திரும்பினார்.

‘‘என்னன்னா?’’

‘‘என்னப்பா?’’

‘‘என்னத்தடா சொல்ல... ஒரு பக்கம் எழுதின லக்னப் பத்திரிகைல மஞ்சள் கூட காயலை. உரிமைப்பட்டவன் போய்ச் சேர்ந்துட்டான். சரியான அதிர்ஷ்டக்கட்டைன்னு ஊரோடு சேர்ந்துண்டு நாமளும் எங்க மனசு நொந்து சொல்லிவிடுமோன்னு பயந்துண்டும் வருத்தப்பட்டுண்டும் இருக்கும்போது, மைதிலியைப் போல ஒரு அதிர்ஷ்டமானவளே இல்லைங்கறமாதிரி ஒரு தகவல்...’’

‘‘இப்படி புதிரா பேசினா எப்படிப்பா?’’

‘‘விவரமாவே சொல்றேன். இரு யாராவது வந்து யார் காதுலயாவது விழுந்தா துக்கம் கொண்டாட வேண்டியவா பேசற பேச்சப்பாருன்னு நம்ம குடும்பத்தைத் தான் தப்பா நினைப்பா...’’ என்றபடியே சக்கரவர்த்தியே போய் வாசற் கதவை தாழ்போட்டு விட்டு வந்தார்.

சாங்கோ பாங்கமாய் ஸ்ரீவத்சன் பேசியதைச் சொல்லவும் தொடங்கினார்!

★ ★ ★

காவிரியின் புதிய நீர் பெருமளவு விழுந்து பழையபடி ஒரு சுமாரான ஓட்டத்தில் இருந்தது காவிரி! மைதிலியும் பிருந்தாவும் குளித்து முடித்துவிட்டு கரை ஏறி விட்டிருந்தனர். இருவரையும் வெகு ஆச்சரியமாகப் பார்த்தவர்கள் பலர்...

இதே ஒரு இருபது முப்பது வருடத்திற்கு முன்பு என்றால் கழுகின் கால்களுக்குள் சிக்கிய குஞ்சாக ஆகியிருக்க வேண்டும். இப்போது ஒவ்வொரு வீட்டுக்குள்ளுமே மைதிலி மாதிரி ஒரு பெண் ஏதோ ஒரு வடிவத்தில் இருப்பதாலும், கிட்டத்தட்ட எல்லா பெண்களுமே ஆண்களுக்கு சமமாய், அல்லது ஆண்களை விடவே கூடுதலாக சம்பாதிக்கவும் முடிந்தவர்களாகவும் இருப் பதால் ஆபீஸ் வேலையும் அங்குள்ள ஆணாதிக்க சவால்களுமே ஒரு பெரிய பாரமாய் இருப்பதால் இந்த லோக்கல் பார்வைகள் பெருமளவு குறைந்துபோய் அவர்களைப் பற்றி சிந்திக்கவும் நேரமில்லை என்றாகி வருகிறது.

ஒரு வகையில் இது நல்லது தானே?

பிருந்தா கூட இந்த நல்லதைச் சொல்லி ஸ்வாகித்துக்கொள்ளத் தொடங்கினாள்.

''மைலி... உன்கூட நான் பயந்துண்டேதான் வந்தேன். நாம போற வழில மூணு கெழடுகள் இருக்கு. தெருவுல நடக்கறத நோட்டம் போட்டுண்டே இருக்கறது தான் அதுகளோட வேலை. யாராவது சிக்கினா ஆத்துல என்னடி தளிகைன்னு ஆரம்பிச்சு இது என்ன இரண்டு நாளா ஒரே ரவிக்கைன்னு போட்டுண்டு இருக்கே...? கொஞ்சம் கூட மடி ஆச்சாரமே இல்லையேன்னு நான் ரவிக்கை மாத்தாம இருக்கறத கூட கவனிச்சு கேள்வி கேக்குங்கள்!

நல்லவேளை அந்த கெழடுகள்லாம் இப்ப டி.வி.ல மெகாசீரியல் பாக்கற மெம்பர்களா மாறிடுத்துகள். நாம தப்பிச்சோம்'' என்றாள்.

அப்போது 'மைதிலிம்மா...' என்று ஒரு மரியாதையான குரல். நிமிர்ந்தாள். அவளையே சோகமாக வெறித்தபடி சைக்கிள் கடை கோவிந்தன்.

''கோவிந்தா நீயா என்ன கூப்ட்டே?''

''ஆமாம்மா...''

''என்ன விஷயம் கோவிந்தா?''

''கொஞ்சம் அப்படி வாம்மா... உன் கிட்ட முக்கியமா ஒரு விஷயத்தைச் சொல்லணும்.''

அவளும் ஒதுங்கினாள் பிருந்தா அவளோடு செல்லாமல் தனித்து நின்றபோதிலும் அவர்கள் பேசிக்கொள்வது காதில் விழும் தூரத்தில்தான் இருவரும் பேசிக்கொள்ளத் தொடங்கினர்.

''அம்மா... ரங்கனை அந்த சாராயக்கார இடும்பன் ஆளுங்க அடிச்சு தூக்கிட்டு போய்ட்டாங்கம்மா!''

''ஐய்யோ... எப்போ?''

''இது நேத்து சாய்ந்தரமா நடந்தது! நானும் போலீஸ்வரை போய் பாத்துட்டேன். ஒரு பொணந்தூக்கிக்கு வக்காலத்து வாங்க நீ யாருன்னு போலீஸ்ல ஒரே கிண்டல்.''

''ஐயோ கோவிந்தா எனக்கு அப்படியே தலையை சுத்திண்டுவரது... அந்த இடும்பன் ரங்கனை ஏதாவது பண்ணிடப் போறான்...''

''நிச்சயமாம்மா... மணல் மேடு பக்கமா காவிரிக்கு நடுவுல ஒரு சவுக்குத்தீவு இருக்கு. அதுதான் ரங்கனோட சாராயம் காய்ச்சற இடம்.

அங்குதான் ரங்கனை இரும்புச் சங்கிலியால் கட்டிப் போட்டு வைச்சிருக்கான். இனி அடிச்சே ரங்கனை சாராயம் காய்ச்ச வைப்பான்!''

கோவிந்தன் சொல்லச் சொல்ல மைதிலிக்கு கண்களில் கண்ணீர் கோத்துக்கொண்டது.

''தப்பா எடுத்துக்காதேம்மா...நீயே ஒரு துக்கத்துல இருக்கே. இதையும் உன் காதுல போட்டு உன் துக்கத்தை அதிகப்படுத்திட்டேன். உன் அப்பாகிட்ட சொல்லி எதாவது செய்யப் பார். இல்லாட்டி ரங்கனை நானோ நீயோ எந்த நாளும் பாக்க முடியாது.''

''அது சரி அப்பாவால மட்டும் இந்த விஷயத்துல என்ன பண்ண முடியும் கோவிந்தா?''

''அது எனக்கு தெரியலம்மா. நான என் சக்திக்கு ஒரு அடியாளைப் போய் பார்த்தேன். எல்லா ரவுடிப்பசங்களும் அப்பாவிங்க விஷயத்துல ஒத்துமையோட இருக்காங்க. நம்ம போலீஸோ பணத்துக்காக நம்ம ரங்கநாதரைக் கூட பிடிக்கறதுக்கு யோசிக்க மாட்டாங்க. அப்படி இருக்காங்க'' கோவிந்தன் கண்களிலும் கண்ணீர் திரண்டது. அதுவரை விலகியிருந்த பிருந்தா வெகுவேகமாய் கிட்டே வந்தாள்.

''மைலி... எனக்கு ஒரு ஐடியா தோண்றதுடி! நம்ம வீணை வித்துவான் சாரநாதன் மாமாவோட அக்கா பிள்ளை தான் இப்ப திருச்சி கலெக்டர். அதுமட்டுமில்ல இந்த கலெக்டர் நம்ம பத்மஜாவுக்கும் சித்தப்பா பிள்ளை. பத்மஜா மூலமா கலெக்டர் காதுக்கு இந்த விஷயத்தைக் கொண்டு போனா அவர் போலீஸ் எஸ்.பி. கிட்ட பேசி விஷயம் சுலபமா முடிஞ்சிடும். இதை நீ பண்றத விட உன் அப்பாவோ அண்ணாவோ பண்ணினா

இன்னிக்கே ரங்கனை அந்த சவுக்குத் தீவுக்குள்ள இருந்து மீட்டுண்டு வந்துடலாம்'' என்றாள். அதைக்கேட்ட கோவிந்தன் முகத்தில் குபீரென்று ஒரு பிரகாசம்.

''அம்மாடி... நீ சொன்னதுதான் சரி... இதை விட்டா வேற வழியும் இல்ல...'' என்றான் அந்த பிரகாசத்தோடு.

மைதிலிக்கு குபீர் என்று ஒரு இருட்டுக்குள் விழுந்த மாதிரி தான் இருந்தது! அதில் இப்போது வெளிச்சம் ஊடுருவுகிறாற் போலவும் இருந்தது!

★★★

ஜானகி பூஜையறையில் ஐந்து திரிபோட்டு விளக்கு ஏற்றிய நிலையில் நிறைய ஊதுபத்தியையும் கொளுத்தி வைத்தாள். வீடு முழுக்க வாசம் வரத் தொடங்கியது. சக்கரவர்த்தி ஐயங்கார் முகத்திலும் ஒரு புதுத்தெம்பு.

உள்ளே தனியறைக்குள் சீமாவை உருட்டிக் கொண்டிருந்தாள் ரேவதி.

''இந்த அமெரிக்கா வரனை மட்டும் எந்தக் காரணம் கொண்டும் விட்டுடக் கூடாது அவ்வளவுதான்... எல்லாம் முடிஞ் சிடுத்துன்னு நினைக்க வேண்டிய இடத்துல இனிமேதான் எல்லாமே இருக்குங்கற மாதிரி இந்த ஸ்ரீவத்சன் போன் பண்ணிப் பேசியிருக்கான். சும்மா சொல்லக் கூடாதுண்ணா உங்க தங்கை ஜாதகத்தை'' என்று இருபொருள்பட பேசினாள். அவனுக்கும் புரிந்தது.

''நீ இப்ப மைதிலியை மெச்சினியா இல்ல. இதுதான் சாக்குன்னு துப்பினியா?''

''ஐயோடா... நான் ஏன் துப்பறேன். நான் இப்ப எவ்வளவு சந்தோஷத்துல இருக்கேன் தெரியுமா?''

''இருந்துதானே தீரணும்... தென்னந்தோப்பு கையை விட்டுப் போகப்போறதில்ல! மைதிலியும் இந்த ஊர்ல இருந்துண்டு அப்பப்ப வந்து போய் உன் கழுத்தை அறுக்கப் போறதில்ல! ரெண்டு வருஷத்துக்கும் மூணு வருஷத்துக்கும் ஒரு தடவை வந்து போனா அதுவே அதிகம். அப்பாவும் அம்மாவும் வேற அமெரிக் காவுல பொண்ணு வாழ்க்கைப் பட்டிருக்கான்னு அப்பப்ப

பாக்கப் போவா! லட்சக்கணக்குல செலவு பண்ணிண்டு போறவா, போனேன் வந்தேன்னா இருப்பா? ஒரு ஆறுமாசமோ, இல்ல ஒரு வருஷமோ அங்க டேரா போடுவா. இங்க நீ மட்டும் இருந்துண்டு என்னை நன்னா நாட்டாமை பண்ணலாம்...''

சீமா ரேவதியை நன்றாகவே புரிந்து வைத்திருக்கிறான் என்பது அவன் பேச்சில் நன்றாகத் தெரிந்தது. அப்போது அவள் செல்போனில் 'என் உச்சி மண்டைல கிர்ருங்குது' எனும் சினிமா பாட்டின் ரிங்டோன் சப்தம்.

ரேவதி செல்லை எடுத்து திரையைப் பார்த்தாள். அந்தப் பக்கத்தில் வத்சலா மாமி! பகீரென்றது! காதைக் கொடுத்தால் ஏன் எழவுக்கு வரவில்லை என்றுதான் ஆரம்பிப்பாள். சரியாக யூகித்த ரேவதி, செல் இணைப்பை நறுக்கென்று துண்டித்தாள். அதே வேகத்தில் மைதிலிக்கும் அமெரிக்க வரனுக்கும் வரும் முகூர்த்தத்திலேயே கல்யாணம் என்கிற விஷயத்தை கல்யாண நாள் வரும் வரை ஒரு பரம ரகசியம் போல கட்டிப் பாதுகாத்தாக வேண்டும். வெளியே தெரிந்தால் இந்த அதிர்ஷ்டக்கட்டைக்கு வந்த வாழ்க்கையைப் பார்த்தாயா? என்று கண் வைத்தே ஒரு வழிபண்ணி விடுவார்கள்! என்றெல்லாம் யூகிக்கும்போதே வத்சலாவிடம் இருந்தே ஒரு மெசேஜ் வந்தது. பார்த்தாள், 'நீ கூடவா ரேவதி?' என்று மூன்றே மூன்று வார்த்தைகள்...! ரேவதிக்கும் கொஞ்சம் வலித்தது. அவளாக இந்த முறை வத்சலாவை அழைத்தாள்.

''ஐயோ மாமி... எனக்கு உங்க கூட பேசற தைரியமே இல்லை. நான் என்னன்னு பேசுவேன், எப்படிப் பேசுவேன் அதான் நீங்க பண்ணப்ப கூட போனை எடுக்கல.''

''ஆனாலும் உங்களுக்கு இந்த நெஞ்சழுத்தம் ஆகாதுடி. இப்படியா ஒரு மூணாம் மனுஷா மாதிரி இருந்துப்பேள். அந்த காவிரிக்குத்தான் கருணையோ ஈரமோ துளியும் இல்லை. உங்காத்து மனுஷாளுக்குமா...?''

''இல்ல மாமி இங்க அகமே இடி விழுந்த மாதிரி ஸ்தம்பிச்சுப் போய்க்கிடக்கறது. என் மாமனார் நேத்து எழவு கேக்க புறப் பட்டுட்டார். ஆனா உங்காத்து மாமா தான் வரவேண்டாம்னு போன் பண்ணித் தடுத்துட்டார்...''

"அப்படியா சங்கதி... இது எங்காத்து ஸ்ரீ கிருஷ்ணனோட திருவிளையாடலா? வரட்டும் அந்த மனுஷன் வெச்சுக்கறேன். ஆமா என் மாட்டுப் பொண்ணு எப்படி இருக்கா? அப்பாடா பீடை விட்டுதுன்னு நிம்மதியா டி.வி. பாத்துண்டு இருக்காளா?"

"அது... அது..."

"என்னடி பியானோ வாசிக்கறே...?"

"இல்ல... அவளும் துக்கத்தோடதான் இருக்கா மாமி..."

"இதை என்னை நம்பச் சொல்றியா நீ?" வத்சலா அப்படிக் கேட்கவும் ரேவதிக்கு கீறிவிட்ட மாதிரி குபீர் என்று கோபம் வரத் தொடங்கியது.

"மாமி அதை நீங்க நம்பறதும் நம்பாததும் உங்க இஷ்டம். அவளும் ஒண்ணும் உங்காத்து மாட்டுப் பொண்ணெல்லாம் கிடையாது. மாட்டிக்க இருந்த பொண்ணுன்னு ஒத்துக்கறேன். வளவளன்னு பேசாம போனை வையுங்கோ."

பட்டென்று ஒரு போடு போட்டுவிட்டு நிமிர்ந்தாள். எதிரில் ஆச்சரியமும் அதிர்வுமாய் மைதிலி!

35

'பாட்டுக்கோர் புலவன் பாரதி - அவன்
பாட்டினால் துடிக்கும் உயிர்க் குறுதி!
காட்டிடை பொந்துக்குள் அவன் வைத்த அக்னி
மூட்டிட்ட நெருப்பாலே வெந்தது காடு!
நாட்டிடை சந்துக்குள் சிலர் மனத்து அக்னி
தேட்டையாய் எரிந்திட கருகுதே கூடு
வாட்டிடும் துயருக்கு அச்சமே கேடு அதை
ஓட்டிட உள்ளம் கூடிடும் ஒளியோடு...!'

மைதிலி எதிர் வந்து நிற்பதைப் பார்த்த மாத்திரத்தில் ரேவதியிடம் ஒரு புது உற்சாகம் தொற்றிக்கொண்டது. ஒரே

கல்லில் இரண்டு மாங்காய் அடிக்க விரும்பியவள் போல அந்த அமெரிக்க வரன் விஷயத்தை வேகமாக தொடத் தொடங்கினாள். வத்சலாவுக்காக மறுபடியும் போனை சுழற்றினாள்.

"வத்சலா மாமி உங்களுக்கு இப்பவே இன்னொரு விஷயத்தையும் சொல்லிட்றேன். நாங்க அவளுக்கு வேற வரன் பார்த்து கல்யாணம் பண்ற எண்ணத்துல இருக்கோம். இது புரியாம நீங்க அவதான் உங்காத்து மாட்டுப் பொண்ணுங்கற மாதிரி ஊருக்குள்ளே பேசிண்டு திரியாதேள்.

நான் பேசிண்டுதாண்டி இருப்பேன்னா தாராளமா பேசிக்கோங்கோ. அதைப்பத்தி எங்காத்துல யாருக்கும் லவலேசமும் கவலை கிடையாது. அதே சமயம் எங்காத்து மைதிலி. அமர்க்களமா வேற ஒருத்தனுக்கு வாழ்க்கைப்பட்டு வாழப்போறதை நீங்க பார்ப்பேள். யார் கண்டது. அது வரப்போற முகூர்த்தத்துலயே கூட நடக்கலாம்."

என்று சொல்லிவிட்டு பதிலுக்கு வத்சலா என்ன சொல்லப் போகிறாள் என்பதைப்பற்றி துளியும் கவலைப்படாது போனை வைத்துவிட்டாள்.

மைதிலிக்கோ கிறுகிறுவென்று மயக்கம் வரும் போல் இருந்தது.

"மன்னி... என்ன மன்னி நீங்க பாட்டுக்கு என்னென்னமோ சொல்லிண்டிருக்கேள்..."

"என்னென்னமோவா... சரிதான்... நான் இன்னும் எதுவுமே சொல்லலியேடி... ஹூஸ்டன்ல இருந்து போன் வந்ததைப் பத்தியோ அங்க இருக்கற ஸ்ரீவத்சன் தம்பிக்கு பார்த்து வெச்சிருந்த பொண்ணு அந்த ஊர்ல கார் ஆக்சிடெண்டுல செத்துப் போனதையோ நான் எங்க உன்கிட்ட சொன்னேன்?"

அழகாக வட்டம் வரைய ஆரம்பித்தாள் ரேவதி.

"ஹூஸ்டன்ல இருந்து போனா... ஸ்ரீவத்சன் தம்பியா...?"

"ஆமாம்... உங்க போபால் மாமாவான நந்தகுமாரோட பையன்தானே ஸ்ரீவத்சன். அவன் அமெரிக்காவுல ஹூஸ்டன்ல தானே இருக்கான்...?"

"சரி... அவனுக்கென்ன இப்போ?"

''அவனுக்கென்னவா... மரியாதையா அவர்னு சொல்லு. ஆம்படையானா வரப்போறவனை அவன் இவன்னு சொல்ற வழக்கம் வைஷ்ணவ சம்பிராதாயத்துல கிடையாது.''

''ஆம்படையானா... மன்னிffffff...!''

''கத்தாதே... ஸ்ரீதரனை காவிரி கொண்டு போய்ட்டாலும் அவனைப் போல பல மடங்கு பெரிய வரனை உனக்கு காலம் கொண்டுவந்து கொடுத்துருக்கு... அதுக்காக சந்தோஷப்படு...''

ரேவதி அப்படிச் சொல்லும்போதே அந்த இடத்துக்கு சீமாவும் வந்து நின்றான்.

''மைதிலிக் குட்டி நீ பயங்கரமான அதிர்ஷ்டக்காரிடா. உன்னை யாராவது துரதிர்ஷ்டம் பிடிச்சவள்னு சொன்னா அவாளை நிக்கவெச்சு சுடலாம்.''

''அண்ணா நீ விஷயத்துக்கு தயவு செய்து வா...''

''வரேன் வரேன்... நிஜமா ரேவதி எதுவும் உன்கிட்ட சொல்லலியா?''

''சொன்னா ஆனா எனக்குதான் எதுவும் புரியல...''

''சரி இப்ப புரியற மாதிரியே சொல்லிட்றேன்... சீமா சகலத்தையும் கூறி முடித்தான். மைதிலியிடம் குபுகுபுவென கண்ணீர் பீரிட ஆரம்பித்தது.

''என்ன இது இவ அழறா... நான் சந்தோஷத்துல துள்ளிக் குதிப்பான்னுல்ல நினைச்சேன்...''

''அது ஒண்ணுமில்ல... இது ஆனந்தக் கண்ணீர். நீங்க போங்கோ நான் பார்த்துக்கறேன்.''

சீமாவை தள்ளிவிட்டு அறைக் கதவையும் அழுத்தமாக மூடி விட்டு மைதிலி அருகில் வந்தவள், கண்களை சற்று ரௌத்ரமாக விரித்தாள்.

''என்னடி... திரும்ப அந்த ரங்கன் ஞாபகம் வந்துடுத்தா...?''

''அது எப்ப போனது திரும்ப வரதுக்கு?''

''அடிப்பாவி... என்கிட்ட இப்ப பேசினமாதிரியே உன் அப்பா, அண்ணாகிட்ட பேசுவியா?''

''அது என் விருப்பம்.''

''நழுவாதே... இப்ப இந்த வரன் விஷயத்துல என்ன சொல்றே?''

''இப்ப இல்ல எப்பவும் இனி எனக்கு கல்யாணமே வேண்டாம். என்னை விட்றுங்கோ...''

''அடி பாதகத்தி... இந்த ஆத்து மானத்தை கப்பலேத்திட்டுதான் நீ ஓய்வே போல இருக்கே...''

''அதுக்காக மனசுல ஒருத்தனை வெச்சுண்டு உங்களுக் கெல்லாம் பயந்துண்டு இன்னொருத்தனோடு படுக்கறது மட்டும் அசிங்கம் இல்லையா?''

''இல்ல... இப்படி எல்லாம் பேசினா நீ வழிக்கு வரமாட்டே. நான் என் பழைய ஆயுதத்தை கைல எடுக்கறேன்.''

ரேவதி பயமுறுத்தலுக்கு மாறத் தொடங்கினாள். ரங்கன் ஒரு பக்கம் உயிருக்கே போராடிக்கொண்டிருக்கையில் இங்கே இவளுடன் மோதினால் உடைந்து போவோம் என்றும் உணர்ந்த மைதிலி, ''போதும்... நீங்க என்ன சொல்வேன்னு எனக்குத் தெரியும். நான் இந்தக் கல்யாணத்துக்கு சம்மதிக்கலைன்னா உசுரை விட்றுவேன்னுதானே?''

''நான் எதுக்கு உனக்காக சாகணும். நான் சொல்றத கேட்டு உன் அப்பா, அம்மா இரண்டு பேரும்தான் சாவா... பாக்கறியா'' ரேவதி சொடக்கு போட்டபடி கேட்டாள். மைதிலியின் விழிகளில் திரும்பவும் நீர்வீழ்ச்சி ஆரம்பமாயிற்று.

''அப்படிவா வழிக்கு... ஸ்ரீதரன் விஷயத்துல மனசை மாத்திண்டா மாதிரியே இந்த விஷயத்துலயும் நடந்துக்கோ. ஒரு வாரத்துல அமெரிக்கா கிளம்ப வேண்டியிருக்கும். நல்லவேளை உனக்கு பாஸ்போர்ட்டையும் முன்னாடியே எடுத்தாச்சு. எங்களுக்கும் பாஸ்போர்ட் இருக்கு. விசிட்டர்ஸ் விசாவுக்கு அப்ளை பண்ணி விசா வாங்கிண்டு புறப்பட வேண்டியதுதான்.''

உத்தரவு போல போட்டுவிட்டு விலகிப் போனாள்.

★★★

காவிரியின் சவுக்குத் தோப்பு!

புகை ஒரு புறம் வானம் ஏறியபடி இருக்க, அடுக்குப் பானைகளில் சாராயத்தின் கொதி. இரண்டு சவுக்கு மரத்துக்கு இடையில் வலை ஊஞ்சல் கட்டி அதில் படுத்தபடி சிகரெட் பிடித்துக்கொண்டிருந்தான் இடும்பன்.

சாராய அடுப்புகளுக்குத் தேவையான விறகை ரங்கன் தான் பிளந்து கொண்டிருந்தான். கழுத்தில் ஒரு பெரிய வளையம் போட்டு அதில் இரு சங்கிலிகளைச் சேர்த்து இரு கால்களிலும் கட்டி விட்டிருந்தனர். கையிலும் இரண்டு இறுக்கமான வளையங்கள். அதோடு சங்கிலியை சேர்த்துப் பூட்டினால் அந்த நாளைய அரேபிய அடிமைகளைப் பார்ப்பது போலவே இருக்கும்.

ரங்கனின் உடம்பில் நிறைய இடங்கள் கன்றிப்போயிருந்தன. பல இடங்களில் தோல் பிய்ந்து ரத்தம் உறைந்து கிடந்தது. அவனை சித்திரவதை செய்தே வழிக்குக்கொண்டு வந்திருப்பது நன்றாக தெரிந்தது.

அவன் சற்று சோர்வாக விறகு பிளந்தபோது இடும்பனே எழுந்துவந்து முதுகின்மேல் ஒரு சவுக்கு மிளாரால் ஒரு வீறு வீறினான்.

''ஒழுங்காக வேலை செய்... இனி சாகற வரை இதான் உன் வேலை... என்னையா தென்னந்தோப்பைக் கூட்டி அள்ள வெச்சே... மூச... நான் அஞ்சு தலை நாகம்டா...''

சீறியும் முடித்தான். ரங்கனால் முறைக்க மட்டும்தான் முடிந்தது.

இரவு நேரம்!

சக்கரவர்த்தி வேதாந்த தேசிகனின் தயா சதகத்துக்கான விரிவுரையை படித்தபடி இருந்தார் பெரிய வாச்சான் பிள்ளையின் மொழி பெயர்ப்பென்றால் சக்கரவர்த்திக்கு அவ்வளவு பிரியம். அவர் தன்னை மறக்க விரும்பும் போதும் தன்னால் சில முடிவுகளை எடுக்க முடியாத தருணங்களிலும் அடைக்கலம்

புகுவது தேசிகனிடம்தான்... சில நேரங்களில் கம்பராமாயணத்துக் குள்ளும் மனசார நடப்பதுண்டு.

இங்கே இரவென்றால் அமெரிக்காவில் பகல். தொலை பேசியிலும் முன்பே சொன்னதுபோல ஹூஸ்டனில் இருந்து அழைப்பு.

''என்ன மாமா முடிவெடுத்துருக்கேள்... விசாவுக்கான பேப்பர்ஸை எல்லாம் மெயில் பண்ணியிருக்கேன் என்றான்.

சக்கரவர்த்தி ஐயங்கார் ஒரு பெருமூச்சுவிட்டார்.

''என்ன மாமா... எதுக்கு இந்தப் பெருமூச்சு?''

''இங்க அந்த பத்து நாள் காரியம் முடிஞ்சு சுபஸ்வீகாரம் நடந்துடட்டுமே...''

''புரியறது... ஆனா இங்க காத்துக்கிடக்க வழி இல்லையே...''

''அப்ப நீ வேற இடம் பார்த்துக்கோ... என் மனசாட்சி உறுத்தறது'' என்று கூறிவிட்டு போனை வைத்து விட்டார்.

ஒட்டு கேட்டுக்கொண்டிருந்த ரேவதிக்கு கிளவுஸை மாட்டிக் கொண்டு 'ணங்'கென்று ஒரு குத்துசண்டை வீரன் மூக்கில் குத்தியது போல் இருந்தது.

சீமாவுக்கும் முகம் மாறியது.

''அப்பா... என்னப்பா இப்படி ஒரு பதிலை சொல்லிட்டேள்.''

''நான் சரியாதான் சொல்லியிருக்கேன். நீ போய் வேலையை பார். அவாத்து துக்கத்துல நமக்கு நேரடி சம்பந்தம் இல்லாம இருக்கலாம். ஆனா மனோ சம்பந்தம் நிறைய இருக்கு. இது பெருமாள் நமக்கு வைக்கற பரீட்சை. ஸ்ரீதரனை நான் இத்தாத்து மாப்ளையா மனசுக்குள்ள நினைச்சுட்டேன். அப்படிப்பட்டவன் ஆத்மா அலைஞ்சுண்டிருக்கும் போதா என் பெண்ணுக்கு நான் வரன் பார்ப்பேன்? போ... போய் வேலையை பார்.

சாவுக்குத்தான் போகலை... பத்துக்காவது போகணும். தேசிகாச்சாரி வராதேன்னு சொல்லி அவனோட பெருந் தன்மையை காட்டினான். பதிலுக்கு போனாதான் நான் பெரிய மனுஷன்.''

விஷயம் மாடியில் அழுது கொண்டிருந்த மைதிலியின் காது களில் பாய்ந்த போது ஜிவ்வென்று அவளுக்குள் ஒரு புத்துணர்ச்சி. அப்பாவை நினைக்க அவளுக்கு பெருமையாகக் கூட இருந்தது. துள்ளிக்கொண்டு எழுந்தாள். செல்போனை எடுத்துக்கொண்டு வேகமாய் மொட்டை மாடிப்பக்கமும் போனாள். பிருந்தாவைத் தான் கூப்பிட்டாள்.

''பிருந்தா நான்தான்''

''சொல்லு''

நாளைக்கு நாம ரெண்டு பேருமே போய் கலெக்டரை பார்ப்போமா?''

''அப்ப நீ உன் அப்பா மூலமா ட்ரை பண்ணலியா?''

''இன்னிக்கு இந்த வீடு இருந்த நிலையே வேறடி. பகல் பூரா நான் ஒரு பொணமாதான் கிடந்தேன். இப்பதான் எனக்கு உயிரு வந்தது.''

''என்னடி சொல்றே... திரும்பவும் எதாவது பிரச்சினையா?''

மைதிலியும் பிருந்தாவிடம் நடந்ததை சொல்லி முடித்தாள்.

''பரவால்ல மைதிலி... உன் அப்பா ரொம்ப கிரேட். எப்படியோ அந்த அமெரிக்காகாரன் கிட்ட இருந்து நீ தப்பிச்சியே...''

''நீ ரங்கன் விஷயத்துக்கு வா. என்ன பண்ணலாம்?''

''நீயும் நானும் இப்ப என்ன பண்ண நினைச்சாலும் எதுவும் பண்ண முடியாது. அந்த கலெக்டர் டில்லி போயிருக்காராம். அங்க ஏதோ ஐ.ஏ.எஸ் ஆபீசர்ஸ் கான்ஃப்ரன்சாம்.''

''அட நாராயணா... இப்ப என்னடி பண்றது?''

''ஒண்ணும் பண்ண முடியாது. நீ என்ன விஜயசாந்தியா இல்லை. பூலான் தேவியா? கற்பனையாலோ இல்ல நிஜமாலோ சாகசமெல்லாம் பண்றதுக்கு...''

''அந்த கலெக்டர் வந்து ஆக்ஷன் எடுக்கறதுக்குள்ள ரங்கனுக்கு ஏதாவது ஆயிட்டா என்னடி பண்றது?''

''அப்ப ஒண்ணு பண்ணு... நேரா காவிரிக்கு போ. ஒரு பரிசல்ல ஏறிக்கோ. அந்த சவுக்குத் தோப்புக்கும் போ. சினிமால வர்ற மாதிரி அந்த ரங்கனை அங்க இருந்து மீட்டுண்டு போன பரிசல்லயே திரும்பி வந்து சேர்.''

''பிருந்தா நிஜமாவா சொல்றே?''

''அடிப்பாவி... நான் சும்மா ஒரு பேச்சுக்குச் சொன்னேன்டி. இது கூடவா உனக்குப் புரியல?''

''எனக்கென்னவோ அதுதான் இப்போதைக்கு இருக்கற ஒரே வழின்னு எனக்குத் தோன்றது.''

''மைலி... நான் நிஜமாலுமே சும்மாதாண்டி சொன்னேன். இதை நீ சீரியஸா எடுத்துண்டு எதையாவது பண்ணி வைக்காதடி...''

என்றபடியே பிருந்தா போனை கட் செய்தாள்.

ஆனாலும் மைதிலிக்குள் மனம் அடங்க மறுத்தது. துணிச்சலாக தனது அறைக்குள் சென்றவள் தலையணையை வைத்து போர்வையால் மூடி தூங்குவதுபோல செட் செய்து விட்டு மெல்ல கீழ் இறங்கினாள். அப்படியே கொல்லைப் பக்கம் போனாள். போகும்போதே ரேவதி என்ன செய்கிறாள் என்று ஒரு பார்வை பார்த்தாள்.

அவள் டி.வி. சீரியலில் புதைந்திருந்தாள்.

சரியான தருணம்தான். கொல்லையின் கதவை திறந்துகொண்டு வெளியேறினாள்.

தெருவில் பெரிதாய் நடமாட்டவில்லை.

கோவிந்தன் கடை மூடப்பட்டு சாக்கு தொங்கியது. விறுவிறு வென்று நடந்து சாக்கை விலக்கிக்கொண்டு உள் நுழைந்தாள். கோவிந்தன் கையடக்கமான ரேடியோவில் மெல்லிய சப்தத்தில் எஃப்எம் ரேடியோ கேட்டுக் கொண்டிருந்தவன் திடுக்கிட்டு எழுந்தான்.

''என்னம்மா இந்த நேரத்துல...?'' அவன் ரேடியோவை அணைத்தபடியே கேட்டான்.

அவள் வந்த விஷயத்தைக் கூறவும் பிரமிப்போடு பார்த்தாள்.

''அப்படி எல்லாம் அந்த சவுக்குத்தோப்புப் பக்கம் போக முடியாதும்மா. ஆத்துல இன்னிக்கு தண்ணிவேற அதிகம் போகுது.''

''அப்ப நீ உதவி செய்ய மாட்டேன்னு சொல்றே?''

''ஐயோ நான் அப்படிச் சொல்லலை... இது ரொம்ப ஆபத்தான விஷயம். பகல் பொழுதுல அங்க போகவே எல்லாரும் யோசிப்பாங்க'' நீயோ ஐயர் வீட்டுப்பொண்ணு ஒண்ணு கெடக்க ஒண்ணு ஆனா என்னம்மா பண்றது?''

''சரி... நான் போறேன். வாத்யார் தோட்டக்கரைல நிச்சயம் பரிசல் இருக்கும். அதுல ஏறிண்டு போறேன் என்ன ஆனாலும் சரி''

மைதிலி தீவிரம் குறையாமல் திரும்பத் தொடங்கினாள். கோவிந்தனையே அது உலுக்கியது. ''நில்லும்மா நானும் வரேன்'' என்று ஒரு டார்ச் விளக்கையும் எதற்கும் இருக்கட்டும் என்று ஒரு பெடல் ராடையும் எடுத்து இடுப்பில் செருகிக்கொண்டு நிமிர்ந்தான்.

சவுக்குத் தோப்பில் சாராய அடுப்புகள் துணிந்திருந்தன. காற்று பெரும் சப்தமுடன் வீசிக்கொண்டிருந்தது. இரண்டொரு நாளில் வரப்போகிற பௌர்ணமிக்கான நிலவிடம் ஓரம் கடிபட்டது போல ஒரு சிறு மிச்சம்.

அதன் வெளிச்சம் காவிரி ஆற்றின் மேல் பட்டு ஒரு மினு மினுப்பு தெரிந்தது. அதன்மேல் கோவிந்தன் பரிசலை செலுத்திக் கொண்டிருந்தான். அவனுக்குப் பக்கத்தில் மைதிலி.

பரிசலும் ஒருவழியாக தோப்புக்கரையில் வேகமாக மோதி ஒரு சுழற்சியுடன் நின்றது. கோவிந்தன் இறங்கு முன்பே மைதிலி இறங்கி விட்டாள்.

இரவில் அங்கே வழக்கமாக நொண்டி மாடன் என்பவன் தான் தங்குவான். குளிர் தெரியாமல் இருக்க நிறைய குடித்திருப்பான். அதெல்லாம் அவர்களுக்கு கை கொடுத்தது. கோவிந்தன் டார்ச்லைட் ஒளிவட்டத்தோடு ரங்கனை தேடத்தொடங்கினான்.

மைதிலியும் அலைபாய்ந்தாள்.

நல்ல வேளையாக ஒரு மரத்தடியில் சங்கிலிப் பிணைப்போடு சுருண்டு படுத்திருந்தான். அவனை கட்டிய சங்கிலி மரக்கிளையோடு சேர்த்துக் கட்டப்பட்டிருந்தது. ரங்கனிடம் பெரிதாக பிரக்ஞையில்லை. அடிபட்டு மயங்கி விட்டவன் போலதான் கிடந்தான். அவனைத் தொட்ட மைதிலிக்கு மின்சாரம் பாய்ந்தது போல் இருந்தது. 'உடம்பெல்லாம் நெருப்பா கொதிக்கறது...' என்று கிசுகிசு குரலில் கூறினாள்.

''இப்படி சங்கிலியால் கட்டி போட்டுருக்காங்களே இப்ப என்ன பண்றது?'' கோவிந்தனுக்கு விடுவிக்கும் வழி புலனாகவில்லை. மைதிலியோ அருகில் கிடந்த விறகு பிளக்கும் கோடாலியை கவனித்து எடுத்து அந்த மரக்கிளையையே வெட்டத் தொடங்கினாள்!

கோவிந்தன் அவளது வேகத்தைப் பார்த்து பிரமிப்பில் புதைந்து போனான்.

36

'ரங்கமது நம்மனதை கண்ணமுது ஆக்கும்!
தங்கமது போல்மனதில் வண்ணமலர் பூக்கும்...
ரங்கமது நம் கருமம் துலக்கிவிண் சேர்க்கும்!
சிங்கமது சிலிர்த்ததுபோல் உளத்தில் பலம் பெருக்கும்...
ரங்கமது நலம்தந்து நண்ணிதுயர் நீக்கும்!
வங்கமது போல்வளங்கள் வந்துநலம் கூட்டும்?'

பிரமிப்புடன் பார்த்தபடி இருந்த கோவிந்தன் சட்டென்று சுதாரித்து மைதிலியிடம் இருந்து அந்த கோடரியைப் பிடுங்கி தான் வெட்டத் தொடங்கினான்.

ஒருவழியாக கிளை வெட்டப்பட்டு சங்கிலி அதிலிருந்து விடுபட்டது. கோவிந்தன் குனிந்து ரங்கனை தன் தோள் மேல்

தூக்கிப் போட்டுக் கொண்டான். அவனை கட்டிப்போட்டிருந்த சங்கிலியை தன் இடத்திற்குப் போன பிறகுதான் நீக்கிக் கொள்ள முடியும் என்பதை உணர்ந்து அப்படியே ஏறிவந்த பரிசலை நோக்கி நடந்தான்.

வழியில் போதையோடு படுத்திருந்த நொண்டி மாடனின் கையை மிதிக்கும்படி ஆயிற்று. அது அவனை ஒருவனை அலறலோடு எழுப்பி விட்டது.

''ஏய் யாரு... கேக்கேன்ல'' என்று வாய் குழற வாரிச்சுருட்டிக் கொண்டு எழுந்தவன் தோளில் ரங்கனோடு கோவிந்தன் ஓடுவதைப் பார்த்து அதிர்ந்தான். கூடவே ஓடிய மைதிலியும் ஒரு பெண் உருவம் என்கிற வகையில் அர்த்தமானாள். அடுத்த நொடி அவனிடம் போதை இறங்கியது.

ஆனால் இருவரும் யார் என்பது இருளில் அவனுக்குத் தெரிய வில்லை. டார்ச் லைட் வெளிச்சம் கோவிந்தனுக்கு முன்னாலே வழி காட்டியது.

பரிசலும் தெரிந்து அதில் உடம்பைத் தூக்கிப் போட்டவன் பாய்ந்து ஏறினான். மைதிலியும் ஏறிக்கொள்ள நொண்டி மாடனும் நெருங்கி விட்டான்.

''ஏலே திருட்டு மக்கா... எங்கவந்து என்ன காரியம்டா பண்றீங்க. இது இடும்பன் கோட்டைடா...'' என்று கத்திக் கொண்டே தண்ணீரில் நடந்து வந்தால் பிடிக்க முடியாது என்பதனால் பாய்ச்சலாய் பாய்ந்து நீந்தி வந்து பரிசலின் ஓரப் பக்கத்தைப் பிடித்து இழுத்தான்.

மைதிலிக்கு பகீர் என்றது.

''அம்மா அவனைத் தள்ளிவிடு... நான் நீரோட்டத்துக்கு போயிடுறேன்'' என்று கோவிந்தன் எதிர்த் திசையில் துடுப்பைப் போட்டான்.

மைதிலி அவன் கையை விடுவிக்க முயன்றாள். அப்போது அவன் அவள் கையைப் பிடித்து அவளை தண்ணீருக்குள் இழுக்க முயன்றான்.

அவளுக்குள் மின்னலைப் போல ஒரு எண்ணம் மிக வேகமாய் குனிந்து அவன் கையை கடுமையாக கடிக்கத்தொடங்கினாள். அவனும் அலறியபடி கையைவிட்டான். அடுத்த நொடி பரிசல் ஒரு வேகமான வட்டச் சுற்றோடு நீரோட்டத்தில் கலந்து ஓடத்தொடங்கி விட்டது. அவனிடம் ஏமாற்றம் மிகுந்த அதிர்ச்சிப் பார்வை!

அந்தப் பரிசல் காவிரியின் கரையோரமாக தேங்கி நின்றது.

''இது எந்த இடம் கோவிந்தா?''

''யாருக்குத்தெரியும்... இங்க இறங்கி ரோட்டுப் பக்கம் போவோம். போறவர்ற வண்டியை கைகாட்டி நிறுத்தி தப்பிக்க பாப்போம்.''

''இப்படி சங்கிலியும் கையுமா இருக்கற ரங்கனை வண்டிக்காரா ஏத்துவாளா?''

''முதல்ல சங்கிலியை கழட்டி எறிவோம். அப்புறம் அம்மாடி நீ வந்தது தெரியாம வீட்டப் பாக்க போய்ச் சேரு. ரங்கனை இனி பாதுகாத்துக்க வேண்டியது என் பொறுப்பு.''

இருவரும் பேசியபடியே பரிசலில் இருந்து இறங்கி ரங்கனையும் தூக்கினார். ரங்கன் நழுவி தண்ணீரில் விழுந்தான். அதுவும் நல்லதாகப் போயிற்று. அவனிடம் மயக்கம் கலைந்து பிரக்ஞை ஏற்படத் தொடங்கிற்று.

''யாரு... யாரு... நான் எங்க இருக்கேன்?'' என்று கேட்கவும் தொடங்கினான்.

''ரங்கா... ரங்கா... நான் கோவிந்தன்...''

''கோ... கோவிந்தனா... கோவிந்தா நீ எப்படி என் கூட.... நாம இப்ப எங்க இருக்கோம்?''

''நான் மட்டுமில்ல ரங்கா... இதோ பார் மைதிலிய...!''

ரங்கன் மைதிலியைப் பார்த்து மேலும் அதிர்ந்தான்.

''அப்ப நான் இந்த இடும்பன் கிட்ட இல்லையா? தப்பிச் சிட்டேனா?''

"பின்ன... எல்லாம் மைதிலியாலதான் நீ நட, நான் விவரம் சொல்றேன். முதல்ல சங்கிலியை கழட்டி எறியணும்."

என்றபடியே மூவரும் காவிரியின் மணற் கரைவெளியில் நடந்தனர்.

ரங்கனுக்கு அந்த நிலையிலும் மைதிலி அங்கே இருப்பது நெருடியது.

"எப்படிம்மா இப்படி தனியா வந்தீங்க... வீட்டுக்கு தெரிஞ்சுதான் வந்தீங்களா... இல்ல தெரியாமலா?"

"என்னப்பா இது கேள்வி. நீ இப்படி இடும்பன்கிட்ட சிக்கிகிட்டு இருக்கறது தெரிஞ்சு போலீஸுக்குப் போனேன். அவங்களே உதவிக்கு வரலை. மத்தவங்க மட்டும் எப்படி வருவாங்க. மைதிலி இப்ப உன் வரைல சத்தியவான் சாவித்திரி மாதிரி... அந்த இடும்பன்தான் எமன்..."

"போதும் நிறுத்து கோவிந்தா... எனக்கு என்ன வேணா ஆயிட்டுப் போகட்டும். அதனால எது கெட்டுடும்? ஆனா மைதிலியம்மா விஷயம் அப்படியா?

நிச்சயதார்த்தம் முறிஞ்சு இவங்க வீடே துக்கத்துல இருக்கு. இந்த நிலைல இப்படி நடு ராத்திரி எனக்காக ரிஸ்க் எடுத்து தெரிஞ்சா இவங்க வாழ்க்கை என்னாகும்?"

"நான் சொன்னேன் ரங்கா... ஆனா மைதிலி கொஞ்சம்கூட கேட்கல. இப்ப என்ன கெட்டுப்போச்சு. அதான் தப்பிச்சுட்டோம்ல...?"

"மண்ணாங்கட்டி எனக்கு இப்ப இவங்க வீட்டுக்கு நல்லவிதமா போய்ச் சேரணும். மணி என்ன ஆச்சு?"

"நிச்சயம் இரண்டு இருக்கும்..."

"நாலுமணிக்கு பால்காரன் வரதுக்குள்ள இவுங்கள நாம வீட்டுல சேர்க்கறோம்."

"ரங்கா நீ இருக்கற நிலைல முடியுமா?"

"எனக்கென்ன? அதான் தப்பிச்சாச்சே... இனி என்ன எதிர்க்க அந்த இடும்பனே வரட்டும் அவன் முதுகெலும்பை முறிச்சிடு

வேன்" என்றபடியே வலிந்து சங்கிலிக்கட்டை அவிழ்த்து அதை தோள்மேல் போட்டுக்கொண்டான்.

"போதும்... நீங்க ஒண்ணும் எனக்காக இப்படி கஷ்டப்பட வேண்டாம். நான் எப்படியாவது ஆத்துக்குப் போய்ப்பேன். யாராவது கேட்டாலும் எதையாவது சொல்லி சமாளிச்சுக்கறேன். நீங்க இன்னொரு தடவை அந்தக் கடங்காரன் கைல சிக்கிடக் கூடாது. நாளைக்கே நம்ம கலெக்டர் டெல்லில இருந்து திரும்பின நிலைல அவனைப் பிடிச்சு உள்ள போட்றதுதான் என் முதல் வேலை..."

"அம்மா தயவு செய்து நீங்க எனக்காக எதையும் செய்யாதீங்க. அதுக்கு அப்புறம் வேற அர்த்தம் வந்துடும் சொன்னா கேளுங்க."

"என்ன அர்த்தம் வரும்?" மைதிலி அவன் சொன்னதை அழுத்தமாக பிடித்துக்கொண்டு திருப்பிக் கேட்டாள். அவன் அவள் அப்படிக் கேட்பாள் என்று எதிர்பார்க்கவில்லை. தடுமாறினான். அதற்குள் மணல்வெளி முடிந்து தார்ச்சாலை வந்து விட்டது. தார்ச்சாலைமேல் மைல்கல் ஒன்றும் தெரிந்தது. அதன் மேல் சாலையில் வேகமாக சென்றபடி இருந்த லாரி ஒன்றின் ஹெட்லைட் வெளிச்சம் படவும் 13 கிலோ மீட்டர் தூரத்தில் ஒரு ஊர் இருப்பது தெரிந்தது.

அதைப் பார்த்த வேகத்தில் "நாம இங்க டோல்கேட் கிட்டதான் கரை ஒதுங்கியிருக்கோம்" என்றான் உற்சாகமாய்...

"அப்ப விறுவிறுன்னு நடந்தேகூட போய்டலாம்னு சொல்" என்றான் கோவிந்தன்.

"நாம நடப்போம். ஆனா இவங்க நடக்கக் கூடாது. வழில ஆட்டோ பிடிச்சு ஏத்தி விட்ருவோம்..."

"நான் ஆட்டோல ஏற்றது இருக்கட்டும் நான் கேட்ட கேள்விக்கு பதிலே சொல்லலியே" மைதிலி அவனை விடுவதாக இல்லை.

★★★

மணி ஐந்தாகி விட்டது! தெருவின் ஒரு இருட்டான பகுதியில் ஆட்டோவை நிறுத்தி இறங்கிக்கொண்டு கையை கட்டியபடியே

நடக்க ஆரம்பித்தாள் மைதிலி. தெருவில் அங்கங்கே ஒரு வீடுகளில் அந்த வீட்டுப் பெண்கள் வாசல் தெளித்து கோலம் போட்டபடி இருந்தனர்.

மைதிலிக்கு தான் ஒரு அசாத்யமான காரியத்தில் இறங்கி அதில் வெற்றியும் பெற்றுவிட்டதில் மனம் கொள்ளாத உற்சாகம்!

யாராவது பார்த்து விசாரித்தால் என்ன பதில் சொல்வது என்கிற கவலையே இன்றி நடந்தாள். சற்றும் எதிர்பாராத விதத்தில் "யாரது மைதிலியா?" என்று ஒரு ஆண் குரல் ஒலித்தது.

வெட்டியது போல் தேங்கி நின்றாள்.

அவளை ஒரு உருவம் நெருங்கியது. அருகில் வந்த பிறகே தெரிந்தது, அது தேசிகாச்சாரி! அவர் கையில் பால் பாக்கெட் உள்ள ஒயர் கூடை.

"மா...மா...மாமா."

"மைதிலி... என்னம்மா இது... இந்த நேரத்துல ஆட்டோல எங்க போய்ட்டுவரே?"

"அது... அது..." அவளால் பளிச்சென்று ஒரு பதிலை அவர் வரையில் சொல்ல முடியவில்லை. இறுக்கமான மௌனத்தோடு நடுங்க ஆரம்பித்தாள்.

"என்னம்மா... நான் சாதாரணமாத்தானே கேட்டேன். எதுவும் பேசாம நின்னா எப்படி. ஆமா ஏன் உன் தலை எல்லாமும் கலைஞ்சு புடவையும் ஈரமா இருக்கு...?"

"ஆ... அது காவிரிக்கு போய்ட்டு வரேன் மாமா..."

"ஆட்டோவுலயா?"

"ப்ளீஸ் மாமா இதுக்கு மேல என்ன எதுவும் கேக்காதேள். மன்னி முழிச்சுக்கறதுக்குள்ள நான் ஆத்துக்கு போகணும்."

"அப்ப நீ ஆத்துக்குத்தெரியாம எங்கயோ போய்ட்டு வரேன்னு சொல்லு..."

"அ... ஆமா... நான் உங்களுக்கு அப்புறமா விவரமா சொல்றேன்... இப்ப தயவு செய்து என்னை பார்த்ததா காட்டிக்காதேள்..."

"நீ ஒரு நல்ல குழந்தைம்மா. உன்னை நான் நம்பறேன். போகட்டும் தைரியமா என் கூட வா. உன்னை நானே ஆத்து வாசல்ல விட்டுட்டுப் போறேன். யாராவது கேட்டா எங்காத்துக்கு என்ன பாக்க வந்தே, இல்ல நீயும் பால் வாங்க வந்தேன்னு சொல்லிக்கிறேன்."

தேசிகாச்சாரி அவள் வரையில் அப்படியே மாறிப்போனார். அவளுக்கும் அவர் பதில் பெரும் ஆறுதலாக இருந்தது. இருவருமாக தெருவில் நடந்தனர்.

நல்லவேளை பெரிதாக யாரும் அவர்களை உணரவில்லை. மைதிலி வீட்டு வாசலை அடையவும் "ஜாக்கிரதையா போ... நான் வரேன்" என்றபடியே அவர் விலகிக்கொள்ளத் தொடங்கினார்.

மைதிலியும் பக்கவாட்டுச் சந்துக்குள் புகுந்து கொல்லைப்புற கதவு வழியாக நுழைந்து சத்தமின்றி மாடிப்படி ஏறி தன் அறைக்குள்ளும் நுழைந்தவளாக அறைக்கதவைத்தாழிட்டாள்.

அப்பாடா என்று இருந்தது!

ஈரப்புடவையை அவிழ்த்து வேறு புடவைக்கு மாற ஆரம்பித்தாள். தான் கேட்ட கேள்விக்கு இறுதிவரை ரங்கன் பதில் சொல்லாததையும் ரசித்தாள்.

அவ்வளவு வலியிலும் காயத்திலும் கூட தனக்கு எதுவும் ஆகிவிடக்கூடாது என்று அவன் பயந்து அதற்கேற்ப செயல்பட்டு ஒரு ஆட்டோக்காரனைப் பிடித்து அங்கேயே பணத்தையும் கொடுத்து அனுப்பி வைத்ததை நினைத்தபோது கண்களில் கண்ணீர் துளித்தது.

ஒரு பெண்ணுக்கு இப்படி ஓர் ஆண்மகனைத்தானே பிடிக்கும்? இவன் முன்னால் அவள் வரையில் ஏழு உலகமும் ஈடாகுமா என்ன...?

இரண்டு கன்னத்திலும் கை வைத்தபடி ஆற்றின் நீரோட்டத்தையே பார்த்தபடி அமர்ந்திருந்தான் நொண்டி மாடன். காபியும் வடையுமாய் பரிசலில் அவன் சகாக்கள் வருவார்கள். அவசியத்தை பொறுத்து இடும்பனும் வருவான். அன்று இடும்பனே வந்தபடி இருந்தான். பரிசல் கரை ஒதுங்கும் போதே

நொண்டிமாடன் தவிப்புடன் எதிரில் வருவதைப் பார்த்து விட்டான்.

"என்னடா?"

"தப்பு நடந்துடுச்சு அண்ணே..."

"என்னடா சொல்றே?"

நொண்டிமாடன் இரவுச் சம்பவத்தைச் சொல்லி முடித்தான். இடும்பனுக்கு யாரோ அவன் அடிவயிற்றைக் குத்திக் கிழித்தது போல் இருந்தது.

நின்று கொண்டிருந்த நிலையில் நொண்டி மாடன் மார்பில் தன் வலது காலால் ஒரு உதை உதைத்தான். அவனும் அப்படியே பின்னோக்கிப் பறந்து போய் ஓடும் ஆற்று நீருக்குள் விழுந்து தத்தளிப்போடு மூழ்கி எழுந்தான்.

இடும்பன் வெட்டப்பட்ட மரக்கிளை அருகில் போய்ப் பார்த்தான். கோடரி ஒரு மூலையில் கிடந்தது.

நொண்டி மாடனே திரும்பவும் எழுந்து வந்தவனாக, "அந்தப் பொண்ணு யாருன்னு இருட்டுல சரியா தெரியலண்ணே. ஆனா அந்த சைக்கிள் கடைக்காரனைச் சேர்ந்த பொண்ணு இல்ல அது. படிச்ச பொண்ணாதான் தெரிஞ்சா, என் கையையும் கடிச்சிட்டா பாருண்ணே..." என்று கடிபட்ட இடத்தையும் காட்டினான். அது பருத்து வீங்கிப் போயிருந்தது.

"போடா பொறுக்கி மவனே... போயும் போயும் ஒரு பொட்டச்சி கிட்ட போய் கடி வாங்கிட்டு நிக்கிறியேடா. அது யார்னு எனக்கு தெரிஞ்சு போச்சுடா... அந்த தோப்புக்கார ஐயர் பொண்ணாதான் இருக்கணும். அன்னிக்கு நான் தோப்புல மட்டை அள்ளினப்போ அவதான் இருந்தா. அவன் என்னை துப்பாக்கி முன்னால வேலை வாங்கினத ரொம்பவே ரசிச்சா. அவளாத்தான் இருக்கணும். அவளாத்தான் இருக்கணும்..." என்று திரும்பத் திரும்ப அவன் சொல்லிக்கொண்டதில் மைதிலியை எரித்து விடும் ஒரு ஆத்திரம் ஒளிந்திருந்தது.

37

அன்றொருத்தி மலர் பறித்து
மாலை சூடி மகிழ்ந்தாள்...
அரிதான மானுடத்தின்
அழகான மங்கையவள்
ஹரியான மாதவனின்
திருவடியை அணைந்தாள்!
ஆண்டவனேயானாலும் ஆயிழையார்
காதல் அவனியையே வெல்லும்
காதலொன்றே காலத்தால்
பலகதைகள் சொல்லும்!

டி.எஸ்.பியின் பங்களா! ஒரு ஆட்டோவில் கோவிந்தனும் ரங்கனும் போய் இறங்கினர். செக்யூரிட்டி போலீஸ்காரர் ரங்கனை சங்கிலிகளோடு சேர்த்துப் பார்த்து மிரண்டு போனார்.

"ஐயாவைப் பாக்கணும்."

"நீங்க யார்... இது என்ன கோலம்?"

"எல்லாத்தையும் அவர்ட்ட சொல்லிக்கறோம். பத்திரிகைக் காரங்களுக்குத் தகவல் தந்துட்டேன். அவங்கல்லாம் வந்து கிட்டிருக்காங்க."

ரங்கன் சொல்லும்போதே மோட்டார் பைக்கில் ஒரு லாப்டாப் பேக் தோளில் தொங்கிய நிலையில் உள் நுழைந்திருந்தார் ஒரு தினசரி ஆங்கில நாளிதழின் ரிப்போர்ட்டர்!

செக்யூரிட்டி போலீஸ்காரருக்கு விஷயம் சற்று அசாதாரண மானது என்பது புரிந்துவிட்டது. அடுத்த பத்தாவது நிமிடம் டி.எஸ்.பியே நேரில் ரங்கனை அழைக்க கோவிந்தனும் உடன் சென்றான். நடந்ததை எல்லாம் அப்படியே விளக்கத் தொடங் கினான். ரங்கனின் உடல் காயங்களை எல்லாமும் காட்டினான் பத்திரிகையாளர்களும் படம் எடுத்துக்கொண்டனர்.

கோவிந்தன் தான் மட்டும் சென்று ரங்கனை மீட்டு வந்தால் சூறி பரிசல் காவிரிக் கரையில் ஒரு இடத்தில் கிடப்பதைப் போல் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம் என்றான்.

''ஐயா... எங்க ஏரியா ஸ்டேஷனுக்குப் போய் நான் கம்ப்ளைண்ட் கொடுத்தப்ப எதையுமே காது கொடுத்து கேட்டுக்கலைங்க. அவங்க இடும்பன் கிட்டகாசு வாங்கிட்டா தான் எனக்குத்தோணுது. இப்ப நீங்க ஒரு படையோட போய் அந்த சவுக்குத்தோப்புல இடும்பனை சாராய அடுப்புங்களோட அப்படியே வளைச்சுப் பிடிச்சுடலாங்க'' என்ற கோவிந்தனிடம் 'ஷ்யூர்... ஷ்யூர்...' என்று உறுதியளிப்பதைத் தவிர வேறு வழியே இல்லை டி.எஸ்.பிக்கும். அதற்குப் தோதாக உத்தரவுகள் பறக்க ஆரம்பித்தன. ஒரு நியூஸ் சேனல் கேமரா மேன் அப்போதே அந்த சவுக்குத்தோப்பு நோக்கி தான் வந்த காரில் கிளம்பி விட்டார். இனி இடும்பன் தப்பிப்பது என்பது அவ்வளவு சுலபமில்லை என்றாகி விட்டது!

பெட்டியில் துணிமணிகளை வைத்து அடுக்கிக் கொண்டிருந்தான் ராம். தேசிகாச்சாரி கவனித்தபடியே அருகில் வந்தார்.

''என்ன மாப்ள ஊருக்குக் கிளம்பிட்டேளா?''

''ஆமாம் மாமா...''

''அப்ப பத்துக்கு இருக்க முடியாதுன்னு சொல்லுங்கோ...''

''ஆமாம் மாமா உஷாவை விட்டுட்டுப் போறேன்... அவ ஒரு மாசம் கூட இருந்துட்டு வரட்டும்.''

''சரி மாப்ளை... அப்புறம் உங்க இஷ்டம்.''

தேசிகாச்சாரி விலகிக்கொள்ள உஷா மொட்டை மாடியில் காய்ந்திருந்த அவன் வேட்டியில் ஒன்றை மடித்து எடுத்து வந்தவளாக நீட்டினாள். அவன் அதையும் வாங்கி பெட்டியில் வைத்தவனாக ''உஷா கிளம்பு... நான் புறப்பட்றதுக்கு முந்தி அந்த ரங்கனைப் பார்த்து நன்றி சொல்லிக்க விரும்புறேன்'' என்றான். எதேச்சையாக அந்தப் பக்கம் வந்த வத்சலா காதுகளில் அது விழவும் அவள் கழுத்தில் பாம்பொன்று விழுந்தது போல் ஒரு அதிர்ச்சி!

வத்சலா முகம் மாறுவதை உஷாவும் கவனித்தாள். ராம் எதிரில் ரங்கனைச்சந்தித்து நன்றி சொல்ல சம்மதித்த உஷா, அவன் விலகவும் வத்சலாவிடம் சென்று ''ஏம்மா ரங்கன் பேரை எடுக்கவும் உன் முகம் மாறிடுத்து?'' என்று கேள்வியை முன் வைத்தாள்.

''ஆமாம் பெரிய்ய ரங்கன்...''

''அவன் பெரிய்ய ரங்கன் தாம்மா... என் கழுத்துல தாலி இருக்கறதே அவனால தானேம்மா...?''

''அதுக்காக... அவனைப் பார்த்து பாதபூஜை பண்ணி சேவிக்கப்போறியா?''

''ஏம்மா இப்படி எரிஞ்சு விழறே. அவன் மேல உனக்கு அப்படி என்ன கோபம்?''

கச்சிதமாக அப்போது அருகில் வந்த தேசிகாச்சாரி ''நீ போ உஷா... போய் உன் வேலையை பார் உங்கம்மாக்கு புத்ர சோகத்துல என்ன பேசறோம்கறதே தெரியல...'' என்றார். அவளும் விலகிக்கொள்ள வத்சலா தேசிகாச்சாரியை ஒரு அனல் பார்வை பார்த்தாள்.

''எதுக்குடி இப்படி முறைக்கறே?''

''நான் என்ன பேசறேன்னு தெரியாமப் பேசறேனா?''

''பின்ன... இப்பக் கூடவா உனக்கு புத்தி வரலை? ஒரு வாரிசை தவிக்க விட்ட பாவம் தாண்டி இருந்த வாரிசை கொண்டு போயிடுத்து... ஒரு புள்ளையா அவனை நான் இந்த நிமிஷம் ஏத்துக்கலேன் னாலும் அவன் பிள்ளையா இருந்து அவன் தங்கையோட திருமாங்கல்யத்தைக் காப்பாத்திக்கொடுத்திருக்கான். அந்த நன்றி கூட இல்லாம உஷாகிட்ட அவனை பொணந்தூக்கிங்கறே. நான் தெரியாமத்தான் கேக்கறேன்... அவன் அப்படி ஆனதுக்கு உண்மையான காரணம் யாருடி நாமதானே?''

''நாமளா... பாவி மனுஷா! பாவி மனுஷா! தப்பப்பண்ணினது நீர். இதுல என்னை கூட்டு சேர்த்துக்கறீரா?''

''உனக்கு பயந்துண்டுதாண்டி அந்தக் தப்பையே
பண்ணேன். இந்த நிமிஷம் நீ தானேடி தடையா இருக்கே
''அப்போ ஒரு முடிவை எடுத்தாச்சன்னு சொல்லுங்கோ
''சேர்ந்தே எடுப்போம் வத்சலா. இவ்வளவு நாளா
தப்புக்குப் பரிகாரம் பண்ற மாதிரி ''ரங்கன் எங்க
ரங்கன் நான் பெத்த புள்ளை''ன்னு தெருத்தெருவா
சொல்லிண்டு வரேன், நீயும்கூட வாடி... ஸ்ரீதரன்
அவனை இனி வைப்போம். பிள்ளை இருந்தும் இல்லாம
கொடுமை போதுண்டி. சொன்னா கேளுடி...''

தேசிகாச்சாரி கெஞ்சி வழிந்தார்.

வத்சலாவிடம் அனல் பார்வை தொடர்ந்தது. பெருமூச்
ஜல்லிக்கட்டுக் காளையிடம் இருந்து வெளிப்படுவது போ
வெளிப்பட்டது.

விறுவிறுவென்று உள்ளே சென்றாள். திரும்பி வந்தபோ
அவள் கையில் எலி பாஷாணம் இருந்தது.

''நீங்க மட்டும் அவன்தான் உங்க பிள்ளைங்கற ரகசியத்
வெளிய சொன்ன அடுத்த நொடி இந்த பாஷாணம் என் வயித்
குள்ள போயிடும். இது ஒண்ணும் பூச்சாண்டி காட்றதுக்காக நா
சொல்ல... இது சத்தியம்'' என்றாள் வத்சலா.

தேசிகாச்சாரிக்கு நின்ற இடத்தில் நிலம் பிளந்து அதனுள் அவ
விழத் தொடங்கிவிட்டது போல இருந்தது!

மைதிலியிடம் நல்ல உற்சாகம்!

ரேவதி அவளின் உற்சாகமான நடவடிக்கைகளை கவனித்துக்
கொண்டேதான் இருந்தாள். அவள் சந்தோஷமாய் இருக்கும்
தருணங்களில் சுடிதார் அணிந்து கொள்வாள். ஊஞ்சலில் அமர்ந்து
கொண்டு வீணையையும் எடுத்து மடிமேல் வைத்துக்கொண்டு
வாசிக்க ஆரம்பித்து விடுவாள். சமயங்களில் சக்கரவர்த்தி அருகில்
இருந்து 'சபாஷ்...பிரமாதம்' என்று வார்த்தைகளில் கைகளையும்
தட்டி ஊக்கப்படுத்துவார்.

அன்றும் அப்படி நிகழும்போல இருந்தது.

பூஜை அறையில் இருந்தது வீணை!

ஒரு கன்னிப்பெண் சுவரில் சற்றே சாய்ந்தபடி ஒரு காலில்
நின்று கொண்டிருப்பதை போல அதுவும் சுவரில் சாய்த்து
நிறுத்தப்பட்டிருந்தது. மேலே ஒரு பழைய பத்தாறு வேஷ்டி
விரித்துப் போர்த்தப்பட்டிருந்தது. அதை எடுத்து ஒரு உதறு உதறி
நான்காக மடித்து வைத்துவிட்டு வீணையை மிக பதவிசாக ஹால்
பக்கம் எடுத்து வந்து ஊஞ்சல் மேல் வைத்து அதன் விஞ்சைகளை
சரிபார்த்தாள் மைதிலி. தளர்ந்திருந்த தந்திகளை முறுக்கேற்றி
விரல் நகத்தால் நிமிண்டி நாதம் வரும் விதத்தை உணர்ந்து
வாசிப்பதற்கும் தயாரானாள். சக்கரவர்த்தியும் அருகில் வந்து
பிரம்பு நாற்காலியில் அமர்ந்து கொண்டார். வெற்றிலைப்
பெட்டியை திறந்தபடியே கேட்டார்.

''என்னடா வீணை வாசிக்கப் போறியா?''

''ஆமாம்ப்பா... ரொம்ப நாளாயிடுத்து'' வாசிக்கணும்போல
இருக்கு.''

''நன்னாவாசி... எனக்கும் விச்ராந்தியா உன்வாசிப்பை
கேக்கணும்போல இருக்கு...'' என்றபடியே வெற்றிலை முதுகில்
சுண்ணாம்பைப் பூசி வாயண்ணத்தில் அந்த மடித்த வெற்றிலையை
உள்தள்ளி பற்களால் வதக்கத் தொடங்கினார்.

மைதிலி வீணை மீட்டத் தயாராகி விட்டாள். முன்னதாக
அவளை சீமா கவனித்து ஆச்சரியப்பட்டான்.

''மைதிலி... என்ன இன்னிக்கு சுடிதார்... உன் ஃப்ரெண்ட்ஸ்
யாராத்துக்காவது போகப்போறியா?'' என்று அவன் கேட்டதற்கு
ரங்கனை சந்திக்க வெளியே செல்ல இருப்பதைத் உத்தேசித்து,

''ஆமாம்... ரேணுகாவுக்கு பர்த்டே தில்லை நகர்வரை
போய்ட்டுவர வேண்டியிருக்கு'' என்றாள் வீணையை மடிமேல்
வைத்து பொசிஷன் பார்த்தபடியே.

''நினைச்சேன்... நீ சுடிதார் போட்டுண்டு இருக்கும்போதே...''
என்றபடியே அவனும் ஆபீஸ் கிளம்புவதில் மும்முரமாய்
இருந்தான்.

ஸ்ரீசூரணத்தைக் குழைத்து இட்டுக்கொள்ளும்போதெல்லாம் அவன் வரையில் சற்று கோணல் தட்டும் சக்கரவர்த்தி அவனை கவனித்தவராக "இத்தனை வருஷமாச்சு... திருமண் இட்டுக்கறது உனக்கு வசப்படல பார். என்ன ஸ்ரீவைஷ்ணவனோ நீ." என்பார். எனவே அவருக்கு பயந்து கொண்டே மறைவாகப் போய்தான் இட்டுக் கொள்வான்.

அன்றும் அவன் ஓரமாய் ஒதுங்கிட...

மைதிலி வீணை வாசிக்க தொடங்கி விட்டாள். வசந்த ராகத்தில் விரல்கள் விளையாடத் தொடங்கிவிட்டன. ரேவதி வீணையை உடைத்து வென்னீர் அடுப்பில் போட்டுவிட்டால் தேவலை போல் இருந்தது.

"அமெரிக்காகாரன் இல்லன்னு ஆன உடனேயே பொண்ணு தூக்கியை நினைச்சு குஷியாய்ட்டா போல இருக்கு. ஆனா நான் ஒருத்தி இருக்கறவரை அது எப்படி நடந்துட்றதுன்னு பாக்கறேன்" என்று அவள் மனதுக்குள் வேறுவிதமான எண்ண ஓட்டங்கள்.

அப்போதுதான் சீமாவின் செல்போனிடமும் சிணுங்கல்!

கையை நீரால் கழுவியபடியே வந்து செல்போனை எடுத்து திரையைப் பார்த்தான். ஐ.எஸ்.டி. கால்...!

"திரும்பவும் ஸ்ரீவத்சன்கிட்ட இருந்து போன்..." என்றபடியே பட்டனை அழுத்தினான். அது ரேவதி காதில் விழுந்து அவளும் அருகில் வந்து நின்றாள்.

"ஹலோ..."

"சீமா நான் ஸ்ரீவத்சன்."

"சொல்லுப்பா... தெரியறது..."

"என்ன சீமா உன் அப்பா அன்னிக்கு அப்படிச் சொல்லிட்டார்...?"

"எனக்கும் சங்கடமாதான் இருக்கு. ஆனா அவர் மனசாட்சி அது இதுன்னு பேசும்போது என்னால என்ன பண்ண முடியும் சொல்லு."

"அப்ப முகூர்த்தத்தை தள்ளி வெச்சுண்டா ஆட்சேபணை இல்ல தானே?"

"ஒரு ஆட்சேபணையும் இல்ல. நீயும் உன் தம்பியும் எப்படி யாவது ஒரு மாசம் லீவை போட்டுட்டு இங்க கிளம்பி வாங்கோ. திருப்பதில கல்யாணம் பண்றதுன்னா முகூர்த்த நாளே பார்க்கத் தேவையில்லை. அங்கவெச்சு கல்யாணத்தை முடிப்போம்."

"சரி... நானும் எப்படியாவது லீவு போட்டுட்டு தம்பியோட கிளம்பி வரேன். எனக்கு உக்காத்து சம்பந்தம்தான் பெருசு. அதை நான் விடத் தயாரா இல்லை."

ஸ்ரீவத்சன் பால்போல பொங்கி வழிந்து போனையும் பேசி முடித்தான்.

அருகில் இருந்து கேட்டுக்கொண்டிருந்த ரேவதி முகத்தில் ஒரே ஜாஜ்வல்யம்!

"என்னன்னா... ஸ்ரீவத்சன் ஒரு மாசம் ஆனாலும் பரவால்ல... மைதிலிய பண்ணிக்கறோம்னு சொல்றாரா?"

"இல்லடி... நான்தான் அப்படி சொன்னேன். அவனும் சரின்னுட்டான். அவாளை நேர்ல கிளம்பிவரச் சொல்லிட்டேன் சரிதானே?"

"என்ன கேள்வி இது... இதுதான் சரியான பதில். உங்களுக்கு திருஷ்டி சுத்தி போடணும்னா..."

"மைதிலிய இந்த ஆத்தை விட்டு அனுப்பறதுல உனக்கு அவ்வளவு ஆனந்தம்."

சீமா சிரித்தபடியே அவளுக்குள் ஊசியை செருகினான். வலித்தாலும் அவள் காட்டிக்கொள்ளவில்லை.

"போய் முதல்ல அப்பாட்ட சொல்லுங்கோ..."

"இல்ல இப்ப வேண்டாம். நான் சாயந்தரமா பேசிக்கறேன். நீ மைதிலி கிட்ட மட்டும் சொல்லி வை. அப்பா கிட்ட அவசரப் பட்டு பேசி எடமொடக்கா எதையாவது பண்ணி வைக்காதே. நான் பக்குவமா எப்படிச் சொல்லணுமோ அப்படி சொல்லிக் கிறேன். இந்தத் தடவை மைதிலி கல்யாணம்கறது நடந்தே

தீரணும். அதுல ஒரு சின்ன பின்னடைவும் வந்துடக் கூடாது. ஞாபகத்துல வெச்சுக்கோ...''

பாவம் மைதிலி... அவளது சந்தோஷத்துக்கு ஆனாலும் அம்ப ஆயுள்!

அப்போது வீட்டு வாயிலுக்கு ரங்கனும் வந்திருந்தான். உடம்பில் அங்கங்கே கட்டு போடப்பட்டிருந்தது. கூடவே கோவிந்தன்! அவர்கள் இருவரையும் கூட மைதிலியின் வீணை இசை வரவேற்றது.

''உன் ஆள்தான் வாசிக்குது...'' என்று கோவிந்தன் ரங்கன் காதைக் கடித்தான்.

''வாயக்கழுவு கோவிந்தா. அது தேவதை'' என்று பதிலுக்கு முறைத்தான் ரங்கன்.

ஜானகி அவர்களைப் பார்த்துவிட்டு சக்கரவர்த்தியிடம் சென்று ''ரங்கன் வந்து நிக்கறான் வாசல்ல...'' என்றாள். மைதிலி அடுத்த நொடி வாசிப்பை நிறுத்தினாள்.

''உள்ள வரச்சொல்லு...'' என்று சக்கரவர்த்தியும் நிமிர்ந்து அமர்ந்தார்.

''உள்ற வாப்பா...'' என்று ஜானகியும் அழைத்தாள்.

''இல்லம்மா...சாமியை வெளிய வரச்சொல்லுங்க'' என்று அவனும் நெளிந்தான்.

''அவங்களே கூப்பிடும்போது உனக்கெதுக்கு இந்த தாழ்வு மனப்பான்மை. வா உள்ளே போவோம். நடந்த அவ்வளவையும் அய்யங்காரும் தெரிஞ்சிக்கட்டும்'' என்று ரங்கனை இழுத்துக் கொண்டு உள் நுழைந்தான்.

''ஹாலில் ஊஞ்சல் மேல் வீணையோடு தென்பட்ட மைதிலி ஒரு வினாடி அவன் மனதுக்குள் ஒரு இன்ப மின்னலையே பாய்ச்சி அவனை உலுக்கினாள்.

அப்படி ஒரு அழகுக் கோலம்!

38

ஊஞ்சலிலோர் தேவதை-அவள்
உள்ளத்திலோ முள்விதை!
விதையின் வழியோ ஊழ்வினை-எவர்
சிதைப்பார் வினையின் வழியினை?
விதிவழி செல்லும் ஒருவாழ்வை
மதிவழி மாற்றிட வழியுண்டோ?'

ஊஞ்சலில் வீணை வாசித்தபடி இருந்த மைதிலியின் கோலம் ரங்கனின் வாலிப உணர்ச்சிக்குள்ளே ஒரு மின்னலைப் போல இறங்கிற்று. ஒரு வினாடி தடுமாறி விட்டான்.

பெண்ணென்பவளே அழகு தான்!

கூந்தல் தொட்டு பாதம் வரை இயற்கை அவர்களுக்கு மட்டும் ஏராளமான சலுகைகளை அள்ளி வழங்கியிருக்கிறது. சிலர் வரையில் அந்த சலுகைகளை அது எல்லை மீறி வழங்கியிருக்கும் போது அங்கெல்லாம் ஆண்கள் ஆடிப்போய் விடுகிறார்கள்.

ரங்கனும் ஆடித்தான் போனான்.

வாழ்வில் அரிய வகை ருசிகள் என்று சில உண்டு. அந்த ருசிகளை அபூர்வமாகத்தான் ருசிக்க முடியும்.

முதல் மதிப்பெண் பெறும்போது, பெரும்போட்டியில் வெற்றி யடைந்து பரிசுக் கோப்பையை கைநீட்டி வாங்கும் போது உயிருக்குப் போராடுபவருக்கு உதவி செய்து அவர் உயிர் பிழைக்கும் போது... என்று அந்த ருசிக்குரிய தருணங்கள் பலவிதமாக இருக்கின்றன. அவை நமக்கு வாய்க்கவும், நாம் அதை ருசிக்கவும் கொடுத்து வைத்திருக்க வேண்டும். ரங்கனுக்கும் மைதிலியை அந்தக் கோலத்தில் பார்த்தது ஒரு தனித்த ருசியான ஒரு தருணமாக இருந்தது. அவனது மிகவும் வறட்சியான வாழ்க்கையில் இப்படிப்பட்ட தருணங்களுக்கெல்லாம் ஏது இடம்?

ஒரு வித ஸ்தம்பிப்பில் நின்று விட்டவனை ரேவதியும் கவனித்தாள். அவளுக்கு சுரீர் என்றது. ஆபத்து தேடிவந்து நின்று வாயைப் பிளக்கிற மாதிரி கூட இருந்தது? நல்ல வேளையாக கோவிந்தன் ரங்கனைக் கலைத்து விட்டான்.

''ரங்கா... ஏ ரங்கா... மசங்கி நிக்காம உள்ள வாப்பா...'' என்றான். மைதிலியின் வாசிப்பு நின்று விட சக்கரவர்த்தியும் ''ஏ ரங்கா.. வா... கூட யார் கோவிந்தனா? வாங்கோ... வாங்கோ...'' என்றார்.

மைதிலி வீணையை மடியில் இருந்து நீக்கி எழத் தொடங்கினாள்.

''அண்ணே... நாம அப்புறம் வருவோம். அம்மா வீணை வாசிக்கறத கெடுத்துட்டோம் பாரு'' என்றான் ரங்கன்.

''பரவால்ல ரங்கா... அதான் வந்துட்டியே என்ன விஷயம்?'' என்று சக்கரவர்த்தியும் கேட்டிட ரேவதியும் ஹாலில் ஒரு இடமாய் பார்த்து நின்று கொண்டு ரங்கனையும் மைதிலியையும் மாறி மாறிப் பார்க்க ஆரம்பித்தாள். மைதிலி அவளது விஷப் பார்வையின் அர்த்தம் புரிந்து வீணையோடு விலகத் தொடங்கினாள்.

''ஐயா... ரங்கன் இப்ப பெரிய ஆபத்துல இருந்து மீண்டு வந்துருக்கான். உங்களுக்கு என்ன ஏதுன்னு தெரியுமா?''

கோவிந்தன் சக்கரவர்த்தியிடம் பேசத்தொடங்கினான்.

''பெரிய ஆபத்தா... பெருமாளே! என்ன கோவிந்தா சொல்றே? எனக்கு எதுவும் தெரியாதே?''

''அதுக்குத்தான் தோப்புப் பக்கம் தினசரி ஒரு தடவையாவது போய்ட்டு வரணும்கறது...''

''அப்பபிரச்சினை தோப்புலையா... யாரு? திரும்ப அந்த சாராயக்காரனால பிரச்சினையா?''

''அவனே தான்... அந்த இடும்பன் துப்பாக்கி முனைல ரங்கனை கடத்திக்கிட்டே போயிட்டான் தப்பிச்சு வந்து இப்ப உங்க முன்னால ரங்கன் நிக்கறான்னா அதுக்கு அந்த தாயாரோட

அனுக்ரகம் தான் காரணம்'' என்றபடியே கோவிந்தன் மைதிலி எங்கே என்பது போல பார்வையால் துழாவினான்.

''அடடா... இவ்வளவு நடந்துருக்கு எனக்கு எதுவுமே தெரியாமப் போயிடுத்தே. இதை ஏன் நீ முதல்லயே என்கிட்ட சொல்லல்ல...?''

''என்னத்த சொல்றது... நடந்தது நடந்து முடிஞ்சிடிச்சு. இடும்பன் ரங்கனைத் தொட்டதும் ஒரு வகைல நல்லதா போச்சு. அவனை இப்ப போலீஸ் பிடிச்சிடிச்சு! ஒரு ஏழெட்டு வருஷத்துக்கு அவன் உள்ளதான் இருந்தாகணும். அவ்வளவு குத்தங்களைல்ல அவன் பண்ணியிருக்கான்?''

''நிஜமாவா... அப்ப இனிமே நம்ம தென்னந்தோப்புல அவனால எந்தப் பிரச்சினையும் வராதுன்னு சொல்.''

''நிச்சயமா வராது. ரங்கன் தன் உயிரைப் பணயம் வெச்சு உங்க தோப்பை காப்பாத்தியிருக்கான். உடம்பைப் பாருங்க... அங்கங்க எவ்வளவு காயம்னு...''

சக்கரவர்த்தியும் அதைக்கேட்டு சற்று பதைப்போடு அருகில் வந்து அவன் காயங்களைப் பார்த்து முகம் கசங்கினார். அதே வேகத்தில் ''டாக்டர் கிட்ட காட்டினியா... ஊசி போட்டாரா?'' என்றும் கேட்டார்.

''காட்னேன்க.. ஊசி போட்டு மருந்தும் கொடுத்துருக்காரு. இது ஒண்ணும் பெரிய விஷயமில்ல. கோவிந்தன்தான் நான் என்னமோ இமயமலை மேல அதுவும் ஒரு கால்லயே ஏறினதா நினைச்சு உங்க கிட்ட பெருசா ஒரு சாதனை மாதிரி சொல்லி கிட்டிருக்கான். அதை விடுங்க... தோப்புக்கு பின்பக்கம் பெருசா ஒரு சுவர் எடுத்தா நல்லாயிருக்கும்... தேங்கா களவு போறதும் நிக்கும்...'' என்று தன்னடக்கமாய் பேசின ரங்கனை சக்கரவர்த்தி சற்று பெருமிதமாய் பார்த்தார். ''அப்படியே செஞ்சுட்டா போச்சு... நீயே கொத்தனார் மேஸ்திரினு எல்லாரையும் பார்த்து முன்ன நின்னு கட்டிடு. உனக்கும் அங்க ஒரு ஷெட்டு போட்டுக் கோ. இப்ப இருக்கற குடிசையை பிரிச்சுப் போட்டுடு...'' என்று உற்சாகமாய் அவன் கருத்துக்கு ஒப்புதலும் அளித்தார்.

''அது சரி... ஒரு நடக்கக் கூடாத பெரிய விஷயம் நடந்துருக்குது. அது உங்க கவனத்துக்கு வந்துச்சோ இல்லையோன்னு

தான். ரங்கனைக் கூட்டிகிட்டு வந்தேன். அதை இவன் தான் பெருசா எடுத்துக்கலன்னா நீங்களும் என்ன சாமி சாதாரணமா எடுத்துக்கிட்டீங்க?''

கோவிந்தன் சற்று கோவப்பட்டான்.

''நீ இப்ப என்னை என்ன பண்ணச் சொல்றே?''

''அப்படி கேளுங்க சாமி. இனிதான் நீங்க ரொம்ப எச்சரிக்கையா இருக்கணும்.''

''எதனால அப்படி சொல்றே?''

''அந்த சாராயக்காரன் ஒண்ணும் லேசுப்பட்டவன் இல்ல. அது உங்க தோப்பு. அதைக் காப்பாத்திக் கொடுக்கத்தான் இந்த ரங்கன் அவன் கிட்ட மோதினான். அதோட விளைவுதான் இப்ப அவன் கம்பி எண்ணிகிட்டு இருக்கான். அவன் ஜெயிலுக்குள்ள இருந்தாலும் அவன் கூட்டம் வெளியதான் இருக்கு. பழிக்குப் பழி வாங்கறேன்னு அவங்க ரங்கன் மேலயும் பாயலாம் உங்க மேலயும் பாயலாம். இனிமே தான் நீங்க ரொம்ப எச்சரிக்கையா இருக்கணும்.''

கோவிந்தன் சொன்ன மறுநொடி சக்கரவர்த்திக்கு சுரீர் என்றது. ரேவதிக்குப் பகீர் என்றது. எப்பொழுதும் அமிர்தாஞ்சன் பாட்டிலை எடுத்து முகர்ந்து பார்த்தபடியே இருக்கும் சக்கரவர்த்தியின் சகதர்மிணி ஜானகிக்கும் பகீர் என்றது.

மைதிலியும் பூஜை அறைக்குள் வீணையை வைத்து விட்டு அங்கேயே நின்றபடி கோவிந்தன் பேசுவதைக் கேட்டுக்கொண்டு தானிருந்தாள்.

''என்னடா கோவிந்தா நீ பாட்டும் என்னென்னமோ சொல்றே? அந்த கடன்காரன் பண்ணின தப்புக்கு நாங்க என்னடா பண்ணோம்?''

''ஏன் சாமி... அவனைத் தூக்கி உள்ள போட்டுட்டு நாங்க என்ன பண்ணோம்னா எப்படி?''

''நானாடா போட்டேன்...?''

''அப்ப ரங்கன் செய்தது தப்புங்கறீங்களா?''

''அது... அது...'' சக்கரவர்த்தி தடுமாறும்போது ரேவதி.

''வெட்டிக்கொண்டு முன்னால் வந்தாள்.

''தப்புதான்... வேலியில போற ஓணானை எடுத்து எதுக்கு நம்ம மேல விட்டுக்கணும். அது நம்ம தப்புதானே?''

''அது அடுத்தவன் வேலில போனா சரி. நம்ம வீட்டு தோப்புக்குள்ளயில்ல போச்சு...''

''இதுக்குத்தான் அந்த தோப்பை வித்துட்டு அங்க காம்ப்ளக்ஸ் பில்டிங் கட்டலாம்னு சொன்னேன். இப்ப பாருங்கோ... தெருவுல சைக்கிள் கடை வெச்சிருக்கறவன்லாம் வந்து பயமுறுத்தறத...?''

ரேவதி, கோவிந்தன் சொன்னதை வசமாக தன் பக்கம் திருப்பி அதைக்கொண்டு கோவிந்தனுக்கே ஒரு பஞ்சும் வைத்தாள். கோவிந்தனும் ஒன்றும் அசரவில்லை. ரங்கனைப் பார்த்து அவனிடம் பகிர்ந்து கொள்வதுபோல அவனுக்குப் பதில் சொல்ல ஆரம்பித்தான்.

''எலே ரங்கா... இனியாவது இடமறிஞ்சு சேரு. இனி அந்தத்தோப்பை இதோ இந்த பொம்பளையே பாத்துக்கட்டும். இவங்களுக்கு பாதுகாக்கறவன் கொஞ்சமும் பெருசு இல்லை. சட்டி சுட்டா கையை விட்டுட்ற மாதிரி பிரச்சினைன்னா வித்துட்றதுங்கறது தான் இவங்க பாலிசி. நான் சைக்கிள் கடைக்காரன். நீ அது கூட இல்லாதவன். இவங்களுக்கு நல்லது நினைக்கவோ அதைச் சொல்லவோ நமக்குத் தகுதி கிடையாது. கிளம்பு... இனி அவங்க தோப்பு... அவங்கபாடு'' என்றபடி வெளியேறக்காலெடுத்தான். சக்கரவர்த்திக்கு கோவிந்தன் பேச்சு தீயிட்டுக் கொளுத்தியது போல இருந்தது. ''கோவிந்தா நில்லு... அவசரப்படாதே! அம்மாடி மாட்டுப்பொண்ணே நீ செத்த உன் திருவாயை மூடிண்டு சும்மா இருக்கியா?

கோவிந்தா தயவு செய்து இவ பேசினத நீ மனசுல வெச்சுக் காதே. எனக்கு மனுஷா யாருங்கறதெல்லாம் முக்கியமில்லை. அவா என்ன சொல்றாங்கறதுதான் எப்பவுமே பெருசு. அப்படிப் பார்த்தா நீ தேடி வந்து எனக்கு நல்லது சொல்லிண்டிருக்கற ஒருத்தன். நான் இனி கவனமா இருப்பேன். ரங்கனும் இனி கவனமா இருக்கணும். எனக்காக ஒரு தடவை அவன் கத்திக்குத்து பட்டதே போதும். அந்த உதவிக்கே நான் பதிலுக்கு என்ன கைமாறு பண்ணப் போறேனோ தெரியல. இரண்டாவது

தடவையா என் தோப்புனாலயே அவன் உயிருக்கு இரும்பலும் ஆபத்து வந்துடுத்து. இந்த இடத்துல எங்களவிட ரங்கன்தான் ரொம்பக் கவனமா இருக்கணும்கறது என் அபிப்ராயம். இனியும் ரங்கன் அந்த தோப்புல தனியாளா இருந்துண்டு கஷ்டப்பட வேண்டாம். அந்த தோப்பை நான் முதல்ல விக்கற வழியை பார்க்கறேன்'' என்று தெளிவாய் ஒரு முடிவுக்கு வந்தார் சக்கரவர்த்தி. கோவிந்தனுக்கும் அது சற்று இதமாக இருந்தது. ஆனால் ரங்கனுக்கு அது பெரிய ஏமாற்றமாக இருந்தது.

''இல்ல வேண்டாம்... மூட்டப்பூச்சிக்கு பயந்துகிட்டு யாராவது கட்டிலையே கொளுத்துவாங்களா? அதான் எல்லாப் பிரச்சினையும் தீர்ந்துடிச்சே... அந்த இடும்பன் ஒரு செத்தபாம்பு. அவனால இனி எதுவும் பண்ண முடியாது. தோப்பையும் அந்த நாய்க்கு பயந்து கிட்டு தயவு செய்து விக்காதீங்க. வாங்க வர்றவங்களும் இந்தப் பிரச்சினையை வெச்சு அடிமாட்டு விலைக்கு கேப்பாங்க. எந்த ஒரு பூர்வீகச் சொத்தும் காப்பாற்ற மட்டுமே படணும்க. விக்கறது ரொம்ப சுலபம். அதுலயும் காவேரிக்கரையோரமா ஒரு தென்னந்தோப்பு இருக்குங்கறது தங்கச் சுரங்கத்துக்கு பக்கத்துல ஒரு வைரச்சுரங்கமும் இருக்கற மாதிரி. அதை பத்திரமா பாத்துக்கறது என் பொறுப்பு. உங்களுக்கு எவ்வளவோ வேலை இருக்குதுங்க. சின்னம்மா கல்யாணம் வேற நின்னுபோச்சு. மளமளன்னு வேற நல்ல இடமாப் பார்த்து அந்த கல்யாணத்த பண்ற வழியைப் பாருங்க. தோப்பு சமாசாரமெல்லாம் பிசாத்து விஷயம். அதை நான் பாத்துக்கறேன். கோவிந்தா போகலாம்.''

ரங்கன் தெளிவாகவும் திடமாகவும் தன் கருத்தைக் கூறிவிட்டு அவிழ்த்துவிட்டிருந்த வேட்டியை திரும்ப மடித்து கட்டிக் கொண்டவனாக வாசற்பக்கம் நோக்கி நடக்கத் தொடங்கினான்.

கோவிந்தனுக்கே அவன் பேச்சு அதிர்ச்சியாகத் தான் இருந்தது. அவனை அழைத்து வந்த காரணத்தையே ரங்கன் புறந்தள்ளி விட்டு பழையபடி தான் எண்ணுகிற விதத்தில் அவன் செயல்படத் தொடங்கிவிட்டது பலத்த அதிர்ச்சியாகவும் இருந்தது.

ஆனால் சக்கரவர்த்தி வரையில் அவன் மிகவும் பொறுப்போடு பேசியதாகத்தான் பட்டது.

''இந்த ஆத்துல ஒருத்தன் மாதிரியே அவன் பேசிட்டுபோறான். என்னை விடவே என் பொண்ணு மேல அவனுக்குத் தான் எவ்வளவு அக்கறை. நினைக்கவே எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு'' என்று பரவசப்பட்டார் சக்கரவர்த்தி. கோவிந்தனோ பெருமூச்சுடன் வெளியேறத் தொடங்கினான். ரேவதி நேராக மைதிலியை நோக்கித் தான் சென்றாள்.''

மைதிலி ரங்கன் பேச்சைக் கேட்டு கண்ணிரண்டும் கலங்கி விட்டிருந்தாள்.

''நினைச்சேன்... நீ இங்க இப்படித்தான் கண்கலங்கிப் போய் நின்னுண்டுருப்பேன்னு நினைச்சேன். அந்த பொணந்தூக்கி ஒரு லெக்சர் அடிச்சாலும் உனக்கு கல்யாணம் நடக்கணும்னு ஒரு நல்ல விஷயத்தைப் பேசிட்டுப் போயிருக்கான் அவனுக்கும் நன்னாவே தெரிஞ்சிருக்கு... உன்னை மாதிரி ஒரு பொண்ணை காலத்துக்கும் கன்னியாகவே வெச்சிண்டிருக்க முடியாதுங்கறது... நான்லாம் சொன்னாத்தான் முறைப்பே. இப்ப அவனே சொல்லிட்டு போயிருக்கான். மறைமுகமா உன்னை நான் விரும்பலேன்னும் சொல்லாம சொல்லிட்டுப் போயிட்டான். ஒரு பொணந் தூக்கிக்கே உன் ஜாதகத்தை நினைச்சு அவ்வளவு பயம்னா அதுக்கு மேல நான் சொல்றதுக்கு என்ன இருக்கு?

நல்லவேளை... பகவான் அந்த அமெரிக்கா வரன் மூலமா இந்த குடும்பத்தைக் காப்பாத்த முன் வந்துருக்கான். புரிஞ்சுண்டு அமெரிக்கா புறப்படத்தயாராகு...'' என்று ஒரு போடு போட்டு விட்டு சந்தோஷமாய் விலகிக் கொண்டாள்.

சக்கரவர்த்தியிடம் ஜானகியும் புலம்பிக் கொண்டிருந்தாள்.

''அவன் சொல்றான்னு அந்த தோப்பை அப்படியே வெச் சிண்டிருக்கப் போறேளா... வேண்டான்னா! வர்ற விலைக்கு வித்திருவோம். இருக்கிற பிரச்சினை போறாதா...!''

''தெரியும் ஜானகி... இப்ப தோப்பை விக்கறத விடவே முக்கியம் மைதிலி கல்யாணம் தான். கோவிந்தன் எச்சரிச்ச மாதிரி இடும்பனோட ஆட்களால் பிரச்சினை வரதுக்குள்ள மைதிலிக்கு வேகமா வரனைப் பார்த்துத் தள்ளி விட்டுடணும்.''

"ஆமாம் இப்ப சொல்லுங்கோ... அந்த ஸ்ரீவத்சன் போன் மேல போன் பண்ணப்போ சாஸ்த்ர நியாயம் பேசிட்டு இப்ப தள்ளி விடணும்னா எப்படி?" அலுத்துக்கொண்டாள் ஜானகி.

இருவரும் பேசுவதைக் கேட்டு உச்சி குளிர்ந்து போன ரேவதி இது தான் காலம் என்று இருவருக்கும் நடுவில் புகுந்தாள்.

"மாமா, அத்தை... இப்பவும் எதுவும் கெட்டுப்போயிடல. இன்னிக்குக் காலம்பற கூட ஸ்ரீவத்சன் பேசினார். ஒருமாசம் வரை பொறுத்துருக்க தயார்னு உங்க பிள்ளைகிட்ட சொன்னப்போ 'அப்பா கிட்ட நான் பேசிக்கறேன். திருப்பதில எல்லாநாளும் முகூர்த்த நாள் தான். ஆகையால உடனே புறப்பட்டு வாங்கோ'ன்னு அவரும் சொல்லிட்டார். ஆகையால மைதிலி கல்யாணத்த நினைச்சு கவலையே பட வேண்டாம் அது கிட்டத்தட்ட நடந்து முடிஞ்ச மாதிரி தான்" என்றாள்.

"நிஜமாவாடி சொல்றே?" என்று ஜானகியும் பூவாணமானாள் சக்கரவர்த்திக்கும் ரேவதி சொன்னது ஒரு தெம்பை அளித்திருந்தது. ஆனால் மைதிலியிடம் மட்டும் வேறு விதமாய் ஒரு தீர்க்கம்! அந்த தீர்க்கம் கலையாதபடி அப்போதே ரங்கனைப் பார்த்துப் பேச புறப்பட்டு விட்டாள். அவள் நடையிலும் இரண்டில் ஒன்றைப் பார்த்து விடும் தீர்க்கம் பளிச்சிட்டது!

39

'அரங்கமென்றிட உயிர் கூடி கலை விளையும்
அரங்கனென்றிட உயிர்க்கூட்டில் நலம் விளையும்!
விண்ணரங்கில் விளைந்த ரங்கன் விபீடணனால்
மண்ணரங்கில் திருவரங்கப் பள்ளி கொண்டான்!
மனதரங்கில் விழையும் ரங்கன் வீடரங்கில்
உயிரடங்க உத்தமமாய் துணை வருவான்!'

கிளையில்லாத மரங்களின் ஒரு கூட்டமாக காட்சி தரும் தென்னை மரத்தை ஒரு சன்யாசியோடு ஒப்பிடுவார்கள். மேல் நோக்கி எழும்புவதுதான் சன்யாசிக்கு லட்சணம். தென்னையும் மேல் நோக்கியே எழும்புகிறது. சன்யாசிக்கு உறவுகள் கிடையாது. தென்னைக்குக் கிளைகள் கிடையாது. சன்யாசி எதையும் தனக்கென வைத்துக்கொள்வதில்லை. அவன் இந்த மண்ணில் இருந்து பெற்றதை எல்லாமும் கூட தன் ஞானத்தோடு சேர்த்து ஊருக்கே தந்துவிடுகிறவன். தென்னையும் அப்படித்தான்... மண்ணில் இருந்து பெறும் நீரில் எல்லா சுவைகளையும் சேர்த்து திரும்ப மனிதர்களுக்கே தந்து விடுகிறது. சன்யாசிக்கு அகக் கண்ணோடு சேர்ந்து மூன்று கண்கள்! தென்னங்காயிலும் அதே போல மூன்று கண்கள்.

சன்யாசி உண்மைகளை உடைப்பதால்தான் வாழ்வில் வழி தெரிகிறது. தேங்காயையும் பூஜையில் உடைப்பதால்தான் வினை விலகுகிறது.

மரக்கட்டிலில் மல்லாக்கப்படுத்திருந்த ரங்கனிடம்தான் இவ்வளவு எண்ணங்களும்!

காற்றும் ஜில்லென்ற குணத்தோடு உசாவிக்கொண்டிருந்தது. அணில் பிள்ளைகள் விளையாடிக்கொண்டிருந்தன! இடையிட்டது. கொலுசு சப்தம்! கட்டிலில் இருந்து மின்னோட்டம் தாக்கியது போல எழுந்து கொண்டான் ரங்கன்.

மைதிலிதான் வந்து கொண்டிருந்தாள்!

ஊஞ்சலில் வீணையோடு சரஸ்வதியாக பார்த்த்வன் கண்களுக்கு ரதியாக இப்போது தெரிந்தாள். அவனது வாலிப உள்ளத்திலும் ரசனை இருந்து அது குப்பென்று பற்றிக்கொண்டு எரியத் தொடங்கியது.

அவளும், அவனைச் சமீபித்துவிட்டாள்.

அவனோ தலையை தாழ்த்திக்கொண்டான்.

"நான் வந்துருக்கேன்..."

"அதான் கொலுசு சப்தம் கேட்டுச்சே... இளநி கிளநி வேணுமா?"

''அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம். ஏன் இந்த மரத்துல இருக்கறததான் பறிச்சுத் தருவேளா... மனசுல இருக்கறத தரமாட்டேளா?'' அவள் மிக நேராக விஷயத்துக்கு வரவும் அவன் திடுக்கிட்டுப் போனான். மருண்டுபோய் பார்த்தான்.

''நான் இப்ப இரண்டுல ஒண்ணு தெரிஞ்சுக்காம போற தில்லங்கற முடிவோடதான் வந்துருக்கேன்.''

''இரண்டுல ஒண்ணுன்னா...?''

''அங்க எனக்கு மாப்ளை பாத்துண்டுருக்கா''

''ரொம்ப சந்தோஷம்.''

''ஆனா எனக்கு மகா பெரிய துக்கம் அது.''

''அப்படி எல்லாம் சொல்லக்கூடாதும்மா.''

''இந்த அம்மா ஆட்டுக்குட்டியெல்லாம் வேண்டாம். நான் உங்க மைதிலி.''

அவள் பதில் அவனை சிலீரிட வைத்தது. அவன் கண்களும் கலங்க ஆரம்பித்தன.

''அழறேளே... அப்ப என்னை நினைச்சு உங்களுக்கும் பயமா இருக்கா?''

''பயமா?''

''ஆமாம்... நான்தான் ராசி இல்லாதவளாச்சே... என் ஜாதகம் கொலைகார ஜாதகம்னா.''

சொல்லும்போதே அவள் கண்களிலும் ஈரம் பூக்க ஆரம்பித்தது.

''கொலைகார ஜாதகமா...சேச்சே! உங்க ஜாதகம் கொலைகார ஜாதகமா இருந்தா, இந்த உலகமே கையெடுத்துக்கும்பிட்ற சரஸ்வதி ஜாதகம் கொலைகார ஜாதகமா இருக்கணும். இந்த ஊரே அம்மா அம்மான்னு நெகிழ்ந்து போற அந்த ரங்கநாயகி தாயார் ஜாதகம் கொலைகார ஜாதகமா இருக்கணும். ஆனாலும் சொல்றேன் எனக்கு இந்த ஜாதகத்துல எல்லாம் நம்பிக்கை சுத்தமா கிடையாது.''

''அவன் பதில் அவளுக்குள் தேனைத் தெளித்துவிட்டிருந்தது.

''அப்ப நான் சரஸ்வதியா... அந்த ரங்கநாயகியா?''

''என் வரைல அதுக்கும் மேல...''

''அப்ப ஏன் என்னை நேருக்கு நேரா பாக்கக்கூட தயங்கறேள்?''

''நான் பொணந்தூக்கிம்மா! அட்ரஸே இல்லாதவன். நீங்க தேவதை. உங்கள ஒரு தேவன் பாக்கறதுதாம்மா சரி.''

அவன் குரல் நெகிழ்ந்து குழைந்து உடைந்து எல்லாமுமாகிப் போனது.

அவள் பிரமிக்க ஆரம்பித்தாள். அவன் தொடர்ந்தான்.

''யார் யாரோட சேரணும்னு ஒரு கணக்கு இருக்கும்மா. இந்த காவேரி கரைல நான் ஆயிரக்கணக்கான ஜோடிகளைப் பாத்துருக்கேன். எங்கெங்கிருந்தெல்லாமோ வருவாங்க. ஆமை ஒண்ணு மனுஷனா நிமிர்ந்து எழுந்த மாதிரி ஒருத்தர் இருப்பார். ஆனா அவர் மனைவி கோயில் சிற்பமாட்டாம் இருப்பாங்க. எருமைக்கு கால் கை முளைச்ச மாதிரி ஒருத்தன். அவனுக்கோ மயில் மாதிரி பொண்டாட்டி... நூத்துக்கு ஒரு ஜோடிதான் பொருத்தமா இருக்கும். மீதி தொண்ணூத்து ஒன்பது ஜோடிகளும் எனக்குப் புரிய வெச்ச விஷயம் ஒண்ணுதான்! பெண்ணோட வாழ்க்கைங் கறது இந்த மண்ணைப் பொறுத்தவரைல கூண்டுக் கிளி எடுத்து கிட்டு வர்ற சீட்டு மாதிரி... அமைஞ்சாதான் உண்டு. அமைச் சுக்கற சக்தி அவங்களுக்கு இப்பவும் இல்லை.''

அவன் கருத்து அவளை உற்சாகமாய் நிமிர்த்தியது.

''அப்படி அமைச்சுக்கற சக்தி என் வரைல இருக்கறதா நான் நினைக்கறேன். அதான் அமைச்சுக்க உங்களோட பேசிண்டு இருக்கேன்.''

''என் அபிப்ராயத்தை வெச்சே எனக்குத் தூண்டிலா? நானும் இந்த சமுதாயத்து அசிங்கமான ஆண்களள ஒருத்தன்மா! வேண்டாம்மா இனி கனவுல கூட என்னைப் பத்தி யோசிக் காதீங்க. உங்கப்பா நிச்சயம் உங்களுக்கு நல்ல வரன் பார்ப்பார். நான் ஒரு கையாலாகாதவன். அன்னிக்கு என்னால ஸ்ரீதரன் சாரை காப்பாத்த முடியாம போயிடிச்சு. அவரைப் போல படிச்சு, கை நிறைய சம்பாதிக்கற குறிப்பா அப்பா-அம்மான்னு ஒரு

குடும்பம் இருக்கற ஒருத்தர்தாம்மா உங்களுக்கு சரியான ஜோடியாக முடியும்''

''நேர்மையான ஒரு சிந்தனையாளனா இருக்கற உங்களுக்குள்ள எதனால இப்படி ஒரு தாழ்வு மனப்பான்மை? நீங்க அசிங்கமான ஆளுன்னு யார் சொன்னா?

துளி முந்தானை விலகினாலே வெறிக்கறவாளுக்கு நடுவுல முழு நிர்வாணமா நான் இருந்தப்பவும் என்னை நீங்க பாக்கல! நான் எவ்வளவோ ஜாடை காட்டியும் துளி மயக்கம் உங்களுக்கு ஏற்படலை. அந்த இடும்பனால கத்திக் குத்துப்பட்டப்போகூட எங்க குடும்பம் பேர் கெட்டுப் போயிடக்கூடாதுன்னு அதைப் பத்தி துளிகூட நீங்க பெருசுபடுத்தல.

ஒரு நல்ல ஆம்பளைக்கு இதைவிட என்ன பெருசா வேணும்? பொணந்தூக்கி பொணந்தூக்கின்னு இன்னும் எத்தனை நாளைக்குச் சொல்லிப்பேள். அதைவிட்டு வெளிய வர உங்குக்கு என்ன தயக்கம்?''

மைதிலியும் மழை போல பொழியத்தொடங்கிவிட்டாள். அவன் உதட்டில் உடனேயே ஒரு அளவான சிரிப்பு.

''எதுக்கு இந்த சிரிப்பு?''

''சிரிக்காம என்ன பண்ண? இது நான் விரும்பிப் பெற்ற வேலை இல்லம்மா. நான் இந்த பூமியில யார் மூலமாவோ வந்து விழுந்த மாதிரியே இதுவும் என் மேல வந்து விழுந்துடுச்சு. ஒரு அருவருப்பான வேலையா இதை நினைச்சு நானும் பல முறை விலகியிருக்கேன். ஆனா உயிரைப் பறி கொடுத்தவங்களோட தாயோ, மனைவியோ என் முன்னால கதறி அழும்போது என் மனசு அதுல கரைஞ்சு போயிடும். உயிர்களோட இழப்பு ஏற்படுத்தற வலி எனக்குள்ள அப்படியே இருக்கும்மா?

எத்தனை உசுருங்க? எவ்வளவு மரண ஓலம் இந்த கரை மேல...! அதோட உடம்பைப் பாக்கத் துடிக்கற உறவுகளைப் பார்க்கும்போது எனக்குள்ள ஒரு ஆவேசம் வரும். அந்த ஆவேசத்தோட இந்த காவேரிக்குள்ள இறங்கி பிணங்களை தூக்கிப் போகும்போது சம்பந்தப்பட்டவங்க வரைல நான் தான்மா கடவுள்!

அப்ப நான் பொணந்தூக்கி இல்ல!

அப்ப இந்த கடவுளோட கால்ல எத்தனை பேர் விழுந்துருக்காங்க தெரியுமா? அப்பல்லாம் உயிர்கள பறிக்கற காவிரியை நான் கர்வமா பார்ப்பேன். நான் அர்த்தத்தோட வாழற நிமிஷங்களா அந்த நிமிஷங்களும் இருக்கும். அதை நான் எதுக்கு இழக்கணும்?''

''அப்ப காலம் பூரா இப்படியே இருந்துடப் போறேளா?''

''வேற வழி... எனக்கென்ன படிப்பிருக்கா? இல்ல எனக்காகத் தான் யார் இருக்கா?''

''அதான் நான் இருக்கேனே...?''

''அம்மா...!''

''மண்ணாங்கட்டி மைதிலின்னு சொல்லுங்கோ. நான் இருக்கேன் உங்களுக்கு. என்னால உங்கள தாண்டி ஒருத்தரை நினைக்க முடியல. அது முடியவும் முடியாது.

அப்புறம் இந்த காவிரியை ராட்சஸின்னேள்... தப்பு! ரொம்ப தப்பு...

இவ் நல்ல அம்மா. என் பிரார்த்தனைக்கு வரம் கொடுத்தவ இவ! இவளால தான் பயிர் விளையறது இவளாலதான் தாகம் தீர்றது. இவ ரொம்ப கருணையுள்ளவ. அதான் உங்க கோபத்தையோ ஆவேசத்தையோ இவ பொருட்படுத்தாம பொணங்கள தேடி நீங்க இவ மடில விழறப்போ இவ உங்கள ஏமாத்தாம பொணங்கள உங்க கைல ஒப்படைச்சு உங்கள கடவுளா மதிக்கும்படி பண்ணியிருக்கா.

எனக்காக நீங்க உங்கள இந்த விஷயத்துல மாத்திக்கத்தான் வேணும். நான் என் மனசால உங்கள ஆம்படையானா வரிச்சுட்டேன். உங்களால நான் நல்லவிதமா வாழ முடியும்னும் மனசார நம்பறேன். கட்டின புடவையோட நீங்க எங்கக் கூப்பிட்டாலும் வரேன். என்ன சொன்னாலும் கேக்கறேன். இது ஒண்ணும் கண்மூடித்தனமான காதல் இல்ல ரங்கன். என்னடா ஆம்படையான் பேரைச் சொல்றேனேன்னு அதிர்ச்சியடை

யாதேள். காதலிக்கறவாளுக்கு அந்த உரிமை உண்டு. காது கட்டிண்டதுக்கு அப்புறம் நீங்க எப்பவும் ஒன்னாதான்?'' மைதிலி பொங்கி வழிந்தாள். வழிந்து சிலிர்த்தாள்.

அவனால் ஏதுவும் பேச முடியவில்லை.

மலங்க மலங்கப் பார்த்தான். சுற்று முற்றும் வேறு பார்த்தான்.

''என்ன பாக்கறேள். யாராவது பாத்துட்டா என்ன பண்ற துன்னா? எனக்கு கவலையே இல்லை. நன்னா பாக்கட்டும் ஆத்துல போய்ச் சொல்லட்டும். ஊர் பூராவும் பரவட்டும் என் ஜாதகம் ஒரு கொலைகார ஜாதகம்னு ஊர் பேசறதை நான் எவ்வளவு ரசிக்கறேன் தெரியுமா? ஆனா அதையும் மீறிண்டு ஒருத்தன் அமெரிக்காவுல இருந்து வந்து என்னை அள்ளிண்டு போகப் பாக்கறான். இங்க யாராவது பாத்தா எனக்கும் அவனை சமாளிக்கற வேலை மிச்சமாகுமோல்லியோ?

''மைதிலி...ம்மா! வேண்டாம். நான் ரொம்ப ரொம்ப சாமான்யன். தங்ககிரீடம்கறது ராஜாக்களோட தலைலதான் இருக்கணும். நான் ஒரு சாதாரண சிப்பாய்...''

''மாத்தி யோசியுங்களேன்... யார் தலைல கிரீடம் இருக்கோ. அவர்தான் ராஜா. நான் கிரீடம்னா அப்ப நீங்கதான் ராஜா''

''இல்ல.. வேண்டாம். தயவுசெய்து கிளம்புங்க.''

''பெருமாளே... உங்க தாழ்வு மனப்பான்மைதான் உங்கள இப்படி பேச வைக்கறது. அதை நான் நொறுக்கித் தள்ளாம விட மாட்டேன்.''

''இல்ல.. கல்யாணம்கறது நம்ம சம்பந்தப்பட்ட விஷயம் மட்டுமில்ல. இதனால உங்க அப்பா அம்மாவுக்கும் உங்க குடும்பத்துக்கும் கௌரவ பங்கம் வரக்கூடாது.''

''அங்க இருக்கறது வறட்டு கௌரவம். அது பங்கப்பட்றதுதான் சரி...''

''மைதிலிம்மா'' - ரங்கன் சற்று உரத்த குரலில் அவள் முன் கோபத்தோடு நிமிர ஆரம்பித்தான். அவளும் ஒரு வினாடி ஆடிப்போனாள்.

''உங்களுக்கு என் மேல் காதல் இருக்கற மாதிரி உங்க மேல எனக்கும் காதல் இருந்தாதான் அது முழுமையான காதல். உங்க மேல எனக்கிருக்கறது மரியாதை. ஒருபடி மேல போய் பக்தின்னு சூட சொல்வேன். தயவு செய்து உங்க மனசை மாத்திக்கிட்டு உங்க அப்பா அம்மா பாக்கற மாப்பிள்ளையை கல்யாணம் பண்ணிகிட்டு நல்லபடியா வாழற வழியை பாருங்க. போங்க.''

பேச்சோடு அவன் கை அவள் வந்த வழியை காட்டியது. அவளுக்கோ இதயம் அறுந்து வயிற்றுக்குள் விழுந்தது போல் இருந்தது. கண்களிலும் கண்ணீரின் பெருக்கெடுப்பு...

''உம் போங்க. இனி எந்தக் காரணத்தை கொண்டும் என்னைப் பார்க்க நீங்க வரக்கூடாது'' அவனிடம் அதட்டல் சப்தம் அதிகரித்தது.

அவளும் திரும்பி நடக்கத் தொடங்கினாள்.

கொலுசு சப்தத்தில் முன்பிருந்த உயிர் இல்லை. அப்போது தொலைவில் ஒரு தென்னை மரத்தின் பின்னால் இருந்து மெல்ல இரண்டு உருவங்கள் வெளிப்படத்தொடங்கின. மைதிலியின் சகோதரன் சீமாவும் ரேவதியும் தான் அவர்கள்! மைதிலி அவர்கள் ஒளிந்திருப்பதை உணராமலே அவர்களைக் கடந்து போனாள். அவர்களும் ரங்கனை நோக்கித்தான் வந்தனர். ரங்கனுக்கு சற்று நெஞ்சையடைத்தது. சீமா அவன் முன்னால் சில நொடிகள் கலங்கித் தெளிந்தான். பின் மௌனமாக கையிரண்டையும் கூப்பி அவனை வணங்கினான்.

''என்னங்க இதெல்லாம்... என்னப் போய் கும்புட்டுகிட்டு...''

''உன் கால்ல கூட விழலாம் ரங்கா... தப்பு இல்ல! என் பொண்டாட்டி மைதிலி பத்தி சொன்னப்போ நான் நம்பல. வாங்கோ நிரூபிக்கறேன்னு இழுத்துண்டு வந்தா, இங்க உங்கள ஜோடியா பாக்கவும் உயிரே போய்டுத்து. ஆனா நீ உறுதியா நின்னு அவ மேல இருக்கறது மரியாதை பக்தின்னு சொன்னே பாரு. அங்க நீ எங்கையோ போய்ட்டே. ஒரு பொண்ணு இப்படி தானா வந்து விழும்போது யாருக்கும் சபலம் தட்டும். அதுலயும் என் தங்கை ஒரு கோடீஸ்வரி. ஆனா நீ துளி கூட சபலப்படலை. உனக்கு உன் உயரம் தெரிஞ்சிருக்கு. உன்னை நான் மனசார

பாராட்றேன். நீ இப்படியே இரு! மாப்ளை வீட்லயும் அமெரிக்
காவுல இருந்து புறப்பட்டுட்டாங்க. அதிகபட்சம் 10 நாள்...
மைதிலிய நான் பேக் பண்ணிடுவேன். பத்தே நாள் அவ கழுத்துல
தாலி ஏறிடும். அதுவரை தப்பா எடுத்துக்காம நீ வெளியூருக்குப்
போய்டேன் ப்ளீஸ்... எதுக்கு சொல்றேன்னா...?''

சீமா இழுக்கவும் அப்போதே கையை உதறிக்கொண்டு
வேட்டியை மடித்துக்கட்டியவனாக புறப்பட ஆரம்பித்தான்
ரங்கன்.

அவர்களும் திரும்பி நடக்கத் தொடங்கினர்.

★ ★ ★

கோவிந்தன் சைக்கிள் கடை!

வந்து நின்றான் ரங்கன்.

முகத்தில் கார்மேகம் மண்டியது போல சோகம்.

''என்ன ரங்கா... ஏன் ஒரு மாதிரி இருக்கே?''

''ஒண்ணுமில்ல கோவிந்தா... போகட்டும் உன்கிட்ட ஒரு
ஆயிரம் ரூபா இருக்குமா?''

''ஆயிரம் ரூபாயா... எதுக்குப்பா?''

''கொஞ்சம் அப்படியே ஊட்டி பக்கம் போய்ட்டு வரலாம்னு
தான்.''

''உனக்கு ஊட்டிக்குப் போற ஆசையா... நம்பவே
முடியலியே?''

''கேள்வி கேட்காத கோவிந்தா. காசு இருக்கா இல்லையா?''

''எலேய்... என்ன விவகாரம் முதல்ல அதைச்சொல்...''

''நானே ஒரு விவகாரம் தானே... விடு கோவிந்தா. பணத்த
கொடு''

''இல்ல... என்னமோ நடந்துருக்கு. நீ ஸ்ரீரங்கத்தை விட்டே
போகப்பாக்கறேன்னா அந்த மைதிலிப் பொண்ணு சம்பந்தமா
தான் ஏதோ நடந்துருக்கணும்.''

''கோவிந்தண்ணே.''

''விசயத்த சொல். எதுக்கு ஊரை விட்டுப் போறேங்கறே.
என்ன நடந்துச்சு. உனக்குன்னு இருக்கற ஒரே சிநேகிதன் நான்.
என் கிட்ட எதையும் மறைக்காதே.''

''என்னத்த கோவிந்தா சொல்ல... அந்த பொண்ணு தோப்புக்கு
வந்துச்சு...'' ரங்கன் சொல்லித் தொடங்கினான்.

கோவிந்தனும் வாயைப் பிளக்க ஆரம்பித்தான். நடந்தவற்றை
அப்படியே சொல்லி முடிவுக்கும் வந்தான்.

''கடைசில கொஞ்சம் சத்தமா திரும்பிப் போம்மா. நீ இனி
என்னை நினைக்கவே கூடாதுன்னு ஓங்கலா கத்தின பிறகுதான்
அது திரும்பிப் போச்சு.''

என்றபோது குரல் உடைந்து கண்களிலும் கண்ணீர் திரண்டு
கன்னத்தில் உருளத் தொடங்கியது. ''அடப்பாவி... இப்படியா
தேடிவந்த மகாலட்சுமியை திருப்பி அனுப்புவே?'' என்று
கோவிந்தனும் கோபப்பட ஆரம்பித்தான்.

''நான் அப்ப அப்படிச் சொல்லாம போயிருந்தா தப்பு தப்பா
என்னென்னவோ நடந்துருக்கும் கோவிந்தா. தோப்புக்கு
அவளோட அண்ணியும் அண்ணனும் வந்து ஒரு மரத்துப்
பின்னால ஒளிஞ்சுகிட்டு எங்களையே பாத்துக்கிட்டிருந்ததை
நான் கவனிச்சுட்டேன். அதான் அப்படி பேசும்படி ஆயிடிச்சு.''

''அப்ப நீ அவளை காதலிக்க தொடங்கிவிட்டேன்னு சொல்.''

''நான் எப்பவோ காதலிக்க தொடங்கிட்டேன். ஆனா அதைப்
பூட்டி வெச்சிருந்தேன். இந்த அனாதையை காதலிக்க கூட ஒருத்தி
யான்னு இப்பக்கூட எனக்கு பிரமிப்பாதான் இருக்கு கோவிந்தா...
ஆனாலும் எனக்கு அதிர்ஷ்டம்கறதே இல்லை. இன்னிக்கு நான்
சரின்னு சொல்லப் போனப்ப அவங்கள பாத்துட்டேன். அது
என்னடான்னா என்னை இந்த ஊரைவிட்டே போக
வெச்சிடுச்சு.''

''பைத்தியகாரா... பைத்தியகாரா... காதல்னா தைரியம்!
காதல்னா மாவீரம்... காதல்னா மறுவாழ்வு புரிஞ்சுக்கோ. உன்
விடியலை நீயே கெடுத்துக்காதே. உன்னை ஊரைவிட்டு போகச்
சொல்ல அவங்க யார்... நீயும் போகத்தயாராயிட்டியே?
நொண்டிக்கு கால் முளைச்ச மாதிரி உனக்கு அவ கிடைச்சிருக்கா

ஊனி எழுந்திரிக்காம நொண்டியாவே இருக்கேன்னு ஒத்துக் கிட்டிருக்கியே...''

''வேண்டாம் கோவிந்தா... என்னதான் எனக்குள்ள ஆசை இருந்தாலும் தகுதிங்கறது ரொம்ப முக்கியம். மைதிலியை யாரும் பொணந்தூக்கி பொண்டாட்டின்னு சொல்லிடக்கூடாது. அவ நல்லா இருக்கணும். நான் சொன்னது சொன்னதாவே இருக் கட்டும். தயவு செய்து பணம் கொடு நான் கிளம்பறேன்'' ரங்கன் கைநீண்டது. ஆனால் கோவிந்தன் கை அதைத் தட்டிவிட்டது. அப்போது ''அண்ணா'' என்றும் ஒரு குரல் கேட்டது திரும்பினான் ரங்கன்.

தேசிகாச்சாரியின் மகளான உஷாவும், ரங்கனால் காப்பாற்றப் பட்ட ராம்குமாரும் வந்திருந்தனர். ராம்குமார் ரங்கனை ஒருவித பரவசத்தோடு பார்த்தபடி இருந்தான்!

40

நதிவழிச் செல்வதே தக்கை-போலும்
விழி வழிச் செல்வதோ வாழ்க்கை?
மதி வழி இதில் எதுவென-மனதில்
மிதிபடுதே எண்ணச் சேர்க்கை
துதிமிகு இறைவழி நலமாமோ-அன்றேல்
கதியுற சேவடிதான் பலமாமோ?

ராம்குமாரையும் உஷாவையும் பார்த்த நொடி ரங்கனிடம் ஒரு இனம் புரியாத பரவசம். அதிலும் அவள் அண்ணா என்று அழைத்ததில் தேன் பூசியது போல ஒரு திதித்திப்பு. முகத்திலும் அதன் எதிரொலிகள். கோவிந்தனுக்கே கூட அவர்களின் வருகை ஒரு அதிசயமாகவும் ஆனந்தமாகவும் இருந்தது.

ராம்குமார் மிகுந்த உணர்ச்சிகளோடு ரங்கனை நெருங்கி ''நான் ஊருக்கு கிளம்பிவிட்டேன். ஆபீஸ்ல லீவு இல்லை. அதான்

உங்களப் பார்த்து சொல்லிட்டு போகலாம்னு வந்தேன்'' என்று பேச்சை ஆரம்பித்தான் ராம்குமார்.

''ஆமாண்ணா... இவர் இன்னிக்கு உசுரோட இருக்கார்னா நீங்கதானே காரணம்? உங்களப் பாக்கணும், மனசார நன்றி சொல்லணும்னு விடாம சொல்லிண்டிருந்தார். இப்ப அதுக்குத் தான் வந்துருக்கார்...'' என்று உஷாவும் உருகினாள். ''ஐயோ என்னம்மா, நான் என்ன பெருசா பண்ணிட்டேன்...'' என்று ரங்கனிடமும் ஒரு தாழ்மையான பேச்சு வெளிப்பட்டது. ''என்னத்த பெருசா பண்ணிட்டியா? சரிதான்... ஒரு உயிரை காப்பாத்திக் கொடுத்துட்டு என்னத்த பண்ணிட்டேன்னு சாதாரணமா சொல்லிக்கிறியே...

யப்பா ரங்கா... உனக்கு வேணும்னா உசுருங்கறது ஆத்துல ஓடற மீன் மாதிரி தூண்டில் போட்டு பிடிக்க முடியற ஒரு சின்ன விஷயமா இருக்கலாம். ஆனா உயிர் தப்பிச்சவங்களுக்கு அது மறுஜென்மம். இல்ல சார்...''

கோவிந்தன் இதுதான் சாக்கு என்று ரங்கனுக்கு மெருகேற்ற முயன்றான்.

''சரியாகச் சொன்னீங்க சார்... எனக்கு இது மறுஜென்மம் தான். தண்ணியை இப்பல்லாம் தாகத்துக்கு குடிக்கும் போது பார்த்தா கூட எனக்கு பயமா இருக்கு'' என்ற ராம்குமார் கோவிந்தனை சார் போட்டு அழைத்ததில் கோவிந்தனுக்குள்ளும் ஒரு குட்டி கிக்.

''உங்களுக்கு ஆயுசு நூறு தம்பி... அதனான் ரங்கன் கண்ணுலபட்டீங்க.''

''உண்மைதான்... நான் இவருக்கு ரொம்பவே நன்றிக்கடன் பட்டுருக்கேன். ரங்கன் அவசியம் ஒருமுறை ஹைதராபாத்துல இருக்கற எங்காத்துக்கு வரணும்.''

''ஆமாண்ணா... நீங்க அவசியம் வரணும்.''

''அதுக்கென்னம்மா, இப்பவே கூட கூட்டிகிட்டு போ, நான் வரேன்'' என்று ரங்கன் ஆவலாக ராம்குமாரைப் பார்த்தான். ஆனால் ராம்குமாருக்கோ அவன் சம்பிரதாயமாக பேசிய மாதிரி

தான் இருந்தது. சட்டென்று பாக்கெட்டில் இருந்து ஒரு பத்தாயிரம் ரூபாயை எடுத்த ராம்குமார். அதை ரங்கனின் சட்டைப் பாக்கெட்டிலும் வேகமாக திணித்தான்.

"ஐயோ என்ன இது..."

"ஒண்ணுமில்ல... உங்க உதவிக்கு நன்றின்னு சொல்றது மட்டும் போறாது. ஏதோ என்னால ஆன ஒரு சின்ன தொகை..."

"தொகையா...?" ரங்கனின் தன்மானம் பதற ஆரம்பித்தது. அதே வேகத்தில் பணத்துக்காகவே கோவிந்தனிடம் வந்து மல்லாடிக் கொண்டிருந்ததும் நினைவுக்கு வந்தது. ஆயிரம் தான் கேட்டேன். ஆனால் பத்தாயிரமே வந்திருக்கிறது... இதைக் கொண்டு டெல்லிவரை போய் வரலாம் என்றும் தோன்றியது. இதனால் ரங்கனிடம் ஒரு சின்ன தேக்கம் நிலவவும் அது கோவிந்தனுக்குப் புரிந்துவிட்டது.

"என்ன ரங்கா... நீ என்ன கூலிக்கு மாரடிக்கற ஆளா என்ன... என்ன தம்பி நீங்க பணமெல்லாம் கொடுத்து ரங்கனோட உதவிக்கு விலை வைக்கப்பார்க்கறீங்களே... ரங்கன் சாதாரணமா நான் ஒசியில டீ வாங்கிக் கொடுத்தாலே குடிக்க மாட்டான்..." என்று ரங்கனின் பாக்கெட்டில் திணிக்கப்பட்ட பணத்தை தன் கையாலேயே எடுத்து ராம்குமாரிடம் திரும்பத் தரமுயன்றான் கோவிந்தன்.

ரங்கனுக்குள்ளும் உறுத்தியது. தான் செய்ய வேண்டியதை கோவிந்தன் செய்து விட்டதில் ஒரு நிறைவும் வந்து தொற்றிக்கொண்டது. ஆனால் ராம்குமார் திரும்பத் திரும்ப தரமுயன்றான். ரங்கனும் ஒரு முடிவுக்கு வந்தவனாக அந்தப் பணத்தை வாங்கி தன் சட்டைப் பாக்கெட்டில் இருந்து எடுத்த ஒரு ரூபாயை கூட சேர்த்து அதை அப்படியே உஷாவின் கையில் வைத்து அழுத்தினான்.

"அண்ணா என்னதிது..."

"என்னை அண்ணான்னு வாயார கூப்பிட்டியே... பதிலுக்கு இந்த அண்ணன் உனக்கு எதாவது செய்ய வேண்டாம்...?"

கேட்கும்போதே குரல் உடைந்து கண்களிலும் கண்ணீர் திரண்டது.

"அண்ணா..."

"நீ இப்படி கூப்பிடும்போது ஒரு பரவசம் ஏற்படுதும்மா. எனக்கு அதை எப்படி சொல்றதுன்னுதான் தெரியல... என்னை எல்லாம் ஒரு முழு மனுஷனாவே யாரும் பார்த்தது கிடையாது. "டேய் ரங்கா... டேய் பொணந்தூக்கி... டேய் வெறும் பயலே'ன்னே கேட்டுக் கேட்டு வளர்ந்துட்டவன் நான்" எனும்போதே கண்ணீரும் பீறிட்டு கொட்ட ஆரம்பித்துவிட்டது. அப்போது பார்த்து தேசிகாச்சாரியும் அங்கு வந்தது தான் ஆச்சரியம்.

மகளும் மருமகனும் ரங்கனிடம் பேசிக்கொண்டிருப்பதை பார்த்தவருக்கு ஜிவ்வென்று எகிறியது. வேகமாக அவர்களை நெருங்கினார்.

"அடடே சாமியும் வந்துட்டார்" என்றான் கோவிந்தன்.

"என்னம்மா உஷா... இங்கே கோவிந்தன் கடைல என்ன பண்றே? ஆமா இது என்ன கைல பணம்...?"

"ரங்கண்ணா கொடுத்தாருப்பா..."

"யா...யாரு...?" தேசிகாச்சாரி ஒரு விநாடி அவள் ரங்கனை ரங்கண்ணா என்றதில் விக்கித்துப் போனார்.

"நான் இவருக்கு கொடுத்தா இவர், கூட ஒரு ரூபாயை வெச்சு திருப்பிக்கொடுக்கறார்... ரங்கன் ரியலி நீங்க கிரேட் மேன்..." என்று ராம்குமாரும் தன் பங்குக்கு புகழ்ந்தான்.

"ஆமா, நீ எதுக்குப்பா அழறே?" ரங்கனைப் பார்த்துக் கேட்டார் தேசிகாச்சாரி.

"சாமி இது அழுகையில்ல... ஆனந்தக் கண்ணீர்... ரங்கனை உங்க மக அண்ணான்னு சொல்லவும் இந்த அண்ணன்காரனுக்கு தலையும் புரியல வாலும் புரியலை..."

"ஓ... அதுவா. உஷா என்னம்மா இதெல்லாம்... உன் அம்மா ஏதாவது சொன்னாளா என்ன?"

தேசிகாச்சாரி குபீரென்று பீறிட்ட சந்தேகத்துடன் அப்படிக் கேட்டுவிட உஷாவின் முகத்தில் சிறியதாய் சலனம். அந்த சலனமுடனயே பேசத்தொடங்கினாள்.

"அம்மா சொல்றதுக்கு என்னப்பா இருக்கு?"

"இல்ல... நீ இங்க ரங்கனைப் பார்த்து அண்ணாங்கவும் அந்க அண்ணா போனா என்ன உன் ஆத்துக்காரரை காப்பாத்தினை ரங்கனை அண்ணான்னு நீ நினைச்சுக்கோன்னு சொன்னா ளோன்னு பார்த்தேன்" சமாளித்து வழிந்தார் தேசிகாச்சாரி.

"அத்தைக்கு அப்படி எல்லாம் ஒண்ணும் பிராட்மைண்ட் இல்ல மாமா. அதனால என்ன, நீங்க சொல்லுங்கோ இவருக்கு! அதுக் கான எல்லா தகுதிகளும் இருக்கறதாதான் என் மனசு சொல்றது..." என்றான் ராம்குமார்.

தேசிகாச்சாரிக்கு இழுத்துப் பிடித்து கன்னத்தில் அறைந்தது போல் இருந்தது.

"வா... வா... வாஸ்தவம் தான் மாப்ள..."

"அப்பகூட பாருங்க... சாமி வாஸ்தவங்கறாரு ஆனா ரங்கனை அவர் வாயால அண்ணன்னு சொல்ல மாட்டேங்கறார். நீங்கள் லாம் மேல் சாதி. அவ்வளவு சுலபத்துல கீழ இருக்கறவனை சேத்துக்குவீங்களா என்ன?" கோவிந்தன் தன் பங்கிற்கு ஒரு குட்டு வைத்தான். தேசிகாச்சாரிக்கு உடம்பெல்லாம் பதைக்கத் தொடங்கிவிட்டது.

"கோ...கோவிந்தா... இப்படி வார்த்தைல என்னைக் கொல்லாதே... ரங்கன் என் மூத்த பிள்ளை மாதிரி. ஸ்ரீதரன் போன துக்கத்தையே நான் ரங்கனைப் பாத்துதான் தேத்திக் கறேன்... அது தெரியுமா உனக்கு?"

"சும்மா சொல்லாதீங்க சாமி... இங்க இப்ப இப்படிச் சொல்ற நீங்க நாலு பேர் முன்னாடி சொல்வீங்களா...? இந்தத் தெருவுல இருக்கற உங்க சாதி மனுஷங்க தான் உங்கள சொல்ல விடுவாங்களா என்ன?"

கோவிந்தன் விடுவதாக இல்லை. தேசிகாச்சாரிக்கும் மேற் கொண்டு என்ன பேசுவது என்று தெரியவில்லை. முகமெல்லாம் ஒரு மாதிரியாகி இதயப் படபடப்பும் கூடிப்போனது. ரங்கன் அதைப் பார்வையாலேயே புரிந்து கொண்டான்.

"கோவிந்தா, சும்மா இருக்க மாட்டே நீ... சரிம்மா நீ நல்லபடியா ஊருக்கு போய் லெட்டர் போடு..." என்று

உஷாவையும், ராம்குமாரையும் கிளப்பப் பார்த்தான். அவர்களும் புறப்பட்டனர். தேசிகாச்சாரி மட்டும் தேங்கித் தேங்கி நின்றார். பின் நிதானமாக அங்கிருந்து விலக ஆரம்பித்தார். மனது கனத்துப் போய் தானொரு குற்றவாளி என்றது. இந்த மாதிரி சமயங்களில் எல்லாம் அவருக்கு உற்ற துணையாக சுமைதாங்கியாக திகழ்பவர் சிங்கராச்சாரியார் தான். அவரது கால்களும் அவரது இல்லத்தை நோக்கித்தான் செல்ல ஆரம்பித்தது!

★★★

உச்சிவேளை!

ஈஸிசேரில் மல்லாந்திருந்தார் சிங்கராச்சாரியார். பக்கத்தில் மர மேஜை மேல் பொய்கையாழ்வாரின் திருவந்தாதிப் பாடல் புத்தகம் கிடந்தது.

கூடவே தபாலில் வந்திருந்த பல புத்தகங்கள், அதில் ஒரு 'இயேசு அழைக்கிறார்' புத்தகமும் இருந்தது. கறாரான வைணவப் பிரசங்கியான அவரிடம் நாங்களும் ஒன்றும் லேசுப்பட்டவர் களில்லை என்று கூறிக்கொள்ளும் விதமாய் எல்லா தரப்புகளில் இருந்தும் புத்தகங்கள் காம்ப்ளிமெண்ட்டாகவே தபாலில் வரும். அவரும் அவற்றை எந்தவித துவேஷமும் இன்றி வாசிப்பார். நல்ல குறிப்புகள் கண்ணில் படும்போது அதை சிவப்பு மை பேனாவால் அடிக்கோடிட்டு குறித்துக்கொள்வார். அப்படியே புதிதாக ஒரு புத்தகத்தையாவது படித்துவிடும் ஒரு தீவிரமும் இருக்கும். அதன் நிமித்தம் ஓஷோவின் ஒரு புத்தகத்துக்குள் நுழையப் போனவர் முன் 'ண்ணா...' என்கிற சோர்வான குரலோடு வந்து நின்றார் தேசிகாச்சாரி.

"யாரு தேசியா...?"

"ஆமாண்ணா..."

"காலம்பறயே உன்னை எதிர்பார்த்தேன். ஏன் ஒரு மாதிரி டல்லா இருக்கே. பிள்ளை ஞாபம் ரொம்ப படுத்தறதோ?"

அருகாமை பனை ஓலை விசிறியால் விசிறிக்கொண்டே ஏறிட்டார். மின்சாரவெட்டு!

"ஆமாண்ணா... பிள்ளையோட ஞாபகம் மட்டுமில்ல பிள்ளையோட பரிதாப நிலையும் ரொம்பவே என்னை படுத்தற

தண்ணா!'' என்றவர் விசும்பி அழவே ஆரம்பித்தார். சிங்கராச்சாரியாருக்கும் புரிந்துவிட்டது. மெல்ல எழுந்தார்.

தேசிகாச்சாரி அழுவதை எல்லாம் துளியும் தடுக்கவில்லை. எழுந்தவர் நேராக அறைக்கதவருகே சென்று வெளியே ஒரு பார்வை பார்த்துவிட்டு கதவைச் சாற்றித் தாழிட்டார். பின் திரும்ப வந்து ஈஸிசேரில் அமர்ந்தவர், தேசிகாச்சாரியைப் பார்த்து 'உக்காந்து அழுப்பா...' அதான் யாரும் பாத்துப்ப் போறா ளேன்னு கதவைச் சாத்தி தாப்பாளும் போட்டேன். நீ இப்ப நன்னா அழலாம்... அழு...! அழறதுங்கறதும் ஒரு ஆரோக்யமான விஷயம்தான். நன்னாவே அழு... தோளுக்கு ஒசந்த ஒரு பிள்ளையை தூக்கி காவிரிக்கு விழுங்கக் கொடுத்துருக்கே. அந்த துக்கம் எப்படி நெஞ்சை நசுக்கும்னு எனக்கும் தெரியும். ராமனை காட்டுக்கு அனுப்பிட்டு தசரதன் மனசு பட்ட பாடைவிட உன்பாடு அதிகம்னும் எனக்குத்தெரியும்...'' என்று வெகு சகஜமாக பேசவும் செய்தார். ''ஐயோ அண்ணா என்னால முடியலன்னா கலியுகத்துல எல்லாம் கண்ணுக்கு முன்னாலன்னு சொல்வாளே... அது நிதர்சனம்னா... நிதர்சனம்! நான் பொறப்புல தாண்ணா பிராமணன். நிஜத்துல ராட்சஸன். இப்ப நான் அழறதுகூட போயிட்ட பிள்ளைக்காக இல்லைண்ணா. அதைக்கூட என் மனசு தாங்கிடுத்து. ஆனா இருக்கற பிள்ளையை பிள்ளைன்னு சொல்ல முடியாமலும் பாசம் காட்ட முடியாமலும் நான் படற பாட்டை யாரும் படக்கூடாதுண்ணா... யாரும் படக்கூடாது...'' என்று மார்பில் அடித்துக்கொண்டே தேசிகாச்சாரி கூற, சிங்கராச்சாரியாரிடம் ஒரு சின்ன அதிர்வு. அத்தோடு மெல்லிய குரலில், 'ஒரு ரகசியம் ஒண்ணு என் மனசுக்குள்ள இருக்குன்னு அப்பப்ப பீடிகை போட்டுட்டு அப்படியே விட்டுடுவியே... அந்த ரகசியபாரமா தேசி...'' என்று கச்சிதமாக கேட்டார். தேசிகாச்சாரியிடம் வேகமாய் ஒரு விடைப்பு. எப்படி ஆரம்பிக்கப் போகிறோமோ தெரியவில்லையே என்கிற தவிப்பையும் தடுமாற்றத்தையும் ஒரு தட்டில் சரி செய்து 'சும்மா தெரியமா சொல்...' என்று விஸ்தாரமாக கதவைத் திறந்து விட்டதைப் போல உணர்ந்தவர் அப்படியே சிங்கராச்சாரியாரின் முன்னால் கூப்பிய கரங்களுடன் மரம் போல விழுந்தார்.

''இப்ப எதுக்கு தேசி என்னை சேவிக்கறே?''

''ண்ணா நீங்க இப்ப என்னோட ஆச்சார்யன்... அந்த ஸ்ரீரங்கநாதன்... வைகுண்டபதி.''

''சரி மனசைத் திற-எதையும் வெச்சுக்காதே கொட்டிடு.''

''கொட்டத்தாண்ணா போறேன். நீங்கதான் எனக்கு ஒரு நல்ல வழியையும் காட்டணும்.''

''பீடிகை போதும். விஷயத்துக்கு வா...''

தேசிகாச்சாரியும் ரங்கன் குறித்த அந்த ஆதியோடு அந்தமான விஷயத்துக்குள் விசும்பிக் கொண்டே பேசத் தொடங்கினார்!

41

'ஆடும் பார் விதி தகதிமிதை என்று
கூடும் பார் சுற்றம் மளமளவென்று!
ஓடும் பொன்னும் ஒன்றெனும் ஞானியர்
பாடும் விதிவழித் தான் என்பதால்...
ஏடும் எழுத்தும் என்னதான் சொன்னாலும்
பீடுடையதென்றும் விதிவழி தானே?'

சிங்கராச்சாரியாரின் அகத்தில் திரும்பும் பக்கமெல்லாம் திருமாலின் திரு உருவம் தெரிய வேண்டும் என்பது அவரது விருப்பம்!

அதற்கேற்ப நாலாபுறமும் சுவர்களில் நாராயண கோலங்கள். அதில் திருவரங்கப் பெருமானின் கோலத்துக்கு முன்னால் ஒரு ஈஸி சேரில் அமர்ந்துகொண்டு முகப்பு தேக்குப் பலகை மேல் புத்தகங்களை வைத்துக்கொண்டு வாசித்தபடி இருப்பதுதான் அவரது அன்றாடம்.

அன்றும் அவர் அப்படி அமர்ந்திருக்க அவருக்கு முன்னாலே ஒரு குற்றவாளி போல மண்டி போட்டுக் கொண்டு உட்கார்ந்த

படிதான் தேசிகாச்சாரியும் தன் பாவக் கதையை கூறத் தொடங்கினார்.

சிங்கராச்சாரியார் பரபரப்பான சினிமாக்களை எல்லாம் பார்த்தவர் கிடையாது. ஆனால் அவருக்கு தேசிகாச்சாரி சொல்வது அவ்வளவும் அத்தனை பரபரப்பான சம்பவங்களாகத் தான் பட்டது.

என்னதான் ஞானம் பெற்றவராக இருந்தபோதிலும் மனகக் குள்ளே தேசிகாச்சாரியின் நிமித்தம் 'அடப்பாவி... சண்டாளா... அடக்கொடுமையே... போன்ற வார்த்தைகள் எழும்பிப் பின்னர் அவராலேயே அடக்கவும் பட்டன.

முகத்திலும் அதன் எதிரொலிகள்...

தேசிகாச்சாரி ஒரு வழியாக அந்த ரகசிய பாரம் அவ்வள வையும் இறக்கி முடித்தார். பேசிய உதடிரண்டும் மூடிக் கொண்டது. ஆனால் விழிகளில் கண்ணீரானது ஓட்டைக் குடம் போல கசிந்தபடிதான் இருந்தது.

சிங்கராச்சாரியார் இழுத்து ஒரு பெரு மூச்சு விட்டார்.

''ண்ணா...''

''என்னப்பா இது... எவ்வளவு பெரிய தப்பை நீ பண்ணி யிருக்கே தெரியுமா?''

''ஆமாண்ணா! நான் என்னண்ணா பண்ணுவேன் எல்லாம் என் தலை எழுத்து...''

''தலை எழுத்தா... அப்படின்னா என்னன்னு உனக்கு பூரணமா தெரியுமா?''

''இதை வேற எப்படிண்ணா சொல்றது?''

விரக்தியாக சிரித்தார் சிங்கராச்சாரியார்.

''சிரிக்காம எனக்கு பாவ விமோசனத்துக்கு என்ன வழின்னு சொல்லுங்கோண்ணா...''

''விமோசனத்துக்கு வழியா... ஒரு அற்புதமான ஜீவனை அனாதையாக்கி அவன் பிணந்தூக்கியா மாறினதை எல்லாம் வேடிக்கையும் பார்த்துண்டு இருந்துட்டு இப்ப வந்து விமோ

சனத்துக்கு வழி கேட்கறியே... கோபம் கூடாதுங்கற விரதத்துல இருக்கற என்னையே உன்னோட செயல் கோபப்பட வெச்சுடும் போல இருக்கேப்பா... இப்ப கூட நான் கோபத்தை கட்டுப்படுத் தின்டு தான் உன்னோட பேசின்டு இருக்கேன்.''

''பெருமாளுக்கே பல சமயங்கள்ள கோபம் வந்து அதனால சம்ஹாரங்கள் நடந்துருக்கும்போது உங்களுக்கு கோபம் வரதுல என்னண்ணா தப்பு. என்ன நீங்க அடிச்சாலும் நான் வாங்கிக் கறேன்...''

''அடிக்கறதா? அதெல்லாம் அறிவிலிகளோட செயல். அடியோட வலியும் எவ்வளவு நாழிக்குப்பா இருக்கும்...? ரத்தம் வரவர அடிச்சாக்கூட ஒருவாரம் பத்துநாள்ள குணமாகி பழைய படி ஆயிடுவியே...? ஆனால் உன்னால ஏற்பட்ட பாதகத்தால அற்புதமான ஒரு பிராமண இளைஞன் அனாதையான்னா போயிட்டான்? பிறந்ததுல இருந்து அவன் பட்ட, பட்டுண்டும் இருக்கற பாட்டுக்கு பதிலுக்கு பதில்னு ஒரு அடியை அடிக்கத் தான் முடியுமா?''

''அண்ணா நீங்க பேசறத பார்த்தா எனக்கு விமோசனமே இல்லைங்கற மாதிரில்ல இருக்கு?''

''ஆமாண்டா தேசி... என் மனசுக்கு அப்படித்தான் தோன்றது. ரொம்ப ரொம்ப நல்ல மனுஷாள்ள பலரை நான் கை கால் இல்லாத ஊனத்தோட பாத்துருக்கேன். இத்தனாம் பெரிய உலகத்துல கோடி கோடி பேருக்கு உடம்பைக் கொடுத்து அதுக்குள்ள உசுரைப் புதைச்சு பின்னால அந்த உயிர் வளரக் காரணமாக, சாப்பிட பயிர் பச்சைகளையும் கொடுத்துருக்கற அந்த பெருமாளுக்கு இவாளுக்கு மட்டும் ஒரு கை காலை கொடுக்க மனசு இல்லாம போயிடுத்தே...! எதனால இப்படின்னு பல சமயங்கள்ள விசாரப் பட்டிருக்கேன். இப்ப உன் மூலமா எனக்கு அதுக்கு பதில் கிடைச்சிருக்கு.

பாக்கத்தான் நீ பரம சாதுவான ஒரு பிராமணன். ஆனா உனக்குள்றயும் எவ்வளவு நெஞ்சழுத்தம்? உன் மாதிரி நெஞ் சழுத்தக்காரனை காலம் பூரா தண்டிக்கணும்னா நிரந்தரமா ஊனமாக்கறதுதானே ஒரே வழி?''

"இல்லண்ணா... நான் நெஞ்சழுத்தக்காரனா இருந்தா இப்ப எதுக்கு தாளமாட்டாம உங்களண்ட இறக்கி வைக்கணும்? வத்சலாங்கற என் தர்ம பத்னியை நீங்க ஒரு வார்த்தை சொல்ல மாட்டேங்கறேளேன்னா?

"அவளை எதுக்கு நான் சொல்லணும். அவளா உன்னை ஊருக்கு தெரியாம ஒரு கல்யாணத்த பண்ணிக்கச் சொன்னா...? அவளோட சேர்ந்து வாழ்ந்து பிள்ளையையும் பெத்துக்கச் சொன்னா...?"

"ஒரு பொண்ணு எப்படின்னா அப்படி எல்லாம் சொல்வா... இப்ப கூட ரங்கனை என் பிள்ளைன்னு சொல்ல நான் தயாரா தான் இருக்கேன். அவதானே தற்கொலைங்கற ஆயுதத்தை கைல எடுத்துண்டு என்னை மிரட்றா...?"

"மிரட்டாம... உன்னைப்போலவே அவ எவளோ ஒருத்தனை கல்யாணம் பண்ணிண்டுட்டு அதை மூடி மறைச்சுட்டு உன்னை கல்யாணம் பண்ணிண்டா நீ சும்மா இருப்பியா? அவளாவது உன்னை மிரட்டிண்டு மட்டும்தான் இருக்கா. நீ அவளை கொன்னே புதைச்சிருப்பியே..."

"அண்ணா, வத்சலாவையா நியாயப் படுத்தறேள்?"

"வத்சலாங்கறது உன்வரைல உன் பெண்டாட்டி அது அவளோட பேர். பேரை விடு! ஒரு பொண்ணா நான் அவளைப் பாக்கறேன். தன்னோட புருஷன்கறவன் தனக்கு மட்டுமே சொந்தமானவனா இருக்கணும்கறது தான் இந்த தேசத்து பெண்களோட எதிர்பார்ப்பு. இங்கிலீஷ்ல பொசசிவ்நெஸ்'னு சொல்வா... அது உன் பொண்டாட்டிகிட்டேயும் இருக்கு. வீட்டை விட்டு வெளியே போய் நாலு காசு சம்பாதிக்க வழியில்லாத பெண்கள், வீடே உலகம்னு ஆகி அடைஞ்சே கிடக்கறதால நகை கடைக்கு போகவும் துணிக்கடைக்கு போகவும், விசேஷ நிகழ்ச்சிகள்ள கலந்துக்கவும் அதிகமா ஆர்வம் காட்டுவா. இது மன அழுத்தம் காரணமா, நடக்கற ஒரு சின்ன விஷயம். இன்னும் சிலர் வம்பு புரளின்னு சுவாரஸ்யங்களுக்கு அலைவா. இது எல்லாத்துக்கும் ஒரே காரணம்தான். அவாளோட திறமைக்கும் தகுதிக்கும் ஏற்ற சூழல்ல அவா இல்லைங்கறதுதான்

காரணம். இதை சரியா புரிஞ்சுண்டு அவாளை கட்டிப் போட்டுட்டா அவாளோட மனோசக்தி இப்படி அல்பத்துல கரையாம நல்லதுக்கு பயன்படும்.

வத்சலாவோட கோணலை ஒரு இரண்டு நாள் கவுன்சிலிங்ல சரி பண்ண முடியும். ஆனா உன்னோட தப்பை அப்படி சரி பண்ண முடியுமா?"

சிங்கராச்சாரியார் கேட்ட கேள்வி தேசிகாச்சாரியை திணற அடித்தது. மிரட்சியோடு பார்த்தார். சிங்கராச்சாரியாரிடம் மெலிதாய் ஒரு ஆவேசம் ஆரம்பமானது.

"ஹும்... பாவம் அந்த பிள்ளை! பெத்த தகப்பன் கண் எதிர்லயே ஒரு புழுவைப்போல வளர்ந்ததும் வாழ்ந்ததும் எவ்வளவு பெரிய கொடுமை... ஆனாலும் அந்த ரங்கன் கிட்ட நான் ஒரு வெளிச்சத்தை பார்த்தேன். அவனுக்குன்னு ஒரு பிரத்யேகமான கேரக்டர் இருந்தது. எனக்கு இப்ப சின்னதா ஒரு ஆறுதல் இருக்குன்னா நீ இப்பவாவது என்னண்ட உண்மையை சொன்ன பாரு... அதுதான்!

"அண்ணா இப்ப நான் என்ன பண்ணட்டும். முதல்ல அதை சொல்லுங்கோ?"

"இனியும் நீ தாமதிக்கறதுல அர்த்தம் இல்லை. ரங்கனை இந்த ஸ்ரீரங்கம் அறிய... தப்புதப்பு இந்த லோகமறிய உன் பிள்ளைன்னு நீ சொல்லி ஏத்துக்கணும்."

"நான்தான் தயாரா இருக்கேனே... வத்சலாதானே தடையா இருக்கா..."

"அவளை நான் பாத்துக்கறேன். அவளை நீ என்கிட்ட விட்று."

"இது போதும்ண்ணா எனக்கு... இது போதும்."

தேசிகாச்சாரி மண்டியிட்டிருந்தவர் அப்படியே உடம்பை நீட்டி அவரை சேவிக்க முனைந்தார்.

"போதும் தேசி... இந்த மாதிரி குரு பக்தியைவிட அந்தரங்கத்துல அழுக்குகள் இல்லாம இருக்கறது ஒரு ஆணுக்கு ரொம்ப முக்கியம். ஆசையா காதலிக்கறவாளுக்கு ஆண்மைங்கறது கடைசி

வரை புருஷனா இருக்கறதுலதான் இருக்கு. ஆத்தோட ஒருத்தியை போக விட்றது நல்ல புருஷ லட்சணம் கிடையாது.''

சிங்கராச்சாரியார் வார்த்தைகளால் சவுக்கினை தாயார்படுத்தி அடிக்கத் தொடங்கிவிட்டதை தேசிகாச்சாரியும் புரிந்து கொண்டார்.

''அண்ணா என்னோட தப்புக்கு நீங்களே மெச்சற மாதிரி ஒரு தண்டனையை எனக்கு நான் கொடுத்துப்பேண்ணா. ஆனா அதுக்கு முந்தி, ரங்கனை இனியும் பொணந்தூக்கியா நான் தவிக்கவிடத்தயாரில்ல. அவனை என் பிள்ளைன்னு அறிவிக்க தயாரா இருக்கேன். நீங்க வத்சலா கிட்ட எப்பண்ணா பேசப் போறேள்?''

''அது நாளைக்கே கூட இருக்கலாம். ரொம்ப பக்குவமா அதை நான் செய்ய வேண்டியிருக்கு. அதுக்கு முன்னால உன்கிட்ட ஒரு முக்கியமான கேள்வி.''

''என்னண்ணா... எதுன்னாலும் கேளுங்கோ?''

''நீ தான் தகப்பன்கற அந்த உண்மை ரங்கனுக்கு தெரியுமா?''

''அது எப்படிண்ணா தெரியும். தெரியாதுண்ணா.''

''அப்ப அவன் வரைலயும் இது ஒரு பெரிய ரகசியம். ஆமாம் தானே?''

''அதுல என்ன சந்தேகம். தெரிஞ்சா அப்படியே சந்தோஷத் துலன்னா மிதப்பான்...''

தேசிகாச்சாரி சொன்னதை கேட்ட மாத்திரத்தில் சிங்கராச் சாரியார் முகம் சுளித்தார்.

''அண்ணா... ஏண்ணா நான் ஏதாவது தப்பா சொல்லிட் டேனா?''

''பின்ன... ரங்கனோட நெருங்கி பழகியிருக்கியா நீ...?''

''இ... இல்லன்னா, என்னோட பயமும் குற்ற உணர்ச்சியும் அவனை பார்த்தா கூட பாக்காத மாதிரிதான் போகும்படி செய்திருக்கு.''

''அதான் அவனைப்பத்தி உனக்கு தெரியல.''

''அப்படின்னா நீங்க என்ன சொல்லவரேள்...''

''உன் ஆத்துக்காரி ரங்கனை ஏத்துக்கறது கூட எனக்கு பெருசு லடையாது. ரங்கன் உங்களை ஏத்துக்கறது தான் என் வரைல பெருசு.''

''அப்படின்னா?''

''முதல்ல அவன்கிட்ட நான் பேசறேன். அவனை ரெடி பண்ணிட்டு நான் வத்சலா கிட்ட வரேன். அதுவரை நீ இவ்வளவு நாள் இருந்த மாதிரி அதே அழுத்தத்தோடயே இருந்துரு.''

''அப்படியே செய்யறேன். நாளைக்கு ஸ்ரீதரனோட பத்து...''

தேசிகாச்சாரியின் கண்களில் திடும்மென்று அணை மதகு திறந்த மாதிரி கண்ணீர் பீறிட்டது.

''அந்த காரியங்களை நல்லபடி முடி. இந்த விஷயத்தை வேகமாகவும் இல்லாம தாமதமாகவும் இல்லாம கவனமா செய்யணும். அது என் பொறுப்பு.''

சக்கரவர்த்தியாரின் அகத்துக்குள் திரும்பவும் ஒரு சந்தோஷப் பிரவாகம்.

''அப்பா ஸ்ரீ வத்சன் சென்னை வந்துட்டான்பா... இப்பதான் தந்தி வந்தது. திருச்சிக்கு கிளம்பி வரேன்னு சொன்னவனை நான் தான் தடுத்துட்டேன். நீங்க கொஞ்சம் அவனோட பேசறேளா?'' என்று சக்கரவர்த்தியிடம் ஆரம்பித்தான் சீமா.

''நான் பேசறது இருக்கட்டும். நீ எதுக்கு அவாளை இங்க வர வேண்டாம்னே...?''

''அவா வர வேண்டாம் மாமா... இந்த ஊர்லயோ, இல்ல இந்த ஆத்துலயோ எந்த ஒரு நல்ல காரியமும் நடக்க வேண்டாம். விடிஞ்சா அந்த ஸ்ரீதரனுக்கு பத்து. இப்ப அவா வரதும் நாம கல்யாணப் பேச்சு பேசறதும் நன்னா இல்லை. அதனால நாம கிளம்பிப் போய் அவாளை சென்னைல சந்திச்சு பேசி கல்யாண தேதிய முடிவு பண்ணிட்றதுதான்சரி...''

என்று சீமா சொல்ல வேண்டிய பதிலை ரேவதி முந்திக் கொண்டு வந்து சொன்னாள்.

அவள் சொன்னதில் இருக்கும் நியாயம் சக்கரவர்த்தியையும் மௌனத்தில் ஆழ்த்தியது.

''அப்பா. இன்னிக்கே ராத்திரி ராக்ஃபோர்ட்ல கிளம்பிட லாம்பா. நெட்ல பார்த்தேன். செகண்ட் க்ளாஸ் ஏ.சில. இடம் இருக்கு. இப்பவே ஈ டிக்கெட் போட்டுடுவேன்.''

சீமா ஒட்டப் பந்தயக்காரன் போல துடிப்போடு அவரைப் பார்த்தாள்.

அவரிடம் ஆழ்ந்த சிந்தனை!

மைதிலி மாமியாரை ஒரு பார்வை பார்த்து ஒரு திருஷ்ட ஜாடை காட்டினாள். அதை தொடர்ந்து ஜானகி வேகம் வந்தது போல முன் வந்தாள்.

''ஏன்னா இன்னும் என்ன யோசனை?''

''இல்ல... இது பத்தி மைதிலிக்குட்டிக்கு தெரியுமா...? அவ அபிப்ராயத்த கேட்க வேண்டாமா?''

''அதுசரி... அவளுக்கு தெரியாமதான் நாங்க இவ்வளவு தூரம் பேசறோமாக்கும். எல்லாம் அவகிட்ட சொல்லியாச்சு.''

''எங்க அவ?''

''அவ கோயிலுக்குப் போயிருக்கா மாமா...''

''கோயிலுக்கா... இந்த மத்யானத்துல எந்த சன்னதிய திறந்து வெச்சிண்டுருக்கா.''

''கோயிலுக்குன்னு சொல்லிட்டு சினேகிதியாத்துக்கு கூட போயிருக்கலாம்.''

அவ வரட்டும் அவகிட்ட நான் கொஞ்சம் பேசிட்றேன்.

''அதுக்குள்ள இந்த டிக்கெட்டும் இல்லாம போயிடும்பா... ஈ டிக்கட் வந்ததுல இருந்து எல்லா ட்ரெயினுமே வேகமா ஃபுல் ஆயிட்றது அப்புறம் டிக்கட் கிடைக்காது.''

''ஏண்டா ரயில்ல டிக்கட் கிடைக்காதுங்கறதுக்காக ஒரு பெண்ணோட விருப்பத்தை டேக் இட் ஃபார் கிரேன்டட்னு எடுத்துக்க சொல்றியா? அது ரொம்ப தப்பு...''

சக்கரவர்த்தி ஒரு நியாயமான ஆவேசத்தை காட்டினார்.

''மாமா... மைதிலிக்கு இதுல பரிபூரண சம்மதம். நான் அவகிட்ட பேசிட்டேன். இன்னும் சொல்லப் போனா அவ பயங்கரமான அதிர்ஷ்டசாலி. ஊரே அவளை அதிர்ஷ்டக் கட்டைன்னு சொல்லும்போது மாசம் மூணு லட்ச ரூபா சம்பாதிக்கற திருஷ்ணா இவளுக்கு புருஷனா வரதுங்கறது ஒரு பெரிய அதிர்ஷ்டக்காரியா இவளை ஆக்கப் போற விஷயம். நீங்க எல்லாத்தையும் அவ கிட்ட வசதி போல பேசிக்கோங்க.

நாம நாளைக்கு பிள்ளை ஆத்துக்காராளை சந்திக்கிறோம். வேகமா கல்யாண தேதியையும் முடிவு செய்யறோம். அதுக்கு நாம இன்னிக்கு புறப்பட்டாதான் சரியா இருக்கும்.''

ரேவதியின் அழுத்தமான பேச்சு சக்கரவர்த்தியை தலையாட்ட வைத்து விட்டது.

''சரி... நீ டிக்கட்டை புக் பண்ணு... அவ வரட்டும் நான் பேசிக்கிறேன். அவ எனக்கு இப்ப கல்யாணத்துல இஷ்டம் இல்லைங்கற மாதிரி பேசினா அப்புறம் எனக்கு கெட்ட கோபம் வரும் பாத்துக்குங்கோ...''

''அதுசரி... அப்படி அவ ஏதாவது சொன்னா, கன்னிக்கடனை வெச்சுண்டு காலம் தள்றது சிரமமா இருக்கு. உன் நல்லதுக்காக தான் கஷ்டப்பட்றோம்னு சொல்லி அவளை சம்மதிக்க வைக்கணுமே ஒழிய அவ கிட்ட தொங்கிண்டு நிக்கப்படாது.

எப்ப பண்ண புண்ணியமோ இவ்வளவு மோசமான ஸ்திதி யிலையும் ஒரு நல்ல இடம் வந்துருக்குன்னு சந்தோஷப்படாம இது என்ன பேச்சு?'' என்று ஜானகியும் ஒரு இடி இடித்தாள்.

சக்கரவர்த்தி அய்யங்காரிடம் மட்டும் எதனாலும் மனம் சமாதானமாகவில்லை. ஏதோ ஒன்று நிரடியது!

அதை அவர் முகமும் காட்டிக் கொடுத்தது.

ரேவதியும் அதை கவனித்தாள்.

சீமாவின் காதோரமாக ''உங்க தங்கை எங்கேன்னு நான் போய் பார்த்து அவளை எப்படி கட்டிப் போடணுமோ அப்படி கட்டிப் போட்டுக்கறேன். அந்த ரங்கன் ஊரை விட்டு கிளம்பிட்டானான்னு ஒரு பார்வை நீங்க பார்த்துருங்கோ.

அவன் இங்க இருந்தா இவ திரும்பப்போய் அவனை நோண்டி னாலும் நோண்டுவா...'' என்றாள். சீமாவுக்கு குப்பென்று வியர்த்தது.

''ஏண்டி இப்படி என்ன பயமுறுத்தறே?''

''பயமுறுத்தறவ உங்க அருமைத் தங்கை. நான் இல்ல...''

''முதல்ல டிக்கெட்டை போட்றேன். அப்புறமா அவனைப் போய் பாக்கறேன். நீ சொல்ற மாதிரி அவன் மட்டும் கிளம்பாம இருந்தா ஃப்ளைட்ல டிக்கட் எடுத்தாவது வெளியூருக்கு அனுப்பிட்டு வந்து மறுவேலை பார்க்கறேன்.''

என்ற சீமா தனது அறையை நோக்கி ஓடினாள். லேப் டாப்பை தூக்கி மடி மேல் வைத்துக்கொண்டு ஆன் லைனில் ரயில்வேக்குள் நுழைந்து டிக்கெட்டை ரிசர்வ் செய்து முடித்தாள்.

அதே வேகத்தில் பீரோவை திறந்து ஒரு பத்தாயிரம் ரூபாயை எடுத்து பாக்கெட்டில் வைத்துக்கொண்டு வெளியே போய் பைக்கை உதைத்து ஸ்டார்ட் செய்தாள்.

கோவிந்தன் சைக்கிள் கடை! முகப்பில் ஒரு மாருதி கார் வந்து நின்றது. காரில் இருந்து தடியாய் ஒருவன் இறங்கினான். பார்க்க அழுக்காய் லுங்கி கட்டி இருந்தான். கோவிந்தனையும் ஏறிட்டவன் 'ரங்கன் இல்லையா?' என்று கேட்டான்.

'அவன் இங்க இருப்பான்னு உனக்கு யார்யா சொன்னா?'' கோவிந்தன் திருப்பிக்கேட்டான்.

''கேட்டா கேட்ட கேள்விக்கு பதில் சொல். நான் எம்.எல்.ஏ. அனுப்பி வந்திருக்கேன்...''

''எம்எல்ஏ வா... பார்றா! ஆமா என்ன விசயம்?''

''எம்எல்ஏவோட உறவுக்காரர் ஒருத்தர் ஆத்தோட போய்ட்டாரு.''

''அதான பார்த்தேன்... ரங்கன்லாம் இனி பொணும் தூக்க மாட்டான். போய் உன் எம்எல்ஏ கிட்ட சொல்லு...''

கோவிந்தன் சைக்கிள் சக்கரம் ஒன்றுக்கு கோட்டம் பார்த்தபடியே சொன்ன பதில் அவனுக்கு எரிச்சலை தந்தது.

''ஏ சைக்கிளு... இங்க கடை போட்டு நீ பொழப்பு நடத்தணுமா வேணாமா?'' என்று அவனிடமும் கோபம் பீறிட்டது. அது கோவிந்தனையும் உசுப்பி விட்டது. பதிலுக்கு வாயைத் திறந்த போது கடைக்குள் இருந்து ரங்கன் வெளிப்பட்டிருந்தான். வேட்டியை மடித்து கட்டிக்கொண்டே காரின் பின்பக்கமும் ஏறி அமரத் தொடங்கினான். கோவிந்தனுக்கு அது கன்னத்தில் அறைந்த மாதிரி இருந்தது!

42

'மாதவப் பிறப்பே பெண்ணென்று
மாநிலத்தில் ஒரு பாடலுண்டு
யாதவக் கண்ணனும் துருபதிக்கு
கூவிச் சேவித்த பிறகே அருளியதால்
பாதகப் பிறப்பே நாங்களென்று
பாவையாரிடம் ஒரு கருத்து இன்று!'

காரில் ஏறிக்கொண்டு கடமையைச் செய்ய புறப்பட்டுவிட்ட ரங்கனை கோவிந்தன் கோபத்தோடு பார்த்தான். அவன் பார்க்கப் பார்க்கவே கார் கிளம்பி விட்டது.

''நீயும் திருந்தப் போறதில்ல. இந்த ஊரும் உன்னை திருந்த விடப்போறதில்லை'' என்று வாய்விட்டே முணுமுணுத்துக் கொண்டான்!

கல்லணைக்குப் பக்கத்தில் கரையோரமாய் அந்த கார் தேங்கி நின்றது. காரை விட்டு இறங்கிய ரங்கன் கண்களில் ராட்சசமாய் மண் அள்ளும் பொக்லைனர் எந்திரம் ஒன்று ஆற்றின் கரையில் மணல் அள்ளிய நிலையில் நின்றிருக்க... சில லாரிகளும் டிராக்டர்களும் கண்ணில் பட்டன.

கரையோர சாலையில் வானத்துக்கே ஒட்டடை அடிக்க கிளம்பிவிட்ட ஜோரில் ஒரு புளியமரம். அதன் நிழலில் அரசியல்வாதிகளை உத்தேசம் செய்தே வடிவமைக்கப்பட்டது

போன்ற டாடா சுமோ ஒன்று நின்றிருக்க அதனுள் எம்.எல்.ஏ.
சகலை சுடலையாண்டி அமர்ந்து கொண்டிருந்தார்.

இன்று யாரும் தனியாயிருக்கிறேன் பொழுது போகவில்லை
போரடிக்கிறது என்றெல்லாம் கூற முடியாது! இதயம் இல்லாத
மனிதன் கூட இருப்பான் ஆனால் செல்போன் இல்லாமலோ யாரு
அதைக்கொண்டு யாரிடமாவது எதையாவது பேசாமலோ யாரு
இருக்கிறார்கள்?

சுடலையாண்டியும் யாருடனோ பேசிக்கொண்டிருந்தார்.

ரங்கனை அவர் முன்னால் அழைத்துச் சென்று நிறுத்தவும்
காரின் கண்ணாடி கட்டைவிரல் பட்டன் அழுத்தத்தில் இறங்
இறங்கிட சிலீர் என்று ஏ.சி.காற்று ரங்கன் முகத்தில் மோதியது.

ரங்கனுக்கு அவரை வணங்கவெல்லாம் தோன்றவில்லை.
வெறித்தான் கூடவந்தவனுக்கு நிரடியது.

"ஐயாதான் எம்.எல்.ஏ.வோட சகலை. வணக்கம் சொல்லாம
வெறிக்கிறியே" என்றான்.

"விடுவிடு... மரியாதையைக் கேட்டு வாங்கக்கூடாது" என்றார்
அவரும். அப்படியே "நீதான் ஆத்துக்குள்ள சிக்கற பொணங்களை
அள்ளிப் போட்ற பொணந்தூக்கியா?" என்று அவன் முன்
அலட்சியமாக ஒரு கேள்வியைக் கேட்டார்.

"என் பேர் ரங்கன்... பொணந்தூக்கறது என் வரைல நான்
பரிதாபப்பட்டு செய்யற ஒரு செயல். இங்க யாரை இந்த
காவேரிக்கழுதை விழுங்கினாள்னு சொன்னா நானும் அள்ளிப்
போட்டுட்டுப் போய்கிட்டே இருப்பேன்" என்று சுயமரியாதை
துளியும் குறையாதபடி பதிலளித்தான் ரங்கன்.

அவர், அவன் பேச்சை ரசித்தது போல் தெரிந்தது.

"காவிரி உனக்கு கழுதையா?" என்று உதட்டைச் சுழித்த
படியே கேட்டார்.

"நான் தப்பா சொல்லிட்டேன். கழுதை நல்லா உழைக்கற
ஜென்மம். இந்த காவிரியை ராட்சஸி, பாதகி, அரக்கின்னுதான்
சொல்லணும்."

"உனக்கு சோறு போட்ற ஆத்துப் பாத்தா நீ இப்படி எல்லாம்
சொல்றே?"

"இப்ப எதுக்கு இந்தக் கேள்வி எல்லாம்? நாம இங்க பேசிகிட்டே
இருக்க இருக்க ஆத்துக்கு அடிமணல்ல உடம்பு சிக்கியிருந்தா
கொஞ்சம் கொஞ்சமா மண் மூடிக்கும். அப்புறம் உடம்பை
இழுத்து போட்றது கஷ்டமாயிடும். ஆத்துல சிக்கினது யாரு?"

"மண் அள்ள வந்த தர்மன்கற ஒருத்தன் இழுவையான பக்கம்
போய் சுழல்ல சிக்கிட்டான். உடம்பு கிடைக்கலன்னா நான்
கொலை செய்து புதைச்சுட்டதா எதிர்க்கட்சிக்காரன் ரகளைல
இறங்கிடுவான். ஏன்னா எம்.எல்.ஏ. என் சகலை ஆச்சே?"

"இங்கல்லாம் மண் அள்ள மாட்டாங்களே...?"

"நான் அரசாங்க அனுமதியோடதான் அள்றேன். இப்பதான்
எல்லா பேங்க்லயும் இஷ்டத்துக்கும் லோன் தர்றாங்களே...
அதனால குப்பன் சுப்பன்லாம் கூட வீடு கட்ட ஆசைப்பட்றான்.
அதுக்கு மண் வேணுமே? ஆத்து மண் இல்லாம கட்டடம் கட்ட
முடியுமா? எங்க செரிவா இருக்குதோ அங்க போய்
அள்ளுனாத்தானே மக்களுக்கும் கொடுக்க முடியும்?"

அவருடைய பதிலில் பல கேள்விகளுக்கான பதில் அடங்கி
யிருந்தது. ஒரு சாதுர்யமும் ஒளிந்திருந்தது. ரங்கனும் அதற்கு மேல்
எதுவும் பேசாமல் அங்கேயே சட்டையைக் கழற்றத் தொடங்
கினான். வேட்டியை தார்க்கச்சு போல கட்டிக்கொண்டான்.
கையை சூடு பரக்க பரபரவென்று தேய்த்துக்கொண்டு அந்த
மரத்தடியிலேயே வார்ம்அப்பாக உட்கார்ந்து உட்கார்ந்து எழுந்து
சில பயிற்சிகளைச் செய்தான்.

பின் ஆற்றுக்குள் இறங்குவதற்காக கரையோரச் சரிவில்
வேகமாக சறுக்கத் தொடங்கினான். சுடலையாண்டிக்கு அவன்
செயல்கள் எல்லாமே சிறிய அளவில் பிரமிப்பாக இருந்தது. தன்
சகாவிடம் "என்னய்யா கூலியை பத்தியே பேசாம ஆத்துல
இறங்கறான். வித்தியாசமான ஆளா இருக்கானே?" என்றார்.

"ஆமாங்க பெரிய ரோசக்காரன். ஆனா எவ்வளவு கொடுத்
தாலும் வாங்கிக்குவான்னு தான் ஊருக்குள்ள சொன்னாங்க."

"உடம்பை எடுத்துடுவானா?"

"அதெல்லாம்... சீரங்கத்துல கதை சொல்றாரே ஒரு ஐயர்... அவர் ஆத்துல தொலைச்ச மோதிரத்தையே எடுத்துத் தந்தீங்க... ணாம்ல!"

"துடியான ஆளாத்தான் இருக்கான். ஆத்தப்பத்தியும் நல்லா தெரிஞ்சு வெச்சிருக்கானே?"

"மூணு வயசுல இருந்தே இதான் பொழப்பாம். தாய் தகப்பன் இல்லாத அனாதையாம்ணே."

"அப்ப இவன்தான் நம்ம மண் குவாரிக்கு சரியான ஆள்..."

"என்னண்ணெ சொல்றீங்க?"

"மடக்கிப்போடுங்கடா. பொணம் தூக்கறவனுக்கு மாசம் பத்தாயிரம் சம்பளம். தினம் கறி சோறுன்னா வேண்டாங்குமா? காவிரி ஆத்துல எங்க எவ்வளவு மண்ணு இருக்குதுன்னு சொல்றதும் அள்றதும்தான் இனி இவன் வேலை."

"பொணத்தோட முதல்ல வரட்டும்ணே... நீங்களே சொல்லுங்க என்ன சொல்றான்னு பார்ப்போம்..."

"இதுல சொல்ல என்ன இருக்கு? இவன் நமக்கு வேணும்டா விடாதீங்க."

"அவர் கட்டளையிடும்போதே போலீஸ் ஜீப்பும் சில கார்களும் வந்து சேர்ந்தன.

"அண்ணே போலீஸ் வந்துடிச்சி. உங்க சகலை எல்லாம் சொல்லியிருப்பாருல்ல..?" என்று மெல்லிய குரலுக்கு மாறிய வனாக காதோரமாக கேட்டான். அவரும் "அதெல்லாம் தெளிவா சொல்லியிருப்பாரு நம்ம ஆளு ஆமா பாடி நல்லா ஊதியிருக்கும்தானே?"

"நிச்சயமா...?"

"பாத்துடா... பாடியை எடுத்தோம் காட்டுக்குப் போனோம் எரிச்சோம்னு இருக்கணும். நாமதான் தண்ணியில அமுக்கி கொலை செய்தோம்கறதே தெரியக் கூடாது..."

"அதெல்லாம் பாடி கிடைச்ச நிமிஷம் நான் துணியச் சுத்தி மூடிட மாட்டேன். போஸ்ட்மாட்டம் பண்ற டாக்டருக்கு தகவல் சொல்லிட்டீங்கதானே?"

"அரசாங்க மட்டத்துல எவனும் ஒரு வார்த்தை பேச மாட்டான். பேசுனா இப்ப செத்தானே... இவன் கதிதான்."

சுடலையாண்டி அவனுக்கான பதிலோடு காரை விட்டு இறங்கி எதிரில் வந்த எஸ்.ஐ. நோக்கி சிரித்தார். எஸ்.ஐ.யும் மிக மரியாதை யாக ஒரு வணக்கத்தை சொன்னபடி "ஐயா நல்லா இருக்கீங் களா?" என்றபடி அருகில் வந்தார்.

"வாய்யா எஸ்.ஐ... நீ எப்படி இருக்கே அதைச்சொல்லு..."

"ஐயா புண்ணியத்துல நல்லாவே இருக்கேன்க."

"அப்ப இப்ப இருக்கற ஸ்டேஷன்ல நல்லாவே கல்லா ரொம்புதுன்னு சொல்லு..."

"எங்கங்க? சாராயக்கார இடும்பனை குண்டர் சட்டத்துல கலெக்டர் உள்ள போட்டுட்டாரு. அவன்தான் நல்லா கவனிச்சு இட்டிருந்தான்..."

"அட ஆமால்ல... இடும்பன் ஒரு லூசுப்பய... இப்படியா மீடியாக்காரங்க பாக்கற மாதிரி நடந்துக்குவான்."

"இல்லீங்க. அது அம்மா மண்டபம் ரங்கன்கறவன் பண்ண வேலை..."

"யாரு அது... புதுசா இருக்கே?"

அண்ணே இப்ப ஆத்துல பொணம் தூக்க இறங்கியிருக்கற இந்த ரங்கனைத்தாண்ணே எஸ்.ஐ. சொல்றாரு."

"பார்றா... இந்த சுள்ளான் இடும்பனுக்கே ஆப்பு வெச் சுட்டானா?"

"ஆமாண்ணே... நீங்க பாட்டுக்கு பொசுக்குன்னு நம்ம கூட்டத்துல சேர்த்துடாதீங்க. என் வரைல அவன் ஒரு நக்சலைட் புத்திக்காரன். எப்ப எப்படி திரும்புவான்னே சொல்ல முடியாது."

சகாவின் பதில் சுடலையாண்டியின் நெற்றியில் சுருக்கம் விழவைத்தது. எஸ்.ஐ.யும் "அப்ப நான் போய் என்னன்னு பாக்கறேன்யா..." என்று விலகிக்கொண்டார்.

அதற்குள் ரங்கனும் இறந்துபோன உடம்பை இழுத்தபடி ஆற்றின் ஒரு பகுதியில் நீந்தி வந்து கொண்டிருந்தான். அந்த

காட்சியே பரபரப்பாக இருந்தது. அந்த சாலைமேல் பயணி
பவர்கள் எல்லாம் அங்கங்கே நின்று பார்க்க ஆரம்பித்தனர்.
பிணம் ஒன்றும் பெரிதாய் ஊதியிருக்கவில்லை!
கட்டையாகத்தான் காட்சி தந்தது.
ரங்கனும் கரையில் கிடத்திய நொடி சுடலையாண்டியின்
ஆட்கள் விறுவிறுவென்று வேட்டித் துணியால் மூடி
ஸ்ட்ரெச்சர் ஒன்று வந்து சேர்ந்திட தூக்கிக்கொண்டு வேகமா
நோக்கி ஓடத்தொடங்கினர். அப்போதுதான் ஒரு ஆட்டோ வந்து
சேர, அதில் இருந்து ஒரு வயதான பெண்ணும் இளம் பெண்
ஒருத்தியும் தலை விரிகோலமாக வாயிலும் வயிற்றிலும் அடித்துக்
கொண்டு ஓடிவந்தனர்.

''ஏலே ராசா... தர்மா போயிட்டியாடா? ஐயோ என் தங்கம்
காலைல கூட அம்மா போய்ட்டு வரேன்னுட்டு வாயார சொல்
லிட்டு போனியே... இப்ப இப்படி ஆயிட்டியே ஐயோ எங்க என்
மவன் உடம்பு...'' என்று வயதானவள் அலறியதில் இறந்தவன்
பெயர் தர்மன் என்பதும் அவன் அவளது மகன் என்பதும்
எல்லாருக்கும் தெரிந்தது.

அதற்குள் ஒரு போலீஸ்காரர் அவர்களிடம் வந்து
''இந்தாம்மா... கத்தாம அந்த வேன்ல போய் ஏறு. ஆத்துல வேல
பாக்கறவங்க பாத்து ஜாக்ரதையா வேலை செய்யணும்.
அக்கரைக்கு நீந்திப் போறேன்னு பந்தயம்லாம் கட்டுனா
இப்படிதான் ஆகும்'' என்று தர்மனின் சாவுக்கு ஒரு புதுக்
காரணத்தையும் சொல்லி முடித்தார்.

''இல்லய்யா... என் மவன் அப்படி எல்லாம் பந்தயம்
கட்டறவனே கிடையாது... அவனுக்கு நீச்சலும் தெரியாது.''

''அப்ப நான் பொய் சொல்றேனா?''

''நான் அப்படி சொல்லலேங்க. வேற ஏதோ நடந்துருக்கு.''

''அதெல்லாம் ஒண்ணும் நடக்கல. நீ வேன்ல ஏறு. போகப்
போக பேசிக்கலாம்'' என்று அவர்கள் இருவரையும் வேனில்
ஏற்றுவதிலேயே குறியாக இருந்தார் அவர்.

அவர்கள் பேச்சு ரங்கன் காதிலும் விழுந்தது.

''சரி சரி இந்தா...'' என்று ஒரு குரலும் அவன் முன்னால் ரூபாய்
நோட்டுக் கட்டும் நீண்டது. நிச்சயம் பத்தாயிரத்துக்கு மேல்
இருக்கும்.

''என்னங்க இது?''

''உனக்கு கூலிய்யா...''

''இவ்வளவா?''

''புடிய்யா... அண்ணனுக்கு உன்னை ரொம்ப புடிச்சிப் போச்சு.
போய் சந்தோசமா செலவு பண்ணு. ஆனாலும் நீ பெரிய
ஜித்தன்யா... தண்ணில இறங்கினது தெரியலை பொணத்தோட
வந்துட்டியே...''

''செத்தவன் நெஜமா மூச்சு முட்டி செத்துருந்தா உடம்புக்குள்ள
தண்ணி ஏறியிருக்கும் இழுத்துப் போடவும் நேரமாயிருக்கும்.
பொணத்தோட வயித்துலயும் சுத்தமா தண்ணி இல்லை. கழுத்து
கிட்டேயும் தோல் பிஞ்சுக்கிடந்துச்சி. என்னவோ பண்ணி
யிருக்கீங்க.''

ரங்கன் ஒரு தினுசான குரலில் பேசியது பணத்தை நீட்டியபடி
நிற்பவனை அரட்டியது.

''என்னவோ பண்ணியிருக்கீங்கன்னா?''

''அதை எதுக்கு நான் இங்க சொல்லிகிட்டு...'' என்று
கேட்டபடியே பணக்கட்டை அவன் கையில் இருந்து பிடுங்கிக்
கொண்டான்.

கழட்டிப் போட்டிருந்த சட்டையை ஆத்தோரமாய் ஒரு புதர்
மேல் போட்டிருந்தான். அப்படியே எடுத்து அணிந்து கொண்டே
சரிவில் ஏறினான். டவுன் பஸ் ஒன்று அலுமினிய உடம்போடு
திருச்சி நோக்கி ஊர்ந்து கொண்டிருந்தது. ஓடிப்போய் அதில்
ஏறிக்கொண்டான்.

பணத்தைக் கொடுத்தவன் டாடா சுமோ அருகில் கலக்கம்
குறையாமல் வந்து நின்றான். பிணத்தை ஏற்றிக்கொண்ட வேனும்
போலீஸ் ஜீப்பும் கிளம்பிவிட்டிருந்தன. சுடலையாண்டி மட்டும்
பாத்திருந்து கேட்டார்.

''ஏண்டா உன் முகம் ஒரு மாதிரி இருக்கு?''

"அது வந்துண்ணே..."

"முழுங்காம சொல்லு..."

"ரங்கனுக்கு நாம தர்மனைப் போட்டுத்தள்ளுனது தெரிஞ்சி போச்சுண்ணே..."

அந்த பதில் சுடலையாண்டி வரையில் ஒரு மின் தாக்கல் போல் அவரை சுண்ட விட்டது. முகம்மாறிப் போனது.

"எப்படிடா?"

"அவன் சுள்ளாண்ணே... உடம்பைப் பாத்தே கண்டு பிடிச்சிட்டான்."

"அப்புறம் ஏண்டா அவனை போக விட்டே?"

"விட்டுத் தாண்ணே பிடிக்கணும். முகத்துக்கு நேரா கொலை பண்ணிட்டீங்கன்னு சொல்லலை. பதிலுக்கு என்னவோ பண்ணியிருக்கீங்கன்னான்...

"எப்படிச் சொன்னா என்ன? விபத்துக்கும் கொலைக்கும் ஜென்ம தண்டனைதான் வித்தியாசம். கோர்ட்ல நிரூபிச்சிட்டா தூக்குக்கு கூட சான்ஸ் இருக்குது" அவர் பரபரத்தார்.

"விடுங்கண்ணே... பின்னாலேயே போய் கவனிச்சிகிட்டே இருக்கேன். இடும்பனை மாட்ட விட்ட மாதிரி எதாவது திருகு வேலை பாக்கப்போனா நம்ம ஆளுங்கள விட்டு அள்ளிகிட்டு வந்துட்றேன். நம்மளப்பத்தி போட்டுக்கொடுக்கப் பார்த்த தர்மனை அனுப்பின இடத்துக்கே இவனையும் அனுப்பி உடம்பையும் சிதைச்சிடுவோம்.

தர்மனுக்காவது அம்மா பொண்டாட்டின்னு ரெண்டு பேர் வந்தாங்க. இவனுக்கு யாரும் இல்லண்ணே. நாம கூட தேவை யில்லை. இடும்பன் ஆளுங்களுக்கு தகவல் தந்தா போதும் சவுக்குத் தோப்புல வெச்சு காணாப்பொணம் ஆக்கிடுவாங்க.

சுடலையாண்டியும் மெல்லிய தலையசைப்போடு கேட்டுக் கொண்டார். ஆனாலும் முகத்தில் பதற்றம் விலகவில்லை!

கோயிலுக்குள் ஆயிரங்கால் மண்டபத்தில் ஒரு கிளிக்கூண்டில் சாய்ந்தவளாக அமர்ந்திருந்தாள் மைதிலி. சாதாரணமாகப்

பார்த்தால் தெரியாது. கல்லூரியில் படிக்கும் போது கஷ்டமான பாடம் என்றால் புத்தகத்தோடு இங்கே தான் வருவாள். அதை ரேவதி கச்சிதமாக யூகித்து அவள் முன் வந்து நின்றது தான் ஆச்சரியம். அவளைப்பார்க்க மைதிலிக்கும் கொஞ்சம் பகீரென்று ஆனது.

"ஒரு ரவுண்டு எல்லார் ஆத்துக்கும் போய்ட்டு கடைசியா நீ இங்கதான் இருந்தாகணும்னு வந்தேன். நல்லவேளை எங்கேயும் ஓடி கீடி போகாம இங்க இருந்து என் வயித்துல பாலை வார்த்துட்டே."

ரேவதியின் ஆரம்பமே அதிரடியாக இருந்தது.

"மன்னி ப்ளீஸ்... நான் உங்களோட மட்டுமில்ல யாரோ டையும் எதையும் பேச விரும்பல. கல்யாணத்துலயும் எனக்கு விருப்பம் இல்லை. என்னண்ட அந்த அமெரிக்கா காரனுக்காக எதையும் பேச வேண்டாம்."

மைதிலியும் மட்டையடியாக ஆரம்பித்தாள்.

"அப்படி எல்லாம் உன் விருப்பப்படி இங்க யாரும் நடக்க முடியாது. அதிகபட்சம் பத்து நாள் தான் நீ மைதிலி சக்கரவர்த்தி. அதுக்கு பிறகு நீ மைதிலி கிருஷ்ணா ஆகியே தீரணும்கறது தான் உன் தலை எழுத்து..."

"என்ன மிரட்றேளா?"

"மிரட்டலை கட்டளைன்னு கூட எடுத்துக்கோ. அந்த கழிசடை ரங்கனை மனசுல வெச்சுண்டு பெரிய ஃபெமினிஸ்ட் மாதிரி நீ பேசறத எல்லாம் கேட்டுக்க முடியாது. இந்த நிமிஷம் உன் விஷயம் எனக்கும் உன் அண்ணாவுக்கும் மட்டும் தான் தெரியும். உங்கப்பாவுக்கு நீ இப்படி ஒரு ஆசையோட இருக்கேன்னு தெரிஞ்சாலே போறும் அவருக்கு ஹார்ட் அட்டாக் உறுதி. நான் ஒண்ணும் மிகையாச் சொல்லல...

உனக்கு தைரியம் இருந்தா இப்பவே என் கூட வந்து என் கிட்ட சொன்ன மாதிரியே உன் அப்பாகிட்ட சொல். அவருக்கு ஹார்ட் அட்டாக் வராம சாதாரணமா கோவிச்சுண்டா கூட நான் உன் பக்கம் வந்துடறேன். என்ன சொல்றே?"

"என் அப்பாவைப் பத்தி எனக்குத் தெரியும். அவர் எப்பவுமே ஒரு ஜென்டில் மேன். என் விருப்பத்துக்கு மாறா இது நான் கல்யாணம் அவர் நடந்துண்டதில்லை. எனக்கு இப்ப இஷ்டமோ அப்படி வேண்டாம்னா அவரும் சரிம்மா உனக்கு எப்ப இஷ்டமோ அப்படி பண்ணிண்டா போச்சுன்னு தான் சொல்வார்... நீங்க உங்க திருவாயை மூடிண்டு சும்மா இருந்தா போதும்."

"நான் என் திருவாயை மூடிண்டா அது உனக்கு தான் கெடுதல். யதார்த்தமா நீ எனக்கு இப்ப கல்யாணம் வேண்டாம்னு சொல்றதுக்கும், ரங்கனை மனசுல வெச்சுண்டு சொல்றதுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கு.

அடுத்து இப்படி ஜாதகம் ஜோசியம்னு பார்க்காம ஒரு நல்ல வரன் நாம ஆசைப்பட்றப்ப வராது."

"வேண்டாம்... எனக்கு இப்ப இல்லை எப்பவுமே கல்யாணம் வேண்டாம்."

"இதை நீ உன் அப்பா கிட்ட சொல்வியா?"

"நிச்சயமா சொல்வேன்."

"சரி நீ சொல்லி முடி நான் உனக்கும் ரங்கனுக்குமான விஷயத்தைச்சொல்லி அவனே உன்னை வேண்டாம்னு சொன்னதையும் அவரண்ட சொல்றேன். அப்புறமா அவர் என்ன ஆகறார்னு பார்ப்போம்."

"மன்னி உங்களுக்கு ஏன் இந்த கொலைவெறி? நீங்களும் ஒரு பொண்ணுதானே? ஒருத்தனை மனசார நினைச்சுட்டு இன்னொருத்தனோட ஒரு பொண்ணால வாழ முடியுமா?"

"போடி போ... வீட்டுக்கு வீடு இன்னிக்கு எல்லாமே ஆசைப் பட்டது கிடைக்காம, கிடைச்சத கட்டிண்டு அழறவா தாண்டி."

"போதும் உங்கள கெஞ்சிக்கேட்டுக்கறேன் என் விஷயத்துல தயவு செய்து தலை இடாதேள். அந்த ரங்கனைப் பத்தியும் அநாவசியமா பேசவேண்டாம்."

"அவனை பத்தி பேசணும்னு எனக்கென்ன நேர்த்திக்கடனா...? நீ தான் பேசவைச்சவளே. நிஜமா சொல்றேன். இப்ப உனக்கு வந்துருக்ற வரனும் சாதாரண இடம் இல்லை. ஹைஜீனிக்கான

அமெரிக்கால 'கொழால தண்ணி வரலை, கரண்ட்டு கட்டு, லேத்துக் கொட்றது, ஆட்டோக்காரன் அநியாயம்னு கஷ்டப் படாம ஜம்முன்னு வாழ ஒரு சந்தர்ப்பம் வந்துருக்கு. இதை விட்டுட்டு அந்த பன்னாடையை பெருசா நினைக்கறியேடி-என்னடி ரசனை உன் ரசனை...?"

"ரங்கன் ஒண்ணும் பன்னாடை இல்ல. உங்களுக்கு என்ன தெரியும் அவரை பத்தி."

"ஆமாம் அவன் ஒரு வைஷ்ணவ ரத்னம்! சாதி, அந்தஸ்து, கேரக்டர்னு எல்லாம் இருக்கற ஒரு வேதாந்த சிரோன் மணி! நான்தான் தப்பா சொல்லிட்டேன்."

"இதெல்லாத்தையும் விட ஒரு முழு ஆம்பளையா இருக்கறத நான் பெருசா நினைக்கறேன்... போறுமா?"

"ஆம்பளைன்னா... எதைவெச்சு சொல்றே? தப்புதண்டா எதுவும் நடந்துடுத்தா உங்களுக்குள்ள...?"

"மன்னி ஈ ஈ ஈ...!" வெடித்து விட்டாள் மைதிலி.

"சும்மா கத்தாதடி... போற வர்றவா திரும்பிப்பாக்கறா பாரு. நீ ஆம்பளைன்னா நான் அப்படித்தான் கேட்பேன்.

"ஏன் இப்படி என்னை சித்ரவதை பண்றேள்?" அவள் கண்களில் இருந்து கண்ணீர் குற்றாலத்தோடு போட்டியிடத் தொடங்கியது.

"எங்க எல்லாரையும் நீ தான் சித்ரவதை பண்ணிண்டிருக்கே. இப்ப முடிவா சொல்றேன். ராத்திரி ராக்ஃபோர்ட்டுல எல்லாரும் சென்னை கிளம்பறோம். இப்ப மணி நாலாகறது. இடைல அஞ்சாறு மணி நேரம் தான் இருக்கு.

எதுவும் பேசாம எங்களோட நீ சென்னைக்கு வந்தா கல்யாணம் நடக்கும். இல்லேன்னா உங்கப்பா உங்கண்ணாக்கு கருமாதி நடக்கும்.

ரெண்டுமே நிச்சயமா நடக்கும். அதுல எனக்கு நிச்சயமா சந்தேகம் கிடையாது.

கல்யாணமா கருமாந்தரமான்னு முடிவு பண்ணிட்டு ஆத்துக்கு வந்து சேர். பந்து இப்ப உன் கைல!"

ரேவதி புதிர் போட்டு விட்டு கிளம்பி விட்டாள். [illegible]
அங்கிருந்து கிளம்பினாள். நேராக ரங்கநாயகித்தாயார் [illegible]
தான் அவள் இலக்காக இருந்தது.

"அம்மா இந்த இக்கட்டுல இருந்து என்னை காப்பாத்து"
என்று அவளுக்குள் பிரார்த்தனைக் குரல்!

43

'ஈன்றிடத்தான் பெண்-அன்றேல் ஈரேழு புவனமேது?
தாங்கிடத்தான் பெண்-அன்றேல் இவ்வுலகில் அமைதியேது?
ஏங்கிடத்தான் பெண்-அன்றேல் ஆண்களுக்கே ஆளுமை ஏது?
"ஆனாலும்...
அவளழுதால் வீடு முதல் நாடு வரை தேறாது போகும்
தலைமுறைகள் என்றென்றும் கோளாறில் நோகும்."

தாயார் சன்னதியில் சுமாரான கூட்டம்!

ஸ்ரீரங்கத்து ராஜாத்தி அவள். சர்வலோக செல்வங்களுக்
கெல்லாம் அதிபதியானவள் வேறு. பவிசுக்கு கேட்க வேண்டுமா?
தலைக்கு கிரீடம் என்ன...? மார்பில் ரத்னாஹாரங்கள் என்ன...?
பட்டு மிளிர அவள் அமர்ந்திருந்த தோரணையே அலாதி.

சுமங்கலிகள் அவளைப் பார்த்தால் மார்பின் மேல் கிடக்கும்
மாங்கல்யத்தைத்தான் பார்ப்பார்கள். அதை பறிகொடுத்த
வர்களோ அதை பார்க்கப் பிடிக்காமல் அவளது திருவடிகளைப்
பார்ப்பார்கள்.

கன்னிப்பெண்களுகோ அவளின் கண்கள்தான் குறி...
மைதிலியும் சன்னதியில் அவளது கண்களைத்தான் பார்த்தாள்.
"நாம அவளைப் பார்க்கறதா பெருசு? அவ நம்மள பாக்கணும்.
ஓரம் சாரமா பார்த்தா கூட போதும். நமக்கு குடை பிடிக்கற
புருஷன் வருவான்! அவளோட அந்திமகாலத்துல யார் முந்திப்
போகறதுங்கற சண்டையே வரும்! 'நீ முந்திப்போ... உன்னை

முறையா வழியனுப்பிட்டு பின்னால நான் வரேன்'னு
அமல்லியா நம்மை அனுப்பியும் வைப்பான்!
இவ பாத்துட்டா அந்தப் பார்வைக்கு அப்படி ஒரு சக்தி!
ஆயுமட்டுமா? வாழற நாள்ல நமக்கு தங்கமா பூட்டுவான்!
கெங்கமாட்டம் பிள்ளைகளையும் தந்து நம்மை பரிபூரணமான
தாயாக்கிப் பார்ப்பான். ஒருநாள் பிரிவுக்கும் ஏங்கி அழும்படி
பண்ணிடுவான். அசலான ஆண்மைங்கற நெருப்புதான் அற்புத
மான பெண்மைங்கற மெழுகுக்கு ரொம்பப் பிடிக்கும். எரிஞ்
சண்டே உருகறதுதான் பெண்மைக்கு லட்சணம்."

என்று மைதிலியின் பாட்டி அடிக்கடி சொல்லுவாள்.
அதெல்லாம் மைதிலிக்குள் ஓடிற்று.

"ஏ ராஜாத்தி... ரங்கநாயகி! நீ என்னை பாக்கறே தானே?
ஏன் எல்லா பெண்களுக்கும் கல்யாணம்கறது தாயக் கட்ட
மாவே இருக்கு? போட்டது விழுந்தா ஆச்சு... இல்லேன்னா...?
என் கண் எதிர்ல நான் உன்னோட ரங்கநாதன் மாதிரி ஒருத்
தனைப் பார்த்துட்டேன். என்னால வேற எந்த நாதனையும்
பார்க்க முடியாது. அவனை எனக்கு கொடு. எப்படிக் கொடுப்
பியோ தெரியாது. சாதி, அந்தஸ்து, குலம், கோத்ரம்னு, ஆழி
அகழி, முதலைகள்னு நிறைய இருக்கு. நான் இவற்றை
தாண்டியாகணும் அதுக்கான தெம்பைக்கொடு."

உருக்கமாய் பிரார்த்தனை செய்தாள். கண்களில் ஜலம்
கோத்துக்கொண்டு கன்னக் கதுப்பில் உருண்டு ஓடியது. பட்டாச்
சாரியும் அதைப்பார்த்தார். என்ன தோன்றியதோ கைநிறைய
மஞ்சளை அள்ளித் தந்தவர். "அழாத... நீ கேட்டதை தாயார்
கொடுப்பாள்" என்றார். சொல்லி வைத்த மாதிரி பக்கத்து சுவரில்
இருந்து கௌளியும் அடித்தது.

"பாரு... கௌளியும் ஆமாங்கறது" என்றார். அடுத்த நொடி
பாதம் வழியாக உச்சி மண்டை வரை ஏறியது போல ஒரு தெம்பு.
கன்னத்தை துடைத்துக்கொண்டு உற்சாகமாகிவிட்டாள்.

மோட்டார் பைக்கை ஸ்டாண்டு போட்டு நிறுத்திவிட்டு
களைப்போடு உள்ளே நுழைந்தான் சீமா! அவனுக்காகவே
காத்திருந்தது போல ஓடிவந்தாள் ரேவதி.

"போன காரியம் என்னாச்சு... அந்த ரங்கனைப் பார்த்து வண்டி ஏத்திவிட்டேளா?"

"இல்ல ரேவதி... அவன் இந்த ஸ்ரீரங்கத்துலயே இல்லை. சல்லடை போட்டு தேடிப் பார்த்துட்டேன். எங்க ஒழிஞ்சானும் தெரியில... ஒருவேளை நான் சொன்னபடி ஊரைவிட்டு போய்ட்டானோ என்னவோ தெரியில..."

"அப்படி போயிருந்தா சந்தோஷம். இல்லேன்னாலும் பாதகம் இல்லை. உங்க தங்கை ஆயிரங்கால் மண்டபத்துலதான் உக்காந்து துண்டு அழுதுண்டுருந்தா. அவளை எப்படி கட்டிப் போடணுமோ அப்படி கட்டிப் போட்டுட்டு வந்துருக்கேன். இருந்தாலும் நீங்களும் ஒரு கட்டு கட்டினாத்தான் நமக்கு நிம்மதி."

"என்னை என்ன பண்ணச்சொல்றே?" சீமா நெற்றி வியர்வையை துடைத்தபடி கேட்டான்.

"இதை மட்டும் நன்னா கேளுங்கோ. கைய நீட்டுங்கோ..."

"எதுக்குடி?"

"நீட்டுங்கோன்னா?"

அவனும் நீட்டினான். நீட்டிய கைமேல் அவள் ஒரு பூச்சி மருந்து பாட்டிலை வைத்தாள்.

"என்னடி இது பூச்சி மருந்து மாதிரி இருக்கு..."

"அதேதான்.. அந்த ரங்கனைத் தவிர யாரையும் நினைச்சு பாக்க மாட்டேன்னு உங்க தங்கை சீன் காட்டினாள்னா அப்ப நீங்க இதை காட்டணும்."

"புரியறது... மிரட்டச் சொல்றே..."

"ஆஹா... உடனே புரிஞ்சுண்டுட்டேளே... என் ராஜா!"

"அப்ப அவ அவன் ஞாபகமாத்தான் இருக்காளா?"

"இல்லேன்னா எதுக்கு இந்த ஆயுதத்தை நான் கைல எடுக்கறேன்?"

"ரேவதி இப்படிப்பட்டவளை ஸ்ரீவத்சன் தம்பிக்கு கல்யாணம் பண்ணி வெச்சு நாளைக்கு ஏதாவது பிரச்சினை வந்துடுத்துன்னா?"

"சரி... அப்ப அந்த ரங்கனுக்கே பண்ணிவெச்சுடுவோமா? எப்படி வசதி...?"

"என்னடி நீ அணுகுண்டை தூக்கிப் போட்றே?"

"பயம் இருக்கோல்லியோ... அப்பசொன்னபடி செய்யுங்கோ."

"கர்மம்டி... இந்த ஆத்துக்குன்னு வரது பார் பிரச்சினை..."

அவன் தலையில் அடித்துக்கொண்டான். அப்போது அவன் எதிரில் சந்தியா வந்தனம் முடித்தவராய் சக்கரவர்த்தியும் வந்தார். பின்னாலேயே கொல்லையில் காயப்போட்டிருந்த துணிகளை மடித்து கையில் சுமந்தபடி ஜானகி.

சொல்லி வைத்த மாதிரி மைதிலியும் உள் நுழைந்தாள்.

"வந்துட்டா வந்துட்டா..." ரேவதி சமையல் கட்டுப்பல்லியாட்டம் சப்தமிட்டாள். சீமாவும் அவள் பக்கம் திரும்பினான். கண்களில் கனல்...

"எங்க ஒழிஞ்சுட்டே... உன்ன எங்கல்லாம் தேட்றது?" ஒரே பாய்ச்சலாய் பாய்ந்தான் சீமா. அவளிடம் அதற்கு பதில் இல்லை. அப்பா எதிரில் உள்ளங்கையை நீட்டி மஞ்சள் காப்பை காட்டினாள்.

"எங்கம்மா... தாயார் சன்னதிக்கு போய்ட்டு வர்றியா?"

சக்கரவர்த்தி மிக இதமாய் கேட்டபடி அந்த மஞ்சள் காப்பை எடுத்து இட்டுக்கொண்டார். கை ஜானகி முன்னாலும் நீண்டது. அவளும் இட்டுக்கொண்டவளாய்.

"நல்ல விஷயம் சொல்ல நினைக்கும்போது மஞ்சள்காப்பை நீட்றே. பெருமாளே எல்லாம் நல்லபடியா முடியணும்" என்று ஒரு பீடிகை போட்டாள்.

"அத்தே... அது என்ன விஷயம்னு நீங்களே சொல்லிடுங்கோ... அப்புறம் இன்னும் இரண்டு மூணு மணி அவகாசம் கூட இல்லை. எல்லாரும் புறப்பட்டாகணும். ஞாபகமிருக்கட்டும்..." என்றாள் ரேவதி.

"எங்கம்மா... எங்க போகப்போறோம்?" மைதிலி கேட்ட விதம் ரேவதியை கீறியது.

"அம்மாடி நாம இன்னிக்கு சென்னை புறப்பட்டோம். எல்லாம் உன் கல்யாண சம்பந்தமாதான். உன் மன்னிக்காரி எல்லாத்தையும் உன் கிட்ட சொல்லிட்டதா சொன்னாளே...?"

சக்கரவர்த்தி கேட்கவும் மைதிலியும், "ஆமாம்ப்பா... அந்த அமெரிக்கா வரன் விஷயமா மன்னி பேசினாப்பா" என்றாள்.

"உனக்கு ஒண்ணும் ஆட்சேபணையில்லையே...?"

"எனக்கு கல்யாணம் பண்ணிக்கவே இஷ்டமில்லப்பா. ஆனா மன்னிக்கு என்னை இந்த ஆத்தை விட்டு அனுப்பினாதான் நிம்மதி திங்கற மாதிரி நடந்துக்கும் போது நான் என்னத்த சொல்ல...?"

"நீ ஏன் அதை துரத்தறதா நினைக்கறே... பொம்மனாட்டி ஜென்மமே நாற்றங்கால் ஜென்மம்டி. பொறந்துட்ட இடம்கறது கொஞ்ச நாளைக்குத்தான். போறஇடம்தான் அவளுக்கு எல்லாம்" என்று தத்துவமாய் ரேவதிக்கு வக்காலத்து வாங்கினாள் ஜானகி.

"அதுக்காக நாத்தைப் பிடுங்கி வயல்ல நடாம நீ சேத்துல நடுவியாக்கும். வாயை மூடு. அவ என்ன சொல்றான்னு கேப்போம்" சக்கரவர்த்தி அதட்டலாக மைதிலிக்கு வக்காலத்து வாங்கினார்.

"அது வந்துப்பா..."

"நீ உன்னை போட்டு குழப்பிக்காதே. பையன பாரு பிடிச்சிருந்தா சரின்னு சொல். இல்லேன்னா ஊருக்குப் போய் லெட்டர் போட்றோம்னு சொன்னா அவா புரிஞ்சுண்டுட்டு போறா..."

"அதுக்கில்லப்பா... ஒரு ஆறுமாசம் இல்ல ஒரு வருஷம் கழிச்சு இந்தப் பேச்ச எடுங்களேன்..."

"அதுவ்ரைக்கும் இந்த வரன் காத்திண்டிருக்காது. உனக்கு இங்க வந்த பிரச்சினை மாதிரி தான் கிருஷ்ணாவுக்கும் அங்க."

இதுவும் ரேவதிதான்...

"மன்னி... விட்டா அந்த கிருஷ்ணாவுக்காக நீங்களே கூட என் கழுத்துல தாலியைக் கட்டிடுவேள் போல இருக்கே...?"

"ஒரு வகைல கிருஷ்ணா எனக்கு தம்பி உறவுதான். அப்படிப் பார்த்தா நான் உனக்கு நாத்தனார் ஆறது. நம்ம சம்பிரதாயத்துல

நாத்தனார் தானே தாலி முடியணும்?" ரேவதியின் பதிலுக்கு பதில் மைதிலியை வாயடைக்க வைத்தது. அதற்கு மேல் என்ன பேசலாம் என்றும் தெரியவில்லை. ஆனால் அவள் சற்றும் எதிர் பாராதபடி சக்கரவர்த்தியிடம் இருந்து பதில் பிறக்கத் தொடங்கியது.

"சீமா நீயும், ரேவதியும் மட்டும் சென்னை போய் ஒரு ஆறுமாச காலத்துக்கு அவாளை பொறுத்துக்கச் சொல். மைதிலியை அவ விருப்பத்துக்கு எதிரா பிடிச்சு தள்ளி விட நான் தயாரா இல்லை. கல்யாணம்கறது ஆசையா சந்தோஷமா நடக்கணும். நாளைக்கு அவ அந்த கிருஷ்ணாவோட மனம் ஒப்பி வாழ முடியாமல் போனா என் பொண்ணை நானே கிணத்துல தள்ளி விட்ட பாவியாகிடுவேன்." என்றார்.

மைதிலிக்கும் நெஞ்சுப்பகுதியில் ஜில்லென்று ஒரு உணர்வு பரவத் தொடங்கியது.

ரேவதிக்கோ தலையில் இடி விழுந்தது போல் இருந்தது.

"மாமா... ஆறுமாசம் எல்லாம் அவா காத்துண்டுருக்க மாட்டா. இடம் பெரிய இடம், வரும்போதே பயன்படுத்திக்கிறதுதான் புத்திசாலித்தனம்..."

"வாஸ்தவம்தான். ஆனா கல்யாணத்துக்கும் புத்திசாலித்தனத்துக்கும் ஒரு சம்பந்தமும் கிடையாதுங்கறத நீ முதல்ல புரிஞ்சுக்கோ. கல்யாணத்தை நாமளும் பண்றது கிடையாது. அது எப்பவோ தீர்மானமான ஒரு விஷயம். என்பொண்ணு வேணும்னா அந்த கிருஷ்ணனோ ராமனோ ஆறுமாசம் காத்திருக்கட்டும். இல்ல எக்கேடோ கெட்டுப் போகட்டும்."

சொல்லிவிட்டு அவர் போயே போய்விட்டார்.

ஜானகியும் பெருமூச்சோடு நகர்ந்தாள். மைதிலி முதல் தடவையாக சற்று மிதப்போடு ரேவதியைப் பார்த்தாள். ரேவதி பதிலுக்கு சீமாவின் காதில் ஏதோ சொன்னாள். சீமாவும் சுறுசுறுப்பானான். மைதிலிக்கு மிக சமீபமாக வந்தவன், "உன் திட்டம் எனக்குத் தெரியும். பிரச்சினையை ஆறுமாசத்துக்கு தள்ளிப்போட்டு நடுவுல ஓடிப்போகலாம்னு மட்டும் கனவு காணாதே. நாளைக்கே கல்யாண தேதியை கன்ஃபார்ம் பண்ணிண்டுதான் சென்னையை விட்டே நாங்க வருவோம். அது

மட்டும் இல்ல. அந்த ரங்கனும் இந்த ஊர்ல இவி இருக்க
மாட்டான். இருக்கவும் நான் விடமாட்டேன். உனக்கு தெரியும்
இருந்தா இப்பவே அப்பாகிட்ட அவனைத்தான் நான் கல்யாணம்
பண்ணிப்பேன்னு சொல் பார்ப்போம்...''

என்று சவால் விடுகிற மாதிரி பேசினான். அவன் அவ்வளவு
கடுமையாக மாறிப் பேசுவான் என்று மைதிலியும் எதிர்பார்க்க
வில்லை. மளுக்கென்று கண்ணிரண்டும் கலங்கி விட்டது.

''உன்னை என் தங்கைன்னு சொல்லிக்கறதுக்கே வெக்கமா
இருக்கு'' என்று அவள் எதிரிலேயே தலையிலும் அடித்துக்
கொண்டான்.

அதற்குள் மாடிக்குப் போய்விட்டு திரும்பி வந்த சக்கரவர்த்தி,
''அவகிட்ட என்னடா முணுமுணுன்னுண்டு... ஒரு ஆறுமாசம்
அவ டயம் கேக்கறா. அப்புறமா அமெரிக்கா போய்ட்டா ஆறு
நாள் இங்க தங்கறதே பெரிய விஷயம்னு ஆயிடும். அவ
ஆசைப்படி இருந்துட்டுதான் போகட்டுமே'' என்றார் சகஜமாக.

''அப்ப சரி மாமா... நாங்க தேதிய குறிச்சிண்டு வந்துட்றோம்.
ஆறுமாசம் கழிச்சு முகூர்த்தம். சரிதானே?''

ரேவதி சரேலென்று நங்கூரம் போட்டாள். ''என்னடா உன்
மன்னி உனக்காக ஆறுமாசம் தவணை கேக்கறேங்கறா... உனக்கு
ஆட்சேபணை இல்லையே...?''

சக்கரவர்த்தி மைதிலியைப் பார்த்தார். தப்பித்து விட்டதாகக்
கருதிய விஷயம் மிகவே உறுதிப்பட்டு திரும்புவதை உணர்ந்த
மைதிலிக்கு இதயம் அடித்துக்கொள்ளத் தொடங்கியது.

''இன்னும் என்ன அவளண்ட கேட்டுண்டு, நீ போய் பேசி
முடிவு பண்ணிடு. கன்னிக் கடனை எல்லாம் வெச்சுண்டு கொஞ்
சிண்டிருக்கக் கூடாது. வேளை வரும்போது அடைச்சுடணும்''
என்று ஜானகியும் ஒரு உறுதிமொழி போல சொல்லவும் ரேவதி
அதை கெட்டியாக பிடித்துக் கொண்டாள்.

''நீங்க வாங்கோன்னா... இனி பேச எதுவுமில்லை. அடுத்தடுத்து
கல்யாண ஏற்பாடுகள் தான்...''

ரேவதியிடம் ஒரு அசுரவேகம் புகுந்துகொண்டு சீமாவையும்
இழுத்துச் செல்லத் தொடங்கியது.

'தேதி இருக்கானா?' குரல் கேட்டு திரும்பினாள் வத்சலா.
வாசற்படி அருகில் சிங்கராச்சாரியார். கையிலும் கோயில்
பிரசாதம்.

''அடடே மாமாவா... வாங்கோ வாங்கோ...'' வத்சலா வேக
மாய் மரியாதையான வாத்சல்யங்களுக்கு மாறினவளாய் எழுந்து
நின்று மடிசார் முந்தானையையும் பதவிசாய் இழுத்து விட்டுக்
கொண்டாள்.

அவரும் உள்ளே வந்தார்.

''எங்க தேசிகாச்சாரி இல்லையா?''

''உக்காருங்கோ... அவர் மெயின் கார்ட் கேட் வரை போய்ட்டு
வரதா சொல்லிட்டுப் போனார். பேங்க்ல ஏதோ வேலைன்னா...''

அவரும் அருகில் இருந்த நாற்காலியில் அமர்ந்தார். அதை
வத்சலாவும் அதிசயமாக உணர்ந்தாள். ஸ்ரீதரன் சாவுக்குக் கூட
விசாரிக்க வராதவர் இப்போது வந்திருக்கிறார். வந்தவர்
உட்காருங்கள் என்றவுடன் உட்கார்ந்தும் விட்டார்.

ஏதோ விஷயம் என்று நொடிக்குள் வத்சலாவும் கணக்குப்
பண்ணி விட்டாள்.

44

'அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு
கொண்டதுவே பெண்ணின் பிறப்பு
உச்சம் அவள் தாய்மைச் சிறப்பு
உண்மை இதற்கேது மறுப்பு?
மெச்சும் அவள் கற்பின் நெருப்பு
காத்திடுதல் ஆணின் பொறுப்பு!''

தனது மடிசார் முந்தானையை வக்கணையாக இழுத்து
மூடிக்கொண்டு அப்படி இழுத்து மூடும் போதே ''நீங்க ஏதோ
பேசணும்னு நினைக்கற மாதிரி என் மனசுக்கு பட்றது.

இல்லேன்னா நீங்க இந்த ஆத்துப் பக்கமெல்லாம் வரத் தேவையே இல்லைங்கறதுதான் என் அபிப்ராயம்...''

என்று முதல் தடவையாக சிங்காரச்சாரியாரையே அரக்க ஆரம்பித்தாள் வத்சலா. அவரும் அவள் அப்படிப் பேசவும் கற்றி எல்லாம் வளைக்காமல் ''ஆமாம்மா... சரியாச் சொன்னே நீ.. என்றார்.

''ஆனா என்னண்ட நீங்க பேசறதுக்கு என்ன இருக்குன்னுதான் தெரியல. என் ஒரே பிள்ளை ஸ்ரீதரன் அவன் அநியாயமா போய் சேர்ந்துட்டான். அந்த சந்தர்ப்பத்துலேயே துக்கம் கேட்க வராதவர் நீங்க... இதை நான் குத்திக்காட்றதா எல்லாம் நினைக்க வேண்டாம். ஒரு பேச்சுக்கு சொல்றேன்...''

திரும்பவும் தன் கொடுக்கு நாக்காலே மெல்லியதாக ஒரு போடு.

சிக்கராச்சாரியார் அதைக்கேட்டு துளிக்கூட உணர்ச்சி வசப்பட வில்லை. சற்று அழுத்தமாக ஒரு சிரிப்பு சிரித்தார்.

''என்ன சிரிக்கறேள்... என் பேச்சுக்கு உங்களுக்கு கோபம்னா வரணும்?''

''என் வரைல வராது வத்சலா. ஏன்னா, என் வரைல ரொம்ப பாவப்பட்டவ நீ!''

அவரது பதில் அவளுக்கு ஒரு எதிர்பாராத அதிர்ச்சியைக் கொடுத்தது.

''பா... பா... பாவப்பட்டவளா நான்... அது உங்களுக்காவது தெரியறதா?''

ஷணத்தில் குரல் உடைந்துபோக கண்களில் ஜலக்கட்டு உருவாகிட அவள் பேசவும் சிங்கரச்சாரியாருக்கும் அவளது ஈகோ வெகு சீக்கிரத்திலேயே உடைந்து விட்டதும் அவள் இனி அவரை மதிப்பாய் அங்கீகரிப்பாள் என்றும் ஒரு நம்பிக்கை ஏற்படத் தொடங்கியது.

''அதுல சந்தேகமென்ன வத்சலா அதனாலதானே உன்கூட பேச நானே நேர்ல வந்துருக்கேன். இல்லன்னா உன்னை என் அகத்துக்குல்ல வரச்சொல்லியிருப்பேன்.''

''அண்ணா நீங்க எதைவெச்சு சொல்றேள்ன்னு நான் கொஞ்சம் தெரிஞ்சிக்கலாமா?''

''அதுசரி ஆத்துல யாரும் இல்லையா?''

''இல்ல... உஷா வெண்ணெய், காபிபொடி வாங்கிண்டுவர கடைத்தெருவுக்கு போயிருக்கா... இரண்டு நாள்ல ஹைதராபாத் கிளம்பறா...''

''சவுகர்யமா போச்சு... வத்சலா நான் நேராவே விஷயத்துக்கு வந்துட்றேன். இரண்டு நாள் முந்தி தேசிகன் என்னை வந்து பார்த் தான். அவனோட முதல் கல்யாணத்துல தொடங்கி ரங்கன் தான் அவன் மூத்த பிள்ளைங்கற வரை எல்லாத்தையும் என்கிட்ட சொல்லிட்டான்...''

சிங்கராச்சாரியார் சொன்ன மாத்திரத்தில் சேலைத் தலைப்பால் வாயைப் பொத்திக்கொண்டு விசும்பி அழ ஆரம்பித்து விட்டாள் வத்சலா.

''என்னால இந்த நிமிஷம் வரை அவன் தப்பை ஜீரணம் பண்ண முடியல. இவன் தப்பால் பாவம் அந்த ரங்கன் ஒரு பொணந்தூக்கியாவே காலம் அவனை மாத்திட்ட கொடுமையை எங்க போய் சொல்ல?''

''அண்ணா முடிவா அவர் என்ன சொன்னார். அதைச் சொல்லுங்கோ...''

''ரங்கனை ஊர் அறிய தன்பிள்ளைதான்னு சொல்லப் போறதா சொன்னான். ஆனா நீ அதுக்கு தடையா இருக்கறதாவும் சொன்னான்.''

''நான் அவர் மானத்தை காப்பாத்திண்டு இருக்கேன். இத்தனை வருஷம் கழிச்சு ரங்கன்தான் என் பிள்ளைன்னா ஊர் சிரிக்காது?''

''சிரிக்கறதா... யாரும் தேசிகனை ஒரு மனுஷனாவே மதிக்க மாட்டா. எனக்கு அதுல கொஞ்சம் கூட சந்தேகம் இல்லை.''

''சரிண்ணா நீங்க என்ன சொன்னேள்?''

''வாய மூடிண்டு இரு. வத்சலாகிட்ட இந்த விஷயத்தை விட்டுடு. அவ பார்த்துக்கட்டும்னு சொன்னேன். அதை உன்னண்ட சொல்லிட்டு போகத்தாம்மா வந்தேன்.''

"அண்ணா நிஜமா அப்படியா சொன்னேள்?"

"உனக்கு எதனால என்மேல இத்தனை சந்தேகம்?"

"இல்ல... நீங்க அவரை உங்க பிள்ளை மாதிரி நினைக்கறேன்.
அவர் பக்கம்தான் பேசுவேள்னு நினைச்சுட்டேன்."

"நான் உபன்யாசம் பண்றவன் இந்த வாயால ஹரி கதையும்
சொல்றேன் தர்மத்தோட பக்கம்தான் எப்பவும் நிப்பேன்."

"அப்ப நான் அவருக்கு தடையா இருக்கறது தர்மப்படி
சரிதான்னு சொல்லுங்கோ..."

"அதுல என்ன சந்தேகம்... ஆனா எனக்கு என்ன தோன்றது
துன்னா நீ ரங்கனை தவிக்க விடமாட்டே. எதையாவது பண்ணி
ஒரு நல்ல தாயாதான் நடந்துக்க பார்ப்பேன்னுதான் என்
மனசுக்கு தோன்றது..."

"என்னண்ணா இது... இப்படியும் பேசறேள் அப்படியும்
பேசறேளே...?"

"திரும்பவும் சொல்றேன். நான் தர்மத்தை பேசறேன்...
தேசிகன் இத்தனை வருஷம் இல்லாம இப்ப எதுக்கு இந்த
உண்மையை சொல்லணும்? இருந்த பிள்ளையும் போய்ட்டான்.
இருக்கற பிள்ளையை இனியும் விட்டுடக் கூடாதுங்கற
சுயநலத்தால தானே?"

"ஆனா அவர் என்னமோ மனசாட்சி அவரைப் போட்டு
கொல்றதாம். அதனால இனியும் மௌனமா இருக்க விரும்
பலையாம். எனக்கு துரோகம் பண்ணும் போது எங்க போச்சு
அந்த மனசாட்சி?"

"நானும் கேட்டேனே... உன் இடத்துல வத்சலாவை வெச்சுப்
பார். அவ இப்படி ஒரு தப்பை பண்ணியிருந்தா தீயைவெச்சே
கொளுத்தியிருப்பியேன்னு கேட்டேனே..."

"அதுக்கு என்ன சொன்னார்?"

"என்னத்த சொல்லுவான். சரிண்ணா நான் பண்ண தப்புக்கு
எனக்கு நான் தண்டனை கொடுத்துக்கறேன். ரங்கன் வத்சலா
இரண்டு பேருக்குமே நான் துரோகம் பண்ணியிருக்கறதால
இரண்டு பேர்கிட்டயும் மன்னிப்பு கேட்டுண்டு நான் தேசாடனம்

போறேன். இனி எனக்கு பிள்ளை குட்டின்னு எந்த
உறவுலயும் இடையாது. அப்படியே பத்ரி கேதார் நாத்னு போய்
ஹரிதாஸ்கிரி சுவாமிகள் கங்கைல ஜலசமாதியடைஞ்ச
மாதிரி நானும் கங்கைல இறங்கிட்றேன்னு சொல்லிட்டான்!"

"அப்படியா சொன்னார்... இவருக்கு தேசாடனம் போற
அளவுக்கு முதல்ல துணிச்சல் இருக்காமா?"

"எனக்கென்னமோ இருக்குங்கற மாதிரி தாம்மா தோன்றது."

"உனக்கும் ரங்கனுக்கும் ஆளுக்கொரு கடுதாசியை எழுதி
கொடுத்து கொடுக்க சொல்லிட்டு அப்பவே கிளம்பப்
பார்த்தான். நான்தான் தடுத்து வத்சலாகிட்ட பேசறேன்...
அப்புறமா நீ தேசாடனம் போறதும் போகாததும் உன்
விரும்பம்னு சொல்லி தடுத்து நிறுத்தினேன். இதோ அந்த
கடுதாசி..."

இடுப்பு மடிப்பில் இருந்து இரண்டு காகித மடிப்புகளை எடுத்து
அவள் எதிரில் காண்பித்தார் சிங்கராச்சாரியார். வத்சலாவிடம்
குபீர் என்று ஒரு அடைப்பு கண்களில் ஏற்பட்ட ஜலக்கட்டு வழிய
ஆரம்பித்து விட்டது.

"எனக்கு தெரியும் வத்சலா. அதனாலதான் நான். நீ
எல்லாத்தையும் மறந்துட்டு ரங்கனை ஒத்துக்க முன்வருவேன்னு
சொன்னேன். ஏன்னா தப்பு பண்றது எப்பவும் ஆண் வர்க்க
மாவும், தாங்கிக்கறது எப்பவும் பெண் வர்க்கமாகவும்னா
இருக்கு?"

"இல்லண்ணா... அவர் தேசாடனம்லாம் போக மாட்டார்.
அவருக்கு அவ்வளவு துணிச்சல் கிடையாது."

"சரி வத்சலா அவன் விஷயத்துல அவனை தேசாடனம் போக
விடாம பண்றதுல இருந்து உன் விருப்பப்படியே நடந்துள்ளது
வரை இனி உன்பாடு அவன் பாடு. ஆனா நான் நீ எந்த முடிவு
எடுத்தாலும் அதுக்கு கட்டுப்பட்டு நடந்துப்பேன். நான் உன்
கட்சிதான். அவன் கட்சி கிடையாது. இதை ஞாபகத்துல
வெச்சுக்கோ... அப்ப நான் கிளம்பறேன்."

பஞ்சுப் பொதிக்கு அருகில் தீப்பொறியை போட்டது போல
அவள் மனசுக்குள் தேசாடனம் என்னும் ஒரு எச்சரிக்கையை

மாட்டிவிட்டு வெளியிலும் சென்ற சிங்கராச்சாரியார் வெ
போனில் உடனடியாக தேசிகாச்சாரியைதான் பிடித்தார்.

"தேசிகா ஒரு மாதிரி உன் ஆம்படையாளை அவ போக்குக்கு
போய் நீ தேசாடனம் போகற முடிவுல இருக்கேன்னும் சொல்லி
விட்டு வந்துருக்கேன். நீ தேசாடனத்துக்கு தயார் ஆனா தான் அவ
வழிக்கு வருவா. நிச்சயமா உன் வழிக்கு வந்துடுவா. அவ்வளவு தூரம்
உனக்கு எந்த சந்தேகமும் வேண்டாம். அவ்வளவு அதுல
அவகிட்ட பேசியிருக்கேன். பாத்து பக்குவமா நடந்துக்கோ. ஒரு
ஹரிகதை சொல்ற பண்டிதன் நான். இப்படி எல்லாம் ஸ்ட்ராடஜி
கலா பேசறது சரியில்லைதான். ஆனாலும் நான் ரங்கன்கற அந்த
அப்பாவிக்காக பேசிட்டு வந்துருக்கேன். பாத்து நடந்துக்கோ"
என்றார்.

மறுபுறம் தேசிகன் விசும்ப அழுதார். அப்படியே "அண்ணா
நீங்க தேசாடனம் போறதா ஒரு பேச்சுக்கு பேசினதை நான்
நிஜமாவே பண்ணிக் காட்றேண்ணா... நீங்க பொய் பேசினதா
ஆகிடக்கூடாது" என்று விசும்பவும் சிங்கராச்சாரியாருக்கே
கோபம் வந்து விட்டது.

"யப்பா...! அப்பா பிள்ளை ஒண்ணா சேர்ந்து இனியாவது
நல்லபடி வாழணும்னுதான் நான் அப்படி சொன்னேன். இந்த
விஷயத்துல எனக்கு பாவம் வந்துடும்னு நான் பயப்படலை. நான்
இம்மட்டுல கிருஷ்ண பக்தன். தர்மத்துல ராமன் வழியிலையும்
தந்திரத்துல கிருஷ்ணன் வழியிலயும் யார் வேணும்னா போகலாம்
தப்பே இல்லை.

இது புரியாம நீ உடனே தேசாடனம் கிளம்பிடாதே.
தேசாடனம்கறது உன் வரைல ஆயுதமா பயன்படணும். அதைக்
கொண்டு உன் ஆம்படையாளை வழிக்கு வரவை. அந்த
ஆயுதத்துக்கு நீ பலியாகிடாதே."

"சரிண்ணா... வத்சலாகிட்ட பேசிட்டேள். ரங்கன் கிட்ட
எப்பண்ணா பேசப்போறள்."

"நாளைக்கு காவிரிக்கு போகப் போறேன். கண்ல படலாமலா
போய்டுவான்?"

"சந்தோஷம்ண்ணா... நீங்க பேசினதுக்கு அப்புறம் சொல்லுங்
கோண்ணா... அதுக்குள்ள இங்க நான் வத்சலாவை ஒரு வழி
பண்ணிட்றேன்."

"பாத்து... அவகிட்ட பேசற யாரும் அவளை எதிர்க்காம
பேசினாலே போதும். அவ சரண்டராயிடுவா. நிஜமாலுமே
பாவம்டா உன் பொண்டாட்டி இந்த திருச்சிக்கு மேயரா இருந்து
மல்லம்மா மாதிரி ஊரை ஆள்ற சாதுர்யம் உள்ளவ. அடுப்புல
அவளை அப்பளம் பொரிக்க வெச்சுடுத்து காலம்.
அந்த ஆற்றாமையை தான் அவ எல்லார்மேலயும் ஆங்காரமா
இடிரா காட்றா."

"அண்ணா நீங்க சைகாலஜி டாக்டரா போயிருக்க
வேண்டியவர்ணா..."

"போதும்... அடுத்து ஆக வேண்டியதப் பாரு..."

"உத்தரவுண்ணா..."

"பாத்து தேசிகா... இனி நீ சின்னதாவும் சரி பெருசாவும் சரி
ஒரு தப்பு கூட பண்ணக்கூடாது ஜாக்ரதை."

எச்சரித்து விட்டு செல்ஃபோனை இடுப்பு லெதர் பேக்கில்
போட்டபடி நடக்க ஆரம்பித்தார்.

கோவிந்தன் சைக்கிள் கடை!

ரங்கன் வந்து நிற்கவும் நிமிர்ந்து பார்த்த கோவிந்தனுக்கு
சந்தோஷமாக இருந்தது.

"என்னாச்சு ரங்கா... பாடியைத் தூக்கி போட்டுட்டியா?"

என்று பேச்சையும் உற்சாகமாய் ஆரம்பித்தான்.

"அது எங்க போய்டப் போகுது... இறங்குன வேகத்துல
அள்ளிப் போட்டுட்டேன். இவ்வளவு வேகமா ஒரு பாடியை
கூட நான் அள்ளிப் போட்டதில்ல..."

"அதுசரி எம்.எல்.ஏ. உறவாச்சே... காசு கொடுத்தானா இல்ல
காந்தி கணக்குல எழுதிட்டானா?"

"எம்.எல்.ஏ. உறவெல்லாம் இல்ல. செத்தவன் எம்.எல்.ஏ.
சகலைக்கு எதிரி!"

"எதிரியா?"

"ஆமாம்... எந்த எதிரியை காவிரியும் விழுங்கல இவனுங்க தான் கழுத்தை நெறிச்சு கொன்னுருக்கானுங்க. இவனுங்க கொன்னுட்டு ஆத்துல மூழ்கிச்செத்துட்டதா சீன் க்ரியேட் பண்ணப் பாக்கறாங்க."

ரங்கன் குட்டி ஸ்டூல் ஒன்றன் மேல் அமர்ந்துகொண்டு ஒரு ஸ்பேனரை தூக்கிப் போட்டு பிடித்தபடியே பேசியது கோவிந்தனை இடறியது.

"ரங்கா என்ன சொல்றே... நிஜமாவா சொல்றே?"

"எவ்வளவு பொணங்களை தூக்கியிருப்பேன். எனக்கா தெரியாது?"

"பாவிப்பசங்க... ஆமாம் கொலைன்னு தெரிஞ்சா நீ சும்மா இருக்க மாட்டியே?"

"நான் என்ன ரஜினிகாந்தா, இல்ல விஜயகாந்தா கண்ணு சிவக்க டயலாக் பேசி சண்டையெல்லாம் போட்றதுக்கு... என் கவனமெல்லாம் இப்ப ஊரை விட்டுப் போறதுலதான் இருக்கு கோவிந்தா. உன்கிட்ட இரண்டாயிரத்துக்கு நின்ன எனக்கு எம்.எல்.ஏ. சகலை பத்தாயிரம் கொடுத்துருக்கான்!

ரொம்ப நாளா எனக்கு இமயமலை பக்கம் போகணும்னு ஆசை அந்த வெள்ளைப் பனியை கை நிறைய அள்ளி எடுத்துப் பாக்கணும். இப்ப எனக்கு சந்தர்ப்பம் கிடைச்சிருக்கு.

நான் புறப்பட்றேன். சக்கரவர்த்தி ஐயங்கார் கிட்ட நான் போய்ட்ட விஷயத்தைச் சொல்லிடு. குறிப்பா அவர் மகன் கிட்ட... வரட்டுமா?"

ரங்கன் எழுந்து கொண்டான். கோவிந்தனின் கண்களிரண்டு அவனைத்துளையிடுவது போல பார்க்கத் தொடங்கின. அதைப் பொருட்படுத்தாமல் தெருவில் இறங்கினவன் எதிரில் காத்திருந்த மாதிரி காற்று போன ஒரு சைக்கிளை தள்ளிக்கொண்டு வந்தாள் மைதிலி. அவளை நேருக்கு நேர் பார்க்கவும் குபீர் என்றது ரங்கனுக்கு.

"அண்ணா-மன்னி சென்னை போய்ட்டா! நான் இப்ப சாந்துடிச்சண்டு தோப்புக்குதான் போறேன். நீங்களும் இப்ப நேரா அங்க வரேள். என் பேச்சை மதிச்சு வராமல் போகும் பட்சத்தில் நான் அப்படியே காவிரி ஆத்துல இறங்கிடுவேன். இது அந்த ரங்நாயகித்தாயார் மேல சத்தியம்."

என்று மளமளவென்று அவன் காதில் மட்டும் விழுகிற மாதிரி பேசியவள் சைக்கிளை கோவிந்தன் முன் உருட்டிச் சென்று நிறுத்தினாள்.

கோவிந்தனும் காற்று அடித்துக்கொண்டே அவளோடு பேசினான்.

"யம்மா... ஐயா இமயமலைக்குப் போகப்போறாராம். கைல பத்தாயிரம் ரூபா பணம் வேற இருக்கு. விட்றாதம்மா..." என்ற அவன் குரல் ரங்கன் காதுகளிலும் விழுந்தது.

காற்றடித்து முடிக்கப்பட்ட சைக்கிளில் மைதிலியும் ஏறிக் கொள்ள ஆரம்பித்தாள். புடவை கொசுவத்தை சற்று மேல் ஏற்றி இடுப்பில் செருகிக்கொண்டு அவள் சைக்கிளில் ஏறி அமர்ந்த விதமே அழகு கொஞ்சியது.

ரங்கன் முறைத்தான்.

"முறைக்காம போய்ச் சேரு. இமயமலைக்கா போகப்போறே? அது விட்டா போ!"

"புரியாம பேசாதே கோவிந்தா. எண்ணையும் தண்ணியும் எந்த காலத்துலயும் ஒண்ணா சேர முடியாது..."

"அது எனக்கும் தெரியும். திரும்பவும் வேதாளம் மாதிரி முருங்கை மரத்துல ஏறிக்காம அந்த பொண்ணு என்னதான் சொல்லுதுன்னு கேளு. போங்கறேன்ல..."

கோவிந்தனும் தள்ளிவிட்டான். ரங்கன் அரை மனதாக கிளம்பினான்.சீமாவும் ரேவதியும் ஊரில் இல்லை என்று அவள் சொன்னதில் கொஞ்சம் போல் ஒரு தெம்பு!

வழக்கம் போல் தென்னந்தோப்பில் காற்றின் உசாவல்! காத்துக் கொண்டிருந்தாள் மைதிலி. ரங்கன் வரவும் மார்பு முன் கையை கட்டிக்கொண்டு அவனை வட்டமாக சுற்றி வந்து ஒரு பார்வை பார்த்தாள்.

"எனக்கு நேரமாச்சு... எதுக்கு கூப்பிட்டீங்கன்னு சொல்லுங்க."

அவனும் வாயைத் திறந்தான்.

"இமயமலைக்கு கிளம்பிட்டேளாமே?"

"ஆமாம்... இப்ப அதுக்கென்ன...?"

"நானும் வரேன்... கூட்டிண்டு போங்கோ..."

"விளையாடாதீங்கம்மா... நீங்க இப்ப முடிவா என்ன பேசுவீங்கன்னு தெரியும். நானும் முடிவாவே சொல்லிட்டேன். வாழைப்பழம் பிடிக்காத குரங்கு கூட இருக்கலாம். உங்களைப் பிடிக்கலைன்னு எந்த ஒரு ஆண் மகனாலையும் சொல்ல முடியாது. நானும் உங்களை விரும்பறேன். ஆனா உங்களைப் போலவே நான் கோடீஸ்வரனாகவும் விரும்பறேன். பெரிய போலீஸ் அதிகாரியா வந்து தப்பு செய்யறவங்களை எல்லாம் பிடிக்கணும்னும் விரும்பறேன். ஆனா அதெல்லாம் எப்படி என் வரைல நடக்க முடியாத நிராசைகளோ, அப்படித்தான் உங்க மேல எனக்கு இருக்கற ஆசையும். நாம இந்த ஜென்மத்துல சேரமுடியாது. நாம சேர்ந்தா பலபேர் தற்கொலை செய்துக்கு வாங்க. இந்த ஸுரீரங்கமே ஏதோ அணுகுண்டு வெடிச்சிட்ட மாதிரி அலறும். ஏண்டா வெறும் பயலே நீ கெட்ட கேட்டுக்கு உனக்கு ஐயங்கார் பொண்ணு கேக்குதான்னு கோயில் மதில் சுவர்ல உக்காந்துக்குற காக்கா குருவி எல்லாமும் கேள்வி கேட்டு பரிகாசம் பண்ணும்.

தேவையா?"

கையை அசைத்து அவன் கேட்கவும் படபடவென்று கை தட்டினாள் மைதிலி.

"என்ன கிண்டல் பண்றீங்களா?"

"சேச்சே... பளிச்சின்னு இவ்வளவு உண்மைகளை உங்களத் தவிர யார் பேசுவா? அதான் கை தட்றேன்."

"அப்ப அந்த உண்மையை மதிக்கணும் தானே?"

"மதிக்கறதா... நான் மிதிக்கத்தான் விரும்பறேன்."

"இது அடம். அப்படி என்ன இருக்கு இந்த பொணந்தூக்கி மேட்ட?" அவன் வானத்தைப் பார்த்து உச்சஸ்தாயியில் கத்தினான்.

"தோ... உங்கள நீங்க அப்படி சொல்லிக்கக் கூடாது. இந்த தாழ்வு மனப்பான்மை மட்டும் இல்லேன்னா, நீங்க தான் என் வாழ்ல ராஜா" அவளும் அழுத்தம் கூட்டினாள்.

"மைதிலியம்மா இப்படி எல்லாம் பேசி என் மனசை உருக்காதீங்க... நானும் ஒரு ஆம்பளை. ஒரு அளவுதான் என்னால தாங்கிக்க முடியும்."

"அப்படி முடியாமப் போனா...?"

"நான் மிருகமாயிடுவேன். ஒரு அழகி முன்னால எவ்வளவு தான் நான் என்னை கட்டுப்படுத்திக்க முடியும்."

"அப்படியா... உங்களால மிருகமாக முடியுமா... என்னால நம்ப முடியல..."

"வேண்டாம் மைதிலி..."

"மைதிலியம்மாங்கறது மைதிலியானா நீங்க மிருகமாயிட்டதா அர்த்தமா?"

"மைதிலி பேசாதே... வந்த வழியே திரும்பிப் போயிடு."

"எங்க அந்த மிருகம்? பாத்துட்டு போறேன்."

"அது பொல்லாத மிருகம்... உன் மேல பாஞ்சுதுன்னா நீ அவ்வளவு தான்..."

"எல்லாம் சும்மா..."

"சொன்னா கேளு மைதிலி போயிடு... நான் அந்த ஆஞ்சனேயனுக்கு சமமான பிரம்மச்சாரி. என்னை சிதைக்காதே..."

மிருகம் இப்ப பிரம்மச்சாரியா மாறிடுத்தா... இதுக்கு நான் ஆம்பளை இல்லேன்னு நேரா சொல்லாலமே..."

அவள் அப்படிச் சொன்னது தான் தாமதம். அவளை அடுத்த நொடி பாய்ந்து இழுத்து அணைத்தான். அவள் முகமெங்கும் உஷ்ணப் பெரு மூச்சோடு முத்தமழை பொழியத் தொடங்கினான்.

இறுதியாக மைதிலி ஜெயித்தே விட்டாள்!

45

'பெண்ணொருத்தி நினைத்து விட்டாள்.
பெரும்பேறு இனி ஒருவனுக்கு...!
அவள் கண்ணிரண்டின் பார்வை போதும்
அவன் பொன்னொளியை பெறுவதற்கு...!
தேன் கூட சுவைத்தாலே இனிக்கும், காதல்
பெண் மட்டும் நினைத்தாலே இனிப்பாளே!'

மோக நெருப்பில் ரங்கன் கிட்டத்தட்ட சாம்பலாகி விட்டான். அவன் பிறந்ததில் இருந்தும், நினைவு தெரிந்தநாளில் இருந்தும், அவன் உணர்ந்த முதல் சுகமும் இதுதான்...

மைதிலிக்கும் அந்த நிஜமான ஆணின் தீண்டலும், அவனது ஆலிங்கனமும் பெரும்பரவசத்தை அளித்திருந்தது. அந்த சொல்ப நொடிகளில் உலகில் உயிர்கள் என்பவை எதனால் எங்கே எப்படித்தோன்றியபடியே இருக்கின்றன என்பதெல்லாம் புரிந்து விட்டது.

ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் இப்படிக்கூட ஒரு ஈர்ப்பா? ஐயோடா! ஏன் காதல் என்பது மட்டும் கால காலமாய் ஜீவித்தபடியே இருந்து வருகிறது என்பதும் இப்போதுதான் அவளுக்குப் புரிந்தது.

சம்சார பந்தத்தை எதனால் சிலர் தவிர்த்துவிட்டு காவி எல்லாம் கட்டிக்கொள்கிறார்கள் என்பதும் புரிந்தது. இப்படி மூச்சு மூட்டினால், இப்படி மின்சாரம் பாய்ந்தால், இப்படி இருந்தும் இல்லாது போனால் யாரால் தாள முடியும்? என்றும் எண்ணினாள்.

என்னதான் இன்பமென்றாலும் மலையாக வந்து அது தலையில் அமரும்போது தலை நசுங்கத்தானே செய்யும்?

ரங்கனும் மெல்ல விலகினான். நீர்க்காக்கை போல உடம்பை உதறிக்கொண்டான். தோப்புத் தென்றலை மீறிய வியர்வையில் சொத சொதவென்று இருந்தான்.

அவனும் ஈர ரோஜாவாகி விட்டிருந்தாள். பெண்களின் மனத்தான உணர்ச்சிகளில் ஒன்று வெட்கம்! அது அவள் தலையை அழுந்தி விட்டிருந்தது. வெட்கமில்லாத பெண் ரம்பை. மேனகை யாகவே இருந்தாலும் ஆணுக்குப் பிடிக்காது. அவளே கபோதி யாக இருந்தாலும் மரவட்டையாக சுருண்டு நாணும்போது மனம் இளர்ந்து போகும்.

ரங்கனுக்கும் அப்படித்தான் இருந்தது. அந்த நொடி தான் யார் என்பதில் இருந்து மைதிலி யார் என்பது வரை சகலமும் மறந்து போய் அவர்களுக்கு நடுவில் அந்த ஈர்ப்பும் கிளர்ச்சியும் மட்டுமே தட்டாமாலை சுற்றிக்கொண்டிருந்தது.

சூழலிலும் திவ்யமாய் ஒரு ரம்யம்... காவிரிக் காற்றுக்கும், தென்னங்காற்றுக்கும் இடையே அப்படி ஒரு உசாவல் வகிடு எடுத்தாற் போன்ற மட்டைப்பரப்பில் பள்ளிப் பிள்ளை களாட்டம் ஓடி வந்து அமர்ந்து விட்டிருந்த கிளிக்கூட்டம் ஒன்று தழைவாக கீழே இருவரையும் பார்த்தது.

ரங்கன் பேச ஆரம்பித்தான்.

''கடைசில என்னை விழ வெச்சுட்டீங்களேம்மா...'' அவன் குரலில் இருப்பது வருத்தமா இல்லை மகிழ்ச்சியா என்பதை அவளால் தரம் பிரிக்க முடியவில்லை.

''எப்பவோ விழுந்துவிட்ட நான் தனியா தவிச்சிண்டிருந்தேன். இன்னிக்கு தான் எனக்கு பிடிச்சுக்க நீங்க கிடைச்சிருக்கேள்...''

''நானே ஒரு பாவி... என்னைவிட ஒரு பாவியா நீங்க ஆயிட்டீங்களேம்மா...''

''இந்த அம்மா, வாங்கோ போங்கோல்லாம் இனியும் எதுக்கு? நான் உங்க மைதிலி இப்ப...''

''பொணங்களையே தொட்டுத் தூக்கின கை இது... இன்னிக்கு ஒரு தங்கச் சிலையை தொட்டுருக்கு கனவா... இது நனவா''

''சத்யமான நிஜம். அதுமட்டுமில்ல இனி உங்க கையால எந்த ஒரு பிணத்தையும் நீங்க தூக்கக்கூடாது.''

''அது எவ்வளவு தூரம் சாத்யம்னு எனக்கு தெரியலையே?''

"ஏன் சாத்தியமில்லை? எனக்காக நீங்க சாத்யப்படுத்த
கணும்."

"சரி நான் இனி முடியாதுன்னு சொல்லிட்றதாவே இ
கட்டும். நாம ஒண்ணா சேர்ந்து இங்க வாழ முடியுமா?" அப்பா,
"இங்க தான் வாழணும்னு என்ன கட்டாயம்?"

"இப்ப எனக்காக இந்த ஊர், உன் குடும்பம் அப்பா,
அம்மான்னு அவ்வளவு பேரையும் துறக்க நீ தயாராயிட்டியா?"

"நான் எங்கே தயாரானேன்...? இந்த காவேரில என்னிக்கு
நான் சுழல்ல சிக்கி உங்களால காப்பாத்தப்பட்டேனோ அப்பிலி
காவேரி என்னை உங்ககிட்ட கொண்டு சேத்துட்டா...?"

"சாதுர்யமா பதில் சொல்லாம யதார்த்தமா பேசு மைதிலி.
ஓடிப்போய் வாழறதும் ஒரு வாழ்க்கையா?"

"நல்ல கேள்வி. நாம ஓடிப்போகப் போறதா ஏன் நினைக்
கறேள்? நம்ம உணர்ச்சிகளை புரிஞ்சுக்க முடியாதவாளை விட்டு
விலகிப் போறோம்னு வெச்சுக்குங்களேன்...

"திரும்பவும் சாமர்த்தியமா பேசுறே... உன் அப்பா அம்மாவை
நான் பெருசா மதிக்கறேன். குறிப்பா உன் அப்பா ரொம்ப
நியாயமானவர். அவருக்கு எப்படி மைதிலி என்னால துரோகம்
செய்ய முடியும்?"

"எல்லைப் புரத்துல நம்ம ராணுவவீரர்கள் எதிரி நாட்டுக்
காராளை அவா அத்து மீறும்போது சுட்டுக்கொல்றா. அவாளை
நாம கொலைகாரன்னா சொல்றோம். மாவீரர்களா நினைச்சு
வீரப்பதக்கமெல்லாம் தரோமே...?"

"இந்த விளக்கத்துக்கும் என் கேள்விக்கும் என்ன சம்பந்தம்?"

"நீங்க துரோகமெல்லாம் செய்யல செய்யவும் நான் விட
மாட்டேன்."

"உங்களை நினைச்சிண்டுருக்கற என்னை நீங்க ஏத்துக்க
மறுத்தா அதுதான் துரோகம். எல்லைப்புரத்து கொலைகள்
நாட்டுக்காக நடக்கும்போது வீரத்தோட சேர்ந்துட்ற மாதிரி ஒரு
பெண் மனசார விரும்பும்போது அவளுக்காக ஒரு ஆண் செய்யற

ஒவ்வொரு செயலும்கூட பரிபாலனமா மாறிட்றது. அது துரோகம்
கிடையாது."

"இந்த கருத்தை ஊர் உலகத்துல ஒத்துப்பாங்களா?"

"ஊர் உலகத்துக்கு நமக்கு நடுவுல என்ன நடந்ததுன்னு
தெரியுமா?"

"தெரியாதுதான். ஆனா அவங்களுக்கு நடுவுல தானே நாம
வாழறோம்?"

"வேணும்னா அவங்க இல்லாத ஒரு இடத்துக்கு நான் வரத்
தயார்!"

"மைதிலி இந்த அளவுக்கு நீ என்னை நேசிக்க என் கிட்ட
அப்படி என்ன இருக்கு?"

ரங்கன் ஒரு விம்முதலோடு கேட்டான். அவள் அவனை
ஊன்றிப் பார்த்துவிட்டு அதற்கும் பதில் சொல்லத் தொடங்
கினாள்.

"தன்னை துளியும் முன் நிறுத்திக்காம இப்பவும் என்னோட
நலத்தையும் என் குடும்ப நலத்தையும் நினைக்கற நிஜமான அந்த
ஆண்மை..."

"இவ்வளவு நேசிக்கற உன்னை நான் எப்படி மைதிலி
நல்லபடியா வெச்சுக்க போறேன்?"

"வெச்சுப்பீங்க. உங்களால முடியும். பிணம் தூக்கி ரங்கன்
எல்லா விதத்துலயும் மாறணும். நான் லைப்ரரில இருந்து புத்தகங்
களை வாங்கிண்டு வந்து நிறைய படிச்சிருக்கேன். எவ்வளவோ
பேர் வெறும் புள்ளியா இருந்து தொடங்கி பெரிய கோலமாகி
யிருக்கா!

சின்னதா ஒரு இட்லிக்கடை போடுவோம். அப்புறம் அதை
ஹோட்டல் ஆக்குவோம். அப்புறமா அதை ஹோட்டல்கள்
ஆக்குவோம். நாம விஸ்வரூபம் எடுக்க எடுக்க இந்த ஊர் உலகம்
தன்னால வாயை மூடிண்டுடும்."

"மைதிலி... என்ன நீ-வாழவே ஆரம்பிச்சுட்டியா?"

"ஆமாம்... நமக்கு நடுவுல கல்யாணம்ங்றது மத்தபடி
கறதுக்காக மட்டும்தான்."

"எப்படி நீ இதை இவ்வளவு சுலபமா நினைக்கறே. நாளைக்கே
உன் அப்பா அண்ணன்லாம் தற்கொலை செய்துக்கறதா மிரட்டினா
"நாளைக்கே என்ன... இன்னிக்கே அதுதான் என் அண்ணனோ
மன்னியோட ஆயுதம்... ஆனா அவாளுக்குதான் வாழறதுலயும்
ஆசை அதிகம்..."

"அப்ப அவங்க பூச்சாண்டி காட்றதா நீ நினைக்கறியா?"

"நிச்சயமா..."

"உன் அப்பா... அம்மா...?"

"அவாளை நினைச்சா தான்..."

மைதிலியும் சோகமாகி இழுத்தாள்.

"பார்த்தியா இப்ப நீ அவசரப் பட்டுட்டது உனக்கு புரியும்னு
நினைக்கறேன்?"

"இல்ல... அப்பா அம்மாக்கு எப்பவுமே என் விருப்பம்தான்
அவாளோட விருப்பமும் ஆனா உங்களுக்கும் எனக்கும் நடுவுல
பெரிய இடைஞ்சலா இருக்கறதே ஜாதியும் அந்தஸ்தும்தான்..."

"நமக்கு நடுவுல மட்டும்தானா... இந்த நாட்டுல பல
விஷயத்துல அதுதானே இடைஞ்சல்? இந்த விஷயத்தை ஒழிச்சே
தீரணும்னு சொல்லிகிட்டே இதை ஆலமரமா வளர வெச்ச
பெருமை நம்ம அரசியல்வாதிகளைத்தானே சேரும்?"

காந்தி காலத்துலகூட தீண்டாமை மட்டும்தான் இருந்தது.
இத்தனை ஜாதிக் கட்சிகள் அப்ப ஏது?"

"இப்ப இந்த சிந்தனை எல்லாம் நமக்கு எதுக்கு?"

"நம்மை பத்தி மட்டும் நினைப்போம்னு சொல்லப் போறியா?"

"ஆமா... என் மனசு அதிர்றது... கடைசில நீங்க இதை எல்லாம்
சொல்லி பழையபடி முருங்கை மரம் ஏறிட்டா அப்புறம் அதை
என்னால தாங்க முடியாது."

"தர்ம சங்கடம்ங்ற வார்த்தையை நிறைய பேர் நிறைய தடவை
சொல்லிக்கேட்டுருக்கேன்... ஆனா அதுக்கு எனக்கு அர்த்தம்
தெரியாது. இப்ப நான் அதை உணர ஆரம்பிச்சிருக்கேன்."

"இந்த தர்ம சங்கடத்தை சந்தோஷமா மாத்திக்காட்ட
ரங்கன் பேச்சோடு பேச்சாக பெரிதும் வாடவும் தொடங்
கினான். ஆனாலும் மைதிலி அசராமல் அவனுடன் பேசினாள்.

"இது என்னால முடியும். என் அண்ணாவும் மன்னியும் எனக்கு
உங்களை நிச்சயம் பண்ண சென்னைக்கு போயிருக்கா. என்
கல்யாணத்தை நான் வீட்டை விட்டு வெளியேறினா போதும்.
மன்னிக்கு ஒரு வெறி. ஆனாலும் இதுக்கெல்லாம் ஆறு மாச காலம்
அப்படி ஒரு டயமிருக்கு. இந்த இடைப்பட்ட காலத்துல நீங்க என்ன
வரை டயமிருக்கு. உங்களை நீங்க மாத்திக்கணும். குறிப்பா
செய்வேளோ தெரியாது. எனக்கு
பிணங்களை இனி உங்க கைகள் தீண்டவே கூடாது.
சத்தியம் பண்ணிக்கொடுங்கோ..."

அவள் கை அவன் முன்னால் நீண்டது.

அவன் அதை வெறித்துப் பார்த்தான். வெகுவாக தயங்கவும்
செய்தான்.

"என்ன யோசனை?"

"காவேரிப் பிணங்கள நான் காசுக்காக தீண்டினதில்ல மைதிலி.
அதை நான் ஒரு கடமையா தான் செய்துகிட்டு வந்துருக்கேன்."

"எனக்காக அந்த கடமையை மாத்திக்குங்கோ வேற எந்த
தொழில் வேணா செய்யுங்கோ. இது மட்டும் வேண்டாம்."

"இது என்ன அவ்வளவு இழிவா மைதிலி? மது அருந்தறதையும்
மாமிசம் உண்றததையும் விலை மாதுகிட்ட போறதையும்விடவா
இது இழிவு?"

"இது இழிவு இல்ல. மலிவு! உங்களுக்கு இப்ப தேவை மதிப்பு?"

"இதை விட்டுட்டா மட்டும் எனக்கு எப்படி மதிப்பு
வரும்...?"

"என் உள் மனசு சொல்றது... உங்களுக்கு ஒரு பெரிய மதிப்பு
காத்துண்டு இருக்கறதா..."

"உன் காதலுக்கு கண்ணுதான் இல்லைன்னா அறிவும் கூட
இல்லை? எனக்குன்னு ஒரு ஜாதியில்லை. மதமில்லை. மொ
பில்லை. வீடு வாசல்னு சொத்துமில்லை. மொத்தத்துல நான்
எதுவுமேயில்லாத ஒருத்தன். ஆனா எனக்குப் போய் மதிப்பு
வருதுங்கிறியே இதை நான் எதை வெச்சு நம்பறது?"

அவனது கேள்விமுன் அவளாலும் பதில்கூற முடியவில்லை
தூரத்தில் மனிதக் குரல் வேறு கேட்க ஆரம்பித்தது.

"யாரோ வரா... உம் சீக்கிரம் முதல்ல நீங்க எனக்கு சத்யம்
பண்ணுங்கோ"

"மைதிலி..."

"என்ன மைதிலி... இப்படி எதுவுமே இல்லாத உங்களை
நோக்கி நீங்க அழைக்காமலே நான் வரலையா. அதே வழில அதே
பாதைல அந்த மதிப்பும் மரியாதையும் தேடி வரலாம். யார்
கண்டது?"

ஒரு வேகத்தில் ஆனால் அவள் கேட்ட விதத்தில் ஒரு சத்தியம்
இருந்து அவனை கட்டிப் போட்டது.

"உம் சீக்கிரமா எனக்கு சத்யம் பண்ணுங்கோ..."

"என்னன்னு பண்ணணும்?"

"இந்த உலகத்துல இனி நீங்க எந்த ஒரு பொணத்தையும்
தொடக்கூடாது. அடுத்து நீங்க ஒரு பொணத்தை தொட்றதா
இருந்தா அது என்னோட பொணமாத்தான் இருக்கணும்..."

"மைதிலி... ஏன் இப்படி எல்லாம் பேசறே?"

"முதல்ல சத்தியம்... அப்புறம் மத்த பேச்செல்லாம்."

"சரி மைதிலி... உன் விருப்பப்படியே உனக்கு நான் சத்தியம்
செய்து தரேன். இனி எந்த ஒரு பிணத்தையும் எதுக்காகவும் தொட
மாட்டேன். தொட்றதா இருந்தா உன் பிணத்தை தொடலாம்னு
ஒரு சின்ன சலுகையை கொடுத்தே. அப்படி ஒரு நிலை வந்தா
நான் வேணா பொணமாவேன். ஆனா நான் உன்னைக்கூட
தொடமாட்டேன். இனி இந்தக் கையால எந்த பொணத்தையும்
தொடமாட்டேன். இது உன்மேல சத்தியம்"

"பெருமாள் பேர்ல பண்ணாம அது என்ன என் மேல?"

"எனக்குத் தெரிஞ்ச ஒரே பெருமாள், ஒரே தாயார் நீ தானே?"

அவன் கை மேல் தன் கை பதித்து அவன் சத்தியம் செய்த
படியே கூறிட அவள் சிலிர்த்துப் போய் அவனை திரும்பவும்
இறுகி அணைத்துக்கொண்டாள்.

★ ★ ★

தீவிரமான சிந்தனையில் இருந்தாள் வத்சலா. ஹைதராபாத்
செல்வதற்காக டிக்கட் ரிசர்வேஷனுக்கென்று ஜங்ஷன் வரை
போயிருந்த உஷா உள் நுழைந்தது கூட அவள் வரையில்
தெரியவில்லை.

"அம்மா..."

"...."

"அம்மா உன்னைத்தான்... எந்த உலகத்துல இருக்கே நீ?"

"ய...யாரு...?"

"யாரா... என்னாச்சும்மா உனக்கு? நானும் காத்தால இருந்து
பாக்கறேன் நீ தவியா தவிச்சுண்டு இருக்கே. சக்கரவர்த்தி
மாமாவோட மாட்டுப்பொண்ணும் பிள்ளையும் அந்த மைதிலிக்கு
வரன் நிச்சயம் பண்ண சென்னை போயிருக்கறத உன்னால
ஜீரணிக்க முடியலையா?"

உஷா கேட்ட காரணம் வத்சலாவுக்கே புதிது.

"என்னது... அந்த ரேவதியும் சீமாவும் அடுத்த வரனைப் பிடிக்க
சென்னைக்கு போயிருக்காளா?"

"ஆமாம்... அப்ப நீ அதுக்காக வருத்தப்படலையா... வேற
எதுக்காக இப்படி மூஞ்சியை தூக்கி வெச்சுண்டுருக்கே?"

"அது... அது..."

"எதும்மா...?"

"அது... ராத்திரி கனாவுல உன் அண்ணன் வந்தான் அதான்."

வத்சலா உஷாவிடமும் மனம்விடத்தயாரில்லை. தோன்றிய
பொய்யைச் சொன்னாள்.

"இதை நீ என்னை நம்பச் சொல்றியா?"

"ஏ... ஏண்டி... இதுல நம்பறதுக்கும் நம்பாததுக்கும் என்ன இருக்கு?"

"சும்மா... பேசணும்மேன்னு பேசாதே! என் கிட்டயே நீ ஒரு விஷயத்தை மறைக்கறது இதான் முதல் தடவை. நீ மறைக்கற விஷயமும் நிச்சயம் சாதாரண விஷயமா இருக்கப்போறதில்லன்னு என் மனசுக்கு பட்றது..."

"ஒரு விஷயமும் இல்லடி... எப்பவும் எனக்கு உன் அண்ணன் ஸ்ரீதர் ஞாபகமாவே இருக்கு. அம்மா அம்மான்னு அவன் கூப்பிட்ற மாதிரியே இருக்கு."

"என்னம்மா நீயா, இப்படி சென்டிமென்ட்டா பேசறே? நெஜமா அண்ணா ஞாபகம்தானா?" கேட்டபடியே அவள் எதிரில் ஒரு புது வேஷ்டி, சட்டை ஒன்று எடுத்து வைத்தாள்.

"யாருக்குடி இந்த வேஷ்டி சட்டை?"

"சொல்றேன். நான் ஹைதராபாத் போக டிக்கெட் ரிசர்வேஷன் பண்ணியாச்சு. வர்ற ஞாயிற்றுக்கிழமை வைகை எக்ஸ்பிரஸ்ல சென்னை. அப்படியே சாய்ந்தரம் சார்மினார் எக்ஸ்பிரஸ்ல ஹைதராபாத்துக்கு டிக்கெட் வாங்கிட்டேன். இந்த வேஷ்டி சட்டை வந்து ரங்கனுக்கு!"

அவள் சொன்ன நொடி வத்சலாவுக்கு அவளை யாரோ பிடித்து தள்ளினாற் போல் இருந்தது.

"ரங்கனுக்கா?"

"ஆமாம்பா... ஹைதராபாத்ல இருந்து அவர் போன் பண்ணப்ப ஒரு வேஷ்டி சட்டையையாவது வாங்கி ரங்கனுக்கு நம்ம சார்பா கொடுத்துட்டுவான்னார். ஏன்னா அவர் உயிரை ரங்கன்தானே காப்பாத்தினான்? அதுக்கு அவர் பணம் கொடுத்தப்ப வாங்க மறுத்துட்டான். அது என் ஆத்துக்காரரை ரொம்பவே பாதிச்சிடுத்து. அவன் பொணம் தூக்கி இல்ல உஷா. குணம் தூக்கின்னு ரொம்ப ஸ்லாகிச்சு பேசிண்டிருந்தார். இப்ப இதையாவது பண்ணிட்டு வான்னார்."

அவள் சொல்லச் சொல்ல வத்சலாவின் மனத்துக்குள் திடுதிடுவென்று குதிரைகள் ஓட ஆரம்பித்தன.

"அப்றம்மா... இதை நம்ப ஆத்துல வெச்சு உன் கையாலையும் அய்யா கையாலையும் தான் தரணும்னார். நீ உடனே இதுதான் சாக்குன்னு கொம்புல ஏறிக்காதே..."

உஷா சொல்லிக்கொண்டே அந்த வேஷ்டி சட்டையை எடுத்துக்கொண்டு உள்ளே சென்றாள். வத்சலாவுக்கோ தன் முன்னாலே காலதேவன் கைகட்டிக்கொண்டு முகத்தில் ஒருவித கூரும்புச் சிரிப்போடு பார்க்கிறார் போல் இருந்தது.

இந்த ரங்கன் என்ன இப்படி உள்ளே நுழையப் பார்க்கிறான்? ஒரு பிணந்தூக்கியை பிள்ளை என்றால் தெருவில் நாளை இறங்கி நடமாட முடியுமா? இதெல்லாம் சினிமாவில் நடந்தாலே கூட ஏற்க மாட்டார்களே...?

வத்சலாவுக்குள் குடைய ஆரம்பித்து விட்டது. குண சுந்தரி மாமி என்று ஒருத்தி இருக்கிறாள். ஒருவரது நல்லதே அவள் கண்களுக்கு தெரியாது. ஒருவர் குடும்பத்தில் அவர்களது முன்னோர்களில் யாராவது ஒருவர் கவனிக்கும்படியாக ஏதாவது செய்திருப்பார்கள். அதை ஞாபகமாகச் சொல்லிக்காட்டுவதில் அவளை அடிக்க ஆளே கிடையாது.

நாலு வீடு தள்ளி இருக்கிறது ராஜலட்சுமி அகம். அவள் மகள் வயதுக்கு வந்தபோது குணசுந்தரியும் அந்த விசேஷத்திற்கு வந்திருந்தாள். மணையில் அமர்ந்திருந்த ராஜலட்சுமியின் பெண்ணுக்கு இடுப்பில் தங்க ஒட்டியாணம் அணிவிக்கப் பட்டிருந்தது. அதைப்பார்த்துவிட்டு 'இந்த ஒட்டியாணம் இந்த வீட்டுக்கு எப்படி வந்ததுன்னு உனக்கு தெரியுமா?' என்று ஒட்டியாணத்துக்குக் கூட ஒரு கதை பேச ஆரம்பித்து விட்டாள்.

'இந்த ராஜலட்சுமியோட மாமியாருக்கு மாமியார் ஒரு அராத்து. இவமாமியாரோட அப்பாகிட்ட இருவது பவுன்ல ஒட்டியாணம் பண்ணிப் போட்டாதான் ஆச்சுன்னுட்டா...! அவரும் இந்த சீரங்கத்துல இருந்த தன் வீடுகள்ள ஒண்ணவித்து அதுல வந்த பணத்துல இதை செய்து போட்டராக்கும்...' என்று ராஜலட்

சுமிக்கே கூட தெரிந்திராத கதையை சொன்னதைக் கேட்டு வத்சலாவே ஆடிப்போய் விட்டாள்.

அவள் வசம் ரங்கன் விஷயமெல்லாம் சிக்கினால் மட்டையடி நாலுகீத்து என்று பீராய்ந்து பின்னி எடுத்து விடுவாளே... ஹைய்யோ?

வத்சலாவுக்கு நடுங்கியது உடம்பு. அப்போது பார்த்து தேசிகாச்சாரியும் வீட்டுக்குள் நுழைந்தார். இருவர் பார்வையும் அந்த புஷ்டியோடு மோதிக்கொண்டன.

46

‘விதிவழி என்றும் வலியது-அதன்
வினைகள் புதிராய் திகழ்வது!
மதி வழி என்றும் பெரியது-ஆயினும்
விதி வழி முன் அது எளியது
நதி வழி கடலில் முடிவது-போலிந்த
விதி வழியும் சாதலில் முடிவதோ?’

இருவர் பார்வையும் மோதிக்கொண்ட அந்த தருணத்தில் தேசிகாச்சாரி சற்று அச்சப்படவும் செய்தார். எப்போதுமே வத்சலாவின் ஆளுமை அப்படி! மனிதக் கூட்டத்தில் சிலர் வரையில் பார்வையும், தோரணையும் சிலருக்கு பெரிதும் கை கொடுக்கும் அப்படிப்பட்டவர்களிடம் நாம் தொடக்கத்தில் பணிந்து போக நேரிட்டால் பிற்பாடு எப்போதுமே அப்படிப் போகும்படியாகி விடும்.

நடுவில் நாம் என்னதான் நினைத்தாலும் அவர்களைப் போல் அவர்களின் எதிரில் நடந்து கொள்ள நமக்கு தைரியம் மட்டும் வரவே வராது.

தேசிகாச்சாரியோ வத்சலாவைப் பொறுத்த மட்டில் குற்றவாளி வேறு... கேட்க வேண்டுமா...? குறுகிப்போனார். வத்சலாவோ

எளியைப் பார்த்துவிட்ட பூனைபோல அவர் பின்னேயே போனாள்.

அலகும் மரப்படிகளில் ஏறி மாடிப்பக்கம் போகத் தொடங்கினார். ஹேமே சமையல் கட்டில் சப்தம் கேட்டது. உஷா அம்தோன் இருக்க வேண்டும்.

வத்சலாவுக்கும் அவர் மாடிக்குப் போவது வசதியாகிவிட்டது. அவளும் மாடிப்படிகளில் ஏறினாள்.

மேலே இரண்டு அறைகள்! ஒன்றில் பெரிது பெரிதாய் மரப் பெட்டிகள். அவற்றில் தூக்கிப் போட மனசில்லாத அந்த கால ஜஞ்சல் பலகையில் இருந்து குழந்தைத் தொட்டில் வரை படிந்து.

இன்னொன்றில் ஒரு மரக்கட்டில் அதன் மேல் படுக்கை பக்கமாய் புத்தக அலமாரி. அதில் பழுப்பேறிப்போன பலவித மான புத்தகங்கள். குறிப்பாக கடல் புறா, பொன்னியின் செல்வன், சத்யசோதனை, சீவகசிந்தாமணி, சுந்தரகாண்டம், பாரதியார் கவிதைகள் போன்றவை.

அந்தக் கட்டில் மேல் தான் போய் அமர்ந்தார். தேசிகாச்சாரி. வத்சலாவும் வந்து நின்றாள்.

“என்ன தேசாடனம் போகப் போறேளாமே... என்னிக்கு கிளம்பறதா உத்தேசம்...?”

ஆரம்பமே அதகளமாக இருந்தது வத்சலாவிடம்.

“அப்ப என்னை வழியனுப்ப தயாராயிட்டேன்னு சொல்லு...”

“நான் தயாராகறது இருக்கட்டும். தேசாடனம்னா என்னன்னு தெரியுமா உங்களுக்கு?”

“இப்ப உனக்கேன் அந்த கவலை?”

“பின்ன... நீங்க பாட்டுக்கு ஸ்தல யாத்ரையை தேசாடனம்னு நினைச்சுண்டுட்டா என்ன பண்றது? தேசாடனம்னா கிட்டத் தட்ட சன்யாசம் வாங்கிக்கறது. அதுக்கு ஆச்சார்யன் சம்மதிக் கணும். வைணவனுக்கு தேசாடனம் கேள்வியே பட்டிராத ஒண்ணு. தெரியுமோல்லியோ?”

"ராமானுஜர் போனாரே...?"

"அவர் ஆச்சார்யன்...! அந்த ஆதிசேஷன் அவதாரம். நீங்க என்ன அப்படியா?"

"இப்ப நீ முடிவா என்னதான் சொல்லவரே?".

"எதுக்கு இந்த பூச்சாண்டின்னு கேக்கறேன்?"

"இது பூச்சாண்டி இல்ல வத்சலா. இனியாவது மனுஷனா வாழற உத்தேசம்." சொல்லும்போதே தேசிகாச்சாரி அழுது விட்டார். அதுவே அவரின் நிஜமான உணர்வு நிலையை வத்சலாவுக்கு உணர்த்தி சற்று ஆற்றுப் படுத்தவும் செய்தது.

"சரி நான் உங்க பிள்ளையாண்டானை ஏத்துண்டுட்டா அப்ப நீங்க முழு மனுஷனாயிடுவேளா?"

"நிஜமாவா சொல்றே?" சட்டென்று பரவசமானார் தேசிகாச்சாரி.

"என் கேள்விக்கு பதிலை சொல்லுங்கோ..."

"ஆயிடுவேன் வத்சலா. அதுக்கப்புறமா நீ என்ன சொன்னாலும் நான் கேக்கறேன்."

"நீங்க கேப்பேள்... ஆனா நம்மளை இந்த ஊர் ஹீனமான்னா பார்க்கும்?"

"ஊர்தான் உன்னோட ஒரே பயமா?"

"எல்லாரோட பயமுமே அதானே... அதுலயும் குணசுந்தரி ஒருத்தி போதுமே? சாயந்தரத்துல அவ மாலை முரசுன்னா... பகல்ல தினத்தந்தி! வீட்டுக்கு வீடு போய் விஸ்தாரமான்னா பேசுவா?"

"அவளை நினைச்சா பயப்பட்றே...?"

"பின்னே... பேய் பிசாசுகிட்ட கூட எனக்கு பயம் கிடையாது. ஆனா அவ வாயை நினைச்சா ரங்கநாயகித்தாயாரே பயப்படு வாளே...?"

"தூக்கி உடப்புல போடு... நாலுநாள் பேசுவா... அப்புறம் சரியாப்போயிடும்."

"அந்த நாலு நாள்ளயே நான் நாத்தமெடுத்து ஒண்ணுமில்லாம போய்டுவேனே...?"

"வத்சலா... இதெல்லாம் ஒரு பேச்சா... நீ இந்த அளவுக்கு மனசு மாறி சம்மதிப்பேன்னு நான் நினைக்கவேயில்லை தெரியுமா?"

"சம்மதிச்சுட்டேனா... நானா? உங்களுக்கு புரியட்டுமேன்னு ஒரு பேச்சுக்கு கேட்டா சம்மதிச்சுட்டதா அர்த்தமா?"

"வத்சலா... உன் கால்ல கூட விழறேண்டி... என் மேல கோபம் இருந்தா செருப்பை எடுத்துண்டுவந்து கூட அடி. ஆனா ரங்கனை ஏத்துக்க அனுமதி கொடு... ஒரு பிள்ளை இருந்தும் நாம தவிக்க வேண்டாண்டி."

"இல்ல... எவ்வளவு யோசிச்சாலும் பயமாகவே இருக்கு. நான் உசுரோட இருக்கற வரை இதுக்கு நான் சம்மதிக்க தயாரா இல்லை..."

"அப்ப நானும் தேசாடனம் கிளம்பிட்றேன். என்ன வந்தது உன் ஆம்படையானுக்கு? ஏன் இந்த முடிவுன்னு அப்பவும் ஊர் உன்னை கேள்விகளா கேட்கும். ஞாபகம் வெச்சுக்கோ..."

"அனுமார் கனவுல வந்து கூப்பட்டார். கிளம்பிப் போய்ட் டார்னு ஒரே போடா போட்டுட்டு நான் பாட்டுக்கு போயிண்டே இருப்பேன். என்னை யார்னு நினைச்சேள்...?"

"வத்சலா...!"

"போய் வேலையைப் பாருங்கோ. வேணும்னா அவனுக்கு ஒரு அஞ்சாயிரம் பத்தாயிரம் தாங்கோ அதுக்கு கூட அவன் என் வரைல தகுதியில்லாதவன்..."

"அப்ப இதான் உன் முடிவா?"

"ஆமாம். சிங்கராச்சாரி அண்ணா கூட என் பக்கம்தான். ஞாபகத்துல வெச்சுக்குங்கோ..."

"சரி உனக்கு நான் இன்னும் இரண்டு நாள் டயம் தரேன். அதுக்குள்ள நீ உன் முடிவை மாத்திக்கணும். இல்லேன்னா நான் தேசாடனம் போறேனோ இல்லையோ உன்னைவிட்டு பிரிஞ்சு போய் ரங்கனோட சேர்ந்துடுவேன். இது இந்த ஸ்ரீரங்கத்து ரங்கநாதர் மேல சத்தியம்..."

தீர்மானமாக சொல்லிவிட்டு தேசிகாச்சாரி அந்த அறையை விட்டு நீங்கத் தொடங்கினார். வத்சலாவுக்கு மட்டும் அவர் நெற்றியில் ஒரு ஊசி ஆணியை அறைந்துவிட்டு இறங்கிப் போகிறார் போல் இருந்தது.

கோவிந்தன் சைக்கிள் கடை!

ரங்கன் வரவும் கோவிந்தனிடம் ஒரு தனி உற்சாகம். ரங்கன் முகத்திலும் ஒரு தனி பொலிவு. அதிசயமாக தலைக்கு வகிடு எடுத்து வாரியிருந்தான்.

"அந்த பொண்ணு சாதிச்சிடிச்சின்னு நினைக்கறேன்" என்றான் கோவிந்தனும் புன்னகையோடு...

வெட்கப்பட்டுக்கொண்டே முக்காலியை இழுத்துப்போட்டு அமர்ந்தான் ரங்கன்.

"என்ன பேச்சக் காணோம்...?"

"என்னத்த பேச அதான் சரியா சொல்லிட்டியே...!"

"அட்ரா சக்கைன்னானாம்... அப்ப நீயும் அதை ஏத்து கிட்டேன்னு சொல்லு..."

"என் வாழ்க்கை எந்த காலத்துல கோயிந்தா என்கைல இருந்துருக்கு... மைதிலியும் அவ விருப்பத்துக்கு என்னை ஏத்துக்க வெச்சுட்டா!"

"இப்படி சொன்னா எப்படி... உன் வாழ்க்கை உன் கைல இருக்கறதவிட அந்த பொண்ணு கைல இருக்கறதும் ஒரு விதத்துல நல்லதுதான் ரங்கா..."

"என்ன நல்லதோ? நியாயமா பார்த்தா நீ என்னை கண்டிக் கணும். ஏண்டா அனாதை நாயி... உனக்கு லட்டு மாதிரி அய்யங் கார் பொண்ணு கேக்குதான்னு... ஆனா நல்லதுங் கறியே...?"

"உன் வாழ்க்கைல உனக்கொரு நல்லது நடக்காதான்னு ஏங்கறவன் நான். நான் நிச்சயம் அப்படி கேக்க மாட்டேன் ரங்கா."

"அந்த மைதிலிய பார்த்தா உனக்கு பாவமா தெரியலை?"

"நீ எந்த காலத்துல இருக்கே ரங்கா... உனக்கு ஏன் இவ்வளவு தாழ்வு மனப்பான்மை?"

"இது என்ன கோவிந்தா கேள்வி... நான் என்ன மிட்டா மிராசா? இல்லை எம்.பி., எம்.எல்.ஏ.வா...? அதுவுமில்லை ஒரு பி.ஏ.,பி.எஸ்.லியா? விதியத்துப் போய் செத்துப்போற பொணங்கள தூக்கற ஒரு கதியத்தவன் கோவிந்தா..."

"அது இப்பதான்... மைதிலி இப்ப உன் மனசுக்குள்ள வந்துட்டா இனி நீ எப்படி எல்லாம் மாறப்போறேன்னு பாரேன்?"

"இதே மாதிரி அவ ஒரு விதத்துல நம்பறா... நீயும் நம்பறே... ஆனா எப்படின்னு தான் எனக்கு புரியமாட்டேங்குது."

"இதோ பார்.... காலம் ரொம்பவே மாறிகிட்டு வருது. விறகு வெட்டியா இருந்த ஆபிரகாம் லிங்கன்தான் அமெரிக்க ஜனாதிபதி யாவே ஆனாரு. ஒரு பஸ் கண்டக்டரா இருந்தவரு இன்னிக்கு சூப்பர் ஸ்டார். நீ இனி பொணந்தூக்கறத விடு. என்கூட இங்க கடைல இரு. மோட்டார் பைக், காருன்னு மெக்கானிக் வேலையை கத்துக்கோ... உன்னோட கற்பூரபுத்திக்கு எல்லாத் தையும் கத்துக்க மூணு மாசம் போதும். தனியா மெக்கானிக் ஷாப் வைக்க உனக்கு ஒரு வருஷம் போதும். இந்த வேலைக்கு இன்னிக்கு ஆட்கள் கிடைக்கறது கஷ்டமா இருக்கு. பிளாட் பாரத்துல கடை போட்றவன்கூட எப்படியோ கஷ்டப்பட்டு அவங்க பிள்ளைக்கான பெரிய படிப்பு படிக்க வைக்கற வேகத்துல இருக்காங்க. அதனால சில்ற வேலைக்கு ஆள் இல்ல...

பி.ஏ.,எம்.ஏ. எல்லாம் இப்ப வெறும் படிப்பு. அதுக்கு மேல படிச்சாதான். ஒரு ஆம்பளைக்கு பொண்ணு கிடைச்சு கல்யாணமே நடக்குது. இதே தெருவுல +2 படிச்ச ஒரு அய்யர் பையனுக்கு இப்ப 38 வயசு. அவங்க அப்பா ஜாதகம் பார்த்து ஒஞ்சு போய்ட்டாரு! சொந்த வீடு வாசல்னு கோடி ரூபாய்க்கு சொத்து இருந்தும் எந்த பொண்ணும் ஒரு +2வை கட்டிக்க தயார் இல்லை. அவர் கொஞ்சம் கொஞ்சமா தன்னோட ஜாதி, அப்புறம், ஒரு படி கீழே, இன்னொரு படி கீழன்னு போய் இப்ப ஏதோ ஒரு பொண்ணு கிடைச்சா போதும்கறாரு.

இதுதான் இப்ப நிலைப்பாடு. எதெல்லாம் மாறாதுன்னு நினைச்சிருந்தோமோ அதெல்லாமே மாற ஆரம்பிச்சிடிச்சு. எனக்கு அம்பது வயசாகுது. என் அனுபவத்துல சொல்றேன். காலம்தான் எதையும் தீர்மானிக்குது.... அது மாறும்போது நாமும் மாறித்தான் ஆகணும். அந்த வலைல எல்லாமே மாறிட்டே வருது ரங்கா.

எல்லா காலத்துலயும் பணத்துக்கு மட்டும் ஒரு போலியான மதிப்பு இருந்துகிட்டு இருக்கு. மத்த எல்லாமே மாறிடிச்சு நாளைக்கு இதுவும் மாறும்.''

கோவிந்தன் ஒரு தேர்ந்த வாழ்வியல் ஞானி போல பேசியதிலும் அசைக்க முடியாத உண்மைகள் ரங்கனுக்கும் அவன் பேச்சு தெம்பளிப்பதாகத்தான் இருந்தது.

''கோவிந்தா... மைதிலியும் என்னை இனி பொணம் தூக்கக் கூடாதுன்னுட்டா. நீயும் அதையேதான் சொல்றே. அதை நான் ஒரு தொழிலா எப்பவுமே நினைச்சதில்ல. இது உனக்கும் தெரியும்.''

''நல்லா தெரியும் ரங்கா. இப்பகூட நான் உன்னை தற்காலிகமா இதைச் செய்யா தேன்னுதான் சொல்றேன். நாளைக்கே நீ வேற ஒரு தொழில்ல லட்சக்கணக்குல சம்பாதிச்சு வீடுவாசல்னு செட்டில் ஆன நிலைல இதை செய். அப்ப இந்த உலகமும் உன்னை பெரிய தியாகியா, வீரனா பேசும்.

ஆனா இப்ப நீ எப்படி நினைச்சு செய்தாலும் சோத்துக்கு செத்தவன் வேலைன்னு தான் நினைக்கும்-பேசும்''

''இல்ல ரங்கா இனி எப்பவும் நான் இதைச் செய்ய முடியாது.''

''ஏன் அப்படி?''

ரங்கன் மைதிலிக்கு சத்தியம் செய்து கொடுத்ததை விஸ்தாரமா சொல்லி முடித்தான்.

கோவிந்தனும் வியந்து வழிந்தான்.

''நான் கூட உன்னை கொஞ்ச நாளைக்கு தடுக்கத்தான் நினைச்சேன். ஆனா அந்த பொண்ணு பெரிய பூட்டாவே பூட்டிடுச்சு உன்னை... சபாஷ்!''

''என்ன சபாஷ்... ஆறுமாசம் எனக்கு டயம் கொடுத்துருக்கா... அதுக்குள்ள நான் தயாராகி அவ கழுத்துல தாலி கட்டியாகணும்.''

''அட்ராசக்கை. சபாஷ் சபாஷ்!''

''உன் ஒரு சபாஷையே என்னால ஜீரணிக்க முடியல. இதுல இரண்டு சபாஷா...?''

''இதோ பார்... என் வரைல நீ இன்னிக்கு தான் பிறந்திருக்கே. அந்த பொண்ணும் உன்னை சேறு சகதில இருந்து வெளிய எடுத்து வாழ்க்கைங்கற மைதானத்துல தூக்கிப் போட்டுட்டா. இனி நீ ஓடித்தான் தீரணும் ஓடு. நல்லா ஓடு உனக்காக இல்லாட்டியும் அவளுக்காக ஓடு. நீ ஓடுவே... அவளோட காதல் உன்னை ஓடவைக்கும். நீ ஜெயிப்பே.''

கோவிந்தன் நம்பிக்கையோடு சொல்லிவிட்டு ''இந்தா இந்த வண்டிக்கு பஞ்சர் போட்றதுல இருந்து உன் புது வேலையைத் தொடங்கு. அப்புறம்... அந்த தோப்புல இப்ப நீ வேலைல இருக்கே தானே?''

''என்னை ஊரே விட்டே போகச் சொல்லிட்டாரு சீமா. எப்படி வேலைல மட்டும் வெச்சுப்பாங்க.''

''இவன் யார் உன்னை ஊரைவிட்டு போகச் சொல்றதுக்கு... அடுத்து பார்த்தா நீ போய் உன் வேலைய பாருன்னு சொல்.''

''அதைத்தான் எப்படிச் சொல்லப் போறேன்னு தெரியல...''

''நீ சொல்லாட்டி என்ன. நான் சொல்றேன். இதெல்லாம் ஒரு விஷயமா. நீ நல்லநேரத்துல வேலையை ஆரம்பி.''

ஒரு ட்யூப்பைத் தூக்கிப்போட்டான் கோவிந்தன். அப்போது அங்கு ஒரு டூ வீலரில் வந்த ஒருவர் ''ரங்கா நீ இங்க இருக்கியா... உன்னைத்தேடிண்டு நான் அம்மாமண்டபம், கொள்ளிடம், சிந்தாமணிக்கரைனு அலையா அலைஞ்சு வரேன்'' என்றார்.

''இனிமே அங்க எங்கேயும் போகவேண்டாம். ரங்கன் இனி எப்பவும் இங்க தான் இருப்பான். என்ன யாராவது ஆத்தோட போய்ட்டாங்களா?''

கோவிந்தன் சற்று கோபத்தோடு கேட்டான்.

''சேச்சே... ரங்கனை எங்க பார்த்தாலும் என்னை வந்து பார்க்கச் சொல்லுன்னார் சிங்கராச்சாரியார். அதான் சொல்லிட்டுப் போக வந்தேன்...''

''ஓ... நம்ம சாமியா அப்ப சரி... ரங்கா போய்ப்பார். அவர் கூப்பிட்டு விட்டா ஏதாவது விஷயம் இருக்கும்.''

''கோவிந்தா ஒருவேளை இந்த சீமா அவர்கிட்ட சொல்லி மைதிலிய மறந்துடச் சொல்லியிருப்பானோ.''

''இருக்கட்டுமே... உனக்குத்தான் சாமி நல்ல பழக்கமாச்சே. மைதிலி மனசை மாத்திகிட்டா நானும் மாத்திக்கறேன்னு டெக்னிக்கலா பேசு.''

''நீ அப்படிச் சொல்றியா''

''என்ன அப்படி சொல்றியா... இல்லாட்டி விடு. அவரை பார்க்கப் போகாதே-என்ன நடக்குதுன்னு பாத்துடுவோம்.''

''இல்ல கோவிந்தா... சாமி ரொம்ப நல்லவர். நியாயமானவர். அவராலதான் நான் ரங்கநாதரையே நம்பறேன். அவரை பாக்கறதுக்கு முந்திவரை ரங்கநாதர் என்வரைல பாம்பு மேல படுத்துருக்கற ஒரு தூங்கு மூஞ்சி. அவ்வளவுதான்.''

''இப்ப நீ முடிவா என்ன சொல்றே?''

''அவர் கூப்பிட்டு நான் போகாம இருக்கறது மரியாதை கிடையாது. போய்ட்டே வந்துட்றேன்.''

ரங்கன் எழுந்து கொண்டான். ''சரி... ஆனா அவர் மைதிலி விஷயமா உன்னை பின்வாங்கச் சொன்னா பேசாம திரும்பி வந்துடு. நல்லவர் நியாயமானவர்னு சரின்னு சொல்லிட்டேன்னு இங்க வந்து நிக்காதே...''

கோவிந்தன் கட்டளையாகவே சொல்லி முடித்தான். ரங்கனும் புறப்பட்டான்.

''ஸ்ரீனா...'' தொலைபேசியில் தேசிகாச்சாரி.

''சொல்லு'' இது சிங்கராச்சாரியார்.

''இவ கிட்ட ஒரு பருப்பும் வேகலை. கடைசிவரை ரங்கனை ஒத்துக்க முடியாதுன்னுட்டா. நீங்க அவ பக்கமாம்!''

''சரி நீ என்ன பண்ணப்போற அதைச்சொல்லு.''

''கடைசி கடைசியா இரண்டு நாள் அவகாசம் கொடுத்துருக்கேன். அவ வழிக்கு வரலைன்னா நானே ரங்கனைப் பார்த்து எல்லா உண்மையையும் சொல்லி அவனோட சேர்ந்துடப் போறேன். இவளை தலை முழுகற முடிவுக்கு வந்துருக்கேன். இதை ரங்கநாதர் மேல் சத்யமாவும் சொல்லிட்டேன்.''

''உணர்ச்சி வசப்பட்டாலே இப்படித்தான்... உனக்குள்ள நீயே சிக்கிண்டுட்டியே தேசி.''

''நான் வத்சலாவை கல்யாணம் பண்ணிண்ட அன்னிக்கே சிக்கிண்டுட்டேன் அண்ணா. நீங்க என்னமோ இப்ப சொல்றேள்.''

''அப்ப உன் தேசாடனம்கறது புஸ்வாணமா?''

''என்னால தேசாடனம்லாம் போக முடியாதுண்ணா. எங்க போனாலும் ரங்கன் தான் எதிர்ல தெரிவான். இங்க இவனை தெருவுல விட்டுட்டு நான் எந்த ஷேத்ரத்துக்குப் போய் என்னண்ணா புண்ணியம்? ஓட்டப் பாத்திரத்துல எவ்வளவு ஜலம் விட்டாலும் நிக்கவா செய்யும்.''

''சரி... செத்த அமைதியா இரு. காட்டழகிய சிங்கர் கோயிலுக்குப் போய் சேவி. வழியே இல்லைங்கற இடத்துல வழியை உண்டாக்கி அதுல வழி நடத்தறது தான் நரசிம்மன்! உனக்கும் ஒரு வழி உன் பிரார்த்தனைகளால பொறக்கட்டும். நானும் ரங்கனை வரச்சொல்லியிருக்கேன். பக்குவமா பேசி அவன் யாருங்கறத அவனுக்குச் சொல்லி கொஞ்சம் தயார்படுத்தி வைக்கறேன். எனக்கென்னவோ வத்சலா உன் வழிக்கு வருவான்னு தான் தோண்றது, பார்ப்போம்.''

போனை கட் செய்தபடியே திரும்பினார் சிங்கராச்சாரியார்.

வாசலில் நின்றபடி இருந்தான் ரங்கன்.

''உள்ளே வா ரங்கா.

''அவனும் வந்தான்.''

''வா மாடிக்குப் போய் பேசலாம்.''

அவர் மாடிப்படி ஏற அவனும் பின் தொடர்ந்தான். மாடிப் படியில் கால்வைக்கும்போதே மனைவியைப் பார்த்து ''யாரையும்

மேல விடாதே. போன் வந்தாலும் எடுத்து அப்புமமா பேசச் சொல்லு...'' என்றார். அவரது அந்த முன்னெச்சரிக்கையே ரங்கனை சற்று அதிரச் செய்தது.

''நிச்சயம் மைதிலி விஷயம்தான்...'' என்று எண்ணியவன் அறைக்குள் நுழைந்த மாத்திரத்தில் ''நீங்க இப்ப என்னை எதுக்கு கூப்பிட்டிருக்கீங்கன்னு தெரியும் சாமி...'' என்றான். பதிலுக்கு அவரும் அதிர்ந்தார்.

''என்னை உயிரைக்கூட விடச்சொல்லுங்க விட்டுட்றேன். ஆனா என்னை உயிருக்குயிரா காதலிக்கற மைதிலியை என்னால மறக்கவோ கைவிடவோ முடியாது'' என்றான்.

சிங்கராச்சாரியாருக்குள் நிஜமாலுமே ஒரு படபடப்பு உணர்ச்சி ஏற்பட்டு பின் அடங்கவும் தொடங்கியது.

''நீங்க ஒண்ணு சொல்லி நான் அதைக் கேக்கலேன்னு ஆயிடக் கூடாது. அதனாலதான் நீங்க பேசத்தொடங்கறதுக்கு முந்தியே நான் பேசிட்டேன்.

நான் எந்த நிலைலயும் மைதிலியோட காதலை ஏத்துக்கலை. ஆத்துல அவளை சுழல் கொண்டு போனப்போ, அவளை நிர்வாணமா தொட்டுத் தூக்கினப்போ கூட எனக்குள்ள எந்த சலனங்களும் இல்லை.

ஆனா அவளால என்னைத்தவிர யாரையும் நினைச்சுக்கூட பார்க்க முடியல. அதை எனக்கு அவ அழுத்தமாவே புரிய வெச்சுட்டா. ஆகையால மைதிலி விஷயமா உங்களுக்கு நான் மனக்கசப்பை தர விரும்பல. அதேபோல நான் இனிமே பிணங்களையும் தூக்கப் போறதில்ல. என்கிட்ட மைதிலி சத்யம் வாங்கிட்டுகிட்டா! புதுசா எதாவது தொழில் பண்ணி ஒரு மனுஷனா வாழ்ந்து காட்டி அவளை நான் கைபிடிக்கப் போறேன்.

அவகூட இந்த ஊரை விட்டே போயிடலாம்னு சொன்னா ஓடிப்போய் ஒளிஞ்சு வாழறதை விட எதிர்த்து நின்னு போராடி ஜெயிக்கறது மேல்னு நான் நினைக்கறேன். அது எப்படி நடக்குமோ எனக்குத் தெரியாது. ஆனா மைதிலி நடக்கும்னு நம்பறா... என்னை அந்தஸ்தும் மரியாதையும் தேடிவருமாம்.

ரங்கநாயகித் தாயார் கிட்ட சொல்லிட்டாளாம். இந்த பொணந் தூக்கியை, வெறும்பயலை அவ இந்த ஊர் ராஜகோபுரத்துக்குச் சமமா நினைக்கறா. அவ நினைப்பை நான் நிறைவேற்றிக் காட்டணும். நிறைவேத்துவேன்... என் மைதிலிக்காக நான் எதையும் செய்வேன்...'' ரங்கனிடம் வெளிப்பட்ட ஒவ்வொரு வார்த்தைகளும் சிங்கராச்சாரியாருக்கு அவர்களின் காதலை அப்பட்டமாக புரிய வைத்து விட்டது. அவர் சொல்ல வந்ததே வேறு-காதில் விழுந்தவைகளோ ஒரு புது வரலாறு... பிரமை பிடித்தார் போல் தனது ஈஸி சேரில் பொத்தென்று விழுந்தவர் முன் ''நான் வரேன் சாமி'' என்று புறப்படவும் செய்தான் ரங்கன்.

★ ★ ★

47

விதி என்னும் புரவி
வீதி வழி பரவி
மதி தானும் மயங்க
குதித்தோடும் நேரமிது!
ரங்கா...
சதிராடும் விதியாலே
புதிரான ஒரு வாழ்வும்
கதி மாறிப் போகுமோ
சுதி பேதம் ஆகுமோ?'

நின்றபடியே ஒரு தூய்மையான மழைபொழிவைப் போல ரங்கன் தனது காதலை சிங்கராச்சாரியாரிடம் சொல்லி முடித்து விட்டான். அவருக்கும் அது அதிர்ச்சியாகத்தான் இருந்தது. அதிர்ச்சியைவிட கூடுதலான ஒன்றாக என்றுகூட சொல்லலாம்.

ஒரு ரகசியத்தை எப்படிக் கூறப்போகிறோமோ தெரிய வில்லையே என்று தனக்குள்ளேயே ஒரு தேங்கலும் தடுமாற்றமு மாக இருந்தவரிடம் அவர் வைத்திருக்கும் ரகசியத்துக்கு இணை

யான ஒன்றை ரங்கன் கூறி முடித்துவிட்டான்! ஒரு விதத்தில் அது மெல்ல சந்தோஷமாகவும் மாற ஆரம்பித்தது.

''என்னங்க... என்னையெல்லாம் மைதிலி மாதிரி ஒரு தேவதை காதலிக்கறாங்கறதை உங்களால நம்ப முடியலையா. இல்லை ஜீரணிக்க முடியலையா?''

''ரெண்டுமில்ல ரங்கா... எனக்குள்ள வேறு விதமான ஆச்சர்யங்கள், அதிர்ச்சிகள்...''

''அப்ப மைதிலி என்னை காதலிக்கறாங்கறது உங்க வரைல ஒரு சாதாரண விஷயமா?''

''நிச்சயமா இல்லை... அங்கதான் எனக்கு பேராச்சர்யமே.''

''எனக்கே அப்படித்தோணும்போது உங்களுக்கென்னங்க, ஊருக்கேகூட அப்படித்தான் இருக்கும்.''

''ஊரைவிடு... அதுக்கு எப்பவும் ஒரு பார்வைதான், ஒரு காதுதான்! ஊரோட என்னைச் சேர்த்து சிந்திக்காதே.''

''ஒரு பார்வைதான். ஒரு காதுதான்னா... புரியலிங்களே?''

''அது எந்த ஒரு விஷயத்தையும் ஒரே கோணத்துல ஒருத்தர் பார்த்த மாதிரியே பார்க்கும். ஒரு தலைபட்சமா தன் காதுல விழுந்ததை மட்டுமே கணக்குல எடுத்து யோசிக்கும். ஆனா என்னைப் போல ஊருக்கு கதை சொல்லிகள் அப்படி இருக்கக் கூடாது. எல்லாப் பக்கமும் பார்க்கத் தெரிஞ்சவாளா, எல்லா கோணங்கள்லேயும் யோசிக்கத் தெரிஞ்சவாளா இருக்கணும்.''

''சரிங்க... அப்படின்னா நீங்களே சொல்லுங்க மைதிலி என்னை காதலிக்கறதும் பதிலுக்கு நான் அவளை காதலிக்கறதும் தப்பில்லை தானே?''

''நீ எங்கப்பா அவளை காதலிச்சே... அவன்னா உன்னை காதலிக்கும்படி பண்ணியிருக்கா...?''

''ஆமாங்க... ஆத்துல பொணங்களையே தொட்டு தொட்டுத் தூக்கினவன் நான். அந்த பொணங்களெல்லாம் எனக்கு சில நாள் சோத்துக்குதான் காரணமா இருந்தாங்க. ஆனா மைதிலிங்கற தேவதையை தூக்கப்போய் அது எனக்கு ஒரு புது வாழ்க்கையை தந்துருக்கு... அந்த தேவதையை நானும் வேற வழியில்லாம இப்ப

எத்தக்கிட்டிருக்கேன். நீங்க எங்களை முடிஞ்சா சேர்த்து வையுங்க. மைதிலி அண்ணன் பேச்சைக் கேட்டு எங்களை பிரிச்சிடுங்கன்னு மட்டும் சொல்லாதீங்க.

ரங்கன் பேச்சோடு பேச்சாக கைகளை கூப்பினான். சிரித்தார் சிங்கராச்சாரியார்.

''என்ன சிரிக்கறீங்க?''

''சிரிக்காம என்ன பண்ணச் சொல்றே? நான் உன்னைக் கூப்பிட்டு விட்டது நீ இப்ப சொன்ன உன் காதல் விஷயத்துக்காக இல்லை. அது முதல்ல நீ தெரிஞ்சுக்கோ...

ரங்கனுக்குள் திகைப்பு ஊடுருவியது.

''சொல்லப்போனா உன் காதல் விஷயமே என் வரைல ஒரு புது விஷயம். மைதிலியோட அண்ணாவான சீமா என்னைப் பாத்தாலே விழுந்தடிச்சு ஓட்ற டைப். ஏன்னா நான் சஹஸ்ர நாமம் சொல்லச்சொல்வேன். புருஷசூக்தம் சொல்லச் சொல்வேன். இந்தக் காலத்துப் பசங்களுக்கு சினிமா பாட்டுதானே சஹஸ்ர நாமமும் புருஷ சூக்தமும்?''

''அப்ப நீங்க என்னை அவசரமா பாக்க நினைச்சது எதுக்குங்க?''

''சொல்றேன்... நீ இப்படியே நின்னபடியே பேசறதனால என் கால்தான் வலிக்கறது. அது இன்னும் வலிக்கணுமா?''

அவர் அப்படிச் சொன்ன மறு நொடி மடக்கென்று தரையில் கால்மடக்கி அமர்ந்தான்.

''சும்மா இப்படி எனக்கு நேரா நாற்காலில உட்காரு...''

''பரவால்லய்யா நீங்க விஷயத்த சொல்லுங்க.''

''இனி இந்த அய்யா அம்மான்னு அந்நிய பாவனைப் பேச் செல்லாம் வேண்டாம். வைஷ்ணவத்துல உறவுக்காரனைத் தவிர மற்ற அவ்வளவு வைஷ்ணவனுக்கும் மாமா உறவு பொருந்தும். அதாவது பெத்த தாய்க்கு சகோதர உறவு. என்னையும் நீ மாமான்னே கூப்பிடலாம்...''

''வெளில இருக்கற யாராவது பார்த்தா சிரிப்பாங்கய்யா... 'பொணந்தூக்கி உறவு கொண்டாட்றதப் பாரும்பாங்க.''

பொணந்தூக்கறதில்லேன்னு மைதிலிக்கு சத்யம் பண்ணிக் கொடுத்துட்டியே அப்புறம் எதுக்கு அந்தப் பேச்சு?''

''அது இனிமே தானே... ஊருக்கு எப்பவும் நான் பொணம் தூக்கிதானே?''

''எந்த ஊரைப்பார்த்து நீ இப்படி சொல்றியோ. அந்த ஊர் உன்னை மரியாதையா வேற மாதிரி கூப்பிடத் தயாரானா அது உனக்கு சந்தோஷம் தானே?''

''நடக்கற விஷயத்தைப் பேசுங்க. என்னை எதுக்கு கூப்பிட்டீங்க எதாவது வேலை செய்யணும்னா சொல்லுங்க. நீங்க சொல்ற எந்த வேலையையும் எப்பவும் நான் தட்டாம செய்வேன்...''

''இத்தன வருஷத்துல நீ எனக்குன்னு எத்தனை வேலை செய்துருப்பே?''

''எதுவும் இல்லை.''

''இப்ப மட்டும் நான் வேலை சொல்வேன்னு எதைவெச்சு எதிர்பாக்கறே?''

''நான் நினைச்சு வந்த விஷயமும் இல்லை. வேலையும் இல்லைன்னா உங்களைப் போல ஒரு மகா பண்டிதர் என்கிட்ட பேச என்னங்க இருக்கு?''

''இன்னிக்கு நான் உன்கிட்ட பேசப்போறது தாம்ப்பா பேச்சே.''

''என்னால நம்பமுடியலீங்க. சரிங்க நீங்க பேசுங்க. நான் கேட்டுக்கறேன்.''

''ஏம்ப்பா துளியும் நான் எதிர்பாராத ஒரு விஷயத்தை நீ மட்டும்தான் பேசணுமா, நான் பேசக்கூடாதா?''

''நீங்க பீடிகை போட்றதப் பார்த்தா எனக்கு லேசா தலையை சுத்துதுங்க.''

''சொல்லி முடிச்சதுக்கும் அப்புறம் சந்தோஷத்துல இந்த உலகமே சுத்தும்.''

''போதுங்க, விஷயத்தை சொல்லுங்க.''

''அதுக்கு முந்தி உன்கிட்ட நான் சில கேள்விகளை கேட்டுட்றேன். இந்த உலகத்துல உனக்கு உறவுன்னா இப்ப நீ யாரை சொல்வே?''

''இது என்னங்க கேள்வி... என் நிழல்கூட நிரந்தரமா என் கூட இருக்கறதில்ல. நான் யாரைன்னு சொல்வேன். மீறி சொல்றதா இருந்தா சைக்கிள்கடை கோவிந்தன். அப்புறம் இப்ப என்னை நேசிக்கற மைதிலி... இவங்கதான்.''

''சரி உன் வயசு எவ்வளவுன்னாவது உனக்குத் தெரியுமா?''

''தெரியாதுங்க.''

''தோராயமா?''

''அதை தெரிஞ்சு நான் என்னங்க பண்ணப்போறேன்?''

''அப்ப ரங்கன்கற பேரை உனக்கு வெச்சது யார்?''

''இட்லிக்கடை செம்பாப் பாட்டி.''

''போகட்டும். இப்படி ஒட்டு உறவு இல்லாம வயசு கூட தெரியாம இருக்கோமேன்னு நீ வருத்தப்பட்டதில்லையா?''

''இப்ப எதுக்குங்க இந்த கேள்வி எல்லாம்.''

''சொல்றேன் ரங்கா சொல்றேன்.''

சிங்கராச்சாரியார் தன் இரு கைகளாலும் முகத்தை அழுந்தத் துடைத்துக்கொண்டு திரும்பவும் தயாரானார்.

''நீங்க இன்னிக்கு என்கூட பேசறதெல்லாமே எனக்குப் புதிரா இருக்குங்க. எதுக்காக இந்த கேள்விங்கன்னும் தெரியல.''

''இதோ கொஞ்ச நாழில தெரிஞ்சுடப்போறது. இப்ப நான் ஒண்ணு கேட்பேன். நீ அதிர்ச்சியோ ஆத்திரமோ அடையாம அதுக்கும் பதில் சொல்லணும் என்ன?''

''இது வரைலயும் அப்படிதானே பதில் சொல்லி வந்துருக்கேன்.''

''அதுவும் வாஸ்தவம்தான். ஆனா இது ரொம்ப சென்சிடிவான கேள்வி. உனக்கு உன் அப்பா அம்மா யார்னு ஞாபகம் இருக்கா?''

சிங்கராச்சாரியார் கேட்டு விட்டார். ஆனால் ரங்கனிடம் விடைப்பு. ஒரு ஆழ்ந்த மௌனமும் கூட. கண்களிலும் ஈரம் ஊற ஆரம்பித்தது.

"ரங்கா... நான் காரணமாகத்தான் கேட்டேன். உன்னை வருத்தப்படுத்த இல்லை."

"இல்லைங்க. அம்மா முகம் மட்டும் ஒரு புகை மூட்டம் போல லேசா ஞாபகம் இருக்கு. ஆனா அவங்க காவேரி ஆத்துல அடிச்சிட்டு போனது மட்டும் அப்படியே கண்ணுல இருக்கு."

"சரி... அம்மாதான் போய்ட்டா அப்பா உசிரோட இருக்கணும் தானே?"

"யாருன்னே தெரியாத ஒருத்தர் இருந்தாதான் என்ன, இறந்தாதான் என்னங்க இப்ப?"

"உனக்குத் தெரியாம இருக்கலாம். உன் அப்பாவுக்கு உன்னை தெரிஞ்சிருந்தா?"

சிங்கராச்சார்யார் முடித்த நொடி ரங்கன் விருட்டென்று நிமிர்ந்தான்.

"நீங்க என்ன சொல்றீங்க? என்று சற்று தீனமாக இழுத்தான்.

"சொல்லு... உன்னைத் தெரிஞ்சிருந்தா?"

"நீங்க கேக்கறதப் பார்த்தா அவரை உங்களுக்குத் தெரியும்கற மாதிரி ஒரு அர்த்தம் வருதே."

"கரெக்ட். நீ புரிஞ்சுண்டுட்டே உன் அப்பா உயிரோடதான் இருக்கார். அதுவும் இதே ஊர்லதான் இருக்கார். அவரை எனக்குத் தெரியும்னும் வெச்சுக்கோயேன்."

அதைக்கேட்ட நொடி ஒருவித ஆவேசத்துடன் எழுந்து நின்றான் ரங்கன்.

"ரங்கா நீ உணர்ச்சிவசப்படுவேன்னு தெரியும். அதனால தான் பக்குவமா பாகம் பாகமா ஓவியம் வரையற மாதிரி உன் கூட பேசிண்டிருக்கேன்."

"நீங்க ஓவியம் வரையலை... எனக்குள்ள நெருப்பை மூட்டி விட்டுட்டீங்க."

"நெருப்பையா... என்னப்பா சொல்றே"

"ஆமாம் சில சமயங்கள்ல என் அப்பா பத்தி கோவிந்தனும் பேசுவான். "ரங்கா உன் அப்பனுக்கு இந்த ஊராத்தான் இருக்

கணும். அதனால் தான் உன் அம்மாவும் உன்னை கூட்டிகிட்டு இந்த ஊருக்கு வந்துருக்கணும்'னு சொல்வான். 'உளறாதே கோவிந்தா'ன்னு சொல்வேன். உளறலப்பா உன் சம்பந்தப்பட்ட ஒரு டைரி உன் அம்மா போட்டோ எல்லாமே ஒரு தகரப்பெட்டியில இருந்ததாகவும் இட்லிக்கடை பாட்டி செம்பாப் பாட்டிகிட்ட இருந்த அதை அப்பவே யாரோ எடுத்துட்டு போய்ட்டாங்கன்னும் சொல்வான். ஆனா அந்த தகரப்பெட்டி மட்டும் இப்பவும் கோவிந்தன் கடைல தான் இருக்கு. அப்பல்லாம் நான் அதை பெருசா நினைச்சதே இல்லை. ஆனா இப்ப நீங்க கேக்கறத வெச்சு பார்த்தா கோவிந்தன் சொன்னதெல்லாம் உண்மைன்னு தெரியவருது. ஆமா யாருங்க அந்த மகாத்மா?"

ரங்கன் பேச்சின் முடிவில் வெடித்தே விட்டான். கண்களிலும் கண்ணீரின் பாய்ச்சல்.

"மகாத்மான்னு நீ கேக்கற தொனியிலையே உனக்கு உன் அப்பா மேல இருக்கற கோபம் எனக்குப் புரியறது ரங்கா. நான் இப்ப உன் கிட்ட ஒண்ணுமட்டும் சொல்லிக்கிறேன். உன் அப்பா மகாத்மா இல்லேன்னாலும் நிச்சயம் கெட்ட ஆத்மா இல்லை. உன்னை நினைச்சு இப்ப அவன் ரொம்பவே உருகிண்டுருக் கான்..."

"குத்துமதிப்பா எனக்கு இப்ப இருபத்தைஞ்சு வயசு இருக்கும். இத்தனை வருஷமாவா அவர் உருகிகிட்டு இருந்தாரு? நீங்க சொல்றது ஒரு உலக அதிசயமா இருக்குங்களே..."

"இதோபார்... பழசை தயவு செய்து கிளறாதே இப்பவாவது உனக்கு இந்த உண்மை தெரிய வந்ததுக்காக அந்த பெருமாளுக்கு நன்றி சொல்."

"என்னான்னு? தான் பெத்த மகன் அட்ரசே இல்லாத ஒரு அனாதையா இந்த ஊர்ல அந்த ஆள் கண் எதிர்லயே ஒரு பொணம் தூக்கியா வாழ்ந்துகிட்டிருந்ததைக் கண்டும் காணாம இருந்தாலும் இப்ப கண்டுக்க முன் வந்துருக்காருங்கறதுக் காகவா?"

"இதோ பார் விதிங்கற ஒண்ணு விளையாடத் தொடங்கிட்டா அதைப் பார்க்கவோ அதோட போராடி ஜெயிக்கவோ யாராலயும்

முடியாது. புராணங்கள்ல அதுக்கு ஆயிரம் சாட்சிகள் உண்டு. உன் விஷயமும் அப்படித்தான்.''

''ஒஹோ நான் இப்படி இருக்கக் காரணம் விதியா? அதுக்கு புராணங்கள்ளயே உதாரணங்களும் இருக்கா, நீங்களா இப்படிப் பேசறீங்க?''

''ரங்கா திரும்பவும் சொல்றேன். உன் கோபத்தையோ தாபத்தையோ நான் குறை சொல்லலை. நீ காரித்துப்பினாலும் அவன் ஏத்துக்க தயாரா இருக்கான். இவ்வளவு நாள் அவன் உன் வரைல கண்டுக்காம இருந்ததுக்காக நான் அவனை எப்படி எல்லாம் கேள்வி கேட்டுருப்பேங்கறது உனக்குத் தெரியாது. அவன் எவ்வளவு வருத்தப்பட்றான் தெரியுமா?''

''என்ன பிரயோஜனம்? போகட்டும் இவ்வளவு நாள் இல்லாம இப்ப மட்டும் என்ன திடீர் பாசம்?''

''அப்படி கேக்காதே... இப்பவாவது அவன் தன் தவறை உணர்ந்து உன்னை ஏத்துக்க முன் வந்ததுக்காக சந்தோஷப்படு.''

''இதை அவர் அப்பவே ஏன் செய்யல? அட அப்ப வேண்டாம் ஒரு பத்து வயசுல? வேண்டாம் ஒரு பதினைஞ்சு வயசுல... நான் படிக்காதவனா இருந்தாலும் பொணந்தூக்கின்னு இந்த ஊர் கேவலமா என்னை பேசாம இருந்துருக்குமே?''

''வாஸ்தவம்தான்... ஆனா உன் வரைல இப்பதான் நீ அப்பனை தெரிஞ்சுக்கணும்னு தலைல எழுதி இருக்கும்போது யாரை குத்தம் சொல்லமுடியும்?''

''யார் தலைலங்க?'' என் தலைலயா இல்ல அவர் தலைலயா? தலைல முடி தான் இருக்கும். எழுத்தெல்லாம் கூட இருக்கும்னு இப்ப நீங்க சொல்லிதாங்க தெரியுது. அது எப்படிங்க இருக்கும்? தமிழ்லையா இங்கிலீஷ்லயா? எனக்கும் அதை படிக்கச் சொல்லித் தருவீங்களா?''

''புரியறது... உன் ஆற்றாமை இப்படி எல்லாம் கேள்வி கேட்கச் சொல்றது. பாதிக்கப்பட்டவன் நீ. கேக்கறதுலயும் தப்பில்ல... நன்னா கேளு... நான் கேட்டுக்கறேன்.''

''இல்லங்க... இனி நான் பேசலை!

உங்களுக்கும் எனக்கும் நடுவுல ஒரு குத்தமும் இல்லாதப்ப உங்ககிட்ட நான் எதுக்கு என் ஆற்றாமையைக் கொட்டணும்? நல்லவேளை இந்த நிமிஷம் வரை அவர் யார்னு நீங்க என் கிட்ட சொல்லலை. நானும் கேட்டுக்கலை. இனியும் நான் கேட்டுக்க தயார் இல்லை. நான் வரேன்.''

ரங்கன் சற்றும் அவர் எதிர்பாராத ஒரு பதிலைக் கூறிவிட்டு புறப்பட முயன்றான்.

''நில்லுப்பா...'' அவர் தடுத்தார்.

''என்னத் தடுக்காதீங்க. தயவு செய்து அவர் யார்னும் என்கிட்ட சொல்லிடாதீங்க. அப்படிச் சொன்னா அது அவருக்கு தான் ஆபத்துல முடியும். கோபத்தில் நான் எப்படி வேணும் னாலும் நடந்துக்கலாம். அந்த மனுஷனையும் என்னால இந்த ஊர் வரப்போற நாட்கள்ல தப்பா பேசலாம். ஆகையால் இதை இப்படியே விட்டுருங்க.''

''ரங்கா... நான் இவ்வளவு சொல்லியும் நீ இப்படி பேசலாமா? அவன் செய்தது பெரிய தப்பு தான்! அதை இப்ப அவன் திருத்திக்க முன் வந்துருக்கான். அதைப்போய் வேண்டாம்னு சொல்றது எப்படிப்பா சரியாகும்.''

''தவறைத்தாங்க திருத்திக்க முடியும். தப்புக்கு தண்டனை தான் சரியான தீர்ப்பு. அப்படி ஒரு தண்டனையை அவருக்கு நான் அவரைத்தெரிஞ்சுக்காமலே போய் கொடுக்க விரும்பறேன். இதை விட ஒரு பெரிய தண்டனையை அவருக்குக் கொடுக்கவும் முடியாதுன்னு நான் நினைக்கறேன்...''

''இப்ப நான் சொல்லலேன்னாலும் ஒருநாள் இல்ல ஒரு நாள் அவன் வந்து உன் கால்லயே விழுந்துடுவான். அப்ப உனக்குத் தெரியாம போயிடுமா? உனக்காக இப்ப அவன் தன் ஆம்படை யாளையே ஒதுக்கி வைக்கற அளவுக்கும் போய்ட்டான். புரிஞ்சுக்க முயற்சி செய் ரங்கா.''

''இல்லைங்க. என் வரைல இந்த உலகத்துல நான் இரண்டு பேரை ரொம்பவே வெறுக்கறேன். ஒண்ணு ஓடிக்கொண்டிருக் காளே காவேரி... அவ! அடுத்து நான் இப்படி ஆக காரணமான என் அப்பன். இவங்கள மன்னிக்க என்னால முடியாது. இந்த

நிமிஷம் நான் மைதிலியை நினைச்சுப் பார்க்கறேன். எல்லா உரிமையும் இருந்தும் என்னை அனாதையாக்கி வேடிக்கையும் பார்த்துக்கிட்டிருந்த என் அப்பன் எங்கே? எதுவுமே இல்லேன்னாலும் என்கிட்ட எல்லாமே இருக்கறதா நினைச்சு தன்னையே எனக்குத் தந்துட்ட என் மைதிலி எங்கே?

இனிமே அவதான் என் உலகம்... அவ உறவு ஒண்ணு போதும் எனக்கு. அது என்னை வாழ வைக்கும். வேற யாரோட உறவும் எனக்கு வேண்டாம்.''

ரங்கன் வேகமாக நடந்து சென்ற அறைக் கதவையும் திறக்க முற்பட்டான்.

''நில்லு ரங்கா. ஆத்திரம் கண்ணை மறைக்கும் போது அறிவு சுத்தமா செயல்படாதுங்கறதுக்கு பெரிய உதாரணமா இப்ப நீ என் கண் முன்னால நின்னுண்டுருக்கே. நான் சொல்றத கேளு. உன் மைதிலியோட பாஷைலயே சொல்றேன். அவ உன்னைத் தேடிவந்த மாதிரியேதான் உன் தகப்பனும் இப்ப உன்னை நோக்கி வரத் தொடங்கியிருக்கான். நீ இவனை உனக்காக ஏத்துக்காதே உன் மைதிலிக்காக ஏத்துக்கோ.

யோசிச்சுப்பார்! பொணந்தூக்கியா அவளோட ஓடிப்போறது உத்தமமா? இல்லை தப்பே பண்ணியிருந்தாலும் திருந்தி உனக்கு உன் சந்ததியோட தொடர்பையும் குலம், கோத்ரம்,ஜாதி அந்தஸ்துன்னு சகலத்தையும் தந்து உன்னை மைதிலியோட சுலபமா சேர வழி வகுக்குப்போற உன் தகப்பனை ஏத்துக்கறது உத்தமமா?''

சிங்கராச்சாரியாரின் கேள்வி தூண்டில் போட்டு நிறுத்தியது. அவனும் மெல்லத் திரும்பி வந்தான்.

''முதல்ல உக்கார். மனசையும் சமாதானப்படுத்திக்கோ. உன் அப்பனுக்கு போன் பண்ணி அவனை இப்ப இங்க வரச் சொல்றேன். நீ அவனை என்ன கேட்கணுமோ கேள். அடிச்சா தான் ஆத்திரம் அடங்கும்னா அடி. ஆனா பொணம்தூக்க மாட்டேன்னு சத்தியம் பண்ண மாதிரியே இனம் விலக்க மாட்டேன்னு சத்யப்ரமாணம் எடுக்கோ. இருபத்தஞ்சு வயசு ஆறதுன்னு சொன்னே... நான் சொல்றேன் இன்னிக்கு தான் நீ

பிறந்திருக்கே... இனிமேதான் உனக்கு வாழ்க்கை. எல்லாரும் பிறந்து அப்புறம் தான் வளருவா. ஆனா நீ வளர்ந்து பிறந்திருக்கறதா நினைச்சுக்கோ.

உனக்கும் மைதிலிக்கும் நான் கல்யாணம் பண்ணி வைக்கறேன். சக்கரவர்த்தி நான் சொன்னா மறுபேச்சு பேசமாட்டான் என்ன சொல்றே?''

சிங்கராச்சாரியார் பூவை மாலையாக கட்டுவது போல அவனையும் கட்டிப்பார்த்தார். அவனால் பேச முடியவில்லை. தொடர்ந்து அழுதான்.

''என்ன ரங்கா நான் சொல்றதுல உனக்கு சம்மதம்தானே?''

''கடைசில மைதிலியைச் சொல்லி என்னை இப்படி மடக் கிட்டீங்களே'' என்றான் கேவியபடியே...

''மடக்கல... உன்னை செதுக்கறேன். இவ்வளவு நாள் வாழாத நீ இனியாவது வாழணும்னு ஆசைப்பட்றேன்.''

''நான் வாழறது பெருசில்ல! மைதிலி நல்லாருக்கணும். அவளுக்காக நான் என் அப்பாங்கற பாவியை சகிக்கிறேன்.''

''போறும். இது போறும் எனக்கு. ஆமா இப்பக்கூட நீ என் அப்பா யாருன்னு கேக்க மாட்டியா?''

''சொல்லுங்கய்யா...''

''இப்படி சுரத்தே இல்லாம கேட்டா எப்படி உன் இனிஷியல் தெரியப் போற நாழி இது. சந்தோஷமாவும் பரவசமாவும் நீ இருக்கணும்.''

''எனக்கு நடிக்கல்லாம் வராதுங்க. நீங்களும் அதை எல்லாம் எதிர்பார்க்காதீங்க.''

அவன் பதில் அவருக்கு திருப்தியைத் தந்திருக்க வேண்டும். அது அவர் முகத்தில் நன்றாகத் தெரிந்தது.

''சரி... உன் அப்பாவை நான் இப்பவே இங்க கிளம்பி வரச் சொல்றேன். நான் பேரைச் சொல்றத விட நீ அவரை நேர்லயே பாக்கறது ரொம்பவே உசிதம். அவரை உனக்கு ஏற்கனவே நன்னா தெரியும். ஆனா இவர் தான் என் தகப்பனார்னு நீ

பாக்கப்போறது இனிமே தான். ஒருவகைல நான் என் கடமையை சரியா செய்துட்டதா நினைக்கறேன். என் மனசும் இப்ப ஒரு சந்தோஷத்துல இருக்கு.

இன்னொரு விஷயம்! உன்னை தன் பிள்ளைன்னு உன் அப்பன் ரகசியமால்லாம் ஏத்துக்கப் போறதில்ல, ஊர் அறிய ஏத்துக்கப் போறான். அப்படித் தான் ஏத்துக்கணும்னும் சொல்லியிருக்கேன். உன்னை காவேரில குளிப்பாட்டி யானை மேல உட்கார வைச்சு மேளதாள வாத்தியங்களோட வீடு வரை வரவழைச்சு சொந்த பந்தங்களைக் கூட்டி அவாளுக்கு நடுவுல அக்னிசாட்சியா ஒரு பிள்ளையை ஸ்வீகாரம் எடுக்கும் போது என்ன செய்வாளோ அந்த மாதிரியே செய்து உனக்கு உபநயனமும் தரிக்கச் செய்து முழுமையான வைஷ்ணவனா ஆக்கி அப்படியே ஆச்சார்யன் கிட்ட கூட்டிண்டு போய் பஞ்சசமஸ் காரமும் பண்ணி சமாஸ்ரயணமும் பண்ணிட்டா அப்புறம் நீ அம்மா மண்டபம் பொணம்தூக்கி ரங்கன் இல்லை. ஒரு பிரம்மச் சாரி ரங்கநாத ஐய்யங்காரா நீ ஆயிடுவே.''

உன் வரைல இது மறுபிறப்பு. என் வரைல ஒரு புண்ணிய காரியம். ஒவ்வொரு வைஷ்ணவனும் திவ்யதேசம்னு சொல்லப் படற நூத்திஎட்டு பெருமாள் சன்னதிகளையும் தேடிப்போய் சேவிக்கணும்கறது அவாளுக்கு விதிக்கப்பட்ட கடமை. அந்த வாழ்நாள் கடமையை நான் இப்பவே இங்கையே செய்துட்ட மாதிரி ஒரு சந்தோஷம் எனக்கு...''

சிங்கராச்சாரியார் பொங்கி வழிந்தவராக ரங்கன் எதிர்லேயே தன் செல்போன் மூலமாக தேசிகாச்சாரியை அழைக்க முயன்றார். ஒரு முறைக்கு பல முறை முயன்றும் மறு பக்கத்தில் தேசிகாச் சாரியிடம் பதிலே இல்லை.

''என்ன இது... போனை எடுக்க மாட்டேங்கறானே'' என்று எழுந்து குறுக்கும் நெடுக்குமாய் நடப்பவர் கண்களில் சுவற்றில் தொங்கிய அன்றைய காலண்டரும் படவே அவரிடம் வேகமாய் ஒரு மாற்றம்.

''அடடே... இன்னிக்கு அஷ்டமி. நாளைக்கு நவமி. இது கிருஷ்ணனுக்கும் ராமருக்கும் உகந்த தினங்கள். ஆனா உன் மறு

ஜென்மம் தசமி அன்னிக்கு நடக்கறது தான் சரி. இது தெரியாம நானும் போன் பண்ணப் பார்த்தேன். ரங்கா ஒரு இரண்டுநாள் பொறுத்துக்கோ. நாளை மறுநாள் நீ இங்கையே வந்துரு. இந்த ஆத்துலயே நீ பொறந்ததா இருக்கட்டும். அப்படியே அப்பா பிள்ளை இரண்டு பேரையும் நானே நேரா ரங்கநாதர் சன்னதிக்கும் கூட்டிண்டு போய் முதல் திவ்யதேச தரிசனத்தையும் முடிச்சு வைக்கறேன்... என்ன?'' என்று கேட்டார்.

ரங்கன் தலையை மட்டும் அசைத்தவனாக புறப்பட்டு விட்டான். அவன் வெளியேறவும் தேசிகாச்சாரி பதிலுக்கு செல் போனில் அவரை கூப்பிடவும் சரியாக இருந்தது.

''அண்ணா கூப்ட்டுருந்தேளா?''

''ஆமாம் தேசி. ரங்கன் வந்துருந்தான். உன் விஷயத்தை பேசிட்டேன். அதை சொல்லத்தான் கூப்பிட்டேன். நல்லவேளை நீ உடனே கிடைக்கல. நான்தான் அவசரப்பட்டு கூப்டுட்டேன். ஏன்னா இன்னிக்கு அஷ்டமி. நாளைக்கு நவமி பாரு அதான்...''

''அண்ணா ரங்கன் என்னண்ணா சொன்னான். அப்படியே சந்தோஷத்துல அழுதுருப்பானே...?''

''போடா போ... அது சோத்துக்கு செத்தவன் பண்ற காரியம் இவன் மானஸ்தன்.''

''அப்படின்னா?''

''இத்தனை நாளா என்னை இந்த சீரங்கத்துல தவிக்க விட்ட இந்த அப்பனுக்கு இப்ப மட்டும் என்ன திடீர் பாசம்? இவன் யாருன்னே எனக்கு தெரிய வேண்டாம். நான் தெரிஞ்சிக்கவே விரும்பலைங்கறது தான் அவனோட ஸ்டாண்ட்! நான் மிரண்டே போயிட்டேன்.''

''வாஸ்தவம் தானேண்ணா... நான் பாவிதானே? அப்புறம் என்ன ஆச்சு?''

''அதை எல்லாம் நேரில் சொல்றேன். அவனை என்னால சமாதானப்படுத்தவே முடியல. ஆனா எப்படி சமாதானப்படுத்தி னேங்கறத சொன்னா நீ ஆடிப் போயிடுவே. உன் வரைல ஒரு விஷயத்துல கொடுத்து வெச்சவனும் கூட...''

"கொஞ்சம் புரியும்படி சொல்லுங்களேன்..."

"நேர்ல வாடா... எல்லாத்தையும் போன்லயா பேச முடியும்?"

"வரேண்ணா... இதோ இப்பவே வரேன். ஆனா இங்க இந்த சண்டாளி துளி கூட அசைஞ்சு கொடுக்கல. விடாப்பிடியா அப்படியே இருக்கா. போதாக் குறைக்கு உங்களையும் அவ கட்சில சேர்த்துண்டுருக்கா."

"வத்சலாவை பத்தின கவலையை விடு. அவளை ஒரு அடில வீழ்த்தற அஸ்திரம் ஒண்ணு இப்ப எனக்குக் கிடைச்சிருக்கு நீ புறப்பட்டு வா..."

அவர் அழைத்து விட்டு நிமிர்ந்தார்.

48

குடகுக் குமரியவள்-கூத்தாடும் வயலுக்கும்
குவலயத்து மாந்தருக்கும் கலயச்சோறவள்!
குட்ட முனியாலே குதித்தோடி வந்தே
பட்டம் தவறாது பசியைத் தீர்ப்பவள்
இன்னொரு கங்கையாய் கன்னடம் பிறந்து
கொள்ளிடம் கடந்து கடல்மனை புகுபவள்
காவிரிப் பொன்னியாம் ரங்கநதியவள்!

சென்னை!

திருவல்லிக்கேணி பார்த்தசாரதி பெருமாள் கோயிலின் பிராகாரப்பகுதி. சீமாவும் ரேவதியும் காத்திருக்க ஸ்ரீவத்சனும் அவன் தம்பி கிருஷ்ணாவும் அவர்களின் ஒரே சகோதரியான ஸ்ரீமதியோடும் அவள் கணவரோடும் வந்தும் சேர்ந்தனர். வந்த வேகத்தில் ஸ்ரீமதி என்கிற கிருஷ்ணாவின் சகோதரியிடம் ஒரு உச்சமான ஆரம்பம்.

"என்ன சீமா... ரேவதி... சௌக்யமா?"

"ரொம்பவே சௌக்யம் நீங்கள்ளாமும் சௌக்கயம்னு நினைக்கறேன். உங்களுக்காக தான் ரொம்ப நாழியா காத்துண்டு இருக்கோம். உங்க ஆத்துக்கு வர இருந்த எங்களை நீங்க நேரா இங்க கோவிலுக்கு வரச்சொல்லிட்டேள். இங்கையே கல்யாணப் பேச்சை பேசி முடிக்கற உத்தேசமா? சீமாவும் சாங்கோபாங்கமாக பேச்சை துவக்கினான்.

"ஆமாம். அதனாலதான் சன்னதிக்கு வரச்சொன்னேன். இன்னிக்கு அஷ்டமி, நாளைக்கு நவமி. இதை கவனிக்காம நீங்களும் வந்துட்டேள். இவனும் வரச்சொல்லிட்டான்."

"அடடா... நானும் யோசிக்கல. போகட்டும் நம்ம கல்யாணப் பேச்சுதான் இதுக்கு முந்தியே ஆரம்பம் ஆயிடுத்தே?"

"பேச்சு ஆரம்பமானா போறுமா... கல்யாணத்தை ஆறு மாசத்துக்குத் தள்ளிப்போட்றதுங்கறது எந்த வகைல சரி?" பிராகார பகுதியில் ஒரு நிழலில் பாங்கான இடத்தில் அமர்ந்த படியே கேள்வியை எழுப்பினாள் ஸ்ரீமதி.

"எங்க சூழ்நிலை கொஞ்சம் அந்த மாதிரி எங்களுக்கும் உடனே பண்ணணும்கறதுதான் எண்ணம். ஆனா மைதிலிதான் தயங்கறா?"

"அப்ப அவளுக்கு இந்தக் கல்யாணத்துல இஷ்டமில்லையா?"

"அப்படி இல்லை. கல்யாணமாகின உடனேயே உங்களோட யு.எஸ்.புறப்பட்ற மாதிரி இருக்கும். அப்புறம் அம்மா அப்பான்னு எங்களோட இருக்க முடியாதுங்கறதால ஒரு ஆறுமாசம் தவணை கேட்கறார் எங்க அப்பா..."

"ஆனாலும் பேத்தலா இருக்கே சீமா இது... இதெல்லாமா ஒரு விஷயம்? வேணும்னா கல்யாணத்துக்கு அப்புறம் மைதிலி உங்களண்டயே ஒரு ஆறுமாசம் இருந்துட்டு அப்புறமா கூட அமெரிக்கா வரட்டும். அவ்வளவு ஏன் விசா பாஸ்போர்ட்டுன்னு இதுக்கே அவ்வளவு காலமாகலாம்."

"நன்னா சொல்லுங்கோ... இந்த விஷயத்துல என் ஒருத்தியால இவா யாரையுமே மாத்த முடியல. என்னமோ பெரிய பாசமலர் குடும்பம் மாதிரி ரொம்பவே அலட்டிக்கறா" என்று இடையிட்ட ரேவதியின் சிலிர்ப்பு ஸ்ரீமதிக்கு வசதியாகப் போய்விட்டது.

"சீமா... என் தம்பிக்கு இப்பவே கல்யாணம் ஆகியாகணும். அப்புறம்னா அவனுக்கு குருபார்வையும் போயிட்றது. என்ன சொல்றே நீ?"

"அதான் நான் எல்லாத்தையும் போன்லயே சொல்லி யிருந்தேனே?"

"அந்தப் பேச்ச விடு. இப்ப நேர்ல கேக்கறதுக்கு பதில் சொல்."

"எனக்கும் இப்பவே கல்யாணம் பண்ணலாம்தான். இந்த விஷயத்துல அப்பா தான் சிக்கல் பண்றார். நான் கொஞ்சம் அழுத்தினாலும் அப்ப விட்டுட்றாங்கறார்."

"உங்கம்மா என்ன சொல்றா...?"

"அம்மா எங்க பக்கம் தான்..."

"அப்புறம் என்ன... மூணு பேர் ஒரு பக்கம் அப்பா மட்டும் மறு பக்கமா?"

"அ... ஆமாம்."

"சரி, மைதிலிக்கு இந்தக் கல்யாணத்துல சம்மதம்தானே?"

"அது அது" சீமா இழுக்க எரிச்சலான ரேவதி.

"என்ன அது... நிச்சயம் பண்ண மாப்ளை காவேரில போயிட் டதுக்கு இன்னமுமா துக்கம் கொண்டாடுவா? அது வந்துக்கா... அவளுக்குத் தன் நிச்சயதார்த்தம் இப்படி ஆயிடுத்தே தனக்கு கல்யாண ராசியே இல்லையோங்கற ஒரு தயக்கம் அவ்வளவு தான்!"

"அவ்வளவுதானே? ஒரு விதத்துல அவளோட இந்த மனசை நான் ரொம்ப மெச்சறேன். நல்ல பொம்மனாட்டிகள் அப்படித் தான் இருக்கணும். போகட்டும் இப்ப உடனே கல்யாணம் நடக்க நான் ஒரு சின்ன ஐடியா கொடுக்கறேன். நீங்க என் பேச்சைக் கேட்டா கல்யாணமும் நடந்துடும்" பலமாக பீடிகை போட்டாள் ஸ்ரீமதி.

ரேவதி "அது என்ன ஐடியா?" என்று கேட்டு விட்டாள்.

"நான் சொல்றதைக் கேட்டுட்டு நீங்க யாரும் என்னை விகல்பமா நினைச்சுடக்கூடாது..." ஸ்ரீமதி ஆரம்பித்தாள்.

"எங்களுக்கு நல்லது நடக்கணும். அதுக்காக சில பொய்களைக் கூட சொல்லத் தயாரா இருக்கோம்..." என்றவளாக ரேவதி தன் கணவன் சீமைவைப் பார்த்தாள்.

அவன் நெளிந்தான்.

"நீங்க இப்ப சில பொய்களைச் சொல்லத் தயாரா இருக்கறதா சொன்னேள். சில பொய்கள்னுகூட இல்லை ஒரே ஒரு பொய் போதும். இந்தக் கல்யாணம் வேகமா இப்பவே நடந்துடும். என் தம்பியும் தம்பதி சமேதரா அமெரிக்காவுக்கும் கிளம்பிப் போய்டு வான்..."

"அது என்னன்னுதான் சொல்லுங்களேன்..."

"உங்காத்துல யாராவது வயசானவா இருக்காளா?"

"வயசானவான்னா... என் மாமனார் மாமியார் தான் இப்போதைக்கு வயசானவா..."

"வேற தாத்தா பாட்டின்னு லொக்குலொக்குன்னு இறுமிண்டு தும்மிண்டு யாரும் இல்லையா?"

"ஒரு பாட்டி இருந்தா... சமீபத்துலதான் போய்ச் சேர்ந்தா..."

"அடடா..."

"வயசானவாளுக்கும் இந்தக் கல்யாணம் சீக்கிரமா நடக்கற துக்கும் என்ன சம்மந்தம்?"

"என்ன அப்படி சொல்லிட்டேள்... இழுத்துக்கோ பறிச்சுக் கோன்னு ஒரு உசுர் ஆத்துல கிடக்கும்போது ஒரு நல்ல காரியத்துக்கு நாள் குறிக்க மனசு வருமா?"

ஸ்ரீமதி மெல்ல பாய்ண்டைத் தொட்டாள்.

"அப்படின்னா?"

"புரியலையா உங்களுக்கு... மாமனார்க்கோ மாமியார்க்கோ ஹார்ட் அட்டாக்னு வெச்சுக்குங்கோ... நெருப்புன்னு சொன்னா வாயா வெந்துடப்போறது... பேச்சுக்குதான் சொல்றேன்..."

"சரி... என் மாமியார்க்கு ஹார்ட் அட்டாக்னே வெச்சுப்போம் அதனால...?"

"என்ன அதனால... சீரியஸா இருக்கா, கண்ணை மூடறதுக் குள்ள கல்யாணத்தைப் பாக்க ஆசைப்பட்றான்னா எல்லாம் வேகவேகமா நடக்காதா?"

ஸ்ரீமதி கோடுதான் கிழித்தாள். ரேவதி முகத்தில் அப்படி ஒரு மலர்ச்சி. கப்பென்று பிடித்துக்கொண்டாள்.

"புரிஞ்சுடுத்து... என் மாமியாருக்கு பொய்யாவாவது ஹார்ட் அட்டாக் வந்ததுன்னா இந்தக் கல்யாணம் நினைச்சமாதிரி இந்த வாரத்துலயே முடிஞ்சிடும் அப்படித்தானே?

"அப்படியேதான்... கல்யாணத்துக்கு அப்புறம் மாப்ளை வந்த நேரம் ரொம்ப நல்ல நேரம் மாமிக்கு ஹார்ட் அட்டாக் குணமாகி நல்லபடியா எழுந்துட்டான்னு சொல்லிட்டா போச்சு. என் தம்பிக்கும் இதனால நல்ல பேர் கிடைக்கும்."

ஸ்ரீமதி வழமொழிந்து முடிக்க, ரேவதி சீமாவைப் பார்த்தாள். அவன் முகத்தில் பூச்சி பறந்தபடியே இருந்தது.

"என்ன யோசனை... இதைவிட ஒரு நல்லவழி கிடைக்கவே கிடைக்காது..." என்றாள் ரேவதி.

"அதுசரி... ஆனா அம்மாகிட்ட நீ ஹார்ட் அட்டாக் வந்தமாதிரி நடின்னு சொல்லணுமே... அதை அம்மாவும் சரியா புரிஞ்சுக் கணுமே..."

"அந்த கவலை உங்களுக்கு வேண்டாம். அத்தைகிட்ட அதை நான் பார்த்துக்கறேன்."

"அப்புறம் என்ன... கல்யாண முகூர்த்தத்தை முடிவு பண்ண வேண்டியதுதான்!"

"இங்க எல்லாம் முடிவு பண்ணி ரெடியா இருக்கோம். வர்ற ஞாயிற்றுக்கிழமை காலம்பர எட்டரை மணியில இருந்து பத்தரை வரை டயம் பிரமாதமா இருக்கு. இதே திருவல்லிக்கேணில ஒரு ஆடிட்டோரியமும் அன்னிக்கு காலியாதான் இருக்கு. நீங்க இப்ப ஓ.கேன்னா நாங்க போகும்போதே அட்வான்ஸ் கொடுத்து புக் பண்ணிட்றோம். அப்புறம் நீங்க எல்லாத்தையும் செட்டில் பண்ணிடுங்கோ."

ஸ்ரீமதி அப்படியே பறந்தாள்.

"சரிங்கோக்கா! நீங்க அப்படியே பண்ணிடுங்கோ. நாங்க இப்பவே ஸ்ரீரங்கம் கிளம்பறோம். என் மாமியாரை நடிக்க வைக்கறது என் பொறுப்பு. நாளைக்கே இந்த நிமிஷம் என் மாமனாரே பதறிண்டு உங்களுக்கு போன் பண்ணுவார் சம்மந்தி கல்யாணத்தை உடனே நடத்தணும்னு..."

"டோன்ட் ஓர்ரி... அப்ப நான் பாத்துக்கறேன். என் வரைல என் தம்பிக்குக் கல்யாணம் நல்லபடியா நடந்து முடியணும். ஒரு தடை வந்தது. அதை நல்லபடியா தாண்டிட்டோம்னு எல்லாரும் சொல்லணும். தம்பியும் உங்க நாத்தனாரும் காலத்துக்கும் நன்னா இருந்தா அதுவே போதும்..."

ஸ்ரீமதி சாங்கோ பாங்கமாக பேசி முடிக்க ஆமோதிப்பது போல சிரித்தார் அவளின் கணவர். அதையாவது செய்தாரே! கிருஷ்ணா சந்தோஷமாக அக்காவைப் பார்த்தான்.

இப்படி ஒரு அக்கா எல்லா தம்பிகளுக்கும் இருந்தால் ஏறாத மலை எல்லாமும் ஏறிவிடலாமே?

சீமாவும் ரேவதியும் அதன்பின் புன்னகையோடு விடை பெற்றுக்கொண்டனர். சீமா பார்த்தசாரதிப் பெருமாள் முன் நின்று மூச்சுத்துறுத்தி போல பெருமூச்சு விட்டான். அவன் பயப்படுகிறான் என்பதும் நன்றாக தெரிந்தது.

"தைரியமா இருங்கோ... இந்த பிடியை விடக்கூடாது... அங்க ரங்கன்னு ஒரு வில்லன் நம்ம வரைல இருக்கறத, மறந்துட வேண்டாம். அவனால எப்ப வேணா எது வேணா நடக்கலாம். ஞாபகம் இருக்கட்டும்."

ரேவதி சன்னதியில் நின்று கொண்டு ரங்கனை ஞாபகப் படுத்தவும், சீமாவிடமும் ஒரு வேகம்வர ஆரம்பித்தது.

"ஆமாம் ரேவதி... அம்மாட்ட நீ என்ன பேசறது... நானே பேசறேன். அவ நான் சொன்னா கேப்பா..." என்றான் சற்று அழுத்தமாக.

அப்பாடா...! பெருமூச்சுவிட்டாள் ரேவதி.

சிங்கராச்சாரியார் எதிரில் வாயில் துணியை புதைத்தபடி அழுது கொண்டிருந்தார் தேசிகாச்சாரி. "நன்னா அழு... அழறது பல

விஷயங்களுக்கு நல்லது. அழும்போது மட்டும்தான் கர்மா கரையும் அதோட அளவும் குறையும். அதுலயும் ரங்கன் வரைல நீ பண்ணியிருக்கற பாவம் மலை ஒசரம் உடையது. காலம் பூரா அழுதாக்கூட அதைக் கரைக்கறது கஷ்டம். இருந்தாலும் கொஞ்ச மாவது கரையுமே... அதுக்காக நன்னாவே அழு. அதேசமயம் அழுதே நீ ஜெயிச்சுடவோ இல்ல தப்பிச்சுடவோ முடியாது. அவனை ஊரறிய பிள்ளையா ஏத்துக்கற பரிகாரத்தால மட்டும் தான் நீ இந்த பாவத்துல இருந்து தப்பிக்க முடியும். அதை மட்டும் மறந்துடாதே...'' என்று சிங்கராச்சாரியார் ஒரு புறம் சொல்லிக் கொண்டிருந்தார்.

''நான்தான் எல்லாத்துக்கும் எப்பவோ தயாராயிட்டே னேண்ணா... இந்த சண்டாளின்னா இப்ப என்னை தடுத் துண்டுருக்கா...''

''கோபத்துல வார்த்தைகளை விடாதே... பிராம்மண லட்சணங்கறது எந்த நிலையிலையும் கண்ணியம் இழக்காம இருக்கறதுதான்...''

''முடியலண்ணா... என்னால முடியல... நான் பிராமணனாகூட இல்லாம இருந்துட்டு போறேன். ஆனா வத்சலா மட்டும் சம்மதிக் கலைன்னா அவளை கொல்லக்கூட நான் தயங்கமாட்டேன்.''

''பைத்தியக்காரா... அவ கொல்லப்பட்றதாலயும் நீ ஜெயிலுக்குப் போறதாலயும் ரங்கனுக்கு நியாயம் கிடைச்சிடுமா? நான் எல்லாம் நல்லபடியா முடியணும்கறதுக்காக இங்க பேசிண்டு இருக்கறது புரியாம நீ கோபப்பட்றது சரியில்ல. இப்ப நான் உனக்கு இன்னொரு தகவலும் தரப்போறேன். கேட்டா நீ சந்தோஷம்தான் படுவே...''

தேசிகாச்சாரி சிங்கராச்சாரியாரை கண்ணீர் விழிகளை துடைத்துக்கொண்டே அந்த இன்னொரு தகவலுக்காக ஏறிட்டார்.

''மைதிலி உன் ஆத்துக்கு மாட்டுப் பொண்ணா வரணும்னு ஆசைப்பட்டேதானே?''

''ஆமாம்.''

''அவ உன் மாட்டுப் பொண்ணுதாங்கறதுதான் பெருமாளோட விருப்பமும்...''

''என்னண்ணா சொல்றேள்... எனக்கு புரியல...''

''ரங்கனை மைதிலி மனசார விரும்பறாடா... இது ஏதோ சினிமாக்காதல் மாதிரியில்ல... ரொம்ப ஆத்மார்த்தமான காதல்!''

கேட்ட மாத்திரத்தில் தேசிகாச்சாரியிடம் ஒரு பரபரப்பு.

''என்னண்ணா... நிஜமாவா... எப்படிண்ணா...?''

''அது அப்படிதான். எங்கையோ யார் வயித்துலயோ பொறந்த இரண்டு பேர் எப்படியோ ஒண்ணா சேர்றதுதானே எப்பவுமே கல்யாணத்துல நடக்கறது...?''

''அதுக்குப் பின்னால பெரியவா சம்மதம். அவாளோட கடமை, ஆசீர்வாதம்னு எல்லாம் இருக்கே...?''

''காதல் கல்யாணத்துல அதெல்லாம் ஏது?''

''இந்த காதல்கூட எப்படி சாத்யமாச்சு...?''

''நீ செய்யாததை நான் செய்யாததை, இந்த ஊர் செய்யாததை ரங்கன் வரைல காவேரி செய்திருக்காடா!''

''காவேரியா... புதிராவே பேசறேளே...''

''எந்த காவேரில ரங்கனோட அம்மாவான உன் ஆம்படையா போனாளோ அதே காவேரிதான்! நான் நினைக்கறேன் காவேரி ரங்கனைத் தன் பிள்ளையா ஏத்துண்டுட்டதா...!''

''அண்ணா எனக்கு புரியற மாதிரி சொல்லுங்களேன்...''

தேசிகாச்சாரி கேவினார். சிங்கராச்சாரியாரும் காவேரியில் மைதிலி சுழலில் சிக்கியதில் இருந்து அவளை ரங்கன் காப்பாற்றியதில் தொடங்கி சகலத்தையும் கூறி முடித்தார்.

''அண்ணா எனக்கு எல்லாமே பிரமிப்பா இருக்கு.''

''எனக்கு பரவசமாகவும் இருக்கு தேசி... காவேரிய... புண்ய தீர்த்தமா மட்டும்தான் பாக்கறோம். ஆனா அவ ரங்கன் வரைல ரொம்பவே கருணையோட இருக்கா... அதனாலதான் ரங்கனாலே எவ்வளவு வெள்ளத்துலயும் நீந்தமுடியறது. எந்த சூழல் அவனை மட்டும் எதுவும் செய்யறதில்ல. அவளுக்கு அவன்மேல ரொம்பவே கருணை... இதோ இந்த மோதிரம் இது ஒரு நாள் குளிக்கும்போது காவேரில நழுவிடுத்து. இதை ரங்கன்தான் எடுத்துக் கொடுத்தான்.

என்னால இந்த நிமிஷம் வரை அதை நம்ப முடியல... நான் இப்ப சொல்றேன்... ரங்கன் இந்த ஊரை விட்டுப் போனா காவேரியும் வத்திப் போயிடுவா... எங்க போய்ட்டான் என் பிள்ளைன்னு கண்ணீர் வடிப்பா... அவ நமக்கெல்லாமே கூட தாய்தான். ரங்கனுக்கோ அவ ரொம்ப உரிமைப்பட்ட வளாவே இருக்கா... ஒருவேளை அவன் தாயை விழுங்கின பாவத்துக்கு அவளும் ரங்கன்வரைல பரிகாரம் தேடிக்கறாளோ என்னவோ...?''

சிங்கராச்சாரியார் சொல்லச்சொல்ல தேசிகாச்சாரி கைகளை கூப்பிக்கொண்டு தொழுதபடியே அழுதார்.

''அதனாலதான் என் ரெண்டாவது பிள்ளையை விழுங்கி என்மேல தன் கோபத்தைக் காமிச்சிருக்காளோ?'' என்றும் கேட்டார்.

''இருக்கலாம். அது நாம எப்படி யோசிக்கறோம்கறத பொறுத்தது. வத்சலாவை தண்டிச்ச காவேரி உன் பொண்ணு உஷாவை மன்னிச்சு எச்சரிக்கை பண்ணி விட்றுக்கான்னும் தோண்றது... அதனாலதான் உன் மாப்ளையை ரங்கன் காப்பாத்த முடிஞ்சது.

எப்படிப் பார்த்தாலும் சரி, இப்ப ஓடிண்டிருக்கற காவேரியை நான் ரங்கனோட நதியாவும் அதாவது ரங்கநதியாவும் பாக்கறேன்.

காவேரிக்கு பொன்னின்னு ஒரு பேர் உண்டு. இந்த ரங்கனால அவளை இனி ரங்கநதின்னும் கூப்பிடலாம் தப்பே இல்லை. அவனுக்கு பொழப்ப கொடுத்தா... பொண்ணக் கொடுத்தா இப்ப சொல்றேன் பெரிய வாழ்க்கையையும் அவளே கொடுக்கப் போறா! அதை இந்த ஸ்ரீரங்கமே பார்க்கவும் போறது. அதுக்கு முந்தி நீ அவனுக்கு வைஷ்ணவன்கற அவனோட பிறப்புரிமையை கொடுத்துடு...''

''நிச்சயமாண்ணா... நான் இனி எப்படி நடந்துக்கணும்னு நீங்க சொல்லுங்கோ... அப்படியே நடந்துக்கறேன்...''

''சரி... நான் சொல்றவரை நீ அமைதியாவே இரு... உன் ஆம்படையாளை இனி நான் பாத்துக்கறேன். வத்சலாவை கட்டிப்போட்டு வழிக்குக்கொண்டு வரவேண்டியது என்னோட பொறுப்பு.''

''அதுக்கு முந்தி ரங்கனை போய்ப் பார்த்து அவன்கிட்ட மன்னிப்புக்கேட்டுடட்டுமா?''

''அப்படியெல்லாம் அவசரப்பட்டு எதையாவது பண்ணி வைக்காதே... நான் அவனை மைதிலியை சொல்லித்தான் கட்டிப் போட்ருக்கேன். நீ இப்ப எதுவும் செய்ய வேண்டாம் அமைதியா இரு. அது போதும்.''

''சரிண்ணா...''

தேசிகாச்சாரி ஒரு தீர்மானமுடன் ஒரு அங்கவஸ்த்ரத்தை தோளில் போட்டுக்கொண்டு காவிரிக்குப் புறப்படத்தயாரானார்.

''நான் இப்ப ஸ்நானம் பண்ண காவேரிக்கு கிளம்பிட்டேன். நீயும் வரையா?''

''தாராளமா... இந்த பிரச்சினை தீர்றவரை உங்களோட இருக்கறதுதான் எனக்கு நிம்மதி...''

''அப்ப கிளம்பு...''

இருவரும் புறப்பட்டனர்!

49

''ஆண் பெண் கூடுங்கால் ஆணதின்
வலப்பக்கம் மூச்சோடும்போது-உருவாகும்
கர்பம் ஆண் மகவாகும்! அதுவே
இடப்பக்கம் என்றிடில் பெண் மகவாகும்!
இருபுறமும் ஓடிட அரவாணியாகும்
திருமந்திரம் தரும் அருஞ்செய்தி இதுவே...
எது வந்து சேர்ந்ததால் ஒருவனும் இங்கே
கதி இன்றிப் போனான்? விதியென்று அதையும்
மதி சொல்லலாமா?''

சிலைபோல உட்கார்ந்திருந்தாள் வத்சலா... உஷா அருகில் வந்தாள்.

"அம்மா..."

"....."

"அம்மா உன்னைத்தான்..."

வத்சலாவும் கலைந்தாள்.

"அப்பா எங்கம்மா?"

"யாருக்கு தெரியும்?"

"என்ன இப்படிப் பேசறே... உனக்கும் அப்பாக்கும் என்ன மனவருத்தம்?"

"அது எதுக்கு உனக்கு... நீ உன் ஆத்துக்கு கிளம்பற வழியைப் பார்..."

"ஏன் இப்படியெல்லாம் பேசற... உன்கிட்ட நான் ரொம்பவே மாற்றங்களை பாக்கறேன். கேட்டா நீ பொய்யா சொல்றியே தவிர உண்மையை பேசமாட்டேங்கறே..."

"ஆமாம்... நான் உண்மையைப் பேச தயாரா இல்லை. உன் அப்பாவோட ஒரு உண்மையை என்னால சுமக்க முடியல... நீயாவது நன்னா இரு..."

"என்னம்மா சொல்றே... அப்படி என்னம்மா அந்த உண்மை...?"

"நீ ஊருக்குக் கிளம்ப எல்லாத்தையும் எடுத்து வெச்சுண்டே தானே?"

"பேச்ச மாத்தாதே... என்ன அந்த உண்மை. அதை எனக்கும் சொல்லு... நான் யாரோ தெருவுல போறவ இல்லை. உன் பொண்ணு..."

"என் வாயப்பிடுங்காதடி... பேசாம போ..."

"இப்ப நீ சொல்வியா மாட்டியா?"

"நீ எப்படிக் கேட்டாலும் சரி, நான் சொல்லமாட்டேன். எல்லா ரகசியங்களும் என்னோட போகட்டும். உனக்குத் தெரிஞ்சு எதுவும் ஆகப்போறதும் இல்லை..."

"அப்ப நீ சொல்லமாட்டே...?"

"மாட்டேன்..."

"சரி, நான் அப்பாட்டயே கேட்டுக்கறேன். அவர் என்கிட்ட மறைக்க மாட்டார்..."

"அதையும் நான் பாக்கறேனே..."

"போகட்டும் நான் இப்ப ரங்கண்ணாவைப் பார்க்கப் போறேன். கையோட கூட்டிண்டும் வரப்போறேன். என் ஆத்துக்காரர் ஆசைப்பட்டபடி வேஷ்டி சட்டையை வெத்தல பாக்குல வெச்சு அண்ணா கைல கொடுத்து மரியாதை பண்ணிட்டு..."

வத்சலா வரையில் உஷா சொன்னது அவள் தலைமுடியை பிடித்து இழுத்து நிறுத்தி அவள் முகத்தைப் பார்த்து சிரிப்பது போலவும் இருந்தது.

"அந்தப் பொணந்தூக்கி உனக்கு இப்ப அண்ணாவா?"

"அண்ணா மட்டுமில்ல... எனக்கு மாங்கல்ய பிச்சை போட்ட ரங்கநாதரே அவர்தான்..."

"அடிப்பாதகத்தி... எவனை நினைச்சு நான் குமைஞ்சுண்டிருக் கேனோ அவனை ஆத்துக்கே கூட்டிண்டு வரப்போறியா... உனக்கு எவ்வளவு நெஞ்சழுத்தம்...?"

"அப்ப நீ ஏதோ உண்மைன்னு சொன்னது ரங்கண்ணா பத்தி தானா?"

"நீ இனி ஒரு வார்த்தை பேசக்கூடாது. அதே சமயம் அவனும் இந்த வீட்டு வாசப்படியை மிதிக்கக்கூடாது. வந்தா அவனை செருப்பாலயே அடிப்பேன்..."

வத்சலாவிடம் ஆவேசம் பீறிட்டது. உஷா ஸ்தம்பித்தே போனாள்.

கோவிந்தன் கடை!

எம்.எல்.ஏ.வின் சகலையும் மணல் குவாரிக்காரனுமான சுடலையாண்டியின் அல்லக்கை மாணிக்கம் கோவிந்தன் முன் வந்து நின்றான். கோவிந்தனும் ஏறிட்டான்.

"எங்க ரங்கன்?"

"எதுக்கு கேக்கறே?"

"அண்ணன் கூட்டிகிட்டு வரச்சொன்னாரு."

"எதுக்கு?"

"உம் விருந்து போட்றதுக்கு... ரங்கன் எங்கன்னு கேட்டா சொல்லுடா வெண்ணை..."

வந்து கேட்டவனிடம் அசாத்ய தோரணை. கோவிந்தனுக்கும் கோபம் உச்சி மண்டையை சுட்டது.

"இதோ பார்... நீங்க அடிச்சு கொலை செஞ்சு ஆத்துலதூக்கிப் போட்ற பொணங்களை எல்லாம் இனி எந்தக் காலத்துலயும் ரங்கன் வந்து தூக்கித்தர மாட்டான். அவன் இப்ப வேற முடிவுக்கு வந்துட்டான். இங்க நீ வேகம் காட்டுனேன்னு வை. இந்த ராடாலயே உன் மண்டையை உடைச்சிப்பிடுவேன். பேசாம வந்த வழியே திரும்பிப் போயிடு..."

கோவிந்தனும் குமுறி முடித்தான். தொலைவில் ஒரு காருக்குள் அமர்ந்த நிலையில் பார்த்துக்கொண்டே இருந்தார் சுடலையாண்டி!

அந்த அல்லக்கை மனிதனும் கோவிந்தனை முறைத்தபடியே அங்கிருந்து நீங்கி காரில் அமர்ந்திருந்த சுடலையாண்டியிடம் வந்து நின்றான்.

"அண்ணே ரங்கன் கடைல இல்ல... எங்கடான்னு கேட்டா கடைக்கார கோவிந்தன் ரொம்ப தெனாவெட்டா பேசறான். நாம போட்டுத்தள்ளுன விசயம் ரங்கன் மூலமா கோவிந்தனுக்கும் தெரிஞ்சிருக்கு. பணத்தை வாங்கிக்கிட்டு ரங்கன் கண்டுக்காம ஒண்ணும் போவல.

இப்படியேவிட்டா சாராயக்கார இடும்பனை கலெக்டர் கிட்டயே போட்டுவிட்டு உள்ள வெச்ச மாதிரி உங்களையும் நிச்சயம் பண்ணிருவாண்ணே..."

அந்த அல்லக்கை சுடலையாண்டியிடம் அழுத்தமாகவே பற்ற வைத்தான். சுடலையாண்டி முகமும் வெகுவேகமாக பதற்றத்துக்கு மாறத்தொடங்கியது. இடையில் ஒரு கைபேசி அழைப்பு வேறு!

காதைக் கொடுத்தார் சுடலையாண்டி.

மறுபுறத்தில் அவரது சகலையான எம்.எல்.ஏ! "சுடலை... இன்னிக்கு மினிஸ்டர் கூப்ட்ருந்தார்னு பாக்கப்போயிருந்தேன். உன்னைப் பத்திதான் பேச்சே...! ஆத்துல மண் அள்ற விஷயத்துல ஏராளமா கம்ப்ளைண்ட் போயிருக்கு. சி.எம்.மே கூப்ட்டு மினிஸ்டரை குடைஞ்சிருக்காரு. கொஞ்சம் அடக்கி வாசி. தொழிலே பண்ணாம சும்மா இருந்தாலும் சரி. இன்னும் நாலஞ்சு மாசத்துல எலெக்ஷன் வேற வரப்போகுது. இந்த நேரத்துல சின்னதா நாம விதியை மீறினாலும் பத்திரிகைகாரங்களும் எதிர்கட்சி காரங்களும் அதை பூதாகரமா பெருசாக்கிடுவாங்க. கவனமா இல்லாட்டி அவ்வளவுதான்... உன்னால ஒரு பிரச்சினைன்னு எனக்கு வந்தா என்னால உன்னை சப்போர்ட் டெல்லாம் பண்ண முடியாது. சட்டப்படி நடவடிக்கை எடுத்துக் குங்கன்னு சொல்றத தவிர எனக்கு வேற வழியும் இல்லை. ஆகையினால் பாத்து பக்குவமா நடந்துக்க... தப்பு கிப்பு பண்ணி யிருந்தா அதுல மிச்சம் மீதி வெச்சுடாதீங்க... சுத்தமா சரி பண்ணிடுங்க. எங்க கேமரா வெச்சு எதை எப்படி எடுக்கறாங் கன்னே தெரிய மாட்டேங்குது. ஆயாசமா பேசக்கூட பயமா இருக்கு. ரெக்கார்ட் பண்ணிட்றாங்க. அப்புறம் பார்த்தா அது டி.விலவந்து சந்தி சிரிக்கிற மாதிரி ஆயிடுது.

சௌகர்யம்னு நினைச்சு வளர்த்துவிட்டதெல்லாம் அள்ளி விழுங்கற ராட்சஸனா மாறிப்போச்சு.

நேரம் நல்லா இல்லாட்டி எப்ப எது நடக்கும்னே சொல்ல முடியாது. அம்பது வருசமா அரசியலுக்கு வந்து இப்பத்தான் சீட் வாங்கி எம்.எல்.ஏ.வா ஆகியிருக்கேன். மினிஸ்டராகி மந்திரியா இருக்கும்போதே செத்துப்போய் போலீஸ் மரியாதையோட எரிஞ்சு போகணும்கறதுதான் என் லட்சியமே! ஆத்து மண்ணுங்கற ரூபத்துல அதுல மண் விழுந்துடாம பாத்துக்க வேண்டியது இனி உன் பொறுப்பு.

சொல்றத சொல்லிட்டேன். என் போன் மூலமா பேசுனா ரெக்கார்ட் பண்ணுவாங்கன்னு என்னை பாக்க வந்த கட்சிக் காரன் போனை வாங்கி பேசிக்கிட்டிருக்கேன். நீயும் கவனமா இருந்துக்கோ..."

எம்.எல்.ஏ. பேசாமல் பேசியும், மிரட்டாமல் மிரட்டிவிட்டும் பேச்சை முடித்துக்கொண்டார்.

சுடலையாண்டியின் கழுத்துப்பாகம் குளித்துவிட்டு வந்தது போல் வியர்த்து விட்டிருந்தது.

அந்த அல்லக்கை பார்த்துக்கொண்டே இருந்தான். "என்னண்ணே எதாச்சும் வில்லங்கமான மேட்டரா?" என்றும் கேட்டான். 'ஆமாம்' என்று சுடலையாண்டி தலையசைக்கும் போதே திரும்பவும் கைபேசி அமட்டியது. யார் என்று தெரியாமல் காதைக் கொடுத்தார்.

"சுடலை திரும்பவும் நான் சகலை தான் பேசறேன். ஒரு முக்கியமான தகவலைச் சொல்லத் தவறிட்டேன். பக்கத்துல யாரும் இருந்தாக்கா கவனமா ரி-ஆக்ட் பண்ணு. கைப்பணத்தை எந்தக் காரணத்தைக் கொண்டும் வீட்டுல வெச்சுக்காதே. அதுக்காக ஹவாலா பார்ட்டிங்ககிட்டபோய் சுவிஸ் பேங்க்ல போட்றேன்னும் போய்டாதே... அதெல்லாம் ஆத்திர அவசரத்துக்கு சரிப்பட்டு வராது. உனக்கும் எனக்கும் எழவெடுத்த இங்கிலீஷும் தெரியாது. அவனுங்க போன வந்த விதியையெல்லாம் பொடிப்பொடி எழுத்துல எழுதி வெச்சுகிட்டு நம்ம கிட்ட கையெழுத்த வாங்கிகிட்டதுக்கு பிறகு உலகத்துல இல்லாத ரூல்ஸ் பேசுவாங்க... நமக்கு ஒரு எழவும் புரியாது. அப்பால நம்ம ஆடிட்டரையும் வக்கீலையும்தான் புடிச்சிக்கிட்டு நாம தொங்கணும். இந்த நாயுங்க அப்ப நம்ம தலைல ஏறி உக்காந்துருவானுங்க. ஆகையால பணத்தை சுடுகாட்டுலகூட கொண்டுகிட்டு போய் புதைச்சு வை. ஆனா வீட்டுல மட்டும் வெச்சுக்காதே! நீ செப்டிக் டேங்க்ல போட்டு வெச்சிருந்தாலும் ஐ.டி.காரனுங்க கண்டுபிடிச்சிடுவானுங்க. நான் சொல்றத கவனமா கேட்டுகிட்டு பணத்தைப் பாதுகாக்கற வழியைப் பார். கூட்டு சேர்த்துகிட்டு இதை செய்யாதே தனியாளாவே செய்... அஞ்சடி குழி தோண்டி புதைக்க வேண்டியிருக்கு. என்னால ஒத்தையாளா எப்படி குழி தோண்ட முடியும்னு என்னை திருப்பிக் கேக்காதே.

நூறு கோடி இருநூறு கோடின்னு சம்பாதிக்கறது இப்ப பெருசே இல்ல. நம்ம உசுரைப் போல அதை பாதுகாக்கத் தெரியணும். கவனம்!

இதை ஏன் சொல்றேன்னா நம்ம கட்சிக்காரங்களே பொறாமைல போட்டு உட்டுகிட்டு இருக்காங்க. எலெக்ஷன்

வேற வரப்போகுது. தனக்கு சீட் கிடைக்கணும்கறதுக்காக அடுத்தவன் பேரை ரிப்பேராக்க எந்த எல்லைக்குப் போறதுக்கும் தயாரா இருக்கானுங்க. கேட்டா இதான் அரசியல்ங்கறான். காட்டுல எப்பவும் வலுத்ததுதான் வாழ முடியும்பாங்க. அரசியல்லயும் அதான் நிலைமை. திரும்பவும் சொல்லிக்கறேன் கவனம்! கவனம்!!"

எம்.எல்.ஏ.வின் அடுத்த கட்ட எச்சரிக்கை ஒலித்து அடங்கவும் சுடலையாண்டிக்கு மொத்த உடம்பும் குளித்தது போலாகி விட்டது. அப்படியே அல்லக்கையை ஊடுருவியவர் காரில் ஏறிக் கொள்ளச் சொல்லி காரையும் கிளப்பினார். ஓடும் காருக்குள், "மாணிக்கம் ரங்கன் ஒரு நாள்கூட உசுரோட இருக்கக்கூடாது. சவுக்குத் தோப்புல வெச்சு சங்கதியை முடிச்சுடுங்க. அப்படியே அங்கையே எரிச்சு அஸ்தியையும் ஆத்துல கரைச்சிடுங்க. இதை பிசிறில்லாம செய்யணும்.

அப்புறம் இன்னொரு விஷயம்... ராத்திரி 11 மணிக்கு நான் சவுக்குத் தோப்புக்குப் போறதுக்கு தோதா நாய் மேட்டுப் பக்கத்துல ஒரு பரிசல் மட்டும் இருக்கட்டும். நான் முதல்ல அங்க போயிட்றேன். நீங்கல்லாம் ஒரு மூணு மணிய போல ரங்கனோட வந்து சேருங்க. அவன் என் எதிர்லயே சாவணும்! என் எதிர்லயே எரியணும்!"

என்று சுடலையாண்டி சொன்னபோது கண்களில் கனல் மின்னியது.

"அண்ணே... நீங்க தனியா முன்னாடியே போய் எதுக்குண்ணே காத்துக்கிடக்கணும். குளிர்வேற அப்பி எடுத்துப்பிடும். நாங்க அவன் கதையை முடிச்சுட்டு தகவல் தரோம். விடிய காலம்பற ஒரு நாலு மணிய போல நீங்க வந்தா போதும்ணே..." என்றான் மாணிக்கம் என்கிற அவனும்...

முன்னாலேயே தனியாளாக போவது பணத்தைப் புதைக்க என்று அவனிடம் கூற முடியுமா என்ன?

"சொன்னதைச் செய்யுடா..." என்றார் அதட்டலாக.

"அப்ப இறக்கி விடுங்கண்ணே... அவனைத் தேடி எங்க இருந்தாலும் அள்ளிப்போட்டுகிட்டு வந்துடறேன்."

என்றபடியே அவனும் அம்மா மண்டபம் அருகில் இறங்கிக் கொண்டான்.

''கவனம்டா எங்கேயும் சின்ன தடயத்தக்கூட விட்டுடாம எல்லாத்தையும் கச்சிதமா செய்யணும்...''

''அப்படித்தானேண்ணே எம்புட்டோ பேரை போட்டுத் தள்ளியிருக்கோம்?''

''ஆனாலும் ரங்கன் மாதிரி ஒருத்தன் நம்மளபத்தி தெரிஞ் சவனா வந்துட்றானேடா, அதுக்கு என்ன சொல்றே?''

''அண்ணே சில நேரத்துல இப்படி ஆகறது சகஜம்ணே... சாப்பிடும்போது அஞ்சாறு பருக்கைங்க சிந்தற மாதிரி இது ஒரு சின்ன விசயம்ணே...

அள்ளி எரிஞ்சிருவோம்.. நீங்க தெம்பா போங்க...''

மாணிக்கம் சொல்லிக்கொண்டே அம்மா மண்டபத்துக்குள் நுழையத் தொடங்கினான். அங்கே எங்கேயாவதுதான் ரங்கன் இருக்க வேண்டும் என்பது அவனது எண்ணம்.

திபுதிபுவென்று நல்ல சிவந்த புரவிக்கூட்டம் ஓடிவருகிற மாதிரி பிரண்டு பிரண்டு வந்து கொண்டிருந்தாள் காவேரி.

அவ்வளவும் புதிய மழை நீர்!

இழுவையும் அதிகமாக இருந்தது.

கரையோரமாக ஏராளமான கூட்டம்.

பிராமணக் கூட்டம் ஒரு புறம்.

திவசம் திதி என்று ஆத்ம காரியங்களில் மூழ்கியிருந்தது.

இருக்கும்போதே நாம் பலரை நினைப்பதில்லை. ஆனால் இறப்புக்குப் பிறகும் ஒருவரது ஆத்ம ஷேமத்துக்காக மன உருக்கத்தோடு கண்ணீர் விட்டுக்கொண்டிருப்பவர்களை என்ன வென்று சொல்வது??

இந்த மனிதம்தான் எத்தனை உயர்ந்தது என்பதா? இல்லை, அகந்தையோடு சுத்த முட்டாள்தனம் என்பதா? காவிரிக்கரை யோரம் இப்படி பல கேள்விகள் மூண்டபடி இருக்க அந்தக் கூட்டத்தில் சிங்கராச்சாரியாரும், தேசிகாச்சாரியும் இருந்தனர்.

இருவருக்கும் இடையில் முரட்டுக்காளை புகுந்ததுபோல புகுந்து கொண்டு போய் ரங்கன் எங்கே என்று தேடத்தொங்கியிருந்தான் மாணிக்கம் என்கிற சுடலையாண்டியின் அல்லக்கை.

தேசிகாச்சாரிக்கு அவன் உரசிக்கொண்டு மாடுபோல போனதில் கோபம் மூண்டது.

''டேய் எருமை... அறிவில்ல... இப்படி குறுக்க பூந்து போறியே'' என்று பட்டாசு போல ஷணத்தில் வெடித்துவிட்டார்.

அவனும் நின்று திரும்பிப் பார்த்தான். பிறகு மெல்ல அருகில் வந்தான்.

''என்ன சொன்னே?'' என்றும் கேட்டான்.

''எருமைன்னேன்... உரசினதோட இல்லாம நெஞ்சை நிமித் திண்டு வந்து என்ன சொன்னேன்னு கேள்விவேற கேக்கறியா?''

''இன்னொரு தடவை எருமைன்னே அடுத்து பேச நாக்கு இருக்காது...'' அவனிடம் வார்த்தைகள் தடிக்கத் தொடங்கின விஷயம் திசை மாறுவது சிங்கராச்சாரியாருக்கும் புரிந்து போனது.

''தேசி விடுப்பா... நீ போப்பா... போ...''

''என்ன போ... நான் யார் தெரியும்ல?''

மாணிக்கம் கேட்ட விதத்தில் தூள் பறந்தது.

''யாருப்பா நீ? இருக்கற அவ்வளவு படிப்பையும் படிச்சு முடிச்ச மகாமேதையா? இல்லை தானதர்மம்னு தனக்கா வாழாத பூலோக கர்ணனா? அதுவுமில்லை ஹோமம் தவம்னு பிறத்தியாருக்காக வாழற தபஸ்வியா? யாருப்பா நீ?''

சிங்கராச்சாரியாரும் கோபமுற்று அவனிடம் கேள்விகளை கேட்டார்.

''ஏய்... என்னடா உட்டா பேசிக்கிட்டே போறே? குடுமியை அறுத்துப்பிடுவேன் தெரிஞ்சுக்க...''

அவனது தெனாவெட்டையும் சிங்கராச்சாரி, தேசிகாச்சாரி என்கிற இருவரையும் சுற்றி இருப்பவர்களும் வேடிக்கை பார்க்கத் தொடங்கினார்கள். ஆனால் யாரும் முன்வந்து விவகாரத்தைத் தடுத்து நிறுத்தவோ, இல்லை விலக்கி விடவோ தயாராக இல்லை.

ஆதிமனிதன் காலத்தில் இருந்தே சமூகம் என்பது வேடிக்கை பார்ப்பதாகவே இருப்பதில் துளியும் மாற்றமும் இல்லை.

''டேய்... என்னடா பேசிண்டேபோறே? நாக்கை அறுத்துடு வியோ... எங்க அறு பார்ப்போம்...'' எதனாலோ தேசிகாச்சாரி முன்னே சென்று நாக்கையும் நீட்டினார். அவனும் தாமதிக்காமல் ஒரு குத்து விட்டதில் தாம்பூலம் போட்டது போல அவரது வாயில் ரத்தம் கொப்பளிக்கத் தொடங்கி விட்டது. சிங்கராச் சாரியாருக்கு அதைப் பார்க்கவும் மயக்கமே வந்துவிட்டது.

நல்லவேளையாக அந்தப் பக்கமாக வந்த ரங்கன் பார்த்துவிட்டு ஓடிவந்தான். தேசிகாச்சாரி ரத்தவாயோடு தடுமாறுவதைப் பார்த் தவன் மாணிக்கத்தையும் பார்த்தான். மாணிக்கத்துக்கும் அவனை பார்க்கவும் ''வாடா பொணந்தூக்கி... உன்னத் தேடித்தான் வந்தேன். வழில இந்த கெழவனுங்களோட ஓரண்டையாப் போச்சு... வா... வா... அண்ணன் உன்னை பாக்கணும்னார்'' என்று ரங்கன் தோள் மேல் கை போட்டான். அடுத்த நொடி அந்தக் கையை தட்டிவிட்டு பதிலுக்கு அவன் வாயில் ரங்கன் ஒரு குத்துவிடவும் மாணிக்கத்தின் வாயும் வெற்றிலை போட்டுக் கொண்டது. ரத்தம் கொப்பளிக்க கீழே விழுந்தவன் எழுந் திருக்கும் முன் மாறி மாறி குத்துக்கள் நிலைகுலைந்து போய் விட்டான் மாணிக்கம்.

ரங்கனிடம் கட்டுக்கடங்காத ஒரு ஆவேசம். அடுத்தடுத்து காலால் வயிற்றில் உதைக்கவும் மாணிக்கம் எழுந்து சமாளிக்கப் பார்த்தான். ஆனால் முடியவில்லை. அதற்குமேல் ஒற்றை மனிதனாக அவனை சமாளிக்க முடியாது என்பதைத் தெரிந்து கொண்டவன் போல ஓடத்தொடங்கினான்.

ரங்கனும் பின்னாலேயே துரத்திக்கொண்டே ஓடினான். கரையோரமாக மண்திட்டின் மேல் நெடுந்தூரம் ஓடிய மாணிக்கம் கால் இடறி பக்கவாட்டு புதர்களில் விழுந்து அங்கிருந்தபடியே உருண்டு ஓடும் ஆற்றுக்குள்ளும் விழுந்தான். ரங்கனும் ஆற்றுக்குள் பாயப் போனான். ஆனால் ஷணத்தில் சுதாரித்து அப்படியே தேங்கி நின்றான். மாணிக்கத்துக்குப் பின்னாலே கிறுகிறுவென்று விஷ்ணு சக்கரம் போல ஒரு சுழல்!

ரங்கன் பார்த்துக்கொண்டிருக்கும் போதே அந்த சுழலுக்குள் மாணிக்கம் அகப்படவும் அவன் உடம்பும் சொற்ப நொடிகளில் நீரில் மூழ்கிப் போய் அடி மணல் படுகை வரை இழுக்கப்பட்டு அப்படியே போனபடியே இருந்தது.

ரங்கனிடம் ஸ்தம்பிப்பு! வெகுதூரத்தில் நடந்துவிட்ட இந்த சம்பவத்தை அம்மா மண்டபக்கரையில் இருந்தவர்களால் பார்க்க முடியவில்லை.

மொத்தத்தில் மாணிக்கம் ரங்கனைத்தேடி வந்த சாக்கில் சாவைத் தேடி வந்த மாதிரி தான் தோன்றியது.

ரங்கனுக்கே அந்தக்காட்சி கோபத்தை வரவழைத்தது, ''பாவி... பாவி... இப்படியா போய் இவ வாய்ல விழுவே? ராட்சஸி... ராட்சஸி... விழுங்கிட்டியேடி இன்னும் இப்படி எத்தனை பேரை நீ விழுங்குவே?''

கரைமேல் நின்றபடியே கத்தினான். பக்கமாய் யாரோ வருவது போல் தோன்றவே திரும்பினான். சிங்கராச்சாரியர் தான்!

தேசிகாச்சாரியை ஒரு ஆட்டோவில் ஏற்றி 'முதல்ல ஒரு டாக்டரைப் போய் பார்!' என்று அனுப்பிவிட்டு வந்தவராக நின்றார்.

ரங்கனின் கண்களில் கண்ணீரும் பெருகியிருந்தது.

''ஏன் ரங்கா அழறே?''

''இந்த காவிரி இன்னும் எத்தனை பேரை சாமி இப்படி விழுங்குவா?'' அவனிடம் குரல் உடைந்து போனது.

''அவ எங்கப்பா விழுங்கினா... விழுங்கிக்கோன்னு போய் நாமன்னா உழறோம்... ஆமா ஏன் நின்னுட்டே? குதிச்சிருப்பியே நீ?''

''ஆமாம் சாமி... ஆனா செய்து கொடுத்த சத்தியம் காலைக் கட்டிப் போட்டுச்சு... வெறும் நீரோட்டம்னா கூட காப்பாத் தலாம். சுழல்ல சிக்குனா பரலோகம்தான் உடம்பும் புதைஞ்சு போயிடும்...''

அவர் அதைக் கேட்டு பெருமூச்சுவிட்டார்.

"சாமி... அவன் யாரா இருந்தாலும் அவன் சாகணும்னுல்லாம் நான் நினைக்கல சாமி..."

ரங்கனிடம் கண்ணீர் கசிந்தது.

"நீயும் நானும் நினைக்கறதெல்லாமா பெருசு? விதிக்கு எதை எப்படி பண்ணணும்னு நன்னாவே தெரியும் ரங்கா. வா நடப்போம்... ஒரு ஜல சமாதியை பாக்கற சந்தர்ப்பம் இன்னிக்கு உனக்கும் எனக்கும்..."

"தப்பு சாமி... ரொம்ப தப்பு... இவ முகத்துலயே நான் முழிக்கப் போறதில்ல இனி. ஆமா இவனுக்கும் உங்களுக்கும் எப்படி சாமி முட்டிகிச்சு...?"

"குளிச்சுட்டு நடந்துவரும்போது மாடுமாறி குறுக்கே நுழைஞ்சு வம்புக்கு வந்ததே அவன்தான் ரங்கா. நல்லவேளை நீ வந்தே... இல்லன்னா உங்கப்பனுக்கு இன்னும் நிறையவே அடி விழுந்துருக்கும்..."

சிங்கராச்சாரியார் பேச்சு வாக்கில் தன்னையும் மீறி அந்த உண்மையைச் சொல்லவும் ஒரு வினாடி ஆடிப்போய் நின்றான் ரங்கன்!

50



எதிர்பாராத நிலையில் சிங்கராச்சாரியார் வாயில் இருந்து வந்து விட்ட அந்த உண்மையைக் கேட்டு ரங்கன் ஒரு வினாடி ஸ்தம்பித்துப் போனான்.

அப்படியே தேங்கியும் நின்றான்.

அவரும் கையை உதறிக் கொண்டார். "இதத்தான் விதிங்கறது... என்னையும் அறியாம உன் அப்பன் யார்னு என் வாய்ல இருந்து வந்துடுத்து பாரு... பரவால்ல... தசமில தெரியவேண்டியது நவமிலயே தெரிஞ்சிடுத்து... பரவால்ல... இதுதான் அவன் விருப்பம்னும்போது நான் என்ன பண்ண முடியும்?" என்றார்.

அவனிடமோ பேச்சே இல்லை. திரும்பி ஓடிக் கொண்டிருக்கின்ற காவிரியைத்தான் பார்த்தான். அசுரப் பாய்ச்சல்! அதில் ஸ்ரீதரன் அடித்துச் செல்லப்படுவதும் கூடவே, ராம்குமாரும் சேர்ந்து பிரள்வதும் தெரிகிறது. இருவரையும் காப்பாற்றப் பாய்ந்ததில் ராம்குமாருக்குத்தான் விதி இருந்தது. காப்பாற்றவும் முடிந்தது. ஆனால் ஸ்ரீதரனை காவிரி விழுங்கிவிட்டாள்.

தன் உடன்பிறப்பு...

அதனால்தான் அவனும் தன்னிடம் சற்று விசேஷ அன்பைக் காட்டினானா?

அவன் கண்களில் சரசரவென்று கண்ணீரின் பெருக்கு. கூடவே காவிரியின் மேல் ஒரு ஆவேசக் கோபம். உதடுகளில் அதன் வெளிப்பாடு.

"சண்டாளி... சண்டாளி... என் தாயைத்தான் விழுங்கி னேன்னா என் சகோதரனையுமா? என் குடும்பத்துல யாரையும் விட்டுவைக்க உனக்கு உத்தேசமில்லையா?"

அவன் பேசியதைக் கேட்டு சிங்கராச்சாரியாருக்கும் லேசாக சிலிர்த்தது.

உண்மை தெரிந்த நொடி அவன் உணர்வுகளில் ஏற்பட்ட மாற்றத்தையும் குறிப்பாக ஸ்ரீதரனை தன் சகோதரன் என்றாக்கி அவன் குமைந்ததையும் பார்த்து மிகவே பரவசமானார்.

"ரங்கா... காவிரிய வைய்யாதே...! அவளைப் போல கருணை யுள்ளவள இந்த ஜெகத்துல பாக்க முடியாது..." என்றார் வேகமாக.

"இவளா...? இவளாங்க கருணையுள்ளவ...? இப்பதான் என் கண் எதிர்ல ஒருத்தனை விழுங்கியிருக்கா... இவளைப் போய் கருணையுள்ளவள்னா எப்படிங்க?"

அவன் திருப்பிக் கேட்ட பாவனையே ஆவேசமாக இருந்தது.

"ரங்கா உனக்கும் ரொம்பவே கருணையுள்ள மனசு. பாக்க திடமா இருக்கற வெண்ணை உஷ்ணம் பட்டா உருகி நெய்யாயிடும். அப்படித்தான் நீயும்...! ஆனா உன் கருணை ஒரு தினுசுன்னா இவளோட கருணை இன்னொரு தினுசு. இவ விழுங்கின சில உயிர்களை நினைச்சு குமையற நீ இவளால ரட்சிக்கப்பட்ட பயிர்களையும் அதை உண்டு வாழற கோடிக்கணக்கான உயிர்களான நம்பளை எல்லாமும் கொஞ்சம் நினைச்சுப் பார்" என்று ஒரு பெரிய ஆரம்பத்திற்கும் தயாரானார். அவனும் அவர் பேச்சை கேட்க, தயாரானான்.

"குதிரைக்கு தான் கவனம் பிசகிடக்கூடாதுன்னு கடிவாளம் போட்டு கண்ணுக்கு பக்க வாட்டுல திரையும் போட்ருப்பா! நீ மனுஷன்... உனக்கு எதுக்கு அந்தத் திரை? அதை கழட்டிட்டு விசாலமா யோசி... நாலாபுறமும் பார். அப்பதான் இந்த காவிரிய உன்னால புரிஞ்சுக்க முடியும்.

உன்னை வெச்சுத்தான் இவளையே நான் புரிஞ்சுண்டேன்... அந்த ரங்கநாதனை தினமும் சேவிக்கற மாதிரியே நான் தினமும் இவளையும் சேவிக்கப் போறேன்" - அவரது பீடிகையே பலமாக அமைந்துவிட்டது.

"உன்னோட அம்மால ஆரம்பிச்சு இப்ப நீ பார்த்த மரணங்கள் வரை எல்லாமே அவாளவா கர்மம்! நன்னா தெரிஞ்சுக்கோ. ஒரு உயிர் இந்த மண்ணுல பிறக்கற அந்த நொடியிலேயே அதோட முடிவு எப்போங்கறதும் எழுதப்பட்டுட்றது. அது எப்படி எதாலங்கறதும் அந்த நொடிக்குள்ளயே இருக்கு!

தரைல பட்டுத் தெரிக்கற நீர்த்துளி எவ்வளவு உயரத்துல இருந்து கீழ விழறதோ அதுக்கு ஏற்ப சிதறுகிற மாதிரி, பிறக்கற ஒவ்வொரு உயிரும் வெளிக்காற்றை உள்வாங்கற நொடிப் பொழுதுலேயே அதோட வாழ்க்கையோட நீளமும் அகலமும் அமைஞ்சுடறது. அதனாலதான் ஒருத்தருக்கு தூக்கத்துலயே உயிர் பிரியறது. ஒருத்தருக்கு சுனாமியால உயிர் பிரியறது. அவ்வளவு ஏன் கும்பகோணத்துல படிக்க வந்த பள்ளிக்கூடத்துல கருகிச் செத்துப்போன பிஞ்சுக்குழந்தைகள் வரைலயும் கூட இதுதான் உண்மை. இதுதான் நிதர்சனம்!

காரணமில்லாம காரியங்கள் இல்லை! அதுதான் பூமியில நிதர்சனம். அதே சமயம் எல்லாத்துக்கும் காரணம் நமக்குத் தெரியணும்கற அவசியம் இல்லை. சில காரணங்கள் தெரிஞ்சாலும் அதை புரிஞ்சுக்கற த்ராணி நம்ம அறிவுக்குக் கிடையாது.

ஏன்னா நம்ம அறிவும் சரி மனசும் சரி இந்த உலகத்துல நம்மை சுத்தி இருக்கறவா கைலதான் அது இருக்கு. இந்த அம்மா மண்டபக்கரைல பிஞ்சுப் பிள்ளையா நின்ன உன்னோட அறிவும் மனசும் இந்த சூழலைப் பார்த்துதான் வளர்ந்தது. இங்க இருக்கறவா பேசற பாஷை தமிழா இருந்து அது உன் காதுல விழுந்து அப்புறம் மனசுல விழுந்து உன் பாஷையும் தமிழ்னு ஆனது. நீ சந்திச்ச மனுஷா தான் தங்களோட செயல்பாடுகளால உன்னையும் விதம் விதமா சிந்திக்க வெச்சு உன்னை இன்னிக்கு இப்படி எல்லாமும் பேச வெச்சிண்டுருக்கா.

இந்த கரைல நின்னதுக்கு பதிலா நீ காசில கங்கை கரைல நின்னுருந்தா அங்க உனக்கு வேற மாதிரி அனுபவங்கள் - வேற மாதிரி வாழ்க்கை முறைதான் அமைஞ்சிருக்கும்.

இந்த அமையற விஷயம் உன் கைல இல்லை, அமைச்சுக்கற சக்தியும் நமக்குக் கிடையாது" - சிங்கராச்சாரியார் அர்ஜுன னிடம் பேசும் கண்ணனை போலத்தான் பேசினார்.

"அப்டி மட்டும் இருந்தா நான் இந்த முகத்தோட, இந்த உடம்போட, இந்த அளவு உயரத்தோடயா இருப்பேன். என் ரசனைக்கு ஏற்ப முகத்துல இருந்து மொழியில இருந்து, ஊர்ல இருந்து, உற்றார் உறவுல இருந்து எல்லாரையும் நான் அமைச்சிண்டு இருந்துருப்பேனே...? ஆனா உண்மை நிலை என்ன?

எதுவுமே நம்ம கைல கிடையாதுங்கறதுதானே? பக்கத்து வீட்டுக்காரன்ல இருந்து, எதிர்வீட்டுக்காரன் வரை தானா அமையறதுதான். அப்படி அமையற ஒண்ணை ஏத்துக்கறத தவிர நமக்கெல்லாம் வேற வழியும் கிடையாது. அதுக்குப் பின்னால எல்லாம் மிகச் சரியான காரண காரியங்களும் இருக்கு.

நான் சொல்ற இந்த உண்மையை நாம தெரிஞ்சுக்கவே நமக்கு ஒரு வயசும் காலமும் தேவைப்படறது. சிலர் சாகற வரைக்கும்கூட

இந்த உண்மைகளைப் பற்றி யோசிக்கறதே இல்லை. வாயும் வயிறும், பசியும் உணர்ச்சியும், ஆசையும், தாபமும், யோசிக்க அவாளை விட்றதேயில்லை.

எவர் ஒருத்தர் நான் இப்ப சொல்ற உண்மைகளை அசை போட ஆரம்பிக்கறாரோ அவருக்குள்ளதான் 'நான் யார்'ங்கற பிரதானமான கேள்வியே எழும்பி நிற்கும்.

நான் யார்? நீ யார்? நாமெல்லாம் யார்? – அதை தெரிஞ்சுக்கத் தான் பூமியில வந்து விழுந்துருக்கோம். கேள்வியை கேட்டுக்கறது கூட பெருசு இல்லை. விடையை குழப்பமில்லாம நெருங்கணும். அதுக்கு ஆன்மிகத்துல பெரியவா வகுத்துக் கொடுத்துட்டு போயிருக்கற வழியில போறது ஒருவிதம். எதிர் கேள்வி கேட்டு எதையும் நம்ப மறுத்து நாத்திகமா சிந்திக்கறது ஒருவிதம். இரண்டிலையும் இல்லாம கிணத்துத் தவளை மாதிரி தனக்குத் தெரிஞ்ச அளவுக்கும் புரிஞ்ச அளவுக்கும் மட்டுமே யோசிக்கறது இன்னொரு விதம்.

நீயும் இந்த கிணத்துத் தவளை மாதிரிதான்!

உன்னை மட்டம் தட்ட இதை நான் சொல்லலை. இதுதான் உன்னை பத்தின உண்மை. அதனால பட்டவர்த்தனமா சொல்றேன்'' அவரிடம் ஒரு மெல்ல ஆசுவாசம். கரைவெளியிலும் காற்றின், பெரும் உசாவல்! அவர் தொடர்ந்தார்.

''காவிரிய சபிக்காதே...

இவதான் உன் அம்மா... உன்னை பெத்தவ. இந்த காவேரியோட போய் இவளாவே ஆயிட்டா. உனக்கு சோறு போடத்தான் நீ பொணங்கள தேடி இறங்கும்போது உன் கைல அந்த பொணங்களை ஒப்படைக்கறா. எவ்வளவு நாளைக்கு நீ இப்படியே பொணந்தூக்கியாவே இருப்பே...? மதிப்பும் மரியாதையும் இல்லாத இந்த ஜீவனத்துல இருந்து உன்னை மீட்க என்ன வழின்னு பார்த்தா... அப்பதான் மைதிலி இவ கைல அகப்பட்டா. நீயும் மைதிலியை காப்பாத்தினே... அதாவது மைதிலிய காப்பாத்தப் போய் உன்னையே காப்பாத்திண்டே!

இப்ப நீ பொணந்தூக்கி இல்லை. அவளை எப்பாடுபட்டாவது கல்யாணம் பண்ணிக்கப் போற ஒருத்தன். ஸ்ரீதரனை இவ

விழுங்கலைன்னா மைதிலி உனக்கு எப்படி கிடைக்க முடியும். தேவிகாச்சாரியும் தன் தவறை எப்படி உணர்ந்திருக்க முடியும்? எல்லாமே உன் நன்மைக்காக மட்டுமே நடந்திருக்கற விஷயங்கள். இப்ப ஒருத்தன் உன் கண் எதிரில செத்துப் போனானே, இவன் கூட உன்னைத் தேடி வந்த ஒருத்தன்தான். இவனை இவ விழுங்கியிருக்கான்னா அதுக்குப் பின்னால கூட பெருசா ஒரு நல்லது இருக்குங்கறதுதான் என் அபிப்ராயம். ஒரு பக்கம் அவாளவா கர்மப்படி அவா முடிஞ்சு போனா... இன்னொரு பக்கம் அதனால உனக்கு படிப்படியா நன்மைகள்! இதெல்லாம் ஒரு கணக்கு, காலம் போடற கணக்கு, நம்ம கம்ப்யூட்டர் போடற கணக்கெல்லாம் இந்த காலக் கணக்கு முன்னால சும்மா...

ஒண்ணுமே கிடையாது!

என் அறிவால ஏதோ புரிஞ்சுக்க முடியறது. ஆனா பூரணமா பட்டவர்த்தனமா புரிஞ்சுக்க முடியல. இருந்தாலும் போகப் போக நான் புரிஞ்சுண்டுடுவேன்.

இப்ப இன்னொண்ணும் சொல்றேன் கேட்டுக்கோ. இந்த காவிரியாலயே நீ பெரிய பேரையும் பெறுவே. அது ஒரு பிணம் தூக்கிங்கற உன் கறையை எல்லாம் துடைச்சு எரிஞ்சிடும். அது எப்ப நடக்கும்னா நீ இவளை கைகூப்பி கண்ணீர் மல்க சேவிக்கும்போது...

அப்படி நடக்கும்போது இந்த விஷ்ணு பக்தன் சொன்னது எத்தனை பெரிய உண்மையன்னு உனக்கு தெரியும்.

போ...

போய் நான் சொன்னதை எல்லாம் நன்னா உட்கார்ந்து அசைபோடு. நாளைக்கு மறக்காம ஆத்துக்கு வா. அங்க உன் அப்பன் காத்துண்டுருப்பான். நாளைக்கு இதே நாழி நீ ஒரு பூரணமான வைஷ்ணவனா ஆகியிருப்பே. என் அகத்துல நாளைக்கு உனக்கு பூணூல் கல்யாணம் நடக்கப் போறது. உப நயனம்னு அதுக்கு பேர். நயனம்னா கண்கள்னு அர்த்தம். உபநயனம்னா இருக்கற இரண்டு கண்களோட மூணாவதா

வரப்போற ஞானக் கண்ணுன்னு இதுக்கு அர்த்தம். அந்த மூணாவது கண் உன் வரைல நாளைக்கு என்னால திறக்கப்பட போறது. அப்ப காயத்ரிங்கற மகா மந்த்ரத்தை நானே உனக்கு உபதேசிக்கப் போறேன்.

மந்த்ரங்களோட தாய்தான் காயத்ரி.

அந்த தாயும் உன் அகக் கண்களை இன்னும் திறந்துவிடுவா. அப்ப உனக்கு இந்த உலகம் இன்னும் தெளிவா புரியும்.

வரட்டுமா?''

-சிங்கராச்சாரியார் காவிரி ஆற்றின் கரையில் நின்று ஒரு பாட்டம் பேசிவிட்டு விலகவும் ஒரு பெரும் மழை பெய்து அதில் மூழ்குமளவு நனைந்துவிட்டதுபோல் இருந்தது ரங்கனுக்கு.

அழுக்காகிப் போன ஆடை ஒன்றை கல்லில் அடித்து துவைத்து அதை கூடிய மட்டும் வெளுப்பாகினது போலவும் இருந்தது.

அப்படியே திரும்பி காவிரியைப் பார்த்தான்.

அவன் சொன்னதுபோல அதில் அவன் தாயின் முகம் தெரியத் தொடங்கியது. அன்று சுழலில் சிக்கி உருண்டும் பிரண்டும் கண்களை விட்டு மறைந்து போனவள் நடு ஆற்றில் இருந்து எழுந்து அவனை நோக்கி வருவது போலவும் இருந்தது.

தன்னையும் மறந்து கைகளைக் கூப்பினான் ரங்கன்.

''அம்மாரா...!'' என்றான் அடி வயிற்றில் இருந்து... கண்ணீர் முட்டிக்கொண்டு கொட்டியது.

அவன் குரலும் அந்த நதிக்கரை வெளியெங்கும் பரவி மோதித் தெரித்து எதிரொலியாக அவனுக்கே திரும்பக் கேட்டது.

அப்படியே மண்டியிட்டான். அவனுக்குள் சிங்கராச்சாரியார் பேசிய ஒவ்வொரு வார்த்தையும் திரும்பவும் ஒலிக்கத் தொடங்கியது.

சக்கரவர்த்தி அகம்!

சீமாவும் ரேவதியும் திரும்பியிருந்தனர். மைதிலி மாடியில் இருந்தாள். இருவர் வீட்டுக்குள் நுழைந்ததையும் உணர்ந்திருக்க

வில்லை. ஜானகி மட்டும் ஹாலில் இருந்தாள். சக்கரவர்த்தியும் கோயிலுக்கு போயிருந்தார்.

ரேவதிக்கு வசதியாகப் போய்விட்டது ''அத்தே கொஞ்சம் உள்ற வாங்கோ...'' என்று சமையல் கட்டை நோக்கி நடந்தாள்.

51



சமையல் கட்டு!

உள்ளே ரேவதியும் ஜானகியும் மட்டும்தான். ரேவதி உள் நுழைந்த மாத்திரத்தில் அறையின் மரக்கதவை சாத்தி தாழிட்டாள். மலங்க மலங்கப் பார்த்த ஜானகியிடம் 'அத்தே... நான் இப்ப ரொம்ப முக்கியமான சில விஷயங்கள் பேசப் போறேன். தப்பித் தவறி மைதிலி காதுல விழுந்துடப் போறதுன்னுதான் கதவைச் சாத்தினேன்'' என்று பலமான பீடிகையோடு ஆரம்பித்தாள்.

''மெட்ராஸ்ல சம்பந்தி ஆத்துல ஏதாவது பிரச்சினையா? இவாளும் மைதிலிய கடைசி நிமிஷத்துல வேண்டாம்னுட் டாளா?'' - ஜானகி ரேவதியின் அணுகுமுறையை தன் போக்கில் தவறாக புரிந்துகொண்டு பதற்றத்தோடு திரும்பிக் கேட்டாள்.

''ஐயோ அத்தை... அவ கல்யாணத்தை வர்ற ஞாயிற்றுக் கிழமையே நடத்திட்ற வேகத்துல தான் எல்லாரும் இருக்கோம். இப்ப போய் அபசகுணமா பேசிண்டு...''

''நல்ல விஷயனும் போது எதுக்கு கதவைச் சாத்தி தாழ் போட்டே?''

''என்ன பண்றது... அந்த லட்சணத்துல இருக்கா நீங்க பெத்துருக்கற பொண்ணு...''

''அவளை கரிச்சு கொட்டாம விஷயத்துக்கு வா... எனக்கு படபடன்னு வரது...''

''உங்க வரைல இப்ப ஹார்ட் அட்டாக்கே வரணும். வந்தாத்தான் மைதிலி கழுத்துலயும் தாலி ஏறும்...''

''இப்படி புரியாமலே பேசினா என்னடி அர்த்தம்?''

''புரியும்படியாகவே சொல்றேன். ஆறு மாசம்லாம் கல்யாணத்தை தள்ளிப் போட முடியாதாம். ஏன் எதனாலன்னு அதுக்கு அவா சொன்ன காரணங்கள் எங்களுக்கு ஏத்துக்கும் படியா இருக்கு. அதனால வர்ற ஞாயித்துக்கிழமை திருவல்லிக் கேணில கல்யாணம். மண்டபத்துல இருந்து சமையல்காரன் வரை சகல ஏற்பாடுகள்ளயும் அவாளே இறங்கறா. இன்னிக்கு புதன்கிழமை. இடைல வியாழன், வெள்ளி, சனின்னு மூணே நாள்! இதுல மைதிலிக்கு வாங்க வேண்டியத வாங்கி செய்ய வேண்டியதை செய்துண்டு வெள்ளிக் கிழமை ராத்திரியே எல்லாரும் கிளம்ப வேண்டியது ரொம்ப முக்கியம்!''

''என்னடி இது... இப்படி திடுதிப்னு வந்து சொன்னா என்ன அர்த்தம்?''

''மைதிலிக்கு கல்யாணமாகணுமா வேண்டாமா?''

''அதுக்காக இரண்டு நாள்ள எல்லாம் ரெடி பண்ணணும்னா எப்படிடி...? குறைஞ்சபட்சம் ஒரு மாசம். அதுவும் வேண்டாம் ஒரு இருபது நாளாவது இல்லாம எப்படிடி ஒரு கல்யாணத்த பண்ண முடியும்?''

''அத்தே... இதெல்லாம் எனக்கும் உங்க பிள்ளைக்கும் தெரியாதா என்ன? ஆனா உங்க பொண்ணுதான் உலகமகா அதிர்ஷ்டசாலி ஆச்சே... அவ வரைல கடைசி கடைசியா ஒரு சான்ஸ் இப்படி வந்து கதவைத் தட்றது. இதை விட்டா அவ்வளவுதான்...''

''என்னடி என்னென்னமோ சொல்றே? பிள்ளையாத்துக்காரா என்ன நமக்கு அன்னியமா? உறவுதானே... ஏன் இப்படி அவசரப்படறா''

''அவா அவசரப்படலை... சுபஸ்ய சீக்ரம்கறது அவா பாலிசி. இங்க உங்க பொண்ணுதான் குட்டையை குழப்பி எங்கள, உங்களன்னு எல்லாரையும் நன்னா ஏமாத்திண்டு இருக்கா...''

''ஏன் இப்படி மைதிலி விஷயத்துல நீ எப்பவும் தப்பாவே பேசறே... எனக்குன்னு ஒரே பொண்ணுடி. அவ பொறந்ததுக்கு அப்புறமாத்தான் உன் மாமனாரே புதுசு புதுசா நிறைய சொத்துக்கள் வாங்கினார். அவ ஒண்ணும் அதிர்ஷ்டக் கட்டை கிடையாது. ரொம்ப அதிர்ஷ்டமானவ அவ...''

''அது சரி. பெத்த அம்மாவான நீங்க கூட அவள அதிர்ஷ்டக்கட்டன்னா கேக்க சகிக்குமா என்ன...? காக்கைக்கு தன் குஞ்சு பொன் குஞ்சுதான் எப்பவுமே... நீங்க அவளை மகாலக்ஷ்மித் தாயார்னு கூட சொல்லிட்டு போங்கோ. இப்ப அதுவல்ல பிரச்சினை. ஞாயித்துக்கிழமை காலம்பற உங்க பொண்ணு கழுத்துல தாலி ஏறியாகணும். அப்படி ஏறலன்னா அவ இந்த ஆத்த விட்டே ஒருத்தனோட ஓடிப் போற பிளான்ல இருக்கா. அது தெரியுமா உங்களுக்கு?''

அங்கு தொட்டு இங்கு தொட்டு அழகாய் தனக்கான இடத்திற்கு வந்து நின்றாள். ஜானகி அதைக் கேட்ட நொடி நிஜமாலுமே ஆடிப் போய் சமையல் கட்டு மேடையை பிடித்துக் கொண்டாள். பதிலுக்கு திருப்பிக் கேட்கக் கூட வாய் வரவில்லை.

ரேவதியும் ஒரு கோழியை கூடைக்குள் அமுக்குவது போல அடுத்தடுத்த அஸ்திரங்களைப் போடத் தொடங்கினாள். அதில் அவளுக்கும் ரங்கனுக்குமான காதலில் தொடங்கி, தோப்பில் அவர்கள் கூடிப் பேசுவது என்பது வரை கொஞ்சம் உண்மை நிறைய பொய் என்கிற மாதிரி அனேக விஷயங்கள்.

''சொல்றேன்னு தப்பா நினைச்சுண்டாலும் சரி... அவ இப்ப ஸ்ரேஷ்டமா கன்னி கழியாதவளாவே இருக்காளான்னுகூட சொல்ல முடியாது. ஒரு நாள் நம்ம தோப்புல இரண்டு பேரும் அப்படி கட்டிண்டு ஒண்ணா கிடந்தா...'' என்று அதிகபட்சமாய் ஒரு போடு.

ஜானகிக்கு நிஜமாகவே நெஞ்சையடைத்தது.

"என் பொண்ணா இப்படி?

இந்தாத்துப் பொண்ணா இப்படி?

இந்த பெருமாளையும் தாயாரையும் நான் எவ்வளவு சேவிச்சிருப்பேன்? இவாள்ளாம் என்னை இப்படியா கைவிடுவா...?"

கரகரவென்று எலுமிச்சையை பிழிந்ததுபோல கண்ணீர் பிரண்டது ஜானகியிடம்!

"இப்ப சொல்லுங்கோ... இந்தக் கல்யாணம் ஞாயித்துக் கிழமையே நடக்கறதுதானே நல்லது?"

"ஆமா நீ சொல்றதெல்லாம் ஒண்ணும் பொய் இல்லையே?"

"வேணும்னா சைக்கிள் கடை கோவிந்தனை கூட்டிண்டு வரேன். கேட்டு கன்ஃபர்ம் பண்ணிக்கறேளா...?" இல்ல ஒளிஞ்சிருந்து அவா ரெண்டு பேரும் சல்லாபிக்கறத வீடியோ எடுத்துண்டு வந்தே காட்டட்டுமா?

"ஐயோ வாய மூடுடி... இது மட்டும் அவருக்குத் தெரிஞ்சா சத்தியமா உசுரை விட்ருவார். ஒண்ணு மட்டும் நன்னா தெரிஞ்சுக்கோ. பூவும் பொட்டுமா நான் போனதுக்கு அப்புறமா தான் அவர் போகணும். அவரை அனுப்பிவிட்டு மூளியா என்னால ஒருநாள் உசுர் வாழ முடியாது..."

"அது எனக்கும் தெரியும் அத்தை... இப்ப நான் சொல்றத கேட்டா எல்லாரும் நன்னா இருக்கலாம். யாரும் சாக வேண்டாம்"

"அது சரி. இவ்வளவு தூரம் அந்த கட்டேல போறவனோட மனசார வாழ ஆரம்பிச்சுட்டவ எப்படிடி அந்த அமெரிக்க மாப்ளையோட மனசு ஒப்பி வாழுவா?"

"அப்ப அந்த பொணம் தூக்கிக்கே கல்யாணத்தைப் பண்ணி வெச்சுடலாம்னு சொல்ல வரேளா... எப்படி வசதி?"

"ரேவதி நான் கேக்கறத புரிஞ்சிண்டு பதில் சொல்லுடி..."

"எனக்கொண்ணும் புரியாம இல்லை... நான் கூடத்தான் நம்ம ஜாதி இரிக்கெட் ப்ளேயர் ஒருத்தரை மனசுக்குள்ளே ஆசைப் பட்டேன். ஆனா உங்க பிள்ளையை கல்யாணம் பண்ணிண்டு மாறிப் போய்டலையா? வயசுக் காலத்துல ஆசைப்படறது சகஜம்தானே? உடனே நாங்கள்ளாம் குனிஞ்ச தலையை நிமிராம வாழ்ந்தோம்னுல்லாம் கதை பேசக் கூடாது. அந்தக் காலத்துல பார்த்தோம் சினிமா டிராமா ஏது...? டி.வி. ஏது? வாரப் பத்திரிகை இத்தன மாசப் பத்திரிகை ஏது? அவற்றைத் திறந்தா அர்ஜுனன் கணக்கா ஆண்கள் கண்ணுல படும்போது ஆசைப்படாம எப்படி இருக்க முடியும்?

இன்னிக்கெல்லாம் இதே தெருவுல எத்தனை குட்டிகள் சிம்பு, கார்த்திக்குன்னு ஆசைப்பட்றா தெரியுமா? நேத்துகூட நீயா நானான்னோ நானா நீயான்னோ ஒரு புரொக்ராம்... இந்த பக்கமா ஒரு இருவது காலேஜ் கேர்ள்ஸ்... எதிர்ல ஒரு சினிமா ஸ்டார். அதுல ஒருத்தி 'சார் ஐ லவ் யூ சார்... நாம கல்யாணம் பண்ணிக்கலாமா'ன்னு கேக்கறா? கோடிக்கணக்கான பேர் பாக்கற ஒரு நிகழ்ச்சியிலயே இப்படி நடக்கறது... இதான் காலம். இது தெரியாம என் பொண்ணா இப்படி? இந்தாத்துப் பொண்ணா இப்படின்னு நெஞ்சுல அடிச்சுண்டா நெஞ்சுக்குத்தான் கேடு."

"சரிடி இப்ப நான் என்ன பண்ணணும்?"

"அப்படி வாங்கோ வழிக்கு... இன்னும் 5 நிமிஷத்துல உங்களுக்கு ஹார்ட் அட்டாக் வந்தாகணும். மைதிலி கழுத்துல தாலி ஏறும்வரை ஆஸ்பத்திரில கட்டில்லதான் கிடக்கப் போறேள். அவா கல்யாணத்த பண்ணிண்டு உங்க கிட்ட ஆசீர்வாதம் வாங்க ஆஸ்பத்திரிக்கு வருவா. அப்ப ஆசீர்வாதம் பண்ணும்போது சந்தோஷத்துல உங்க அட்டாக்கெல்லாம் கொஞ்சம் கொஞ்சமா சரியா போகப்போறது... சரிதானே?"

"நடிக்கச் சொல்றியா?"

"உங்க பொண்ணை ஒரு அம்மாவா வாழ வைக்கச் சொல்றேன். இதைப் போய் நடிக்கன்னு எடுத்துண்டா எப்படி?"

''அப்ப என் பொண்ணு கல்யாணத்துல நான் கலந்துக்க முடியாதா மேடைல யார் தாரை வார்த்துத் தருவார்?''

''எதுக்கு இருக்கோம் நானும் உங்க பிள்ளையும்?''

''ஐய்யோ... நாங்க உசுரோட கல்லுக்குண்டு மாதிரி இருக்கும்போதா இப்படி?''

''இல்லைன்னா உங்க ஹார்ட்ல நிஜமாலுமே குண்டு வெடிச்சிடுமே... அதுக்கு இது பரவால்லியே...''

''அதுவும் சரிதான்...''

''இதுதான் சரி... நான் சொன்னது ஞாபகம் இருக்கட்டும். நடுவுல சொதப்பி வெச்சு காரியத்தை கெடுத்துடக் கூடாது.''

''என்னமோடிம்மா நீ சொல்றே நான் கேட்டுக்கறேன். எனக்கு என் பொண்ணு நன்னா இருந்தா போதும்...''

''சொன்னா ஆச்சா... இப்ப நெஞ்ச கைல பிடிச்சிண்டு விழ ஆரம்பிங்கோ. மத்த எல்லாத்தையும் நான் பாத்துக்கறேன்.''

''ஆமா... பொய்யான ஹார்ட் அட்டாக்குங்கறத டாக்டர்கள் கண்டு பிடிச்சிட மாட்டாளா?''

''போதும் அத்தை. இப்படி குடாக்கா நீங்க இருக்கறதாலதான் எல்லா கண்றாவியும் இந்த ஆத்துல நடக்கறது. நானும் உங்க பிள்ளையும் வரும்போதே டாக்டர் பத்மா சீனிவாசன் கிட்ட பேசி செட் பண்ணிட்டுத்தான் வந்துருக்கோம்.''

''ஐய்யய்யோ... அப்ப அவளுக்கு மைதிலியோட காதல் விஷயம் தெரிஞ்சு போச்சா?''

''மண்ணாங்கட்டி... அதை எல்லாமா நான் சொல்வேன்? இந்த கண்றாவிப் பிடிச்ச விஷயம் இந்த ஆத்துல எங்க ரெண்டு பேருக்கு மட்டும்தான் தெரியும். இப்ப நீங்க மூணாவது... டாக்டர் கிட்ட மைதிலிக்கு இப்ப கல்யாணத்துல இஷ்டம் இல்ல. அவ ஒரு மாதிரி விரக்தில இருக்கா. அதுக்காகத்தான் இந்த நாடகம்னு சொல்லியிருக்கோம்.''

''சந்தோஷம்டி... ரொம்ப சந்தோஷம்... ஏதோ இந்த மட்டுல நீ இவ்வளவு பொறுப்பா நடந்துக்கறியே...?''

''அப்பா... இப்பவாவது உங்க வாய்ல வந்ததே...''

- ரேவதி பதிலுக்கு தன் நெஞ்சில் அடித்துக் கொண்டாள். அப்போது கதவு தட்டப்படும் சப்தம்!

''உங்க பிள்ளை தான். இருங்கோ வரேன்''

- ரேவதி போய் கதவைத் திறந்தாள். சீமாவே தான்! அவன் உள்ளே வரவும் திரும்பவும் கதவு தாழிடப்பட்டது.

''சீமாரா... என்னடாது கண்றாவி-உன் தங்கை இப்படிக் கூட வாடா நடந்துப்பா...?'' என்று ஜானகி அவள் மார்பிலும் குத்திக் கொண்டு அழுதாள்.

''அம்மா முதல்ல இப்படி சத்தமா அழறத நிறுத்து... ரேவதி சொன்னத எல்லாம் கேட்டுண்டதானே?''

''சொன்னாடா... விஸ்தாரமாவே சொன்னா...''

''இப்ப அது ஒரு வழிதான் நம்ம முன்னால இருக்கு...''

''நான் நீங்க நெஜமாலுமே செத்துப்போன்னாலும் செத்துப் போறேண்டா... எனக்கு அவ நன்னா இருந்தா போறும்டா.''

''அது போறும் நேக்கு... நீ மட்டும் பக்காவா ஆக்ட் பண்ணிட் டேன்னா எல்லாமே ஒண்ணத் தொட்டு ஒண்ணு நன்னா நடந்துடும்... என்ன?''

''சரிடா... நான் இப்பவே மயக்கம் போட்டு விழட்டுமா?''

''விழறது மட்டுமல்ல... அப்பா வந்து நிக்கும்போது ''மைதிலி கல்யாணம்... மைதிலி கல்யாணம்''னுதான் முணுமுணுக்கணும். வேற வார்த்தையே பேசக் கூடாது...''

''அதை எல்லாம் நான் பாத்துக்கறேண்டா... நீங்க அவளுக்கு நல்லபடியா கல்யாணத்த பண்ணி வெச்சுடுங்கோடா... பாவம்டா அவ...''

- அவ்வளவு தூரம் மைதிலி பற்றி இழிவாக சொன்ன பிறகும் ஜானகியின் தாய்மை 'பாவம்டா அவ' என்றே நெகிழவும் ரேவதிக்கு எரிச்சலே வந்தது.

இருந்தும் அடக்கிக் கொண்டாள். கைச்சொடக்கு போட்டு ரெடி ஸ்டார்ட்...' என்று கவுண்ட்டவுன் சொல்லவும் ஆரம்பித்தாள்.

ஜானகியும் அவர்கள் நாடகத்தில் தன் பங்கைச் செலுத்தத் தயாரானாள். நெஞ்சைக் கையில் பிடித்துக் கொண்டு மயங்கியும் விழுந்தாள்.

ஒரு அசுர நாடகம் தொடங்கிவிட்டது!

இரவு மணி ஒன்பது!

கோவிந்தனின் சைக்கிள் கடை... ரங்கன் வந்து நின்றபோது அவன் நெற்றியில் செந்தூரம் இருந்தது. கோவிந்தன் முகத்தில் ஆச்சரியப்பிரகாசம்...

''ஏ ரங்கா என்ன இது...?'' - என்று உற்சாகமானான்.

''என்ன இதுன்னா?''

''உன் நெத்தில அனுமார் செந்தூரம் எங்க இருந்துடா வந்தது. எப்ப இருந்து நீ சாமி பக்கம் வந்தே?''

கோவிந்தன் கேள்விக்கு என்ன பதிலைச் சொல்ல? எதுவும் கூறாமல் ஸ்டாண்டு போட்டு நிறுத்தப்பட்டிருந்த அவன் கடை சைக்கிளில் ஒன்றை வேகமாக சுழற்றத் தொடங்கினான்.

''என்னப்பா பதிலக் காணோம். உன் ஜோடி உன்னை பக்தனாவும் மாத்திட்டாளா?''

''அதெல்லாம் இல்லப்பா...''

''பின்ன... எப்படி நடந்துச்சு இந்த அதிசயம்?''

''அதிசயம்தான். என்ன சுத்தி எல்லாமே அதிசயமாத்தானே நடக்குது...?''

''என்ன நீ... நான் ஒரு அதிசயத்த சொன்னா நீ ஏகப்பட்ட அதிசயம்னு எனக்கே ஷாக் கொடுக்கறே?''

''மைதிலி என்னை காதலிக்கறது உனக்கு அதிசயம் இல்லையா? நான் இனி இந்த காவிரில பொணம் தூக்கப்போறதில்லயே அது உனக்கு அதிசயமில்லையா...? நீ ஆசைப்பட்ட மாதிரி நான் உன் கடைல வேலை பாத்து ஜி.டி. நாயுடு அம்பானி மாதிரி ஒரு பெரிய ஆளா ஆகப்போறேனே அது உனக்கு அதிசயம் இல்லையா...?''

''எப்படி எப்படி... அம்பானி மாதிரியா... அடேங்கப்பா... காதலிச்சா இப்படி எல்லாம் கூடவா ரங்கா தன்னம்பிக்கை வரும்?''

''காதலிச்சா வருமான்னு எனக்குத் தெரியாது. மைதிலியை காதலிச்சா அந்த வைகுண்டம் கூட எனக்காக இறங்கி வரும். அது மட்டும் எனக்கு நல்லா தெரியும்.''

''என்னது வைகுண்டமா? டேய் ஆகாசத்துல மேகம்தான் இருக்கும். கைலாசம் வைகுண்டம்லாம் கப்சான்னு சொன்னவன் நீ... ஞாபகம் இருக்கா?''

''என்னென்னமோ சொல்லியிருக்கேன் நான்... அதை எல்லாம் விடு... அந்த ரங்கன் வேற... இப்ப நான் புது ரங்கன்!''

''என்ன ரங்கா... இன்னிக்கு அந்தப் பொண்ணு உன்னை ஒவராவே கவனிச்சிடுச்சா... விட்டா சினிமா ஹீரோ கணக்கா பாட்டு கூட பாடுவே போல இருக்கே...?''

''சினிமாங்கறது என்ன கோவிந்தா... வாழ்க்கைய பாத்து தானே அவங்களே படம் எடுக்கறாங்க. சினிமாவை மிகைன்னு சொல்றதெல்லாம் பொய் கோவிந்தா. என் வாழ்க்கையைவிட சினிமா ஒண்ணும் மிகை இல்லன்னே தோணுது...''

''யப்பா... என்ன நீ இன்னிக்கு இவ்வளவு தெளிவாப் பேசறே? எப்பவும் ஒரு விரக்தி, ஒரு இறுக்கம்னு இருக்கற என் ரங்கனா இப்படி எல்லாம் பேசறது?''

''ஆமாம் கோவிந்தா... உன் ரங்கன் இப்ப ஒரு புது ரங்கன். உன்கிட்ட நான் இப்ப ஒரு ரகசியத்தையும் போட்டு உடைக்கப் போறேன்...''

''பார்றா... அது என்ன ரகசியம்... அதுவும் உன்னைப் பத்தி எனக்குத் தெரியாதது...''

''இருக்கு ரங்கா... அதுக்கு முந்தி உன்கிட்ட நான் இன்னொரு விஷயத்தையும் சொல்லிக்கறேன்.''

''என்னப்பா அது... முதல்ல நீ சௌகர்யமா உக்காந்து பேசு!''

''நான் இப்ப சௌகர்யமாதான் இருக்கேன். இனிமே என் வரைல எல்லாமே சௌகர்யம்தான்...''

''ஐய்யோ முதல்ல நீ விஷயத்துக்கு வா... இதெல்லாம் அப்புறம்...''

"சொல்றேன் கோவிந்தா. இவ்வளவு நாளா நான் அம்மா அப்பா இல்லாதவன்னு தானே எல்லாரும் நினைச்சுக்கிட்டிருக்காங்க..."

"ஆமாம்... அதுக்கென்ன இப்போ?"

"இல்ல கோவிந்தா... என் வரைல இரண்டு பேரும் உயிரோடதான் இருக்காங்க..."

"ரங்கன் சொன்னதை கேட்டு கோவிந்தனிடம் நிஜமாலுமே ஒரு ஸ்தம்பிப்பு. அதே சமயம் அவனை எப்படியாவது காவேரிக்கு நடுவிலுள்ள சவுக்குத் தோப்புக்குத் தூக்கிச் செல்லும் ஆத்திரத்தோடும் அவசரத்தோடும் ஒருவன், மோட்டார் பைக் ஒன்றில் தெருவின் துவக்கத்தில் நுழைந்திருந்தான்!

52

'உளழிற் பெருவலி யாதுள-எனும்
ஊழ் வினையால் ஒரு மாதுவும்
பாழ்வினையால் ஒரு சாதுவும்
ஆழ்கடல் ஆழத்தில் சிக்கினாற்போல
வீழ்வதுவும் ஒரு வாழ்வேயென்றால், ஆழி
சூழ் வையகம் தனில் அருளிற்கு பொருளேது?'

அந்த மோட்டார் பைக்கும் கோவிந்தனின் கடையை குறிவைத்து விரைந்தபடி இருக்க, கடையில் இருக்கும் கோவிந்தனிடமோ ஒரே குதூகலம்.

"ரங்கா... அப்பா அம்மா ரெண்டு பேரும் உசுரோடையா இருக்காங்க. அது உனக்கு தெரிஞ்சும் போச்சா... யாருப்பா அது?" - என்று முகத்தில் பிரகாசத்தைக் காட்டினான். "சொல்றேன் கோவிந்தா... அதுக்கு முன்னால உன்கிட்ட நான் இன்னொரு உண்மையையும் சொல்லியாகணும்."

"நீ முதல்ல உன் தாய் தகப்பன் யாருன்னு சொல்லுப்பா. இந்த ஊர்ல இருந்துகிட்டே உன்னை இத்தனை நாள் தவிக்கவிட்ட

அந்த புண்ணியவானையும் புண்ணியவதியையும் நான் முதல்ல தெரிஞ்சுக்கறேன். ஆமா இதை எல்லாம் யாருப்பா உனக்குச் சொன்னது?"

"என்னைக் கொஞ்சம் நிதானமா பேசவிடு கோவிந்தா. நீ இப்படி அடுக்கடுக்கா கேட்டா எனக்கு எதை முதல்ல சொல்றது, எதை விடுறதுன்னு குழப்பமாயிடும்."

"சரி உன் நோக்கம் போலவே சொல்லு... ஒண்ணே ஒண்ணு மட்டும் கேட்டுக்கறேன். இந்த ஊர்ல இருந்துகிட்டே உன்னைத் தவிக்க விட்ட அவங்க மேல உனக்குக் கோபம் வரலையா?"

"வரலையாவா? இந்த காவிரிய என்னிக்கு நான் மதிச்சிருக்கேன்... செத்த பொணங்கள தூக்கறதுக்காக மட்டும் தானே நான் இந்த ஆத்துல இறங்கியிருப்பேன். மத்த நேரங்கள்ல இந்த ஆத்துத் தண்ணியால ஒருவாய் கொப்பளிச்சிருப்பேனா நான்...?"

"நான் ஒண்ணு கேட்டா நீ ஒண்ணு சொல்றியே ரங்கா..."

"நான் சரியா தான் பேசிக்கிட்டிருக்கேன்... காவிரிதான் என் தாய்... அவமேல எனக்கிருந்த கோபத்தைத் தான் நான் சொன்னேன்..."

"உனக்கு என்ன ஆச்சு... மரை கிரை கழண்டு போச்சா?"

"என்ன... ஓடற காவிரிய என் அம்மான்னா உடனே எனக்கு மரை கழண்டு போச்சாவா? ஆனா அதுதான் சத்தியம். இதை சிங்கராச்சாரியர் சாமி எனக்குப் புரிய வெச்சப்போதான் எனக்கே புரிஞ்சுது."

"ஓ... இது சாமியோட வேலையா... அவர் நல்லா தெளிவா கதை சொல்றவர் ஆச்சே... உன்கிட்ட ஏன் இப்படி தத்துவமா பேசியிருக்கார்...?"

"தத்துவமெல்லாம் இல்ல... அதான் நிஜம்...! அதான் சத்யம். இதுக்கெல்லாம் கூட மைதிலி தான் காரணம். எப்ப அவளை நான் தொட்டுத் தூக்கினேனோ அப்பவே என் வாழ்க்கை விடிய ஆரம்பிச்சிடுச்சு கோவிந்தா..."

"மைதிலிப் பொண்ணு இந்தத் தெருவுல இருக்கற வம்பு பிடிச்ச மாமிங்களுக்குத் தான் ராசியில்லாதவ... மத்தபடி அவ மகாலட்சு

மிங்கறது எனக்கும் தெரியும். நீ விஷயத்துக்கு வா! அம்மா காவிரின்னா அப்பா யாரு? கோயில்ல இருக்கற ரங்கநாத சாமியா?''

-கோவிந்தன் சற்று இடக்காகத்தான் கேட்டான். ஆனால் அதற்கு ரங்கனிடம் எந்தக் கோபமான வெளிப்பாடும் இல்லை. மாறாக இதமான குரலில் ''ரங்கநாதர் நம்ம எல்லோருக்குமே அப்பா மாதிரிதான் கோவிந்தா... ஆனா என்னோட அப்பா - அதாவது இந்த பூமில இந்த உடம்பை நான் பெற காரணமான என்னோட அப்பா யார் தெரியுமா?''

''சொன்னாத் தானே தெரியும்... சின்னப் பசங்க போட்டு மெல்ற பூமர் சுயிங்கம் மாதிரி இழுக்கறியே ரங்கா...''

- கோவிந்தன் ஆதங்கப்பட்டுக் கொண்டிருந்த அந்த நொடி ரங்கனைத் தேடி வந்த மோட்டர்பைக்காரன் கடை முகப்பில் உரசியபடி நின்றான்.

இருவர் கவனமும் அவன் பக்கம் திரும்பியது.

மோட்டார் பைக்காரன் ஹெல்மெட்டையும் கழற்றினான். அந்த வேகத்தில் ''ரங்கன்கறது இங்க யாரு?'' என்று தெரியாதவன் போலவே கேட்டான்.

''நான்தான் ரங்கன்... என்ன விஷயம்?''

''திருவானைக்காவல் டர்னிங்ல சிங்கராச்சாரியார்ங்கறவருக்கு ஆக்சிடென்ட் ஆயிடிச்சு. ஆஸ்பத்திரிக்கு தூக்கிட்டுப் போகும் போது அவர்தான் நான் ரங்கனைப் பார்க்கணும்னு சொன்னார்... கொஞ்சம் வர்ரீங்களா?''

அடுத்த நொடியே தலையில் இடி இறங்கினது போல் இருந்தது ரங்கனுக்கு. அவன் மோட்டார் பைக்கில் தாவி ஏறி அமர்ந்து கொண்டான். வந்த வேகத்தில் மோட்டார் பைக்கும் திரும்பி ஓடத் தொடங்கியது.

கோவிந்தனுக்குத் தான் பலத்த ஏமாற்றமாகி விட்டது. ''ச்சே... ஒரு பெரிய ரகசியத்தைத் தெரிஞ்சுக்க முடியாம போயிடுச்சே... இந்த சாமி வேற இப்படி ஆக்சிடென்ட்டுல சிக்கிட்டாரே...'' - என்று கையை பிசைந்து கொண்டான்.

திருவானைக்காவலின் வளைவு!

வலது பக்கம் திரும்பினால் திருச்சி

இடது பக்கம் திரும்பினால் டோல்கேட் அந்த மோட்டார் பைக் இடது பக்கம் திரும்பியது.

''எதுக்கு இந்தப் பக்கம் போறே?''

''ஆஸ்பத்திரி இந்தப் பக்கம் தான்...''

''இந்த பக்கத்துல எந்த ஆஸ்பத்திரி இருக்கு?''

''மூடிக்கிட்டு வா... தெரியும் தானா...'' அவன் பேச்சு, பேச்சு மொழி மாறவுமே ரங்கனுக்குப் புரிந்து விட்டது.

''ஏய் யார் நீ... வண்டியை நிறுத்து...'' - ரங்கனும் கத்தத் தொடங்கினான். அந்த சமயமாக பார்த்து ஒரு மாருதி ஆம்னிவேனும், ஒரு சுமோவும் அந்த மோட்டார் பைக்கின் இருபுறமும் ஏதோ காவலுக்கு வருவது போல வர ஆரம்பித்தன.

நூல் பிசகாத திட்டமிடல் - ரங்கனும் வலைக்குள் விழுந்து விட்டான்!

மணி இரவு பத்து!

காவிரிக் கரையோரமாக நாய்மேடு என்னும் இடத்தில் சுடலைப் பாண்டியின் சுமோ வந்து நின்றது. தனியாளாக அவர் மட்டுமே சுமோவில் இருந்து இறங்கினார். ஆற்றோரமாக ஒரு நூற்றாண்டைக் கடந்து விட்ட புளிய மரத்தின் ஓரமாக தனது சுமோவை திரும்பவும் ஏற்றி ஓரம் கட்டினார். பின் கதவைத் திறந்து உள்ளிருந்து கடப்பாரை, மண்வெட்டி, எமர்ஜென்சி லைட் போன்ற ஆயுதங்களையும் ஒவ்வொன்றாக எடுத்து வைத்தவர் ஒரு ஆளை உள்ளே வைத்து அடக்க முடிந்த சைஸுக்கு ஐந்து சூட்கேஸ்களையும் ஒவ்வொன்றாக வெளியில் எடுத்தார்.

அதற்குள்ளாகவே நாக்கு தள்ளி மூச்சு வாங்கியது.

ஒரு சூட்கேசுக்குள் இருபது கோடி - இன்னொன்றில் முப்பது என்று மொத்தமாய் 116 கோடி!

ஆற்று மணல் வெளி அங்கிருந்தே தொடங்கி விட்டது. அவரது கட்டளைக்கு ஏற்ப கரையோரமாக பரிசல் ஒன்று நீண்ட துவட்டல் கம்போடு கவிழ்த்துப் போடப்பட்டிருந்தது.

அதை நோக்கி நடந்த போது காலை நரநரத்த மணலை அந்த வேளையிலும் குனிந்து ஒரு கவனம் அள்ளி தங்கத்தை கனம் பார்க்கிற மாதிரி பார்த்தார்.

'இந்தப் பக்கத்தால இவ்வளவு மண் இருக்குதா? கலெக்டரைப் பிடிச்சு எப்படியாவது குவாரி போட்டுடணும். ஆறுமாசத்துக்கு நாள் தவறாம அள்ளலாம். பத்து பதினைஞ்சு கோடி தேறும்' - என்று அப்போதே மனக்கணக்கு ஒன்றும் உள்ளுக்குள் ஓடியது.

ஆற்றில் புதிதாக நீர் வரத்து!

மாலை நேரம் இருந்ததை விடவே தண்ணீர் ஒரு ஐம்பது மீட்டருக்குப் பக்கவாட்டில் ஏறியிருந்தது. பரிசலை உருட்டிச் சென்று தண்ணீர்ப் பரப்பில் மிதக்க விட்டு துவட்டல் கம்பை மண்ணுக்குள் நட்டு அதில் பரிசலின் விளிம்பு கயிற்றை தற்காலிகமாக இழுத்துக் கட்டிவிட்டு சுமோவுக்கு வெளியில் ஓரமாக வைக்கப்பட்டிருந்த சூட்கேஸ்களை ஒவ்வொன்றாக சுமந்து வந்து பரிசலில் வைப்பதற்குள் முதுகெலும்பில் வண்டு குடைந்தது போல ஒரு வலி!

'ஆத்தாடி இந்த வலி வலிக்குதே... எப்படித்தான் இந்த போர்ட்டருங்க இதை எல்லாம் நாள் தவறாம தூக்கறாங்களோ?' - என்று ஒரு ஒப்பீட்டுப் புலம்பலையும் முடித்துக் கொண்டார்.

பரிசலுக்குள் ஐந்து சூட்கேஸ்களோடு கடப்பாரை மண்வெட்டியையும் தூக்கிப் போட்டுக் கொண்டு ஏறிஅமர்ந்து பரிசலைக் கிளப்ப முனையவும் செல்போனில் லைட் எரிய 'அட்றாட்றா நாக்கமுக்கா' என்கிற காலர் பாடல் ஒலிக்கவும் சரியா இருந்தது.

பரிசலில் இருந்தபடியே 'ஹலோ' என்றார்!

'சுடலை நான் சகலை பேசறேன்...'

'சொல்லுங்க சகலை...'

'நான் சொன்ன மாதிரி செஞ்சுட்ட தானே?''

''இன்னும் ஒரு மணி நேரத்துல செஞ்சிடுவேன்... நாய் மேட்டுல பரிசல்ல தான் இப்ப இருக்கேன்...''

''வேகமாச் செய்... யாரும் கூட இல்லையே''

''ஒத்த ஆளா பாடாபட்டுக்கிட்டிருக்கேன் சகலை. ஏண்டா இம்புட்டு பணத்தை சம்பாரிச்சோம்னு கூட இருக்குது...''

''புலம்பாம ஜோலியமுடி... அனேகமா நாளைக்கு ஐ.டி. ஆளுங்க உன் வீட்டுக்கு ரைடுக்கு வரலாம். என் வீட்டுக்கு நான் பயந்த மாதிரியே வந்து கிட்டிருக்கிறதா தகவல்.''

''ஐயோடா... அப்ப நான் இந்த பணத்தை நாளைக்கு புதைக்கலாம்னு தள்ளி வெச்சிருந்தாலும் கதை முடிஞ்சிருக்கும்னு சொல்லுங்க...''

''நிச்சயமா... அஞ்சுவருசமா சம்பாரிச்ச அவ்வளவும் போயிருக்கும். சரிசரி கவனமா காரியத்தை முடி உசிர் போனாலும் பணத்த பத்தி மட்டும் யார்கிட்டயும் மூச்சு விட்றாதே. அதே மாதிரி மிச்சம் வைக்காம எல்லாத்தையும் இந்த ராத்திரியிலேயே முடிச்சிடு.''

''இரண்டு விசயத்த புதைச்சா பிரச்சினை தீர்ந்துச்சு. ஒண்ணு இந்த பணம், இன்னொன்னு ரங்கன் பொணம்!''

''என்னவோ பண்ணிக்க... துளி சந்தேகம் யாருக்கும் வந்துடக் கூடாது. ஒரு புலனாய்வுப் பத்திரிகைல நம்மகிட்ட நூத்திப்பத்து கோடி ரூபாய் இருக்குன்னு பக்கத்துல இருந்து பார்த்த மாதிரி எழுதியிருக்கான். நீ கொன்னு ஆத்துல தூக்கிப் போட்ட பய தான் பத்திரிகைக்கு தகவல் கொடுத்துருக்கணும். சிக்குனா பணம் போறது மட்டுமில்ல கொல கேஸ்ல தூக்கு மேடையும் ஏறும்படி ஆயிடும்.

ஆட்சிய காப்பாத்திக்க சி.எம். யாரைவேணா பலி கொடுப் பாரு. சூதானமா தப்பு பண்ணத் தெரியாதவங்க யோக்யமாவே இருந்துடுங்கங்கறதுதான் சி.எம். பாலிசி. ஆகையால மாட்டி கிட்டா தப்பிக்கல்லாம் முடியாது. ஞாபகம் இருக்கட்டும். நான் போனை வெச்சுட்றேன்...''

- அந்தப் பக்கமாய் சகலை எம்.எல்.ஏ.வின் எச்சரிக்கையான குரல் செல்போனுக்குள் முடிந்து போகவும் சுடலையாண்டியின் வயிற்றுக்குள் நண்டுகள் நெளிய ஆரம்பித்து விட்டன.

பரிசலையும் மெல்ல சவுக்குத் தோப்பை நோக்கி செலுத்தத் தொடங்கினார். எமர்ஜென்சி விளக்கின் ஒரு பக்கத்தில் நீண்ட தூரம் பாயும் படியான ஒளி அமைப்பை கொண்ட பாகம் இருந்தது.

அது சவுக்குத் தோப்பு வெகு தூரத்தில் இருப்பதை காட்டியது. பரிசிலும் 'தனக்கு... தனக்கு... தனக்கு' என்று துவட்டல் மூங்கலின் நெம்புதலோடு மெல்ல நகர ஆரம்பித்தது. ஆனால் ஐந்து சூட்கேஸ்களின் பாரம் வெகுவாக இருந்து பரிசலை நகர்த்துவது பெரும்பாடாக இருந்தது.

அப்போது திரும்பவும் செல்போனில் 'நாக்கமுக்கா' பாடல். 'எழவெடுத்தது... யாரது?' - என்று எடுத்து திரையைப் பார்த்தார். அவரது ஆட்களில் ஒருவன்தான் பெயர் சுகுமார்.

''சொல்லு சுகு...''

''அண்ணே அந்த ரங்கனை கோழி அமுக்கற மாதிரி அமுக்கிட்டோம். சுமோவுல கை கால கட்டிப் போட்டு வெச்சுருக்கோம். நீங்க சவுக்குத் தோப்புக்குப் போய்ட்டீங்களா - இவனை அங்க தூக்கிட்டு வந்துடுவா?''

''சபாஷ். ஆனா இப்ப வராதே. நான் உனக்கு போன் பண்றேன். அப்ப கூட்டிகிட்டுவா...''

''ஏண்ணே மூச்சிளைக்குது... எக்சர்சைஸ் ஏதானா பண்ணி கிட்டு இருக்கீங்களா?''

''இந்த ராத்திரில அது ஒண்ணுதான் பாக்கி. நீ வெட்டித்தனமா கேள்வி கேக்காம என் போனுக்காக காத்திரு. கூப்பிட்றேன்'' என்று கட் செய்த போதுதான் தெரிந்தது பரிசல் ஆற்றுப் போக்கில் வெகுதூரம் போய் விட்டது!

'ஆத்தாடி... என்ன இது இந்த ஓட்டம் ஓடுது தண்ணி வேற வீச்சலா வருதே... மேட்டூர்ல தண்ணிய திறந்து விட்டுட்டாங்களா என்ன - இப்ப என்ன பண்ணுவேன்?'' - தடுமாறியபடி செல்போனை பாக்கெட்டில் போடப்போனபோது நழுவி அது ஆற்றுக்குள் விழுந்தது.

'அடக்கெரகமே... செல்போன் ஆத்துக்குள்ளே உழுந்திடிச்சே. இந்த பரிசல் பாட்டும் போய்கிட்டே இருக்கே... இப்ப என்னத்த பண்ண?' - என்று முணுமுணுத்து முடிக்கு முன் பரிசல் லேசாக சுழல ஆரம்பித்தது! அதில் இருந்த சூட்கேஸ்கள் ஒன்றுடன் ஒன்று ஒட்டிக் கொள்ளவும் பாரம் அந்தப் பக்கத்தில் விழுந்து சுடலையாண்டி அமர்ந்திருந்த பகுதி தூக்கிக் கொள்ள, அவரும்

சூட்கேஸ்கள் இருந்த பகுதிக்கு வந்து விழுந்தார். விழுந்த வேகத்தில் அந்தப் பாகமே சற்றுத்தழையவும் மளுக்கென்று ஒரு கொட்டாரம் அளவு ஓடு நீர் பாய்ச்சலாக உள்ளே புகுந்தது. தண்ணீர் உள்ளே புகவும் சுடலையாண்டியை பயம் பற்றிக் கொண்டது. சூட்கேஸ்களை அப்படியே கட்டிக் கொள்ள முயன்றார். ஈரத்தில் கை வழுக்கியதில் பிரண்டு விழுந்தார். அந்த அதிர்வில் பரிசலின் அந்த பாகம் திரும்பத் தழையவும் இன்னொரு கொட்டார நீர் உள்ளே புகுந்தது. துவட்டல் மூங்கில் இந்த களேபரத்தில் ஆற்றோடு போய்விட, பரிசலிலும் தண்ணீர் உள்ளிறங்கவும் மொத்த பாரத்தோடு மூழ்க ஆரம்பித்தது.

''ஐயோடா... தப்பாயிருச்சே... கோட்டக் கருப்பா இந்த கோடிங்கள காப்பாத்திக் கொடுப்பா. இதுல சில கோடிங்கள வெச்சு உனக்கு கோயிலே கட்றேன் கருப்பச்சாமி...ஈ...'' - என்று ஆற்றில் அவர் புலம்புவது காற்றோடு கலந்துவிட்ட நிலையில் பரிசல் முற்றாக மூழ்கி அந்த சூட்கேஸ்களும் ஆற்றுக்குள் மூழ்க ஆரம்பித்தன!

சுடலையாண்டியும் மூழ்கியவராக உயிரைக் காப்பாற்றிக் கொள்ள எந்தப் பக்கம் கரை இருக்கிறது என்பது கூட தெரியாதவராக நீந்த ஆரம்பித்தார்!

53

'எல்லாமே ஒரு கணக்கில்
இருப்பதுவோ இந்த உலகில்?
பூமி சுழலும் வேகம் தொட்டு
ஈர்ப்பெனும் விசைப்பாடுவரை
சகலத்திலும் ஒரு கணக்கு
அத்தனைக்குள்ளும் ஒரு நியாயம்
இருப்பதுதான் பெரும் சிறப்பு!'

அந்த நள்ளிரவில் காவிரியாற்றின் நடுவில் சுடலையாண்டி திண்டாடிப்போய் தண்ணீரில் மூழ்கி திக்கு திசை தெரியாதபடி

நீந்தத் தொடங்கினார். பரிசலில் கிடந்த பணப்பெட்டிகள் அவ்வளவும் அப்படியே தண்ணீருக்குள் மூழ்கிப் போயின!

பரிசலும் எங்கே போயிற்று என்றே தெரியவில்லை. சுடலை யாண்டிக்கு அப்போதுதான் தர்ம நியாயங்களைப் பற்றி யெல்லாமும் நினைக்கத் தோன்றியது. மண்ணில் சம்பாதித்தது இப்படியா மண்ணோடு போகும்? இந்த காவிரியை கடவுளாக கருதி கும்பிடு போட்டு குளிப்பவர்களிடம் உள்ள நம்பிக்கைகள் எல்லாம் உண்மையானதுதானா?

தன்னாலாவது உயிர் பிழைக்க முடியுமா? இல்லை தன்னையும் இந்த காவிரி விழுங்கி விடுவாளா? நினைக்கும்போதே கைகோர்த்து போய் மூச்சு முட்டியது. ஜலப்பிரவாகத்தில் அடித்துச் செல்லப் படுவது மட்டும் தெரிகிறது. ஆனால், கன்னங்கரிய இருளுக்குள் ஆற்றின் எந்தப் பாகத்தில் இருக்கிறோம் என்பதில் ஒரு தெளி வில்லை.

மூச்சு முட்டலில் தண்ணீரானது வாய் வழியாக கவளம் கவளமாக வயிற்றுக்குள் புகத் தொடங்கியது. உயிர்க்காற்று என்பது எத்தனை பெரியது என்பதும் அந்த நொடிகளில் புரிந்தது.

கோடி கோடியாக சேர்த்து வைத்து கோலாகலமாக வாழப் போகிறோம் என்று நம்பிக் கொண்டிருந்ததெல்லாம் எத்தனை பைத்தியக்காரத்தனம்?

யாரும் தள்ளிவிடாமல், யாரும் துரத்தி விழாமல் தனக்குத்தானே வந்து இப்படித் தடுமாறி விழுந்துவிட்டது எந்தக் கணக்கில் சேர்த்தி...?

விதிவேலை செய்யத் தொடங்கி விட்டால் எது வேண்டு மானால், எப்படி வேண்டுமானால் நிகழும் என்று கேள்விப்பட்ட தெல்லாமும் எத்தனை பெரிய சத்தியம்?

சுடலையாண்டி அந்த சத்தியத்தை உணர்ந்த நொடிகள்தான் கடைசி நொடி... நீந்தத் தெம்பில்லாதபடி தோள்பட்டையே செயலற்றுப் போக, மேலும் மேலும் வாய்வழியாக தண்ணீர் புகுந்து நீரின் மேலே மிதக்க முடியாதபடி மூழ்கப் போனவரை பெரும் மயக்கம் வந்து ஆட்கொள்ளத் தொடங்கியது!

இரவு மணி ஒன்று!

காவிரிக்கரையோரமாக நாய்மேட்டுப்பகுதி என்றழைக்கப் படும் இடத்துக்கே வந்து நின்றது அந்த டாடா சுமோ! உள்ளே வாயில் பிளாஸ்திரியை போட்டும் கை, கால்களைக் கட்டிய நிலையிலும் ரங்கன்.

சுடலையாண்டியின் சகாக்கள் வண்டியை விட்டு இறங் கினார்கள். அவர்களில் ஒருவன் திரும்பத் திரும்ப செல்போனில் சுடலையாண்டியை தொடர்புகொள்ள முயன்று நாட் ரீச்சபிள் என்ற பதிலையே பெற்றபடி இருந்தான்.

''என்னடா... இன்னுமா லைன் கிடைக்கல?''

''என்னன்னே தெரியல, நாட் ரீச்சபிள்னே வருது...''

''ஒருவேளை சவுக்குத் தோப்புக்குள்ள டவர் கிடைக்கலையோ என்னவோ?''

''சரி வா போய் பார்ப்போம். அதோ அண்ணன் வந்த வண்டி மரத்தை ஒட்டி நிக்குது பார்...''

- இருவரும் சுடலையாண்டி ஓட்டி வந்திருந்த காரை நெருங்கினார்.

''அண்ணன் உறுதியா தோப்புலதான் இருக்கணும். ரங்கனையும் இறக்கி, கூட கூட்டிக்கிட்டு போயிடுவோம்...''

''பரிசல் இப்ப சவுக்குத் தோப்பு கரைல இல்ல இருக்கும்? இவனோட நாம எப்படி அங்க போக?''

- மெல்லிய இருட்டுக்குள் அவர்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டபடியே கரைப்பகுதிக்குப் போன போது, நீர் மட்டம் வெகுவாக ஏறியிருந்தது.

''என்னடா தண்ணி திகுடுதம்பா வந்து கிட்டிருக்கு... இன்னிக்கு பகல்ல நான் பார்த்தப்பகூட தண்ணி சாதாரணமா தானே இருந்துச்சு?''

''மேட்டூர்ல விவசாயத்துக்கு தண்ணிய திறந்து விட்டுருக்கலாம். இன்னிக்கெல்லாம் சேலம் பக்கமா சரியான மழை வேற... இப்பதான் எப்ப மழை பெய்யும், எப்ப நிக்கும்னும் சொல்ல முடியறதில்லையே...?''

"அப்ப இந்த புது வெள்ளத்துல அண்ணன் தனியாளா எப்படி போயிருப்பாரு...? இழுவை இல்லாதப்பவே பரிசலை செலுத்தறது கஷ்டம்..."

"சரி இப்ப என்ன பண்ணலாம். பரிசலும் இல்ல... நம்ம வண்டியிலையே போனுக்காக காத்திருப்போமா?"

"வேற வழி... இந்த வெள்ளத்துல சவுக்குத் தோப்புக்கு நீஞ்சிப் போறதும் ஆபத்து. விடு... அவரா போன் பண்ணட்டும்... அதுவரை நாம காத்திருக்கறதுதான் ஒரே வழி..."

"என்ன ஒரே வழி...? விடியறதுக்குள்ள ரங்கன் கணக்கைத் தீர்க்கணும். தெரியும்ல..."

"ஓ... அப்படி ஒரு விஷயம் இருக்குல்ல... ஆமா போட்டுத்தள்ற அளவு இவன் அப்படி என்ன பண்ணிட்டான்?"

"அண்ணனைப் பத்தின சீக்ரெட்டல்லாம் தெரிஞ்சிருக்குல்ல...?"

"நமக்குகூடத்தான் தெரியும்... அப்ப நம்மளையும் ஒரு நாள் அண்ணன் போட்டுத் தள்ளிடுவாரா?"

"அது நாம நடந்துக்கறத பொறுத்தது... ஆனா இந்த ரங்கன் நம்ம சாராயக்கார இடும்பனையே உள்ள தூக்கிப் போட்டவன். தெரியும்ல...?"

- பேசிக்கொண்டே திரும்பி வந்து தங்கள் காருக்குப் பின்னால் ஒரு மூட்டை போல கிடந்த ரங்கனையும் பார்த்தனர்.

அவன் அரை மயக்கத்தோடு கிடந்தான்.

அவனைப் பார்த்தவர்களிடம் ஒரு பெருமூச்சு.

"சரி முடிவா இப்ப என்ன பண்ணலாம்ங்கறே?"

"ஒண்ணும் பண்றதுக்கில்ல... எதுவா இருந்தாலும் அண்ணன் வரணும்."

"தனியா இவர் சவுக்குத்தோப்புல அப்படி என்ன பண்ணிக் கிட்டிருக்காரு?"

"யாருக்குத் தெரியும்...? அதுலயும் அண்ணன் மோட்டார் மாயாஜாலக் கதை மாதிரி. ஒண்ணு மட்டும் தெரியும். நாளைக்கு

அண்ணன் வீட்டை சி.பி.ஐ. போலீஸ்காரங்க ஐ.டி.காரங்க ரெய்டு பண்ணப் போறதா ஒரு பேச்சு இருக்கு. அதனால ஊட்ல இருக்கற பணம் நகைன்னு அம்புட்டையும் தூக்கிட்டு வந்து தோப்புல குழி தோண்டி புதைச்சுக்கிட்டிருக்காரோ என்னவோ?"

"அதான் செல்போன் போக மாட்டேங்குதா?"

"அப்படித்தான் இருக்கணும். வா அப்படி உக்காந்து புகையைப் போடுவோம். எப்படியும் கொஞ்ச நேரத்துல பரிசலோட அவரே வந்து நிப்பார் பாரு..." என்று சுமோவின் பானட் மேல் ஏறி அமர்ந்து கொண்டவர்களாக சிகரெட்டை எடுத்து பற்ற வைத்தனர். வெள்ளத்தோடு சுடலையாண்டி போய்விட்டதை யூகிக்கும் சக்தி மட்டும் அவர்களிடம் சுத்தமாக இல்லை!

அதிகாலை நான்கு மணி!

சக்கரவர்த்தி அய்யங்காரால் அதற்கு மேல் படுக்கையில் கிடக்க முடியவில்லை. எழுந்து அமர்ந்தார். அந்த வேளையில் ரேவதியின் அறையில் விளக்கு எரிந்தபடி இருந்தது. ரேவதி அவ்வளவு சீக்கிரமாகவா எழுந்துவிட்டாள்?

எழுந்து சென்று அறைக் கதவருகே நின்றுகொண்டு உள்ளே பார்த்தார். உள்ளே ரேவதியும், சீமாவும் துணிமணிகளை அடுக்கி பெட்டியில் வைத்தபடி இருந்தனர்.

"முகூர்த்தத்துக்கு நான் என்னோட முகூர்த்த புடவையையே கட்டிக்கறேன். உங்களுக்கும் கல்யாணத்துக்கும் வாங்கின பட்டு வேஷ்டியே இருக்கட்டும். இரண்டு பேரும் அதைக் கட்டிண்டே தாரை வாத்துக் கொடுத்துடுவோம். புதுசு வாங்க இப்ப நேரமும் இல்லை. அது நமக்கு இப்ப அவசியமும் இல்லை" என்று ரேவதி சொல்லிக்கொண்டிருக்க, சீமா நிமிர்ந்து சக்கரவர்த்தியை பார்த்துவிட்டான்.

"ரேவதி... அப்பா..." - என்றான். அவளும் பார்த்தாள். அவரும் உள்ளே வந்தார்.

"என்னப்பா தூக்கம் வர்லையா?"

"எப்படிடா வரும்? ஜானகி ஆஸ்பத்திரியில... மைதிலியும் அவளப் பார்த்துக்கறேன்னு அங்கேயே இருக்கா. இங்க நீங்களோ

நாளான்னிக்கு கல்யாணம்னு எக்ஸ்ப்ரஸ் ரயில் ஒரு ரயில்லே கேட்டை வேகமா கடந்து போற மாதிரி போயிண்டிருக்கேன்... எனக்கு என்னைச் சுத்தி என்ன நடக்கறதுன்னே தெரிய மாட்டேங்கறது...''

''அப்பா நீங்க மனசைப் போட்டு குழப்பிக்காதேள்... எல்லாம் நல்லபடியாதான் நடந்துண்டுருக்குப்பா... நீங்க வேணா பாருங்கோ... கல்யாணம் ஆனது தெரிஞ்ச மறு நிமிஷம் அம்மாவுக்கு ஒரு தெம்பு வந்துடும். எழுந்து உக்காந்துடுவா...''

''அது சரிடா... அதுக்காக ஒரு கல்யாணத்தை இப்படியா அசுரவேகத்துல நடத்தறது?''

''மைதிலி தலைல அப்படிதானேப்பா எழுதியிருக்கு?''

''நாமதாண்டா இங்க எழுதிண்டு இருக்கோம். ஆஸ்பத்திரிக்கு போனப்ப அவளைப் பாக்க சகிக்கல. 'அப்பா எனக்கு இப்ப கல்யாணம் வேண்டாப்பா... அதுலயும் நீயும், அம்மாவும் உயிரோட இருக்கும்போது அண்ணா மன்னி தாரை வார்த்துக் கொடுக்கறதெல்லாம் பெரிய தப்புப்பா'ன்னு கதறறாடா?''

''அவளுக்கு என்ன தெரியும்? ஆரம்பத்துல இருந்தே அவளுக்குக் கல்யாணத்துல இஷ்டம் இல்லை. அதுக்காக நாம அவளை அப்படியே காலம் பூரா கன்னிப் பொண்ணாவே இருந்துக்கோன்னு விட்டுடமுடியுமா?'' - ரேவதி மெல்லிய குரலில் இடையிட்டாள்.

''அது சரி... எதுக்காக இப்படி விடியகாலம் பறவே துணி மணிகள எடுத்து வெச்சுண்டுருக்கேள்...?''

''என்ன மாமா கேள்வி இது... இப்பவே தயாரானாதானே நாம சாயந்தரமா சென்னை புறப்பட சரியா இருக்கும்?''

''ஓ... இன்னிக்கே புறப்பட்டாகணுமா?''

''பின்ன என்ன மாமா? இன்னிக்கே மைதிலியை புதுப் பெண்ணாக்கிட, கை, காலுக்கெல்லாம் மருதாணி வெச்சுவிட்டு எண்ணெய் வெச்சு குளிப்பாட்டி எவ்வளவு பண்ண வேண்டி யிருக்கு?''

''ஓஹோ...? இதெல்லாம் வேற பாக்கி இருக்கா?''

- சக்கரவர்த்தி அய்யங்கார் குரலில் சுரத்தே இல்லை.

''ஆமா... இங்க ஜானகிகூட யார் இருப்பா?''

''அதைப் பத்தி கவலைப்பட வேண்டாம் மாமா... நம்ம அத்தங்கா பாட்டி நான் பாத்துக்கறேன்னுட்டா...''

-ரேவதி டாண்டானென்று பதில் சொன்னாள்.

''கல்யாணத்துக்கு நம்ம தெருவுல எல்லாரையும் அழைச் சாச்சா?''

''எல்லாரையும் கூப்பிடலப்பா... பொறுக்கி எடுத்த மாதிரி சிலரைத்தான் கூப்பிட்டுருக்கோம். ஆனா எல்லாருக்கும் வர்ற ஞாயிற்றுக்கிழமை மைதிலிக்குக் கல்யாணம்கறது தெரியும். மாமிக்கு எப்ப வேணா, எது வேணா ஆகலாம்கறதால எல்லா காரியத்தையும் வேகமா செய்யறோம். கல்யாணம்தான் வேகமா நடக்கப்போறது. ரிசப்ஷனை தடபுடலா சுதாரகுநாதன் கச்சேரியோட நடத்தப்போறதாகவும் சொல்லியாச்சு...''

''ஆமாம்ப்பா... எல்லாத்தையும் பாத்துப் பாத்து பண்ணிண்டு இருக்கோம். அதிகபட்சம் மூணு நாள்பா... மைதிலி கழுத்துல தாலி ஏறட்டும்... அப்புறம் பாருங்கோ அம்மா அந்த சந்தோஷத்துலயே எழுந்துடுவா. நம்ம கருங்குழி ஜோசியரும் அதையேதான் சொன்னார். 'மாமிக்கு பொண்ணு கல்யாணம்கற கவலைதான் நெஞ்சை அடைச்சுண்டு உக்காந்துண்டுருக்கு. கல்யாணமாயிட்டா அடைப்பு நீங்கிடும். மாமி எம்பது வயசுக்கு மேல உயிரோட இருந்தாகணும்'னு சொன்னார்ப்பா...''

சீமாவும், ரேவதியும் மாறி மாறி அவரை தேற்றியபடி இருந்தனர். இருந்தும் மனம் சமாதானம் ஆகாமல் ஹால் ஊஞ்சலில் போய் உட்கார்ந்து கொண்டார்.

ரேவதி வேகமாக சமையல்கட்டுக்குச் சென்று தயாராக இருந்த காபி டிகாஷனில் பாலை விட்டு கொதிக்கக் கொதிக்க வெள்ளி டபரா டம்ளரில் வைத்து எடுத்து வந்து நீட்டினாள்.

''என்னம்மா இது... நான் இன்னும் பல்கூட தேய்க்கல...''

''பரவால்ல மாமா... சாப்டுங்கோ... விடிஞ்சப்புறம் பல்ல தேச்சுண்டா போச்சு...''

''சேச்சே... கேவலம் ஒரு வாய் காபிக்காக பழக்கத்தை மாத்திக் கறதா... இரு வரேன்'' என்று புழக்கடைப் பக்கமாய் செல்லத் தொடங்கினார்.

ரேவதிக்கு அவரது இந்த மாதிரியான மாறாத் தன்மைகள் மேல் எப்போதுமே ஒரு கோபம் உண்டு. இப்போதும் அதை முகத்தில் காட்டினாள். மனதுக்குள் ஒரு காபிக்கே அட்ஜஸ் பண்ணிக்காதவர் ஜானகிக்கு ஹார்ட் அட்டாக் என்று வராதபட்சத்தில் கல்யாணத்திற்கு சம்மதித்திருப்பாரா என்றும் கேட்டுக்கொண்டாள்.

பொழுது புலரத் தொடங்கிவிட்டது.

பால்பூத் வாசலில் சில பெண்கள்... தேசிகாச்சாரியும் வயர்க்கூடையுடன் வந்திருந்தார். பால் பாக்கெட்டுகளை வாங்கிப் போட்டுக்கொண்டு திரும்பப் பார்த்தவரை பால்காரன் தடுத்தான்.

''என்ன சாமி முகத்துல பிளாஸ்த்திரி... எங்க விழுந்தீங்க?''

''எங்கையோ விழுந்தேன்... காலங்காத்தால இதைப்போய் ஒரு கேள்வின்னு கேட்டுண்டு...'' - அலுப்போடு அவனுக்கு பதில் கூறாதபடி விலகிப் போனவர் எதிரில் சிங்கராச்சாரியாரும் வந்தபடி இருந்தார்.

''அண்ணா... நீங்களா?''

''உன்ன பாக்கத்தான் வந்தேன்... ஆத்துல உன் ஆம்படையா இருக்காத்தானே?''

''அவளுக்கென்ன... எதுக்குண்ணா கேக்கறேள்?''

''இப்படியே உன் கூடவே வந்து ரங்கன் விஷயமா பேச வேண்டியத பேசி முடிக்கத்தான்...''

''இந்தக் காலம்பரையா?''

''இதைவிட்டா அவகாசம் இல்லை. உனக்கு விஷயம் தெரியாதா?''

''என்னண்ணா?''

''மைதிலிருக்கு நாளை மறுநாள் கல்யாணம்டா. மாப்ளை ஒரு அமெரிக்காக்காரன்... அவாளுக்குள்ளயே உறவு வேற...''

''ஐயோடா... இது ரங்கனுக்குத் தெரியுமா?''

''எனக்கே நேத்து ராத்திரிதான் தெரியும். விடியட்டும்னு காத்துருந்தேன்.''

''இப்ப என்னண்ணா பண்றது?''

''என்ன பண்றதுன்னா... முதல்ல உன் பொண்டாட்டிய கட்டிப் போடணும். அப்புறமா சக்கரவர்த்திய போய் பாத்து உன் சமாசாரத்தை எப்படி பேசணுமோ அப்படிப் பேசணும்.''

''வத்சலாவை கட்றதோ இல்ல கட்டாததோ ஒரு விஷயமில்ல. போடின்னு தூக்கி எறிஞ்சிடுவேன் நான்... ஆனா சக்கரவர்த்தி அய்யங்கார்கிட்ட போய் என் சமாசாரத்தைப் பேசறேங் கறேளே...? ஓர்க் அவுட்டாகுமாண்ணா? காறித்துப்பிட மாட்டார்?''

''துப்பட்டும்... நீ முகத்தை அலம்பிக்கோ... வேற வழி...?''

''அண்ணா...''

''என்ன அண்ணா...? அந்தப் பக்கமா சக்கரவர்த்தியோட பார்யாள் ஹார்ட் அட்டாக்ல ஆஸ்பத்திரில கெடக்கறா! கல்யாணமே அவளுக்காகத்தான் அவசரகதில நடக்கறதா தெரியறது. இப்படி ஒரு நிலைல மைதிலியாலும் எதுவும் பண்ணமுடியாது. என்னதான் காதலும், பாசமும் மனசு பூரா இருந்தாலும் இப்ப அதைச் சொன்னா அதுவே அங்க அவ அம்மா உசுரைக் குடிச்சுடலாம்.''

''என்ன அண்ணா இது... ரங்கனுக்கு இதெல்லாம தெரியுமா?''

''அது ரங்கனைப் பார்த்தாதான் தெரியும். அவனாலயும் என்ன பண்ணமுடியும் சொல்லு பார்ப்போம்...''

''நிச்சயமா ஒண்ணும் பண்ணமுடியாது. இழுத்துண்டு ஓட்றதுதான் ஒரே வழி...''

''அந்தத் தப்பை மட்டும் ரங்கன் பண்ணவே மாட்டான்.''

''அப்ப எப்படிண்ணா இந்த கல்யாணத்தை தடுத்து நிறுத்தறது?''

''வா... முதல்ல உன் ஆம்படையாள அவன பிள்ளையா ஏத்துக்க சம்மதிக்க வைக்கறேன். அப்புறமா அதுல இருந்து அடுத்த கட்டத்துக்குப் போவோம். ஆனா ஒவ்வொரு அடியையும் கவனமாவும், அழுத்தமாவும் எடுத்து வைக்கணும்...''

- சிங்கராச்சாரியார் தேசிகாச்சாரியின் வீடு நோக்கி நடந்தபடியே பேசியதில் அழுத்தமான அழுத்தம். அப்போது

எதிர்பாராமல் எதிரில் வந்த கோவிந்தன் சிங்காரச்சாரியாரைப் பார்த்து வெறித்தான்.

''என்ன கோவிந்தா... எதுக்கு இப்படி பாக்கறே?''

''உங்களுக்கு ஆக்சிடெண்ட்டு... நீங்க ஆஸ்பத்திரியில கிடக்கறதால்ல தகவல் வந்துச்சு...''

''எனக்கா... யார் சொன்னா?''

– கோவிந்தன் முதல் நாள் இரவில் நடந்ததை சொல்லி முடிக்க சிங்கராச்சாரியாருக்கும் இதயம் துடிக்கத் தொடங்கியது.

''தேசிகா... உன் பிள்ளைக்கு ஏதோ ஆபத்துடா... ஒரு பக்கம் இங்க மைதிலிக்குக் கல்யாணம் – இன்னொரு பக்கம் ரங்கனுக்கு ஆபத்து... இது என்ன சோதனை? பெருமாளே...''

– பதறிவிட்டார் சிங்கராச்சாரியார். அவர் தேசிகாச்சாரியை பார்த்து உன் பிள்ளைக்கு ஏதோ ஆபத்துடா என்றதே கோவிந்தனுக்கும் உண்மையை சொல்லாமல் சொல்லிவிட்டது!

54

வாழ்வே ஒரு நதிதான்...
பரமாத்மாவிலிருந்து பிரிந்து
ஜீவாத்மாவாய் திரிந்து
மகாத்மாவாய் மிளிரப் பார்க்கும்
வாழ்வே ஒரு நதிதான்!
தர்மமும் நியாயமும் கரைகள்.
கர்மமே இடைவழிப் பாதை!
வாழ்வே ஒரு நதிதான்....

கோவிந்தன் முகத்தில் ஆச்சரியமும் அதிர்ச்சியும் பரவியதை சிங்கராச்சாரியும் கவனித்தார். பேச்சு வாக்கில் தேசிகாச்சாரிதான் ரங்கனின் தந்தை என்பதை தான் உணர்த்தி விட்டது தெரிய

வரவும் கைகளைச் சொடுக்கிக் கொண்டார். ரங்கனுக்கு ஆபத்து என்று அவர் கூறியது கூட சற்று அடங்கிப் போனது.

''தேசி நீதான் ரங்கனோட அப்பன்கறத நான் மறைக்க நினைச்சாலும் முடியல. ரங்கன் கிட்டயும் பேச்சுப் போக்குல உன் பேரைச் சொல்லிட்டேன். இப்ப பார் கோவிந்தன்கிட்டயும் சொல்லும்படியாயிடுத்து... கோவிந்தா தயவு செய்து இந்த ரகசியத்தை தற்காலிகமா நீ உனக்குள்ளேயே வெச்சுக்கோ. அவசரப்பட்டோ இல்ல உணர்ச்சி வசப்பட்டோ யார்கிட்டயும் சொல்லிடாதே'' என்றார். ஆனால் கோவிந்தன் பார்வை தேசிகாச்சாரி மேல்தான் இருந்தது. இருந்ததா...? பிராண்டியது!

''கோவிந்தா என்னை அப்படிப் பாக்காதே... நான் பெரிய பாவிதான். அதுல உனக்கு சந்தேகமெல்லாம் வேண்டாம்... இப்ப இது சம்பந்தமெல்லாம் பேச நேரமும் இல்லை. ரங்கனை எவனோ ஒருத்தன் வந்து அண்ணாக்கு ஆக்சிடெண்ட்டுன்னு பொய்யச் சொல்லி கூட்டிண்டு போனதா சொன்னியே... அவன் யாரு...? எதுக்கு அப்படி கூட்டிண்டு போகணும்... அண்ணா என்னடான்னா அவனுக்கு ஆபத்துங்கறார்...''

– தேசிகாச்சாரியின் குரல் தழுதழுத்தது.

''ஆமாம் கோவிந்தா... இப்ப முதல்ல நான் ரங்கனைப் பார்த்தாகணும். அப்புறம்தான் மத்த எல்லாமே... அந்த மோட்டார் பைக்காரன் எப்படி இருந்தான்...?''

''அவனை நான் பாத்தா அடையாளம் சொல்லிடுவேன் சாமி. நிச்சயமாக இது அந்த மண் அள்ற கூட்டத்தோட வேலையாதான் இருக்கணும்.''

''மண் அள்ற கூட்டம்னா?''

''காவிரி ஆத்து மணலைத்தான் லாரி லாரியா கடத்தி வித்துகிட்டிருக்காங்களே சாமி...''

''அவாளுக்கும் ரங்கனுக்கும் இடையே என்ன வருத்தம்?''

''அது ஒரு கொலைகார கூட்டம். எம்.எல்.ஏ. சகலைங்கற ஹோதாவுல இந்த சுடலையாண்டி தான் மண் அள்ற காண்ட்ராக்டர்... மண் அள்றதுல ஏகப்பட்ட தில்லு முல்லுங்க வேற... இத்தனை அடிதான் தோண்டணும், இவ்வளவுதான்

அள்ளணும்னு ஒரு கணக்கு இருக்கு. ஆனா எதுவும் இந்த சுடலைக்கு கிடையாது. இவன் மட்டும் இன்னும் பத்து வருஷம் உசுரோட இருந்து இவன் சகலையும் எம். எல். ஏ. வா. இருந்தா நம்ம காவிரி ஆத்துல நாம தண்ணியையே பார்க்க முடியாது. இவனை யாராவது எதுத்தா கொலையே பண்ணி ஆத்துல வீசி எறிஞ்சிடறான். கேட்டா தண்ணில சுழல்ல சிக்கி செத்துட்டதா கதை கட்டி உட்டுறான். இவன்கிட்ட இருக்கற பணத்துக்காக போலீஸ்ல இருந்து பல உயர் அதிகாரிகள் வரை யாரும் எதையும் கண்டுக்கறதில்ல.

இந்தியன்னு ஒரு சினிமா வந்துச்சு. லைசென்ஸ் தர்றதுக்கு லஞ்சம் எப்படி வாங்கறாங்கன்னு பளிச்சுன்னு காமிச்சிருந்தாங்க. அதைப் பார்த்துட்டு அதிகாரிங்க திருந்திட்டாங்களா என்ன...? இன்னிக்கும் வாரிக் குவிச்சிட்டுதானே இருக்காங்க?''

''கோவிந்தா உன் விஸ்தாரப் புலம்பலுக்கு நேரமில்ல. ரங்கன் விஷயத்துக்குவா...''

''விஸ்தாரமா சொன்னாதான் சாமி புரியும். அந்த கடலை யாண்டியால கொலை செய்யப்பட்ட ஒருத்தனை ஆத்துல தூக்கிப் போட்டுட்டு ரங்கனை விட்டு தூக்கச் சொன்னான். அப்பதான் ரங்கனுக்கு அது தண்ணிச் சாவு இல்லை கொலைன்னு தெரிஞ்சிச்சு. இதை என்கிட்டயும் சொன்னான்.

இதுதான் அந்த சுடலையாண்டிக்கு ரங்கன் மேல ஒரு கண்ணு விழக் காரணம். போதாக்குறைக்கு சாராயக்கார இடும்பனை கலெக்டர் வரை போய் பார்த்து பிடிச்சுக் கொடுத்தவன் இல்லையா நம்ம ரங்கன்... அதனால் விட்டா தன்னையும் போட்டுக் கொடுத்துடுவான்னு பயந்து போய்தான் ரங்கனை உங்க பேரைச் சொல்லி கடத்தியிருக்கணும். இதுதான் என் யூகம்...''

- கோவிந்தன் சொன்ன அவ்வளவும் தேசிகாச்சாரியை நிலைகுலைய வைத்துவிட்டது. சிங்கராச்சாரியாருக்கும் பதைப் பாகத்தான் இருந்தது.

''இப்ப என்னண்ணா பண்றது?''

''கலெக்டருக்கு போன் பண்ணி நான் விஷயத்த சொல்றேன். இப்ப இருக்கற கலெக்டர் நல்ல பக்திமான். என்னோட ஹரிகதா உபன்யாசங்களை ரசிச்சு கேக்கறவர். அவர் மூலமா போலீசுக்கு போவோம். இந்த சுடலையாண்டி மேலதான் சந்தேகம்கறதையும் சொல்லுவோம். அதுக்கு முந்தி என்கூட காவிரிக்கு வா... ஒரு முழுக்கு போட்டுறுவோம்...''

''அண்ணா... இப்ப முழுக்கு போடறதா முக்கியம்? அதை அப்புறமா போட்டுக்கலாம்ணா... முதல்ல ஆத்துக்கு போய் கலெக்டருக்கு போன் பண்ணுவோமே...''

''காரணமாத்தான் தேசி நான் உன்னை இப்ப காவிரிக்கு கூப்பிடறேன் காவிரியை நான் ரங்கனோட தாயா பாக்கறேன். அவளண்ட ஒரு பிரார்த்தனை. ஏன்னா, நாம சில அசுரர்களுக்கு எதிரா இறங்கப் போறோம், நமக்கு அனுக்ரஹம் ரொம்ப முக்கியம். காவிரிங்கறது வெறும் ஜலமில்ல... தண்ணிவடிவத்துல இருக்கற தேவதை அவ! ரங்கன்னா அவளுக்கு எவ்வளவு இஷ்டம் தெரியுமா?''

''சாமி... நேத்து ராத்திரி ரங்கனும் காவிரியை தன்னோட அம்மான்னு தான் சாமி என்கிட்ட பேசினான். உங்களால அவன் தலைகீழா மாறிட்டான் சாமி...''

''என்னால இல்ல... மைதிலியாலன்னு சொல்லு...''

இருவரும் காவிரி நோக்கி விறுவிறுவென்று நடக்கத் தொடங்கினர். கோவிந்தனும் அவர்களைத் தொடர்ந்தான்.

''ஏண்ணா... இங்க மைதிலிக்கு நடக்கப் போற கல்யாணத்த என்னண்ணா பண்றது?''

''சக்கரவர்த்தி குடும்பம் இன்னிக்கு சாயந்தரமா தான் புறப்பட்றதா இருக்கா. அதுக்கு முந்தி மதியம் போல போய் நாம பேசுவோம். அதுக்கு முந்தி இரண்டு காரியம். ஒண்ணு கலெக்டர் கிட்ட புகார் கொடுக்கறோம். அடுத்து உன் ஆம்படையாள் வத்சலாவை தயார் பண்றோம். அப்படியே ரங்கனையும் தேடிப் பிடிக்கறோம்.''

''அண்ணா ரங்கனுக்கு இப்படி ஒரு ஆபத்து வந்துருக்கற தருணத்துல நம்மளோட இந்த எத்தனங்கள்லாம் பலன் தருமாண்ணா?''

"சந்தேகம் பெரிய சத்ரு. தூக்கி தூரப் போடு... நான் அந்த கலெக்டர், உன் ஆம்படையாள், அந்த சக்கரவர்த்தின்னு யாரையும் நம்பலை. என் ஒரே நம்பிக்கை அந்த காவிரி. முழுக்கு போடும் போது அடி மணல் படுகைதான் அவளோட திருவடி. அதை தொட்டு அம்மா உன் ரங்கனை நல்லவிதமா காப்பாத்தி அனுப்பி வைன்னு வேண்டிக்கப் போறேன். அப்புறமா அவளையும் அந்த ரங்கநாதனையும் தியானம் பண்ணிட்டு அடுத்தடுத்து என்ன செய்யணுமோ அதை செய்வோம், நிச்சயம் எல்லாம் நல்லபடியாகத்தான் முடியும்..."

சிங்கராச்சாரியார் குரலில் தொனித்த நம்பிக்கை கோவிந்தனையே சிலிர்க்க வைத்தது...

ஆற்றங்கரையை அடைந்தபோது புதுவெள்ளப் பாய்ச்சல். செங்குழம்புப் பிரவாகம்!

"பாசனத்துக்கு திறந்து விட்ருக்கா போல இருக்கு... மளமளன்னு நாராயணா நாராயணான்டே முழுக்குப் போடு" என்றவர் தோள் துண்டை இடுப்பில் கட்டிக் கொண்டு காவிரி ஆற்றையே ஒரு தெய்வமாக பாவித்து அப்படியே மணல் வெளிமேல் நெடுஞ்சாண் கிடையாக விழுந்தார். பின் கரை யோரமாய் குனிந்து ஜலத்தை ஒரு கையால் அள்ளி தலையில் தெளித்துக் கொண்ட பிறகு ஆற்றுக்குள் இறங்கினார்.

அங்கும் இங்குமாய் நிறைய கூட்டம்... தேசிகாச்சாரியும் அவரை அப்படியே தொடர்ந்தார்.

ஒரு பக்கமாய் மலைக்கோட்டை தெரிந்தது. கண்களை நிறைத்தது. கோவிந்தனும் அவர்களைப் போலவே முழுக்குப் போட்டான். சிங்கராச்சாரியார் சொன்னதை கெட்டியாக பிடித்துக் கொண்டு அடி மணல் படுகையில் கையை வைத்து 'தாயே உன் பிள்ளையை எப்படியாவது காப்பாத்திக்கொடு' என்று பிரார்த்தித்துக் கொண்டான். அப்போது அவனிடம் துளிர்த்த கண்ணீரும் அந்த பெரு வெள்ளத் திவலையில் கலந்து ஒடிற்று!

மூழ்கி எழுந்த வேகத்தில் ஈரத்தைக் கூட துவட்டிக் கொள்ளாமல் சிங்கராச்சாரியார் ஒரு குதிரை போல ஓடத் தயாராகி விட்டார்.

"தேசி... உன்னோட வாழ்க்கைலயும் சரி என்னோட வாழ்க்கைலயும் சரி இன்னிக்கு ரொம்ப முக்கியமான நாள். உபன்யாசம் பண்ணி ஆயிரக்கணக்கான பேரோட ஞானக் கண்களை திறந்துருக்கேன் நான். அது எல்லாத்தையும் விட உன் ஆம்படையாள் வத்சலாவோட கண்களையும், சக்கரவர்த்தியோட கண்களையும் திறக்கறதுல தான் என் வித்தையோட பலன் இருக்கு.

என் அவ்வளவு புண்ணியத்தையும் இதோ அந்த ஓடற ஜலத்துல தாரை வார்த்துட்டேன். அந்த புண்ணிய பலம்தான் ரங்கனை மீட்டெடுக்கணும். எடுக்கும்...! நம்பிக்கையோட காரியத்துல இறங்குவோம் புறப்படு..."

- என்று துண்டைப் பிழிந்து தோளில் போட்டுக் கொண்டார்.

"சாமி உங்க கூட்டணில என்னை விட்டுட்டீங்களே... ரங்கன் என் கூடப் பிறக்காத பிறப்பு சாமி..."

"நீ இல்லாமலா கோவிந்தா... எங்க கூடவே இரு! எல்லாரும் சேர்ந்தே செயல்படுவோம்" என்று அவனையும் உள் இழுத்துப் போட்டுக் கொண்டார் சிங்கராச்சாரியார்!!

காருக்குள் கண்ணாடி வழியாக ஊடுருவிய ஏழு மணிச் சூரிய வெளிச்சம் கட்டிப் போடப்பட்டிருந்த ரங்கன் மேல் தான் முதலில் விழுந்தது. அதுவே கலங்கிக் கிடந்த அவனை எழுப்பியும் விட்டது. பின் கைகள் கட்டப்பட்டு வாயிலும் பிளாஸ்திரி போடப்பட்டிருந்ததால் சப்தம் போடமுடியவில்லை. ஆனால் காலால் கன்னாபின்னா வென்று உதைக்க முடிந்தது. அந்த சப்தம் காருக்குள் சீட்டின் மேல் தூங்கிப் போய் விட்ட சுடலையாண்டியின் எடுபிடிகளை எழுப்பிவிட்டது.

வாரிச்சுருட்டிக் கொண்டு எழுந்திருந்தார்கள்.

சுள்ளென்று அடிக்கும் வெயிலைப் பார்த்து பரபரப்புக்கும் ஆளானார்கள்.

"டேய் சுகு... என்னடா இது விடிஞ்சே போயிடிச்சே...?"

"மணியைப் பாரு... மணியைப் பாரு..."

"ஏழு மணிடா... முதலாளி என்னடா இப்படிப் பண்ணிட்டாரு...?"

இருவரும் காரைவிட்டுக் கீழே இறங்கினர்.

சுடலையாண்டியின் கார் அதே இடத்தில் தெரிந்தது. இடையில் தார்ச்சாலையில் காலை நேர வாகனங்களின் சீற்றமான ஓட்டங்கள். "என்ன இது... இவர்கிட்ட இருந்து போனும் வரலே... இவரும் வரலை... ஒருவேளை சவுக்குத் தோப்புல ஏதாவது சிக்கலா...?" அடுக்கடுக்கான கேள்விகளோடு மணல் வெளி கோரைப் புதர்களைக் கடந்து நீர் வெளி அருகே போய் நின்றார்கள்.

காவிரியும் பூதாகரமான பாய்ச்சலில் இருந்தாள். இழுவை பயங்கரமாய் இருந்தது. அதை நீர்வெளிமேல் மிதந்து வரும் ஒரு தக்கை காட்டிக் கொடுத்தது.

வெகுதூரத்தில் சவுக்குத் தோப்பும் தெரிந்தது.

ஓடிப் போய் பின்புறம் டிக்கியில் கிடந்த பைனாகுலரை எடுத்து வந்து சவுக்குத் தோப்புக்குள் அவரைத் துழாவினர். உள்ளே ஆளரவமே இல்லை.

"சுகு... தோப்புல முதலாளி இல்லை."

"நல்லா பாரு..."

"பாத்துகிட்டேதானே இருக்கேன். கரையோரமா பரிசல் கிடக்கணும் அதையும் காணோம்."

"அப்ப ராத்திரி பரிசல்ல அவர் தோப்புக்குப் போகலையா?"

"நிச்சயம் பரிசல்ல ஏறிட்டாரு... ஆனா வெள்ளத்த பாத்தேல்ல...? அவராால பரிசல்ல துடுப்புப் போடவும் முடியாது. நடுவுலதான் ஏதோ ஆகியிருக்கணும்..."

இருவரும் யூகங்களில் சிக்கியிருந்த சமயம் ரங்கன் காரை விட்டு மிகுந்த சிரமத்தில் கீழே இறங்கியிருந்தான். பின்னால் கட்டப்பட்ட கைகளுடன் பிளாஸ்திரி வாயுடன் அப்படியே

ஓடவும் பார்த்தான். அப்போது சாலையில் வேகமாக சென்று கொண்டிருந்த ஒரு பஸ் டிரைவர் சற்று வேகத்தைக் குறைத்து பக்கவாட்டில் ஓடும் அவனை அதிர்ச்சியோடு பார்த்தார். அதற்குள் அந்த இருவரும் ரங்கன் ஓடுவதைப் பார்த்துவிட்டு தலைதெறிக்க ஓடிவந்து ரங்கனை பிடிக்கப் பார்த்தனர். பஸ் டிரைவர் பஸ்ஸை நிறுத்திவிட்டார். பயணிகளும் எட்டிப் பார்த்தனர். ஓடிவந்த இருவரும் ரங்கனை பாய்ந்து பிடித்து தலையில் அடித்தனர்.

"ஏண்டா நாயே... தப்பிச்சு ஓடவா பாக்கறே...? ஏய் நீ என்னய்யா பாக்கறே... வண்டிய எடு..." என்று பஸ் டிரைவரையும் நாக்கை மடித்து மிரட்டினர். டிரைவர் அதற்கு பயந்த மாதிரி தெரியவில்லை. ஏதோ தவறான ஒரு செயல் நடக்கப் போவதை யூகித்து அதைத் தடுத்து விட வேண்டும் என்னும் வேகத்தோடு கதவைத் திறந்துகொண்டு இறங்க முயலவும், சுகு என்பவன் பேண்ட் பாக்கெட்டில் இருந்து துப்பாக்கியை வெளியே எடுத்தான். அதை காட்டியபடியே "ஓடிப் போயிடு... இது எம்.எல்.ஏ. மேட்டர்... சீன் காட்டாம பஸ்ஸை எடுத்துட்டு போய்ட்டே இருக்கணும். இல்ல போட்டுத் தள்ளிடுவேன்." என்று மிரட்டினான். பஸ்சுக்குள் இருந்தவர்கள் மிரண்டு போய்விட டிரைவரும் அரைமனதாக கதவை அடைத்து விட்டு பஸ்ஸை ஸ்டார்ட் செய்தார்.

அதற்குள் மற்றவன் ரங்கனைத் தள்ளிக்கொண்டு போய் தங்கள் காருக்குள் தள்ளி கதவையும் அடைத்துவிட்டு டிரைவிங் சீட்டில் ஏறி அமர்ந்து கொண்டு காரைக் கிளப்பிவிட்டிருந்தான்.

டிரைவரை மிரட்டிக் கொண்டிருந்த சுகுமார் என்பவன் ஓடிவந்து காரில் ஏறிக்கொள்ள காரும் பஸ்சுக்கு பின்திசையில் ஓட ஆரம்பித்துவிட்டது.

உள்ளே காருக்குள் சுகுமாரிடம் பதற்றமான பதற்றம்.

"ச்சே... அஞ்சு நிமிசத்துக்குள்ள ஒரு ஆட்டு ஆட்டிட்டியேடா..."

என்றவாறே ரங்கனை காலால் ஒரு உதைத்தான். பதிலுக்கு ரங்கனால் வெறிக்கத்தான் முடிந்தது.

"இந்நேரம் நீ போய்ச் சேர்ந்துருக்கணும். விடிய காலம் நாலு மணிக்கு உன்னை போட்டுத் தள்ளி சவுக்குத் தோப்பு சாராய அடுப்புல போட்டு எரிச்சு, விடியும் போது சாம்பலையும் இந்த ஆத்துல கரைக்கறதுதான் எங்க திட்டம். ஆனா உனக்கு ஆயுக கெட்டிடா..." என்று ரங்கனைப் பார்த்து ஆதங்கமும் பட்டுக் கொண்டபோது ஆற்றோரமாக கூட்டம்.

"சுகு ஆத்தோரமா கூட்டம் நிக்கறத பாரு..."

"என்ன... மீன் பிடிச்சு ஏலம் விடுவாங்களா இருக்கும்..."

சுகுமாரின் பதிலைத் தொடர்ந்து கார் கூட்டத்தை நெருங்கி விட்டிருந்தது. சுகுமாரின் பார்வை காரில் இருந்தபடியே கூட்டத்தை ஊடுருவியது. தரையில் ஒரு உடல் கிடந்து கூட்டம் சூழ்ந்திருப்பது அப்போதுதான் தெரிந்தது.

"டேய் ஏதோ பாடி..." - என்றபடியே காரை ஓரம்கட்டிவிட்டு இறங்கினான். பாய்ச்சலோடு கூட்டத்தை விலக்கிக் கொண்டு எட்டிப் பார்த்தான்.

அங்கே கிடந்தது சுடலையாண்டிதான்!

"டேய் நம்ம முதலாளிடா...!" என்று அதிர்ச்சியோடு கத்தியவன் அடுத்த நொடி குனிந்து மார்பில் காதை வைத்துப் பார்த்தான். இதயம் துடித்துக்கொண்டுதான் இருந்தது!

"டேய் உசுர் இருக்குடா... தூக்குடா..." தன் சகாவோடு சேர்ந்து அவரை தொட்டுத் தூக்கிக் கொண்டு காரை நோக்கி ஓடினான்.

காரும் ஆஸ்பத்திரி நோக்கி ஓடத் தொடங்கியது!

டோல்கேட்!

நிறைய போலீஸ்காரர்களும் கண்ணில் தட்டுப் பட்டனர். ரங்கன் ஓடியதையும் அவனை ஓடி வந்து பிடித்ததையும் பார்த்திருந்த பஸ் டிரைவருக்கு தான் துப்பாக்கியைக் காட்டி மிரட்டப்பட்டது பெரும் அதிர்ச்சியைத் தந்திருந்தது. போலீஸ்காரர்களைப் பார்க்கவும் பஸ்ஸை நிறுத்தியவர் பஸ்ஸைவிட்டு இறங்கிச் சென்று நடந்ததைக் கூறினார்.

"என்னய்யா துப்பாக்கிய காட்னான் மிரட்டினான்னு ஏதோ சொல்றே... ஏதாவது சினிமா ஷூட்டிங்கை பார்த்துட்டு வந்து உளறிகிட்டிருக்கியா?" என்று அந்த போலீஸ்காரர் திருப்பி கேட்கவும் பயணிகளில் சிலருக்கு கோபம் வந்து "ஒரு டிரைவர் பொறுப்பா வந்து ஒரு பாக்கக் கூடாத காட்சியை பார்த்ததை சொல்லிகிட்டிருக்காரு. என்ன ஏதுன்னு கேட்காம சினிமா ஷூட்டிங்குன்னு இளப்பமா பண்றீங்க...?" என்று கத்தவும் போலீசுக்கும் சீரியஸ்நெஸ் புரிந்தது.

"என்ன ஏதுன்னு பாருங்க... கேட்டா எம்.எல்.ஏ., ஆளுங்கன்னு சொல்றாங்க. நாலு பேரை சுட்டுக் கொன்னதுக்குப் பிறகு சினிமால வர்ற மாதிரியே கடைசி நிமிசத்துல போய் நிக்காதீங்க." என்று எரிச்சலுடன் சொல்லிவிட்டு டிரைவரும் பஸ்ஸை கிளப்பினார்.

"இந்த நாட்டைத் திருத்தவே முடியாதுப்பா..." என்று ஒரு பொது ஜனம் பஞ்ச் டயலாக் பேசியது.

தொலைபேசியை வைத்துவிட்டுத் திரும்பிய சிங்கராச் சாரியாரை தேசிகாச்சாரி கண்கள் பனிக்கப் பார்த்தார்.

"தேசி கலெக்டர் நான் என்ன செய்யணுமோ செய்யறேன் னுட்டார். எதுக்கும் ரங்கனைக் காணோம்னும் அவன் கடத்தப் பட்டிருக்கலாம்னு சந்தேகப்பட்றதையும் மென்ஷன் பண்ணி ஒரு புகார் எழுதி லோக்கல் போலீஸ் ஸ்டேஷன்லயும் கொடுக்கச் சொன்னார். கோவிந்தா தேசிகாச்சாரி இப்ப புகார் எழுதித் தருவான். நீ போய் முதல்ல ஸ்டேஷன்ல கொடுத்து எஃப்.ஐ.ஆர். போடச் சொல்லு...

எம்.எல்.ஏ. உறவுக்காரன்கறதால எஃப்.ஐ.ஆர். போடாமல இழுக்கப்பார்த்தா என் செல்போன்ல என்னைக் கூப்பிடு... நான் கலெக்டர் வரை புகார் கொடுத்திருக்கறதையும் அவர் சொல்லித் தான் கம்ப்ளைண்டே கொடுக்க வந்ததையும் சொல்லு..." என்று கோவிந்தனை தயார் செய்திட தேசிகாச்சாரியும் மளமளவென்று புகார் மனுவை எழுதி ஒரு கவரில் போட்டுக் கொடுத்தார்.

கோவிந்தன் விலகவும் "கிளம்பு தேசி... என்னோட அடுத்த டார்கெட் உன் ஆம்படையா! அவகிட்ட வளவள கொழ கொழன்னே நான் பேசப் போறதில்ல. ரங்கன் மைதிலியை

கல்யாணம் பண்ணிக்கப்போறான். சக்கரவர்த்தி அய்யங்கார் தான் உன் சம்பந்தி. நீ பெத்த பிள்ளை மூலமா நடக்கவேண்டியது மூத்தப் பிள்ளை மூலமா நடக்கப் போறது. அவ்வளவுதான் வித்தியாசம். நீ சம்மதிச்சாலும் சம்மதிக்க லேன்னாலும் இது நடக்கும். சக்கரவர்த்தி. அய்யங்காரை சம்மதிக்க வைக்க வேண்டியது என் பொறுப்புன்னு சொல்லப் போறேன். சொல் லிட்டு அஞ்சு நிமிஷம் டைம் கொடுப்பேன். அவ அதெல்லாம் முடியாது நான் அத்த பண்ணுவேன் இத்த பண்ணுவேன்னோ, இல்ல தற்கொலை பண்ணிப்பேன்னோ சொன்னா நீயே மண் ணெண்ணெய் தீப்பெட்டியை எடுத்துண்டு வந்து கொடு. தயவு செய்து தீக்குளிச்சிடுன்னு நானும் சொல்றேன். மேற்கொண்டு அவ என்ன பண்றான்னுதான் பார்த்துடு வோமே...?''

சிங்கராச்சாரியாரிடம் தீர்க்கம் ஒரு யானைப் பிளிறலைப் போல வெளிப்பட்டது.

55

'சுடச் சுட பொன்னொளிரும் - உள்ளம்
படப்பட மனமொளிருமோ?
தொடத்தொட உறவு தித்திக்கும் - அதை
விடவிட ஞானம் சித்திக்குமோ?
கெடக்கெட மாயை முன்திரியும் - மனம்
திடுக்கிடவே விதியும் செயல்புரியுமோ?'

சிங்கராச்சாரியாரிடம் தென்பட்ட உறுதி தேசிகாச்சாரிக்கே பெரிய ஆச்சரியத்தை அளித்தது. இருவரும் புறப்பட்டுவிட்டனர்.

''அண்ணா... நீங்களா இப்படி வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டுன்னு பேசறேள். எனக்கு ஆச்சரியமா இருக்குண்ணா...''

''நான் பேசல தேசிகா... காலம் என்னை பேச வைக்கறது...''

''இப்ப ஏற்பட்டுருக்கற நெருக்கடியான சூழ்நிலையைச் சொல்றேளாண்ணா...''

''ஆமாம்... காலம் சமயங்கள்ல இப்படி கண்ணாமூச்சி ஆடும்... அப்ப நாமளும் கருத்தா இருந்து காரியத்தை முடிச்சிக்கணும்...''

''எதுவும் நம்ம கைல கிடையாது... அவன் பாத்துப்பான்னு சொல்றதுக்கெல்லாம் அப்ப அர்த்தம் என்னண்ணா?''

''என் உபன்யாசத்தைக் கேட்டுட்டு அதை அசைபோடும்போது கேக்க வேண்டிய ஒரு கேள்வியை நீ இப்ப தான் கேப்பியா?''

''மனசுல பட்டுடுத்து, கேட்டுட்டேன். தப்புன்னா விட்டுருங்கோ...''

''பரவால்ல... உன் கேள்விக்கு எனக்கு தெரிஞ்ச பதிலை நானும் சொல்றேன்... கேட்டுக்கோ...

மனுஷ முயற்சிங்கற எத்தனங்களுக்கு ஒரு எல்லை உண்டு. அதாவது ஒரு அளவு உண்டு. அதை மீறவோ தாண்டவோ யாராலயும் முடியாது. உதாரணமா நம் கண்முன்னே இலைல சாதம் இருக்குன்னு வை... அதை எடுத்து சாப்டற செயல்தான் நம்ம முயற்சியோட அளவுங்கறது. இல்லாத சாப்பாட்டை சாப்பிடமுடியுமா?''

''முடியாது...''

''அப்படித்தான் நம் அன்றாடச் செயல்பாடுகளும்...

இப்ப ரங்கனுக்கு ஆபத்துன்னு தெரிஞ்ச உடனே நம்மோட பட்டறிவு கலெக்டரைப் பார்த்து பேசற வரை போனது. அதோட ஒரு கிளைதான் போலீஸ் கம்ப்ளைண்டும்... இதுக்கு மேல நாம இதுல செய்ய ஏதாவது இருக்கா?''

''இல்லேன்னுதான் தோண்றது...''

''தோண்றதென்ன... அதுதான் யதார்த்தம். செய்யவேண்டியத சரியா செய்துட்டு அப்புறமா விஷயத்தை அவன் கிட்ட விட்டுடணும். அதுக்கப்புறம் என்ன நடக்கணுமோ அது தானா நடக்கும்...''

''ஒருவேளை இவ்வளவுக்குப் பிறகும் நாம எதிர்பார்த்த மாதிரி நல்ல விளைவு ஏற்படலைன்னா நம்ம முயற்சியெல்லாம் வீணாப் போச்சுன்னு தானே அர்த்தம்?''

''ஆமாம்...''

"கூடவே அவன் பாத்துப்பான்னு நம்பினதும் வீணாப் போச்சுன்னுதானே அர்த்தம்?"

"நீ எங்க வரப்போறேன்னு எனக்கு புரிஞ்சிடுத்து... ஒரு விஷயத்தை தெளிவா மனசுல வெச்சுண்டு எதையும் பாரு... உதாரணமா ரங்கன் பத்தின விஷயத்தையே எடுத்துப்போம்... நாம செய்ய வேண்டியத செய்தாச்சு... பகவானண்டையும் பிரார்த்தனை பண்ணிண்டாச்சு. இத்தனைக்குப் பிறகும் ரங்கனுக்கு ஆபத்து நீங்கலை - அதுல அவன் அழிஞ்சு போனான்னே வை..."

"ஐயோ அண்ணா...!"

"என்ன இத்தன நாளா அடங்கிச் சுருண்டு கிடந்த பாசம் சீறிண்டு கிளம்பறதா?"

"அண்ணா..."

"தேசி... நீ புரிஞ்சுக்க கேள்வி கேட்கறே - நானும் நான் புரிஞ்சிண்டதை சொல்லிண்டு வரேன். நடுவுல உணர்ச்சிகளை கொஞ்சம் கட்டுப்படுத்திக்கோ. பகுத்தறிவு மட்டும்தான் இப்ப செயல்படலாம்... இப்ப நான் சொல்லப்போறதும் - அதை நீ சரியா புரிஞ்சுக்கப் போறதும் தான் பகுத்தறிவு. கடவுள் இல்லேங்கறதோ, பேய் பிசாசு இல்லேங்கறதோ, சொர்க்கம் நரகம் இல்லேங்கறதெல்லாம் பகுத்தறிவு கிடையாது. அதெல்லாம் குறுகின அறிவுகள்!

நான் விஷயத்துக்கு வரேன். ரங்கனுக்கு ஆபத்து நீங்காம அதுல அவன் அழிஞ்சு போயிட்டான்னே வைன்னு சொன்னேன் இல்லையா?"

- சிங்கராச்சாரியார் ஒரு ஞானாசிரியனாக ஸ்ரீரங்கத்து வெளிவீதிகளில் நடந்தபடியே கேட்ட விதமும் அவர் நடைக்கு ஈடு கொடுக்க மாட்டாதபடி மூச்சிரைக்க நடந்தபடி தேசிகாச்சாரி அதை எதிர்கொண்ட விதமும் தெருவில் இருப்பவர்களுக்கெல்லாம்கூட ஆச்சரியமான காட்சியாக இருந்தது.

காரணம்... அவர் இப்படி எல்லாம் காலார நடந்து போய் அவர்களும் அதைப் பார்த்து கொள்ளைக் காலம் ஆகிவிட்டது தான்.

தேசிகாச்சாரியும் அவர் அடுத்து என்ன சொல்லப் போகிறார் என்று ஆவலாகப் பார்த்தார்.

"தேசிகா... நமக்கெல்லாம் எப்பவுமே ஒரு பக்கம்தாண்டா தெரியும். இப்ப கூட இந்தத் தெருவுல நடந்து போயிண்டுருக்கற நமக்கு நம் முன்னால உள்ள கட்சிகள்தான் நிதர்சனம். பின்னால என்ன நடக்கறதுன்னு தெரியாது. அதனால என்னன்னு திரும்பிப் பார்த்தா முன்னால நடக்கறது மறைஞ்சுடும். என்ன புரியலையா...?"

"லேசா குழப்பமா இருக்கு..."

"எப்பவுமே ஒரு பாதிதான் நிதர்சனம். மறுபாதி நம்பிக்கைன்னு சொல்ல வந்தேன்..."

"இதுக்கும் ரங்கனுக்கும்..."

"அந்த விஷயத்துக்குத்தான் வரேன்... அவன் விஷயத்துல நீ செய்தது தப்புன்னாலும் அந்த தப்பால பாதிக்கப்படணும்னு ஒரு கணக்கு அவன் விதில இருந்தாதான் இப்படியெல்லாம் நடந்திருக்கவே முடியும்...

அதேபோல அவன் விதில அதாவது அவன் கர்மாவுல என்ன இருக்குன்னு நாம எப்படி தெரிஞ்சுக்க முடியும். அது எப்படி வேணா இருக்கலாம் இல்லையா?"

அங்கு தொட்டு இங்கு தொட்டு கடைசியாக அவர் விதியிடம் வந்து நிற்கவும் தேசிகாச்சாரிக்கு சற்று ஏமாற்றமாகி விட்டது.

"இது என்னண்ணா விளக்கம்... எல்லாம் தலை எழுத்துன்னு சராசரி மனுஷாதான் புலம்புவா... நீங்களும் அதையே சொல்லி என்னை சமாதானப்படுத்தப் பாக்கறேளே..."

"நான் எப்பவும் அந்த தப்பை எல்லாம் பண்ண மாட்டேன். எனக்கு பட்டறிவுக்கு பட்டபடி செயல்பட மட்டும்தான் தெரியும் மீறி எது நடந்தாலும் ஏத்துண்டு போயிண்டே இருப்பேன். அதெல்லாம் முடியாதுன்னு நாம முரண்டு பிடிச்சா அது நம்மளை ஏத்துக்க வெச்சுடும்...

அப்படித்தான் நாம பலநூறு விஷயங்களை ஏத்துண்டு வந்துருக்கோம். மகாத்மா காந்தியை காலம் சுட்டுக் கொன்னது. என்ன பண்ண முடிஞ்சது நம்மால? ராஜீவ்காந்தியை பிஞ்சுபோன

சதைக்குவியிலா கூடைலன்னா அள்ளினா? குறைந்தபட்சம் அடுத்து ஒரு குண்டு வெடிக்க முடியாம பண்ண முடிஞ்சுதா?

இன்னிக்கு வரைக்கும் உலகம் முழுக்க அங்கங்கே அது வெடிச்சுண்டு தானே இருக்கு? அதிகபட்சம் ஐந்து நிமிஷத்துல ஜப்பான் சுனாமியால குப்பக்காடா மாறிப்போகலையா? விஞ்ஞானத்தால அழிவை அளந்து சொல்லத் தான் முடிஞ்சது. சுனாமி தலைல ஒரு குட்டு வெச்சு அப்படியே பின்னால திரும்பிப் போன்னு செய்ய முடிஞ்சுதா...?''

''போதுண்ணா... போதும்... நான் ரங்கன் வரைல எப்படி யாவது எல்லா நல்லதும் இனியாவது அவனுக்கு நடக்கணும்கற ஆசைலயும் வெறியிலயும் இருக்கேன். அது நடக்காம போனா நன்னா கேட்டுக்கோங்கோ... நடந்ததெல்லாம் விதி... தலையெழுத்துன்னு ஏத்துண்டு உயிர்வாழ மாட்டேன். நிச்சயம் என் உசுர் தானா நின்னுடும்ண்ணா...''

தேசிகாச்சாரி விம்முதலோடு சொல்லி முடிக்க, அவர் வீட்டு வாசல் வர சரியாக இருந்தது.

கீரைக்காரியிடம் கீரை வாங்கியபடி இருந்த வத்சலாவிடம் இருவரையும் ஒரு சேரப் பார்ப்பதில் ஒரு சின்ன அதிர்ச்சி.

சற்றுமுன்தான் மைதிலி கல்யாணம் பற்றி காபிப்பொடி இரவல் வாங்க வந்த பக்கத்து அகத்தைச் சேர்ந்த விஜயா பற்றவைத்து விட்டுப் போயிருந்தாள். அந்த நெருப்பே வயிற்றிலிருந்து கழுத்துவரை எரிந்தபடி இருந்தது. இதில் இவர்கள் வேறு...

சிங்கராச்சாரியார் ஹாலில் இருந்த ஊஞ்சலில் அமர்ந்து கொள்ள அருகில் நின்று கொண்டார் தேசிகாச்சாரி. மௌனமாக புழுக்கத்துடன் அவர்களிடம் பேச்சு கொடுக்காதபடி தாண்டிச் செல்லப் பார்த்தாள் வத்சலா. குளித்துவிட்டு தலையை துவட்டியபடியே வந்தாள் உஷா! அவளிடம் ஊருக்குக் கிளம்பும் முகாந்தரங்கள்.

''நில்லுடி... அண்ணா வந்துருக்கார்... வாங்கோண்ணான்னு ஒரு வார்த்தை கூட சொல்லாம எங்கடி போறே?''

தேசிகாச்சாரி ஆரம்பித்தார்.

''நான் யாரையும் வாங்கோன்னு கூப்பிட்ற மன நிலைலயே இல்லை... என் கிட்டயும் யாரும் எதையும் பேசவேண்டாம்.''

''அப்படி எல்லாம் சொல்லிண்டு இந்த ஆத்துல நீ இருந்துட முடியாது. நானும் விடமாட்டேன்.''

தேசிகாச்சாரியிடம் சூடு ஏற ஆரம்பித்தது.

''நீ இரு தேசி... இனி நான் பேசிக்கறேன். இதோ பாரும்மா உன்னோட பேசி உன்னை யோசிக்க வெச்சு, உன்னை இப்ப எங்க தேவைக்கேற்ப மாத்தப் பாக்கறதெல்லாம் எங்க நோக்கம் இடையாது. நீ நீயாவே இரு!

நாங்க சில முடிவுகளை எடுத்துருக்கோம்.

குறிப்பா ஒரு வேதப்ராமணனா, ஸ்ரீ வைஷ்ணவனா நான் சில முடிவுகள் எடுத்துருக்கேன். அதை சொல்லிட்டு போகத்தான் வந்துருக்கேன்.

ரங்கன் உண்மைல யாருங்கற உண்மை உனக்கு நன்னா தெரியும். அவனும் ஒரு ஸ்ரீவைஷ்ணவன் தான்! உன் புருஷனோட கோழைத்தனத்தால ஒரு அற்ப ஜீவியா இவ்வளவு நாளும் அவனை இந்த ஊர் பார்க்கும்படி ஆயிடுத்து. எப்ப தேசிகனுக்கு தான் பண்ணிண்டுருக்கறது தப்புன்னு பட்டுத்தோ அப்பவே அதுக்கு ஒரு முடிவும் வந்தாச்சு.

வாஸ்தவத்துல அவன்தான் சீமந்த புத்திரன். அவனோட தாயார்தான் தேசிகனுக்கு ஏக பத்தினி. நீ இரண்டாம் தாரம்தான். சட்டப்படியும் சரி, தர்மப்படியும் சரி எல்லா ரைட்சும் அவனுக்குத் தான். இதுக்கு உன்கிட்ட அட்டெஸ்டட் கையெழுத்து வாங்க வேண்டிய அவசியமெல்லாம் தேசிகனுக்கு கிடையாது. ஆகையால ரங்கன் என் பிள்ளைங்கற அந்த உண்மையை தேசிகாச்சாரி இனி மறைக்கப் போவதில்லை.

அதுமட்டுமில்ல... அந்த ரங்கனை சக்கரவர்த்தி அய்யங் காரோட பொண்ணான மைதிலி உசுருக்குசுரா காதலிக்கறா! அவளுக்கு இன்னும் இரண்டு நாள்ல மெட்ராஸ்ல வெச்சு கல்யாணம்னு ஊரே பேசிக்கறது எனக்கும் தெரியும். ஆனா அந்த கல்யாணம் நடக்காது. ஏன்னா நானும் தேசிகாச்சாரியும் இப்ப சக்கரவர்த்தி அய்யங்காரை பார்க்கத்தான் போறோம்.

ரங்கன் என் சீமந்த புத்திரன்கற உண்மையை அவராண்டதான் தேசிகன் போட்டு உடைக்கப் போறான். அப்படிப்பட்ட ரங்கனைத்தான் உம்ம பொண்ணும் விரும்பறா ஸ்வாமின்னு நானும் போட்டு உடைக்கப் போறேன்.

'ஐய்யய்யோ ஒரு பொணந்தூக்கிக்கு எப்படி என் பொண்ணை கொடுக்க முடியும்'னு சக்கரவர்த்தி அய்யங்கார் நிச்சயமா சொல்வார். 'அவன் இனி பொணந்தூக்கி எல்லாம் கிடையாது. இந்த சிங்கராச்சாரி அவனை ஸ்வீகாரம் எடுத்துண்டு என்னோட வாரிசு அவன்'னு சொல்லுவேன். அதுக்கும் அவர் மறுத்தா ரங்கனை தேசிங்கு ராஜனாக்கி மைதிலியை நீ தாராளமா தூக்கிண்டு போன்னே நான் சொல்லப் போறேன். அந்த மெட்ராஸ் மாப்ளைக்கும் போன் பண்ணி இது கட்டாயக் கல்யாணம்ப்பா... இந்த பாவத்துக்கு நீ இடம் தராதேன்னும் சொல்லுவேன்.

ஆகக் கூடி இந்த சித்திரை மாசத்து வெள்ளிக் கிழமைல அக்னி நட்சத்திரம் கொளுத்தப் போறதோ இல்லையோ எனக்கு தெரியாது. ஆனா நான் கொளுத்தப் போறேன்.

எல்லாமே ரங்கன்கற பரிதாபத்துக்குரிய ஜீவனுக்காக...

உபன்யாசத்துல நிறையப் பேர் அகக் கண்களை திறந்து வெச்சிருக்கேன். அது பேச்சு. இது செயல்!

ஒரு ஆச்சார்யன் ஸ்தானத்துல இருக்கறவர் செய்யற செயலா இதுன்னு நீ கேட்டுடாதே. கேட்டாலும் கவலை இல்லை.

அபிமன்யுவுக்கு உன் பேர் கொண்ட வத்சலாவை கல்யாணம் பண்ணி வைக்க கடோத்கஜனையே வத்சலாவா மாத்தி ஒரு நாடகம் போட்ட கிருஷ்ணபரமாத்மா தான் இந்த விஷயத்துல எனக்கு முன்னோடி.

சொல்ல வேண்டியத சொல்லிட்டேன். இனி உன் சௌகர்யம். தேசிகாச்சாரியோட சேர்ந்து வாழறது வாழாதது எல்லாமே இனி உன் விருப்பம்தான். அம்மட்டுல உனக்கு எது உசிதமோ அப்படி நடந்துக்கோ. இப்ப நான் கிளம்பறேன். தேசிகா புறப்படலாமா?''

சிங்கராச்சாரியார் காற்றேயில்லாதபடி பெய்த ஒரு கனமழை போல பெய்து முடித்துவிட்டு தேசிகாச்சாரியைப் பார்த்தார்.

அவரிடம் பிரமிப்பு. வத்சலாவுக்கு உடம்பில் இருந்த அவ்வளவு சக்தியும் ஆவியாகி அவளொரு சக்கையைப் போல் ஆகி விட்ட மாதிரி இருந்தது. உஷாவோ தனக்கு தெரிய வந்த அந்தப் புதிய உண்மைகளால் திக்கு முக்காடிப் போயிருந்தாள்.

கேள்விகள் - குறுக்கு விசாரணை - விளக்கங்கள் என்றும் எதுவுமே இல்லாத ஒரு தெள்ளத் தெளிவான விளக்கம்!

இதைத்தான் 'பாரதியும் உள்ளத்தில் ஒளியுண்டாயின் வாக்கில் அது தெரியும்' என்றானோ?

போலீஸ் ஸ்டேஷன்!

கோவிந்தனுக்கு மோசமான அனுபவங்கள் எதுவும் ஏற்படவில்லை. கலெக்டரின் போனுக்கு அப்படி ஒரு சக்தி. மளமளவென்று கம்ப்ளைண்டை ஃபைல் செய்து எஃப்.ஐ. ஆரும் போட்டு ஒரு காப்பியையும் கோவிந்தனிடம் கொடுத்துவிட்டு ''இப்பவே சுடலையாண்டி வீட்டுக்குப் போய் என்னன்னு விசாரிக்கறோம். கலெக்டர் அய்யாகிட்டயும் சாயந்தரத்துக்குள்ள ரங்கன் எங்க இருந்தாலும் பிடிச்சு முன்ன கொண்டுவந்து நிறுத்தறோம்னு சொல்லியிருக்கோம். நீங்க தைரியமா போகலாம்'' என்று தன்மையான பதிலைச் சொன்னார் எஸ்.ஐ.!

கோவிந்தனுக்கே அது ஆச்சரியமாகத்தான் இருந்தது.

சட்டமும் சக்தி படைத்தவர்களிடம் மட்டும் தான் கடமையை செய்யவே முன் வருகிறது. அதுமட்டும் அவன் வரையில் கசந்தது.

ஆஸ்பத்திரி...!

மெல்ல அரைக் கண்களைத் திறந்து பார்த்தார் சுடலையாண்டி. சுற்றிலும் அவரது சகாக்கள். டாக்டரை மீறிக்கொண்டு அருகில் இருந்தனர். செய்தியறிந்து எம்.எல்.ஏ. தன் மனைவியை மட்டும் அனுப்பியிருந்தார். அவளின் தங்கையான சுடலையாண்டியின் மனைவி தலை மாட்டிலேயே அழுதபடி நின்று கொண்டிருந்தாள்.

மெல்ல கண்திறக்கவும் அவ்வளவு பேரிடமும் மின்சாரம் பாய்ந்தது போல ஒரு பரபரப்பு.

''என்னங்க... என்னங்க... என்னங்க ஆச்சு? எப்படிங்க ஆத்துக்குள்ள உழுந்தீங்க... யாராவது வேண்டாதவங்க அடிச்சு தூக்கிப் போட்டுட்டாங்களா?''

– சுடலையாண்டியின் மனைவி பதறியபடி மளமளவென்று கேள்விகளை அடுக்கினாள்.

"சுகு... சுகு... சுகுமார் எங்க?..." அவர் பிரயாசையோடு கேட்ட நொடி அவனும் தள்ளிக் கொண்டு வேகமாய் முன் வந்தான்.

"எ... எல்லாரும் விலகிப் போங்க..." என்ற அவரது அடுத்த கட்டளை தர்மசங்கடப்படுத்தினாலும் அவரது சுபாவம் உணர்ந்து விலகி அறைக்கு வெளியில் சென்றனர்.

"அண்ணே... என்னண்ணே... எப்படி அண்ணே இப்படி ஆச்சு?"

"அத விடு, நான் இப்ப சொல்றத நல்லா கவனமா கேட்டுக்கோ..."

"சொல்லுங்கண்ணே..."

"மொத்தம் அஞ்சு சூட்கேஸ்... கறுப்பு கலர் சூட்கேஸ்! அதுக்குள்ள 116 கோடி ரூபா பணம்!"

"சரிண்ணே... சரிண்ணே..."

"அவ்வளவும் நாய்மேட்டுல இருந்து நான் பரிசல்ல சவுக்குத் தோப்புக்கு போகைல ஆத்துல மூழ்கிடுச்சி. இது யாருக்கும் தெரியாது. நீ நம்ம ஆளுங்களோட போய் எப்படியாவது அதை எடுத்து சவுக்குத் தோப்புக்கு கொண்டு போய் அப்படியே பொட்டியோட குழி தோண்டி புதைச்சுடு."

"அண்ணே... ஆத்துல எந்த இடத்துலன்னு தேடறதுண்ணே?"

"நாய்மேட்டுல இருந்து அஞ்சு நிமிஷம் பரிசல் போற தூரத்துல நடந்துச்சு... அந்த ரங்கன் பய இப்ப எங்க இருக்கான்?"

"பத்ரமா எங்ககிட்ட தாண்ணே இருக்கான்."

"அவனால நிச்சயமா பணத்தை எடுத்துத் தர முடியும். அதுல அவன் ஜித்தன்."

சுடலையாண்டி மிகுந்த பிரயாசை எடுத்து அவ்வளவுதான் பேசமுடிந்தது. அதற்குள்ளாகவே மூக்கின் வழியாக ரத்தம் வழியத் தொடங்கி விட்டது.

"அண்ணே மூக்குல ரத்தம்..." என்ற அவனும் டாக்டரை அழைத்தான். வேகமாய் வந்து பார்த்த டாக்டரின் முகத்தில் கோபம்.

"இவர் ஒரு சீரியஸ் பேஷண்ட் நுரையீரல் முழுக்க தண்ணி ஏறி ரொம்ப காம்ளிகேட்டான நிலைல இருக்கார். அபாய கட்டத்தையும் தாண்டல. இப்படியா சுத்தி நின்னு இவர்கிட்ட பேசப் பார்ப்பீங்க. இனி இவர் ரிலேஷனான எம்.எல்.ஏ.வே வந்தாலும் நான் பேச அனுமதிக்க மாட்டேன். போங்க எல்லோரும் வெளிய... போங்க... போங்க..."

– காக்கைகளை விரட்டுவது போல டாக்டரும் விரட்டினார். அவரிடம் இருந்து தகவலறிந்த சுகுமார் என்பவன் மட்டும் அந்த நொடியே பரபரப்புக்கு மாறியிருந்தான்.

56

'கடல்நீர் எழுந்தே,
வான்மிசை கிடந்தே
மேகமாய் திரிந்தே
மண்மிசை சொரிந்தே
மலையினில் சரிந்தே
நிலமிசை விரையுங்கால்
ஆறாம் செயல்
அதுவே ஆறானது!
ஆயினும் அதனுள் சில
வேறானது...
தாயினும் சாலப்
பரிந்தூட்டும் அருளானது...'

ஆஸ்பத்திரியை விட்டு வெளியே வந்த சுகுமாரிடம் தீவிரமான சிந்தனை... டாடா சுமோ காத்துக் கொண்டிருந்தது. அதில் ஏறிக் கொண்டவன் நேராக மண்குவாரி ஆபீசுக்குத் தான் போனான்.

கோட்டை போல் மதில் சுவர்களுடன், பெரிய இரும்புக் கதவுகளுடனும் இருந்த ஆபீஸ் முகப்பில் 'சுடலை ப்ளூ மெட்டல்' என்னும் பெயர் பலகை...

இரும்புக் கதவுகளை ஒட்டி காக்கி சட்டை அணிந்த காவல்காரன் ஒருவன் பார்க்க தடிமனாய் அடியாள் போல் தெரிந்தான். சுகுவின் டாடா சுமோ வரவும் கதவையும் திறந்து விட்டான். சுமோவும் உள்ளே நுழைந்து நின்றது.

இறங்கி நடந்த சுகுமாரின் எதிரில் வயதான ஒருவர் வந்தார்.

"என்ன சுப்பையாண்ணே?"

"எங்க போய்ட்டு வரேப்பா...?"

"ஆஸ்பத்திரியில இருந்துதான் வரேன்... ஏண்ணே கேக்கறீங்க?"

"ஐயாவுக்கு எப்படி இருக்குது?"

"ஒண்ணும் சொல்றதுக்கில்லண்ணே..."

"ஆத்துல சம்பாரிச்சு. ஆத்தாலேயே அழிஞ்சிடுவார் போல தெரியுதே சுகு..."

- சுப்பையா என்பவரின் அந்த கருத்து சுகுமார் என்னும் அவனை ஒரு இடி இடித்தது. முகமும் மாறியது. "ஏதோ மனசுல பட்டதை சொன்னேம்பா... அப்புறம் உன்கிட்ட ஒரு முக்கியமான் விஷயம் சொல்லணும்..."

"என்னண்ணே?"

"போலீஸ் ஸ்டேஷன்ல இருந்து போன் வந்துச்சு. ரங்கன்னு யாரையாச்சும் புடிச்சி வெச்சிருக்கீங்களான்னு?"

"விஷயம் போலீஸ் வரை போயிடுச்சா...?"

"எனக்கென்னப்பா தெரியும். இங்க அப்படி யாரும் இல்லைன்னு சொல்லி சமாளிச்சுட்டேன். ஆமா யாருப்பா அது... அவனை எதுக்கு உள்ள புடிச்சி வெச்சிருக்கீங்க?"

"அண்ணே, இப்ப அதை எல்லாம் பேச நேரமில்ல... ஆனா அந்த ரங்கன் கைலதான் நம்ம முதலாளி சம்பாரிச்ச அவ்வளவு காசு பணமும் இருக்குது..."

"என்னென்னவோ சொல்றியேப்பா... போலீஸ்காரங்க சந்தேகப்பட்டுகிட்டு இங்கேயே தேடி வந்தா என்ன பண்ண?"

"சமாளியுங்கண்ணே... நான் இப்ப அவனை கூட்டிகிட்டு நம்ம நாய் மேட்டு காவேரிக்கரை பக்கம் தான் போறேன். அங்க ஒரு முக்கியமான வேலை. முதலாளி கொடுத்துருக்காரு..."

"அப்படி என்னப்பா வேலை?"

"எல்லாத்தையும் நல்லபடியா முடிச்சுட்டு வந்தபிறகு சொல்றேன். இப்போதைக்கு ஒரு காசு இரண்டு காசு இல்ல. நூத்தி பதினாறு கோடி ரூபா ஆத்துக்குள்ள கிடக்கு... நான் தாமதிக்கற ஒவ்வொரு நொடியும் அது மண்ணுக்குள்ள புதைஞ்சுடும்... வர்றேன்..."

- அவரிடம் சொல்லிக் கொண்டு உள்ளே போன சுகுமார் அங்கே வாயில் பிளாஸ்திரியும் கைகளில் கட்டுமாய் மரவட்டை போல சுருண்டு கிடந்த ரங்கனை எழுப்பி உட்கார வைத்தான். வாயில் இருந்த பிளாஸ்த்ரியை கழற்றியவன் பின் தொடர்ந்து வந்த சுப்பையாவிடம் "அண்ணே நல்ல காபி இரண்டு சொல்லுங் களேன்..." என்றான்.

"யாரும் இல்ல... நான்தான் போய் வாங்கிட்டு வரணும்."

"வாங்கிட்டு வாங்க... அப்படியே நாலு பன்னு கொஞ்சம் வாழைப்பழத்தையும் வாங்கிட்டு வாங்க..."

- அவரும் அவர்களை திரும்பித் திரும்பி பார்த்தபடியே சென்றார்.

ரங்கன் சுகுமாரை வெறித்தான்.

"அப்படிப் பாக்காதே... உனக்கு ஆயிசு கெட்டி. இந்நேரம் நீ அந்த காவிரி ஆத்து சவுக்கு மரத் தோப்புல எரிஞ்சு சாம்பலா யிருப்பே... சாம்பலையும் எடுத்து ஆத்துல கரைச்சிருப்போம்... ஆனா உன் வரைல விதி வேற மாதிரி வேலை செய்யுது."

- சுகுமார் ரங்கனை தயார்படுத்தத் தொடங்கியிருந்தான்.

"என்னமோ விதியை நீ எழுதின மாதிரி பேசறே?"

- ரங்கனும் பதில் பேசத் தொடங்கினான்.

"நாங்க நினைச்சா உன் விதியை எப்படி வேணா எழுதுவோம். இப்பக் கூட நீ உயிர் பிழைக்கறது என் பேச்சை நீ கேக்கறதுல தான் இருக்கு..."

"என்ன மிரட்றியா?"

"அப்ப இவ்வளவு நேர்மா உன்னை கொஞ்சிக்கிட்டு இருந்ததா நீ நினைச்சுகிட்டிருக்கியா?"

"இல்ல... கோழை மாதிரி என்னை கட்டிப்போட்டு தப்பு தப்பா என்னவெல்லாமோ பண்ணிக்கிட்டிருக்கீங்க!"

"இதோ பார்... நான் உன் வாய்ல இருந்து பிளாஸ்ட்ரிய இப்ப எடுத்தது நீ இப்படியெல்லாம் பேசறத கேக்கறதுக்காக இல்ல... உன் மேல பரிதாபப்பட்டுத்தான்... தெரிஞ்சுக்க..."

"ஆடு நனையுதுன்னு ஓநாய் அழுதிச்சாம்... அப்படியா?"

"பைத்தியக்காரா... நான் ஓநாய் இல்ல... உன்னை மாதிரி ஒருத்தன். கூலிக்கு மாரடிக்கறவன்... புரிஞ்சுக்க... நான் என்ன சொல்லப்போறேன்னும் கவனமா கேள்..."

"முதல்ல என் கை கட்டை எல்லாம் அவுத்து விடு..."

"அவுத்து விடத்தான் போறேன்... அதுமட்டுமில்ல இப்ப காபியும் பன்னும் வரும். சாப்பிடு... முதல்ல கொஞ்சம் உனக்கு தெம்பு வரட்டும்..."

"அதான் கொல்லப் போறதா சொல்றியே... எனக்கெதுக்கு தெம்பு...?"

"தொண தொணன்னு பேசாம காபி வரும் குடி... அப்புறமா நாம ரெண்டு பேரும் நேரா காவிரி ஆத்துக்குப் போறோம். அங்க ஆத்துக்குள்ள உனக்கு ஒரு வேலை இருக்குது."

"அதான பார்த்தேன்... எதுக்கு எனக்கு தெம்புன்னும் தெரிஞ்சு போச்சு. ஆமா ஆத்துக்குள்ள இந்தத் தடவை யாரைக் கொன்னு போட்டுருக்கீங்க..."

"ஆத்துக்குள்ள நீ எடுக்கப் போறது பொணத்த இல்ல... பணத்தை...!"

- சுகுமார் சொல்லி நிறுத்தவும் சுப்பையா கையில் காபி பன்னுடன் வரவும் சரியாக இருந்தது. அவர் காதுகளிலும் சுகுமார்

சொன்ன 'பொணத்த இல்ல பணத்தை' என்கிற வார்த்தைகள் விழுந்ததில் அவர் முகத்திலும் மாறுதல்கள்.

"இந்தா காபியைக் குடி..."

"எனக்கும் சேர்த்து நீயே குடி. உங்க கையால தண்ணி குடிக்கறது கூட பாவம்..."

"வேண்டாம்... இந்த வீராப்பெல்லாம் உனக்கு உதவி செய்யாது."

"எனக்கு யார் உதவியும் எப்பவுமே தேவைப்பட்டதில்ல, அது தெரியுமா உனக்கு..."

- ரங்கனின் தீர்க்கமான பேச்சு சுப்பையாவையே ஆச்சரியப்பட வைத்தது.

"சுகுமார்... என்னய்யா பொணம் பணம்னுகிட்டிருந்தே, என்ன விசயம்?" - என்று விஷயத்தைத் தொட்டார்.

"அண்ணே, கொஞ்சம் முந்திதானே சொன்னேன் நூத்திப் பதினாறு கோடி ரூபா ஆத்துக்குள்ள கிடக்குதுன்னு... அஞ்சாறு சூட்கேஸ்ல அவ்வளவு பணத்தையும் சவுக்குத் தோப்புக்கு எடுத்துட்டுப் போக பாத்துருக்காரு நம்ம முதலாளி..."

ரங்கன் எதிரில் நடந்ததை அப்படியே சொல்லியும் முடித்தான்.

"ஐயோடா... நூத்தி பதினாறு கோடி ரூபா இப்ப காவிரி ஆத்துக்குள்ள கிடக்குதா?"

"ஆமாண்ணே... அதை எப்படியாவது இவனோட போய் எடுக்கணும். இவனுக்குத்தான் காவிரி ஆறுங்கறது விளையாட்டு மைதானம் ஆச்சே?"

- ரங்கனிடம் அதைக் கேட்டு வெகுவான ஆச்சரியம். "ஏய்... என்ன பாக்கறே... நீ அந்த சூட்கேசுங்கள எடுத்துக் கொடுத்துட்டா உனக்கு விடுதலை மட்டுமில்ல, ஒரு அஞ்சாறு லட்ச ரூபாயை முதலாளிகிட்ட கேட்டு வாங்கியும் தரேன். சரியா?"

- ரங்கன் அதைக் கேட்டுச் சிரித்தான்.

"சிரிக்காதே... இன்னும்கூட கூட வாங்கித் தரேன்."

"பார்றா... அப்புறம்?"

''ரங்கா... உன் கூட இப்ப வாக்குவாதம் பண்ண நேரமில்ல. நீ இப்ப எங்க கூட வர்றே... அந்த சூட்கேசுங்களையும் எடுத்துக் கொடுக்கறே...''

- சுகுமார் குரலில் கடுமை கூடியது. வாயில் திரும்பவும் பிளாஸ்த்ரியை ஒட்டியவன் சுப்பையாவின் உதவியுடன் அவனைத் தூக்கி தன் டாடா சுமோ நோக்கி அழைத்துச் சென்றான்.

பின்பக்கமாக கதவைத் திறந்து உள்ளேயும் தள்ளி கதவையும் மூடினான்.

''சுப்பையாண்ணே, நீங்களும்கூட வாங்க... இல்லாட்டி இவனை சமாளிக்கறது கஷ்டம்...'' என்று அவருடன் மீண்டும் டாடா சுமோவில் ஏறிக் கொள்ள அது சீறிக் கொண்டு புறப்பட்டது!

மதிய வேளை...

ஊஞ்சலில் மைதிலி! தன் நினைவே இல்லாமல் பிரமை பிடித்தது போல் உட்கார்ந்திருந்தவள் கைகளில் மருதாணி வைத்துவிட்டு அவளை புதுப் பெண்ணாக்கும் சடங்குகளில் ஒரு கூட்டமே மூழ்கியிருந்தது. ஓடியாடி எல்லாவற்றையும் எடுத்து வைத்துக் கொண்டு சென்னை புறப்படுவதற்கான முஸ்தீபுகளில் இருந்தாள் ரேவதி.

சீமாவும் அவனது சித்தப்பா மகளான ஸ்ரீநிதியும் தெருவில் இருக்கும் முக்கியப்பட்டவர்களுக்கு கல்யாண அழைப்பை விட்டுவிட்டு அப்போதுதான் உள் நுழைந்தபடி இருந்தனர். சக்கரவர்த்தி அய்யங்கார் மனைவி ஜானகியை பார்த்து விட்டு வருவதற்காக ஆஸ்பத்திரி வரை போயிருந்தார்.

அப்போதுதான் சிங்காரச்சாரியாரும் தேசிகாச்சாரியாரும்கூட வீட்டு வாசலில் தட்டுப்பட்டனர்.

ரேவதிக்கு தேசிகாச்சாரியை பார்க்கவும் அதுவும் சிங்கராச்சாரியாருடன் பார்க்கவும் பகீரென்றது. இருந்தும் காட்டிக் கொள்ளாதபடி சமாளிக்கத் தொடங்கினாள்.

அவர்கள் உள் வரவும் வரவேற்றாள்.

''வாங்கோ மாமா... வாங்கோ...''

''என்னம்மா... எப்படி இருக்கே?''

''நன்னா இருக்கேன் மாமா... உங்காத்துல மாமி சௌக்யமா?''

''ஆஹா... அவளுக்கென்ன... ரொம்பவே க்ஷேமமா இருக்கா... ஆமா எங்க உன் மாமனார்?''

''வெளில போயிருக்கார்... நீங்க இப்படி உக்காருங்கோ''

- ரேவதி இரண்டு நாற்காலிகளை காட்டினாள். அவர்களும் அமர்ந்தனர். எதிரில் ஊஞ்சலில் மைதிலி. அருகில் இரண்டு பக்கமும் இரண்டு பெண்கள். தாழ்ந்திருந்த அவள் சிரம் மெல்ல நிமிர்ந்து சிங்கராச்சாரியாரையும் தேசிகாச்சாரியாரையும் பார்த்தது. அந்தப் பார்வையில் அப்படி ஒரு சோகம்.

''என்னம்மா, கல்யாண வேளை வந்துடுத்தாட்டமிருக்கே!''

-சிங்கராச்சாரியார் நைச்சியமாக பேச்செடுத்தார். சீமாவும் உள்ளே போய் சட்டையைக் கழற்றி ஹேங்கரில் மாட்டிவிட்டு முண்டா பனியனுடன் வந்தவன் அவர்கள் இருவரையும் பார்த்து ''வாங்கோ மாமா... வாங்கோ'' என்றான்.

''என்ன சீமா... கல்யாண பரபரப்புல இருக்க போல தெரியறதே?''

''ஆமாம் மாமா... நல்ல வரன் அமைஞ்சிருக்கு. முடிச்சுட்றது தானே நல்லது... ஆமாம் அப்பாவை பாக்க வந்தேளா?''

''ஆமாம்ப்பா... ரொம்ப முக்கியமான விஷயம்...''

''என்ன விஷயம் மாமா...''

''அதை உன் அப்பாட்ட பேசறதுதான் ஸ்லாக்யம்... எப்பப்பா வருவார்?''

''அது... இப்ப வந்துடுவார்... நாங்கல்லாம் நாலு மணிக்கெல்லாம் புறப்பட்டாகணுமே...''

''அதுக்கு அவசியம் இருக்காதுன்னு நினைக்கறேன்...''

-சிங்கராச்சாரியார் அப்படிச் சொல்லவும் சீமாவிடம் ஒரு திகைப்பு. ரேவதிக்கோ அவர் சொன்ன அந்த சில வார்த்தைகளே பல விஷயங்களை புரிய வைத்துவிட்டது.

''என்ன மாமா சொல்றேள்?''

''நான் சொல்றது இருக்கட்டும். மைதிலிக்கு இந்தக் கல்யாணத்துல இஷ்டம் இருக்கா... முதல்ல அதுக்கு பதிலைச் சொல்...''

-சிங்கராச்சாரியார் நீட்டி முழக்காதபடி விஷயத்துக்கு வரவும் அது சுரீர் என்று சீமாவை தைக்கவும் செய்தது.

''என்ன மாமா, உங்க பேச்சே ஒரு தினுசா இருக்கே?''

''இதுக்கே இப்படி சொன்னா எப்படி? நான் சொல்லப் போற சில உண்மைகளை நீ கேட்டா என்ன நினைப்பியோ தெரியலியே...''

- அவரிடம் பீடிகையும் பலமாகியது. மைதிலியிடம் மட்டும் ஒரு புது தெம்பு. அத்தோடு நிமிர்ந்தாள். சுற்றி இருப்பவர்களும் ஒரு மாதிரி பார்க்கத் தொடங்கிவிட்டனர். ரேவதிக்கு பதைக்க ஆரம்பித்துவிட்டது.

''மாமா, நீங்க செத்த மாடிக்கு வாங்கோ... எதுவா இருந் தாலும் அங்க போய் பேசுவோம்.'' என்று ரேவதி சட்டென்று ஒரு பிரேக் போட்டாள்.

சிங்கராச்சாரியாரும் தேசிகாச்சாரியும் ஒரு முடிவோடு மாடிப்படி ஏறினர். ரேவதி சீமாவின் காதுகளில் குசுகுசுத்தாள்.

''இவா ரெண்டு பேரும் ஏதோ திட்டம் போட்டு வந்துருக்கா. அந்த வத்சலா மாமி எதனா குட்டி கலாட்டா பண்ணப் பாக்கறாளோ என்னவோ...? நல்ல வேளை உங்கப்பா இப்ப இல்லை. இவா என்ன பேசினாலும் சரி... நீங்க வாயைத் திறக்கக் கூடாது. இவாளை நான் சமாளிச்சுக்கறேன், நீங்க என் கூட இருந்தா போதும்'' என்றாள் ரேவதி.

சீமாவும் கோயில் மாடு மாதிரி தலையை ஆட்டினான். அதே போக்கோடு தனி அறைக்குள் அவனோடு சென்று யாருக்கும் கேட்டுவிடாதபடி கதவையும் சாத்தினான்.

இப்போது அவர்கள் எதிரில் சிங்கராச்சாரியாரும் தேசிகாச்சாரி யாரும்...

''உம்... உங்க அதிரடி உண்மைகளை அவுத்து விடுங்கோ...''

-ரேவதி கிண்டலாய் அவர்களை எதிர்கொள்ளத் தயாரானாள்.

57

'மேகம் விடுத்தேன் - மலை
முகடில் விழுந்தேன்
தேகம் குளிர்ந்தேன் - நில
பாகம் குதித்தேன்
வேகம் எடுத்தேன் - வழித்
தாகம் துடைத்தேன்
பாவம் கரைந்தேன் - சிலர்
பாசத்தில் சிலிர்த்தேன்...!'

ரேவதி சிங்கராச்சாரியாரையும் தேசிகாச்சாரியாரையும் எதிர் கொண்ட விதத்தில் ஒருவித இளக்காரமும் அவர்களை சுதந்திர மாய் சமாளிக்கும் விதமும் இருப்பதை அவள் பேசிய தொனியை வைத்தே, சிங்கராச்சாரியார் உணர்ந்து கொண்டுவிட்டார்.

''ஏம்மா சக்கரவர்த்தியோட மாட்டுப் பொண்ணே... உன் ஆரம்பமே சரியில்லையே...'' என்றார். அவரின் பேச்சு சீமாவை சற்று சஞ்சலப்படுத்தியது. அவன் அவர் மேல் மிகுந்த மதிப்பு உடையவன். எனவே மைதிலியை சங்கடத்தோடு பார்த்தான். அவளோ அதை பொருட்படுத்தவேயில்லை.

''நீங்க விஷயத்துக்கு வாங்கோ... எங்களுக்கு கல்யாண வேலை தலைக்கு மேல இருக்கு... ஆரம்பமும் முடிவும், ஒரு ப்ரெஷர்ல இருக்கறவா கிட்ட எப்படி சரியா இருக்க முடியும்?'' என்றாள். சிரித்தார் சிங்கராச்சாரியார்.

அது மனம் விட்டுச் சிரிக்கும் சிரிப்பல்ல... சில நேரங்களில் சிலரை உத்தேசித்து உருவாகும் வருத்தமும் சிரிப்பாகத்தான் வெளிப்படும். அப்படி ஒரு சிரிப்பு அது.

''என்ன சீமா... நீ எதுவும் பேச மாட்டியா...? இந்த அகம் என்ன மதுரையா?'' என்று பொடி வைத்து பதில் கேள்வி கேட்டார்.

''சேச்சே... என்ன மாமா நீங்கோ... ரேவதி, நீ போய் காபி போட்டு எடுத்துண்டு வா. நான் மாமாண்ட என்ன ஏதுன்னு

பேசிண்டிருக்கேன்...'' என்று அவளுக்கு கூட்டளையும் இட்டு
அந்த வீடு மதுரை அல்ல சிதரம்பரம்தான் என்பதைக் காட்ட
முற்பட்டான். அவளோ அவனை ஒரு முறை முறைத்தவள்.
''இப்ப போய் 'காபி போட்டு எடுத்துண்டு வா'ங்கறேளே...
சென்னைக்கு இளம்பியாச்சு அடுப்படியை அலம்பி பாத்திரங்
களையும் கழுத்து வெச்சுட்டது உங்களுக்கு தெரியாதாக்கும்?..
என்றாள்.

அவனுக்கு ரொம்பவே தர்மசங்கடமாகிவிட்டது. அவர்கள்
எதிரில் வழிந்தான்.

''சீமா... காபியெல்லாம் வேண்டாம். அதை ரசனையோட
சாப்பிட்ற நிலைலயும் நாங்க இல்லை. உங்க அப்பா கிட்ட நாங்க
சில விஷயங்களை அவசரமா பேசியாகணும். ரொம்ப அவசரம்...''

''அவர் அம்மாவைப் பாக்க ஆஸ்பத்திரிக்கு போயிருக்கார்.
நாங்க இங்க ரெடியாயிண்டு இருக்கோம். கொஞ்ச நாழில
டெம்போ டிராவலர் வந்துடும். நேரா ஆஸ்பத்திரிக்குப் போய்
அப்பாவை கூட்டிண்டு அம்மாகிட்டயும் சொல்லிண்டு சென்னை
இளம்பறதுதான் எங்க பிளான். ராத்திரி பத்து மணிக்குள்ள
போயாகணும்.

''அப்பாவுக்கு போன் போட்டு கொஞ்சம் இங்க வரச் சொல்ல
முடியுமா?''

''அப்படி என்ன மாமா அவசரம்... என்னண்ட பேசலாமே?''

''இத அவரண்டதான் பேசணும். ஆமா இந்த கல்யாணத்துல
மைதிலிக்கு சம்மதமா?''

''என்ன மாமா கேள்வி இது...? சம்மதம் இல்லாமத்தான் எல்லா
ஏற்பாடும் செய்திருக்கோமா?''

''சீமா... தயவு செய்து என்கிட்ட பொய் சொல்லாதே...
எங்களுக்கு நன்னாத் தெரியும் இந்த கல்யாணத்துல மைதிலிக்கு
துளிகூட இஷ்டம் கிடையாதுன்னு...'' சிங்கராச்சாரியார் சொல்லி
முடிக்கவும் ரேவதி சிலிர்ப்பிக்கொண்டு முன்வந்தவளாய்

''இப்ப அவளுக்கு இஷ்டம் இருக்கு, இல்லை... அதைக் கேட்க
நீங்க யார்... உங்களுக்கு இப்ப என்ன வேணும்?'' என்றாள்
கோபமாய்...

''ரேவதி... நீ செத்த வாய மூடிண்டு இருக்கியா. தலை
இருக்கும்போது வால் ஆடக்கூடாது. அதான் சீமா
பேசிண்டிருக்கானோல்லியோ?''

''அதுவரை பேசாத தேசிகாச்சாரியிடம் கோபம் பீரிட்டது.
''நீங்க பேசாத பார்த்தா இந்த கல்யாணத்தை திட்டம் போட்டு
நிறுத்த வந்துருக்கற மாதிரி தான் தெரியறது...''

''இட்டத்தட்ட அப்படித்தான்'' - என்றார் சிங்கராச்சாரியார்.
சீமாவுக்கு பகீரென்றது.

''மாமா என்ன பேசறேள்... நான் உங்க மேலே ரொம்பவே
மரியாதை வெச்சுண்டுருக்கேன்...''

''சரியாச் சொன்னே சீமா... நீ மட்டுமல்ல... ரொம்பப் பேர்
என் மேல ரொம்பவே மரியாதை வெச்சிண்டிருக்கா... அதுதான்
இப்ப என் பிரச்சினையே... அதை காப்பாத்திக்கத்தான் நானும்
இப்படி எல்லாம் பேச வேண்டியிருக்கு...''

''நீங்க காப்பாத்திக்கற மாதிரி தெரியல... அதை கெடுத்துக்கற
மாதிரி இருக்கு...''

''அப்ப உனக்கு சரியா யோசிக்கத் தெரியலன்னு அர்த்தம். சரி
நான் நேரா விஷயத்துக்கு வரேன். கொஞ்சம் கவனமா
கேட்டுக்கோ. உன் தங்கை மைதிலி, ரங்கனை உயிருக்குயிரா
காதலிக்கறா. அவனும் காதலிக்கறான். உடனே அவசரப்பட்டு
அந்த பொணந்தூக்கியான்னு கேட்டுடாதே... அவன் அப்படி
ஆனதுக்கு இதோ இந்த தேசிகாச்சாரிதான் காரணம். தேசி
மிச்சத்த நீயே சொல்லு...''

''சொல்றேண்ணா... சொல்லித்தானே தீரணும். சீமா... நான்
சொல்லப்போறது உனக்கு அதிர்ச்சியா இருக்கலாம். ஆனா
ரங்கநாதருக்கு பொதுவா நான் சொல்றதெல்லாம் சத்தியம்.
ரங்கன் யாரோ இல்லை. எனக்கும் என் முதல் மனைவிக்கும்
பிறந்தவன். என் முதல் மனைவியும் யாரோ இல்ல. என்
உறவுக்காரிதான்! பங்காளிச் சண்டைல பிரிஞ்சிருந்த குடும்பம்
எங்க கல்யாணத்தால ஒண்ணு சேரும்னு நினைச்சு தான்
கல்யாணம் பண்ணிட்டேன். ஆனா நான் நினைச்ச மாதிரி

பேசிண்டிருக்கேன்...'' என்று அவளுக்கு கட்டளையும் இட்டு அந்த வீடு மதுரை அல்ல சிதரம்பரம்தான் என்பதைக் காட்ட முற்பட்டான். அவளோ அவனை ஒரு முறை முறைத்தவள், ''இப்ப போய் 'காபி போட்டு எடுத்துண்டு வா'ங்கறேளே... சென்னைக்கு இளம்பியாச்க அடுப்படியை அலம்பி பாத்திரங்களையும் கழுத்து வெச்சட்டது உங்களுக்கு தெரியாதாக்கும்?'' என்றாள்.

அவனுக்கு ரொம்பவே தர்மசங்கடமாகிவிட்டது. அவர்கள் எதிரில் வழிந்தான்.

''சீமா... காபியெல்லாம் வேண்டாம். அதை ரசனையோட சாப்பிட்ற நிலைலயும் நாங்க இல்லை. உங்க அப்பா கிட்ட நாங்க சில விஷயங்களை அவசரமா பேசியாகணும். ரொம்ப அவசரம்...''

''அவர் அம்மாவைப் பாக்க ஆஸ்பத்திரிக்கு போயிருக்கார். நாங்க இங்க ரெடியாயிண்டு இருக்கோம். கொஞ்ச நாழில டெம்போ டிராவலர் வந்துடும். நேரா ஆஸ்பத்திரிக்குப் போய் அப்பாவை கூட்டிண்டு அம்மாகிட்டயும் சொல்லிண்டு சென்னை இளம்பறதுதான் எங்க பிளான். ராத்திரி பத்து மணிக்குள்ள போயாகணும்.

''அப்பாவுக்கு போன் போட்டு கொஞ்சம் இங்க வரச் சொல்ல முடியுமா?''

''அப்படி என்ன மாமா அவசரம்... என்னண்ட பேசலாமே?''

''இத அவரண்டதான் பேசணும். ஆமா இந்த கல்யாணத்துல மைதிலிக்கு சம்மதமா?''

''என்ன மாமா கேள்வி இது...? சம்மதம் இல்லாமத்தான் எல்லா ஏற்பாடும் செய்திருக்கோமா?''

''சீமா... தயவு செய்து என்கிட்ட பொய் சொல்லாதே... எங்களுக்கு நன்னாத் தெரியும் இந்த கல்யாணத்துல மைதிலிக்கு துளிகூட இஷ்டம் கிடையாதுன்னு...'' சிங்கராச்சாரியார் சொல்லி முடிக்கவும் ரேவதி சிலிர்ப்பிக்கொண்டு முன்வந்தவளாய்

''இப்ப அவளுக்கு இஷ்டம் இருக்கு, இல்லை... அதைக் கேட்க நீங்க யார்... உங்களுக்கு இப்ப என்ன வேணும்?'' என்றாள் கோபமாய்...

''ரேவதி... நீ செத்த வாய மூடிண்டு இருக்கியா. தலை இருக்கும்போது வால் ஆடக்கூடாது. அதான் சீமா பேசிண்டிருக்கானோல்லியோ?''

''அதுவரை பேசாத தேசிகாச்சாரியிடம் கோபம் பீரிட்டது. ''நீங்க பேசறத பார்த்தா இந்த கல்யாணத்தை திட்டம் போட்டு நிறுத்த வந்துருக்கற மாதிரி தான் தெரியறது...''

''ஓட்டத்தட்ட அப்படித்தான்'' - என்றார் சிங்கராச்சாரியார்.

சீமாவுக்கு பகீரென்றது.

''மாமா என்ன பேசறேள்... நான் உங்க மேலே ரொம்பவே மரியாதை வெச்சுண்டுருக்கேன்...''

''சரியாச் சொன்னே சீமா... நீ மட்டுமல்ல... ரொம்பப் பேர் என் மேல ரொம்பவே மரியாதை வெச்சிண்டிருக்கா... அதுதான் இப்ப என் பிரச்சினையே... அதை காப்பாத்திக்கத்தான் நானும் இப்படி எல்லாம் பேச வேண்டியிருக்கு...''

''நீங்க காப்பாத்திக்கற மாதிரி தெரியல... அதை கெடுத்துக்கற மாதிரி இருக்கு...''

''அப்ப உனக்கு சரியா யோசிக்கத் தெரியலன்னு அர்த்தம். சரி நான் நேரா விஷயத்துக்கு வரேன். கொஞ்சம் கவனமா கேட்டுக்கோ. உன் தங்கை மைதிலி, ரங்கனை உயிருக்குயிரா காதலிக்கறா. அவனும் காதலிக்கறான். உடனே அவசரப்பட்டு அந்த பொணந்தூக்கியான்னு கேட்டுடாதே... அவன் அப்படி ஆனதுக்கு இதோ இந்த தேசிகாச்சாரிதான் காரணம். தேசி மிச்சத்த நீயே சொல்லு...''

''சொல்றேண்ணா... சொல்லித்தானே தீரணும். சீமா... நான் சொல்லப்போறது உனக்கு அதிர்ச்சியா இருக்கலாம். ஆனா ரங்கநாதருக்கு பொதுவா நான் சொல்றதெல்லாம் சத்தியம். ரங்கன் யாரோ இல்லை. எனக்கும் என் முதல் மனைவிக்கும் பிறந்தவன். என் முதல் மனைவியும் யாரோ இல்ல. என் உறவுக்காரிதான்! பங்காளிச் சண்டைல பிரிஞ்சிருந்த குடும்பம் எங்க கல்யாணத்தால ஒண்ணு சேரும்னு நினைச்சு தான் கல்யாணம் பண்ணிட்டேன். ஆனா நான் நினைச்ச மாதிரி

நடக்கல. விதி இதே ஊர்ல வத்சலாவை இரண்டாம் தாரமா எனக்கு கல்யாணத்த பண்ணி வெச்சுடுத்து.

என் முதல் கல்யாணம் குஜராத்துல நடந்தது. கொஞ்ச நாள் வாழ்ந்ததுலேயே ரங்கன் உண்டாயிட்டான். ஒரு பக்கம் வத்சலா, மறுபக்கம் அவ... நான் தத்தளிச்சேன். ஆனா என்ன ரொம்ப சோதிக்காம அவ ஆத்தோட போயிட்டா. ரங்கன் அனாதையா அம்மா மண்டபம் கரைல நின்னான். மனச கல்லாக்கிண்டு அப்ப நான் வேடிக்கை பார்த்தேன். காலமா பாத்து என் முதல் மனைவியைக் கொண்டு போய், என் பிரச்சினையும் தீர்ந்ததா நான் நினைச்சுட்டேன். ஆனா அதே காவிரில என் இரண்டாவது பிள்ளைய கொண்டு போய் காலம் என்னை பெருசா தண்டிச்சிடுத்து. மனசாட்சியோட உறுத்தல் தாங்காம, ரங்கன் பட்ற பாட்டையும் பொறுக்க முடியாம நான் மாமாவை குருவாவும் பெருமாளாவும் நினைச்சு எல்லா உண்மைகளையும் சொல்லி அழுதேன். அப்பத்தான் மைதிலி ரங்கனை நேசிக்கற விஷயமெல்லாமும் தெரிய வந்தது. இவ்வளவு நாள் வாழாத பிள்ளைக்கு இனியாவது ஒரு வாழ்க்கை அமையணும்னு தான் மாமாவும் நானும் இங்க வந்துருக்கோம்''

தேசிகாச்சாரி கண்ணீர் திரள பேசியது சீமாவை ஒரு உலுக்கு உலுக்கிவிட்டது.

''என்ன மாமா இது... அந்தக் காலத்து நாவல் ஒண்ண படிக்கற மாதிரி இருக்கு. நிஜத்துல இப்படி எல்லாம் கூடவா நடக்கும்?''

சீமா தட்டுத் தடுமாறிக் கேட்டான்.

''அட நீங்க வேற... என்ன நடந்ததுன்னு நான் சொல்றேன் இப்போ... அதை நீங்க கேளுங்கோ! உங்க தங்கை இவாளைப் பாத்து தன் காதலை சொல்லி உதவி செய்யும்படி உளறியிருக்கா. உடனே இவாளும் இந்தக் கல்யாணத்த பண்ண எந்தப் பொய்ய சொன்னா உங்கப்பா ஒத்துப்பாரோ அப்படி ஒரு பொய்யாக நன்னா உக்காந்து பேசி முடிவெடுத்துட்டு வந்துருக்கா.

எந்த அப்பனாவது தன் கண் எதிர்ல தான் பெத்த பிள்ளை ஒரு பொணந்தூக்கியா திரியறதை வேடிக்கை பாத்துண்டு இருப் பானா? இவா தான் கதை விட்றான்னா நீங்களும் அந்தக் கால

நாவலில் இந்தக் கால நாவலில்னு பதிலுக்கு பேசிண்டிருக் கேளே!''

என்ற ரேவதியை தேசிகாச்சாரி சற்று சிவந்துவிட்ட விழிகளுடன் உற்று நோக்கினார்.

''போறும்... முறைக்காம கிளம்புங்கோ.

உக்காத்து மாமியைப் பத்தி எனக்கு நன்னா தெரியும். பெத்த பிள்ளையைத்தான் காவிரி கொண்டு போயிடுத்து. அதனால இப்படி ஒரு குறுக்கு வழிய மாமியே கூட சொல்லிக் கொடுத் தருப்பா... ஏன்னா எங்க தென்னந் தோப்பு மேல அப்படி ஒரு கண்ணு மாமிக்கு...''

-ரேவதி பேசப்பேச தேசிகாச்சாரிக்குள் பற்றி எரிந்தது மனது.

''வேண்டாம்மா... நாக்கு இருக்குங்கறதுக்காக இஷ்டத்துக்கும் பேசாதே... இந்த உண்மையை இத்தனை நாளா மட்டுமல்ல... இனியும் வெளிய சொல்லக் கூடாதுன்னு தடுத்தவளே என் ஆம்படையாதான். இப்பக்கூட அவளை மீறிண்டு வந்துதான் பேசறேன்.

நீங்க இத்தனை சீக்கிரமா ஒரு கல்யாண ஏற்பாடு பண்ணு வேன்னுல்லாம் எனக்கு சத்தியமா தெரியாது.

சீமா தயவு செய்து நான் சொல்றத கேள். செத்த உங்கப்பாவை வரச் சொல். நாங்க ரெண்டு பேரும் ஆஸ்பத்திரிக்குப் போய் இந்த விஷயங்கள் பேச ரொம்ப நாழி ஆயிடாது. ஆனா உங்கம்மா அங்க இருக்கற இருப்புக்கு இதை அங்க பேசறது விவேகம் கிடையாதுன்னுதான் இங்க வரச் சொல்றோம்...''

''இல்ல மாமா... இங்க எல்லா ஏற்பாடுகளையும் பண்ணி முடிச்சாச்சு. ரொம்ப கஷ்டப்பட்டு இந்த இடத்தைப் பிடிச்சு நிறுத்தியிருக்கோம். ஏற்கெனவே மைதிலியோட கல்யாண ராசி பத்தி இந்த ஊரே என்ன பேசறதுன்னு உங்களுக்குத் தெரியும். இப்ப இன்னொரு தடவை அது நின்னு போறத என்னால கற்பனைகூட பண்ண முடியில.

அதோட ரங்கன் உங்க பிள்ளையாவே இருக்கட்டும் என் தங்கையை கல்யாணம் பண்ணிக்க எந்தத் தகுதியும் அவனுக்கு இல்லேன்னுதான் நான் நினைக்கறேன். அவ காதலிக்கறாளேன்னு

நீங்க சொல்லலாம். இந்த வயசுல வர்ற ஒரு இனக் கவர்ச்சி அது... நல்லபடியா கல்யாணம் ஆயிடுத்துன்னா காலம் போகப் போக அதெல்லாம் சரியா போயிடும். இதுக்கு மேல என்கிட்ட ஆர்கியு பண்ணாம நீங்க கிளம்பறதுதான் உங்க ஸ்தானத்துக்கு நல்லது.''

சீமா கை எடுத்து கும்பிட்டவனாகப் பேசவும் சிங்கராச்சாரியாரால் அதற்கு மேல் எதுவும் பேச முடியவில்லை. தேசிகாச்சாரியையைதான் பதிலுக்குப் பார்த்தார். அவரோ விசும்பி விசும்பி அழத் தொடங்கியிருந்தார். ''சீமா உன் கால்ல கூட விழறேன். ரங்கனை தயவு செய்து வெறும் பயலா நினைக்காதே. அவன் ரொம்ப விசேஷமானவன். நம்ப யார்க்கும் இல்லாத பல விசேஷ குணங்கள் அவன்கிட்ட இருக்கு. அவனும் மைதிலியும் கல்யாணம் பண்ணிண்டா ரொம்ப ஸ்ரேயசோட இருப்பா. மைதிலியும் சந்தோஷமா வாழுவா. சொன்னாக் கேளு சீமா...''

– தேசிகாச்சாரி கைகளை கூப்பிக் கொண்டு மார்புச் சதைகளில் மடிப்பு விழ கேவி அழுதார்.

''இதோ பாருங்கோ... இனியும் இவாளண்ட பேசறது நமக்கு தான் அசிங்கம். முதல்ல போலீஸுக்கு போன் பண்ணுங்கோ. பெரியவா இல்லாத ஆத்துல வந்து கலாட்டா பண்றான்னு சொல்லி இவா மானத்த வாங்கினா தான் சரிபட்டு வரும்''

– ரேவதியின் வெடிப்பு சிங்கராச்சாரியாரை சுண்டிவிட்டது போல எழுப்பியது.

''புறப்படு தேசி...''

''அண்ணா...''

''நம்ம யத்தனம் முடிஞ்சு போச்சு. இனி விதிப்படிதான் எல்லாம் நடக்க முடியும்...''

''அண்ணா நீங்களா இப்படிப் பேசறேள்...''

''என்னாலதான் இப்படிப் பேசவும் முடியும். நம்ம கையால பண்ண முடிஞ்ச அவ்வளவையும் ஒரு துளி குறையுமில்லாம பண்ணியாச்சு. எப்ப நாம இங்க வரும்போது சக்கரவர்த்தி இல்லாம போய்ட்டாரோ அப்பவே விதி வேற விதமா நினைக்கறது எனக்குத் தெரிஞ்சு போச்சு. இனி எது செய்தாலும் அதுல விவேகமும் கிடையாது. வீரியமும் கிடையாது. புறப்படு...''

சிங்கராச்சாரியார் அறைக்கதவை திறந்து கொண்டு மாடிப் படிகளில் இறங்கி நடந்தார். தேசிகாச்சாரியாரும் வேறு வழியின்றி அவரை பின் தொடர்ந்தார். இருவருமே வெளியேறி விட்ட நிலையில் இதே மைதிலியைத்தான் காணவில்லை. பின் தொடர்ந்து வந்த ரேவதி அலங்காரம் செய்த பெண்களிடம் பதற்றத்தோடு கேட்டாள்...

''எங்கடி அவ...?''

''தாயார் சந்நிதி வரைக்கும் போய்ட்டு வரேன்னுட்டு போனா...''

''இப்ப எந்த சந்நிதி திறந்திருக்கும், அறிவில்ல உங்களுக்கு?''

''நாங்களும் கேட்டோம். சும்மா வெளிய கதவுகிட்ட நின்னு சேவிச்சுட்டு வரேன்னா...''

அவர்கள் சொல்லச் சொல்ல பி.பி. எகிறியது ரேவதியிடம்.

''உங்க தங்கை என்கிட்டயே வேலையைக் காட்டப் பாக்கறா அவளா நானான்னு பாக்கறேன்...'' என்று மைதிலியை தேடிக் கொண்டு அவளும் புறப்பட்டுவிட்டாள்.

கோவிந்தன் கடை!

கிட்டத்தட்ட கல்யாணப் பொண்ணுக்கான அலங்காரத்தோடு சைக்கிளில் வந்து நின்ற மைதிலியைப் பார்த்து விக்கித்துப் போனான் கோவிந்தன்.

''அம்மா நீங்களா?''

''அவர் எங்க?''

''யாரு ரங்கனைக் கேக்கறீங்களா?''

''நான் வேற யாரைக் கேட்பேன். நான் உடனே அவரைப் பாத்தாகணும்.''

''அது வந்தும்மா...''

''எது வந்து? ஏன் மென்னு முழுங்கறேள்?''

– மைதிலி ஒரு காலை தரையில் ஊன்றியபடி சைக்கிளில் அமர்ந்துகொண்டே ஒருவித ஆவேசத்தோடு கேட்டது கோவிந்தனை உலுக்கியது.

அவன் சுடலையாண்டி ஆட்களின் பிடியில் மரணப் போர் நிகழ்த்திக் கொண்டிருக்கிறான் என்பதை எப்படிச் சொல்வது?

''கோவிந்தண்ணா, செத்த சீக்கிரமா சொல்லுங்கோ... நான் இப்ப பெரிய ஆபத்துல இருக்கேன்.''

''தெரியும்மா... அதான் தெருவே பேசிக்கிட்டிருக்கே. ஆனாலும் உன் வரை அதிர்ஷ்டம் ரயில்ல வந்தா துரதிர்ஷ்டம் பிளேன்லல்ல வருது...''

''என்ன சொல்றேள். அவர் எங்கன்னு கேட்டா எதுக்கு இந்த விளக்கமெல்லாம்?''

- அப்போது பார்த்து ஒரு மொபட்டில் போலீஸ்காரர் ஒருவர் யூனிஃபார்முடன் அவன் கடை முன் வந்து நின்றவராக,

''யப்பா கோவிந்தா நீ பாட்டும் கலெக்டர் வரை பார்த்து ரங்கனை காணோம்னு புகார் கொடுத்துட்டே. இங்க எங்க பாடு பெரும்பாடா போச்சுப்பா'' என்றார்.

அவர் பேச்சு மைதிலியைக் கலக்கிவிட்டது.

''என்னது... அவரை காணோமா?'' என்றாள் விக்கித்துப் போய்...

''அட என்ன சார் நீங்க, நேரம் கெட்ட நேரத்துல வந்து எப்ப என்ன பேசணும்னு தெரியாம பேசிக்கிட்டு...'' கோவிந்தனும் வெடித்தான்.

''எலேய்... நான் சரியாதான் பேசிக்கிட்டு இருக்கேன். எஸ்.ஐ. அய்யாதான் உன்னைக் கூட்டிக்கிட்டு வரச் சொன்னார். நீங்க யார் மேல கம்ப்ளைண்ட் கொடுத்தீங்களோ அந்த சுடலை யாண்டி இப்ப உசுரோட இல்லை... தெரியுமா?''

போலீஸ்காரரின் கேள்வி கோவிந்தன் விலா எலும்பை நிமிர்த்தியது.

''என்னய்யா சொல்றீங்க?''

''அப்படிக் கேளு... நேத்து ராத்திரி காவேரி ஆத்துல வில்லங்கமா ஏதோ நடந்துருக்குது. பரிசல் ஒரு பக்கம் இந்த ஆள் ஒரு பக்கம்னு கிடந்து ஆத்துக்குப் போன பொது ஜனங்க பாத்து தூக்கியிருக்காங்க. ஆஸ்பத்திரில சேர்த்தும் புண்ணியமில்ல.

அனேகமா சுடலையாண்டிக்கும் ரங்கனுக்கும் கைகலப்பு ஏற்பட்டு இரண்டு பேருமே ஆத்துல மூழ்கியிருக்கணும். அதுல சுடலை யாண்டி கரை ஏறியும் பிரயோஜனமில்லாம போயிடிச்சு. ரங்கன் உடம்பு ஆத்துக்குள்ளதான் எங்காவது சிக்கியிருக்கும்னு எஸ்.ஐ. நினைக்கறார். அதான் உன்னை கூட்டிக்கிட்டு வரச் சொன்னார்?''

- அந்த போலீஸ்காரர் பேசி முடித்த மறு நொடி மைதிலி ஆவேச கதியோடு சைக்கிளை மிதிக்க ஆரம்பித்தாள். கோவிந் தனுக்கு உள்ளூர பதைத்தது.

''அம்மாடி நில்லு...'' என்று கத்திப் பார்த்தான். ஆனால் அவளது சைக்கிள் புயலில் பறப்பது போல பறந்தது.

அப்படியே கசங்கிப் போய் முகத்தை மூடிக் கொண்டு அவனையும் மீறி அழத் தொடங்கினான்.

''என்னய்யா உன் தோஸ்த்து போய்ட்ட துக்கமா?''

'போலீஸ்காரர் பாறை போல முகத்தை வைத்துக் கொண்டு கேட்டார்.

''உங்களுக்கு நான் என்னத்த சொல்லி புரிய வைப்பேன் சார்...'' என்று அவரோடு செல்லத் தொடங்கினான்.

காவேரிக்கரை!

ஓங்கி உயர்ந்த மணற்கரைப் பகுதியில் இந்தப் பக்கமாய் மாந் தோப்பு - அந்தப் பக்கமாய் நீரோட்டம். புயலாய் வந்த சைக்கிள் ஒரு புறம் கிடக்க, மைதிலி அந்த மண்மேட்டின் மேல் நின்று கொண்டு ஓடிக் கொண்டிருக்கும் காவிரியைப் பார்த்தாள். இன்னொரு காவிரி அவள் கண்களில்...

''கடைசில என்னை இப்படி ஏமாத்திட்டியே...?

என் ரங்கனையும் விழுங்கி என்னை இப்படி தவிக்க வெச் சுட்டியே... எல்லாத்தையும் விழுங்கிட்டு எவனோ ஒருத்தனை கல்யாணம் பண்ணிண்டு நான் என்ன பெருசா வாழ்ந்துடப் போறேன்?

அப்படி வாழ்ந்தா அதுதான் ஒரு வாழ்க்கையா...?

என் ரங்கனை விழுங்கின மாதிரியே என்னையும் விழுங் கிக்கோ... இதோ நானும் வந்துட்டேன்...''

மனதில் கேள்வியும் குழுறலுமாய் ஒரு முடிவுக்கு வந்தவள் அந்த இடத்திலிருந்து அப்படியே எகிறி ஆற்றுக்குள்ளும் குதித்தாள்.

58

'குலம் தந்து செல்வம் தந்து
அடியார் படுதுயர் ஆயின எல்லாம்
நலம் செய்து, நீள்விசும்பருளி
மற்ற எல்லாமும் தந்து
சுற்றமோடு சேர்த்திட்ட ஸ்ரீரங்கா...
தாயினும் ஆயின செய்த தயாநிதியே!
மண்மிசை தயை கொண்ட ரங்கநதியே!
சரணம்... சரணம்... சரணம்!'

புரண்டு கொண்டிருந்தாள் காவிரி! சரியான பாய்ச்சல்... திமுதிமுவென்று உடம்போடு உடம்பு உரச நசுக்கிக் கொண்டு ஓடிவரும் சிவப்புக்குதிரைகள் போன்ற ஓட்டம்!

அதனுள் மைதிலியின் சரீரமும் பாய்ந்து விட்டது. விழுந்த வேகத்தில் அவளை வாரிச் சுருட்டிக் கொண்டும் போனது அந்த நீர்ப்புரவி!

அரைநிமிட காலத்துக்குள்ளேயே மைதிலி வெகுதூரம் போய் விட்டாள். நீர்ப்பரப்பின் மேல் காற்றுக்காக அவள் தவிப்பதை தத்தளிப்பதை யதார்த்தமாக அந்தப் பக்கம் வந்த ஒருவர் பார்த்தபோது அவர் பார்வையில் திகைப்பு. பக்கமாய் கிடந்த அவள் வந்த சைக்கிள் அவருக்கு அவள் தற்கொலை முயற்சியை புரிய வைத்து விட்டது!

மைதிலி அகம்!

தடதடவென்று தனது சைக்கிளில் வந்து நின்றான் கோவிந்தன். சொல்லி வைத்த மாதிரி ரேவதியும் மைதிலியை காணாதவளாக படபடப்போடு வந்து சேர்ந்தாள். கழுத்து வியர்வையை புடவை

முந்தியால் ஒத்தி எடுத்தபடியே அவனையும் ''நீ எங்க வந்தே?'' என்று ஏக வசனத்தில் கேட்டாள்.

''வீட்ல ஐயா இருக்காரா?'' அவனும் அவளிடம் திருப்பிக் கேட்டான்.

''ஐயாவும் இல்ல ஆட்டுக் குட்டியும் இல்ல... எதுவா இருந்தாலும் என்கிட்ட சொல்லு... என்ன விஷயம்?''

''கொஞ்சம் ஈரமுள்ள பொம்பள மாதிரி பேசும்மா... அல்லி ராணி மாதிரி வெடிக்கிறியே...''

''ஏய்... என்ன நாக்கு ரொம்ப நீள்றது. இங்க நாங்க இப்ப இருக்கற நிலை தெரியாம, என்ன வந்து நின்னுண்டு அது இதுங்கறே?''

- ரேவதியின் அதட்டல் குரல் உள்ளிருந்த சீமாவையும் மற்ற உறவினர்களையும் வெளியே வரவழைத்தது. கோவிந்தனுக்கு ஏன் வந்தோம் என்றாகி விட்டது. இருந்தும் பல்லைக் கடித்துக் கொண்டு ''யம்மா... நாக்கு எனக்கு ஒண்ணும் நீளலை. உன் நாக்குதான் சவுக்காகி மாறி இப்ப என் மனசுல அடிச்சிருக்கு. நான் ஒரு முக்கிய விசயத்தைச் சொல்லத்தான் வந்தேன். உங்க வீட்டுப் பொண்ணு மைதிலி என் கடைக்கு வந்து ரங்கன் எங்கன்னு கேட்டுச்சு? அப்ப பாத்து போலீஸ்காரர் ஒருத்தர் வந்து அவனை மணல் காண்ட்ராக்டர் சுடலை முத்துவோட ஆளுங்க கொன்னுட்டாங்கங்கற மாதிரி பேசவும் அது மைதிலிய ரொம்பவே பாதிச்சிடிச்சு. அடுத்த செகண்டே அழுதுகிட்டே சைக்கிளை எடுத்துக்கிட்டு கிளம்பிடிச்சு.

அது புறப்பட்டு போன வேகத்தைப் பார்த்தாக்கா காவிரி ஆத்துப்பக்கம்தான் போயிருக்கணும்!

தங்கமான புள்ள ரங்கன்... அவனையும் போட்டுத் தள்ளிட்டாங்க. உங்க பொண்ணும் பத்தரமாத்து தங்கம் அதுவும் இனி எதுக்கு உசுர் வாழ்ந்துகிட்டுன்னு ஆத்துல உழுவ போயிடிச் சாட்டம் இருக்கு. என்னாலயும் தடுக்க முடியல... மனசு கேக்காம இதைச் சொல்லத்தான் வந்தேன்...

இனி எல்லாம் உங்க பாடு! ஆனாலும் ஒண்ணு மட்டும் சொல்லிக்கறேன். உன்னை மாதிரி ஒரு பொம்பள இருக்கற வீட்ல நல்ல மனசுள்ளவங்க நிம்மதியா வாழறது ரொம்ப கஷ்டம்மா...''

என்ற கோவிந்தன் வந்த வேகத்தில் திரும்பினான். அவன் குறி அடுத்து சிங்கராச்சாரியாரும் தேசிகாச்சாரியும் தான்...

அவன் சொன்ன விஷயமோ சீமாவை நிலை குலைய வைத்து விட்டது. பக்கத்து திண்ணையில் அமர்ந்து விட்டான்.

''என்னன்னா உக்காந்துட்டேள்... வாங்கோ காவிரிப் பக்கம் போய் பாப்போம். இவளை வாழ வைக்க இங்க நான் பாடாபட்டும் பிரயோஜனமில்லாம பண்ணிட்டு கடைசில ஓடிட்டா பார்த்தேளா?''

- என்று ரேவதி தன் பாணியில் சீமாவின் தோளைத்தொட்டு உசுப்பவும் அவனிடம் சட்டென்று ஒரு ஆவேசம். அது பளிச் சென்று அவன் கண்களில் தெரிந்தது.

''என்னன்னா வெறிக்கறேள்?''

''சண்டாளி... சண்டாளி...''

''அய்யோ என்ன இது பேத்தல்...''

''பேத்தல் இல்லடி - உன்னோட ஒரிஜினல் பேர் அது. கடைசில என் தங்கை வாழ்க்கையை ஒருவழி பண்ணிட்டியேடி...!''

''என்னது... அவ வாழ்க்கையை நான் ஒரு வழி பண்ணேனா?''

''போறும் நிறுத்து... உன் பேச்சை கேட்டேன் பாரு. என் புத்திய செருப்பால அடிக்கணும்...'' - என்றபடியே எழுந்தவன் வாசலில் ஓரமாய் நிறுத்தப்பட்டிருந்த அவனது காரை நோக்கி ஓடி அதில் ஏறிக் கொண்டு காவிரி நோக்கி அதை செலுத்தத் தொடங் கினான்.

ரேவதி கல்யாண நிமித்தம் வந்தவர்கள் வெறித்தபடி பார்த்துக் கொண்டிருந்தனர். இடையில் அவளது செல்போனில் 'மங்கை... நிலாவின் தங்கை' எனும் கரண்ட் சினிமா பாட்டின் ரிங்டோன் அழைப்பு... ஒருத்தி எடுத்து வந்து ரேவதி வசம் தந்தாள். ரேவதியும் அதிர்ச்சியிலிருந்து மெல்ல மீண்டவளாய் ''ஹலோ'' என்றாள்.

''யாரு ரேவதியா... நான் மாப்பிள்ளை அக்கா ஸ்ரீமதி பேசறேன். என்ன எல்லாரும் கிளம்பியாச்சா?''

''அது... அது... அது வந்து...''

''என்ன ரேவதி... எது வந்து... ஏன் மென்னு முழுங்கறே?''

''எப்படிச் சொல்றதுன்னு தெரியல எனக்கு...''

''வாட்ஸ் ராங்...? இங்க எல்லா ஏற்பாடும் தடபுடலா நடந்துண்டு இருக்கு. இன்ஃபாக்ட் கல்யாணப் பொண்ணுக்கு பாஸ்போர்ட் ரெடியா இருக்கா - வரும்போது மறக்காம அதை எடுத்துண்டு வரச் சொல்லுங்கோனு சொல்லச் சொன்னான் என் தம்பி. அதான் போன் பண்ணேன்...''

''சாரி மாமி... நீங்க மேல்நாட்டுக்குப் போக பாஸ்போர்ட் பத்தி கேட்டுண்டு இருக்கேள். ஆனா இங்க கல்யாணப்பொண்ணு மேல் லோகத்துக்கே போய்ட்ட மாதிரி ஒரு சூழ்நிலை...''

- ரேவதி பேச்சோடு கூட விசும்பி அழவும் முயற்சி செய்தாள்.

''என்ன சொல்றே ரேவதி... மைதிலிக்கு என்னாச்சு?''

''என்ன மன்னிச்சிடுங்கோ என்னோட ஆசை, அப்புறம் உங்களோட ஆசை எல்லாமே நிராசையா போயிடித்து. இங்க என் மாமியாரை ஹார்ட் பேஷண்டா நடிக்கச் சொன்னதுல இருந்து எல்லாமே சுக்குநூறா உடைஞ்ச கண்ணாடி மாதிரி ஆயிடுத்து. மைதிலி தற்கொலை பண்ணிக்க காவிரி பக்கம் போய்ட்டா. இந்த நிமிஷம் அவ நிச்சயம் ஆத்துல குதிச்சு பொணமாவும் ஆகியிருப்பா. இதுக்குமேல உங்களோட நான் பேச இப்ப எதுவுமில்லை. வெச்சுட்றேன்...'' - என்று போனை கட்பண்ணிவிட்டு நிமிர்ந்தவள் எதிரில் ஆஸ்பத்திரியில் இருந்து திரும்பி வந்திருந்த சக்கரவர்த்தி அய்யங்கார்!

அவர் முகத்தில் அதீத கலக்கம்.

''மாமா...'' - பதைத்தாள் ரேவதி.

''இப்ப நீ போன்ல பேசினதெல்லாம் நெஜமா?''

''மாமா... அது வந்து மாமா...''

''கேட்டதுக்கு ஒரு வார்த்தைல பதில் சொல்லு.''

''அ... ஆமா!''

''அப்ப ஆஸ்பத்திரில மூக்குல ட்யூப்போட ஜானகி படுத்துண்டுருக்கறதெல்லாம் ட்ராமாவா...?''

''அ... ஆமா மாமா...''

"என்... என் ஜானகி கூடவா நடிக்கறா... எல்லாம் யாரை ஏமாத்த?"

- எரிமலை போல உச்சகட்டமாக வெடித்தார் சக்கரவர்த்தி அய்யங்கார். ரேவதி அப்படியே மழையில் நனைந்த புறா போல ஒடுங்கி விட்டாள்.

காவிரிக்கரையோரம்!

காரை ஒரு ஓரமாய் நிறுத்தி விட்டு வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு ஓடி வந்தான் சீமா... எதிரிலேயே மைதிலியின் சைக்கிளை உருட்டிக் கொண்டு அவள் ஆற்றில் போனதை பார்த்த மனிதர்!

சீமா சைக்கிளை பார்க்கவும் பதறத் தொடங்கினான். "இந்த சைக்கிள்..." - என்று அவன் ஆரம்பிக்குமுன் அவரே சகலத்தையும் சொல்லத் தொடங்கி விட்டார். அவர் முடிக்கவும் "ஐயோ மைதிலி... கடைசில இப்படி பண்ணிட்டியே..." என்றவனாக அந்த சைக்கிள் மேலேயே விழுந்து அழத் தொடங்கினான்!

உச்சி வெயில் காவிரி நீர்ப்படுகை மேல் வெள்ளியை உருக்கி ஊற்றிக்கொண்டிருந்தது.

தகதகவென ஜொலிப்பு... கரையோரமாக சுகுமாரும் சுப்பையாவும் ரங்கனோடு நின்று கொண்டிருந்தனர். சுகுமார் கையில் இருந்த துப்பாக்கி ரங்கனை ஓடிவிடாதபடியும் எதிர்த்து சண்டை போட இயலாதபடியும் கட்டிப் போட்டிருந்தது.

"சுகுமார்... சவுக்குத் தோப்பு எங்கையோ இருக்க இங்க எதுக்குப்பா இறங்குனே?" - என்று சுப்பையா கேட்டதற்கு "இங்க தாண்ணே பெட்டிங்க கிடக்கணும். பரிசல்ல நாய் மேட்டுக்கரைல இருந்து இங்க வர அஞ்சு நிமிஷம் ஆகுமா?" - என்று அவன் கேட்க.

"ஓ... நீ அந்தக் கணக்குல வர்றியா? அப்ப சரி..." என்றார் சுப்பையா.

"இனி நம்ம கைல எதுவும் இல்ல... இவன் கைலதான் 116 கோடி ரூபா பணமும் இருக்கு... நீங்களும் நானும் இன்னும் ஏழு ஜென்மம் எடுத்து சம்பாரிச்சாலும் சம்பாரிக்க முடியாத பணம்..."

"நெசம்தான்... அம்புட்டும் இந்த ஆத்து மண்ணுல வந்துச்சி. இப்ப தண்ணிக்குள்ள கிடக்குது. சம்பாரிச்ச முதலாளியும் இப்ப உசுரோட இல்லை... இதைத்தான் எதையும் அனுபவிக்கவும் ஒரு விதி இருக்கணும்னு சொன்னாங்களோ?"

"அண்ணே... நின்னு பேசற நேரமா இது? மளமளன்னு சோலியப் பாப்போம். இதோ பார் ரங்கா... இப்ப நான் சொல்லப் போறத நல்லா கேட்டுக்கோ. ஆத்துக்குள்ள பணம் கெடக்கற விசயம் இந்த நிமிசம் நம்ம மூணு பேருக்கு மட்டும் தான் தெரியும். இதை எடுக்கப்போற நாமளே இதை பங்கு போட்டுக் கிட்டா யாரும் கேக்கப் போறதில்ல... என்ன சொல்றே?"

- சுகுமார் மனித புத்தியின் ஆசையின் நிறத்தை அப்பட்டமாக காட்டினான். சுப்பையாவுக்கே அதைக் கேட்டு தலையைச் சுற்றியது.

"சுகுமாரு... நெசமாவா சொல்றே?"

"ஆமாண்ணே... இது என்ன நம்ம முதலாளி உழைச்சு சம்பாரிச்சதா? அரசங்கத்தை ஏமாத்தி ஆத்தையே சுரண்டி சம்பாரிச்சது தானே...?"

"அதுவும் சரிதான்... நூறு ரூபா சம்பளம் சேத்திக் கொடுக்க நூறு தடவை யோசிப்பாரு. நானும் முதலாளி கிட்ட முந்நூறு ரூவா சம்பளத்துல தான் வேலைல சேர்ந்தேன். இன்னும் முழுசா அஞ்சாயிரத்த பாக்கல. நாமல்லாம் இப்படி சம்பாரிச்சாதான் உண்டு. டேய் பொணத்தூக்கி... உன் நல்ல நேரம்தான் இப்ப நீ எங்களோட இருக்கே. இனி ஏழு தலைமுறைக்கு காலாட்டிக் கிட்டே சோறு திங்கலாம் என்ன சொல்றே?"

- சுப்பையா யதார்த்தமாக பேசினாலும் பொணந்தூக்கி என்று சொன்னது ரங்கனைக் கீறியது. பதிலுக்கு முறைத்தான்.

"என்னா முறைக்கறே... கோடிக்கணக்கான ரூவா பணம்! குதி ஆத்துல... உன் மொத்த சாமர்த்தியத்தையும் காட்டு..."

- சுப்பையா அப்போதே கோடீஸ்வரராகி விட்டது போல ஒரு அதட்டு வேறு அதட்டினார்.

ரங்கனும் வேட்டியை அவிழ்த்து கரையில் போட்டான். கோடு போட்ட அன்ட்ராயருடன் ஆற்றுக்குள் இறங்கினான். முழங்கால் நீரளவில் நின்றபோது சிங்கராச்சாரியார் காவிரியை பற்றி சொன்னதெல்லாம் திரும்பவும் காதில் ஒலிப்பது போல் இருந்தது. அவனையுமறியாமல் கைகள் கூம்பித் தொழத் தொடங்கின.

'அம்மா பிணங்களையே எடுக்க வெச்ச என்னை இன்னிக்கு பணம் எடுக்க இறக்கியிருக்கே... உன்னை பத்தி சிங்கராச்சாரியார் என்கிட்ட சொன்ன அவ்வளவுமே சத்தியம். ஒரு ஆச்சரியம் பாரு... நான் இத்தன வருஷத்துல எவ்வளவு பொணத்த உன் மடியில இருந்து தூக்கிப் போட்டிருப்பேன்னு ஒரு கணக்கு போட்டுப் பார்த்தேன். மொத்தம் 116 பிணங்கள்! ஒரு பொணத்துக்கு ஒரு கோடின்னு இப்ப 116 கோடி பணத்தை நான் எடுக்கப் போறேன்.

இது தான் எத்தனை ஒரு அழகான கணக்கு?

எனக்கு நினைக்கவே பிரமிப்பா இருக்கு.

அம்மா...

இவனுங்க பேச்ச கேட்டு பேராசையோட நான் இந்தப் பணத்தை எடுக்க இறங்கல. இது அரசாங்க சொத்து... அரசாங் கத்தைத் தான் சேரணும். எடுக்கற தெம்போட சேக்கற தெம்பையும் எனக்கு நீயே கொடு...' என்கிற மேலான பிரார்த் தனையோடு அவன் நிற்கவும் சுப்பையாவுக்கும், சுகுமாருக்கும் ஆச்சரியமாக இருந்தது.

''டேய்... என்ன கும்பிட்டுக் கிட்டு நிக்கறே... மளமளன்னு இறங்கு. இங்க யார் எப்ப வந்து நிப்பாங்களோன்னு பக்குபக் குன்னு இருக்குதுல்ல...''

- என்றார் சுப்பையா. ரங்கனும் திருப்பிப் பார்த்து விட்டு மெல்ல நடந்து .ஒரு கட்டத்தில் மொத்தமாய் மூழ்கி அவர்கள் பார்வையில் காணாமலும் போனான். அவர்கள் இருவர் முகத்திலும் தவிப்பான தவிப்பு... கண்ணிரண்டின் இமைகளும் இமைக்காதபடி நின்று விட்டன. நீர்மேல் சூரிய ஜாலம்!

வெள்ளிக்கரைசல் போல மினு மினுப்பு...

ஒரு மூன்று நிமிடகால இடைவெளிக்குப் பிறகு நீர்மட்டத்தின் மேல் ரங்கனின் தலை மட்டும் தெரிந்தது. மூச்சு வாங்கிக் கொண்டான். அவர்களும் கவனித்தவர்களாக கத்தினர்.

''ஏய்... பொட்டி தட்டுப்பட்டுச்சா?'' - என்று தவிப்பை அடக்க மாட்டாமல் கத்தினான் சுகுமார். பதிலுக்கு திரும்பவும் தண்ணீருக்குள் போனான் ரங்கன். நேரமும் ஓடத் தொடங்கியது.

இம்முறை ஐந்து நிமிட காலம் கழிந்த பிறகே நீர்மேல் ரங்கன் தலை வெளியில் தெரிந்தது. அப்படியே ரங்கன் ஆற்றின் அந்தப் பக்க கரை நோக்கி செல்வது தெரிந்தது.

''ஏய்... அங்க எங்க போறே?'' - கத்தினார் சுப்பையா... அவன் அந்தப் பக்கமாய் கரை ஏறும்போது தெரிந்தது அவன் கையில் ஒரு சூட்கேஸ் இருப்பது...!

''சுகுமாரு சுகுமாரு ஒரு பொட்டி கிடைச்சிடிச்சு... இவன் என்ன பொட்டியோட அந்தப் பக்கம் ஏறிட்டான்?...''

''இருங்கண்ணே என்ன பண்றான்னு பாப்போம்.''

''அட என்னப்பா நீ... பொட்டியோட அப்படியே ஓடிட்டா?''

''ஆறு பொட்டிண்ணே... அப்படி எல்லாம் தூக்கிட்டு ஓட முடியாது...''

''நீ வேற... கோடிக்கணக்குல பணம் கிடைக்குதுன்னா நான் பத்து பொட்டிய கூட தூக்கிட்டு ஓடுவேன்...''

''இப்ப என்ன பண்ணலாம்கறீங்க?''

''வா நாமளும் ஆத்துல இறங்குவோம். இப்பவே அந்த கரை பக்கம் நின்னுக்குவோம்...''

''அடுத்த பொட்டியோட அவன் இந்த கரை பக்கம் ஏறினா?''

''நாமளும் வருவோம்...''

''அட என்னண்ணே நீங்க... ஆத்துல தண்ணி எப்படி ஓடிக் கிட்டிருக்குதுன்னு பாருங்க. அந்தப்பக்க கரை இங்க இருந்து ஐநூறு மீட்டராச்சும் இருக்கும்...''

''பேசிக்கிட்டே இருக்காதே... இறங்கு'' - சுப்பையா வயதை மறந்து விடலைப்பையன் போல் சொருவால் அடித்தார். வேறு

வழியில்லாமல் கைதுப்பாக்கி மற்றும் பர்ஸை காரில் வைத்து விட்டு சுகுமாரும் குதித்தான். தட்டுத்தடுமாறி மறுபக்கம் கரை ஏறியபோது ஒரு பெட்டிக்கு இரண்டு பெட்டியோடு அவர்கள் முன்பு நின்றிருந்த இடத்திலேயே கரை ஏறிக் கொண்டிருந்தான் ரங்கன்.

''ஏ... ரெண்டு பொட்டி! நீ சொன்ன மாதிரி அந்தப் பக்கம் ஏறிட்டான் பாரு... இப்ப என்னப்பா பண்ண?''

''வாங்க நாமளும் அந்தப் பக்கமே போவோம். நாம வந்த வண்டியும் அங்க தான் நிக்குது.'' - என்று திரும்ப அவர்கள் உத்தேசித்த போது சுப்பையாவால் அந்த ஒரு பெட்டியை விட மனசில்லை. அதை எடுத்துக் கொண்டு ஆற்றில் இறங்கினார். அநியாய கனம் கனத்து அப்படியே அடியில் அவரை இழுக்கப் பார்த்தது.

''ஏய் இழுக்குது...'' என்று கத்தியபடியே கைகள் பெட்டியை நழுவ விட்டன. அதே சமயம் ஒரு சுழல் கிருஷ்ண சக்கரம் போல நீர்வெளி மேல் சுழன்று கொண்டே வந்ததில் இருவருமே அதனுள் சிக்கினர்.

'ரங்கா... ரங்கா...' என்று இரண்டு முறை அவர்கள் கத்தியதும் காற்றில் கரைந்தது. சொல்லி வைத்ததுபோல ஒரு போலீஸ் ஜீப்பும் கரையோரமாக வந்து நின்றிட உள்ளிருந்து போலீஸ்காரர்கள் சிலர் குதித்து ஓடி வந்தனர். கரை மேல் கிடந்த இரண்டு பெட்டிகளையும் ஆச்சரியம் போல பார்த்தனர். மூன்றாவது பெட்டியோடு ரங்கன் வருவதையும் பார்த்தவர்களிடம் திகைப்பு.

''ஏய் யாரப்பா நீ... இந்தப் பொட்டிக்குள்ள என்ன இருக்குது?'' - ஒரு போலீஸ்காரர் அதட்டலான குரலில் கேட்டார்.

''நீங்க யார் சொல்லி சார் வந்தீங்க?''

''எங்களுக்கு டிபார்ட்மென்ட்ல உத்தரவு... ஆத்தோரமா ரைட் வந்துகிட்டிருக்கோம். சீரங்கத்து அய்யர் பொண்ணு ஒண்ணும் ஆத்துல பாஞ்சிடிச்சில்ல?''

அதைக் கேட்ட நொடி ரங்கன் முகம் மாறியது.

''இப்ப நான் வந்து அந்தப் பொண்ணோட உடம்பை எடுத்துத் தரணுமா சார்?'' - என்று நெற்றி நீரை வழித்தபடி கேட்டான் ரங்கன்.

''ஓ... நீ தான் அப்ப அந்த பொணம் தூக்கியோ?''

''இப்ப பணம் தூக்கி சார்... இது எம்.எல்.ஏ.வோட சகலை சுடலையாண்டியோட கறுப்பு பணம் எடுத்து வண்டில வையுங்க. இன்னும் ரெண்டு மூணு பொட்டி உள்ள இருக்கு...''

''அட... இந்தப் பணப்பொட்டியோட ஆத்துக்கு வந்துதான் அந்த ஆள் மாட்டிகிட்டு செத்தும் வெச்சானா?''

''அந்த ஆள் மட்டுமில்ல... அந்த ஆளுக்கு உடந்தையா இருந்த ரெண்டு பேரும் இப்ப தண்ணிக்குள்ளதான் கிடக்காங்க! என்றபடியே திரும்பவும் நீருக்குள் மூழ்கியவன் ஒரு பதினைந்து நிமிட அவகாசத்தில் மீதமுள்ள அத்தனை பெட்டிகளோடும் கரை ஏறினான்.

அதற்குள் செய்தி செல்போன் வழியாக கலெக்டர் வரை போய் அவரும் புறப்பட்டு வரும் தகவல் வந்து விட்டிருந்தது.

அசந்து போய் கரைமேல் அப்படியே உட்கார்ந்து விட்டான் ரங்கன். மிகவே இளைப்பெடுத்து கண்ணிரண்டும் சிவப்பேறி விட்டிருந்தது.

''கலெக்டரே இங்க புறப்பட்டு வந்துகிட்டிருக்காரு... ஆமா ரெண்டுபேர் உள்ள கிடக்காங்கன்னியே - அவங்கள இழுத்து போட முடியாதா?''

- ஒரு போலீஸ்காரர் சற்று பொறுப்பாக கேட்டார்.

''அடிச்சுகிட்டு போறவங்கள தூக்கிப் போடலாம். ஆனா சுழல்ல சிக்கி மண்ணுக்குள்ள புதைஞ்சவங்கள ஒண்ணும் பண்ண முடியாது.''

''சும்மா ட்ரை பண்ணி பாரேன்...''

''முடியாது சார்... எந்த காலத்துலயும் இனி நான் இந்த ஆத்துக்குள்ள இறங்கி பொணங்கள் மட்டும் தூக்க மாட்டேன்''

''ஏம்ப்பா அப்படி...?''

"அது அப்படி தான் சார்..." - அந்த நொடியில் மைதிலியின் நினைப்போடு அவளிடம் செய்து கொடுத்த சத்தியத்தை நினைத்தபடி கண்களைச் சிமிட்டினான் ரங்கன். அவர்களோ பெட்டியை ஆச்சரியமாக பார்த்து பெருமூச்சு விட்டு சுற்றிச் சுற்றி வந்தனர்.

ஒரு அரை மணி நேர இடைவெளியில் கலெக்டரின் கார் வந்து சேர்ந்தது. பெட்டிகள் அவர் முன்னிலையில் ஜீப்பில் ஏறின. அவரும் ரங்கனை நோக்கி உற்சாகமாக கையை நீட்டினார். ரங்கனும் நடந்த அவ்வளவையும் அவரிடம் விளக்கத் தொடங்கினான்.

இறுதியாக அவரிடம் ஒரு பிரமிப்பு!

"ரங்கா... உண்மைல இது ஒரு அசுர சாதனை... உன்னை எப்படி பாராட்றதுன்னே தெரியல. இதுக்கு உனக்கு நிச்சயம் ரிவார்டு உண்டு. அனேகமா அது சில கோடிகளா கூட இருக்கலாம்..." - என்றார்.

அந்த நொடி ரங்கனிடம் சிலிர்ப்பு... திரும்பிக் காவிரியை பார்த்தான். இம்முறை மைதிலி அவனிடம் சொன்னது காதில் எதிரொலித்தது.

"இந்த காவிரி உங்கவரைல எல்லாத்தையும் தருவா... எப்படி தருவான்னு தெரியாது... ஆனா இவ உங்களை கைவிடமாட்டா... எனக்கு அந்த நம்பிக்கை இருக்கு..." - அவனிடம் ஒரு பரவசம். அங்கிருந்தபடியே காவேரியை பார்த்தான். திரும்பவும் கைகளை கூப்பினான். அந்த இடைவெளியில் கலெக்டர் சிங்கராச்சாரி யாரை அழைத்து ரங்கனை காப்பாற்றி விட்டதையும் அவன் தன் உடன் இருப்பதையும் கூறவும் சிங்கராச்சாரியாரிடம் பதிலுக்கு சிலிர்ப்பு.

"அப்ப ரங்கன். உயிரோடதான் இருக்கானா?"

"ஆமாம் ஸ்வாமி... பெரிய சாதனையையும் பண்ணியிருக்கார். 116 கோடி ரூபா கறுப்பு பணம் அவரால பிடிபட்டிருக்கு. அதுவும் காவிரி ஆத்துக்குள்ள இருந்து..."

"செத்த அவனை கூட்டிண்டு அம்மா மண்டப காவிரிக்கரை பக்கம் வர முடியுமா சார் உங்களால?"

"தாராளமா... ஆமா அங்க இப்ப என்ன வேலை?"

"கொஞ்சம் சீக்கிரமா வாங்களேன்... ப்ளீஸ் வந்தா - உங்களுக்கே தெரிஞ்சிடும்..."

"சரி ஸ்வாமி... இப்பவே கிளம்பி வரேன்."

-கலெக்டரின் காருக்குள் ரங்கன் அடங்க காரும் வேகமெடுத்தது!

அம்மா மண்டபத்தை ஒட்டிய காவிரிக்கரை! சக்கரவர்த்தி அய்யங்காரில் இருந்து அவர் குடும்பமே கண்ணீரோடும் கம்பலையோடும் நின்றபடி இருந்தது.

கலெக்டருடன் ரங்கன் வந்து இறங்கவும் ரேவதிக்கு தூக்கி வாரிப் போட்டது. மனம் மாறியவளாக வத்சலாவும் வந்திருந் தாள். அவளிடமும் ஆச்சரிய அதிர்வு. கேவலமாக எண்ணிய ஒருவனை இப்படி மாவட்ட கலெக்டரோடு ஒரு தோழமை யோடு பார்த்தபோது அந்த பழைய பிம்பங்கள் நொறுங்கத் தொடங்கின. சக்கரவர்த்தி அய்யங்கார் ரங்கனைப் பார்க்கவும் ஓடி வந்தார்.

"ரங்கா... ரங்கா... வந்துட்டியா! உனக்கொண்ணும் ஆயிட்லயே...?" என்று தன் பதைப்பையும் காட்டினார்.

"நான் நல்லா தான் இருக்கேன்... ஆமா இங்க எல்லாரும் என்ன பண்றீங்க?"

"ஐயோ... உனக்கு விஷயம் தெரியாதா... என் பொண்ணு மைதிலி என்னை விட்டுட்டு ஆத்துல பாஞ்சிட்டாடா... ஆத்துல பாஞ்சிட்டா..." என்று அவர் சொன்ன நொடி ரங்கனுக்கு மார்பின் மேல் யானை உதைத்தது போல் இருந்தது. பொறியும் கலங்கி விட்டது. அருகிலேயே இருந்த தேசிகாச்சாரி அப்படியே அவனை தாங்கிப் பிடித்தார். அந்த ஸ்பரிசமும் ரங்கனை என்னவெல்லாமோ செய்யத் தொடங்கியது.

"ரங்கா... நீ உசுரோட இல்லைன்னு கேள்விப்பட்டு நானும் ஆத்துல இறங்கி உசுரை விடப் பார்த்தேன். அப்ப பார்த்து கலெக்டர்கிட்ட இருந்து அண்ணாவுக்கு போன் வரவும் நீ உயிரோட இருக்கறது தெரிஞ்சது... என் உயிரும் தப்பிச்சது...!

அதே சமயம் உன்னைப் பத்தின எல்லா உண்மைகளையும் நான் எல்லார்கிட்டேயும் சொல்லிட்டேன்... உன் வரைல இப்ப எல்லாமே கிடைச்சுடுத்து... ஆனா நீ ஆசைப்பட்ட மைதிலி உன்னை அந்த மண் கடத்தல் கோஷ்டி கொன்னுட்டதா நினைக்க தன்னை மாச்சிண்டுட்டாப்பா...'' என்றபடியே பொங்கி வந்த கண்ணீரை துடைத்துக் கொண்டார்.

''தேகிகா... முதல்ல உன் பிள்ளையை ஆத்துல இறங்கச் சொல்லு... அவன் ஆசைப்பட்ட மைதிலியை உசுரோடதான் அவனால அடைய முடியல... பொணத்தையாவது தூக்கிண்டு வந்து போடட்டும்.'' - என்ற சக்கரவர்த்தி அய்யங்காரையும் கலக்கம் விலகாதபடி பார்த்தான் ரங்கன். அந்த நிலையிலும் அவனை நெருங்கி வந்து ''ரங்கண்ணா... நீ நிஜமாலுமே என் அண்ணான்னு அப்பா சொன்னப்போ எனக்கு எவ்வளவு சந்தோஷமா இருந்தது தெரியுமா? ஆனா இந்த மைதிலிக்கு கொடுத்து வைக்காம போயிடுத்தேண்ணா...'' என்று விசும்பினாள் உஷா. வத்சலா வெறித்தபடியே இருந்தாள். எல்லாமே அவள் கை மீறிப்போய் விட்டது.

''ரங்கா... போப்பா... போய் அவளோட பொணத்தையாவது எடுத்துண்டுவா. அவ கழுத்துல ஒரு தாலிய கட்டி அவள சுமங்கலியா அனுப்பி வைப்போம்... போப்பா... போ...'' - உருகினார் சக்கரவர்த்தி அய்யங்கார்.

ஆஸ்பத்திரியில் படுத்து ஹார்ட் அட்டாக் நாடகத்தில் நடித்திருந்த ஜானகி ஒரு ஓரமாய் உட்கார்ந்து தலைதலையாக அடித்து அழுது கொண்டிருந்தாள். நடு நடுவே ரேவதியை பார்த்து ''தட்டு கெட்டவ... தட்டு கெட்டவ... தன்னோட துர்புத்தியை எனக்குள்ளேயும் ஏத்தி இப்ப என்னை இப்படி கதற விட்டுட்டாளே....!'' - என்று புலம்பவும் செய்தாள். சீமா ரேவதியை விளாசித்தள்ளியது அவள் உடம்பில் அங்கங்கே தழும்பு வடிவில் தெரிந்தபடி இருந்தது.

இத்தனைக்கும் நடுவில் ரங்கன் அமைதியாக காவிரியை நோக்கி நடக்க ஆரம்பித்தான். அவன் வரையில் காவிரி திரும்பவும் ராட்சஸியாக மாறிவிட்டிருந்தாள். ஆசை காட்டி மோசம் செய்து விட்டவளாகவும் தெரிந்தாள். எல்லோரும் அவன் அவள்

பிணத்தை எடுப்பதற்காக ஆற்றை நோக்கி நடப்பதாகத் தான் நினைத்துக் கொண்டிருந்தனர். ஆனால் மைதிலி அவனிடம் வாங்கிக் கொண்டிருந்த சத்தியம் பற்றி அவர்களுக்கு என்ன தெரியும்?

'நீங்க யாருக்காகவும் எதற்காகவும் இனி பிணம் எடுக்க ஆற்றில் இறங்கக் கூடாது. நீங்க பிணம்னு ஒண்ணை தீண்டினா அது நானாதான் இருக்கணும்? என்ற அவளுடைய சத்தியக் குரல் அவன் ஆழ்மனதில் எதிரொலிக்கத் தொடங்கியது. இப்படி ஒரு நாள் தான் சாகப்போவதை தெரிந்து ரங்கனையும் தன்னோடு அழைத்துக் கொள்ள வேண்டும் என்று திட்டமிட்டே அவள் சத்தியம் வாங்கிக் கொண்டது போலவும் இருந்தது.

ரங்கனும் ஒவ்வொரு அடியாய் எடுத்து வைத்து ஆற்றுக்குள் பிரவேசித்தான். ஒரு கட்டத்தில் கழுத்தளவு தண்ணீரில் நின்றபடி அப்படியே திரும்பிப் பார்த்தான். படித்துறை படிகளின் மேல் தாயின் உடம்பு அடித்துச் சொல்லப்படும்போது ஒரு சிறுவனாக நின்று அழுத காட்சி நினைவில் வந்தது. அன்று ஆரம்பித்தது இன்று முடியப்போகிறது. அவன் சிரசும் திரும்பி முற்றாக நீருக்குள் மூழ்கியது. கரையில் கண் கொட்டாதபடி பார்த்துக் கொண்டிருந்தனர் எல்லோரும்...

59

ஓரளவு கூட்டமும் கூடிவிட்டிருந்தது. கலெக்டருக்கும் அந்த காட்சிகள் புதிது. சிங்கராச்சாரியர் அவரிடம், ''எப்படியோ ரங்கனை காப்பாத்திக் கொடுத்துட்டேள். என் புகாருக்கு நீங்க எடுத்த நடவடிக்கைக்கு நான் ரொம்பவே நன்றிக்கடன் பட்டிருக்கேன்'' என்றார் அந்த இடைவெளியில்...

''ஆமா இப்படி அகாலமா செத்துப் போறவங்கள தூக்கிப் போடறதுதான் ரங்கன் வேலையா?'' - கலெக்டர் மிக இதமான குரலில் கேட்டார்.

''ஆமாம் சார்... அவன் வரைல இந்த காவேரி ஒரு விளை யாட்டு மைதானம். இதோ இந்த மோதிரம் ஒரு நாள் உள்ள விழுந்துடுத்து. அதையே எடுத்துக் கொடுத்தவன் அவன்...''

"இருந்தாலும் இது ரொம்ப ஆபத்தான தொழில்... ரங்கனுக்குக் கிடைக்கப்போற ரிவார்ட் பணத்தை வெச்சு அவன் இனி வேற தொழில் செய்யட்டும்."

"இனி என்ன கிடைச்சு என்ன... அவன்வரைல மைதிலிங்கற பொக்கிஷத்தையேன்னா இழந்துட்டான்" - தேசிகாச்சாரி இடையில் புகுந்து விசும்பினார்.

"இல்ல தேசி... எந்த நிலைலயும் காவிரி ரங்கனுக்கு எதிரா நடந்துக்க மாட்டா. மைதிலிய அவதான் அவன் கைல தூக்கிக் கொடுத்தவ. இப்ப அவளே பறிச்சுப்பாளா?"

"என்னண்ணா சொல்றேள்?"

"தப்பா எதுவும் நடந்துருக்காதுன்னும் என் மனசு சொல்றது...!"

"எப்படிண்ணா... பாருங்கோ... தண்ணி எப்படி பாஞ்சுண்டு இருக்குன்னு. யானை சிக்கினாலே புதைஞ்சு போயிடுமே?"

"யானையாவது பூனையாவது...? புல் தடுக்கி கீழ விழுந்து செத்தவனையும் இந்த உலகம் பார்த்துருக்கு. இடி விழுந்து பிழைச்சவனையும் பார்த்துருக்கு. அனுக்ரகம் ஒருத்தர்க்கு இருந்துட்டா எந்த க்ரகத்தாலயும் எதுவும் பண்ணமுடியாதுங்கறது தான் என் அபிப்பிராயம்..."

"உங்க வாக்கு பலிச்சா உங்க வாய்க்கு சக்கரை போட றேண்ணா..." - தேசிகாச்சாரி நெகிழ்ந்த போது இளைக்க இளைக்க சைக்கிள் மிதித்தபடி கோவிந்தன் வந்து நின்றான்.

நேராக தேசிகாச்சாரியிடமும் சிங்கராச்சாரியிடமும் வந்தவன் "ரங்கன் உசுரோட தான் இருக்கானா சாமி?" என்று கேட்டான்.

"ஆமாம் கோவிந்தா... நீ கொடுத்த கம்ப்ளைண்ட், கலெக்டர் சாரோட உதவி எல்லாமா சேர்ந்து அவனைக் காப்பாத்திடுத்து..."

"இப்ப எங்க சாமி அவன்?"

"என்ன கோவிந்தா... எதுவுமே தெரியாதவன் மாதிரி கேட்கறே?"

"உங்க எதுக்க இப்பதானே சாமி நான் வரேன்?"

"ரங்கன் மைதிலியோட பொணத்த எடுக்க ஆத்துக்குள்ள இறங்கியிருக்கான்..."

-சிங்கராச்சாரியார் சொல்லவும் கோவிந்தனுக்கு நெஞ்சை யடைத்தது. கண்களும் பனிக்கத் தொடங்கியது.

"கோவிந்தா என்னாச்சு உனக்கு?"

"இனி என்ன சாமி ஆகணும்... கொலைகாரப் பாவிங்க கிட்ட இருந்து அவனைக் காப்பாத்தி,

அவனா ஆத்துல இறங்கி தற்கொலை செய்துக்கற மாதிரி பண்ணிட்டீங்களே?"

"என்ன உளர்றே?"

"உளறல சாமி... மைதிலிக்கு அவன் செய்து கொடுத்த சத்யம் பத்தி உங்களுக்குத் தெரியாது. ஆனா எனக்குத் தெரியும்" - என்று அந்த சத்யத்தை விவரமாக அவன் சொல்லவும் தேசிகாச்சாரிக்கு மயக்கமே வரப்பார்த்தது! சுதாரித்தவர் 'ரங்கா...' என்று அலறியபடி கரையோரமாக ஓட ஆரம்பித்தார். அவரை மற்றவர்களும் பின் தொடர்ந்தனர்...

காவிரி ஆற்றின் படித்துறை ஒன்றில் துணியை குவித்தபடி துவைத்துக் கொண்டிருந்த ஒருவரின் காலடியில் ஏதோ ஒன்று முட்டுவது போல் இருந்தது. குனிந்து பார்த்தவருக்கு பகீர் என்றது! அது ரங்கனின் உடல்!

தொட்டுத்தூக்கி கரையில் கிடத்தியவர் முதற் காரியமாக மார்பில் காதை வைத்துப் பார்த்தார். நல்ல வேளையாக இதயத்துடிப்பு இருந்தது.

"என்ன இது... இப்பதான் ஒரு பொண்ணு உடம்பு வந்து முட்டுச்சி... பின்னாலேயே இந்த உடம்பு..." என்றபடி வயிற்றை அமுக்கி தண்ணீரைப் பிதுக்கி வெளியேற்றியவர் பாதத்தில் சூடேற்றியும், உச்சி சிரசில் முடியை வெடுக்கென்று இழுத்தும் ரங்கனுக்கு பிரக்ஞை திரும்பும்படி செய்தார். ரங்கனும் தட்டுத் தடுமாறியபடி எழுந்தான். சுற்று முற்றும் பார்த்தான்.

"என்னய்யா... சாவணும்னே ஆத்துல விழுந்தியா இல்ல இழுவைல சிக்கிகிட்டியா?" என்றுதான் முதலில் கேட்டார்.

"அப்ப நான் இன்னும் சாகலையா?" - பதிலுக்கு அவன் கேட்ட போது அவருக்கு திக்கென்றது.

"இதே கேள்வியத் தான் அந்தப் பொண்ணும் கேட்டது. இப்ப நீயும் கேட்கறே. ரெண்டு பேரும் காதல் ஜோடிகளா?" - என்று அவர் கேட்கவும் கரைமேல் மைதிலி உருவம் தெரியவும் சரியாக இருந்தது!

"மைதிலி..." ரங்கன் அடிவயிற்றில் இருந்து குரலெடுத்தான். 'ரங்கா...' என்றபடி அவளும் ஓடி வந்தாள்.

"அட... நான் யதார்த்தமா தான் கேட்டேன். ஆனா ரெண்டு பேரும் நெசமாலுமே காதல் ஜோடிதான் போல இருக்கு..." என்றார் அந்த மனிதர். ரங்கன் சூழலை மறைந்து அவளை இழுத்து அணைக்கத் தொடங்கினான். அவளும் எதிர்ப்பேதும் காட்டவில்லை.

வெகுதூரத்தில் சுழலில் ரங்கனும் மைதிலியும் கட்டிக் கொண்டு நிற்கும் படித்துறையை நோக்கி தேசிகாச்சாரியும் மற்றவர்களும் உடம்புகள் இரண்டும் மிதந்த நிலையில் எங்காவது ஒதுங்கியிருக்காதா என்று பார்த்தபடியே தவிப்போடு வந்தபடி இருந்தனர்.

அவர்களுக்குத் தெரியாது அந்த இரண்டு உடல்களும் அன்புச்சங்கமத்தில் மிதந்தபடி இருப்பது...! அவர்கள் காலடியில் ஓடிக் கொண்டிருந்த ரங்கநதியிடம் மட்டும் ஒரு புதிய வேகம்!

தளதளப்பான தளும்பல்களோடு ஒரு குதூகலம்... நான் வெறும் ஜலம் மட்டுமில்லை பலருடைய ஆத்மபலம்! நான் வெறும் நதி மட்டுமில்லை பலர் வரையில் கதிமோட்சமே தருபவள், நான் வெறும் ஆறு மட்டுமில்லை அருட் தொகுப்பின் கூறு' என்று ரங்கனின் வாழ்க்கை வாயிலாக இந்த உலகுக்கே உணர்த்தி விட்டதைப்போல ஓடிக் கொண்டேயிருந்தது அந்த நதி... ஊஹூம் ரங்கநதி!

(முற்றிற்று)